# தமிழினப் படுகொலைகள்

## 1956-2008

**NESOHR**

**வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம**

(www.nesohr.org)

அட்டைப்படம்: நந்தா கந்தசாமி

தமிழினப் படுகொலைகள் 1956 – 2008

வெளியீடு வடகிழக்கு மனித உரிமைகள்

www.nesohr.org

முதலாம் பதிப்பு – 2010

பதிப்புரிமை: வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம்

இப்புத்தகத்தின் பகுதியை / பகுதிகளை ஒரு மாற்றமுமில்லாமலும் "வடகிழக்கு மனிதஉரிமைகள் செயலகத்தினது"என்ற அங்கீகரத்துடனும் பண இலாப நோக்கு இன்றி மேற்கோள் காட்டவோ, கட்டுரைகளிலோ உபயோகிக்கலாம். இப்புத்தகத்தின் மறுபதிப்போ, மீள் பிரசுரமோ வடகிழக்கு மனிதஉரிமைகள் செயலகத்தின் எழுத்து மூலமான அனுமதியுடனேயே செய்யப்படல் வேண்டும்.

சிறீலங்கா படைகளினதும் இந்தியப் படைகளினதும் கைகளில் தம் உயிரினைப் பறிகொடுத்த ஆயிரக்கணக்கான ஈழத் தமிழ் மக்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

## என்றும் எமது நன்றி...

இப்படியான ஒரு நூலின் நம்பகத்தன்மைக்கும் வளத்துக்கும் எண்ணிலடங்காப் பலரின் ஈடுபாடும் ஒத்துழைப்பும் அவசியமாகிறது. எனவே இந்த நன்றியுரையில் அவர்கள் ஒவ்வொருவரினதும் பெயரினைக் குறிப்பிடுவது சாத்தியமில்லை. எனவே நாங்கள் தனிநபர் பெயர்களைத் தவிர்த்துள்ளோம்.

2003இல் தரவுகளைச் சேர்க்கும் பாரிய பணியினை தொடக்கிவைத்த வடகிழக்கு புள்ளிவிபர மையத்தினருக்கு (SNE) எமது விசேட நன்றி. இந்தத் திட்டத்தின் மூலமாகவே இந்த நூலுக்கு தேவையான பல தரவுகளும் புகைப்படங்களும் பெறப்பட்டன. SNE பணியாளர்களே வரைபடங்களையும் விளக்கங்களையும் தயாரித்தனர். இந்தப் பாரிய திட்டத்தின் பங்காளிகளான உயர்தர வகுப்பு மாணவர்கள், யாழ்பாண, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், ஏனையோர் மிகக் கிரமமாக வீடுவீடாகச் சென்று தரவுகளைச் சேர்த்து பதிவு செய்தனர். அவர்கள் யாவருக்கும் எமது நன்றி.

பல தசாப்தங்களுக்கு முன்னர் நடைபெற்ற விடயங்கள் பற்றி பிற வெளியீடுகளிலிருந்தும், நேரடிச் சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், வேறு சில கரிசனை மிக்கோர் வைத்திருந்த குறிப்புகளிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. நேரடியாக பேசி விபரங்கள் தந்த சாட்சிகளுக்கும், குறிப்புகளை வைத்திருந்தோருக்கும் எமது நன்றி. புலம் பெயர்ந்த எமது இளையோரும் இடையிடையே தமது உதவியினை நல்கினர். பல கல்விமான்கள் இந்நூலின் பொருளடக்கத்தினை வாசித்துவிட்டு விடுபட்டவற்றை கூறியும் நூலினை மேன்மைப் படுத்த அறிவுரையும் வழங்கினர். அவர்களுக்கும் நன்றி. SNE இத்திட்டத்திற்கு உதவிய தமது பணியாளர்கள் ஏனைய தொண்டர்களுக்கும் தமது நன்றியை தெரிவிக்கின்றனர்.

பல வருடங்களாக செயல்திறன் மிக்க ஒரு இணையத்தளக் குழு தமது நிபுணத்துவத்தினை எவ்வித கைமாறும் எதிர்பாராமல் எமக்குவழங்கித்து வந்தமையினாலேயே NESOHR முதலில் இவ்விபரங்களை இணையத்தளத்தில் வெளியிட முடிந்தது. அவர்களின் தொண்டர்களுக்கும் எமது நன்றி.

இந்நூலினை 2009ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெளியிட மிக்க உற்சாகத்தோடும் செயல்திறனோடும் உழைத்த தமிழ்நாடு சென்னையை தலைமையகமாகக் கொண்ட "மனிதம்"குழுமத்தினருக்கும் எமது நன்றி. அவர்கள் வெளியிட்ட நூலில் இந்தியப்படையினர் 1987-1989 காலகட்டத்தில் தமிழீழத்தில் நடாத்திய படுகொலைகள் தவிர்க்கப்பட்டிருந்தது. இந்தியப்படையினரால் செய்யப்பட்ட படுகொலைகளை பின்னர் சிறுநூலாக வெளியிட்ட டெல்லி தமிழ் மாணவர் அமைப்பினருக்கும் எமது நன்றி.

**அறிமுகம்.**

இலங்கைத்தீவில் நடைபெற்று வரும் தமிழ் மக்களுக்கு எதிரான அரச வன்முறைகளுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. இதில் மிக மோசமான ஒரு அம்சம் இலங்கைத் தமிழர்களின் பாரிய அளவிலான படுகொலைகள் ஆகும். இவைகளில் சில தமிழர்களின் ஆழ் மனதில் ஆறாத பதிவுகளாக நிலைத்துள்ளன. 2002ஆம் ஆண்டு மாசி மாதம் அனைத்துலக முயற்சியினால் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட முன்னர் பல நூறு படுகொலைகள் நடந்துள்ளன. இரண்டு வருட ஓய்வின் பின்னர் இராணுவத்தின் வன்முறைகள் மீண்டும் 2004இல் ஆரம்பித்தன. இந்த அறிக்கையானது 2008இன் முடிவில் முடிவுறும் இந்த இரு காலப்பகுதிகளில் இடம்பெற்ற தெரிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையிலான படுகொலைகளை ஆவணப்படுத்துகின்றது.

2009இல் பல போர்க்குற்ற விசாரணைப் பொருட்களாக அமையக்கூடிய சம்பவங்கள் இந்நூலில் அடக்கப்படவில்லை. வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் (NESHOR) பாரிய அளவிலான இடப்பெயர்வாலும் முடிவில்லாததும் வகைதொகை அற்றதுமான எறிகணைவீச்சுக்களாலும், விமானக்குண்டுத்தாக்குதல்களினாலும் உருவான சூழ்நிலையில் 2008 முடிவிற்குப்பின்னர் வன்னியில் தொடர்ந்தும் செயற்பட முடியாத நிலை ஏற்பட்டது. எனவே 2009இல் நாங்கள் களத்திலிருந்தே நடைபெறும் சம்பவங்களை பதிவு செய்ய முடியவில்லை. இக்காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றிய கூட்டு அறிக்கை ஒன்று மட்டுமே இறுதிப்பகுதியாக இங்கே இணைக்கப்பட்டுள்ளது.

1987-1989 வரையான காலப்பகுதியில் தமிழர் தாயகத்தில் தரித்திருந்த இந்தியப் படையினரும் பெரும் தொகையான படுகொலைகளைச் செய்திருந்தனர். இப்படுகொலைகளும் வேறாக இந்நூலின் இறுதியில் இரண்டாம் பகுதியாக சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**பின்னணி**

இவ் ஆவணத்தில் பதியப்படடிருக்கும் சம்பவங்கள் உறுதிப்படுத்துவது போன்று, சிறீலங்கா அரசானது தமிழினப் படுகொலையை, தமிழர் ஆயுதப் போராட்டக்குழுக்கள் ஒரு முறையேனும் துப்பாக்கிச் சூட்டை சிறீலங்கா அரச படைகள் மீது குறி வைப்பதற்கு பல வருடங்களுக்கு முன்பிருந்தே நடாத்தி வந்திருக்கின்றது. சிறீலங்கா அரசின் தமிழருக்கு எதிரான நடவடிக்கைகளின் ஒரு பகுதியே தமிழினப் படுகொலைகள். பரந்த அளவிலான தமிழருக்குச் சொந்தமான நிலங்களில் தூர இடங்களிலிருந்து கொணடுவரப்பட்ட சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். இங்கே விபரிக்கப்பட்டிருக்கும் பல படுகொலைகளுக்கான மூலகாரணம், தமிழர்களை அவர்களது நிலங்களிலிருந்து வெளியேற்றி சிங்களவர்களை அவ்விடங்களில் குடியேற்றுவதே ஆகும். மலைநாட்டுத் தமிழர்களின் வாக்குரிமையும் ஒட்டுமொத்தமாகப் பறிக்கப்பட்டது. தமிழர்களின் மொழியுரிமை பறிக்கப்பட்டது. இவ்வாறு இலங்கை அரசின் தமிழின அழிப்பு நடவடிக்கைப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.

1948ஆம் ஆண்டு பிரித்தானிய காலனித்துவ அரசு இத்தீவுக்கு ஒற்றையாட்சி அரசியலமைப்பு ஒன்றைக் கொடுத்துவிட்டு வெளியேறிய போது இப்பிரச்சனை தீவிரமடையத் தொடங்கியது. இவ்வொற்றையாட்சி அரசியலமைப்பானது சிங்களப் பெரும்பான்மையினருக்கு முழு அதிகாரத்தையும் கையளித்துவிட்டது. இந்த ஒற்றையாட்சி அரசியலமைப்பும், இதன் மூலம் சிங்களப் பெரும்பான்மையினரின் கைகளில் அளிக்கப்பட்ட முழு அதிகாரமுமே தமிழர் மேலான வன்முறைகளுக்கும், பாரிய அளவில் தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதற்கும் காரணமாயின.

16ஆம் நூற்றாண்டிலிருந்து, இத்தீவு போத்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் ஆகிய மூன்று காலனித்துவ நாடுகளின் கீழ் ஆளப்பட்டது. இம்மூன்று ஆட்சிக் காலங்களிலும் ஆவணப்படுத்தப்பட்ட வரலாற்றிலிருந்தும், இக்காலங்களில் இம் மூன்று ஆட்சியாளர்களும், தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் வெவ்வேறு நிர்வாகக் கட்டமைப்புக்களை வைத்தே ஆட்சி செலுத்தி வந்தார்கள் என்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு இருவேறு தனித்தனியாக இருந்த நிர்வாகங்கள், பிரித்தானியாவால் அளிக்கப்பட்ட இறுதி ஒற்றையாட்சி அரசியலமைப்பின் மூலம் குலைக்கப்பட்டது. அன்றும் கூட தமிழர்கள் இவ்வொற்றையாட்சி அரசியலமைப்பை எதிர்த்தார்கள் என்பதுதான் உண்மை.

சிங்களப் பெரும்பான்மை அதிகாரத்தால் முதலில் பாதிக்கப்பட்ட தமிழர் இத்தீவின் மத்திய பகுதிகளில் வாழும் தோட்டத் தொழிலாளராவர். பிரித்தானியரால் தொடக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இத்தமிழர் இந்தியாவிலிருந்து (தமிழ்நாட்டிலிருந்து) கொண்டுவரப்பட்டவர்கள்.

இத்தீவின் செழிப்பிற்காக ஒரு நூற்றாண்டுகளுக்கு மேலாக உழைத்த பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட இத்தமிழர் 1949ம் ஆண்டின் முறையற்ற ஒரு சட்டத்தின் மூலம் நாடில்லாப் பிரஜைகளாக்கப்பட்டனர். இதைத தொடர்ந்து "சிங்களம் மட்டும்" மொழிச்சட்டம் கொண்டுவரப்பட்டது. தமிழ்மக்கள் தமது வேலைத்தளங்களில், நீதிமன்றில், அரச தொடர்பாடலில் தமது மொழியை பயன்படுத்தும் மொழியுரிமையை இச்சட்டம் ஒரே நாளில் பறித்தது. கல்வியிலும் வேலையிலும் தமிழர்களுக்கு எதிராக காட்டப்பட்ட பாகுபாடுகள் தமிழர்களை சிறீலங்கா அரசிலிருந்து மேலும் அந்நியப்படுத்தியது.

பிரித்தானிய காலனித்துவ அரசு இத்தீவிலிருந்து வெளியேறிய பின்பும், தமிழரின் அரசியல் பிரிநிதிகள் அடுத்தடுத்து வந்த சிங்கள ஆட்சியாளரகளுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தி, தமிழர் பகுதிகளை நிர்வகிக்கும் சில அதிகாரப்பகிர்வுகளை கொண்ட புதிய நடைமுறைகளுக்கான இணக்கத்தை பல தடவைகள் ஏற்படுத்தினர். ஆனால், தென்னிலங்கை அரசியலில் மேலாதிக்கம் செலுத்திவந்த இரண்டு பெரிய அரசியல் கட்சிகளும் சிங்கள மக்களிடையே தமிழருக்கு எதிரான துவேச உணர்வைத் தூண்டி அதன் மூலம் அரசியல் இலாபங்களை பெற முயன்றன. இவற்றில் ஒரு கட்சி அரசாங்கமாக இருக்கும் போது, அது தமிழர் தரப்பினருடனான பேச்சுவார்த்தை மூலம் ஒரு அதிகாரப் பகிர்வு ஒப்பந்தத்ததுக்கு வரும்போதெல்லாம் எதிர்தரப்பாக உள்ள கட்சி சிங்கள மக்களின் துவேசத்தை தூண்டி அரசில் இருக்கும் கட்சி தமிழர் பிரதிநிதிகளுடன் செய்த ஒப்பந்தங்களை கைவிடும்படி செய்துவந்துள்ளன

வன்முறை, நில அபகரிப்பு, பாரபட்சம், கைவிடப்பட்ட ஒப்பந்தங்கள் யாவும் இறுதியில் சுதந்திர நாடாக தமிழீழத்தினை உருவாக்குவதற்கு ஆயுதப்போராட்டத்தை 1970 களில் தமிழ் இளைஞர்கள் ஆரம்பிப்பதற்கு வித்திட்டது. இந்த 30வருட ஆயுதப்போராட்ட வரலாறும் சிறீலங்கா அரசுக்கும் தமிழர் தரப்பினருக்குமிடையிலான பல சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் கொண்டதாகும். அவ்வாறான இறுதி போர்நிறுத்த ஒப்பந்தமும் அனைத்துலக எத்தனிப்பினால் 2002ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவ்வொப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள் யாவும் சிங்கள அரசியல் தலைமைகளினதும் அவர்களை தெரிவு செய்பவர்களினதும் நெகிழ்வற்ற தன்மையால் உடைந்து போயின. தமிழர்களின் உரிமைகளுக்கான போராட்டம் தொடர்கிறது.

ஐரோப்பியர் இத்தீவை 500 ஆண்டுகளுக்கு முன் தமது காலனியாக்குவதற்கும் முந்திய காலத்துத் தமிழர், சிங்களவர்களினது வரலாறு பல வாத-பிரதிவாதங்களைக் கொண்டது. இக்குழப்பத்தின் ஆணிவேராக, கி.பி 600ம் ஆண்டு காலகட்டத்தில் எழுதப்பட்ட, சிங்கள

பௌத்த நூலான மகாவம்சம் உள்ளது. இத்தீவின் வரலாற்றை முதன்முதலாக எழுத முற்பட்ட ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்களும், இதன் வரலாறு பற்றிய வேறு ஆதாரங்கள் அக்காலத்தில் கிடைக்கப் பெறாததால், அந்நூலை ஏறக்குறைய உண்மையாக ஏற்று, அதனடிப்படையில் வகுத்த வரலாற்றுக் கோட்பாடுகளை பரப்பினர். 20ம் நூற்றாண்டில் இத்தீவில் பௌத்தமத வளர்ச்சிக்காகப் உழைத்தோரால் இந்நூலுக்கு புதியகருத்துக்கள் ஊட்டப்பட்டன. இப்புதுக் கருத்தூட்டலில் இத்தீவிலுள்ள தமிழர்கள் பிற்காலத்திலே ஆக்கிரமிப்புப் படைகளாக வந்தேறுகுடிகளாகச் சித்தரிக்கப்பட்டனர். அத்துடன் சிங்களவர்ளே இத்தீவின் உரித்துடையவர்கள் என்பதும் இப்புதிய கருத்தூட்டலில் பரப்பப்பட்டது. இம்மீள் கருத்தூட்டல் நிகழ்கால சிங்களவர்களின் சிந்தனையில் ஏற்படுத்திய ஆழமான தாக்கம், அவர்கள் தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதில், ஒரு முரண்டுத்தன்மையை ஏற்படுத்தியது.

அண்மைக் காலங்களில் தமிழர் தாயகப் பூமியில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வுகள், பௌத்த மதம் இங்கு வருவதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இங்கு ஒரு நாகரீகமிக்க மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை நிரூபித்திருக்கின்றன. இப்புதைபொருள் கண்டுபிடிப்புக்கள், தமிழ்நாட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்ட புதைபொருட்களை ஒத்திருப்பதையும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இவை இத்தீவில் தமிழர்கள் பல ஆயிரமாண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பதை காட்டுகிறது. இத்தீவில் சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லீம் மக்களின் வரலாற்றைப் பதிவுசெய்வதற்கு மேலும் பல மொழியியல் மற்றும் புதைபொருள் ஆய்வுகள் முன்னெடுக்க வேண்டியுள்ளது. இது எவ்வாறிருப்பினும் இத்தீவில் தமிழர்களும் சிங்களவர்களும் பல ஆயிரமாண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

**தரவு சேகரித்தல் முறைமையும் அறிக்கை விபரங்களும்**

இங்கு பதிவு செய்திருக்கும் ஒவ்வொரு படுகொலையும் சுருக்கமாக விபரிக்கப்படுகின்றது. படுகொலைகளின் சூழ்நிலைகளும் நேரடி சாட்சிகளின் அறிக்கைகளும் சாத்தியமான இடங்களில் வழங்கப்படுகின்றது. நேரடி சாட்சிகளின் அறிக்கையானது அவர்கள் கண்டவற்றை மட்டுமே உள்ளடக்குகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அத்தோடு கொல்லப்பட்டவர்களின் பெயர்கள் தெரியுமிடத்து அவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன. நேரடி சாட்சியங்கள் தாங்கள் கண்டனவற்றுள் தங்கள் நினைவில் நிற்பனவற்றையே கூறுவர். யதார்த்தத்தில் ஒரு நேரடி சாட்சியால் அரச ஆயுத படைகளால் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்படும் கொடுமைகளின் ஒரு பகுதியையே காணக்கூடியதாக இருக்கும்.

இந்நூலில் தரவுகள் சேகரிப்பு இரு வெவ்வேறுபட்ட கட்டங்களாக அமைகின்றன. முதற்கட்டம் அநேகமாக 2002ஆம் ஆண்டின் போர் நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து வந்த முதல் இரண்டு ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்டதாகும். இக்காலப்பகுதி தமிழர் தாயகத்தில் சிறீலங்கா அரச படையினரால் ஏற்படுத்தப்பட்டிருந்த அச்சம், நிலவிநிற்காத ஒரு சொற்ப காலப்பகுதியாகும். இத் தகவல் சேகரிப்பக் கட்டத்தினை NESHOR நிறுவப்படுவதற்கு முன்னர் வடகிழக்கு புள்ளிவிபர மையம் (SNE) தொடக்கி வைத்திருந்தது. தரவுகளைச் சேகரிப்போர் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். விபரத்திரட்டலுக்கு ஆட்பலம் நேரஊதிய முறையில் அமர்த்தப் பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பட்டதாரி பொறுப்பாக அமர்த்தப்பட்டார். இத்திட்டதத்திற்கான அனுமதி மாவட்ட செயலகத்திலிருந்து பெறப்பட்டு, ஒவ்வொரு கிராமத்திலும் பாதிக்கப்பட்ட எவரும் தவறவிடவில்லை என்பதை உறுதிப்படுத்த கிராம சேவகர்களின் உதவியும் பெறப்பட்டது. மேலதிக உறுதிப்படுத்தலுக்காக ஒவ்வொரு கிராம விபரத்திரட்டல் குழுவிலும் அக்கிராமத்தை சேர்ந்த ஒருவரும் அமர்த்தப்பட்டார். மேலும், பாதிக்கப்பட்டவர் கொல்லப்பட்டு அல்லது காணாமல் போயிருந்தால், உறவினரிடமிருந்து இதுபற்றிய சத்தியக்கூற்றும் பெறப்பட்டது.

தரவுகள் சேகரிப்பிற்காக ஒரு அட்டவணைப்படுத்திய பத்திரம் 21 நிரல்களுடன் வடிவமைக்கப்பட்டது. இந்த 21 நிரல்களாவன பின்வருமாறு: 01) வரிசை எண், 02) விபரம் தருபவரின் முழுப் பெயர், 03) பாதிக்கப்பட்டவரின் முழுப் பெயர், 04) விபரம் தருபவருக்கு உறவுமுறை, 05) பாதிக்கப்படும்போது பாதிக்கப்பட்டவரின் வயது, 06) பால், 07) நிரந்தர முகவரி, 08) தற்காலிக முகவரி, 09) சம்பவம் நடந்த இடம், 10) சம்பவம் நடந்த வருடம், 11) பாதிக்கப்படும்போது பாதிக்கப்பட்டவரின் தொழில், 12) பாதிக்கப்படும்போது அவரில் தங்கியிருந்த 18 வயதுக்குட்பட்டோரின் தொகை, 13) சம்பவம் தரையிலா அல்லது கடலிலா இடம்பெற்றது, 14) எவ்வாறு பாதிகப்பட்டார், 15) எவ்வகையான வன்முறை பிரயோகிக்கப்பட்டது, 16) வன்முறையாளர் யார், 17) எச்சம்பவத்தில் கைதாகினார், 18) எச்சம்பவத்தில் காணாமல் போனார், 19) எவ்வகையான ஊனமுற்றார், 20) வேறு எவ்வகையான காயமுற்றார், மற்றும் 21) குறிப்பு.

இவ்வாறு சேகரிக்கப்பட்டு வன்னியில் பாதுகாக்கப்பட்டுவந்த தரவுகள் யாவும், 2009ஆம் ஆண்டில் அரச படைகளினால் நடத்தப்பட்ட குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல்களில் அழிக்கப்பட்டுவிட்டன. இந்நூலானது NESHOR இணையத்தளத்தில் பாதுகாக்கப்பட்ட அறிக்கைகளை அடியொற்றியதாகும். 2002ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற படுகொலைகளின் விபரங்களில், ஒவ்வொரு படுகொலையின் இடத்தையும் குறிப்பிட்டுக் காட்டுவதாக ஒரு வரைபடம் உள்ளடக்கப்படுகின்றது. பல சந்தர்ப்பங்களில் உள்ளூர் மக்களால் படுகொலையில் இறந்த மக்களின் நினைவுச்சின்னங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்நினைவுச்சின்னனங்களின் படங்களும் இந்தப் நூலில் உள்ளடக்கப்படுகின்றன.

2002ஆம் ஆண்டின் பின்னர் நடைபெற்ற படுகொலைகள் தொடர்பான தரவுகளின் சேகரிப்பு, சம்பவம் இடம்பெற்ற இடங்களிலேயே மேற்கொள்ளப்பட்டன. இதனால் சிறீலங்கா அரச படையினரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதில் பல சிக்கல்கள் இருந்தன. எனவே அப்படியான பல சம்பவங்கள் இந்நூலில் பதிவுக்குட்படவில்லை. சம்பவங்கள் பற்றிய வரைபடங்களும், கால வரையறையின் நிமிர்த்தம் சேர்க்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நினைவுச்சின்னங்கள் கட்டுவதற்கு இன்னமும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனவே இக்காலகட்டத்தில் இடம்பெற்ற படுகொலைகளின் நினைவுச்சின்னங்களின் படங்களும் இங்கே பிரசுரிக்கப்படவில்லை. சம்பவத்தின் ஒரு ஒளிப்படமோ, பாதிக்கப்பட்டவரின் ஒரு உருவப்படமோ இணைக்கப்பட்டுள்ளன.

1970களிலிருந்து தமிழ்ச் சமூகத்தில் பரந்த அளவிலான இடப்பெயர்வுகள் இடம்பெற்றன. எனவே தமிழர் தாயகத்திற்கு வெளியே சென்றுவிட்டவர்களை இவ்வறிக்கையில் சேர்த்துக்கொள்ளமுடியவில்லை. அத்தோடு முழுக்குடும்பங்களுமே முற்றுமுழுதாக அழிக்கப்பட்டவிடத்து அதுபற்றிக் கூற கிராமத்தில் ஒருவருமே இல்லாதவிடத்து அவ்விபரங்களும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

2009இல் இடம்பெற்று, மே 2009 இல் முடிவுற்ற மிகமோசமானதும் பாரியதுமான படுகொலையினை அறிக்கையிடுவது, வன்னி நிலவரத்தினால் 2009 ஜனவரி மாதத்திலேயே செயற்பட முடியாமற் போன NESOHR இற்கு இப்பொழுது சாத்தியமான ஒன்றல்ல. இந்தக் காலப்பகுதியில் இடம்பெற்றனவற்றை சரியாக ஆவணப்படுத்துவதற்கு தமிழர் தாயகத்தில் சுமூகமான சூழல் அவசியமானதொன்றாகும். இக்காலகட்டத்தில் இடம்பெற்ற படுகொலைகளை கிடைக்கக்கூடிய எந்தவொரு ஆதாரங்களினின்றும் அறிக்கையிடுவதற்கான முயற்சிகள் பல பிற நிறுவனங்களினால் செயற்படுத்தப்படுகின்றன. இந்நூலின் இறுதிப்பகுதியில் இக்காலப்பகுதியில் நடந்தவைபற்றிய சுருக்கமான குறிப்பொன்று சேர்க்கப்பட்டுள்ளது.

எனவே நாங்கள், இந்நூலினை, இலங்கை அரச படைகளினால் மேற்கொள்ளப்பட்ட தமிழினப் படுகொலைகளின் ஒரு முற்றுமுழுதான பதிவாகக் கொள்ளவேண்டாமென வாசகர்களை எச்சரிக்கை செய்கின்றோம்.

2002ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதிகளில் நடந்தேறிய சம்பவங்களுக்கு மூலாதாரமாக மேலே விபரிக்கப்பட்ட, 2005இல் முடிவுற்ற தரவு சேகரிப்பு அமைந்ததுள்ளது. இக்காலகட்டத்தின் சம்பவங்கள் 2007இல் ஆங்கிலப் பதிப்பாக வடகிழக்கு மனிதஉரிமைச் செயலகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டதாகும். இதுவே 2009இல் பதிப்பேறியுள்ள ஆங்கில நூல்வடிவத்தின் அடித்தளமாக அமைதுள்ளது. இதன் தமிழ்ப்பதிப்பு மேலதிக விபரங்கள் இணைக்கப்பட்டு, 2009இல் அதே இணையததளத்தில் வெளியிடப்பட்டது. இதுவே 2009இன் தமிழ் நூல்வடிவத்தின் அடித்தளமாக அமைதுள்ளது. இக்காரணத்தால் இவ்விரு நூல் வடிவங்களிலும் பதிவாகியுள்ள சம்பவங்களும் தரவுகளும் ஒன்றாக இருப்பினும் அவை நேரடி மொழிபெயர்ப்பாக அமையவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அநேகமான படுகொலைகள் காலப்பகுதிக்கேற்ப வரிசைக்கிரமமாக தொகுக்கப்பட்டுள்ளன. எனினும் ஒருசில சம்பவங்கள்- பத்து மட்டில், கிரமமற்ற முறையில் சேர்க்கப்பட்டுவிட்டன. வாசகர்கள் இக்குறையினை ஏற்றுக்கொள்வார்களென எண்ணுகிறோம். NESOHR 2002ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற இரு சம்பவங்களை, மிக ஆழமான முறையில் ஆவணப்படுத்தியுள்ளதோடு, பின்னர் இடம்பெற்ற பல சம்பவங்களையும் வெளிப்படுத்தியுள்ளது. அவற்றினை NESOHR இணையத்தளத்திலிருந்து (www.nesohr.org) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

## உள்ளடக்கம்


1. இக்கினியாகலை படுகொலை – 05 யூன் 1956 ....... 14
2. 1958ஆம் ஆண்டு இனக்கொலை ....... 15
3. தமிழாராச்சி மாநாட்டுப் படுகொலை – 10 ஜனவரி 1974 ....... 16
4. 1977ஆம் ஆண்டு இனக்கொலை ....... 17
5. 1981ஆம் ஆண்டு இனக்கொலை ....... 19
6 யாழ் நூலகம் எரிக்கப்படல் - 01 யூன் 1981 ....... 20
7. 1983ஆம் ஆண்டு இனக்கொலை ....... 21
8. திருநெல்வேலி படுகொலை - 24, 25 யூலை 1983 ....... 23
9. சாம்பல்தோட்டம் படுகொலை - 1984 ....... 24
10. சுன்னாகம் காவற்துறை நிலையம் படுகொலை – 08 ஜனவரி 1984 ....... 25
11. சுன்னாகம் சந்தை படுகொலை – 28 மார்ச் 1984 ....... 26
12. மதவாச்சி - ரம்பாவ படுகொலை - செப்ரெம்பர் 1984 ....... 27
13. பருத்தித்துறை – திக்கம் படுகொலை - 16 செப்ரெம்பர் 1984 ....... 27
14. ஒதியமலை படுகொலை – 01 டிசம்பர் 1984 ....... 28
15. குமுழமுனை படுகொலை  02 டிசம்பர் 1984 ....... 30
16. செட்டிக்குளம் படுகொலை – 02 டிசம்பர் 1984 ....... 31
17. மணலாறு - தென்னமரவடி படுகொலை – 03 டிசம்பர் 1984 ....... 32
18. மன்னார் - முருங்கன் வீதி படுகொலை 04 டிசம்பர் 1984 ....... 33
19. கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய் படுகொலை - 15 டிசம்பர் 1984 ....... 35
20. முள்ளியவளை படுகொலை – 16 ஜனவரி 1985 ....... 36
21. வட்டக்கண்டல் படுகொலை – 30 ஜனவரி 1985 ....... 37
22. உடும்பன்குளம் படுகொலை - 19 பெப்பிரவரி 1986 ....... 39
23. புதுக்குடியிருப்பு ஐயன்கேவிலடி படுகொலை – 21 ஏப்பிரல் 1985 ....... 40
24. திருமலை படுகொலைகள் - 1985 ....... 42
25. வல்வை-85 படுகொலை 10 மே 1985 ....... 42
26. குமுதினிப்படகு படுகொலை – 15 மே 1985 ....... 43
27. கிளிவெட்டி படுகொலை - 1985 ....... 44
28. திரியாய் தாக்குதல்கள் - 1985 ....... 46
29. சாம்பல்தீவு படுகொலை – 4 – 9 ஆகஸ்ட் 1985 ....... 46
30. வயலூர் படுகொலை – 24 ஆகஸ்ட் 1985 ....... 47
31. நிலாவெளி படுகொலை – 16 செப்ரெம்பர் 1985 ....... 47
32. பிரமந்தனாறு படுகொலை – 02 அக்டோபர் 1985 ....... 48
33. கந்தளாய்-85 படுகொலை - 09 நவம்பர் 1985 ....... 51
34. மூதூர் கடற்க்கரைச்சேனை படுகொலை – 8, 9, 10 நவம்பர் 1985 ....... 52
35. பெரியபுல்லுமலை படுகொலை - 1986 ....... 52
36. கிளிநொச்சி தொடருந்து நிலைய படுகொலை - 25 ஜனவரி 1986 ....... 53
37. வங்காலை தேவாலயம் படுகொலை – 6 ஜனவரி 1986 ....... 55
38. ஈட்டிமுறிஞ்சான் படுகொலை - 19, 20 மார்ச் 1986 ....... 56
39. ஆனந்தபுரம் செல்வீச்சு – 4 யூன் 1986 ....... 57
40. கந்தளாய்-86 படுகொலை - 04, 05 யூன் 1986 ....... 59
41. மண்டைதீவுக்கடல் படுகொலை – 10 யூன் 1986 ....... 59
42. சேருவில் படுகொலை – 12 யூன் 1986 ....... 60
43. தம்பலகாமம் படுகொலை - 20 யூன் 1986 ....... 61
44. பரந்தன் விவசாயிகள் படுகொலை – 28 யூன் 1986 ....... 62
45. பெருவெளி அகதிமுகாம் படுகொலை - 15 யூலை 1986 ....... 63
46. தண்டுவான் படுகொலை – 17 யூலை 1986 ....... 65
47. மூதூர்-மணற்சேனை படுகொலை - 18 யூலை 1986 ....... 66

48. அடம்பன் படுகொலை – 12 அக்டோபர் 1986 ....66
49. பெரியபண்டிவிரிச்சான் படுகொலை – 15 அக்டோபர் 1986 ....67
50. கொக்கட்டிச்சோலை படுகொலை – 28 ஜனவரி 1987 ....68
51. பட்டித்திடல் படுகொலை – 26 ஏப்பிரல் 1987 ....70
52. தோணிதட்டாமடு படுகொலை – 27 மே 1987 ....72
53. அல்வாய்வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் செல்வீச்சு – 29 மே 1987 ....72
54. கிழக்குப் பல்கலைக்கழகம் படுகொலை 23 மே 1990 ....75
55. சம்மாந்துறைப் படுகொலை - 10 யூன் 1990 ....75
56. வீரமுனை படுகொலைகள் - 20 யூன் 1990 ....76
57. சித்தாண்டி படுகொலை - 20, 27 யூலை 1990 ....83
58. பரந்தன் சந்தி படுகொலை – 24 யூலை 1990 ....84
59. பொத்துவில் படுகொலை – 30 யூலை 1990 ....85
60. திராய்க்கேணி படுகொலை – 06 ஆகஸ்ட் 1990 ....88
61. சேவியர்புரம் படுகொலை – 7 ஆகஸ்ட் 1990 ....90
62. கல்முனை படுகொலை – 11 ஆகஸ்ட் 1990 ....92
63. துறைநிலாவணை படுகொலை - 12 ஆகஸ்ட் 1990 ....92
64. ஏறாவூர் வைத்தியசாலை படுகொலை - 12 ஆகஸ்ட் 1990 ....94
65. கோராவெளி, ஈச்சையடித்தீவு படுகொலை – 14 ஆகஸ்ட் 1990 ....94
66. நெல்லியடிச் சந்தை படுகொலை – 29 ஆகஸ்ட் 1990 ....95
67. மண்டைதீவில் காணாமற்போனோர் - 25 ஆகஸ்ட், 23 செப்ரெம்பர் 1990 ....95
68. சத்துருக்கொண்டான் படுகொலை - 09 செப்ரெம்பர் 1990 ....99
69. நற்பிட்டிமுனை படுகொலை – 10 செப்ரெம்பர் 1990 ....104
70. வந்தாறுமூலை-90 படுகொலை – 05, 23 செப்ரெம்பர் 1990 ....105
71. ஏறாவூர் படுகொலை 10 அக்டோபர் 1990 ....108
72. ஒட்டுசுட்டான் படுகொலை – 27 நவம்பர் 1990 ....110
73. புதுக்குடியிருப்புச்சந்தி படுகொலை – 30 ஜனவரி 1991 ....111
74. உருத்திரபுரம் கூழாவடிச்சந்தி படுகொலை – 04 பெப்பிரவரி 1991 ....112
75. வங்காலை படுகொலை – 17 பெப்பிரவரி 1991 ....114
76. வட்டக்கச்சி அரசநெற்பண்ணை குண்டுவீச்சு – 28 பெப்பிரவரி 1991 ....115
77. வந்தாறுமூலை படுகொலை – 9 யூன் 1991 ....116
78. கொக்கட்டிச்சோலை படுகொலை – 12 யூன் 1991 ....117
79. புல்லுமலை – 1986-1990 ....117
80. கிண்ணியடி – 12 யூலை 1991 ....118
81. கரப்பொழை, முத்துக்கல் படுகொலை – 29 ஏப்பிரல் 1992 ....119
82. வற்றாப்பளை படுகொலை – 18 மே 1992 ....119
83. தெல்லிப்பளை ஆலயம் படுகொலை – 30 மே 1992 ....121
84. மைலந்தனை படுகொலை – 09 ஆகஸ்ட் 1992 ....122
85. கிளாலி படுகொலைகள் - 02 ஜனவரி 1993 - 29 யூலை 1993 ....122
86. மாத்தளன் படுகொலை – 18 செப்ரெம்பர் 1993 ....126
87. சாவச்சேரி சங்கத்தானை குண்டுவீச்சு – 28 செப்ரெம்பர் 1993 ....127
88. கொக்குவில் ஆலயம் படுகொலை – 29 செப்ரெம்பர் 1993 ....129
89. குருநகர் தேவாலயம் படுகொலை – 13 நவம்பர் 1993 ....129
90. கண்டிக்குளம்94 மீனவர் படுகொலை – 18 பெப்பிரவரி 1994 ....130
91. நவாலி தேவாலயம் படுகொலை – 09 யூலை 1995 ....131
92. நாகர்கோயில் பாடசாலை படுகொலை – 22 செப்ரெம்பர் 1995 ....137
93. செம்மணிப் புதைகுழிகள் 1996 ....140
94. கிளிநொச்சி நகர் படுகொலைகள் - 1996-1998 ....142
95. குமரபுரம் படுகொலை – 11 பெப்பிரவரி 1996 ....143
96. நாச்சிக்குடா படுகொலை – 16 மார்ச் 1996 ....146
97. தம்பிராய் சந்தை குண்டுவீச்சு – 17 மே 1996 ....148
98. மல்லாவி படுகொலை – 24 யூலை 1996 ....150


99. கைதடி கிருசாந்தி படுகொலை – 07 செப்ரெம்பர் 1996 ....151
100. கோணாவில் குண்டுவீச்சு – 27 செப்ரெம்பர் 1996....153
101. முள்ளிவாய்க்கால் படுகொலை – 13 மே 1997 ....155
102. மாங்குளம் செல்வீச்சு - 8 யூன் 1997 ....156
103. பன்னங்கண்டி படுகொலை – 5 யூலை 1997....158
104. அக்கராயன் அரசினர் வைத்தியசாலை செல்வீச்சு – 15 யூலை 1997....159
105. வவுனிக்குளம் படுகொலை – 26 செப்ரெம்பர் 1996, 15 ஆகஸ்ட் 1997....160
106. தம்பலகாமம்-98 படுகொலை – 01 பெப்பிரவரி 1998....162
107. பழைய வட்டக்கச்சி குண்டுவீச்சு – 26 மார்ச் 1998....163
108. சுதந்திரபுரம் படுகொலை – 10 யூன் 1998 ....165
109. விசுவமடு படுகொலை – 25 நவம்பர் 1998 ....167
110. சுண்டிக்குளம் குண்டுவீச்சு – 02 டிசம்பர் 1998 ....169
111. மந்துவில் படுகொலை – 15 செப்ரெம்பர் 1999....169
112. பாலிநகர் படுகொலை – 03 நவம்பர் 1999 ....173
113. மடுத்தேவாலயம் படுகொலை – 20 நவம்பர் 1999....173
114. பிந்துனுவேவ படுகொலை – 25 அக்டோபர் 2000 ....177
115. மிருசுவில் படுகொலை - 19 டிசம்பர் 2000....180
இங்கேயும் பொழிகிறது மழை ஆனால் குண்டுகளாக ....182
116. பேசாலை படுகொலை - 23 டிசெம்பர் 2005....183
117. திருகோணமலை தமிழ் மாணவர் படுகொலை - 02 ஜனவரி 2006....183
118. மானிப்பாய் படுகொலை - 14 ஜனவரி 2006 ....184
119. தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்தல் - 29 ஜனவரி 2006....185
120. திருகோணமலை இனக்கலவரம் - 12 ஏப்பிரல் 2006....185
121. புத்தூர் படுகொலை - 18 ஏப்பிரல் 2006....186
122. திருகோணமலை மூதூர் படுகொலை - 25 ஏப்பிரல் 2006....187
123. உதயன் பணிமனை படுகொலை - 02 மே 2006 ....188
124. நெல்லியடியி படுகொலை - 04 மே 2006....189
125. மந்துவில் படுகொலை - 06 மே 2006 ....189
126. அல்லைப்பிட்டி படுகொலை - 13 மே 2006....190
127. வடமுனை நெடுங்கல் படுகொலை - 07 யூன் 2006 ....191
128. வங்காலை படுகொலை - 08 யூன் 2006....192
129. கைதடி மனிதப் புதைகுழி - 06, 07, 08 யூன் 2006 ....193
130. பேசாலைத் தேவாலயம் படுகொலை - 17 யூன் 2006....193
131. அக்சன்பெயம் தன்னார்வ நிறுவனம் படுகொலை - 05 ஆகஸ்ட் 2006....194
132. நெடுங்கேணி - சமளங்குளம் படுகொலை - 08 ஆகஸ்ட் 2006 ....195
133. கிழக்குப் படுகொலைகள் - ஆகஸ்ட் - டிசம்பர் 2006....196
134. அல்லைப்பிட்டி செல்வீச்சு - 13 ஆகஸ்ட் 2006 ....199
135. வள்ளிபுனம் செஞ்சோலை படுகொலை - 14 ஆகஸ்ட் 2006 ....200
136. பொத்துவில் இரத்தன்குளம் படுகொலை - 17 செப்ரெம்பர் 2006 ....202
137. புதுக்குடியிருப்பு கைவேலி படுகொலை - 16 அக்டோபர் 2006....203
138. கிளிநொச்சி மருத்துவமனை அருகாமை படுகொலை - 02 நவம்பர் 2006....204
139. வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர் படுகொலை - 18 நவம்பர் 2006....205
140. படகுத்துறை படுகொலை - 02 ஜனவரி 2007 ....205
141. சிலாவத்துறை படுகொலை - 02 செப்ரெம்பர் 2007 ....206
142. பெரியமடு படுகொலை - 25 அக்டோபர் 2007 ....207
143. தருமபுரம் படுகொலை - 25 நவம்பர் 2007....208
144. ஐயன்குளம் படுகொலை - 27 நவம்பர் 2007....208
145. புலிகளின்குரல் வானொலி நிலையம் குண்டுவீச்சு - 27 நவம்பர் 2007....209
146. தட்சனாமடு படுகொலை - 29 ஜனவரி 2008....210
147. கிராஞ்சி படுகொலை - 22 பெப்பிரவரி 2008 ....211
148. திருமுறிகண்டி கிளைமோர்த்தாக்குதல் 23 மே 2008....212
149. நாகதம்பிரானாலய அடியவர் கிளைமோர்த் தாக்குதல் - 02 யூன் 2008 ....213
150. புதுக்குடியிருப்பு படுகொலை – 15 யூன் 2008....214
151. புதுமுறிப்பு இடம் பெயர்ந்தோர் செல்வீச்சு - 30 ஆகஸ்ட் 2008 ....214
152. குமரபுரம் குண்டுவீச்சு – 10 அக்டோபர் 2008 ....215

153. உருத்திரபுரம் செல்வீச்சு – 24 அக்டோபர் 2008 ....................216
154. வள்ளிபுனம் குண்டுவீச்சு – 30 அக்டோபர் 2008 ....................216
155. உழவனூர் கொத்துக் குண்டு வீச்சு – 29 நவம்பர் 2008 ....................217
156. வட்டக்கச்சி குண்டுவீச்சுகள் – 1- 20 டிசம்பர் 2008 ....................218
157. முரசுமோட்டை குண்டுவீச்சு – 31 டிசம்பர் 2008 ....................218
158. யாழ்ப்பாணம் 2006-2008 ....................219
159. 2009இல் இடம்பெற்ற சம்பவங்கள் ....................220
160. படங்களில் ....................223
பிற்சேர்க்கை ....................227
பி-1. பூந்தோட்டச்சந்தி படுகொலை – 10 ஆகஸ்ட் 1985 ....................227
பி-2. கள்ளம்பற்றைச்சந்தி படுகொலை – 10 ஆகஸ்ட் 1985 ....................227
பி-3. துவரங்காடு வரோதயநகர் படுகொலை – 17 ஆகஸ்ட் 1985 ....................228
பி-4. ஒதியமலைக் சிவசேகரம் சத்தியநாதன் அவர்க்களின் வாக்குமூலம். ....................228
பி-5. யாழ்.மாவட்ட்ட குரு முதல்வர் அருட்தந்தை தோமஸ் சவுந்தரநாயகம் ....................229
பி-6. வவுனியாப் படுகொலைகள் தொடர்பாக சின்னத்தம்பி வெங்க்கடாசலம்: ....................230

**பகுதி 2 - இந்தியப்படையின் படுகொலைகள் 1987-1989**

அறிமுகம் ....................234
கொக்குவில், பிரம்படி, பொற்பதி வீதிப் படுகொலை – 12 அக்டோபர் 1987 ....................235
2. புதுக்காட்டுச் சந்திப்படுகொலை 11 அக்டோபர் 1987 ....................236
3. யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலை 21,22 அக்டோபர் 1987 ....................237
4. அராலித்துறைப் படுகொலை 22 அக்டோபர் 1987 ....................244
5. கொக்குவில் இந்துக்கல்லூரிப் படுகொலை 24 அக்டோபர் 1987 ....................246
6. அளவெட்டி ஆச்சிரமப் படுகொலை 26 அக்டோபர் 1987 ....................249
7. சாவகச்சேரி சந்தைப் படுகொலை 27 அக்டோபர் 1987 ....................250
8. மூளாய் வைத்தியசாலைப் படுகொலை 05 நவம்பர் 1987 ....................252
9. நெடுங்கேணிச் சந்திப் படுகொலை 11 நவம்பர் 1987 ....................253
10. மட்டக்களப்பு பொதுச் சந்தைப் படுகொலை 12 டிசம்பர் 1987 ....................255
11. காத்தூர் சின்னக்குளப் படுகொலை 17 சனவரி 1989 ....................255
12. வல்வை படுகொலைகள் 02, 03, 04 ஆகஸ்ட் 1989 ....................257
13. வாக்குமூலங்கள் ....................259
14. இந்தியப் படைகளின் பாலியல் வல்லுறவுகள் ....................264

## 1. இக்கினியாகலை படுகொலை – 05 யூன் 1956



1940களில் அக்காலகட்டத்தில் விவசாய அமைச்சராக இருந்த டி.எஸ்.சேனநாயக்கா அம்பாறை மாவட்டத்தில் அரச நிதியுதவியுடன் பல சிங்கள குடியேற்றத் திட்டங்களை நிறுவினார். இதன் பின்னர் அரச உதவியோடு அம்பாறை மாவட்டத்தில் கல்லோயா அபிவிருத்தித் திட்டம், திருகோணமலையில் கந்தளாய் குடியேற்றத் திட்டம், அல்லைக் குடியேற்றத் திட்டம் போன்ற குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு சிங்கள மக்கள் வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டு வந்து குடியேற்றப்பட்டார்கள். அவர்களுக்குச் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுக் காவல்துறை - இராணுவப் பாதுகாப்பும் வழங்கப்பட்டது. அத்துடன் விகாரைகளும் கட்டிக் கொடுக்கப்பட்டது. பௌத்த விகாரைகளில் பெரிய கண்டாமணி பொருத்தப்பட்டு மணியோசை கேட்கும் தூரம் மட்டும் சிங்கள பௌத்தர்களுக்குரிய பிரதேசமாக உத்தியோகப்பற்றற்ற முறையில் கணிக்கப்பட்டது. இந்த வகையில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் சூறையாடப்பட்டன.

1956ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் காலஞ் செய்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதமரானார். அவரது தேர்தல் வாக்குறுதிகளிலொன்றான சிங்களம் மட்டும் சட்டத்தை 1956ஆம் ஆண்டு யூன் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இதற்கு எதிராக அக்காலகட்டத்தில் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது எதிர்ப்பைத் தெரிவித்து நேரடி நடவடிக்கையில் ஈடுபட முடிவு செய்தது. இதன் விளைவாக அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி 1956ஆம் ஆண்டு யூன் மாதம் ஐந்தாம் திகதி கொழும்பிலுள்ள பழைய நடாளுமன்றக் கட்டிடத்திற்கு முன்னால் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தியது. இதில் தமிழ்த் தலைவர்கள் கட்சி பேதங்களுக்கு அப்பால் கலந்து கொண்டார்கள். அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த தமிழ் கல்விமான் வணபிதா தனிநாயகம் அடிகளும் இந்தச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டார். அன்றைய தினம் சத்தியாக்கிரகிகள் சிங்கள காடையர்களால் தாக்கப்பட்டதுடன், சிங்களவர்களால் தமிழர்கள் மீதான இனக்கொலை தூண்டிவிடப்பட்டது. தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். பல தமிழ் மக்கள் மோசமான வகையிலும் கோரமாகவும் கொல்லப்பட்டதுடன், கொழும்பிலுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள் கொள்ளையடிக்கப்பட்ட பின் தீவைத்துக் கொழுத்தப்பட்டன. இலங்கைத்தீவு முழுவதும் தமிழர்களுக்கு எதிரான பகையுணர்வு மேலோங்கிக் காணப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் குடியேற்றப்பட்ட சிங்களவர்க் காடையர்கள் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்டார்கள். இதில் இக்கியாகலை என்ற இடத்திலிருந்த கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கரும்புத் தொழிற்சாலையில் வேலை செய்து வந்த நூற்றி ஐம்பது தமிழ்த் தொழிலாளர்கள் அதே தொழிற்சாலையில் வேலை செய்த சிங்களத் தொழிலாளர்களால் தாக்கப்பட்டனர். பலர் கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். அரைகுறை உயிருடன் இருந்தவர்களும் இறந்தவர்களும் எரியும் தீயில் தூக்கி வீசப்பட்டார்கள். இங்கு நடைபெற்ற இனப்படுகொலையே இக்கினியாகலை இனப்படுகொலையென வர்ணிக்கப்படுகின்றது. இதுவே இலங்கை வரலாற்றில் முதல் முதலில் பெருந் தொகையாக தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமாகும். இப்படுகொலைகளில் ஏறக்குறைய நூற்றி ஐம்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதாக “எமேர்ஜேன்ஸி 58” என்ற நூல் தகவல் வெளியிட்டுள்ளது.

## 2. 1958ஆம் ஆண்டு இனக்கொலை

1958ஆம் ஆண்டு இனக்கொலை என்பது திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல. இதற்குப் பலமான பின்புலம் ஒன்று இருக்கிறது. 1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட முப்பத்துமூன்றாம் இலக்கச் சிங்களம் மட்டும் சட்டம் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாகத் தமிழர் தரப்பினர் 1956ஆம் ஆண்டு யூன் மாதம் ஐந்தாம் திகதி கொழும்பு காலி முகத்திடலில் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிராகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினார்கள். இந்தப் போராட்டம் சிங்களக் காடையர்களால் வன்முறை பிரயோகிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக 1957ஆம் ஆண்டு தமிழர் தரப்பினர் திருமலைக்குப் பாதயாத்திரை சென்று அங்கே ஒரு மாநாடு நடாத்தினார்கள். பண்டாரநாயக்கா அரசிற்கு ஒரு வருட காலக்கெடு கொடுத்து அதற்குள் தமிழ் மொழிக்குச் சமவுரிமை கொடுக்கவேண்டும் என்றும் தமிழ்ப் பிரதேச அபிவிருத்திகளுக்காக பிராந்திய சபைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் திருமலை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த வேண்டுகோளுக்கு அமைய பண்டாரநாயக்கா அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனடிப்படையில் தான் அப்போதைய பிரதமர் பண்டாரநாயக்கா தந்தை செல்வநாயகத்தோடு ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தார். இதன் விளைவாக 26.07.1957 அன்று தந்தை செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சியோடு பண்டாரநாயக்கா ஒரு உடன்படிக்கை செய்தார். இதுவே புகழ்பெற்ற 1957 பண்டா-செல்வா உடன்படிக்கையாகும்.

இந்த உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா கண்டிக்குப் பாதயாத்திரை போனார். அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியானது முதல் காலடி என்ற வெளியீட்டையும் வெளியிட்டு இனவாதப் பரப்புரையில் ஈடுபட்டது. ஐக்கிய தேசியக்கட்சியின் பரப்புரை நாளேடான "சியரட்ட" மிக மோசமான இனவாதப் பரப்புரையைத் தமிழருக்கு எதிராக மேற்கொண்டது. கண்டிக்குப் பாதயாத்திரை போகப் புறப்பட்ட ஜே.ஆர் இன் பாதயாத்திரை இம்புள்கொட என்ற இடத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பண்டாரநாயக்கா தலைமையில் வந்த இன்னொரு குழுவால் தடுத்து நிறுத்தப்பட்டது. இதற்கிடையில் பண்டாரநாயக்காவைப் பதவிக்குக் கொண்டுவந்த பிக்கு பெரமுனவைச் சேர்ந்த பௌத்த பிக்குமாரும், ஜாதிக விமுக்தி பெரமுனவைச் சேர்ந்த வெலிமடை எம்.பி கே.எம்.பி இராஜரட்ணாவும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அதிபர் மெத்தானந்த போன்றவர்களும் சிங்கள தேசிய முன்னணியைச் சேர்ந்த ஆர்.ஜி. சேனநாயக்கா போன்றவர்களும் பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியுமாறு பண்டார நாயக்காவுக்கு அழுத்தம் கொடுத்ததுடன், பிரதமர் பண்டாரநாயக்காவின் கொழும்பு ஏழு, றொஸ்மீட் பிளேசிலுள்ள அவரது இல்லத்திற்கு முன்னால் பண்டா-செல்வா உடன்படிக்கையைக் கிழித்தெறியுமாறு முழக்கமெழுப்பினார்கள். அவர்களது முழக்கத்திற்கும், வேண்டுகைகளுக்கும் அடிபணிந்த பண்டாரநாயக்கா, தந்தை செல்வநாயகத்துடன் செய்துகொண்ட பண்டா-செல்வா உடன்படிக்கையைக் கிழித்தெறிந்தார்.

இதனைத் தொடர்ந்து 1958ஆம் ஆண்டு மே மாதம் இருபத்துநான்கு, இருபத்தைந்து, இருபத்தாறு ஆகிய திகதிகளில் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட மாநாட்டுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. வவுனியா மாநாட்டிற்கு வருகைதந்து கொண்டிருந்த மட்டு-அம்பாறையைச் சேர்ந்த தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் பயணம் செய்த தொடருந்து பொலநறுவை மாவட்டத்தில் கிங்குராகொட என்னும் தொடருந்து நிலையத்தில் வழிமறிக்கப்பட்டுச் அதிலிருந்த தொண்டர்கள் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டார்கள்.

இதே காலப்பகுதியில் நுவரெலியா மாநகரசபையின் மேயர் செனிவிரட்ன மட்டக்களப்புக்குச் சென்றுகொண்டிருந்தபோது மட்டக்களப்பில் வைத்து தனிப்பட்ட காரணங்களுக்காகக் கொல்லப்பட்டார். பிரதமராக இருந்த பண்டாரநாயகக்கா இதைப் பெரிதுபடுதத்தி இலங்கை வானொலியில் பரப்புரை செய்தார். இதைத் தொடர்ந்து தீவு முழுவதும் தமிழர்களுக்கு எதிரான இனக்கொலை வெடித்தது. தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பல பெண்கள் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டார்கள். தமிழ் மக்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பாணந்துறையில் சிறீ கதிர் வேலாயுத சுவாமி கோயிற் குருக்கள் ஆலயத்திற்குள் வைத்து உயிரோடு கொழுத்தப்பட்டார். பொலநறுவை அரசினர் வைத்தியசாலையில் சிங்கள மக்களுக்குச் சிகிச்சை அளித்த தமிழ்த் தாதியான பாலிப்போடி என்பவரின் மனைவி பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டார்.

இவ்வளவும் நடந்தும் பண்டாரநாயக்காவினுடைய அரசு அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தவோ அல்லது ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தவோ இல்லை. தமிழர்கள் தாக்கப்படுவதாக புகார் செய்யப்பட்டபோதும் பண்டாரநாயக்கா தமிழர்கள் பட்டு அனுபவிக்கட்டும் என்று கூறினார். இந்த இனக்கொலையின் போது தமிழ் மக்களின் பல வீடுகள் தீ வைத்துக் கொழுத்தப்பட்டன. பல தமிழ்க் குழந்தைகள் கொதிக்கும் தாரில் போடப்பட்டார்கள். மேலும் இக்கட்டத்தில் இலங்கையில் தங்கியிருந்த பிரபல ஆங்கில நாளேட்டாளரான டாசி வித்தாச்சி அவர்கள், பண்டாரநாயக்கா அரசினால் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட பின் தனது தாய் நாட்டிற்குச் சென்று "அவசரகாலச் சட்டம் ஐம்பத்தெட்டு" என்ற நூலை எழுதி வெளியிட்டார். இன்று இந்நூல் உலகப் புகழ் பெற்ற நூலாகக் கருதப்படுகின்றது.

இக்காலத்தில் எல்லாமாக முன்நூறுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அக்காலகட்டத்தில் வெளியான நாளேடுகள் வாயிலாக அறியமுடிகின்றது. பல நூற்றுக்கணக்கான மக்கள் வெட்டி அங்கவீனப்படுத்தப்பட்டார்கள். தமிழ் மக்களது சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன, அவர்களது உடைமைகள் தீவைத்து எரிக்கப்பட்டன. இக்காலகட்டம் பற்றி எத்தகைய விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு எத்தகைய நிவாரணமோ நட்டஈடோ வழங்கப்படவில்லை.


## 3. தமிழாராச்சி மாநாட்டுப் படுகொலை – 10 ஜனவரி 1974

1974ஆம் ஆண்டு ஜனவரி மூன்றாம் திகதி தொடக்கம் பத்தாம் திகதி வரை தமிழ் மக்கள் தமது மொழி, பண்பாடு என்பவற்றை உள்ளடக்கி நான்காவது உலகத் தமிராய்ச்சி மாநாடு யாழ்பாணத்தில் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார்கள். மாநாடு யாழ்பாணத்தில் நடைபெறுவதை அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் விரும்பவில்லை. அரசாங்கம் இதனை ஏற்றுக் கொள்ளாது கொழும்பில் நேரடியாகவும், யாழ்பாணத்தில் மாநகர மேயர் ஊடாகவும் தொடர்ச்சியான தடைகளை ஏற்படுத்தியது. அத்துடன் மாநாடு நடைபெறுவதற்கான முக்கிய அரங்குகளின் அனுமதி இறுதி நேரம் வரை மறுக்கப்பட்டிருந்தது. மாநாட்டில் கலந்து கொள்ள பல வெளி நாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக்கப்பட்டது.



இவைகள் எவ்வாறு இருந்தாலும் மாநாட்டை சிறப்பாக நடத்த வேண்டும் என்ற மனவெழுச்சி அமைப்பாளர்களிடமும், மக்களிடமும் இருந்தது.

மக்கள் அலை அலையாகத் திரண்டதை கண்ட அரசாங்கம் சற்றுக் கீழிறங்கி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கியது.



மாநாட்டுக் குழுத்தலைவர் நீதியாளர் தம்பையா மாநாட்டை யாழ்பாணத்தில் நடத்துவதற்கு விரும்பவில்லை. ஆகையால் அவர் தலைவர் பதவியிலிருந்து விலகப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் தமிழாராய்ச்சி மாநாடு மூன்றாம் திகதி ஆரம்பமாகி பத்தாம் திகதி வரை யாழ் முற்றவெளி திறந்த வெளியரங்கில் சிறப்பாக நடைபெற்றது. யாழ்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் யாழ் நகரம் வந்தார்கள். அதுவரை நடைபெற்ற எந்தவொரு மாநாடும் இதுபோல சிறப்பாக நடைபெறவில்லை. அன்றைய தினம் குடாநாடு விழாக்கோலம் பூண்டிருந்தது.

1974ஆம் ஆண்டு ஜனவரி பத்தாம் திகதி இறுதி நாளாகக் கொண்டாடப்பட்டது. இறுதி நிகழ்வாக அறிஞர்கள் தமிழின் பெருமைகளையும், பண்பாட்டின் பெருமைகளையும் பற்றிப் பேசினார்கள். மக்கள் உணர்வோடு கைதட்டி உற்சாகப்படுத்தினர். இறுதியாக தமிழகப் பேராசிரியர் நைனா முகம்மது பேசிக் கொண்டிருக்கும் போது யாழ் உதவிக் காவற்துறை அத்தியட்சகர் சந்திரசேகரா தலைமையில் அக் காவல்துறை மாநாட்டில் கலந்து கொண்டிருந்த மக்களை தாக்கியதுடன், துப்பாக்கியாலும் சுட்டார்கள். இச்சம்பவத்தில் ஒன்பது பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தார்கள். அரங்குகள் சேதமடைந்தன. இம்மாநாட்டினைக் குழப்பிய யாழ் உதவிக் காவல்துறை அத்தியட்சகர் சந்திரசேகரா பின்னர் சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் காவல்துறை அத்தியட்சகராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

1. வேலுப்பிள்ளை கேசவராஜன், 14, மாணவன்
2. பரம்சோதி சரவணபவன், 26, -
3. வைத்தியநாதன் யோகநாதன், 32, -
4. ஜோன்பிடலிஸ் சிக்மறிங்கம், 52, ஆசிரியர்
5. புலேந்திரன் அருளப்பு, 53, தொழிலாளி
6. இராசதுரை சிவானந்தம், 21, மாணவன்
7. இராஜன் தேவரட்ணம், 26, -
8. சின்னத்துரை பொன்னுத்துரை, 56, ஆயுள்வேத வைத்தியர்
9. சின்னத்தம்பி நந்தகுமார், 14, மாணவன்

## 4. 1977ஆம் ஆண்டு இனக்கொலை

1977ஆம் ஆண்டு யூலை மாதம் இருபத்தோராம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலின் விளைவாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்தது. அந்தப் பொதுத் தேர்தலில் இலங்கையில் மொத்தம் 168 தொகுதிகளில் நூற்றுநாற்பது தொகுதிகளை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கைப்பற்றியது. இது 5/6 பங்கு. இந்த பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி இருபத்துநான்கு தொகுதிகளில் போட்டியிட்டு பதினெட்டு ஆசனங்களைக் கைப்பற்றியது. சிறீலங்கா சுதந்திரக்கட்சி எட்டு ஆசனங்களைக் கைப்பற்றிப் படுதோல்வி அடைந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி தாம்

பதவிக்கு வந்தால், தமிழீழ தேசிய மன்றத்தைக் கூட்டுவதாகவும், தமிழீழத்தைப் பெறுவதற்கான சகல நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் கூறியிருந்தார்கள். தமிழ் மக்களும் அதனை ஏற்றுக்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆணை பிறப்பித்தார்கள். இது சிங்கள ஆட்சியாளர்களிற்குப் பேரிடியாக அமைந்தது. அவர்கள் இனக்கொலையொன்றைத் தூண்டுவதற்கான வாய்ப்பொன்றை எதிர்பார்த்திருந்தனர். அவ்வாறான சந்தர்ப்பம் ஒன்று 1977ஆம் ஆண்டு காலகட்டத்தில் அவர்களுக்குக் கிடைத்தது.

இக் காலகட்டத்தில் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் கண்காட்சி ஒன்று நடைபெற்றது. இக் கண்காட்சிக்கு சிவில் உடையில் வந்த யாழ்ப்பாணம் காவற்றுறை நிலையத்தைச் சேர்ந்த சிறீலங்காக் காவற்றுறையினர் அங்கு வந்திருந்த பெண்களோடு பாலியற் சேட்டைகளில் ஈடுபட்டார்கள். இதனால் ஆத்திரமடைந்த யாழ்ப்பாணப் பொதுமக்களுக்கும் காவற்றுறையினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு அது கைகலப்பில் முடிந்தது. பொதுமக்களது எதிர்ப்புக்கு அஞ்சி சிவில் உடையில் நின்ற காவற்றுறையினர் ஓடித்தப்பினார்கள்.

யாழ்ப்பாணம் காவற்றுறை நிலையத்திற்குச் சென்ற அவர்கள் ஆயுதபாணிகளாகப் பல நூற்றுக்கணக்கான காவற்றுறையினரை இறக்குகளிலும், ஜீப் வண்டியிலும் ஏற்றிக்கொண்டு மீண்டும் பொருட்காட்சி நடைபெற்ற இடத்திற்கு வந்து குழப்பத்தில் ஈடுபடலானார்கள். பதிலுக்கு யாழ்ப்பாணப் பொதுமக்களும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடலானார்கள். யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியிலுள்ள மதுபானக் கடையை காவற்றுறையினர் உடைத்துவிட்டு மது போதையில் ஆடிப்பாடினார்கள். யாழ்ப்பாண நகருக்குத் தீமூட்டி எரித்தார்கள். இதனால் இச்சம்பவம் ஏற்பட்டது.

இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்களும் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதற்காக யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் அவர்களை தென்னிலங்கைக்கு அனுப்பிவைத்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி வந்த இரவுத் தொடருந்து அனுராதபுரம் தொடருந்து நிலையத்தில் தரித்து நின்றபோது, அதில் பயணம் செய்த சிங்கள மாணவர்கள், பௌத்த பிக்கு மாணவன் ஒருவனை இருக்கையில் படுக்கவைத்து வெள்ளைத் துணியால் மூடிவிட்டு அதன் மீது சிவப்பு மையை ஊற்றி தமிழர்கள் புத்த பிக்குவைக் கொன்று விட்டார்கள் என்றும் யாழ்ப்பாணத்தில் நயினாதீவுப் புத்த விகாரையை உடைத்து விட்டார்கள் என்றும் சத்தமிட்டு முழக்கமெழுப்பினர். இதனால் அந்தத் தொடருந்தில் பயணம் செய்த தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்கள்.

இதேவேளையில் கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் வந்த இரவுத் தபால் தொடருந்து அனுராதபுரம் தொடருந்து நிலையத்தில் தரித்து நின்றபோது, அந்தத் தொடருந்தும் சிங்களவரால் தாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் நாடு பூராகவும் கட்டவிழ்த்து விடப்பட்டன. திருகோணமலை, வவுனியா, பதுளை, இரத்தினபுரி, கொழும்பு போன்ற பகுதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன.

இந்த இனக்கொலை பற்றிய விபரங்களை நாடாளுமன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எடுத்துக் கூறினார்கள். ஆனால், ஜே.ஆர்.ஜெயவர்த்தன எதையும் கேட்கவில்லை. அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தவும் இல்லை. ஊரடங்குச் சட்டத்தை அமுலாக்கவும் இல்லை. மாறாகத் தமக்கு முன்னைய அரசாங்கம் போல் அவசரகாலச் சட்டத்திற்கு நாட்டை ஆள விருப்பமில்லை என்றும் மாறாக சாதாரண சட்டத்தின் கீழேயே நாட்டை ஆளப்போவதாக கூறியதோடு "போரா? சமாதானமா?" என்ற போர்ப்பிரகடனம் ஒன்றையும் வெளியிட்டார். அதாவது தமிழ் மக்களைப் பார்த்து "நீங்கள் போருக்குத் தயார் என்றால் நானும் போருக்குத்தயார். உங்களுக்குச் சமாதானம் தேவை என்றால் நானும் சமாதானத்திற்குத்

தயார். இதைத் தான் எமது மக்கள் சொல்கிறார்கள்" என்று நாடாளுமன்றத்திற்குள்ளேயே சன்னதம் போட்டார்.

இதன் விளைவு சிங்களக் காடையர்களுக்குத் தமிழ்மக்களைக் கொல்லவும், தமிழர் சொத்துக்களைச் சூறையாடவும் தமிழர் வீடுகளுக்குத் தீ வைக்கவும் ஜே.ஆர் அரசினால் வழங்கப்பட்ட வெளிப்படையான உரிமமாகவே கருதப்படலாயிற்று. 1977ஆம் ஆண்டு இனக்கொலையைத் தொடர்ந்து, இக்காலம் பற்றி விசாரணை செய்வதற்காக இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர் சன்சோனி தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை ஜே.ஆர். நியமித்தார். விசாரணை முடிவில் சன்சோனி அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் அவர் குறிப்பிடுகையில், இந்த இனக்கொலைக்கு காவற்றுறையின் பொறுப்புணர்ச்சியற்ற போக்கும், அரசியல்வாதிகளின் பேச்சுக்கள், வதந்தி என்பனவே காரணமென அடையாளப்படுத்தினார்.

இந்த இனக்கொலையில் எல்லாமாக முன்நூறு வரையிலான தமிழர்கள் கொல்லப்பட்டதாக எடுத்துச் சொன்னார். ஆனால் வேறு அரச சார்பற்ற நிறுவனங்களினால் சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக தெரியவருகின்றது. பல நூற்றுக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டனர் என்றும் கத்திக்குத்து, கத்திவெட்டு, இரும்புக் கம்பிகள், பொல்லுகள் என்பனவற்றால் இவை ஏற்படுத்தப்பட்டவை என்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் அறிக்கை வெளியிட்டன. இனக்கொலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கும்படி விசாரணைக்குழு பரிந்துரை செய்தபோதும், எத்தகைய நட்டஈடும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசால் வழங்கப்படவில்லை.

## 5. 1981ஆம் ஆண்டு இனக்கொலை

1981ஆம் ஆண்டு மே மாதமும் யூன் மாதமும் வடகிழக்கில் தேர்தல் பரப்புரை பின்னணியில் கொந்தளிப்பான அரசியற் சூழ்நிலைகள் காணப்பட்டன. இந்நிலையில் ஐ.தே.கட்சியின் தலைமைப்பீடம் ஓர் உயர்மட்ட அமைச்சர் குழுவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தது. ஜே.ஆர் அரசாங்கத்தால் நயவஞ்சக நோக்கத்தோடு அனுப்பிவைக்கப்பட்ட இந்தக் குழுவில் மகாவலி அபிவிருத்தித்திட்ட அமைச்சர் காமினி திஸாநாயக்கா, விஞ்ஞான கைத்தொழில் அமைச்சர் சிறில் மத்தியூ போன்ற அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணம் சுபாஸ் விடுதியில் தங்கியிருந்தார்கள். இவர்களோடு யாழ்ப்பாண நகர் எங்கும் சிறப்புப் பயிற்சி பெற்ற காவற்றுறையினரும் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டனர். முப்படைகளும் யாழ்ப்பாண நகர் எங்கும் பரவலாக நிறுத்தப்பட்டிருந்தனர். இவர்களைவிடப் பெருந்தொகையான சிங்களக் குண்டர்கள், காடையர்கள் தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்ரேடியத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் யாழ்ப்பாண நகரை எரியூட்டுவதற்கு ஏற்ற வகையில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறாக யாழ்ப்பாண நகரம் ஒரு கொதிநிலையில் இருந்தபோது 1981ஆம் ஆண்டு மே மாதம் முப்பத்தோராம் திகதி யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலுக்கு முன்னால் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றக் கொண்டிருக்கும்போது திடீரென வெடிச்சத்தம் கேட்டது. அடையாளம் தெரியாதோர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு சிங்களக் காவற்றுறையினன் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு வந்த யாழ்ப்பாணக் காவற்றுறை நிலையத்தைச் சேர்ந்த சிங்களக் காவற்றுறையினர் நாச்சிமார் கோயிலுக்குத் தீ மூட்டினார்கள். ஆலய சுற்றாடலில் நின்ற மக்கள் தாக்கப்பட்டார்கள். ஆலயத்திற்கு உள்ளே நின்ற பக்தர்கள் காவற்றுறையினரின் துப்பாக்கிப் பிடிகளாற் தாக்கப்பட்டார்கள். பலர் படுகாயமுற்றார்கள். ஆலயத்திற்குள்ளே இருந்த விக்கிரகங்கள், சுவாமிகாவும் வாகனங்கள் தாக்கப்பட்டன. ஆலயத்திற்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த தேர்

முட்டியும், தேரும் தீ மூட்டி எரிக்கப்பட்டன. நாச்சிமார் கோயில் சுற்றாடலிலிருந்த வீடுகள், கடைகள், வீட்டு வேலிகள் என்பன எரிக்கப்பட்டன. இதன் பின்னர் யாழ்ப்பாண நகருக்குள் நுழைந்த சிறீலங்காக் காவற்றுறையினர் யாழ்ப்பாண நகருக்குத் தீ மூட்டினார்கள். யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு முன்னாலிருந்த மகாத்மா காந்தி சிலை, யாழ்ப்பாணம் நவீன சந்தைக்கு முன்னாலிருந்த சோமசுந்தரப்புலவர் சிலை, யாழ்ப்பாணம் ஹட்டன் நெசனல் வங்கிக்கு முன்னாலிருந்த திருவள்ளுவர் சிலை, யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியிலிருந்த ஔவையார் சிலை என்பன அடித்து நொருக்கப்பட்டன. யாழ்ப்பாணம் முற்றவெளியிலிருந்த தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகளின் நினைவுத் தூபிகள் சிதைக்கப்பட்டன.

இதன் பின்னர் பருத்தித்துறை வீதி வழியாக அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிவேல் யோகேஸ்வரனின் வீட்டுக்குச் சென்று அவரிடமே அவரைப் பற்றி விசாரித்திருக்கிறார்கள். நிலைமையைப் புரிந்துகொண்ட யோகேஸ்வரன் தன் வீட்டுப் பின் மதிலால் தன் மனைவியையும் அழைத்துக்கொண்டு ஓடி மயிரிழையில் உயிர்தப்பினார். நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடும் வீட்டினுள்ளேயிருந்த அவரது காரியாலயமும் சிங்களக் குண்டர்களால் தீயிட்டுப் பொசுக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடு தரைமட்டமாக்கப்பட்டது. யோகேஸ்வரன் அவர்கள் 1981ஆம் ஆண்டு யூன், யூலை மாதம் வெளியான இந்தியா டுடே சஞ்சிகைக்கு அளித்த செவ்வியில் தனது வீட்டைக் கொளுத்தியவர்கள், கட்டைக் காற்சட்டையும் அரைக்கை பெனியனும் அணிந்து மதுபோதையிற் காணப்பட்டார்கள் என்றும், அவர்கள் சிங்களத்தில் கதைத்தார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

## 6 யாழ் நூலகம் எரிக்கப்படல் - 01 யூன் 1981





தெற்காசியாவிலேயே மிகப்பெரியதும், அருமைமிக்க பழைமை வாய்ந்த நூல்களை கொண்டதுமாக யாழ் பொது நூலகம் விழங்கியது. தீவின் வடக்கில் வாழ்ந்து வந்த மக்களின் கல்விசார் பொக்கிஷமாக இந்நூலகம் இருந்தது. யாழ்நகரத்தின் தெற்கே புகழ்பெற்ற விழையாட்டு மைதானத்தின் கிழக்கு தொங்கலில் இதன் கட்டிடம் அமைந்திருந்தது. பிரிட்டிசார் காலத்தில் கட்டப்பட்ட யாழ் சென்றல் கலலூரி, மணிக்கூட்டுக் கோபுரம் என்பன இதற்கருகே அமைந்திருந்தன.

இந்நூலகம் 97,000 மேலான மிக பழைய நூல்களைக்கொண்டு, இத்தீவிலே இது தனித்துவமுடையதாக இருந்தது. அக்காலத்தில் மாணவர்கள், ஆராச்சியாளர்கள், மற்றும் வெளிநாட்டு பிரமுகர்கள் இந்நூலகத்தை தேடி வருவார்கள்.

01.06.1981 அன்று, சிறீலங்காவின் முப்படைகளும் சேர்ந்து இந்நூலக வழாகத்துள் இறங்கினர். அங்கிருந்த பாதுகாப்பு ஊழியரை துரத்திவிட்டு நூலகத்துக்குள் உடைத்துக்கொண்டு

நுழைந்தனர். சில நிமிடங்களில் 97,000 அருமைவாய்ந்த புத்தகங்களையும் எரித்துச் சாம்பலாக்கினர். நூலகக் கட்டிடமும் தீமூட்டப்பட்டது.

தெற்காசியாவிலேயே மிக அருமை வாய்ந்த தொகையான புத்தகங்களை எரித்த இச்சம்பவம், மானிட சரித்திரத்திலேயே ஒரு துயரச் சம்பவமாக செதுக்கப்பட வேண்டியது எனலாம்.

## 7. 1983ஆம் ஆண்டு இனக்கொலை

1983ம் ஆண்டு மே மாதம் பதினெட்டாம் திகதி வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றது. யாழ்ப்பாணம் மாநகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை ஆகிய நான்கு உள்ளூராட்சிச் சபைகளுக்கும் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் போட்டியிட்டார்கள். இந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலைப் புறக்கணிக்கும் படி தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டனர். அவர்களுடைய புறக்கணிப்பு மிகத்தீவிரமாக இடம்பெற்றது. மறுபக்கத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய தலைவர்களும் தீவிரமாகத் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார்கள். தேர்தற் புறக்கணிப்பு 98விகிதம் வெற்றிபெற்றது. இதைத்தொடர்ந்து அப்போதைய ஜே.ஆர் ஜெயவர்த்தனாவுடைய அரசாங்கம் தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்பட்ட தலைமைத்துவ மாற்றத்தால் அதிர்ச்சியடைந்தது. தமிழ் பேசும் மக்கள் நாடாளுமன்ற மிதவாத அரசியற் தலைமையை நிராகரித்து தமிழ் தேசியவாதத்தை முழுமையாக நேசிக்கின்ற ஓர் தலைமைத்துவத்தை தெரிந்தெடுத்தமை சிங்கள ஆட்சியாளர்களுக்கு அதிர்ச்சி வைத்தியமாகவே இருந்தது. இதனால் ஜே.ஆர். ஜெயவர்த்தனா கறுப்புக் குடைகளைக் கண்டு மிரளும் கட்டாக்காலி மாடுகளைப் போல மிரண்டார். தனது படைகளைக் கட்டவிழ்த்துவிட அவர்கள் கந்தர்மடம் பகுதிகளில் வீடுகளை எரித்தனர். பொதுமக்கள் தாக்கப்பட்டார்கள் அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. யாழ்ப்பாணத்தில் ஓர் பதட்ட மான சூழ்நிலை உருவாகியது. இந்தச் சம்பவங்கள் விரிவுபெற்று வவுனியாவிற்கும் பரவியது. அங்கும் கடைகள் எரிக்கப்பட்டன. இது பின்னர் திருகோணமலைக்கும் பரவியது. 1983 யூன் மாதம் முழுவதும் ஒவ்வொரு நாளும் திருமலையில் எங்கோ ஒரு தமிழ்க்கிராமத்தில் தமிழ் மகன் சிங்களவரால் வெட்டிப்படுகொலை செய்யப்படுகின்ற நிகழ்ச்சி மிகவும்

சர்வசாதாரணமாக நிகழ்ந்துகொண்டிருந்தது. இந்நிலையில் திருகோணமலைப் படுகொலைக்கு எதிராக 1983ஆம் ஆண்டு யூலை மாதம் 01ஆம் திகதி தமிழீழ விடுதலை அணி, யாழப்பாணப்பல்கலைக்கழக மாணவா ஒன்றியம் உள்ளிட்ட ஆறு அமைப்புக்களால் கடையடைப்பு முழு அளவில் நடத்தப்பட்டன. இந்தக் கடையடைப்பு நடைபெற்ற தினத்தன்று மாலை இரண்டு மணியளவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த யாழ்தேவி தொடருந்து கோண்டாவிலில் வைத்து சில தீவிரப் போக்குடைய இளைஞர்களால் தீ மூட்டி எரிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்தக் கதவடைப்பை ஒழுங்குபடுத்திய வைத்திய கலாநிதி எஸ்.ஏ.தர்மலிங்கம் அவர்களும் சுதந்திரன் நாளேட்டின் ஆசிரியர் கோவை மகேசன் அவர்களும் யாழ்ப்பாணம் காவற்றுறையினரால் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்கள் இருவரும் வெலிக்கடைச்சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டாக்ள். இதனால் யாழ்ப்பாணத்தில் பதட்டம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த சுதந்திரன் தமிழ் நாளேடும் மற்றும் சற்றடே றிவியூ ஆங்கில நாளேடும் இலங்கை அரசினால் தடைசெய்யப்பட்டன. அந்த அச்சகங்கள் சீல் வைத்துப் பூட்டப்பட்டன. அதே ஆண்டு யூலை மாதம் இருபத்துமூன்றாம் திகதி திருநெல்வேலியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றின்போது பதின்மூன்று

இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதை ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடைய அரசாங்கம் இலத்திரனியல் ஊடகங்களுக்கு ஊடாக தீவிரமாகப் பரப்புரை செய்தது. தமிழ்ப் புலிகள் பதின்மூன்று சிங்கள பௌத்த இராணுவத்தினரை யாழ்ப்பாணத்தில் கொன்று விட்டார்கள் என ஜே.ஆர் இனவாதப் பரப்புரையினைத் தூண்டிவிட்டார். இறந்த இராணுவத்தினரது உடல்களை யாழ்ப்பாணத்திலேயே அடக்கம் செய்துவிட இராணுவத்தினர் விரும்பியபோதும் அப்போதைய வர்த்தக அமைச்சர் அத்துலத் முதலியும் ஜே.ஆரும் அந்தப் பதின் மூன்று இராணுவத்தினரதும் உடல்களை கொழும்புக்கு எடுத்து வந்து சிங்கள மக்கள் மத்தியில் காட்சிப்படுத்திய பின்னர் பொறளை கனத்தை மயானத்தில் அடக்கம் செய்ய விரும்பினார்கள். இறந்த பதினமூ் ன்று இராணுவ சிப்பாய்களையும் கனத்தையில் அடக்கம் செய்யப்படும் என்று ஜே.ஆர் அரசு மிகப்பெரும் அளவில் விளம்பரப்படுத்தியதால் கனத்தையில் பல ஆயிரக்கணக்கான சிங்கள இனவாதிகள் குழுமினார்கள்.

இருபத்துநான்காம் திகதி மாலையே பொறளையில் இருந்த சைவ உணவகம் ஒன்று தாக்கப்பட்டது. அன்று இரவு இக்கலவரம் மருதானை, கொட்டாஞ்சேனை, வத்தளை, நீர்கொழும்பு எனப் பரவியது. மறுநாள் யூலை இருபத்தைந்தாம் திகதி இச் சம்பவம் மேலும் விசாலிப்படைந்தது. கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, கொம்பனித்தெரு, வெள்ளவத்தை, தெகிவளை, மொறட்டுவ, பாணந்துறை என கொழும்பின் தமிழர்கள் வாழும் எல்லாப் பகுதிகளுக்கும் காட்டுத்தீ போல் பரவியது. இதனால் இரண்டு நாட்களில் கொழும்பில் வாழ்ந்த பல இலட்சக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

இதனால் பம்பலப்பிட்டி சென்.பீற்றர்ஸ் கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி எனப் பல பாடசாலைகளில் இலட்சக் கணக்கான தமிழர்களுக்காக அகதி முகாம்கள் திறக்கப்பட்டன. வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகள்.. இக்கால கட்டத்தில் வெலிக்கடையில் ரெலோ இயக்கத்தின் மிக முக்கியமான தலைவர்களான குட்டிமணி, தங்கத்துரை, தேவன், ஜெகன் மற்றும் வவுனியா காந்திய இயக்கத்தைச் சேர்ந்த வைத்தியர் இராஜசுந்தரம் போன்றவர்களும் இங்கு சிறைவைக்கப்பட்டிருந்தனர். குட்டிமணி, தங்கத்துரை போன்றவர்கள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கின்போது ஆற்றிய உரை நாளேடுகளில் பிரசுரிக்கப்பட்டபோது, அது ஜனாதிபதி ஜே.ஆர், அத்துலத்முதலி, காமினி திஸாநாயக்கா, சிறில் மத்தியூ போன்ற அமைச்சர்களுக்குப் பெரும் ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் கிளறியது.

இதனால் சிறைச்சாலையில் வைத்து இவர்களது உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் திட்டமும் போடப்பட்டது. இதற்கென கொலை, கொள்ளை போன்ற குற்றங்களுக்காக நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட கொலைகாரப் படை ஒன்று தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. இந்தக் கொலைகாரப் படைக்குத் தாய்லாந்து விமானத்தைக் கடத்திச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட சேபால ஏக்கநாயக்கா தலைமை தாங்கினார். யூலை மாதம் இருபத்தைந்தாம் திகதி காலை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு காமினி திசநாயக்காவும், அத்துலத்முதலியும் சென்று தமிழ்ச் சிறைக்கைதிகளைக் கொல்லுமாறு பச்சைக்கொடி காட்டிவிட்டுச் சென்றார்கள்.

அன்று மாலையே குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்ட முப்பத்தைந்து தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டனர். அவர்களைக் காப்பாற்றவோ, கொலை வெறியர்களான சிங்களக் கைதிகளைத் தடுக்கவோ சிறைச்சாலை நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதன் விளைவாக யூலை மாதம் இருபத்தேழாம் திகதி மேலும் பதினேழு சிறைக்கைதிகள் கொல்லப்பட்டனர். மொத்தமாக இரு தினங்களிலும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த ஐம்பத்திரண்டு சிறைக்கைதிகள் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.


இதற்கு முன்பாக யூலை மாதம் இருபத்துநான்காம் திகதி திருநெல்வேலி, கந்தர்மடம் போன்ற இடங்களில் ஐம்பத்தொரு அப்பாவிப் பொதுமக்கள் சிங்கள இராணுவத்தாற் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களில் கல்விமான் கலா.பரமேஸ்வரன், அவரது மாமனார் சரவணமுத்து ஆகியோரும் உள்ளடங்குவர். இதைவிட நாடுபூராகவும் வெடித்த இச் சம்பவத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் வெட்டியும், சுட்டும் படுகொலை செய்யப்பட்டார்கள். பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் காடையர்களுடைய தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்தார்கள். தமிழ் மக்களுக்குச் சொந்தமான வீடுகள், கடைகள், கட்டடங்கள், வணிக நிலையங்கள் திரைப்பட அரங்குகள் தரைமட்டமாக்கப்பட்டன. தமிழர் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

கொழும்பில் பிரபல தொழிலதிபர் வை.ஏ.எஸ்.ஞானம், மகாராஜா நிறுவனம், கே.குணரட்ணம் எனப் பல நிறுவனங்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகின. ரேப்பியா என்ற நிறுவனம் இச் சம்பவத்தில் சுமார் பத்தாயிரம் கோடி ரூபாவிற்கு மேல் தமிழர்களுடைய சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தப்பட்டதென மதிப்பீடு செய்தது. இந்தச் சம்பவத்தின் போது ஜே.ஆர் ஜெயவர்த்தனா எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. 1983ஆம் ஆண்டு யூலை மாதம் இருபத்தேழாம் திகதி ரூபவாகினி தொலைக்காட்சியில் தோன்றிய ஜே.ஆர் பாதிக்கபட்ட தமிழ் மக்களுக்கு எந்தவித அனுதாபமும் தெரிவிக்காமல் கடந்த சில நாட்களாக நடைபெற்ற அசம்பாவிதங்கள் சிங்கள மக்களது இயல்பான மன உணர்வுகள் எனக் கருத்து வெளியிட்டார்.

இதைத் தொடர்ந்து யூலை மாதம் இருபத்தொன்பதாம் திகதி ஒரு வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகள் கொழும்புக்கு வந்துவிட்டார்கள் என்ற வதந்தி பரப்பப்பட்டது. அன்றைய தினம் மேலும் பல தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். கல்விமான் அருமைநாயகம் என்பவர் நுகேகொடையில் தனது வீட்டைப் பார்க்கப் போனபோது வெட்டிக்கொல்லப்பட்டார். கொழும்புப் புறக்கோட்டை காஸ்வேக்ஸ் ஸ்தாபனத்தில் வேலை செய்த தமிழ் இளைஞர்கள் பாதுகாப்புத் தேடி அந்நிறுவனத்தின் கூரைமீது இருந்தபோது அவ்வழியாக வந்த விமானப்படையினால் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள்.

இச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைக் காப்பாற்ற எந்த முயற்சியும் எடுக்காத ஜே.ஆர் ஜெயவர்த்தனாவுடைய அரசு 1983ஆம் ஆண்டு ஆவணி மாதம் நான்காம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர் போராட்டத்தை நசுக்குவதற்காக 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்புக்கான ஆறாவது திருத்தச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இதன்படி தனிநாடு கேட்டுப் போராடுதல், அதற்கு ஊக்கமளித்தல், உதவி செய்தல் என்பன போன்ற விடயங்கள் பாரதூரமான தண்டனைக்குரிய குற்றங்களாக அறிவிக்கப்பட்டன

## 8. திருநெல்வேலி படுகொலை - 24, 25 யூலை 1983




திருநெல்வேலி யாழ் மாவட்டத்தின் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவினுள் உள்ளடங்கும் பகுதியாகும். யாழ் நகரப் பகுதியிலிருந்து பலாலி வீதியூடாக வடக்குப்புறமாக ஏறக்குறைய மூன்று மைல் தூரத்தில் உள்ளது. இப்பிரதேசத்தில் யாழ் பல்கலைக்கழகம், யாழ் உயர்தொழிநுட்பக் கல்லூரி போன்ற உயர் கல்வி நிறுவனங்களும் அரச அலுவலகங்களும் அமைந்துள்ளன. 1983ஆம் ஆண்டு யூலை மாதம் இருபத்துமூன்றாம் திகதி

இரவு 11:45 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினரின் வாகனம் பலாலி வீதியில், பரமேசுவராச் சந்திக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் தபாற்பெட்டிச் திருநெல்வேலிப் பகுதி, பலாலி வீதி, சிவன் அம்மன் கிராமங்களைச் சேர்ந்த மக்களின் வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் இப்பகுதியைச் சேர்ந்த ஐம்பத்தொன்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களைச் சுட்டுக் கொன்றனர். பல வீடுகள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இராமசாமி நாகராஜா, தொழிலாளி
02. நாகலிங்கம் சிவலிங்கம், வேலை மேற்பார்வையாளர்
03. கனகரத்தினம் கிருஸ்ணானந்தம், வியாபாரம்
04. கந்தையா சண்முகநாதன் -
05. பாலச்சந்திரன் அஜித், சிறுவன்
06. பிலிப் அலோசியஸ் யோகராசா சந்திரசேகரம், வியாபாரம்
07. தங்கராஜா கஜேந்திரன் மாணவன்,
08. பொன்னையா பரராஜசிங்கம் ஆசிரியர்,
09. செல்வகாந்தினி சிறுமி,
10. சுப்பிரமணியம் பரமேஸ்வரன், பிராந்திய முகாமையாளர்
11. சின்னத்தம்பி சரவணமுத்து, இளைப்பாறிய ஆசிரியர்
12. சின்னையா சதானந்தன், கடிகாரம் திருத்துநர்
13. சீவரத்தினம் தவேந்திரன் மாணவன்,
14. சண்முகநாதன் சத்தியதேவன், விற்பனையாளர்

## 9. சாம்பல்தோட்டம் படுகொலை - 1984

வவுனியா நகரின் மன்னார் ரோட்டிலிருந்து மூன்று கி.மி.ல் உள்ளது, சாம்பல் தோட்டம் கிராமம். இன்று இவ்விடம், நாவலர் பாணி என்று அழைக்கப்படுகிறது.

1984 திம்பு பேச்சு வார்த்தைக்கு முன்னர் இங்கு நடைபெற்ற படுகொலையைப்பற்றி அவ்வூரைச்சேர்ந்த பெயர் சொல்ல விரும்பாத ஒரு மங்கை கூறியாது.




*"ஒரு திருமண நிகழ்ச்சி முடிவுற்று தனியாருக்க சொந்தமான ஒரு பேருந்திருந்தில் 70 தமிழர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்பேருந்தை பம்மைமேடு என்ற இடத்தில் சிங்கள இராணுவம் தடுத்து நிறுத்தி. அதிலிருந்த அனைவரையும் தேக்கவத்தை என்ற இடத்திலுள்ள தேக்கு மரத்தோப்புக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் 15 பெண்களையும், குழந்தைகளையும் தனியே பிரித்து அழைத்துச் சென்றனர். மீதமிருந்த ஆண்களை தேக்கு மரத்தைப் பார்க்கச் சொல்லி விட்டு, தாங்கள் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து கண்முடித்தனமாய் சுட்டு தள்ளினார்கள்.*

சிங்கள இராணுவம், அங்கு குண்டடிபட்டு கிடந்த உடல்களை பூட்ஸ் காலால் உதைத்து புரட்டிப் பார்த்து, எவரேனும் உயிருடன் இருக்கின்றனரா, என சோதனையிட்டனர். அங்கு ஏவராவது வலியால் புலம்பும் சப்தம் கேட்டால், திரும்பவும் அவர்கள் சாகும்வரை சுட்டனர். ஆரம்பத்தில் துப்பாக்கியால் சுட்டபோது, ஒருவர் மயக்கமுற்று கீழே விழுந்து விட்டதால், அவருக்கு குண்டு எதுவும் பாயவில்லை. ஆனால் குண்டடிபட்ட வேறு நபர்கள் இருவர் இவர் மீது இரத்த வெள்ளத்தில் விழுந்தனர். இதனால், மயக்கமுற்றிருந்தவர் உடல் மீது இரத்தம் படிந்தது. இராணுவத்தினர் மயக்கமுற்றிருந்தவரை உதைத்த போது, அவர் ஏதும் சப்தம் எழுப்பாததினால், மயக்கமுற்றவரும் இறந்திருப்பார் என எண்ணி சென்று விட்டனர். இராணுவம் அங்கிருந்து சென்றது தெரிந்தவுடன், எழுந்து அருகில் உள்ள தாலம்பொக்காணை என்ற கிராமத்திற்கு ஓடினார். அக்கிராமத்தில் தமிழர்களின் நண்பராகவும் விடுதலைப்புலி ஆதரவாளராகவும் ஒரு இஸ்லாமிய தலைவர் ஒருவர் இருந்தார். அந்த தலைவர் ஒரு கடை வைத்திருந்தார். தப்பி வந்த தமிழர், நடைபெற்ற சம்பவம் குறித்து அந்த இஸ்லாமிய தலைவரிடம் சொல்லிவிட்டு, அக்கிராமத்திலிருந்த காவல்துறைக்கு சொல்ல பயந்து, யாழ்பாணதிற்கு சென்றுவிட்டார். இஸ்லாமியரும் கிராம மக்களும் படுகொலை நடந்த இடத்திற்கு சென்று பார்த்தனர், செய்தி காட்டுத் தீபாய் பரவியது.

தப்பி வந்த அந்த தமிழருக்கு தகுந்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டு பாதுகாப்பாய் அனுப்பிவைக்கப்பட்டார். நாங்கள் படுகொலை நிகழ்ந்த இடத்திற்கு சென்று பார்த்தோம். எங்கள் இருப்பிடம் அருகிலேயே இது நடந்துள்ளது. படுகொலை நடந்த இடத்தில் பெண்களின் உடல்கள் காண முடியவில்லை. அப்பெண்கள் எங்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்பதும், அவர்களின் கதி என்ன என்பதும் தெரியவில்லை என தப்பி வந்தவர் கூறினார்.''

## 10. சுன்னாகம் காவற்துறை நிலையம் படுகொலை – 08 ஜனவரி 1984

யாழ் மாவட்டத்தின் வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச எல்லைக்குள் சுன்னாகம் அமைந்துள்ளது. யாழ் நகரிலிருந்து காங்கேசன்துறை செல்லும் கே.கே.எஸ் வீதியில் பத்து கிலோமீற்றர் தூரத்திலுள்ள சந்திக்குத் தெற்குப்புறமாக இருநூற்றைம்பது மீற்றர் தூரத்தில் சுன்னாகம் காவற்றுறை நிலையம் அமைந்திருந்தது.




1984ஆம் ஆண்டு தை மாதம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் காரணமின்றிக் கைதுசெய்யப்பட்ட சுன்னாகப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சுன்னாகக் காவற்றுறை நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர்.

1984தை மாதம் எட்டாம் நாள் காவற்றுறை மீது போராளிகளின் எதிர்ப்புக்கள் பரவலடைய சுன்னாகக் காவற்றுறையினர், இளைஞர்களைத் தடுத்து வைத்திருந்த அறையில் நேரக்கணிப்பு குண்டினை பொருத்திவிட்டு அவ்விடத்தைவிட்டு வெளியேறினார்கள். காவற்றுறையினர் பொருத்திய குண்டு வெடித்ததில் காவற்றுறை நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர்களை காப்பாற்றச் சென்ற சஞ்சீவன் உட்பட பத்தொன்பது இளைஞர்கள் உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. செல்லர் சிவலிங்கம், 22, மாணவன்
02. வைத்திலிங்கம் நிகேதனன், 21, மாணவன்
03. கந்தையா பாலன், 25, கமம்
04. அப்பையா நாகராசா, 38, வியாபாரம்
05. ஆசீர்வாதம் விஜிற்விமலராஜா, 20, மின்சாரசபை ஊழியர்

## 11. சுன்னாகம் சந்தை படுகொலை – 28 மார்ச் 1984



யாழ் மாவட்டத்தின் வலிகாமம் தெற்குப் பகுதியில் யாழ் நகரிலிருந்து பத்து கி.மீ. தூரத்தில் கே.கே.எஸ். வீதியில் சுன்னாகச் சந்திக்கு அருகில் சுன்னாகச் சந்தை அமைந்துள்ளது. யாழ் குடாநாட்டின் மிகப் பெருமளவான விவசாயப் பொருட்களை விற்பனை செய்யும் இடமாக இச்சந்தை அமைந்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட பல மாவட்டங்களிலிருந்தும் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்கள் இச்சந்தையில் விற்கப்பட்டன.

28.03.1984 அன்று மதியம் சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியிலும், சந்தைப் பகுதிகளிலும் தமது அன்றாட வேலைகளில் பெருமளவான மக்கள் கூடியிருந்தனர். திடீரென பஸ்நிலையப் பகுதிக்கு ட்ரக் வண்டியிலும், ஜீப்பிலும் வந்திறங்கிய விமானப் படையினர் பெரும் பரபரப்புடன் காணப்பட்டதுடன், யாரும் எதிர்பாராத வகையில் திடீரெனச் சுன்னாகப் பஸ் நிலையப் பகுதிகளிலும், சந்தையிலும் குழுமியிருந்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

விமானப் படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி அன்றைய தினம் தமது நாளாந்த அலுவல்களில் ஈடுபட்ட எட்டுப் பொதுமக்கள் உயிரிழந்ததுடன், ஐம்பது பொதுமக்கள் வரை படுகாயமடைந்தனர். சந்தை தீமூட்டப்பட்டதில் பல கடைகள் எரிந்து அழிந்தன. இதன் பின்னர் அவ்விடத்தை விட்டு விலகி மல்லாகப் பகுதியூடாக கே.கே.எஸ் வீதி வழியாக காங்கேசன்துறை நோக்கிச் சென்ற இராணுவத்தினர் மல்லாகம் பகுதியில் தங்களது கண்களுக்குத் தென்பட்ட எல்லாப் பொதுமக்களையும் தாக்கினார்கள். இதில் ஒருவர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தார்கள்.


அதனைத் தொடர்ந்து தெல்லிப்பளைப் பகுதிக்குச் சென்ற விமானப் படையினர் யூனியன் கல்லூரியில் பரீட்சை முடித்து விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவர்கள், மற்றும் அங்கு நடமாடிய பொதுமக்கள் மீதும் தாக்குதலை நடத்தினார்கள், இதில் இருபத்தாறு மாணவர்கள் காயமடைந்ததுடன், அவ்வீதி வழியாகப் பயணம் செய்த இருபது பொதுமக்களும் காயமடைந்தார்கள். பின்னர் விமானப் படையினர் பலாலி முகாமிற்கு திரும்பிச் சென்றார்கள்.

இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. கந்தையா பாலசுப்பிரமணியம், 52, பாதுகாவலர்
02. நாகலிங்கம் சிவசுப்பிரமணியம், 54, சந்தை மேற்பார்வையாளர்
03. தம்பிமுத்து சுந்தரலிங்கம், 38, தொழிலாளி
04. வல்லிபுரம் சின்னத்துரை, 68 வியாபாரம்
05. வைரவி தியாகராசா, 42, நெசவு

06. பசுபதி தவமணி, 43, வீட்டுப்பணி
07. நடராசா யோகராசா, 27, வியாபாரம்

## 12. மதவாச்சி - ரம்ப்பாவ படுகொலை - செப்ரெம்பர் 1984



அனுராதபுர மாவட்டத்தின் எல்லைக் கிராமமாக மதவாச்சி அமைந்துள்ளது. வவுனியா நகரிலிருந்து கிட்டத்தட்ட முப்பது கி.மீ தூரத்தில் தெற்கு பக்கமாக யாழ் கண்டி வீதியில் மதவாச்சி நகரம் அமைந்துள்ளது.

மதவாச்சியில் சிங்கள மக்களும் முசுலிம் மக்களுமே பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றார்கள். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் மக்கள் மதவாச்சி ஊடாகப் பயணம் செய்வது வழக்கம். 1983ஆம் ஆண்டு இனக்கொலை நிகழ்வின் பின்னர் இவ்வழி செல்லும் தமிழ் மக்களையும் அவர்கள் பயணிக்கும் வாகனங்களையும் அங்குள்ள சிங்களவர் தாக்குவது தொடர்ந்து நடைபெற்று வந்தது. 1984ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த பயணிகள் பேருந்தினை மதவாச்சிச் சந்தியில் காவலிலிருந்த இராணுவத்தினர் வழிமறித்து, மதவாச்சியிலிருந்து மன்னார் நோக்கிச் செல்லும் வீதிக்கு பயணிகள் பேருந்தினைக் கொண்டுசென்று, பயணிகள் பேருந்து மீது துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டார்கள். இராணுவத்தினரின் இத்தாக்குதலில் பேருந்து ஓட்டுநர் உட்படப் பதினைந்து பேர் உயிரிழந்தார்கள். முப்பத்தொரு பயணிகள் காயமடைந்தார்கள்.

## 13. பருத்தித்துறை – திக்கம் படுகொலை - 16 செப்ரெம்பர் 1984

16.09.1984 அன்று நாலு சிறீலங்கா படையினர் ஒரு கண்ணணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இதற்குப் பழிவாங்கும் நோக்கத்தில் சிறீலங்கா பொலிசார் 16 பொதுமக்களை தாக்கிக் கொன்றனர். அதோடு பருத்தித்துறையில் அமைந்துள்ள் ஹாட்லிக்கல்லூரி நூல் நிலையமும் அதன் விஞ்ஞான பரிசோதனை அறைகளும் பொலிசாரால் தீமூட்டி எரிக்கப் பட்டது.



## 14. ஒதியமலை படுகொலை – 01 டிசம்பர் 1984

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவில் நெடுங்கேணிக்கு அருகில் ஒதியமலை என்ற கிராமம் அமைந்துள்ளது. தமிழ் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த பகுதிகளில் குற்றச் செயல்களில் தண்டனை பெற்ற சிங்களக் குற்றவாளிகளும் அவர்கள் குடும்பங்களும் இராணுவப் பாதுகாப்புடன் சிங்கள அரசு குடியேற்றி வந்தது. அந்த வகையில் கென்பாம், டொலர்பாம் போன்ற இடங்களைத் தொடர்ந்து ஒதியமலைப் பகுதியிலும் குடியமர்த்தப்பட்டார்கள்.



1984ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் இருபத்தொன்பதாம் திகதியிலிருந்து மார்கழி இரண்டாம் திகதி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது. மார்கழி மாதம் முதலாம் திகதி பதவியாவிலிருந்து ஒதியமலை கட்டுக்கரை ஊடாக வந்த இராணுவத்தினர் ஒதியமலைக் கிராமத்தைச் சுற்றிவளைத்தனர். மக்கள் அதிகாலை வீட்டின் கதவுகளைத் திறந்தபோது பச்சை நிற உடைகளுடனும் ஆயுதங்களுடனும் இராணுவத்தினர் நின்றனர். நாங்கள் அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தினுள் கூட்டம் வைக்கப் போகிறோம் ஆண்கள் மட்டும் வாங்கோ என சரளமாகத் தமிழிற் கூறி முபப்திற்கும் மேற்பட்ட ஆண்களை இராணுவத்தினர் கைது செய்து கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்திற்குள் அழைத்துச் சென்று அவர்களின் கைகளை பின்னாற் கட்டி சித்திரவதை செய்து சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தனர். இராணுவம் சென்றபின் அங்கு சென்று பார்த்தபோது கைதுசெய்யப்பட்டவர்களில் இருபத்தேழு பேர் மிகவும் கோரமாக கொல்லப்பட்டு மண்டபத்தினுள் கிடந்தார்கள்.

இறந்தவர்களில் அனேகர் திருமணமாகிக் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தவர்கள். பலர் முதியவர்கள், சிலர் கிளிநொச்சி மாவட்டம், பளை, பள்ளியிலிருந்து வயல் வேலைக்காக ஒதியமலை வந்தவர்கள், வேறு சிலர் அயல்கிராமமான பட்டிக்குடியிருப்பிலிருந்து உறவினர் வீட்டுத் திருமணத்திற்காக வந்தவர்களாவார்கள்.



இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இச்சம்பவத்தினை தொடர்ந்து ஒதியமலைக் கிராம மக்கள் இடம் பெயர்ந்து முல்லைத்தீவில் உள்ள பாடசாலைகளிலும் கோயில்களிலும் தஞ்சமடைந்தார்கள்.
ஒதியமலை கிராமச் சங்கத்தலைவர் நா.கந்தசாமி இப்படுகொலை தொடர்ப்பாகக் குறிப்பிடுகையில்,

*“அன்றைய தினம் காலை 6.30 மணியளவிலே எமது கிராமத்திற்குள் புகுந்த இலங்கை இராணுவத்தினர் எமதுகிராமத்தை நான்கு பக்கத்தாலும் சுற்றிவளைத்து, எமதுகிராமமக்களில் கண்ணிற்பட்டவர்களையெல்லாம் பிடித்து ஓரிடமாக்கி அவர்களது மேலங்கியைக் கழற்றி அதனைக்கொண்டு அவர்களது கைகளைப் பின்பக்கமாகக் கட்டி ஒதியமலைக் குளக்கட்டருகே கொண்டு வந்தனர். அந்த நேரத்திலே அவ்வீதியாற் சென்ற செல்வராசா என்பவரது உழவு இயந்திரத்தை மறித்து அதிலிருந்தவர்களையும் பிடித்து கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்திற்குக் கொண்டு சென்றார்கள். சிறிது நேரத்தின் பின் அலறல் சத்தமும் அதைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச்சத்தமும் கேட்டது.*

அத்துடன், பிடித்தவர்களில் வயோதிபர்களாகப் பார்த்து கணபதிப்பிள்ளை, பொன்னம்பலம், சின்னையா, கனகையா, கணபதிப்பிள்ளை ஆகியோரைத் தங்களது பாதுகாப்பிற்காக அவர்களுடைய பண்ணைக்கு எனது உறவினர் ஒருவரின் உழவு இயந்திரத்தில் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டார்கள். இராணுவம் வந்ததை அறிந்து காட்டுக்குச்சென்றிருந்த நான் பின்னர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தினுள் ஓடிச்சென்று பார்த்தபோது மூன்று நான்கு பேராக நிறுத்தி வைத்து இருபத்தி ஏழு பேரையும் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்திருப்பதைக் கண்டேன். நான்பார்த்த பொழுது குற்றுயிருடன் இருந்த சிலரும் தண்ணீர் தண்ணீர் எனக் கேட்டுக் கொண்டு இறந்ததையும் கண்டேன். பின்னர் அவர்களில் கால் வேறு, தலை வேறாக இருந்தவர்களை சீராக கட்டடத்தின் இரு மருங்கும் அடுக்கி விட்டு அங்கிருந்து கால்நடையாக முல்லைத்தீவு நோக்கி ஓடினோம்.

அந்த நேரம் இராணுவக் கெடுபிடிகள், ஊரடங்கு உத்தரவுகள். அதையும் மீறி பெரிய முயற்சியெடுத்து அரசாங்க அதிபர், காவற்றுறை அதிகாரிகள், நீதியாளர்கள், உதவிஅரசாங்க அதிபர், கிராம சேவையாளர்கள் என அனைவரையும் அழைத்து வந்து நடந்த சம்பவத்தைக் காட்டினோம். இறந்தவர்களது கைகள் கட்டப்பட்ட நிலையில் அவர்களது கண்கள், காதுகள், மூளைகள் வெளியிலே வந்த கோரக்காட்சியைப் பார்த்து அவர்கள் கதிகலங்கிப் போனார்கள். பின்னர் முழுக் கிராமத்தினரும் சேர்ந்து கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு முன்பாக பெரிய மரங்கள் போட்டு அதன் மேல் அவர்களை அடுக்கித் தீ மூட்டினோம். அதன் பின்பு இறந்த உறவுகளை நினைத்து அழுது புலம்பிக்கொண்டிருக்கும் சமயம் முல்லைத்தீவிலிருந்தும் சிலோன் தியேட்டர், டொலர்பாம், கென்பாம்களிலிருந்தும் இராணுவத்தினர் ஒதியமலை நோக்கி வருவதாகக் கேள்விப்பட்டு எல்லோரும் பாதுகாப்பிற்காக நெடுங்கேணி நோக்கி வந்தோம்."

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. நாகமணி சின்னையா, 50
02. நாகரத்தினம் கேதீஸ்வரன், 23
03. நல்லையா நவரட்ணம், 17
04. கந்தையா கனகையா
05. கந்தையா பொன்னம்பலம், 48
06. கந்தையா சிவசிதம்பரம், 35
07. கிருஸ்ணபிள்ளை இராசலிங்கம், 29
08. கறுப்பையா தங்கராசா, 18, தொழிலாளி
09. கணபதிப்பிள்ளை சின்னையா. 35
10. கணபதிப்பிள்ளை சிவபாதம், 28
11. தாமோதரம்பிள்ளை கணபதிப்பிள்ளை, 51
12. தாமோதரம்பிள்ளை சதாசிவம், 46
13. தம்பிஐயா காசிப்பிள்ளை, 45
14. தம்பிஐயா வேலுப்பிள்ளை, 38
15. தம்பிஐயா சுப்பிரமணியம், 26
16. தம்பிஐயா சிவஞானம், 23
17. அழகையா ஜெககாதன், 17
18. கோவிந்தர் கணபதிப்பிள்ளை, 55
19. பொன்னம்பலம் தேவராசா, 25
20. வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை, 36
21. சுப்பையா கெங்காதரன், 26
22. சின்னையா இராசேந்திரம், 21
23. சிதம்பரப்பிள்ளை இராசையா, 27
24. சங்கரப்பிள்ளை சபாரத்தினம், 40

25. சங்கரப்பிள்ளை சண்முகசுந்தரம், 25
26. சண்முகராசா இரவிச்சந்திரன், 16
27. வீரகத்தி தில்லைநடராசா, 25

## 15. குமுழமுனை படுகொலை 02 டிசம்பர் 1984

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேசசெயலர் பிரிவில் குமுழமுனைக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பன அமைந்துள்ளன.



1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் குமுழமுனைக் கிராமம் அதிகாலையில் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்படுவதும், மக்கள் கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப்படுவதும் வழக்கமாக இருந்தது. வழமைபோல 01.10.1984 அன்று அதிகாலை சுற்றி வளைக்கப்பட்டு ஒரே குடும்பத்தை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து 29.11.1984 அன்றும் பலர் கைது செய்யப்பட்டனர். இதில் முன்பு கைதான ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் ஏனைய நான்கு சகோதரர்களும், மோகன் எனபவரும் (குமுழமுனையைச் சேர்ந்தவர்) தவிர்ந்த ஏனையோரை இராணுவத்தினர் விடுதலை செய்தனர்.


இவர்களின் மனைவியர் தமது கணவன்மாரை விடுதலை செய்யுமாறு இராணுவத்தினரைக் கேட்டபொழுதெல்லாம். அவர்களை விசாரணை செயதபின்னர் விடுதலை செய்வதாகக் கூறிய இராணுவதத்தினர் அவர்களை 02.12.1984 அன்று தாம் சுட்டுவிட்டதாக உரியவர்களின் வீடுகளுக்கு 14.02.1985 அன்றுஅறிவித்தனர்.

இச்சம்பவத்தில் குமுழமுனையைச் சேர்ந்த பொன்னம்பலம் என்பவரின் பிள்ளைகள் 6 பேர் உட்பட அதே கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் அடங்கலாக 07 பேர் உயிரிழந்தனர். அக்கிராமத்தைச் சேர்ந்த 06 குடும்பங்களில் குடும்பத் தலைவர்கள் இல்லாமல், 06 பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர். இச் சம்பவம் 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தை தொடர்ந்து முல்லைத்தீவில் நடைபெற்ற முதலாவது சம்பவம் ஆகும்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பொன்னம்பலம் நமசிவாயம், 51
02. பொன்னம்பலம் ஆனந்தன், 53
03. பொன்னம்பலம் கெங்காதரன், 45
04. பொன்னம்பலம் பொன்ராசா, 43
05. பொன்னம்பலம் சந்திரலிங்கம், 49
06. பொன்னம்பலம் விவேகானந்தம், 47
07. மோகனதாஸ், 32

## 16. செட்டிக்குளம் படுகொலை – 02 டிசம்பர் 1984



வவுனியா மாவட்டத்தின் எல்லைக் கிராமமாக வவுனியா-மன்னார் வீதியில் வவுனியா நகரிலிருந்து இருபது கி.மீ தூரத்தில் செட்டிக்குளம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் விவசாயிகள், வர்த்தகர்கள், கூலித்தொழிலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் வாழ்கின்றார்கள்.

1984.12.02 அன்று இராணுவத்தினரால் செட்டிகுளப் பகுதி எங்கும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இராணுவத்தினர் செட்டிக்குளம் கிராமத்தினை காலை 5.30 மணியளவில் சுற்றிவளைக்கத் தொடங்கினார்கள்.

கிராம மக்களில் கூடுதலானவர்கள் உறக்கத்தில் இருந்தனர். செட்டிகுள கிராமத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர் கிராம மக்களில் ஆண்களை விசாரணைக்காக அழைத்துச் சென்றார்கள். இவர்களில் ஐம்பத்திரண்டு பேரைச் செட்டிகுளச் சந்தியில் வைத்து இராணுவ வாகனங்களில் ஏற்றி மதவாச்சிக்குக் கொண்டு சென்றனர்.

இதன்பின் இவர்கள் பற்றிய எந்தத் தகவலும் இல்லை. ஆனாலும் இவர்கள் மதவாச்சியிலுள்ள ஓர் சிங்களக் கிராமத்தில் வைத்து இராணுவத்தினரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனரென்றும் குற்றுயிராக இருந்தவர்கள் மீது டோசரை ஏற்றிக் கொன்றனரென்றும் செட்டக்குள மக்கள் கூறுகின்றனர். செட்டிக்குளம் மகா வித்தியாலய ஆசிரியரான தி.யேசுதாசன் சம்பவம் பற்றிக் குறிப்பிடுகையில்,


*"ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து விட்டு வந்த இராணுவத்தினர் சுற்றிவளைத்து ஐம்பத்திரண்டு ஆண்களைக் கைதுசெய்து விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். இச்சம்பவத்தில் எனது தம்பியும் எனது அக்காவின் கணவரும்உயிரிழந்தனர். அத்துடன் எனது வீட்டில் வேலை செய்த இருவரும் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். இதன்பின்பு அவ்வூர் மக்கள் வன்னி, மடு, இந்தியா போன்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றனர்."*

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சூசைப்பிள்ளை கிறிஸ்துராசா, 32, கமம்
02. இராசையா
03. இராமசாமி பொன்னுத்துரை, 45, கமம்
04. ஊர்கனசாமி, 23, கமம்
05. கந்தையா
06. கந்தையா கெங்காரட்ணம்
07. குமார் மோகன்
08. குமார் வரதராசா, 19, வியாபாரம்
09. குருகுலசாமி, 23, கமம்
10. குலசேகரம்பிள்ளை யூஜின், 18, கமம்
11. பாண்டியன் பெரியரசு
12. பி.அருள்பிரகாசம், 30, கமம்
13. பிலிப்பையா அருள்பிரகாசம், 38, கமம்
14. பரமலிங்கம் பரமநாதன், 15
15. ஐயம்பிள்ளை பரமநாதன், 33, விவசாயம்
16. துரையப்பா நாதன், 17

17. முத்துசாமி கோணார் கோபால், 18
18. முருகேசு சங்கரப்பிள்ளை, 18, தொழிலாளி
19. அப்பாப்பிள்ளை வெற்றிவேற்பிள்ளை, 20, கமம்
20. அல்பின் றொபின்சன், 26, கமம்
21. அல்வின் அந்தோனிஸ்ரி வின்சன, 22, தச்சுத் தொழில்
22. அல்வின் அலைக்சாண்டர், 21, தச்சுத் தொழில்
23. அல்வின் அன்ரன், 24
24. பொன்னுத்துரை கிறிஸ்துராசா
25. பொன்னுத்துரை தனநாயகம்
26. டொண்பொஸ்கோ றொமன்
27. சௌந்தரராசன் புஸ்பராசன், 27, மரவேலை
28. செல்லையா யூட்
29. செல்லையா கேதீஸ்வரன், 28, கமம்
30. செல்லர் மூர்த்தி
31. செல்லர் மகேந்திரன்
32. வேதநாயகம் செபமாலை, 31, கமம்
33. வேலுப்பிள்ளை சிவபாலசிங்கம், 35, விவசாயம்
34. சந்தணப்பிள்ளை இருதையராசா, 25, கமம்
35. சின்னக்குட்டி கந்தசாமி
36. சிவகணேசன்
37. சங்கரப்பிள்ளை பாலேந்திரன், 29, கமம்
38. வடிவேல் அசோக்குமார்
39. விநாயகமூர்த்தி யோகநாதன், 24 கமம்

## 17. மணலாறு - தென்னமரவடி படுகொலை – 03 டிசம்பர் 1984



மணலாற்றிலுள்ள தென்னமரவடி கிராமததின் தலைமை அதிகாரியான (விதானையார்) எஸ்.வைரமுத்து என்பவர் 1985ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இருபத்தி நான்காம் திகதி வெளிவந்த சற்றாடே றிவ்யு ஏட்டில் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். அதில் 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மூன்றாம் திகதி ஆயுதம் தாங்கிய காடையர் கூட்டம் ஒன்று தென்னமரவடிக் கிராமத்தில் நுழைந்து பெண்கள் உட்பட பதினைந்து பேரை கொன்று அங்கிருந்த நூற்று இருபத்தி ஐந்து குடும்பங்களையும் விரட்டி அடித்து வெளியேற்றினர் என்று குறிப்பிடடிருந்தார். அதேவேளை அருகில் இருந்த அமரவயல் கிராமத்திலும் இவ்வாறு நடந்ததெனக் குறிப்பிட்டிருந்தார். இவ்விரு கிராமங்களும் திருமலை மாவட்டத்தில் வடமுனையில் இருந்தவை. ஆங்கிலேயர் 1824ஆம் ஆண்டு எடுத்த குடித்தொகையின் போது தமிழ் கிராமங்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

1984 மார்கழி இங்கிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

## 18. மன்னார் - முருங்கன் வீதி படுகொலை 04 டிசம்பர் 1984



04.12.1984 அன்று காலை பதினோராம் கட்டைப் பகுதியில் காலை 11மணியளவில் பாரிய வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. அதன் பின்னர் இராணுவத்தினர் அனைவரும் தள்ளாடி முகாமிற்கு சென்று பின் மதியம் திரும்பவும் உயிலங்குளப் பகுதிக்கு வந்தனர். அவ்வேளை வானத்தில் உலங்குவானூர்தி ஒன்றும் சுற்றிக்கொண்டிருந்தது.

அங்கு வந்து வீதியோரமாக அமர்ந்திருந்தவர்களைப் பிடித்துச் சுட்டுப் படுகொலை செய்த இராணுவத்தினர் பதினோராம் கட்டையடிப் பக்கமாகச் சென்றுகொண்டிருந்த போது வவுனியாவிலிருந்து வந்த பேருந்தை மறித்து அதிலேற முற்பட்ட வேளை சிங்கள இனத்தவரான நடத்துநர் அதனை அனுமதிக்கவில்லை. அதனால் அவரைச் சுட்டுவிட்டு, பேருந்தில் வந்த நாற்பது பேரையும் துப்பாக்கியாற் சுட்டுக் கொன்றார்கள். இதன்போது ஒரு வயோதிபர் மாத்திரம் மயக்கமுற்ற நிலையில் உயிர் தப்பினார். அதைத் தொடர்ந்து திரும்ப முருங்கன் தபாற்கந்தோர் வரை தம் கண்ணிற்பட்ட அனைவரையும் சுட்டுக்கொன்றுவிட்டு இராணுவத்தினர் சென்றனர்.

குறிப்பாக ஒரு பாரவூர்தியில் வந்த ஓட்டுநர், நடத்துநர் மற்றும் அருகிலிருந்த வீட்டில் நின்றவர்களையும் சுட்டுப் படுகொலை செய்தனர். இந்தப் படுகொலைச் செயல் அன்று மாலை வரை நடந்தேறியது. அதில் இறந்தவர்கள் பெரும்பாலும் பாதுகாப்பு தேடி ஓடிவிட்டு மீண்டும் பொருட்களை எடுப்பதற்காக திரும்ப வீடுகளுக்கு வந்தவர்களேயாவர். பின்னர் அடுத்த நாள் இராணுவத்தினர் முகாங்களுக்குச் சென்ற பின் பங்குத் தந்தையின் உதவியுடன் அனைத்துச் சடலங்களும் எடுக்கப்பட்டன. பேருந்தில் வந்தவர்கள், வயலில் வேலை செய்தவர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்களது சடலங்கள் எடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட முருங்கனிலிருந்து தள்ளாடி முகாம் வரை இருநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. 1984 ஆம் ஆண்டு மார்கழி மாதம் நான்காம் திகதி மன்னார் மாவட்டம் சிறீலங்கா இராணுவத்தின் கொலைவெறியால் சோக மயமாகியது. சம்பவம் நடந்து இரண்டாம் நாள் (06.12.1984) சிறீலங்கா இராணுவத்தின் அனுமதி பெற்று மன்னர் ஆயர், அரச அதிபர் போன்றோர் மக்களுடன் சேர்ந்து தொண்ணூறு உடல்களை (சில உடல்கள் எரிந்தவை) மன்னார் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். இந்தச் சம்பவத்தில் இறந்தவர்களின் தொகை இருநூறுக்கும் அதிகமாகும்.

வட்டலைச் பிரகாசம் தோட்டக்கண்ட்டலைச் சேர்ந்த்த ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை தெரிவித்ததாவது.

*"இதில் தப்பி வந்த கால் இயலாத ஒரு வயோதிபர் கூறும்போது : பேருந்தினை மறித்து அனைவரையும் இறக்கித் தன்னைப் போல ஒரு சிலரைத் தவிர ஏனையோரை வரிசையாக நிற்கவிட்டுத் தானியங்கித் துப்பாக்கியால் பலஇராணுவத்தினர் சேர்ந்து சுட்டதாகக் கூறினார். இச்சம்பவத்தில் எந்தவிதப் பாகுபாடுமில்லாது வயல்வேலைசெய்துகொண்டிருந்த அனைவரையும் சுட்டனர். அவர்களது சடலங்கள் அனைத்தும் ஆடைகள் இல்லாதுஅடையாளங்காணமுடியாத நிலையில் மூன்று நாட்களின் பின்னர் மன்னார் மருத்துவமனையில் போடப்பட்டிருந்தது. இச்சம்பவத்தின் போது வீதியிலிருந்த கடைகள் சில பொதுமக்களின் வீடுகள் என அனைத்தும் உடைக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் இருந்தன."*

வட்டக்கண்டல் பாலப்பெருமாள்க்கடைச் சேர்ந்த கதிரன் சௌந்த்தரராஜன் சம்பவத்தைப் பற்ற்றிக் கூறுகையில்,

*"1984ஆம் ஆண்டு பதினோராம் கட்டையில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு வந்த சிறீலங்கா இராணுவத்தினர் இருநூறிற்கும் மேற்பட்ட மக்களை வெட்டியும் வைக்கோலுக்குள் போட்டு எரித்தும்கொன்றார்கள். இச்சம்பவத்தில் எமது உறவினர்கள் நிரையப்பேர் உயிரிழந்திருக்கின்றார்கள். எனது சகோதரன் ஒருவரை இரத்தத்தைக் குடிக்குமாறு கூறி சித்திரவதை செய்தார்கள். நடராசா என்கின்ற எனது அண்ணன் ஒருவரைச் சுட்டுக் கொன்றார்கள். 1984ம் ஆண்டு மூன்றாம் பிட்டியில் வைத்து எனது மற்றையஅண்ணனான கந்தசாமி என்பவரை சித்திரவதை செய்து கொன்றார்கள்."*

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சூசை நிக்கிளாஸ், 38, தொழிலாளி
02. சூசை அந்தோனி, 52, விவசாயம்
03. சூசேப்பு இன்மனுவேல் லெம்பேட், 24 விவசாயம்
04. இராமையா கந்தசாமிச 50, தொழிலாளி
05. இராசையா இரகுநாதன், 40, .பரிசோதகர்
06. இராமலிங்கம் இலச்சுமணன், 50, தொழிலாளி
07. யக்கோவு மனுவல் (அலஸ்), 50, விவசாயம்
08. க.த.இராஜரெட்ணம், 67, வைத்தியர்
09. கந்தப்பு அப்புத்துரை, 64, விவசாயம்
10. கப்பநெயினா நஜீமுதீன், 32, தொழிலாளி
11. குப்புசாமி செல்லத்துரை, 55, கணக்குப் பரிசோதகர்
12. கபிரிகேல் ஜீவானந்தம, 40, தபால் சேவகர்
13. கறுப்பையா அச்சுதன், 34, பொறியிலாளர்
14. கறுப்பையா பெருமாள், 60, தொழிலாளி
15. பூசாரி கந்தசாமி, 46, தொழிலாளி
16. பிலேந்திரன் அல்போன்ஸ், 55, கமம்
17. பிறஞ்சிசவிரி சாரம், 54, விவசாயம்
18. பிலிப்பு பிலேந்திரன், 56, விவசாயம்
19. மயில்வாகனம் ஜெயக்குமார், 32, விவசாயம்
20. மனுவல் அலஸ், 52, விவசாயம்
21. முகமட் கனிபா சுல்த்தான், 36, .நடத்துனர்
22. முத்துச்சாமி சுப்பிரமணியம், 58, மெக்கானிக்
23. மீலாசாகிபு அப்புல்மஜீது, 43, விவசாயம்
24. மஞ்சன் சின்னப்பன், 34, தொழிலாளி
25. முருகேசு நவரெட்ணம், 54, விவசாயம்
26. முருகேசு செல்லம்மா, 60
27. அந்தேனி பிரான்சிஸ் மொறாய், 29, தபால் சேவகர்
28. அந்தோனி செபமாலை, 48, விகிதர்
29. அந்தோனி குருசுதாசன், 23, விவசாயம்
30. அந்தோனி யோகநாதன், 18, மாணவன்
31. அந்தோனி யோகநாதன் மிறால், 18, விவசாயம்
32. அக்கினிமுத்து இராமசாமி, 34, தொழிலாளி
33. அப்புத்துரை வீரசிங்கம், 40, மெக்கானிக்
34. அப்பையா செல்லையா, 57, வியாபாரம்
35. அரியபுத்திரன் திருநாவுக்கரசு, 49, வியாபாரம்

36. அலெக்ஸ்சாண்டர் மாட்டின்ராஜ்குமார், 34, மின் அத்தியட்சகர்
37. அழகன் காளிமுத்து, 65, தொழிலாளி
38. அழகையா காளிமுத்து, 31, விவசாயம்
39. அருள்மலர் ஜோன்பப்பிஸ்ட், 28, வீ-பணி
40. அருளானந்தம் துரைராஜா, 32, அரச ஊழியர்
41. அல்பிறட்போல் நோயல்இம்மானுவேல், 45, விவசாயம்
42. அல்போன்ஸ் சூசைநாதன் குரு, 34, மனேச்சர்
43. ஆண்டி ஆறுமுகம் சுந்தரராஜ், 45, விவசாயம்
44. நேசராசன், 50, கமம்
45. கென்றிமரியதாஸ் மியேஸ், 57, விவசாயம்
46. பொன்னம்பலம், 40, வியாபாரி
47. பொன்னையா அழகையா, 65, விவசாயம்
48. பேதுரு அரியரட்ணம், 42, தபால் சேவகர்
49. பெஞ்ஜமின் தவரெட்ணம், 45, சிறைச்சாலை அதிகாரி
50. செபமாலை மேரிகார்மிலாராணி, 28
51. செல்லையா சண்முகநாதன், 45, மருந்தாளர்
52. வேலு இராஜலிங்கம், 25, தொழிலாளி
53. வேலு கணேஸ், 40, தொழிலாளி
54. வேலு கணபதிப்பிள்ளை, 58, விவசாயம்
55. வேலு பன்னீர்செல்வம், 31, வியாபாரம்
56. வேலுப்பிள்ளை கணவதிப்பிள்ளை, 58, விவசாயம்
57. லோறன்ஸ்பிள்ளை பாவிலுப்பிள்ளை, 47, விவசாயம்
58. சன்னாசி ரெங்கையா, 55, தொழிலாளி
59. சந்தாம்பிள்ளை மரியாம்பிள்ளை, 30, கமம்
60. சந்தியா அல்யோன்ஸ் சூசைநாதன், 36, வியாபாரம்
61. சுந்தரம்பிள்ளை செபஸ்தியான்பிள்ளை, 45, விவசாயம்
62. சுப்பன் கிருஸ்ணபிள்ளை, 38, வர்த்தகர்
63. சுப்பையா, 75, பிச்சைக்காரர்
64. சாமிநாதன் கண்ணுசாமி, 28, காவலாளி
65. சாசீம் சமது, 36, வியாபாரம்
66. சின்னக்குட்டி கதிரவேல் ஆறுமுகம், 72
67. சின்னத்தம்பி சுப்பிரமணியம், 51, விவசாயம்
68. சீமான்பிள்ளை சந்தியாம்பிள்ளை, 58, விவசாயம்
69. சவிரியான் சந்தியோகுபறுணா, 32, விவசாயம்
70. வல்லிபுரம் தியாகராசா, 40, உதவி தபால் அதிபர்
71. நிச்சாட்குலாஸ் சேக்கிழாயார்


## 19. கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய் படுகொலை - 15 டிசம்பர் 1984

கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய் கருநாட்டுக்கேணி போன்றன தமிழ் மக்களின் பூர்வீக கிராமங்களாகும். இப்பிரதேசங்கள் மீன்பிடிக்குப் புகழ்மிக்க பிரதேசங்களில் ஒன்றாகும். இம்மக்களும் நல்ல செல்வச் செழிப்புடன் வாழ்ந்துவந்தார்கள். 1984.12.15ஆம் திகதி இராணுவச் சிப்பாய்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு, குமுழமுனை, அளம்பில் ஆகிய கிராமங்களுக்குள் நுழைந்து சொத்துக்களை நாசம் செய்ததுடன் மக்களைப் படுகொலையும் செய்தனர்.



இச்சம்பவத்தில் கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், கொக்குதொடுவாய் ஆகிய கிராமங்களை விட்டு இரண்டாயிரம் தமிழ் குடும்பங்கள் கையில் கிடைத்த பொருட்களை மட்டும் எடுத்துக்கொண்டு இடம்பெயர்ந்தனர். இச்சம்பவத்தின்போது இதில் முப்பத்தொரு பெண்கள், இருபத்தொரு குழந்தைகள் உள்ளடங்கலாக நூற்று முப்பத்தொரு பேர் உயிரிழந்தனர்.

## 20. முள்ளியவளை படுகொலை – 16 ஜனவரி 1985



முள்ளியவளைக் கிராமம் முல்லை, மருத நிலங்கள் சூழ்ந்த வளங்கொழிக்கும் பிரதேசமாகவும் பாரம்பரிய கலை, பண்பாடு என்பன சிறப்பாகவுள்ள பிரதேசமாகவும் வவுனியா – முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த் அரச படைகள் 1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதினாறாம் திகதி தைத்திருநாளின் மறுதினமான கால் நடைகளுக்கு மக்கள் நன்றி செலுத்துகின்ற (மாட்டுப் பொங்கல்) தினத்தன்று அதிகாலை 4.00 மணியளவில் முள்ளியவளைக் கிராமத்தை சுற்றிவளைத்தன.

முள்ளியவளைப் பிரதேச மக்கள் வழமைபோலவே அதிகாலைப் பொழுதில் தமது காலைக் கடன்களில் ஈடுபட்டிருந்தனர். அப்போது தான் தமது பிரதேசம் இராணுவத்தின் சுற்றிவளைப்பிற்கு உட்பட்டிருப்பதை உணர்ந்தார்கள். சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் முள்ளியவளைப் பிரதேசத்தில் ஊடுருவி அங்கிருந்து ஏழு மாதக் கர்ப்பிணிப் பெண், மூன்று பிள்ளைகளின் தாயார் ஆகிய இரண்டு பெண்கள் உட்பட பதினேழு பேரைக் கைது செய்ததுடன், இவர்களின் வாழ்விடங்கள் பலவற்றையும் தீக்கிரையாக்கிச் சென்றனர். சிறிது நேரத்தில் (அரை மணி) சரமாரியான சூட்டுச் சத்தங்கள் கேட்டதை உறவினர்கள் அவதானித்தனர். பிடித்துச் செல்லப்பட்டவர்களின் உறவினர்கள் தவிர்ந்த ஏனையோருக்குப் பதினேழு பேரும் உயிரிழந்து விட்டனர் எனும் செய்தி பரவத் தொடங்கியது.

சிறிது நேரத்தில் இராணுவ வாகனங்கள் முல்லைத்தீவை நோக்கி நகர்ந்தன. உறவினர்கள் தமது உறவுகளை ஒவ்வொரு வாகனங்களாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு வாகனத்தில் மட்டும் சைக்கிள்கள், பொருட்கள் ஏற்றப்பட்டு இராணுவத்தினர் சென்றதை கண்ட உறவினரால் அதற்குள் உயிரிழந்தவர்களின் உடல்கள் இருப்பதை அறிய முடியாமற் போனது.

அன்றைய பொழுது மறைந்து மறுநாளும் தமது உறவினர்கள் திரும்பாத நிலையில் ஊரிலிருந்த சமாதான நீதவான் திரு. தியாகராசா என்பவருடன் முல்லைத்தீவு இராணுவ முகாமிற்குச் சென்றிருந்தபோது அங்கு இறந்தவர்களின் உடல்கள் வீசப்பட்டிருந்தன. அங்கே வீசப்பட்டிருந்த உடல்கள், உடைகள் அற்றும், கைகள், கால்கள், தலைகள் என்பன துண்டிக்கப்பட்டும், உடல்களில் காயங்கள் பல ஏற்படுத்திக் கொலை செய்யப்பட்டும் இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அவற்றுள் கொலை செய்யப்பட்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணின் இரண்டு கால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் குழந்தை சுமந்த வயிற்றுப்பகுதி எரிக்கப்பட்டு சிசு பரிதாபமான முறையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்ததையும் காணமுடிந்தது.

மற்றைய பெண்ணின் உடல் சிகரட் சூட்டுக் காயங்களுடன், அடையாளம் தெரியாத வகையில் துன்புறுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்ததையும் கண்ணுற்று அனைவரும் அதிர்ச்சிக்கு உள்ளானர்கள். உறவினர்கள் அவ்வுடல்களைத் தமக்குத் தருமாறு இராணுவத்தினரிடம் கேட்டவேளை கொல்லப்பட்டவர்கள் பயங்கரவாதிகளெனக் கையொப்பமிட்டுத் தந்தால் மட்டுமே உடல்களை தருவோம் எனக்கூறி இராணுவம் மிரட்டியபோது மக்கள் அதனை ஏற்க மறுத்தனர். இதனால் இராணுவத்தினர் உடல்களை மக்களிடம் ஒப்படைக்காது தாமே அவ்வுடல்களுக்குத் தீமூட்டினர்.

இச்சம்பவத்தில் தனது கணவரை இழந்த தவரத்தினம் திலகவதி சம்பவம் பற்றி கூறியதாவது:

*"அதிகாலை 4.30 மணியளவில் வீடுகளுக்கு வந்த இராணுவத்தினர் சில பெண்களோடு எனது கணவர், மகன் உட்பட பதினேழு பேரை கைது செய்ததுடன், சிலது வீடுகளை எரித்துச் சொத்துக்களையம் சூறையாடினார்கள். பின்னர் கைது செய்தவர்களை அருகிலிருந்த காடு நோக்கிக் கொண்டு சென்றனர். பின் பல சூட்டுச் சத்தங்கள் கேட்டன. அதன் பின் இராணுவத்தினரின் வாகனங்கள் முல்லைத்தீவு நோக்கிச் சென்றன. அதில் கொல்லப்பட்டவர்களின் உடல்களையும் படுகாயமடைந்தவர்களின் உடல்களையும் அதன் மேல் சைக்கிள் மற்றும் பொருட்களையும் ஏற்றி எடுத்துச் சென்றனர். அடுத்த நாள் சமாதான நீதவானுடன் முல்லைத்தீவு சென்று பார்த்தபோது எல்லோரும் படுகொலை செய்யப்பட்டு உடலில் ஒருதுணி இல்லாத சடலங்களாகக் கிடந்தன. அவர்களது உடலை எடுத்துச் செல்லக் கேட்டபோது அவர்களை கொட்டி (புலிகள்) என்று கையெழுத்திட்டாலே கொண்டு போகமுடியும் என்றனர். அவர்கள் எல்லோரும் பொதுமக்கள். தவறாக கையெழுத்திட்டு உடல்களைப் பெற விரும்பாததால் அங்கு விட்டுவிட்டு வந்தோம்."*

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர், வயது)

1. நாகரெட்ணம் ஸ்ரீஸ்கந்தராசா, - , -
2. குமாரசாமி விஜயகுமாரி, - , வீட்டுப்பணி,
3. பிலிப்பையா அன்ரன்யோகராசா, 17, கடற்தொழில்
4. தம்பையா விவேகானந்தம், - , மாணவன்
5. மார்க்கண்டு தெட்சணாமூர்த்தி, 19, கடற்தொழில்
6. செல்லத்துரை நவரட்ணம், - , விவசாயம்
7. செல்லத்துரை குமாரசாமி, - , விவசாயம்,
8. சுப்பன் சின்னன், - , -
9. சின்னன் அன்னலட்சுமி, - , வீட்டுப்பணி

## 21. வட்டக்கண்டல் படுகொலை – 30 ஜனவரி 1985



மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்குப் பிரதேசச் செயலகர் பிரிவில் கட்டுகரைக்குளக் கரையோரமாக விவசாய நிலப்பரப்புடன் வட்டக்கண்டல் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தவர் விவசாயத்தையே பிரதானத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முப்பதாம் திகதி வட்டக்கண்டல் கிராமத்தில் வசித்து வந்த அப்பாவித் தமிழ் மக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தின் தரைப்படையும் விமானப்படையினரும் இணைந்து தாக்கினார்கள். அன்று அதிகாலை 5.00 மணியளவில்


தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இருநூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மதவாச்சி வீதி வழியாக வந்து கட்டுக்கரைக் குளக்கரை வழியாக வட்டக்கண்டல் கிராமத்தில் நிலைகொண்டனர். பின்னர் காலை 6.30 மணிக்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்த வண்ணம் வட்டக்கண்டல் கிராமத்திலுள்ள வீடுகளுக்குள் புகுந்து எதிர்ப்பட்டவர்களை எல்லாம் சுட்டும் கூரிய ஆயதங்களாலும் தாக்கினர். அவ்வேளை விமானப்படையின் உலங்குவனூர்தி மக்கள் குடியிருப்புக்களைத் தாக்கியது. பின்னர் வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்குள் பல இராணுவத்தினர் புகுந்து அங்கு கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பதினெட்டுப் பேரைச் சுட்டுக் கொன்றனர். இச்சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஏனைய இராணுவத்தினர் வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்களையும் வீதிகளில் நடமாடியவர்களையும், ஆண்கள் பெண்கள் என்ற பேதமின்றிச் சித்திரவதைக்கு உள்ளாக்கிச் சுட்டார்கள். பின்னர் வீடுகளினுள் புகுந்து தனித்திருந்த பெண்களைப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தினார்கள். இராணுவத்தினர் ஆறு மணிக்காலத்திற்கு மேலாக மக்கள் மீது நடாத்திய தாக்குதல் பி.ப 2 மணி வரை தொடர்ந்தது. பின் சடலங்களில் சிலவற்றை பொதுமக்களைக் கொண்டு பொதுமக்களின் வாகனங்களில் ஏற்றிக்கொண்டு தள்ளாடி இராணுவ முகாமிற்குச் சென்றனர். இராணுவம் கிராமத்தினை விட்டுச் சென்றதன் பின்னர் அயற்கிராமத்தவர்கள் இறந்தவர்களின் உடல்களை தேடியெடுத்து அடக்கம் செய்ததுடன், காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கும் எடுத்துச் சென்றனர். இராணுவத்தின் திட்டமிட்ட பொதுமக்கள் மீதான தாக்குதலினால் ஐம்பத்திரண்டு பொதுமக்கள் உயிரிழந்தார்கள். நாற்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர், வயது)

1. பொன்னர் பொன்னப்பன் (ராசா), 30, மீன்பிடி
2. சந்தான் தொம்மைமியேஸ், 28, விவசாயம்
3. சவிரியான் அல்போன்ஸ்பறுலா, 25, விவசாயம்
4. மடையப்பன் பாண்டியப்பன், 24, கமம்
5. முத்தண்ணதேவர் நடராசா, 39, -
6. முருகேசு தம்பிப்பிள்ளை, 55, -
7. இராசு செல்வராசா, 30, சாரதி
8. கன்னிக்கவுண்டர் சுந்தரலிங்கம், 23, கமம்
9. கறுப்பையா ஜெயரத்தினம், 25, -
10. பிறஞ்சி கைத்தான், 27, கமம்
11. பிறஞ்சி சாமிநாதன், 37, கமம்
12. திருமால் ராமச்சந்திரன், 26, -
13. மனுவல் பீற்றர் சாள்ஸ், 45, -
14. அலெக்சாண்டர் பர்ணாந்து, 72, -
15. அருணாசலம் சுந்தரமூர்த்தி, 45, -
16. செபமாலை பெனான்டோ, 21, வியாபாரம்
17. செல்லையா இராமசாமி, 35, விவசாயம்
18. வெள்ளைச்சாமி முத்துராசா, 20, விவசாயம்
19. செல்லையா இராமசாமி, 30, -
20. வெங்கடாச்சலம் தேவராஜ், 34, கமம்
21. வெள்ளைச்சாமி முத்துராசா, 35, -
22. ஞானப்பிரகாசம் செபமாலை, 22, கமம்
23. சந்தியோகு அந்தோனி, 40, கமம்
24. சுப்பன் பழனி, 42, -
25. சுப்பிரமணியம் சண்முகநாதன், 33, தொழிலாளி
26. சின்னையா சேருவராஜன், 33, தொழிலாளி
27. சிறிகோரி ரெட்ணதுரை, 32, -
28. ராமன் தங்கராசா, 56, -
29. ராமசாமி அற்புதராசா, 19, -
30. இராமன் தங்கராசா, 35, விவசாயம்
31. இராமச்சந்திரன் தெய்வேந்திரன், 18, விவசாயம்

32. இராமசாமி செல்வராசா, 27, விவசாயம்
33. முத்துச்சாமி சத்தியசீலன், 42, விவசாயம்

## 22. உடும்பன்குளம் படுகொலை - 19 பெப்பிரவரி 1986



ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் மக்கள் விவசாய நிலங்களில் அறுவடை செய்யும் காலமாகும். உடும்பன் குளத்தில் தங்களது வயல்களில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கொட்டகை அமைத்து வயல் வேலைகள் முடியுமட்டும் அங்கேயே தங்கியிருந்து தமது அறுவடையினை முடித்துககொண்டு நெல் மூட்டைகளுடனேயே திரும்புவது வழக்கமாகும். இவ்வாறே 1986ஆம் ஆண்டு மாசி மாதமும் வயல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களது பிள்ளைகளுடன் தங்கியிருந்து வயலில் அறுவடை செய்து கொண்டிருந்தார்கள். 1986.02.19 அன்று காலை 6.30 மணியளவில் கொண்டைவெட்டுவான் இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங்களில் வந்த இராணுவத்தினரால் உடும்பன்குள வயல்களில் அறுவடை செய்து கொண்டிருந்தவர்களும், அங்கு தங்கியிருந்தவர்களும் சுற்றி வளைக்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இராணுவத்தினராற் கைது செய்யப்பட்டு கைகள், கண்கள் கட்டப்பட்டாகள். இவ்வாறு கைது செய்தவர்களில் பெண்கள் இராணுவத்தினராற் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டார்கள். ஆண்களின் ஆண் உறுப்பு வயலில் நெல் வெட்டுவதற்கு பயன்படுத்தப்படும் அரிவாளினால் வெட்டப்பட்டது. இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் மிகவும் மோசமான முறையில் துன்புறுத்தப்பட்டார்கள் பலர் இராணுவத்தினரின் துன்புறுத்தலினாலேயே தமது உயிரினை இழந்தார்கள். பின்னர் எஞ்சியிருந்தவர்களைச் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்ததுடன், அவர்களின் உடலினை அறுவடை செய்யப்பட்ட நெற்சூட்டினுள் ஒன்றாகப் போட்டு எரித்தார்கள்.இவ்வாறு 1986.02.19 அன்று காலை இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வயலில் வேலை செய்துகாண்டிருந்தவர்கள், வாடியில் தங்கியிருந்தவர்கள் என நூறறு் முப்பத்துமூன்று பேரிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். இவர்களில் ஒரு சிலர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பியிருந்தார்கள். இரண்டு நாட்கள் கழித்து 21.02.1986 அன்று மட்டக்களப்பு பிரசைகள் குழு வணபிதா சந்திரா பெர்னான்டோ, நாளேட்டாளர்கள் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று அரைகுறையாக எரிந்த நிலையிலிருந்த தொண்ணூற்றெட்டுப் பேரினது உடல்களை எடுத்து அடக்கம் செய்தார்கள். உடும்பன் குளத்தில் வயல்களில் அறுவடை செய்து கொண்டிருந்தவர்கள் மீதான தாக்குதலை நடத்திய இராணுவத்தினருக்குப் பொறுப்பாக லெப்டினன்ட் சந்திரபால தலைமை தாங்கினார். இச்சம்பவத்தில் இராணுவத்தினருடன் இணைந்து முசுலிம் குழுக்களும் தாக்குதல்களை நடத்தியிருந்தார்கள்.


இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. இராசையா தவேந்திரன் 18
02. இராமசாமி கந்தையா 48
03. ந.கோபாலகிருஸ்ணன் -
04. ந.விநாயகமூர்த்தி –
05. க.பாக்கியராசா –
06. கதிரேசபிள்ளை வைரமுத்து –

07. குமரவேல் நாகராசா 27
08. கணேசமூர்த்தி பேரின்பன் 28
09. கணேசபிள்ளை மோகனராசா 22
10. கணபதி வடிவேல் 27
11. பத்மநாதன். –
12. மைலன் தியாகராசா
18 13. தர்மன்
22 14. தாசப்பு செபமாலை –
15. தாசப்பு செல்லையா –
16. துரை இராமலிங்கம் -
17. தம்பிப்பிள்ளை குமாரவேல் -
18. மயில்வாகனம் தியாகராசா. 13
19. மார்க்கண்டு ரவீந்திரன் -
20. முத்துப்போடி சுமனாவதி –
21. முத்துசாமி முத்துலிங்கம் -
22. மசன்னா ஜெயராஜ் -
23. ஆ.நல்லதம்பி –
24. ஆ.சோமசுந்தரம் -
25. பொன்னன் இராசதுரை –
26. பொன்னம்பலம் யோகராசா 18
27. சோமசுந்தரம் கருணாநிதி 21
28. வெங்கிட்டன் குழந்தை –
29. ஞானமுத்து புவனேந்திரன் -
30. சுந்தரம் சின்னவன் 20
31. சீனித்தம்பி –
32. சீனித்தம்பி தவநாகன் 30
33. சீனித்தம்பி அருள்செல்வன் 18
34. சில்வஸ்ரார் இன்னாச்சி 32
35. சுவாமி டேவிட் 29
36. வயிரமுத்து சுந்தரலிங்கம் -
37. வர்ணகுலசிங்கம் புண்ணியமூர்த்தி 21
38. விஸ்வகேது இராசா 23
39. ரங்கன் போல் -

## 23. புதுக்குடியிருப்பு ஐயன்கேவிலடி படுகொலை – 21 ஏப்பிரல் 1985

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகரிலிருந்து இருபது கி.மீ தூரத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசம் அமைந்துள்ளது. புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பல்வேறு தொழில்களைச் செய்யும் மக்கள் வாழ்கின்றனர். கூடுதலானவர்கள் விவசாயத்தையே தொழிலாக மேற்கொள்கிறார்கள்.



இக்கிராமம் அடிக்கடி இராணுவச் சுற்றிவளைப்புக்கு உட்படுவதுண்டு. 21-04-1985 அன்று இக்கிராமம் அதிகாலை சுற்றிவளைக்கப்பட்டுப் பல பொதுமக்கள் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் சிலர் அரச உத்தியோகத்தர்களென அடையாளம் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். விடுதலை செய்யப்படாத அனைவரும் அன்று மாலை மூன்று மணியளவில் புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டுசுட்டான் நோக்கி இராணுவத்தினரின் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

கைதுசெய்து கொண்டு சென்றவர்களில் இருபத்து நான்கு பேரை இராணுவம் காட்டுக்குள் வரிசையாக நிற்கவைத்துச் சுட்டது. இவர்களில் இராமநாதன், துரைரட்ணம் ஆகிய இருவரும் காயப்பட்ட நிலையிலும், செபஸ்ரியாம்பிள்ளை, நடனசபாபதி ஆகியோர் காயம் எதுவுமின்றியும் தப்பினார்கள்.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு உட்பட்டவர்கள் அனைவரையும் இராணுவ ராக் வண்டியில் ஏற்றி ஒட்டுசுட்டான் நோக்கிச் செல்லும் வழியில் காயாமோட்டை என்னும் இடத்தில் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களையும் கைது செய்துகொண்டு இடையில் இறக்கிவிட்டு சென்றனர். காயப்பட்டுக் குற்றுயிராகக் கிடந்தவர்களும் தண்ணீர் தண்ணீர் என்று கத்தியபடி பரிதாபமாக உயிரிழந்தார்கள்.

அடுத்தநாள் கற்சிலைமடுவில் வைத்து மக்களைக் கொண்டு ரயர்கள் சேகரித்து இராணுவ வாகனத்தில் ஏற்றிச்சென்று ஒட்டுசுட்டான் காவல்துறை நிலையத்தின் பின்புறத்தில் வைத்து ரயர்கள் மீது இறந்தவர்களின் உடல்களை அடுக்கித் தீமூட்டி எரித்தார்கள்.

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்க முன்னாள் தலைவர் துரைரட்ணம் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,

*"அதிகாலையில் நகரைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் பலரைக் கைது செய்தனர். அதில் அரசாங்க ஊழியர்கள் விடுவிக்கப்பட்டனர். விசாரணை முடிந்த பின்னர் எல்லோரையும் 3.00 மணியளவில் ஏற்றி ஒட்டுசுட்டான் வீதி நோக்கிச் சென்றனர். பின் காட்டுப்பகுதியில் வைத்து எல்லோரையும் இறக்கி அவ்வீதியிலிருந்த சிறு வீதியில் வைத்து வரிசையாக நிறுத்திச் சுட்டனர். இதில் நானும் நடனசபாபதியும் படுகாயத்துடன் உயிர் தப்பினோம்."*

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர், வயது)

1. கனகசுந்தரம் கருணானந்தம், 39, -
2. சீனி ஜோசப், 32, -
3. சீனி தேவதாஸ், 24, -
4. அதிரியான் அமலதாஸ், 19, -
5. அப்பையா இந்திரன், 32, -
6. றைமேந்து இருதயநாதன், 45, -
7. தாமோதரம்பிள்ளை, 20, -
8. மாணிக்கம் பௌளின்ராசா, 21, -
9. கிட்டினன், 32, -
10. சங்கரப்பிள்ளை சத்தியசீலன், 21, மாணவன்
11. சிங்கரத்தினம் இளங்கோ, 18, மாணவன்
12. அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளை, 32, விவசாயம்
13. அந்தோனிப்பிள்ளை டைட்சிங்ஸ்சி, 16, தொழிலாளி

14. அப்பையா புவனேந்திரன், 32, விவசாயம்
15. விநாயகமூர்த்தி ரகுநாதன், 28, தனியார்தொழில்
16. பெரியதம்பி பாலசுந்தரம், 30, தொழிலாளி
17. இலட்சுமணன், 30, -

## 24. திருமலை படுகொலைகள் - 1985

இம்மாதங்களில் திருமலை மாவட்டத்தில் பல படுகொலைகள் நடந்தேறின. பிரசைகள் குழுக்களின் இணைப்பு அமைப்பின் அறிக்கைகளின் படி முன்னூற்று பதினொரு தமிழர்கள் யூன் 1985இல் திருமலையில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.



1985ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நான்காம் திகதிக்கும் ஒன்பதாம் திகதிக்குமிடையில் திட்டமிடப்பட்ட முறையில் மிகப்பெரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. திருகோணமலை நகரின் வடபகுதியிலிருந்து தமிழர்களைத் துரத்தும் நடவடிக்கையாக இவ்விராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இதில் ஆகாய வழியாக உலங்குவானூர்தியும் கடலிலிருந்து எறிகணைத் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன. சென்ரல் வீதி, பிரதான வீதி, ஏகாம்பரம் வீதி, வீரநகர், திருக்கடலூர், உப்புவெளி, மூன்றாம் கட்டை, நாவலர் றோட், உப்புவெளிச் சந்தி ஆகிய இடங்களில் கனரக ஆயுதங்கள் தரித்த இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் ஊர்காவற் படையினரும் இங்கு குவிக்கப்பட்டிருந்தனர். இவ்விரு குழுக்களும் சேர்ந்து தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது தமிழர்களுக்குச் சொந்தமான ஆயிரத்து ஐநூறு வீடுகளும் கடைகளும் கட்டடங்களும் அழிக்கப்பட்டதுடன் தமிழர்களுக்குச் சொந்தமான வள்ளங்களும் சொத்துக்களும் சூறையாடப்பட்டன. இந்த நடவடிக்கையின் போது இருநூறு சிறுவர்கள் தங்கியிருந்த சிவானந்த தபோவனத்தின் கட்டடமும் தகர்த்து அழிக்கப்பட்டது. இந்துக் கோயில்கள் முற்றாக அழிக்கப்பட்டன.

இருபத்தைந்து பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் அழிப்பதற்கு தமிழர்களுக்கு எந்தச் சொத்தும் இல்லை என்றவுடன், இத்தாக்குதல் நிறுத்தப்பட்டது. இத்தாக்குதல் நடவடிக்கை வெளியிற் தெரியாமல் இருக்க நாளேட்டு நிருபர்களோ, வெளிநாட்டு நிருபர்களோ இப்பகுதிக்குச் செல்லத் தடைவிதிக்கப்பட்டனர்.

## 25. வல்வை-85 படுகொலை 10 மே 1985

யாழ்மாவட்டத்தில் பருத்தித்துறைப் பகுதியில் வல்வைக்கிராமம் உள்ளது. 10.05.1985அன்று சிறீலங்கா இராணுவம் வல்வைக் கிராமத்தைச் சுற்றி வளைத்தது 24 இளம் ஆண்களை கைது செய்தது. அங்குள்ள ஒரு பொதுமண்டபத்தில் இவர்கள் அனைவரும் அடைக்கப்பட்டனர். பின்னர் இம்மண்டபத்தின் மேல் குண்டு வீசப்பட்டு அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த 24 ஆண்களும் கொல்லப்பட்டனர். அதே சமயத்தில் அவ்வூர் கோவில்



கேணியருகே மேலும் 12 பொதுமக்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதைவிட மேலும் 34 பொதுமக்கள் அன்று கொல்லப்பட்டனர். அவ்வூரில் அன்றைய தினம் 70 பொதுமக்கள் சிறீலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

## 26. குமுதினிப்படகு படுகொலை – 15 மே 1985

யாழ் தீபகற்பத்தின் தனித்துவமானதும், நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டதுமாக, 47.4 சதுர கி.மீ நிலப்பரப்பில் நெடுந்தீவுப் பிரதேசம் அமைந்துள்ளது. தீவுகளில் பெரும் விசாலமான நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேசத்தில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வந்தார்கள். நெடுந்தீவில் வாழும் மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கடல் கடந்து படகுகளில் பிரயாணம் செய்வது தவிர்க்க முடியாததாக இருந்தது. நெடுந்தீவு மக்களின் கடல் போக்குவரத்திற்கு குமுதினிப் படகுச் சேவையே பெரிதும் உதவியது. இப்படகுச் சேவை நாளாந்தம் காலை 7.00 மணிக்கு நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து குறிகட்டுவானுக்கும் பின்னர் மாலை 5.00 மணிக்கு குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவுத் துறைமுகத்துக்கும் பயணிக்கும்.

1985ஆம் ஆண்டு மே மாதம் பதினைந்தாம் திகதி குமுதினிப் படகு வழமை போல தனது சேவையை ஆரம்பித்தது. அன்று ஏறக்குறைய இப்படகில் அறுபதிற்கும் மேற்பட்ட பயணிகள் பிரயாணம் செய்தார்கள். நெடுந்தீவுத் துறைமுகத்திலிருந்து குறிகட்டுவான் நோக்கி வந்து கொண்டிருந்த சமயம், நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் அமைந்துள்ள நயினாதீவில் முகாமிட்டிருந்த கடற்படையினரின் பீரங்கிகள் பொருத்தப்பட்ட இரண்டு விசைப்படகுகள் குமுதினிப் படகினை அண்மித்த போது அதில் பயணித்த மக்கள் அச்சம் கொள்ளத் தொடங்கினர். அவ்விரண்டு விசைப்படகுகளில் கடற்படையினர் தங்களுடன் கோடரி, கத்தி, அரிவாள் போன்ற கூரிய ஆயுதங்களையும் எடுத்து வந்திருந்தனர். இதைப் பார்த்த மக்கள செய்வதறியாது கதறி அழுதார்கள். வந்த கடற்படையினர் குமுதினிப் படகினுள் இருந்த மூன்று மாதக் குழந்தை உட்பட அனைத்துப் பயணிகளையும் ஒவ்வொருவராகக் கீழ்தளத்திற்கு அழைத்து மற்றவர்கள் அறியாமல் தாங்கள் எடுத்து வந்த கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொன்றனர். இத்தாக்குதலில் நாற்பத்திரண்டிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தமது அங்கங்களை இழந்தார்கள். அவர்கள் அனைவரும் மாலை கரையொதுங்கிய குமுதினிப் படகிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள்.



சம்பவம் தொடர்பாக நெடுந்தீவைச் சேர்ந்த எஸ். புஸ்பராணி தெரிவிக்கையில்,

*"அனுராதபுரத்தில் நடைபெற்ற கொடூரச் சம்பவத்திற்குப் பதிலடியாகவே இக் குமுதினிப் படுகொலை நடைபெற்றது. இதில் பலர் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். இதில் எனது உறவினர் பலர் இறந்துள்ளனர். இச் சம்பவத்தில் நான் வெட்டிக் காயப்படுத்தப்பட்டேன். கர்பிணித் தாய்மாரைத் தாக்கும் போது வயிற்றிலுள்ள குழந்தை "கொட்டியா" என்ற கூறித் தாக்கினார்கள். பெண்கள், குழந்தைகள் என்ற பாகுபாடின்றி பலர் தாக்கப்பட்டனர்".*

1. பசுபதி நிர்மலாதேவி, 20, -
2. கந்தையா சதாசிவம்ச 26, ஆசிரியர்
3. ஜேசுதாசன், 46, கடற்றொழில்
4. மாரியம்மா, - , -
5. ஆ.கனகலிங்கம், 34, கடற்றொழில்
6. தில்லைநாதன், 32, கடற்றொழில்
7. ஞானப்பிரகாசம் மரியமாணிக்கம், 45, கடற்றொழில்
8. சடையர் கோவிந்தன், 46, கடற்றொழில்
9. செபமாலை அந்தோனிப்பிள்ளை, 45, கடற்றொழில்
10. செபமாலை கிருஷ்டி, 24, -
11. நிமிலி, 18, -
12. அனுஷியா, 23, -
13. பேர்னாட் கிறார் பூரணம் , -
14. வெ.கந்தையா, 44, கடற்றொழில்
15. செ.சந்திரகுமார், 30, கடற்றொழில்
16. தருமலிங்கம் பாபு, 13, -
17. குமாரசாமி விநாயகம், 38, கடற்றொழில்
18. சபாபதி தெய்வானை, 68, கடற்றொழில்
19. ஞானப்பிரகாசம் தேவசகாயம், 42, கடற்றொழில்
20. வைத்திலிங்கம் சதாசிவம், 45, கடற்றொழில்
21. இராமன் முருகன், 52, கடற்றொழில்
22. கரையூர் சின்னையா, 35, அரச ஊழியர்
23. முத்தன் மணிவண்ணன், 13, -
24. றொகேசியன் சந்திரகுமார், 18, மாணவன்
25. தொப்பை நாகேந்திரம், 23, -
26. சின்னவன் அந்தோனி, 65, -
27. இராமநாதன், 16, -
28. வேலுப்பிள்ளை புஸ்பராசா, 22, -
29. ஞானசேகரம், 28, தபால்அதிபர்
30. விசுவலிங்கம் சுபாஜினி, 07 மாதம், -
31. கனகம்மா, 55, கடற்றொழில்
32. பழனி மோகநாதன், 27, கடற்றொழில்
33. தர்மலிங்கம் அமிர்தலிங்கம், 18, -
34. பசுபதி நிர்மலாதேவி, 19, மாணவி
35. நவசிவாயம் கந்தையா, 45, இ.போ.சஓட்டுநர்
36. இராமலிங்கம் பரலோகநாதன், 35, கமம்
37. கார்த்திகேசு, 45, -
38. க.பார்வதிப்பிள்ளை, 40, -
39. சி.நாகேந்திரன், 32, கடற்றொழில்
40. குசலகுமாரி, 28, -
41. சாந்தலிங்கம், - , -
42. ஞா.சரோஜாதேவி, 24, ஆசிரியர்


## 27. கிளிவெட்டி படுகொலை - 1985

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ளது கிளிவெட்டி என்னும் தமிழ்க் கிராமம். தமிழர் தாயகத்தில் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில்

தொடர்ந்து நடந்தேறிவந்துள்ள சிங்களக் குடியேற்றத் திட்டங்களின் ஒரு செயற்பாடாக 1977இல் கிளிவெட்டி கிராமம் சேருவல தேர்தல் தொகுதியோடு இணைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இக்கிராம மக்களை அங்கிருந்து விரட்டும் நோக்கத்துடன் சிறீலங்கா இராணுவமும் சிங்கள் தலைவர்களும் இம்மக்களை தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு உள்ளாக்கினர். இதன் விளைவாக மக்களும் இக்கிராமத்தை விட்டு வெளியேறினர்.

01.01.1985அன்று பி.ப 2.00மணியளவில் சிறீலங்கா இராணுவமும், அதனோடு இயங்கும் ஊர்காவற் படையினரும், சிங்களக் காடையர்களும் கிளிவெட்டிக் கிராமத்தினுள் இறங்கினர். அக்காலத்தில் கனகசபை என்பவர் அப்பிரதேசத்தில் மரண விசாரணை அதிகாரியாகக் கடமையாற்றினார். கடமையின் பொருட்டு அவர் அப்பிரதேசத்தில் பல இடங்களுக்கும் சென்று வருவார். அன்றைய தினம் இக்கூட்டம் கிராமத்தினுள் நுழைந்தபோது அவர் ஒரு வைக்கோல் பட்டடையினுள் ஓடி ஒழித்திருந்தார். அக்கூட்டத்தில் அயல் சிங்களக் கிராமமான தெகிவத்தவில் வாழும் பலரை அவரால் அடையாளம் காணமுடிந்தது.

அன்று அக்கொலைகாரக் கூட்டத்தால் 4 பெண்கள் உட்பட 10 பொதுமக்கள் கொல்லப்பட்டனர், 125 வீடுகள் அழிக்கப்பட்டன. கிராமத்திலிருந்து போகும்போது அக்கூட்டம் மேலும் 8 ஆண்களையும் 5 பெண்களையும் தெகிவத்தைக் கிராமத்துக்கு கூட்டிச் சென்றது. அங்கு எட்டு ஆண்களும் கொல்லப்பட்டனர். பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டனர்.



அப்பிரதேச பாராளமன்ற உறுப்பினர் தங்கதுரை இச்சம்பவத்தைபற்றி டெய்லிமிறர் பத்திரிகைக்கு பேட்டி அளித்திருந்தார். இது பின்னர் சர்வதேச ஊடகங்களிலும் பரவலாக பிரசுரிக்கப்பட்டது. அன்றைய சிறீலங்கா அரசு தங்கதுரை பொய்ப்பிரசாரம் செய்வதாக குற்றம் சாட்டியது மட்டுமின்றி, அவரை கைது செய்யும்படி பாதுகாப்பு அமைச்சர் உத்தரவு கொடுத்தார். இதனை கேள்விப்பட்ட தங்கதுரை இந்தியாவில் தஞ்சமடைந்தார்.

மேற்குறிப்பிட்ட சம்பவத்துக்கு அடுத்தநாள், 02.06.1985, திருகோணமலையிலிருந்து யாழ்பாணம் நோக்கி சென்ற பேருந்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியது. அதில் 13 பொதுமக்கள் உயிரிழந்தனர். 9 பொதுமக்கள் காயமுற்றனர்.

03.06.1985அன்று சிறீலங்கா இராணுவத்தின் துணையுடன் பல ஊர்காவற்படையினர் மூதூருக்கும் கிளிவெட்டிக்கும் இடையே உள்ள பல கிராமங்களை தாக்கினர். இதில் 35 பொதுமக்கள் உயிரிழந்தனர். 200 பேர்வரையில் கடத்தப்பட்டனர். மேன்காமம், கங்குவெளி, பட்டித்திடல், பாலத்தடிச்சேனை, அரிப்பு, பூநகர், பெருவெளி, பாரதிபுரம், லிங்கபுரம், ஈச்சிலம்பற்று, கருங்கல்முனை, மாவடிச்சேனை, முத்துச்சேனை, வாளைத்தோட்டம் ஆகிய கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

14.06.1985இல் முடிவுறும் 14 நாட்களில் 150 பொதுமக்கள்வரை கொல்லப்பட்டனர். ஆயிரம் வீடுகள் வரை எரிக்கப்பட்டன. மூவாயிரம் பொதுமக்கள் தம் கிராமங்களைவிட்டு வெளியேறினர்.

## 28. திரியாய் தாக்குதல்கள் - 1985




திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திரியாய் ஒரு பூர்வீக தமிழ்க் கிராமமாகும். இங்கு 1985.06.08ஆம் திகதி அதிகாலை 5.30 மணியளவில் தாழப்பறந்து கொண்டிருந்த உலங்குவானூர்தி, திரியாய் கிராமத்திற்குப் பரவலாக, தொடர்ச்சியான துப்பாக்கிச் சூட்டை நடாத்தியது. இதனால் மக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினர். பின் சிறிது நேரத்தில் வந்த சிறீலங்கா இராணுத்தினர் தாம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதற்கு முன் மக்களைத் தப்பியோடுமாறு பணித்தனர். மக்கள் உயிருக்குப் பயந்து ஓடித்தப்பிய பின்னர் மொத்தமாக எழுநூறு வீடுகள் எரியூட்டப்பட்டன. இதில்எதிரியாயில் நாநூறு வீடுகளும் கள்ளம்பற்றைப் பகுதியில் முன்நூறு வீடுகளும் கொளுத்தப்பட்டன. இதில் விவசாய உபகரணம், நெல் மூடைகள் மற்றும் இதரப் பொருட்கள் என்பனவும் தீயிடப்பட்டன.

இந் நடவடிக்கையின் பின்னர் பலர் இடம்பெயர்ந்து திருமலை நகாப் குதியில் தஞ்சமடைந்ததுடன், சிலர் திரியாய் பாடசாலைக் கட்டடத்தில் தங்கியிருந்தனர். 1985.08.08ஆம் திகதி பாடசாலைக்கு வந்த இராணுவத்தினர் அங்கு தங்கியிருந்த பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்தியதில் பத்துப் பேர்சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதில் இளைப்பாறிய திரியாய் கிராம அலுவலர் க.நாராயணபிள்ளை, திரியாய் ப.நோ.கூ.ச தலைவர் கே.துரைநாயகம், திரியாய் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் செயலாளர் கே.ஏகாம்பரம், திரியாய ் உயர்தர பாடசாலை அதிபரான பி.மகாதேவா ஆகியோா ் உயிரிழநத் னர். ஆத்துடன் 1985 ஆகஸ்ட் மாதம் பதின்நான்காம் திகதி பயணிகள் பேருநத்தில் பயணம் செய்த ஆறு தமிழ் பயணிகள் பேருந்தில் இருந்து இறங்கி இவ்விடத்தில் வெட்டிக்கொலை செய்யப்பட்டனர்.

## 29. சாம்பல்தீவு படுகொலை – 4 – 9 ஆகஸ்ட் 1985

திருகோணமலையிலிருந்து தமிழ்மக்களை விரட்டும் நோக்கத்துடன் 04.09.1985க்கும் 09.09.1985க்கும் இடைப்பட்ட காலத்தில் பெரிய எடுப்பில் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சிறீலங்கா அரசின் முப்படைகளும் பொதுமக்கள் மீதான இந்நடவடிக்கையில் ஈடுபட்டன.



ஊர்காவற்படையும், சிறீலங்கா இராணுவத்தினரும் கனஆயுதங்களுடன் மத்திய வீதி, ஏகாம்பரம் வீதி, வீரநகர், திருக்கடலூர், உப்புவெளி, 3ம் கட்டை, நாவலர் வீதி ஆகிய இடங்களில் இறங்கித் தமிழரை தாக்கத் தொடங்கினர். 1500 வரையான வீடுகளும், சிவானந்தம் தபோவனம் எனப்படும் 200 சிறுவர்களை பராமரித்து வந்த சிறுவர் இல்லமும், பல கடைகளும் அழிக்கப்பட்டன. தமிழ் மீனவர்களுடைய மீன்பிடி உபகரணங்கள் சூறையாடப்பட்டது. 25க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

ஊடகவியலாளர்கள் எவரும் இவ்விடங்களுக்குச் செல்ல அநுமதிக்கப்படவில்லை.

அப்போது பிரஜைகள் குழுத் தலைவராக இருந்த பாடசாலை அதிபர் ஒருவர் எழுதிய அறிக்கையின்படி யூன் 1985இல் மட்டும் 311 பொதுமக்கள் திருகோணமலையில் கொல்லப்பட்டுள்ளனர். செப்டம்பர் மாதத்தில் 383 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இவ்வறிக்கைபற்றி யாழ்பாணத்திலிருந்து அக்காலத்தில் வெளிவந்து கொண்டிருந்த 21.12.1985 சற்றடே ரிவ்யூ பத்திரிகையில் செய்தி வெளியாகி இருந்தது.

## 30. வயலூர் படுகொலை – 24 ஆகஸ்ட் 1985

1972ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவிற் பிரதேச செயலா் பிரிவில் காணி இல்லாதிருந்த ஏழை மக்களுக்கு வயலூர்ப் பிரதேசத்தில் காணியினை வழங்கி அம்மக்களைக் குடியேற்றியதன் மூலம் இக்கிராமம் உருவாகியது. வயலூர்க் கிராமத்தில் வாழ்ந்தவர்கள் விவசாயத்தையே தமது பிரதான தொழிலாக மேற்கொண்டார்கள். இக்கிராமம் எத்தகைய அபிவிருத்திகளும் இன்றி வறிய மக்கள் வாழும் பிரதேசமாகும்.



1985.08.24 ஆம் திகதி அதிகாலையில் வயலூர்க் கிராமத்தினைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் வீடுகளில் இருந்த பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆண்களைக் கைதுசெய்து தங்களுடன் அழைத்துச் சென்றார்கள். தமது கணவன்மாரை இராணுவத்தினர் கைதுசெய்து கொண்டு செல்ல அவர்களின் பின்னால் மனைவிமாரும் பிள்ளைகளும் சென்றார்கள். குமரன்குளம் நோக்கி காட்டுப் பாதையூடாக கைதுசெய்து கொண்டு செல்லப்பட்ட ஆண்களின் பின்னால் சென்ற பெண்களை சிறிது தூரம் சென்றதும் திரும்பிப் போகுமாறு இராணுவத்தினர் பயமுறுத்தியதுடன், ஆண்கள் தங்களுக்கு பாதை காட்டிவிட்டுத் திரும்பி வருவார்கள் எனவும் கூறினார்கள்.

ஐம்பது பேர் வரையான ஆண்கள் இராணுவத்தினராற் குமரன்குளம் நோக்கி அழைத்து செல்லப்பட்டார்கள். இவர்களில் ஒரு சிலரே தப்பி மீண்டும் வயலூர்க் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்டவர்கள் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்ட உடல்கள் குமரன்குளம் பகுதி முழுவதும் காணப்பட்டன. காயத்துடன் தப்பிய இருவரில் ஒருவருக்கு வாயினுள் துப்பாக்கியை வைத்துச் சுட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து வயலூர்க் கிராமத்து மக்கள் உடுத்த உடுப்புடன் இடம் பெயர்ந்து வேறு ஊர்களுக்குச் செல்ல வயலூர்க் கிராமம் மக்களற்ற சூனியப் பிரதேசமாக மாறியது.

## 31. நிலாவெளி படுகொலை – 16 செப்ரெம்பர் 1985

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளிப் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட நிலாவெளிப் பிரதேசமானது, திருகோணமலை நகரிலிருந்து பத்து கி.மீ தூரத்திலுள்ளது. 1983 ஆம் ஆண்டு



இனக்கொலையைத் தொடர்ந்து 1985 ஆம் ஆண்டு நிலாவெளி அகதி முகாம் மக்களால் நிறைந்து காணப்பட்டது. 16.09.1985 அன்று நிலாவெளியில் நிலைகொண்டிருந்த இராணுவமும ஊர்காவற்படையினரும் சேர்ந்து அகதிமுகாமைச் சுற்றிவளைத்தனர். அங்கிருந்த முப்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கைதுசெய்து, அவ்விடத்திலேயே நிறுத்தி வைத்துச் சுட்டதில் அனைவருமே உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. முருகேசு தங்கராசா விவசாயம் 46
02. கச்சுமுகைதீன் முகம்மதுகாலித் வியாபாரம் 33
03. வேலு சிவசுந்தரம் வியாபாரம் 24
04. வேலு சிதம்பரநாதன் வியாபாரம் 25
05. செல்லத்தம்பி நிர்மலானந்தன் வியாபாரம் 26
06. சோசுந்தரலிங்கம் அருட்குமரன் வியாபாரம் 20
07. அந்தோனிப்பிள்ளை கபிரியேல் - -
08. இராஜேந்திரன் வியாபாரம் 29
09. செய்யதுபுகாரி அப்துரசாக் வியாபாரம் 32
10. கந்தையா கந்தசாமி சாரதி 28
11. கணபதிப்பிள்ளை சௌந்தரராஜன் சாரதி 28
12. செல்லத்தம்பி ரட்ணராஜா மெக்கானிக் 41
13. நேசதுரை ரெறன்ஸ் மெக்கானிக் 19
14. கதிர்காமத்தம்பி கனகசபை தொழிலாளி 39
15. முகமட் காசிம் முகமட்ராசிக் தொழிலாளி 31
16. தாமோதரம்பிள்ளை நேமிநாதன் மாணவன் 19
17. வல்லிபுரம் தருமலிங்கம் மாணவன் 18
18. தர்மதாஸ் உதயநேசன் கடற்றொழில் 19
19. சுப்பிரமணியம் காளிராஜா கடற்றொழில் 20
20. செல்வவினாயகம் ஜெயகோபன் கடற்றொழில் 26
21. இராசையா துரைநாயகம் கமம் 36
22. தாமோதரம்பிள்ளை சண்முகதாசன் கமம் 24
23. மாமாங்கம் ரஞ்சநேசன் கமம் 21
24. அபுசாலிபு அப்துல்நாயீர் கமம் 28
25. சித்திரவேல் மாரிமுத்து காவலாளி 53
26. சிங்கராயர் கிலீற்றஸ் பிரேமதாஸ் ஊழியர் 20
27. சிவபாலன் கெங்காதரன் இலிகிதர் 34
28. பொன்னுத்துரை பார்த்தீபன் தொழிலாளி 27
29. யோகராசா தொழிலாளி 23
30. இரத்தினசாமி பார்வதி வீட்டுப்பணி30

## 32. பிரமந்தனாறு படுகொலை – 02 அக்டோபர் 1985

02.10.1985 அன்று அதிகாலைவேளை பொழுது புலர்ந்தும் புலராத நிலமை. அதிகாலை வானில் ஓர் உலங்கு வானூர்தி முதலில் சுற்றி வட்டமிட்டு சுட்டுக்கொண்டே இருந்தது. அதனைத் தொடர்ந்து மூன்று குண்டுவீச்சு விமானங்கள் வானில் வட்டமிட்டுக்கொண்டிருந்தன.

அவை குண்டுகளை வீசவில்லை. இவை மூன்றும் இத்தாலியத் தயாரிப்பான சிறியரக சியாமா செட்டி விமானங்களாகும்.இந்த வேளையிற் பிரமந்தனாற்றுக் கிராமத்தின் தெற்கு எல்லை ஓரமாகவுள்ள

காட்டுப்பகுதிக்குள் இராணுவஅணிகள் உலங்குவானூர்தி மூலமாகத் தரையிறக்கப்பட்டன. தரையிறக்கப்பட்ட படைகள் படிப்படியாக முன்னேறி கிராமத்தினைச் சுற்றிவளைத்துக் கொண்டன. வீட்டுக்கு வெளியே வந்து என்ன நடைபெறுகின்றது எனப்பார்த்துக்கொண்டு நின்ற பொதுமக்களுக்கு அந்த ஊரைச் சேர்ந்த மயிலர் கந்தசாமி என்பவர் ஒழுங்கைகளுக்கூடாக காட்டுக்குள்ளால் ஆமி வருகிறான் என்று சத்தம் போட்டுச் சொல்லிக்கொண்டே ஓடிவந்தார். அவர் கூறுவதைக்கேட்டு அக்கிராம மக்கள் விழிப்படைந்தார்கள். அந்தச் சம்பவத்தினை நேரில் பார்த்த திருமதி உமாமகேஸ்வரன் கமலாம்பிகை (வயது 45) அன்றையதினம் நடந்த அனர்த்தம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்,



*''காட்டுக்குள்ளால ஆமி நடந்து வருகிறான் என்று மயிலர் கந்தசாமி சொல்லக் கேட்டவுடனேயே நான் எனது ஆறு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு காட்டுக்குள் ஓடிவிட்டேன். எனது கடைசிக் குழந்தை தீபன் அப்போது ஆறுமாதக் குழந்தை. அன்றைய தினம் நாள் முழுவதும் எனது பிள்ளைகள் பசியோடும் பட்டினியோடும்தான் இருந்தார்கள். எந்த உணவும் கிடைக்கவில்லை. முழுநாளும் பட்டினிதான். தாகம் எடுத்தபோது குளம் குட்டைகளில் தங்கி நின்ற தண்ணீரைத்தான் எடுத்துக் குடித்தோம். மேற்படிதினத்தன்று இக்கிராமத்திலிருந்த சிவபாதம் என்பவருடைய கடை கொள்ளையடிக்கப்பட்டது. அந்தக்கடையிலிருந்த நகை, பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மேற்குறித்த சிவபாதத்தின் கடையைக் கொள்ளையடிதத் சிறிலங்கா இராணுவத்தினர் அவரை புலியெனச்சாயம் பூசிக்கைது செய்து விசாரணைக்குக் கொண்டு போனார்கள். போகும் போது ஓலை வீடுகளுக்குத் தீவைத்துவிட்டுச்சென்றார்கள். பல வீடுகள், பொதுமக்களுடைய உடைமைகள், பாடசாலைப் பிள்ளைகளின் பாடப்புத்தகங்கள் தீ மூட்டி எரிக்கப்பட்டன.*

*அன்றையதினம் ஐந்து உலங்குவானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட சிங்களச்சிப்பாய்கள் செய்த அடாவடித்தனங்களால் இக்கிராமத்தினைச் சேர்ந்த பலர் புகலிடம் ஏதுமற்ற ஏதிலிகளாக்கப்பட்டனர். இப்படுகொலை பற்றிய மேலும் சில விபரங்க்கள் மேற்படி இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலையின் போது பதின்நான்கு அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பலர் சுட்டும் வெட்டியும் படுகாயப்படுத்தப்பட்டார்கள். பல அப்பாவிப் பொதுமக்கள் ஏறக்குறைய இருபத்திரண்டிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கிட்டிணர் சிவபாதசுந்தரம் என்பவரினது கடையில் நீண்ட நைலோன் கயிற்றால் கைகள் பின்பக்கமாகப் பிணைத்துக் கட்டப்பட்ட நிலையில் படுகொலை செய்வதற்கு ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். இவர்களை நைலோன் கயிற்றினால் கட்டிவைத்த சிங்களப் படைகள் போதையேறிய நிலையில் காணப்பட்டார்கள். இவர்களைப் பின்னர் வந்து கவனித்துக்கொள்வதாகக் கூறிவிட்டு மனிதவேட்டைக்குச் சென்று விட்டார்கள். நல்லவேளையாக ஒரு சிறுவன் கத்தியைக் கொண்டுபோய் அவர்களது கைகள் கட்டப்பட்டிருந்த நைலோன் கயிற்றை வெட்டிவிட்டுச் சென்றமையால் அவர்கள் யாவரும் காப்பாற்றப்பட்டார்கள்.''*

மேற்படி 02.10.1985 அன்று இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தின் போது தனது உடன்பிறந்த சகோதரனான வாரித்தம்பி பாக்கியநாதன் என்பவரைப் பேரினவாதக் கொடுமைகளுக்குப்

பறிகொடுத்த அவரது சகோதரியான திருமதி துரைராசா சாரதாதேவி (வயது 45) என்பவர் இப்படுகொலைப் பற்றிப் பின்வருமாறு விபரிக்கின்றார்,

"சம்பவதினம் காலை வேளை தரையிறக்கப்பட்ட சிறீலங்காப் படையினர் எனது வீட்டைச் சுற்றிவளைத்தார்கள். எனது கணவர் அப்போது அங்கே இருக்கவில்லை. எனது தம்பியார் தான் அங்கே இருந்தார். அவருக்கு அப்போது இருபத்தொரு வயதுதான் இருக்கும். எமது வீட்டைச் சுற்றிவளைத்த சிங்கள இராணுவத்தினர் முதலில் எங்கள் எல்லோரையும் முட்டுக்காலில் நிற்கும்படி பணித்தார்கள். அவ்வாறே நாங்கள் நின்றோம். எங்கள் வீட்டுக்குள் தாங்கள் தேடுதல் மேற்கொள்ளப்போகின்றோம் என்றார்கள். அவ்வாறு சொல்லியவாறே எங்கள் வீட்டுக்குள் அடாவடித்தனமாக நுழைந்தார்கள். எனது தம்பியின் இரு கைகளையும் பின்னால் பிணைத்துக் கட்டினார்கள். வீட்டுக்குள் வந்தவர்களிற் சிலர் நன்றாகத் தமிழிற் கதைத்தார்கள். இவர்களுள் ஒரு வெள்ளைத் தோலுடைய நன்கு உயரமான தோற்றமுடைய ஒருவரும் காணப்பட்டார். அவர் ஒன்றுமே பேசவில்லை. எல்லாவற்றையும் கூர்மையாக அவதானித்தபடி இருந்தார். அன்றையதினம் அவரை வேறு பல தமிழ் மக்களும் கண்டிருக்கிறார்கள் .அவரைப் பொதுமக்கள் "மொசாட்" என்று அழைத்தார்கள். மொசாட் என்றால் என்னவென்று எனக்கு முதலில் விளங்கவில்லை. பின்னர்தான் மொசாட் என்பவர்கள் வெளிநாட்டு வெள்ளைக்காரர்கள் என்று தெரிந்துகொண்டேன்.

மேலும் சிறீலங்கா இராணுவத்தினர் எனது தம்பியிடம் துவக்கைக் கொடுத்துப் படமெடுத்தார்கள். வேறு சில சிறீலங்கா இராணுவத்தினர் உலங்குவானூர்திக்கு முன்னால் எனது தம்பியை நிறுத்தி வீடியோப் படம் எடுத்தார்கள். எனது தம்பிக்குக் காலால் உதைத்தார்கள், அடித்தார்கள். எனது தம்பிக்கு அடிக்கவேண்டாம் என்று நான் கதறி அழுதேன். அவரை எல்.ரி.ரி.இ என்று சொல்லி அடித்தார்கள். நான் இல்லை அவருக்கும் இயக்கத்துக்கும் எந்தத்தொடர்பும் இல்லை என்று சொல்லி அழுதேன். அவர்கள் என்னிடம் எனது தம்பியை எல்.ரி.ரி.இ என்று சொன்னால்விட்டு விடுவதாகச் சொன்னார்கள். நான் அவர்களிடம் இல்லாத ஒன்றைச் சொல்லமாட்டேன் என்றேன். அவர்கள் எனது தம்பியை உதைத்துக் கொண்டும், அடித்த படியும் கூட்டிக்கொண்டு போனார்கள். நான் பின்னால் அழுதுகொண்டுபோனேன். சிறீலங்காப் படையினர் என்னை வழிமறித்து அடித்து உதைத்துத் தள்ளி விழுத்திவிட்டார்ககள். என்னால் தொடர்ந்து செல்ல முடியவில்லை.

இந்தவேளை எனது கணவர் எனது வீட்டில் இருக்கவில்லை. அவர் புளியம்பொக்கணைக்குச் சென்றுவிட்டார். சிங்கள இராணுவத்தினர் எனது வீட்டைத் தீமூட்டி எரித்தார்கள் .இவற்றைக் கேள்விப்பட்ட கணவர் ஊருக்கு வந்தார். அக்கால கட்டத்தில் முல்லைத்தீவு நகரில் முகாமமைத்திருந்த சிங்கள இராணுவச் சிப்பாய்கள் தான் எங்கள் வீட்டைக் கொளுத்தினார்கள் என்பதைக் கேள்விப்பட்டதோடு, எனது தம்பியையும் அவர்கள் இழுத்துச் சென்றமையால் அங்கு போய் எனது தம்பியைப் பற்றி விசாரித்தேன். அதற்குஅவர்கள் தாம் எங்களுடைய ஊருக்கு வரவில்லை என்றும் இதுபற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்றும் மறுத்துவிட்டார்கள். இதன் பின்னர் நான் சிறீலங்காச் சிப்பாய்கள் எனது தம்பியைக் கொன்றிருப்பார்கள் என்று எண்ணிக்காட்டுப் பக்கங்களில் அவரைத் தேடினேன். இச்சம்பவம் இடம்பெற்று ஆறாம் நாள் தான் எனது தம்பியின் இறந்த உடலைக் காட்டுப்பக்கம் கண்டேன். அவரது உடலில் பலத்த கத்திக்குத்துக் காயங்கள் காணப்பட்டன. கைகள் பின்னுக்குக் கட்டப்பட்டிருந்தன. இறந்த அவரது உடல் நன்றாகப் பழுதாகிப் போயிருந்தது. அதனால் அதனை அந்தஇடத்திலேயே எரித்துவிட்டோம். எனது தம்பியைப் பலவந்தமாக உலங்குவானூர்தியில் ஏற்றிய சிங்களச் சிப்பாய்கள் உலங்குவானூர்தி மேலே எழும்பியபோது அதிலிருந்து தள்ளிவிட்டதாகப் பார்த்தவர்கள் சொன்னார்கள். இப்போது நான் கூலிவேலை செய்து எனது குடும்பத்தைக் காப்பாற்றிவருகின்றேன்."

இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று பிரமந்தனாற்றுக் கிராமத்தில் வாழ்ந்த திருமதி குலஅரியேஸ்வரி (வயது46) இப்படுகொலைபற்றி பின்வருமாறு விபரிகின்றார்.

"இப்படுகொலைத் தினத்தன்று ஐந்து உலங்குவானூர்திகள் வானத்தில் வட்டமிட்டதைப் பார்த்தேன். விமானங்களும்வானத்தில் சுற்றிச் சுழன்றடித்து வட்டமிட்டுக்கொண்டன. சிறீலங்கா இராணுவச் சிப்பாய்கள் உலங்குவானூர்தி மூலம்தரையிறக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். நாங்கள் எல்லோருமாகக் காட்டுக்குள் ஓடிவிட்டோம். காட்டுக்குள்தரையிறக்கப்பட்ட இராணுவம் வீடுகளை எரித்துக் கொண்டே வந்தது. தமிழ்மக்கள் பாதுகாப்புப்பேரவையைச்சேர்ந்த டிஸ்கோ என்பவர் முகத்தில் பெயின்ரைப் பூசிக்கொண்டு உருமறைப்புச் செய்யப்பட்ட ஆடைகளை அணிந்துகொண்டு இராணுவத்திற்கு வழிகாட்டிக்கொண்டு சென்றதைக் கண்டேன். டிஸ்கோவால் காட்டிக்கொடுக்கப்பட்டு தமிழ்மக்கள் பாதுகாப்புப்பேரவையைச் சேர்ந்த செல்வநாயகம் என்பவர் பிடிபட்டார். ஆனால் அவர் தந்திரோபாயமாக தப்பிக்கொண்டார். அவர் இராணுவப் பயிற்சி பெற்றிருந்த ஒருவரென்பதை நான் அறிவேன். எனது வீட்டுக்கு அருகில் சிறீலங்காச் சிப்பாய்கள் அப்பன் என்பவரையும், ஆனந்தராசா என்பவரையும் வாழை மரத்தோடு கட்டிவைத்து அவர்களது நெற்றியில் சுட்டுப் படுகொலை செய்தார்கள்."

மேலே கூறப்பட்ட 02.10.1985 அன்று பிரமந்தனாற்றுப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரும் சிறீலங்காவிமானப் படையினரும் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த அனைவரும் இருபதிற்கும் முப்பத்தைந்து வயதிற்கும் இடைப்பட்டவர்களாவர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. ஸ்ரீபன்ராஜாஸ் சத்தியசீலன் கமம் 26
02. நாகப்பன் சத்தியலிங்கம் விவசாயி 21
03. கந்தசாமி தர்மசிங்கம் கமம் 23
04. கிட்டிணர் சிவபாதசுந்தரம் கமம் 33
05. கறுப்பையா தர்மலிங்கம் கமம் 23
06. கறுப்பையா செல்வராசா கமம் 24
07. பொன்னுத்துரை பாக்கியநாதன் கமம் 21
08. சுப்பையா அருணாச்சலம் தொழிலாளி 29
09. சின்னையா சவுந்தரராசன் ஊழியர் 24
10. வன்சநாதகே பியதிலகே காமினி மீன்வியாபாரி 26
11. வல்லிபுரம் கணேசமூர்த்தி கமம் 30


## 33. கந்தளாய்-85 படுகொலை - 09 நவம்பர் 1985



கந்தளாய்ப் பிள்ளையார் கோயிலடியில் வசித்த மயில்வாகனம் என்பவரது வீட்டிற்கு 1985.11.09 அன்றிரவு ஆயுதம் தரித்த இராணுவ வீரர்கள் சென்று வீட்டிலிருந்த ஆறு பேரையும் ஆயுத முனையில் கடத்திச் சென்றார்கள். பின்னர் இவர்களின் உயிரற்ற உடல்கள் அல்லை வீதியில் நான்காம் கட்டைப் பகுதியில் மிகவும் மோசமான நிலையிற் காணப்பட்டன. கடத்திச் செல்லப்பட்ட ஆறு பேரில் மயில்வாகனத்தின் இரண்டு மகள்களும் அடங்குவர். இவர்கள் இரண்டு பேரின் பிரேத பரிசோதனையின்படி

இவர்கள் மோசமான முறையில் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட பின்னரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பது தெரியவந்தது.


## 34. மூதூர் கடற்க்கரைச்சேனை படுகொலை – 8, 9, 10 நவம்பர் 1985



1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எட்டாம், ஒன்பதாம், பத்தாம் திகதிகளில் கடற்படையினர், விமானப்படையினர், இராணுவத்தினர் கூட்டாக இணைந்து மூதூர் கடற்கரைச்சேனைப் பகுதிமீது தாக்குதல் நடத்தினார்கள். இத் தாக்குதலில் தரை வழியாற் சென்ற இராணுவத்தினரால் ஆலயங்களில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள் மோசமாகத் தாக்கப்பட்டார்கள். வீடுகளிலிருந்த பலர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார்கள். உயிரிழந்தவர்களின் உடல்களை இராணுவத்தினர் வீடுகளுடன் சேர்த்து எரியூட்டினர். ஆலயங்களிற் தங்கியிருந்த எழுபதிற்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். இவர்கள் இதுவரை திரும்பி வரவில்லை. மூன்று நாள் தாக்குதலில் இரபதிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்திருந்தனர். நூறிற்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டன.

## 35. பெரியபுல்லுமலை படுகொலை - 1986

புல்லுமலைக் கிராமமானது, செங்கலடி-மகாஓயா வீதியில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின் புல்லுமலைக் கிராமம் பல இன்னல்களைச் சந்தித்தது. நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றிய இந்துக் குருக்கள் ஒருவர் கொல்லப்பட்டார். 1980ம் ஆண்டு



மே மாதம் இருபதாம் திகதி இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் ஒன்று சேர்ந்து புல்லுமலையிலுள்ள கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து எரியூட்டினர். இச் சம்பவத்தின் போது கேணல் வீரதுங்கவினால் இருபத்தைந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புக்கென அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் கொடுவாமடுவில் வைத்துக் கொலைசெய்யப்பட்டனர்.

1986ஆம் ஆண்டு எட்டாம் திகதி அக்கிராமத்திலிருந்த இராணுவத்தினரும், மகாஓயாவிலிருந்து முந்நூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் அக்கிராம மக்கள் மீது தாக்குதலை நடாத்தினர். இதன் போது பதினெட்டுப் பொதுமக்கள் நிரலில் நிறுத்தி வைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். முத்தையா உட்பட ஐம்பத்தொரு பேர் கைது செய்யப்பட்டுக் காணாமற்போயினர். பலர் குடும்பங்களாகக் கொல்லப்பட்டனர்.


நாகலிங்கம் இராஜரட்ணம் என்பவரின் எட்டு மாதக் குழந்தை, நான்கு சிறுவர்கள், அவரின் மனைவி என்பவர்கள் உயிரிழந்தனர். சிறுவர்கள் சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு உயிரிழந்தனர். பீற்றர் லக்ஸ்மி என்பவரின் வீட்டில் ஒரு குழந்தை தவிர அனைவருமே கொல்லப்பட்டனர். கந்தசாமி என்பவரும் அவரது மனைவியான ஒரு சிங்களவரும் அவர்களது குழந்தையும் உயிரிழந்தனர். இங்கு தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் தனிப்பட்ட

முறையில் தெரிந்த இருவரை மட்டும் தப்பியோடும்படி விட்டுவிட்டனர். அவ்வாறு தப்பியவர்கள் செங்கலடியை வந்தடைந்தனர். 1986.11.10 அன்று மூன்று மாத குழந்தை, பெண்கள், இருபத்துமூன்று ஆண்கள் என இராணுவத்தினரின் நடவடிக்கையால் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்த ஆறு பெண்களில் இருவர் பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர். கைது செய்து காணாமற்போனோரில் இருபத்துநான்கு பேர் அடங்குகின்றனர். இத்தாக்குதலை நடாத்திய இராணுவத்தினரை அடையாளம் காண்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அடையாள அணிவகுப்பு பின்னர் இடைநிறுத்தப்பட்டது.

## 36. கிளிநொச்சி தொடருந்து நிலைய படுகொலை - 25 ஜனவரி 1986



கிளிநொச்சி மாவட்டத்தின் மையமாக விளங்குவது கிளிநொச்சி நகரமாகும். இம்மாவட்ட மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் நகருக்கு வருவதனால், கிளிநொச்சி நகரம் ஒரு முதன்மையான இடமாக இருந்தது. பாடசாலை, சந்தை, தொடருந்து நிலையம், வைத்தியசாலை மற்றும் கச்சேரி, என்பன நகரத்திலே அமைந்திருந்தன. கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள விடுதியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் நகருக்கு வரும் பொதுமக்களை விசாரித்தல், கைது செய்தல், அச்சுறுத்துதல் என பல வழிகளிலும் பொதுமக்களைத் துன்பப்படுத்திக் கொண்டிருந்தார்கள். 1986 ஜனவரி இருபத்தைந்தாம் நாள் நண்பகல் 12.00 மணியளவில் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவத்தினர் கிளிநொச்சி தொடருந்து நிலையத்திற்கு அருகில் தெற்குப் புறமாக நின்ற பாலைமரங்களுக்குள் ஒளிந்திருந்தார்கள். அதேநேரம் யாழ்ப்பாணதத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிகளை ஏற்றிவந்த தொடருந்து கிளிநொச்சி தொடருந்து நிலையத்தில் வந்து தரித்து நின்றது. பயணிகள் தொடருந்தில் ஏறிக்கொண்டிருந்த சமயம் மறைந்திருந்த படையினர் திடீரென பயணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். மக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினார்கள். ஏனையோர் தொடருந்து நிலையத்திற்குள்ளும், தொடருந்தின் இரு புறமும் படுத்துக் கொண்டார்கள். இச் சம்பவத்தில் நான்கு பெண்கள், இரண்டு சிறுவர்கள் உட்பட மொத்தம் பன்னிரண்டு பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள். இச்சம்பவத்தில் காயமடைந்ததுடன் மனைவியையும் மகனையும் இழந்த சின்னையன் நல்லையா என்பவர் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில்.



*"நான் விவசாயம் செய்து வருகின்றேன். எனக்கு நான்கு பிள்ளைகள். இராணுவத்தின் பிரச்சினையால் இடம்பெயர்ந்து அக்கராயன் எட்டாம் கட்டையில் ஒரு தேவாலயத்திற் போய் இருந்தோம். அதன்பின்னர் கிடைத்தஒரு வீட்டில் வசித்துவந்தோம். எனது மனைவி ஆசிரியையாக இருந்ததால் கல்வித்திணைக்களத்திலிருந்து அநுராதபுரம் வேலைமாற்றல் கடிதம் வந்தது தைப்பொங்கல் முடிந்த பின்னர். 1986ஆம் ஆண்டு தை மாதம் இருபத்தைந்தாம் திகதி திங்கட்கிழமை பேருந்து ஒன்றும் கிடைக்காததால், தொடருந்தில் செல்ல அங்கு வந்தோம். அதேநேரம் அங்கு பல இடங்களிலிருந்தும் வந்த மக்களும் நின்றிருந்தார்கள். சரியாக பகல் 12.00மணியிருககும்.அங்கு வாங்குகளில் நாங்கள் இருகும்போது சந்தைப்பக்கத்தால் வந்த ஒன்பதிற்கும் மேறபட்ட இராணுவத்தினர் திருவேல் என்பவரையும், அவரின் தகப்பனான கோழி வியாபாரியையும் சுட்டுவிட்டுத் தொடருந்துநிலைய*

வீதியால் வந்தார்கள். அந்த நேரம் நாங்கள் தொடருந்து நிலையத்தில் பயணிகள் ஏறும்இடத்தில் நின்றிருந்தோம். இராணுவத்தினர் அனைவரும் தோள்களில் துப்பாக்கியைக் கொழுவியிருந்தார்கள். நாங்கள் அனைவரும் பிரயாணம் செய்வதற்காக வந்தவர்கள் என்று பெரிதாகச் சொன்னோம். அப்போது அவர்கள் விரலைக் காட்டி உங்கள் எல்லோரையும் கொல்வோம் என்று சொல்லிமுடிக்கு முன்னரே எம்மை நோக்கி திடீரென சரமாரியாகச் சுட்டார்கள். அந்த இடம் ஒரே வெளியாக இருந்ததால், நாங்கள் எங்கே செல்வதென்று தெரியாமல் தொடருந்து நிலையத்தில் பொருட்கள் வைக்கும் அறைக்குள் ஓடி ஒளிந்துகொண்டோம். எல்லோரும் அதிலேயே காயப்பட்டார்கள். அதன் பின்னர் என்ன நடந்ததென்று எதுவும் தெரியாது.

ஒரு மணியத்தியாலதத்தின் பினன்னர் 1.30 மணியிருககும் சரியான தாகமாக இருந்தது. தணண்ணீரதண்ணீர என்று கத்தினேன். அந்த நேரம் எனக்கு மேல் இரண்டு பேர் இறந்து கிடந்தார்கள். அதனால் கைமற்றும் கால்களை எடுக்க இயலாது இருந்தது. எல்லா இரத்தமும் ஓடியதால் காதுகள் எல்லாம் அடைத்திருந்தது. திரும்பவும் தண்ணீர் தண்ணீர் எனக் கத்தியபோது எனது ஐந்து வயது மகன் சுவர்க்கரையாகஇருந்து எழும்பினார். அவருக்குக் கையில் துப்பாக்கிச் சன்னம் பட்டு கை சிதைந்துபோயிருந்தது. மற்றையபக்கம் திரும்பிப் பார்த்தபோது அந்த மூலைக்குள் என்னுடைய மூன்றாவது மகன் இறந்த ஒரு பெண்ணின் மேல்தொங்கிக்கொண்டிருந்தார். எனது மனைவி எனக்கு நேராக விழுந்து கிடந்தார். ஏனைய மக்கள் ஆங்காங்கேவிழுந்து கிடந்தார்கள். ஆனால் எத்தனை பேர் இறந்தார்கள் என்று தெரியாது. இன்னொரு பக்கத்தில் சாந்தபுரத்தைச் சேர்ந்த ஒருவர் காலிற் காயம் பட்டுக்கத்திக்கொண்டிருந்தார். அப்போது என்னுடைய மகன்தான்பானைக்குள்ளிருந்த தண்ணீரை எடுத்துத் தர அதைக் குடித்தேன். அதன் பின்னர் அப்படியே மயங்கிவிட்டேன்.அதற்குப் பின்னர் என்ன நடந்ததென்று தெரியாது. பின்னர் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் முழித்துப்பார்த்தேன். அதன் பின்பு தான் என்னிடம் வந்த தாதிமார் நடந்தவற்றைச் சொல்லித்தான் எனது மனைவியும்பிள்ளையும் இறந்தது பற்றிக் கேள்விப்பட்டேன் இறந்த எனது மனைவி மற்றும் ஒரு மகனையும் என்னுடனேயேகொண்டு வந்திருந்தார்கள். ஆனால், இருவரும் இறந்ததால் உடனடியாக கிளிநொச்சிக்குக் கொண்டு போய்விட்டார்கள்.

எனது உடம்பெல்லாம் காயம்பட்டதனால் நான் தப்பமாட்டேன் எனப் பலரும் சொன்னார்கள். ஏதோ தெய்வாதீனமாக உயிர் தப்பிவிட்டேன். என்னால் அவர்களின் மரணச்சடங்கிற்கூடக் கலந்துகொள்ள முடியாத நிலையில் அவர்களின் உடலை எனது மைத்துனர் தான் முறைப்படி அடக்கம் செய்தார். இயங்கமுடியாத நிலையில் இருந்தேன். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அனுப்பினார்கள். அங்கும் கையும் காலும் கழற்ற வேண்டும் என்றே சொன்னார்கள். பின்பு அதற்குச் சம்மதிக்காததால், நீண்ட நாட்களிற்குப் பின்பு உடல் தேறினேன். இப்பவும் என்னால் ஒரு தண்ணீர் வாளியைக் கூடத் தூக்கமுடியாத நிலையில் கஸ்ரப்படுகின்றேன். அந்தச் சம்பவத்திற்குப் பின்பு என் மகன்மார் தான் என்னைப் பார்க்கிறார்கள். முன்புபோல் வயல்வேலைகள் மற்றும் தோட்ட வேலைகளைச் செய்யவோ முடியாத நிலையில் இருக்கிறேன். ஒவ்வொரு முறையும் வேதனைப்படும் போதும் எமதினத்தின் விதியை நினைத்தே கவலைப்படுவேன்."

இச்சம்பவத்தில் காயமடைந்த்த சாந்த்தபுரத்ஸ்தைச் சேர்ந்த்த அருணாச்சலம் ஆறுமுகம் சம்பவம் பற்றிக் கூறுகையில்,

"என்னுடைய சொந்த ஊரான கண்டிக்குப் போய் 25.01.1986ம் திகதி திரும்பி வந்து கிளிநொச்சி தொடருந்து நிலையத்தில் இறங்கி நின்றேன். அந்த நேரம் இராணுவத்தினர் தொடருந்தில் போவதற்கு நின்ற பொதுமக்கள் மீது திடீரெனச் சுட்டார்கள். தொடருந்து நிலையத்திற்குப் பின்புறமுள்ள கிணற்றடியில் நின்ற இரு இராணுவத்தினரே சுட்டார்கள். அப்போது எனக்கு சன்னங்கள் கையிலும் காலிலும் பட்டவுடன் நான் கீழே விழுந்து விட்டேன்.

*எழும்ப முயற்சி செய்தபோது என்னால் முடியவில்லை. அப்போது தான் உணர்ந்தேன் எனது இரண்டு கையும் காலும் முறிந்து விட்டதென்று . கண்விழிதது ப் பார்த்தபோது வைத்தியசாலையிலிருப்பதைப் புரிந்துகொண்டேன். எனது காயத்திற்குச் சிகிச்சை செய்யப்பட்டிருந்தது. அடுத்த நாள் விடியற்காலை தான் பூரணமாக நினைவு திரும்பியது. அதன்பின் ஏன் இராணுவத்தினர் எம்மீது சுட்டார்கள் என வினாவிய போது துப்பாக்கிச் சூடு நடத்திய படைச்சிப்பாய்க்கு மூளை சுகமில்லை என்று அப்போது கிளிநொச்சியில் இராணுவத் தளபதியாக இருந்த கொப்பெக்கடுவ கூறியிருந்ததாகக் கூறினார்கள். ஆனால் இரண்டிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் எம்மீது தாக்குதல் நடத்திவிட்டு இவ்வாறு கூறியது தமிழர்களை அழிக்கவேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டுச் செயற்படுவதை உறுதிப்படுத்துகின்றது.''*

அரசாங்கம் இச்சம்பவம் தொடர்பாகப் பின்வருமாறு தெரிவித்தது. ''மனநோயாளியான படைச்சிப்பாய் சுட்டதில் கிளிநொச்சி தொடருந்து நிலையத்தில் பொதுமக்கள் பலியானார்கள், இதற்காக அரசாங்கம் மன்னிப்புக் கோருகின்றது.'' என்று கூறியதைத் தவிர அரசாங்கம் மேற்கொண்டு எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. சோமசேகரம் ஜெயசீலன், 16, மாணவன்
02. தவராசா சின்னமணி, 40, வீட்டுப்பணி
03. தவராசா சுகந்தினி, 11, சிறுமி
04. துரைசாமி கதிர்காமு, 18, நீர்பாசனத் தொழிலாளி
05. பாண்டியன் சிவகுரு, 26, வியாபாரம்
06. குலசேகரம் தங்கம்மா, 64

## 37. வங்காலை தேவாலயம் படுகொலை – 6 ஜனவரி 1986

வங்காலைக் கிராமம் மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேசச் செயலகப் பிரிவில் கடற்கரையோரமாக அமைந்துள்ளது. புனித அருள் ஆலயம் இங்குள்ள மக்களின் வணக்கத்தலமாக உள்ளது.



1986ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆறாம் திகதி பூரணை தினத்தன்று பி.ப 12.30 மணியளவில் வங்காரலக் கிராமத்தினை இராணுவத்தினர் சுற்றி வளைத்துக் கொண்டனர். நள்ளிரவு தொடக்கம் மறுநாள் காலை 10.00 மணிவரை வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

மேரி பஸ்ரியன் குருவின் வதிவிடத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டு இராணுவத்தினர் சென்றனர். குருவானவர் தனது மேலங்கியையும் அணிந்து கொண்டு செபமாலையுடன் வெளியே வந்து கைகளை மேலுயர்த்தியவாறு ஆங்கிலத்தில் ''பிளீஸ்'' எனக் கெஞ்சும் பொழுது அவரை நோக்கி இராணுவத்தினர் சுட்டனர். பங்குத்தந்தையுடன் நின்ற இரண்டு இளைஞர்களும் உயிரிழந்தனர். வெடிச்சத்தத்திற்கு பயந்து ஓடிய சிலரும் பலியாகினர். சிலர் கோயில் மேன்மாடியில் ஏறிப்

பதுங்கியிருந்தார்கள். இராணுவத்தினர் பங்குத்தந்தையின் உடலை இழுத்து வந்து கன்னியர் மடவாசலிற் கிடத்திப் புகைப்படங்கள் எடுத்தனர். இவற்றை கோயிலின் மேன்மாடியில் ஒழிந்திருந்த பொதுமக்கள் பார்த்தார்கள்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த பின்பு இராணுவத்தினர் ஒரே பாட்டும் கூத்துமாக இருந்தனர். பின்னர் இராணுவத்தினர் இறந்தவர்களை ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டனர். இதன் பின்னர் மக்கள் திரண்டு சென்ற பார்த்த போது மேரி பஸ்ரியனின் இருப்பிடம் இரத்த வெள்ளமாக காணப்பட்டது.

இறந்த மேரி பஸ்ரியனின் உடலைத் தவிர மற்ற எட்டுப் பேரின் உடல்களை மன்னார் வைத்தியசாலையிற் கொடுத்துவிட்டு மேரி பஸ்ரியனின் உடலை தள்ளாடி இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றுவிட்டனர். அவ்வேளையில் இந்த முகாமிலிருந்து எழும்பி



வழமைக்கு மாறான புகைமண்டலத்திலிருந்து அவரது உடல் எரிக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

இச்சம்பவத்தில் மேலும் பல இளைஞர்கள் வெடிபட்ட காயங்களுடன் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டு இரகசியமான முறையில் வைத்தியம் செய்யப்பட்டனர். இறந்தவர்களின் உடல்கள் வங்காலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர், வயது)

1. மரியதல்மைடா தாசன், 26, தொழிலாளி
2. சூசையப்பு மேன்பீரிஸ், 20, மாணவன்
3. ஞானசேகரம் றூபன்குரூய், 24, கடற்தொழில்
4. சவிரியான் அந்தோனி, 23, கடற்தொழில்
5. முனியப்பன் நீலமேகம், 28, கடற்தொழில்
6. சந்தியா அலெக்சாண்டர் முறாவிலி, 33, கடற்தொழில்
7. வணபிதா மேரி பஸ்ரியன், - , பங்குத்தந்தை
8. லூயிசம்மா பிராண்டா, 60, -

## 38. ஈட்டிமுறிஞ்சான் படுகொலை - 19, 20 மார்ச் 1986



வவுனியா மாவட்டத்திலுள்ள வவுனியா வடக்குப் பிரதேசசெயலர் பிரிவில் பதவியா செல்லும் வீதியில் அண்ணளவாக ஐந்து கி.மீ தூரத்தில் ஈட்டிமுறிஞ்சான் கிராமம் அமைந்துள்ளது. இங்கு வாழும் மக்களில் அனேகா் விவசாயிகளும், கூலித் தொழிலாளிகளுமாவர். இக்கிராம மக்கள் ஆரம்ப காலங்களில் விவசாயத்தின் மூலம் தன்னிறைவான வாழ்வை வாழ்ந்து வந்தனர். இத்தகைய சூழலில் 1970களில் மலையகத்திலிருந்து சிங்களக் குழுக்களால் கலைக்கப்பட்ட தமிழ் மக்கள் டொலர் பாம், கென் பாம், சிலோன் தியேட்டர் போன்ற பிரதேசங்களில் வாழ்ந்து வந்தனர்.

பின்னர் 1980களின் நடுப்பகுதியில் இங்கிருந்தும் இவர்களை இராணுவத்தினர் விரட்டிவிட்டு தென்பகுதிச் சிறைகளிலிருந்த ஆயுட்கைதிகளைக் கொண்டுவந்து, விரட்டிய மக்களின் வீடுகளில் குடியமர்த்தி ஆயுதங்களையும் அவர்களுக்கு வழங்கினார்கள்.இவ்வாறு குடியேறிய சிங்களக் குழுக்கள் அயலில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்ற மக்களின் விவசாயஉற்பத்திப் பொருட்கள், கால்நடைகள், வீட்டுப்பயன்பாட்டுப் பொருட்கள் என்பவற்றையெல்லாம் திருடினார்கள்.பின்னர் இராணுவத்தினருடன் சேர்ந்து அங்கு வாழ்ந்து வந்த மக்களைத் தாக்கினார்கள்.

19.03.1986 அன்று இராணுவமும் சிங்களக்குழுக்களும் காடுகளுககுள்ளால் கவசவாகனங்கள், டிராக்டர்கள் மூலம் ஈட்டிமுறிஞ்சான் கிராமத்திற்குள் பிற்பகல் 4.30 மணியளவில் நுழைந்தார்கள். நுழைந்தவர்கள் தங்களது கண்களிற் தென்பட்ட மக்களையெல்லாம் சுட்டதுடன், மக்கள் வாழ்ந்து வந்த வீடுகளை எரித்ததுடன், வீடுகளிலிருந்த பெறுமதியான பொருட்களையும் எடுத்துச் சென்றார்கள். மறுநாள் 20.03.1986 அன்று அதிகாலையில் நெடுங்கேணிப் பிரதேசத்தைச் சுற்றிவளைத்த இராணுவமும், சிங்களக்குழுக்களும் அங்கும் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள், கூலி வேலைக்காக வேறு இடங்களிலிருந்து வந்தவர்கள் என எல்லோரையும் சுட்டார்கள். இரண்டு நாள் சம்பவங்களிலும் இருபது பொதுமக்கள் உயிரிழந்தார்கள். அத்துடன், பல இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. இதனை மேற்கொண்ட இராணுவத்தினருக்கு விமானப்படையின் உலங்குவானூர்தி வானிலிருந்து தாக்குதல் நடத்தி ஒத்துழைப்பு வழங்கியது. உலங்கு வானூர்தியின் தாக்குதலினால் நெடுங்கேணியிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள பெரியகுளத்திலிருந்த வீடுகளும் தீப்பற்றி எரிந்ததால், நெடுங்கேணிப் பிரதேசம் முழுவதும் புகைமண்டலமாகக் காட்சியளித்தது. அச்சமடைந்த மக்கள் காடுகளுக்குள் சென்று தஞ்சமடைந்தனர். பின்னர் தம் உறவுகளின் உயிரற்ற உடல்கள் சிலவற்றைத் தம்முடன் எடுத்துச்சென்று காடுகளுக்குள் அடக்கம் செய்தனர். சில உடலக் ளை அவ்விடத்திலேயே அடக்கம் செய்தனர்.

இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. சூசை மிக்கேஸ் லக்கீஸ் அன்ரி மலேரியா தொழிலாளி 39
01. பொன்னம்பலம் குகதாஸ் கமம் 26
02. பொன்னம்பலம் வைத்தீஸ்வரன் கமம் 24
03. பெருமாள் சிறீரங்கன் கமம் 59
04. கே.கைலைக்குட்டி 35
05. அப்புத்துரை நேரு 45
06. இரவீந்திரன் கமலகுமார் 25

## 39. ஆனந்தபுரம் செல்வீச்சு – 4 யூன் 1986

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் ஆனந்தபுரம் அமைந்துள்ளது. இக்கிராமம் கிளிநொச்சி நகரத்தின் தெற்கே ஒரு மைல் தூரத்திலுள்ளது. இச்சிறிய கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் உள்ளது.

1986களில் அரச படைகள் பொதுமக்கள் வாழும் பிரதேசங்களில் பரவலாக இராணுவ முகாம்களை விரிவாக்கத் தொடங்கியதுடன், பொதுமக்கள் வாழும் பிரதேசங்கள் மீது எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டார்கள்.



1986.06.04ஆம் நாள் அதிகாலை 5மணிக்கு கிளிநொச்சி நகரில் முகாமிட்டிருந்த அரச படையினர் ஆனந்தபுரத்தை நோக்கி எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். இவ்வாறு இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைகளில் சில ஆனந்தபுரம் செல்வா வீதியிலுள்ள இராமையா பெரியான்பிள்ளை என்பவரின் வீட்டின் மேல் வீழ்ந்து வெடித்தது. வீட்டினுள் தாயின் அரவணைப்பில் ஐந்து பிள்ளைகளும் உறங்கிக்கொண்டிருந்தனர். வீட்டின் மீது வீழ்ந்த எறிகணையினால் இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் படுக்கையில் உடல் சிதறி உயிரிழந்தார்கள். மற்றைய மகன் தலையிலும், உடல் முழுவதும் காயங்களுக்குள்ளாகிய நிலையில் அக்கராயன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் அங்கு மரணமானார். தாய் தலையிலும் உடல் முழுவதும் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ்ப்பாண வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.



கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் பொதுமக்கள் ஆனந்தபுரக் கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்தார்கள். எறிகணைத் தாக்குதல்கள் முடிவடைந்த பின்னர் கிராமத்திற்கு மீண்டும் திரும்பிய பொதுமக்களால் உயிரிழந்த நான்கு மாணவர்களினதும் உடல்கள் வீட்டு வளவினிலேயே அடக்கம் செய்யப்பட்டன. பிள்ளைகளின் நினைவாக அவர்களை அடக்கம் செய்த இடத்தில் கல்லறையும், இரத்தினபுரம் கண்டி வீதியில் மீனாட்சி அம்மன் வித்தியாலயத்தில் ஐந்து பிள்ளைகளின் நினைவுச்சின்னம் என்ற மணிக்கூட்டு கோபுரம் கட்டப்பட்டது. இவை இரண்டும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சத்ஜெய இராணுவ நடவடிக்கையில் சேதத்திற்குள்ளாகி காணப்படுகிறது. உயிரிழந்த நான்கு பிள்ளைகளும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களாவர்.

ஐந்துது பிள்ள்ளைகளை இழந்த்த தாய் பெரியதம்பி கனகமணி தெரிவிக்க்கையில்,

*"ஆனந்தபுரம்: 1986 நாங்கள் வசித்த வீட்டின் மேல் கிளிநொச்சி நகரில் இருந்த சிறீலங்கா இராணுவத்தினரால் ஏவப்பட்ட எறிகணை வீழ்ந்து வெடித்ததில், எனது ஐந்து பிள்ளைகள் அவ்விடத்திலேயே உடல்சிதறிப் பலியாகினர். நானும் ஒரு பிள்ளையும் படுகாயத்துடன் யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டோம். இச்சம்பவத்தில் எனது கணவர் மனநிலை பாதிக்கப்பட்டு தற்போது சுகமடைந்துள்ளார்."*

இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. பெரியான்பிள்ளை புஸ்பகாந்தன் சிறுவன் 15
02. பெரியான்பிள்ளை செந்தில்குமார் மாணவன் 18
03. பெரியான்பிள்ளை கமலநாதன் மாணவன் 20
04. பெரியான்பிள்ளை கிருபாணி சிறுமி 11
05. பெரியான்பிள்ளை வாமதேவி சிறுமி 13

## 40. கந்தளாய்-86 படுகொலை - 04, 05 யூன் 1986



1986ம் ஆண்டு யூன் மாதம் நான்காம், ஐந்தாம் திகதிகளில் கந்தளாய் நான்காம் கட்டை என்னும் இடத்தில் காவல் நின்ற விமானப்படையினரும், ஊர்காவற் படையினரும் இணைந்து பிரயாணிகள் பேருந்தினை வழிமறித்துத் தமிழர்களை அடையாளங்கண்டு தாக்கினார்கள். இவர்களின் தாக்குதலில் பல பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர் காணாமற் போனார்கள். சிலர் காயத்துடன் உயிர்தப்பினார்கள்.

1986.06.05 ஆம் திகதி வவுனியாவிலிருந்து திருகோணமலை நோக்கி இருபத்தைந்திற்கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்ற பேருந்தைக் கந்தளாய் நான்காம் கட்டைப் பகுதியில் வைத்து விமானப்படையினரும் ஊர்காவல் படையினரும் இணைந்து தாக்கியதுடன், பேருந்தினைத் தீயிட்டும் எரித்தார்கள். எரிந்த நிலையில் பேருந்திலிருந்து ஒரு சிறுமி, ஒரு கைக்குழந்தை உட்பட பத்திற்கும் மேற்பட்டவர்களது கருகிய உடல்கள் மீட்கப்பட்டன. இரண்டு தினங்களிலும் விமானப்படையினர், ஊர்காவற் படையினரின் தாக்குலில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், முப்பத்தைந்திற்கும் மேற்பட்டவர்களுக்கு என்ன நடந்ததென்று இன்றுவரை தெரியவில்லை.

## 41. மண்டைதீவுக்கடல் படுகொலை – 10 யூன் 1986



யாழ்ப்பாணக் குடாநாட்டின் நகர மையத்திலிருந்து தெற்குக் கரையோரக் கிராமங்களாகக் குருநகர், பாசையூர், மண்டைதீவு ஆகியன அமைந்துள்ளன. யாழ்ப்பாணத்தின் தென்மேற்காக வேலணைப் பிரதேசசபை எல்லையினுள் மண்டைதீவு அமைந்துள்ளது. மூன்று பக்கமும் கடலாற் சூழப்பட்டதும், மறுபுறம் நிலப்பரப்பையும் கொண்ட ஆயிரத்துஇருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் கிராமமாக மண்டைதீவு காணப்படுகிறது. யாழ். நகரத்தின் இக்கரையோரக் கிராம மக்கள் தமது சீவனோபாயத் தொழிலாகக் கடற்றொழிலையே நம்பி வாழ்கின்றனர்.



10.06.1986 அன்று கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்களை நோக்கி விசைப்படகினில் வந்த கறுப்புச்சீருடை அணிந்த கடற்படையினரைக் கண்டு மீனவர்கள் தமது கைகளை உயர்த்தியவாறு தாம் பொதுமக்கள் என்பதை அடையாளம் காட்டினார்கள். ஆனால் கடற்படையினர் மீனவர்களைக் கடலில் வைத்து கண்களைத் தோண்டியும், வயிற்றினை வெட்டியும் இறுதியில் துப்பாக்கியால் சுட்டும் கைக்குண்டுகளை

வீசியும் கொன்றனர். இச்சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த முப்பத்திரண்டு பேரும் மண்டைதீவைச் சேர்ந்த ஒருவருமாக மொத்தம் முப்பத்து மூன்று மீனவர்கள் உயிரிந்தார்கள் மீனவர்களின்.படகுகள், வலைகள், கருவிகள் என்பன சேதமாக்கப்பட்டன.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. கந்தையா முத்துசாமி 55
02. கிறிஸ்தோப்பர் ஸ்நாச்சி 54
03. பங்கிராஸ் தார்சியஸ் 30
04. பங்கிராஸ் அன்ரன் விமலதாசன் தவம் 23
05. பங்கிராஸ் அன்ரனி யூலியஸ் 33
06. பற்றிக் அலோசியஸ் டோனாஸ் 58
07. தமியன் எருமின் றூபேட் உதயகுமாரன் 26
08. முடியப்பு அன்ரனிதாஸ் இராஜகுமார் 32
09. மனுவல் பயர்ஸ் 56
10. மனுவல் பற்றிக் 60
11. மனுவல் மரியநாயகம் 38
12. முத்தையா சுவாமிநாதன் செபமாலை யோசெப் 57
13. அன்ரன் செல்ரொன் வீன் 21
14. அலோசியஸ் டியூஸ் டோறோஸ்டியூக 24
15. அலோசியஸ் லிகோரி டோனாஸ் மௌண்ட் 34
16. ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை 68
17. அருளானந்தம் பெனடிக்ற் 32
18. அருளானந்தம் பொனிபஸ் 60
19. யோன் யோஜ் 56
20. யோசப்பர்ணாந்து அந்தோனிப்பிள்ளை பர்ணாந்து 62
21. பெனடிக்ற் கியூபேட் றேசன் றமேஸ் 19
22. பெனடிக்ற் மாசில்லா மகேந்திரன் 25
23. பெனடிக்ற் அலிஸ்ரன் 30
24. பெனடிக்ற் லிகோரி 27
25. செபதேயு சேவியர் 62
26. சோமசுந்தரம் சோதிநாதன் 62
27. ஞானப்பிரகாசம்எட்வேட்கெலின்சன் ஜெயகாந்தன் 17
28. சுப்பிரமணியம் கோபாலகிருஸ்ணன் 20
29. சவிரியான் யேசுதாசன் நிக்சன் 13
30. விசுவநாதன் விமலநாதன் 23
31. எமிலியானுஸ் மக்சிமஸ் ஈஸ்வரன் 21

## 42. சேருவில் படுகொலை – 12 யூன் 1986

1986.06.12 அன்று ஈச்சிலம்பற்றையிலிருந்து அகதிகளுக்கான உணவுப்பொருட்களை எடுத்துச் செல்லும் போது, மகிந்தபுரவில் ஊர்காவற் படையினரால் இரண்டு கிராமத் தலைவர்கள், மூன்று அரச ஊழியர்கள் மற்றும் இருபது தொழிலாளர்கள் தாக்கப்பட்டார்கள். இத்தாக்குதலில் இருபத்தொரு பேர் உயிரிழந்தார்கள். இரண்டு பேர் காயமடைந்தார்கள்.



இவர்கள் ஈச்சிலம்பற்றில் இனக்கொலைகளினால் இடம்பெயர்ந்து அகதிகளாகத் தங்கியிருந்தவர்களுக்கான உணவுப்பொருட்களை எடுத்துச் சென்றவர்களாவர்.

## 43. தம்பலகாமம் படுகொலை - 20 யூன் 1986



திருகோணமலை மாவட்டத்திலுள்ள புகழ்பெற்ற கிராமங்களில் ஒன்றாக தம்பலகாமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் பிரதான தொழிலாக விவசாயம் அமைந்துள்ளது.

1986.06.20 அன்று தம்பலகாமம் சந்தியிலிருந்த விமானப்படையினரும், இராணுவத்தினரும் இணைந்து அக்கிராமத்தில் மேற்கொண்ட தாக்குதலினால் மக்கள் தமது வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்றனர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் பொற்கேணி அரிசி ஆலையில் தஞ்சமடைந்தனர். இந்தவேளையில் அங்குவந்த இராணுவத்தினர் அனைவரையும் கைது செய்து கொண்டு சென்றனர். பின்னர் கைது செய்யப்பட்ட அனைவரையும் உள்பந்தை கிராமத்தின் சமுனைஆறு என்னும் இடத்தில் வைத்துச் சுட்டதில் அனைவருமே உயிரிழந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. கந்தசாமி கனகசபாபதி - -
02. கனகசபாபதி புவனேஸ்வரி - -
03. கனகசபாபதி தாசன் - -
04. கனகசபாபதி தீபன் - -
05. கனகசபாபதி தீசன் - -
06. கனகசபாபதி ரஞ்சி - -
07. கணபதிப்பிள்ளை சபநாயகம் தொழிலாளி 51
08. கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன் வியாபாரம் -
09. முனியையா லெட்சுமி - 37
10. சேகர் கந்தமுத்து - -
11. சேகர் கணபதிப்பிள்ளை - -
12. சேகர் வனிதா - -
13. சேகர் ராதிகா - -
14. சுப்பிரமணியம் ஜெயானந் - -
15. சுப்பிரமணியம் ஜெயராணி - -

16. சுப்பிரமணியம் செல்வராணி - -
17. சுப்பிரமணியம் சுதாகரன் - -
18. சுப்பிரமணியம் சசீகரன் - -
19. சுப்பையா சாந்தகுமார் வியாபாரம் -

## 44. பரந்தன் விவசாயிகள் படுகொலை – 28 யூன் 1986



கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் உள்ளடங்கியுள்ள பிரதேசம் பரந்தன் ஆகும். இந்த மாவட்டத்திற் காணப்படும் நகரங்களில் முதன்மையான ஒரு நகரமாக பரந்தன் விளங்குகின்றது. இங்கு வாழ்பவர்களது பிரதான தொழில் நடவடிக்கையாக விவசாயம் காணப்படுகின்றது. அத்தோடு சிலர் பகுதிநேர மீனவர்களாகவும், கூலித் தொழில் செய்பவர்களாகவும் உள்ளார்கள்.

பரந்தன் நகரமானது, யுத்தகாலத்தில் பல்வேறு இராணுவ நடவடிக்கையால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாக இருந்தது. குறிப்பாக ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்த இலங்கை இந்தியப்படை 87 இன் பின்பு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்களுக்கும் முகம்கொடுத்த பிரதேசமாக இருந்தது.

28.06.1986 அன்று அதிகாலை 5.15 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதல் செய்தவாறு பரந்தனை நோக்கி முன்னேறி வந்த இராணுவத்தினர் நகரின் பிரதான வீதியை அண்டியுள்ள வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு நின்ற விவசாயிகள் ஏழு பேரைக் காரணமின்றிக் கைதுசெய்து, அவர்களை ஒன்றாகக் கயிற்றினால் பிணைத்துக் கட்டி சித்திரவதை செய்து கொன்ற பின்னர் உயிரற்ற அவர்களது உடல்களை அங்கிருந்த கழிவாற்றுப் பகுதியில் போட்டுவிட்டுச் சென்றனர்.

அன்றையதினம் 03.30 மணியளவில் வயல் வேலைக்காக வந்தவர்கள் இராணுவத் தாக்குதலினால் உயிரிழந்து கிடந்தவர்களைக் கண்டு அவர்களது உறவினர்களிடமும் கிராம மக்களிடமும் தெரிவித்ததைத் தொடர்ந்து, கிராம மக்கள் அவர்களது உடல்களை எடுத்துச் சென்று அடக்கம் செய்தார்கள்.

இவ்வாறு இராணுவத்தினரின் தாக்குதல்களையும் கெடுபிடிகளையும் தொடர்ந்து பரந்தன் பகுதி மக்கள் 1980களில் சொந்த இடங்களை விட்டு வெளியேறினார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. ஜோசப் செபஸ்டியன் 44
02. வைதத் 'லிஙக் ம ' பாலசுப்பிரமணியம ' 23
03. முனுச்சாமி உதயசூரியன் 17
04. நாராயணப்பிள்ளை நடராசா 75
05. வினாசித்தம்பி சண்முகநாதன் 18
06. சுப்பையா கனகசபை 39
07. ஆறுமுகம் சிவஞானசுந்தரம் 22

## 45. பெருவெளி அகதிமுகாம் படுகொலை - 15 யூலை 1986

திருகோணமலை கொட்டியாபுரத்திலிருந்து மட்டுநகர் நெடுஞ்சாலையில் ஏழு கி.மீ தொலைவில் மல்லிகைத்தீவுச் சந்தியுள்ளது சந்தியின் வலப்புறமாக ஒரு கி.மீ தூரத்தில் பெருவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை உள்ளது. இக்கிராமம் மல்லிகைத்தீவு கிராமசபை எல்லைக்குட்பட்ட தமிழ் மக்கள் அதிகளவு வாழும் பிரதேசமாகும்.



1985ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இந்தப் பாடசாலை தமிழ் மக்களின் அகதி முகாமாக இயங்கிவந்தது. கிராமசபை இயங்கி வந்த காலங்களில் மல்லிகைத்தீவு கிராமசபை பெரும்பான்மையான தமிழ்க் கிராமங்களையும், சில சிங்களக் கிராமங்களையும் உள்ளடக்கியிருந்தது. அவற்றில் தெகிவத்தை, நீலாப்பொல போன்ற சிங்களக் கிராமங்களில் இருந்த மக்களில் பலர் ஊர்காவற்படைக்கு இணைக்கப்பட்டு பணிக்கமர்த்தப்பட்டனர். இவர்கள் சிறீலங்கா இராணுவத்தினருடன் இணைந்து தமிழ் மக்கள் அழிப்பில் ஈடுபட்டனர். ஊர்காவற்படையில் அந்தந்தக் கிராமத்தவர்கள் பணியாற்றினார்கள். இவர்கள் ஆரம்பகாலங்களிலிருந்தே தமிழ் மக்களோடு ஒன்றாகப் பழகியிருந்தமையால் கிராமத்தவர்கள் சம்பந்தமாக பூரணமாக அறிந்திருந்தனர்.

15.07.1986 அன்று தெகிவத்தை, நீலாப்பொல கிராமத்திலிருந்த ஊர்காவற்படையினருடன் இராணுவத்தினர், பொலீசாரும் இணைந்து நள்ளிரவுவேளை பெருவெளி அகதிகள் முகாமைச் சுற்றியிருந்த பகுதிகளில் மறைந்திருந்தனர். முகாமைச் சூழவிருந்த பெருவெளி மணல்வெளிக் குடியிருப்புகள், இரணுவத்தினரால் முற்றாக அழிக்கப்பட்டிருந்ததால், இரவு நேரங்களில் மக்கள் நடமாடுவதில்லை, இதனால் இரவு வந்த இராணுவத்தினரின் நடமாட்டம் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. பொழுது புலர்ந்து வந்து கொண்டிருந்த வேளையில் முகாமிற்குள் புகுந்த இராணுவத்தினர் சுடத்தொடங்கினர்கள். அத்தோடு தத்தமது இருப்பிடங்களுக்குக் காலையில் திரும்பிய மக்கள் மீதும் ஒளிந்திருந்த இராணுவத்தினரும் காவற்றுறையினரும் சுட்டார்கள். திகைப்படைந்த மக்கள் நாலாதிசையும் பாய்ந்து ஓடத்தொடங்கினர். பயந்தோடிய மக்களை மறைந்து நின்ற படையினர் சுட்டுக்கொன்றனர். அவ்வாறிருந்தும் பெருமளவு மக்கள் ஓடித் தப்பிக்கொண்டனர்.

குழந்தைகள், பெண்கள், மாணவர்கள் உட்பட மொத்தமாக நாற்பத்தெட்டுப் பேர் உயிரிழந்தார்கள். இருபது பேருக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர். பல பெண்கள் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டனர்.

இந்தப் படுகொலைச் சம்பவம் நண்பகல் ஒரு மணிவரை நீடித்தது. அதன் பிறகு சம்பவ இடத்திற்கு வந்த நலன்விரும்பிகளும் தொண்டர் நிறுவனங்களும் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அப்போதிருந்த மூதூர் பிரசைகள் குழுத்தலைவர் அமரர் மு.கனகசபையும் வேறு சிலரும் அவ்விடத்திற்கு விஜயம் செய்து படுகொலை செய்யப்பட்டவர்களின் உடல்களை மூதூர் அரசினர் வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காகக் கொண்டு சென்று மறுநாள் பெருவெளி சேமக்காலையில் அடக்கம் செய்தனர்.



முருகப்பபன் தங்கராஜா (பெருவெளி வட்டடவிதானையார்) இதுபற்றி கூறுகையில்,

“1986ஆம் ஆண்டு பெருவெளியில் அகதி முகாம் ஒன்று இருந்தது. இராணுவத்திற்குப் பயந்த மக்கள் அனைவரும் அங்கு தங்கியிருந்தார்கள். 15.07.1986 அன்றிரவு விடியற்காலை 3.00 மணியளவில் அந்த இடத்தை இரவோடு இரவாக வந்த இராணுவத்தினர் சுற்றிவளைத்தார்கள். விடிந்தவுடன் கண்ணிற்பட்ட அனைவரையும் சுட்டுக்கொன்று பல அட்டகாசங்களைச் செய்தனர். நன்கு விடிந்தவுடன் முகாம்களுக்குள் புகுந்து குடிசைகள் அனைத்திற்கும் நெருப்பு வைத்துவிட்டு அந்த வீடுகள் பத்தி எரிந்துகொண்டிருக்கும் பொழுது பொதுமக்களைப் பிடித்துச் சுட்ட பின்னர் காலிலும் தலையிலும் பிடித்து எரியும் நெருப்புக்கு மேல் தூக்கி வீசினர்.


உயிரோடு இருந்தவர்களைக் கூட எரியும் நெருப்பிற்குள் தூக்கிப்போட்டார்கள். இப்படியாகக் காணும் இடமெல்லாம் எரிந்துகொண்டிருந்தது. அந்த நேரம் வெடிச்சத்தத்திற்குப் பயந்து இரண்டு மூன்று குடும்பங்கள் சேர்ந்து சில வீடுகளிற் கூடியிருந்தார்கள். அப்படியிருந்தவர்களில் ஆண்களை எல்லாம் பிடித்து அங்கிருந்தோர்க்கு முன்னாலேயே வைத்து சுட்டும் வெட்டியும் கிணற்றுக்குள் போட்டார்கள். அப்படிச் சுடப்பட்டு இறந்தவர்களின் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட சடலங்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிக்கொண்டுபோய் முகங்களிற்கு அசிட் ஊற்றி யாரென அடையாளங் காண முடியாதளவிற்கு அவர்களுடைய முகாம்களுக்குக் கொண்டுபோய் வைத்திருந்துவிட்டு மூன்று நாட்களிற்குப் பின்னர் அச்சடலங்களை உறவினர்களுக்குக் கொடுத்திருந்தார்கள். அந்தவேளை இங்கு சுட்டுக் கொல்லப்பட்டவர்களது சடலங்களைக் கிணறுகள், மதகுகள் போன்ற இடங்களிளெல்லாம் ஆங்காங்கே இராணுவத்தினர் போடடிருந்தார்கள். எத்தனை மக்கள் இறந்தார்கள் என்பதுகூட சரிவரத் தெரியவில்லை. அந்தளவிற்கு காணுமிடமெல்லாம் சடலமாக இருந்தது.

இவற்றுள் வேறு ஊர்களிலிருந்து தொழிலிற்காக வந்தவர்களும் இறந்திருந்தர்கள். வழமையாக இராணுவத்தினர் வரும்போது வரும் திசையிலிருந்தே வெடிச்சத்தம் கேட்கும். அந்த நேரம் நாங்கள் எல்லோரும் ஓடிச்சென்று காடுகளுக்குள் ஒளிந்துகொள்வோம். ஆனால் அன்றைய தினம் வழமைக்கு மாறாக நடந்ததால்தான் பல மக்கள் அகப்பட்டுக்கொண்டார்கள். இராணுவத்தினர் சென்ற பின்னர் ஊருக்குள் சென்று பார்த்தபோது யார் யாரைச் சுட்டிருக்கிறார்கள், எந்தெந்தக் கிணற்றில் சடலம் இருந்தது எனத் தெரிந்தது. அகதி முகாமில் இருந்தவர்களைத் தான் நிறையக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். சுடப்பட்டவர்களைத் தவிர உயிருடன் பிடித்துச் சென்றவர்களை பின்னர் முழுமையாக மனிதர்கள் மாதிரி விடவில்லை. கைகளைக் கால்களை வெட்டி நடமாட முடியாதளவிற்கு கொடுமைப்படுத்தி விட்டிருந்தார்கள்.

அந்தநேரத்திலும் ஊருக்குள் நிற்கப் பயம். திரும்பவும் இராணுவம் வரலாம் என்ற அச்சம் இருந்தது. தனித் தனிக் கிடங்குகள் வெட்டி சடலங்களைப் போட முடியவில்லை. சடலங்கள் கூட பார்க்கமுடியாதளவு அழுகிய நிலையில் இருந்ததால் பெரிய கிடங்கு ஒன்று வெட்டி அத்தனை சடலங்களையும் ஒருமித்துப் போட்டு மூடினோம். இந்த நிலையிலும் கிராமத்தை விட்டு யாரும் வெளியேற முடியாத நிலையிருந்தது. இராணுவத்தினர் கண்டால் உடனே சுட்டுவிடுவார்கள் என்ற பயம் இருந்தது. நாங்கள் யாராவது வீட்டை விட்டு வெளிக்கிட்டால் திரும்ப வந்தால்தான் வந்திருக்கிறார்கள் என்று தெரியும். இல்லாதுபோனால் எந்த முகாமில் பிடித்து வைத்திருக்கிறார்கள், எங்காவது வைத்து சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்களா என்று எதுவும் தெரியாத நிலை
இருந்தது.

இந்த முகாமிற்கு நடந்த கொடுமையைப் போல் நான் எங்கும் பார்த்ததில்லை. இதை நேரடியாகப் பார்த்தவர்களிற் சிலர் பைத்தியமாகக் கூட இருக்கிறார்கள். நாற்பத்தெட்டுப் பேர் வரை கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை விட உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாக இருக்கிறார்கள்.

## 46. தண்டுவான் படுகொலை – 17 யூலை 1986




முல்லைத்தீவு-வவுனியா பிரதான வீதியில் நெடுங்கேணியிலிருந்து முல்லைத்தீவு நோக்கி ஏறத்தாழ நான்கு கி.மீ. தொலைவிலுள்ள் கிராமமே தண்டுவான் கிராமமாகும். இக்கிராம் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவில் அமைந்துள்ளது. தண்டுவான் கிராமத்தின் பிரதான வருமானம் விவசாயம் மூலமே பெறப்படுகிறது. இக்கிராமத்திலுள்ள மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நெடுங்கேணிக்கே செல்ல வேண்டியிருந்தது.

17.07.1986 ஆம் ஆண்டு வழமைபோல முல்லைத்தீவிலிருந்து நெடுங்கேணி நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் மக்கள் பல்வேறு பகுதிகளிலுமிருந்து பல்வேறு தேவைகளுக்காகச் சென்றுகொண்டிருந்தனர். அன்றையதினம் நெடுங்கேணிப் பிரதேசமானது சிறீலங்காவின் முன்னாள் இராணுவத் தளபதிகளில் ஒருவரான ஜெனரல் கொப்பேக்கடுவ தலைமையில் சுற்றிவளைக்கப்பட்டிருந்தது. அதற்கு சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தியும் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தது.அதேவேளை பேருந்தில் சென்ற தண்டுவான் மக்கள் தமது இடங்களில் இறங்கியபின் நெடுங்கேணிக்குப்போகமுடியாத நிலையில், ஓட்டுநர் பேருந்தைத் திருப்பி முல்லைத்தீவு நோக்கி ஓட்டிச் சென்றபோதுபேருந்தைப் பின்தொடர்ந்து சென்ற உலங்குவானூர்தி துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டதுடன், கிட்டத்தட்டதண்டுவான் பாடசாலையிலிருந்து முல்லைத்தீவு நோக்கி ஒரு கி.மீ. தூரத்தில் வைத்து பேருந்து மீது றொக்கற்தாக்குதலை மேற்கொண்டது. இத்தாக்குதலில் பேருந்து ஓட்டுநர் உட்பட பதினேழு பேர் உயிரிழந்தனர். பதின்மூன்று பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சேகு அப்துல்காதர் விவசாயம் 55
02. நாகமணி தட்சணாமூர்த்தி அரசஊழியர் 30
03. சுப்பிரமணியம் சபாரத்தினம் - 28
04. சிவலிங்கம் விவேகானந்தம் - 17
05. குமாரசாமி வேலாயுதம்பிள்ளை - 22
06. முத்துக்குமார் கணேஸ்வரி - 35


## 47. மூதூர்-மணற்சேனை படுகொலை - 18 யூலை 1986



திருமலை மூதூரில் 1986.07.18 அன்று அதிகாலை 3.00 மணியளவில் மணற்சேனை, பெருவெளி எனும் கிராமங்களை சுற்றிவளைத்த சிறீலங்கா இராணுவத்தினர் இங்கு நாற்பத்துநான்கு பொதுமக்களைக் கைதுசெய்து கொண்டுசென்று சுட்டுப்படுகொலை செய்தனர். இதில் அனைவரும் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் மேன்காமம், கங்குவெளி, மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களிலிருந்து இராணுவத்தின் அச்சுறுத்தல்,படுகொலைசம்பவம் அதிகரித்ததன் காரணமாக பாதுகாப்புத் தேடி அகதிகளாக வந்தவர்களாவர்.

## 48. அடம்பன் படுகொலை – 12 அக்டோபர் 1986

மன்னார் மாவட்டத்தில் மாந்தைமேற்குப் பிரதேசசெயலர் பிரிவில் அடம்பன் கிராமம் அமைந்துள்ளது. அது ஒரு விவசாயக் கிராமமாகும். கிராமத்தில் வசித்து வருகின்ற மக்கள் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக கிராமத்திற்கு அருகேயமைந்துள்ள தள்ளாடி இராணுவ முகாமினால் பல சொல்லொணாத் துன்பதுயரங்களை அனுபவித்து வருகின்றனர்.



12.10.1986 அன்று அதிகாலை 4.00மணிக்கு தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் மாளிகைத்திடல் கிராமத்தினூடாக வந்து அடம்பன் கிராமத்தைச் சுற்றிவளைத்தனர். பின்னர் அடம்பன் கிராமத்தில் வீடுகளில் உறங்கிக்கொண்டிருந்த மக்களைச் சுட்டுப் படுகொலை செய்ததுடன், அடம்பன் சந்தியிலுள்ள கடைகளையும் எரித்தனர். அதிகாலை 5.00மணிக்கு கிராமத்தினுள் நுழைந்த இராணுவத்தினர் மு.ப. 11.00மணிவரை அடம்பன் கிராமத்தில் தாக்குதலை நடாத்திவிட்டு இறந்தவர்களின் சடலங்களை வீதிகளிலும் வயல்களிலும் வீசிவிட்டு இராணுவ வாகனங்களில் தள்ளாடி இராணுவ முகாமிற்குச் சென்றனர்.

இச்சம்பவத்தில் இருபதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், பல வியாபார நிலையங்கள், கடைகள் என்பனவும் எரிக்கப்பட்டன. இச்சம்பவம் பற்றி கதிரன் சௌந்தரராஜன் கூறுகையில்,

*"1986ஆம் ஆண்டு தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வெளிக்கிட்டு வந்த இராணுவத்தினர் திருக்கேதீச்சரம் வந்து அதன்வழியாக மாளிகைத்திடல் வந்து அதனூடாக தாமரைக்குளம் வரை வந்து தியாகு மற்றும் கோபாலு என்ற குடும்பஸ்தர்கள் இருவரையும் சுட்டுக் கிணற்றுக்குள் போட்டனர். பின்னர் அங்கிருந்து அடம்பன் வந்த இராணுவத்தினர் அக்கிராமத்தைச் சேர்ந்த நோபோட் என்ற பத்தொன்பது வயதுடைய ஒருவரையும் சீலன் என்ற பதினாறு வயது இளைஞனையும் பகுமை என்பவரையும் சுட்டுக் கொன்றார்கள்.*

அந்தவேளை அடம்பன் கடை வீதிவழியால் வந்த இராணுவத்தினர் முத்துவேல் என்ற இளைஞனையும் அந்தோனிச்சாமி என்ற இளம் குடும்பஸ்தரையும் சிறி என்றழைக்கப்படும் யாழ்ப்பாணம் வாழ் நெல் வியாபாரியையும் பிடித்துச் சென்று நெடுங்கண்டல் கோயிலடியில் சுட்டுப் போட்டனர். அதன் பின்னர் அவ்வீதி வழியால் வந்த இராணுவத்தினர் 22 வயதுடைய மனோகரன் என்பவரையும் பத்தொன்பது வயது ஜெகதீஸ்வரன் என்பவரையும் மாந்தையைச் சேர்ந்த நெல்லுக்கடை உரிமையாளரான உதயன் என்பவரையும் உலக்கையால் அடித்து சாகாத நிலையில் அடம்பன் கடற்கரையிற் போட்டுச் சுட்டிருந்தார்கள். இவ்வாறு சுடப்பட்ட அனைவரினதும் கழுத்துகளில் நஞ்சைக் கட்டி உழவு இயந்திரத்தில் ஏற்றி உள்ளித்தாழ்வுப் பகுதியால் தள்ளாடி முகாமிற்கு ஏற்றிச் சென்றார்கள். பின்னர் சடலங்கள் அனைத்தும் அடையாளங்காண முடியாத நிலையில் இருந்ததால் யாரும் சடலங்களை கையேற்க முன்வராத நிலையில் இராணுவத்தினரே ரயர்களைப் போட்டு எரித்தார்கள்.

இந்தச் சம்பவத்தில் பதினாறு பேர் வரை இறந்திருந்தார்கள். இச்சம்பவத்தின்போது எந்தவித வயது வேறுபாடின்றி அறுபது வயது முதியவர்களிலிருந்து இருபது வயது இளைஞர்கள் வரை சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தள்ளாடியிலும், உயிலங்குளத்திலும் இராணுவ முகாம்கள் இருப்பதனால், இராணுவத்தினரின் தாக்குதல் நேரங்களில் வேறு பகுதிகளிற்குப் போகமுடியாத நிலை ஏற்படும். அப்படி வெளியேறினால் காயப்படவோ அல்லது இறக்கவோ நேரிடும். இதேபோன்று தான் ஆண்டான்குள மக்களுக்கும் பாதிப்புக்கள் இருக்கிறது. இந்தத் தள்ளாடி இராணுவ முகாமால் பாதிக்கப்படுவது பெரும்பாலும் தள்ளாடி முகாமிலிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்திலிருக்கிற நாங்களாகத்தான் இருக்கிறது. பெரும்பாலும் எறிகணைத் தாக்குதலையும் உலங்குவானூர்த்தித் தாக்குதலையும் இம்முகாம் இராணுவத்தினர் மேற்கொள்வார்கள்.''

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோரகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. யூலியன் ஜெயசீலன் கமம் 22
02. கிறிஸ்தோடு யோவான் கமம் 65
03. ஐயம்பிள்ளை நாகமுத்து முதியவர் 84
04. தங்கவேல் ராமன் வியாபாரம் -
05. மாமுண்டி செல்வராஸ் மாணவன் 14
06. அந்தோனி களஸ்பார் தச்சுவேலை 63
07. அந்தோனிப்பிள்ளை மெசியாஸ் கமம் 28
08. ஆரோக்கியம் சந்தான் கமம் 30
09. ரோசாய்ஸ் புலேந்திரன் கமம் 32
10. சபாபதிப்பிள்ளை தங்கம்மா முதியவர் 70
11. வஸ்தியான் சகாயநாதன்குரூஸ் வியாபாரம் -
12. வீரசிங்கம் மனோரஞ்சிதம் மாணவி 24

## 49. பெரியபண்டிவிரிச்சான் படுகொலை – 15 அக்டோபர் 1986

மன்னார் மாவட்டத்தில் மடுப் பிரதேசசெயலர் பிரிவில் பெரியபண்டிவிரிச்சான் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தைச் சேர்ந்த இராசநாயகம் என்பவர் வழமைபோல 1986.10.15 அன்று தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தார். பாடசாலை சென்று திரும்பிய அவரது இரு பெண் பிள்ளைகளும் மதிய உணவை முடித்துக் கொண்டு தோட்டத்தில் நின்ற தந்தைக்கு உணவு கொண்டு வந்தார்கள். தந்தையும் அயற் தோட்டத்தில் காவல்காக்கும்

எழுபத்திரண்டு வயதான ஜோசப் பிரான்சிஸ் உட்பட நான்கு பேரும் தோட்டக் குடிசையில் அமர்ந்திருந்தார்கள்.



இந்த வேளையில் பெரியபண்டிவிரிச்சான் காட்டுப்பகுதியால் வந்த சிறீலங்கா இராணுவத்தினர் தோட்டப்பகுதியை நோக்கிச் சுட்டார்கள். பின்னர் தோட்டக்குடிசைப் பகுதிக்கு வந்த இராணுவத்தினர் இராசநாயகத்தைப் பலமாகத் தாக்கினர். பின்னர் இராசநாயகத்தின் மகளான சிறுமியின் பெண்ணுடல், மார்பு என்பவற்றை வெட்டிச் சித்திரவதை செய்ததுடன், ஜோசப் பிரான்சிஸ் அவர்களையும் துண்டுதுண்டாக வெட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர். இதில் இராசநாயகமும் ஒரு பெண் பிள்ளையும் காயங்களுடன் தப்பிவிட்டனர்.

படுகோரமாக சித்திரவதை செய்யப்பட்ட இராசநாயகத்தின் மகள் மடு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார். ஜோசப் பிரான்சிஸ் அதே இடத்தில் உயிரிழந்தார். சிறுமியின் உடல் மடு சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது. ஜோசப் பிரான்சிஸின் உடல் சம்பவ இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசநாயகம் மரியஎனஸ்ரின் மாணவி 11
02. ஜோசப் பிரான்சிஸ் கூலி 72

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இராசநாயகம் -
02. இராசநாயகம் மரியராணி மாணவி

## 50. கொக்கட்டிச்சோலை படுகொலை – 28 ஜனவரி 1987



இலங்கையின் கிழக்குப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டம் அமைந்துள்ளது. இங்கு இயற்கைவளம் நிறைந்த பகுதியாக கொக்கட்டிச்சோலை அமைந்துள்ளது. அத்துடன் பெயர் பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. இங்குள்ள மக்களின் பிரதான தொழில் விவசாயம், மீன்பிடி அத்துடன், இறால் வளர்ப்பு என்பனவாகும்.

இக்கிராமத்தின் மீது 28.01.1987 இல் சிறீலங்கா இராணுவத்தால் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. கொண்டவெட்டுவான், களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, கல்லடி ஆகிய இடங்களிலிருந்து கவசவாகனங்களுடன் முன்னேறிய இராணுவத்திற்கு குண்டுவீச்சு விமானங்களும் உலங்குவானூர்திகளும் மேலதிக

உதவித்தாக்குதல்களை வழங்க கொக்கட்டிச்சோலை கிராமத்தினுள் நுழைந்த படையினர் அம்மக்களை மிகமோசமாகத் தாக்கிச் சித்திரவதை செய்ததுடன், படுகொலைகளையும் செய்தனர்.

இதில் குறிப்பாக அமெரிக்க நிதி உதவி, கண்காணிப்புடன் மகிழடித்தீவில் இறால் பண்ணை இயங்கி வந்தது. இங்கு பெருமளவு ஏழைமக்கள் வேலை செய்து வந்தனர். அங்கு வேலை செய்த நூற்றுமுப்பத்தைந்து பொதுமக்களை வெட்டியும் சுட்டும் படுகொலை செய்து இறால் பண்ணைக்குள்ளேயே போட்டதால் இறால் பண்ணை மனித உடல்களை கொண்ட இரத்தப்பண்ணைகளாக காட்சியழித்தது. அத்துடன் கொக்கட்டிச்சோலை அரிசியாலையில் தஞ்சமடைந்திருந்த இருபத்துநான்கு பேரும் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டனர். இதில் 12 வயது நிரம்பிய 7 சிறுவர்களும் உள்ளடங்குவார்கள். இதில் குறிப்பாக பன்னிரண்டு வயது தொடக்கம் நாற்பது வயதிற்குட்பட்ட இருநூறிற்கு மேற்பட்டவர்கள் சித்திரவதைகளின் பின் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் பலர் காயப்படுத்தப்பட்டனர்.

மேலும் அம்பிலாந்துறை என்ற கிராமத்தில் நாற்பத்தைந்து பொதுமக்களை கொன்ற இராணுவத்தினர் அவர்களினுடல்களை தீயிட்டுக் கொடுத்திய சம்பவம் உட்பட பல தொடர் படுகொலைச் சம்பவங்கள் 1987 ஜனவரி 28, 29, 30 ஆகிய மூன்று நாட்களிற்குள்ளும் கொக்கட்டிச்சோலையிலும் அதனயல்கிராமங்களிலும் நடந்தேறியது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம்

01. இ.உதயகுமார்
02. இ.கமலாதேவி
03. இ.கணேசமூர்த்தி
04. இ.தங்கம்மா
05. இ.தங்கவேல்
06. இ.மேகலிங்கம்
07. இ.வேலாப்பொடி
08. இ.சிவபாதம்
09. இராசரெத்தினம் தம்பிராசா
10. டி.ராஜினி
11. ந.இன்பராசா
12. ந.குழந்தைவேல்
13. ந.யோகேஸ்வரி
14. ந.கோபாலப்பிள்ளை
15. ந.சுப்பிரமணியம்
16. ந.சுவாஜினி
17. நா.விநோதகுமாரி
18. கு.ரூபவதனி
19. க.யுகாமினி
20. க.உலகநாதன்
21. க.நாகராசா
22. கு.நிசாந்தன்
23. கு.நருமலாதேவி
24. க.நல்லம்மா
25. க.கந்தையா
26. அ.சத்தியானந்தம்

40 த.இளங்கோ
41 த.இராசேந்திரன்
42 த.கனகசிங்கம்
43 த.முருகேசு
44 த.சந்திரசேகரம்
45 த.சசிகரன்
46 மு.நடேசன்
47 ம.பாலசுப்பிரமணியம்
48 மு.சத்தியசீலன்
49 ம.சிதம்பரநாதன்
50 மு.வசந்தராசா
51 மா.நல்லரத்தினம்
52 மா.கணபதிப்பிள்ளை
53 மா.பரஞ்சோதி
54 மா.மகேஸ்வரி
55 மா.ஜெயந்திமலர்
56 மா.செல்லத்தம்பி
57 அ.குணமணி
58 அ.பாக்கியராசா
59 அ.பிரேமசசிகலா
60 அ.பிரேமலதா
61 அ.தர்சனா
62 அ.கோமணதாஸ்
63 அ.ரேவதி
64 அ.சந்திரப்பிள்ளை


27. க.கந்தப்பெருமாள்
28. க.கஜேந்திரன்
29. க.கிருஸ்ணபிள்ளை
30. க.பாலச்சந்திரன்
31. க.புவனேஸ்வரி
32. க.பரமேஸ்வரி
33. க.மலர்விழி
34. க.கோபாலப்பிள்ளை
35. க.தெய்வநாயகம்
36. க.சோமசுந்தரம்
37. க.சௌந்தரராசா
38. க.சௌந்தரராஜன்
39. க.ஞானமுத்து
40. கு.சந்திரசேகரம்
41. கு.சுகந்தன்
42. க.சுப்பிரமணியம்
43. கு.சாந்தலிங்கம்
44. கு.சுதாகரன்
45. க.சுவேஜினி
46. க.சின்னத்தம்பி
47. கு.சிவமணி
48. கு.விகாந்தன்
49. க.ரவீந்திரன்
50. கதிர்காமத்தம்பி தயானந்தம்
51. கி.கந்தசாமி
52. கி.கந்தவனம்
53. கி.குமாரதாசன்
54. கி.பாலிப்பொடி
55. கி.பாலசுந்தரம்
56. கி.பவான்
57. கி.பொன்னுத்துரை
58. கி.ரோமிகரன்
59. கி.சின்னமுத்து
60. கி.சிவஞானசிவம்
61. ப.கங்கா
62. பு.வேணுகரன்
63. ப.சண்முகம்
64. ப.சண்முகராசா
65. பா.நடராசா
66. பா.அம்பிகைபாலன்
67. பா.சுதாகரன்

66 யோ.சீதேவிப்பிள்ளை
67 கே.நடராசா
68 கே.அமிர்தலிங்கம்
69 கே.சௌந்தரராசா
70 கோ.நாராயணப்பிள்ளை
71 கோ.அமிர்தராசா
72 செ.பவானி
73 சோ.இளந்திரையன்
74 சோ.கபிலன்
75 சோ.மாணிக்கப்பொடி
76 சோ.விஜயலிங்கம்
77 வே.இராசையா
78 வே.நல்லதம்பி
79 வே.அரியநாயகம்
107 வே.விசுமாப்பொடி
108 வே.வள்ளியம்மை
109 வேலாச்சி இராசையா
110 ஞ.நடேசம்
111 ஞா.குருகுலசிங்கம்
112 சு.இராஜேஸ்வரி
113 சு.குணதுங்கா
114 ச.தியாகராசா
115 ச.மகேஸ்வரன்
116 ச.சந்தோசம்
117 ச.சுதாகரன்
118 சு.சிவனேசராசா
119 சு.ஏகாம்பரம்
120 சி.புவனேஸ்வரி
121 சீ.புவனேசசிங்கம்
122 சி.தில்லைநாயகம்
123 சி.மயில்வாகனம்
124 சி.மயிலுப்பொடி
125 சி.மகேந்திரமூர்த்தி
126 சி.யோகநாதன்
127 சி.வேலாப்பொடி
128 சி.லவன்
129 வ.ஜீவரத்தினம்
130 வ.குழந்தைவேல்
131 வ.முத்துத்தம்பி
132 வ.யோகேஸ்வரன்
133 வ.விஜயசிங்கம்

## 51. பட்டித்திடல் படுகொலை – 26 ஏப்பிரல் 1987

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூரிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையில் பத்து கி.மீ. தொலைவில் பட்டித்திடல் கிராமம் அமைந்துள்ளது.

மல்லிகைத்தீவு கிராமசபை எல்லைக்குள் அமைந்துள்ள இப்பூர்வீக கிராமத்தில் விவசாயம் செய்பவர்களும் கூலிவேலை செய்பவர்களும் அதிகமாக வாழ்கின்றார்கள். 1987ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சிறீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்கள் ஆங்காங்கே இடம் பெற்றவண்ணம் இருந்தன. பட்டித்திடற் கிராமமும் 26.04.1987 அன்று இராணுவத் தாக்குதலுக்குள்ளாகியது.




பட்டித்திடல் கிராமத்திலிருந்து நெடுஞ்சாலையின் மேற்கே மல்லிகைத்தீவு சந்தியும் வாசிகசாலையும் உள்ளன. அப்பகுதியில் மோதல் சம்பவங்கள் நடந்தது. அதனை அறிந்த மக்கள் தாங்கள் இராணுவத்தால் தாக்கப்படுவோம் என்ற அச்சம் காரணமாக ஊரைவிட்டு அகன்றுவிட்டனர். பழிதீர்க்கும் எண்ணத்தில் கிராமத்திற்குள் வந்த இராணுவத்தினர் மக்களை தேடி வந்த போது கிறிஸ்தவக் குடும்பமான பொன்னம்மா குடும்பத்தை சேர்ந்த பதினெட்டுப் பேர் தாங்கள் கிறீத்தவர்கள் என்பதால் தங்களுக்கொன்றும் நடக்காது என்ற நம்பிக்கையில் இறைவழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

வீடுவீடாகத் தேடிக்கொண்டு வந்த இராணுவத்தினர் இறைவழிபாடடில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் குற்றுயிரோடு இருந்தவர்களை வெட்டிவிட்டு அனைவரையும், குறிப்பாக குறை உயிரோடு இருந்தவர்களையும், வீட்டினுள் வைத்துத் தீயிட்டு படுகொலை செய்தனர். மொத்தம் ஒரே குடும்பத்தில் பதினேழு பேர் உயிரிழந்தனர். அதில் மூன்று கைக்குழந்தைகளும் பாடசாலை மாணவ, மாணவிகளும் அடங்குவர். தாக்குதல் நடந்த வீட்டிலிருந்து கோணன் உலகநாதன் என்பவர் மட்டுமே உயிர் தப்பினார்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. உலகநாதன் ஜெயப்பிரியா - 06
02. உலகநாதன் ஜெயரதி குழந்தை 01
03. உலகநாதன் யோகேஸ்வரி வீ.பணி 26
04. கோணன் பத்தினியன் தொழிலாளி 42
05. பத்தினியன் சீதையம்மா வீ.பணி 34
06. பத்தினியன் நேசன் மாணவன் 17
07. பத்தினியன் பிரகாஸ் மாணவன் 13
08. பத்தினியன் சோபனா மாணவி 12
09. பத்தினியன் கிருசாந்தி மாணவி 10
10. பத்தினியன் அற்புதராசா மாணவன் 08
11. கோணன் பொன்னம்மா வீ.பணி 60
12. கோணன் மேரி - 23
13. சின்னத்துரை யோகேஸ்வரி - 29
14. சிந்தாமணி பாலமுருகன் மாணவன் 11
15. சிந்தாமணி யோகராசா மாணவன் 14
16. சிந்தாமணி கோகுலேஸ்வரி மாணவி 15
17. சிந்தாமணி செந்தில்மணி கமம் 30

## 52. தோணிதட்டாமடு படுகொலை – 27 மே 1987



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தோணிதட்டாமடு என்னும் கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தின் எல்லைக் கிராமங்களாகச் சிங்களக்கிராமங்கள் அமைந்துள்ளது. இயற்கை வளம் மிகுந்த இக்கிராம மக்கள் தமக்கான தனித்துவமான கலை, கலாச்சார, முறைகளையும் பாதுகாத்து சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள். குறிப்பாக அயல் சிங்கள கிராமத்திலேயே தமது அத்தியாவசிய தேவைப்பொருட்களைக் கொள்வனவு செய்து வந்தார்கள்.

25.05.1987 அங்கு வந்த சிறீலங்கா இராணுவத்தினர் தோணிதட்டாமடு மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் அச்சமடைந்த மக்கள் வீடுகளிற்குள் பதுங்கிக்கொண்டனர்.

பின்னர் 27.05.1987 அன்று இரவு இரண்டு மணியளவில் இக்கிராமத்தை சுற்றிவளைத்து உள் நுழைந்த இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று சுட்டும் வெட்டியும் மக்களைப் படுகொலை செய்தனர். இச்சம்பவத்தில் பதின்மூன்று பேர் படுகொலை செய்யப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர்.

## 53. அல்வாய்வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் செல்வீச்சு – 29 மே 1987



யாழ் மாவட்டத்தில் கரவெட்டிப் பிரதேசத்தில் அல்வாய்க் கிராமம் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ள வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் இருநூற்றைம்பது ஆண்டுகள் பழமை வாய்ந்தது. விவசாயக்குடும்பத்தை சேர்ந்த வள்ளிநாச்சியார் என்பவர் இந்தியாவிலிருந்து தருவித்த கருங்கற்சிலையைத் தனக்குச் சொந்தமான வேவிலந்தை என்ற காணியில் வைத்து வழிபட்டு வந்தார். ஆரம்பகாலத்தில் அச்சிலையை வழிபட்டு வந்த மக்கள் காலப்போக்கில் பெரிய ஆலயமாகக் கட்டினார்கள். வீதியின் முன்பாக பெருவிருட்ச மரங்கள் காணப்படுவதோடு, வடமராட்சிப் பகுதியில் இந்துக்களின் பிரசித்தமான ஆலயங்களில் இதுவும் ஒன்றாகவுள்ளது.

1987 மே இருபத்தாறாம் நாள் சிறீலங்கா இராணுவத்தினர் வடமராட்சிப் பகுதிமீது கூட்டுப்படைத் தளபதி சிறில் ரணதுங்க மற்றும் இராணுவ அதிகாரிகளான லலித் கொத்தலாவல, கொப்பேகடுவ போன்றோர் தலைமையில் ஒப்பிரேசன் லிபரேசன் என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். பலாலி இராணுவத் தளத்திலிருந்து எறிகணை வீச்சு, கடற்தாக்குதல், ஆகாயதாக்குதல் என மும்முனைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை உலங்குவானூர்தி மூலம் துண்டுப்பிரசுரங்களைப்போட்டதுடன்,

பலாலியிலிருந்து ஒலிபரப்புச் செய்யப்பட்ட வானொலிச் சேவை மூலமும் மக்களைப் பாதுகாப்பாக ஆலயங்களில் இருக்கும்படி இராணுவத்தினர் அறிவித்தார்கள்.

29.05.1987 அன்று இராணுவத்தின் இந்த அறிவிப்புகளைச் செவிமடுத்த மக்கள் அச்சமடைந்து, கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு முத்துமாரியம்மன் கோயிலில் பாதுகாப்புக்காகத் தஞ்சமடைந்தனர். இதில் அல்வாய்க் கிராமத்தை சேர்ந்தவர்கள் மட்டுமன்றி இன்பருட்டி, திக்கம், வதிரி, நெல்லியடி, தம்பசிட்டி, புலோலி, கரவெட்டி ஆகிய இடங்களிலிருந்தும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இவ் அம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர். ஆலயம் பெரிய ஆலயமாகவும், விசாலாமான வீதிகள், பெரிய மரநிழல்கள் கொண்டிருந்தமையாலும் அத்தனை மக்களும் அங்கு தங்கக் கூடியதாக இருந்தது.

29.05.1987 அன்றையதினம் மாலை 7மணிக்கு அம்மன் கோயில் உள்மண்டபம் மக்களால் நிறைந்திருந்தது. இரவு 9.00மணியளவில் வெளிவீதி எங்கும் ஒரே மக்கள் கூட்டம். இரவு 11.00மணியளவில் இராணுவத்தினரால் வீசப்பட்ட எறிகணை ஆலயத்தின் முன்னுள்ள வேப்பமரத்தில் வீழ்ந்து வெடித்தது. இதில் சிலருக்குக் காயம் ஏற்பட்டது. அடுத்த எறிகணை உள்மண்டபத்தில் கொடிக்கம்பத்தின் அருகில் வீழ்ந்து வெடித்ததில் அங்கிருந்த பெண்கள், குழந்தைகள் உட்பட பலர் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து வந்த எறிகணை வசந்த மண்டபத்தில் வீழ்ந்ததினால் அவ்விடத்திலிருந்த இளைஞர்கள் உயிரிழந்தார்கள். இவ்வாறு மூன்று எறிகணைகள் ஆலயத்தில் வீழ்ந்து வெடித்ததால், ஆலயத்தில் ஒரே அவலக்குரல் எழுந்தது.

அச்சமடைந்ததால் பாதுகாப்பைத் தேடிய மக்கள் நான்கு திசைகளிலும் சிதறி ஓடினார்கள். ஆலயம் இரத்த வெள்ளமானது. இதில் யார் யார் உயிரிழந்தார்கள் என்று அடையாளம் காண முடியாதளவிற்கு உடல்கள் சிதைந்திருந்தன. இராணுவத்தின் அறிவுறுத்தலின்படி பாதுகாப்பைத் தேடி ஆலயத்தில் தஞ்சமடைந்த பொதுமக்களில் நாற்பது பேர்வரை எறிகணை வீச்சில் உயிரிழந்தார்கள். இருபத்திரண்டு பேர் வரை காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இரத்தினம் மாணிக்கம் வீட்டுப்பணி 65
02. நாகமுத்து சோதிலிங்கம் கடற்றொழில் 63
03. நற்குணம் சந்திரசேகரம் மாணவன் 08
04. க.சட்டநாதன் கமம் 54
05. கந்தர் மார்க்கண்டு தொழிலாளி 67
06. கதிர்காமு கிட்ணபிள்ளை வியாபாரம் 61
07. கதிர்காமத்தம்பி யோகானந்தன் மாணவன் 12
08. கதிர்காமத்தம்பி செல்வானந்தன் மாணவன் 14
09. கதிரித்தம்பி வள்ளிப்பிள்ளை இல்லை 77
10. குமாரன் நல்லதம்பி தொழிலாளி 60
11. கணேஸ் அம்பிகாபதி இல்லை 48
12. கணேசபதி சதாகரன் கமம் 16
13. கணபதிப்பிள்ளை சின்னத்துரை கமம் 60
14. கணபதிப்பிள்ளை சிவகாமி இல்லை 69
15. பிறேமானந்தராசா தொழிலாளி 27
16. பஞ்சாட்சரம் தர்மகுலராசா கமம் 28
17. துரைசிங்கம் கலாவதி இல்லை 26
18. தம்பிஜயா றமணன் மாணவன் 18
19. தங்கமயில் சுஜாதா மாணவி 16

20. தவராசசிங்கம் கமலேஸ்வரி இல்லை 38
21. தவராசசிங்கம் அனுபாமா மாணவி 06
22. தணிகாசலம் தர்மேந்திரம் மாணவன் 08
23. மார்க்கண்டு நகுலேஸ்வரன் தொழிலாளி 34
24. மார்க்கண்டு செல்லம்மா கைப்பணி 58
25. மாசிலாமணி சுதன் குழந்தை 01
26. மாணிக்கம் உசாராணி குழந்தை 03
27. மாணிக்கம் நாகேந்திரராஜா மாணவன் 13
28. மாணிக்கம் மல்லிகாதேவி வீட்டுப்பணி 41
29. யோகராசா ரதி இல்லை 2.5
30. செல்லையா நாகம்மா வீட்டுப்பணி 50
31. சி.மாணிக்கம் தொழிலாளி 57


32. சிவண்டி இராமநாதன் வைத்திய ஊழியர் 22
33. சிவலிங்கம் அன்னம்மா வீட்டுப்பணி 65
34. சண்முகம் பூலோகநாதன் மாணவன் 16
35. வ.மாரிமுத்து தொழிலாளி 54
36. விசுவலிங்கம் இராசகோபால் விவசாயம் 30
37. ரவீந்திரன் செல்லமணி வீட்டுப்பணி 30

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இ.குணசேகரன் மாணவன் 12
02. நகுலன் மாணவன் 06
03. கு.இராசலிங்கம் கடற்றொழில் 51
04. க.குணரட்னம் வீ.பணி 32
05. கந்தையா கலைமதி மாணவி 06
06. குலநாயகம் விஜயசோதி வீட்டுப்பணி 35
07. தம்பிஐயா புவனேஸ்வரி வீட்டுப்பணி 46
08. ம.வேல்மணி தொழிலாளி 32
09. மாணிக்கம் யோகராணி வீட்டு வேலை 17
10. மாணிக்கம் சுவேந்திரராஜா மாணவன் 05
11. ஆழ்வாப்பிள்ளை இராஜமலர் மாணவி 09

12. ஆழ்வாப்பிள்ளை சரச்சந்திரன் மாணவன் 13
13. ஜெனார்த்தனன் மாணவன் 07
14. வே.இந்திராணி வீ.பணி 30
15. வேலுப்பிள்ளை தம்பிஐயா குருதி பரிசோதகர் 46
16. சு.கந்தசாமி தபாலதிபர் 54
17.ச.கண்ணதாசன் மாணவன் 08
18. சு.செல்வதி வீ.பணி 24
19. சு.செல்வராசா மாணவன் 06
20. ச.சண்முகதாசன் மாணவன் 10
21. சி.வசந்தாதேவி வீ.பணி 38
22. விக்கினேஸ்வரன் இந்திராணி வீட்டுவேலை 21

## 54. கிழக்குப் பல்கலைக்கழகம் படுகொலை 23 மே 1990



கிழக்குப் பல்கலைக்கழகம் வந்தாறுமூலைக் கிராமத்தில் அமைந்துள்ளது. இலங்கைத்தீவில் அமைந்துள்ள 13 பல்கலைக்கழகங்களில் இதுவும் ஒன்று. ஆண்டு தோறும் இதில் 3000வரையான மாணவர்கள் படிக்கின்றார்கள்.

1990இல், சிறீலங்கா இராணுவத்தின் தொடர்ச்சியான தாக்குதல்களால் மட்டக்களப்பின் பல பகுதிகளிலிருந்து பொதுமக்கள் இப்பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்திருந்தனர்.

23.05.1990அன்று சத்துருக்கொண்டான் இராணுவ முகாமிலிருந்து பெரும் தொகையான இராணுவத்தினர் பல்கலைக்கழகத்திற்கு வந்தனர். இங்கே 58 இளம் ஆண்களை கைது செய்து அவர்களின் கைகளையும் கால்களையும் கட்டி அடுத்த கிராமத்திற்கு கூட்டிச் சென்றனர். அங்கே இவர்கள் எல்லோரும் கொலை செய்யப்பட்டனர். மீண்டும் 24.05.1990அன்று இராணுவம் அங்கே வந்தது. மேலும் 168 பொதுமக்கள் கைது செய்து கூட்டிச்செல்லப் பட்டனர். இவர்களும் கொலை செய்யப்பட்டனர்.

மொத்தமாக இந்நாட்களில் 226 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டனர்.

## 55. சம்மாந்துறைப் படுகொலை - 10 யூன் 1990



அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறைப் பிரதேசசெயலர் பிரிவில் சம்மாந்துறைக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமம் வயல்களைக் கொண்ட விவசாயக் கிராமம் ஆகும். இப்பிரதேசத்தில் கண்ணகி அம்மன் கோயில் காளிகோயில் போன்ற பல ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்துக்களின் வழிபாட்டுத் தலங்கள் அமைந்துள்ளன.

1990.06.10 இல் முசுலிம் குழுக்கள் இராணுவத்தினருடன் இணைந்து பொதுமக்கள் மீது இங்கு தாக்குதல் நடத்தினார்கள். இவர்களின் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக ஓடிய பொதுமக்கள் மீது இராணுவத்தினர் சுட்டதில் பலர் உயிரிழந்தனர். அன்று இராணுவத்தினரும் முசுலிம் குழுக்களும் நடாத்திய தாக்குதலில் முப்பத்தேழு பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசரட்ணம் இராமச்சந்திரன் கூலி 19
02. க.வடிவேல் - -

03. த.தாசன் - -
04. தம்பிராசா உருத்திரன் மாணவன் 16
05. மா.கணபதிப்பிள்ளை - -
06. சு.கணேசன் - -
07. சின்னத்தம்பி மார்க்கண்டு - -

## 56. வீரமுனை படுகொலைகள் - 20 யூன் 1990

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவிற்கு மேற்காக நாற்பத்தைந்து கி.மீ தூரத்தில் வீரமுனைக் கிராமம் அமைந்துள்ளது. வீரமுனைக் கிராமத்திற்கு வடக்கே சொறிக்கல் முனையும் தெற்கு மற்றும் மேற்குப் பக்கங்களில் செழிப்பான வயல் நிலங்களும் அமைந்துள்ளன. வீரமுனை தமிழ்மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாகும். சம்மாந்துறைப் பிரதேசம் போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையின் தென் கடற்கரையோரங்களிலிருந்து போர்த்துக்கேயரால் விரட்டப்பட்ட முசுலிம்கள் இடம்பெயர்ந்து குடியேறி வாழும் பிரதேசமாகும். இவ்விரண்டு பிரதேசங்களையும் இணைத்து சம்மாந்துறை நகரசபை அமைந்துள்ளது.



1954ஆம் ஆண்டு தனிநபர்களுக்கிடையே நடைபெற்ற தகராற்றினால் சம்மாந்துறை முசுலிம்கள் ஒரு சிலரால் வீரமுனைப் பிரதேசம் தீயிட்டு எரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வீரமுனை மக்கள் இடம் பெயர்ந்து காடுகளில் கணபதிபுரம், வீரச்சோலை போன்ற புதிய கிராமங்களை உருவாக்கினார்கள்.

1990 யூன் மாதம் மூன்றாம் வாரத்தில் இராணுவத்தினரால் வீரமுனைப் பிரதேசம் சுற்றி வளைக்கப்பட்டது. சுற்றி வளைத்த இராணுவத்தினர் ஒவ்வொரு வீடாகச் சென்று மக்களை அருகிலுள்ள வீரமுனைப் பிள்ளையார் ஆலயத்திற்குச் செல்லுமாறு பணித்தனர்.ஆலயத்திற்குச் செல்லாது வீடுகளிலிருந்தவர்களை இராணுவத்தினர் சுட்டுப் பின்னர் வீட்டுடன் சேர்த்து எரித்தார்கள் வீதிகளில் நடமாடிய பலரும் இராணுவதத்தினரால் சுடப்பட்டார்கள். 1990.06.20 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு கனரக வாகனங்களில் வீரமுனைப் பிள்ளையார் கோயிலுக்கு வந்து இறங்கிய இராணுவத்தினா வீரமுனைப் பிரதேசத்தில் பல பிரதேசத்திலுமிருந்து தஞ்சமடைந்திருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களைச் சுற்றிவளைத்து பதினைந்து வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரையும் கோயிலின் பின் வீதியில் ஒன்று சேருமாறு பணித்தார்கள். இவர்களில் அறுபத்தொன்பது இளைஞர்களை உறவினர்களின் முன்னிலையிற் கைதுசெய்து அழைத்துச்சென்றனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் சம்மாந்துறையிலுள்ள மார்ஜன் பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இவர்களில் ஐம்பது பேர்வரை இராணுவத்தினரால் சம்மாந்துறையிலுள்ள மலைக்காட்டுக்குள் உயிருடன் எரிக்கப்பட்டனர். மிகுதிப் பேர் விடுதலை செய்யப்பட்டார்கள்.

1990.06.29ஆம் திகதி மீண்டும் மக்கள் தங்கியிருந்த கோயிலுக்கு வந்த இராணுவத்தினர் அங்கிருந்தவர்களில் பலரைக் கைது செய்து இராணுவ முகாமிற்கு அழைத்து சென்றார்கள்.

இவர்களில் எவருமே திரும்பி வரவில்லை.வீரமுனைப் பிள்ளையார் கோயிலில் தஞ்சமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இராணுவ அச்சுறுத்தலிலிருந்து தப்புவதற்காக இடம் பெயர்ந்து காரைதீவு மகாவித்தியாலயத்திற் தஞ்சமடைந்தார்கள். 1990.07.03 அன்று காரைதீவு மகாவிதத்தியாலயத்தை சுற்றி வளைதத் இராணுவதத்தினர் பாடசாலையிற் தங்கியிருந்தவர்களில்பதினொரு இளைஞர்களைக் கைதுசெய்து இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்றார்கள். இவர்களிலும் எவருமே திரும்பி வரவில்லை.

1990.07.05 மீண்டும் பாடசாலைக்கு வந்த அதிரடிப்படையினர் அங்கிருந்த இளைஞர்கள் பதின்மூன்று பேரைக்கைது செய்து இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்றார்கள். காரைதீவு மகா வித்தியாலயத்தில் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் சித்திரவதைகளின் பின்னர் உயிருடன் ரயர் போட்டுஎரிக்கப்பட்டார்கள்.

கைது செய்யப்பட்டவர்களைத் தேடிச்சென்ற உறவினர்களும் இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு உள்ளானார்கள். இதனைத் தொடர்ந்து மக்கள் மீண்டும் வீரமுனைக்கு அருகிலுள்ள அகதிமுகாமிற்குத்திரும்பினார்கள். 1990.07.10 அன்றும் வீரமுனை அகதிமுகாமைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் பதினைந்துஇளைஞர்களைக் கைதுசெய்து, இராணுவ முகாமிற்கு அழைத்துச்சென்று கடுமையான சித்திரவதைகளின் பின்னர்.அவர்களையும் உயிருடன் எரித்தார்கள்.

1990.07.16 அன்று வீரமுனை அகதி முகாமிலிருந்து தமது வீடுகளைப் பார்க்கச்சென்ற பெண்களில் எட்டு இளம்பெண்கள் மல்வத்தையிலிருந்த இராணுவ சோதனைநிலையத்தில் இராணுவத்தினராற் கைது செய்யப்பட்டுமுப்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரால் பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டார்கள். இவர்களும்இராணுவத்தினரால் பின்னர் எரிக்கப்பட்டனர்.

1990.07.26 இல் மீண்டும் வீரமுனை அகதிமுகாமைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் முப்பத்திரண்டுஇளைஞர்களைக் கைது செய்தார்கள். இவர்களில் இருபத்துமூன்று பேர் பாடசாலை மாணவர்கள். இவர்களில் எவருமே திரும்பி வரவில்லை. 1990.07.29ல் வீரமுனைப் பிரதேசத்தில் தமது குடும்பத்தினருடன் பயணம்செய்துகொண்டிருந்த எட்டுப் பாடசாலை ஆசிரியர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்கள் இவர்களில்எவரும் திரும்பிவரவில்லை.

1990.08.01 ஆம் திகதி வீரமுனையிலுள்ள சவளக்கடை வீதி வழியாக நாவிதன் வெளிக்குச் சென்ற பதினெட்டுபொதுமக்கள் இராணுவம், காவற்றுறை மற்றும் ஊர்காவற்படையினராற் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில்ஒரு குழந்தையும் நான்கு பெண்களும் அடங்குவர். இவர்கள் அனைவரும் வாள், கத்தி போன்ற கூரியஆயுதங்களால் துண்டுகளாக வெட்டப்பட்டு சவளக்கடை கோயிலுக்குள் போட்டு எரிக்கப்பட்டார்கள்.

1990.08.12 ஆம் திகதி வீரமுனை அகதிமுகாமிற்குக் கூரிய ஆயுதங்கள் துப்பாக்கிகளுடன் வந்த முசுலிம் குழுமுகாமிலிருந்தவர்களை வெட்டியும் சுட்டும் தாக்கினார்கள். இவர்களின் தாக்குதலில் பத்துப் பேர்உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தார்கள். உயிரிழந்தவர்களில் கோயில் அறங்காவலர் தம்பிமுத்துசின்னத்துரை, இரண்டு குழந்தைகள், மூன்று பெண்கள் உள்ளடங்குவார்கள்.

1990.08.12 இல் முசுலிம்களின் தாக்குதலில் காயப்பட்டவர்கள் முதலில் சம்மாந்துறை வைத்தியசாலைக்குஎடுத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. பின்னர் அம்பாறை வைத்தியசாலைக்குஎடுத்து செல்லப்பட்டார்கள். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஏழு பேரில் மூன்று பேர் இராணுவத்தினராற்கடத்திச் செல்லப்பட்டார்கள்.

மிகுதி நான்கு பேர் வீரமுனைக்குத் தப்பி வந்தார்கள்.வீரமுனையில் அறுநூறு வீடுகளும் வீரமுனைக்கு அருகிலுள்ள கிராமங்களான மல்வத்தை, மல்லிகைத்தீவு,நிபூரவுண், கணபதிபுரம், வலாத்தபிட்டி, சம்மாந்துறை ஆகிய கிராமங்களில் ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்திரண்டுவீடுகளும் எரிக்கப்பட்டன.

1990.06.20 தொடக்கம் 1990.08.15 வரை வீரமுனை, காரைதீவு மற்றும் அயற்கிராமங்களிலுமாக இருநூறிற்கும்மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள் அல்லது காணாமற்போனார்கள். இரண்டாயிரம் வீடுகள் வரைஇராணுவத்தினரால் எரிக்கப்பட்டன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 இளையதம்பி கணபதிப்பிள்ளை - -
02 இளையதம்பி செல்லம்மா - -
03 இளையதம்பி சின்னப்பிள்ளை - -
04 இராசையா பரமேஸ்வரி - -
05 இராசையா சுபாசினி மாணவி 16
06 இராமநாதன் வாணிதாசன் - -
07 இராமக்குட்டி பொன்னம்மா - 65
08 இராசலிங்கம் அழகையா - -
09 இருளாண்டி அமிர்தலிங்கம் மாணவன் 20
10 யு.நடராஜா - 5
11 நாகலிங்கம் தியாகராசா மேசன் 31
12 நாகலிங்கம் தவராசா - -
13 நாகலிங்கம் மாரிமுத்து - -
14 நமசிவாயம் தேவராசா - -
15 நடராஜா உதயகுமார் - 7
16 நடராசா இளங்கோ - -
17 நடராசா கிருபைராசா தொழிலாளி 39
18 நல்லதம்பி தவராசா - -
19 நல்லதம்பி கோபால் - -
20 நல்லதம்பி வடிவேல் - -
21 நல்லதம்பி விக்னேஸ்வரன் - -
22 க.கறுவல்தம்பி - -
23 க.மாரிமுத்து - -
24 க.அழகையா - -
25 கனகரெட்ணம் யோகராசா - -
26 கனகசபாபதி இளங்கோ - -
27 கந்தையா நவரட்ணம் - -
28 கந்தையா கணேசமூர்த்தி - -
29 கந்தையா கணபதிப்பிள்ளை. - -
30 கந்தையா திசாநாயக்க - -
31 கந்தையா தருமலிங்கம் - -
32 கந்தக்குட்டி பாக்கியராசா. - -
33 கந்தக்குட்டி தருமலிங்கம் - -
34 கந்தசாமி விஜயகுமார் - -
35 கந்தவனம் கந்தசாமி - -
36 கந்தவனம் குமார் - -
37 கந்தவனம் ஆறுமுகம் - -

38 கந்தவனம் சோமசுந்தரம் - -
39 காத்தமுத்து நாகேந்திரன் - -
40 காத்தமுத்து சண்முகநாதன் கமம் 40
41 காளிக்குட்டி உலகநாதன் - -
42 கதிர்காமத்தம்பி கருணாகரன் - -
43 கதிரேசப்பிள்ளை சந்திரசேகர் - -
44 கதிராமத்தம்பி இராசையா - -
45 கதிரவேலு இராசலிங்கம் கமம் -
46 கதிரவேல் இராஜேந்திரன் - -
47 கதிரவேல் ராதிகாகிருஸ்னன் - -
48 குமாரன் சின்னத்தம்பி - -
49 குலேந்திரன் அஜந்தன் - 3
50 கிருஸ்ணபிள்ளை கனகசூரியம் - -
51 கிருஸ்ணபிள்ளை மோகனராஜ் -
52 கிருஸ்ணபிள்ளை சுந்தரலிங்கம் - -
53 கிருஸ்ணபிள்ளை சிதம்பரமூர்த்தி தொழிலாளி 21
54 கிருஸ்ணபிள்ளை விஜயகுமாரி - -
55 கிருபானந்தம் அமிர்தலிங்கம் - -
56 கறுப்பையா சிவசாமி கமம் 40
57 கறுவல்தம்பி திருச்செல்வம் - -
58 கணபதி குகநாதன் - -
59 கணபதி சந்திரன் - -
60 கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி - -
61 கணபதிப்பிள்ளை புஸ்பலதா - -
62 கணபதிப்பிள்ளை பரசுராமன் - -
63 கணபதிப்பிள்ளை தவராசா - -
64 கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை - -
65 கணபதிப்பிள்ளை சிவபாலன் தொழிலாளி -
66 கணபதிப்பிள்ளை சிவலிங்கம் சாரதி 49
67 கணபதிப்பிள்ளை சண்முகநாதன் தொழிலாளி 35
68 கணபதிப்பிள்ளை சண்முகம் - -
69 குணரெட்ணம் சிவகௌரி - -
70 பாவில் சண்முகம் - -
71 பாலன் மகேந்திரன் - -
72 பாலன் கேதரன் - -
73 பாலசுந்தரம். - -
74 பாண்டியன் முனியாண்டி - -
75 பத்மநாதன் விநாயமூர்த்தி - -
76 பழனித்தம்பி மாணிக்கம் - 46
77 பீ.ஜி.பியாந்தன் - -
78 பீ.நந்தசிறி - -
79 பி.மாரியான் - -
80 பீ.சுசிபன் - -
81 ரீ.மாதவன் - -
82 ஐயாத்துரை மகேஸ்வரன் - -
83 ஐயாத்துரை கோவிந்தன் - -
84 கைலாயபிள்ளை தேவராசா மாணவி 8
85 வை.இராசதுரை - -

86 வை.பிரான்சிஸ் - -
87 வைரமுத்து கற்பகம் - -
88 வைரமுத்து கோபாலபிள்ளை - -
89 வைரமுத்து தெய்வானை - -
90 வைரமுத்து சிவம் - -
91 தர்மலிங்கம் பொன்னத்துரை - -
92 தம்பிப்பிள்ளை இராசலிங்கம். - -
93 தம்பிப்பிள்ளை கந்தையா - -
94 தம்பிமுத்து கந்தையா கமம் 77
95 தம்பிமுத்து தயாபரன். - -
96 தம்பிமுத்து சின்னத்துரை அறங்காவலர் 52
97 தம்பிமுத்து சிந்தாத்துரை விவசாயம் 70
98 திருநாவுக்கரசு கணேசமூர்த்தி - -
99 திருநாவுக்கரசு கருணாநிதி விவசாயம் 18
100 திருநாவுக்கரசு புஸ்பராசா - -
101 தங்கநேசம் வேலுப்பிள்ளை - -
102 தங்கராசா உதயசூரியன் - -
103 தங்கராசா மனோகரன் - 18
104 தங்கராசா ராகினி - -
105 மார்க்கண்டு தங்கவேல் - -
106 மார்க்கண்டு யோகராசா - -
107 மார்க்கண்டு சிவானந்தன் - 29
108 மாசிலாமணி தருமலிங்கம் - -
109 மாசிலாமணி செல்வரட்ணம் - -
110 மாசிலாமணி விநாயகமூர்த்தி விவசாயம் 26
111 மாணிக்கம் பாலு - -
112 மாணிக்கம் முருகேசபிள்ளை கமம் 21
113 மாணிக்கம் ஜெகநாதன் - -
114 முத்துலிங்கம் பாலபாஸ்கரன் - -
115 முத்துலிங்கம் பரமேஸ்வரி ஆசிரியர் 32
116 முத்துலிங்கம் செல்லையா - -
117 முருகுப்பிள்ளை தங்கரெத்தினம் - -
118 முருகுப்பிள்ளை தங்கராசா - -
119 முருகுப்பிள்ளை ஞானம்மா - -
120 மருதுரிஸ் செல்வராசா - -
121 முருகேசு உதயகுமார் - -
122 முருகேசு பாஸ்கரன் - -
123 முருகேசப்பிள்ளை பத்மநாதன் - -
124 மணியம் சோமசுந்தரம் - -
125 ஆ.யோகநாதன் - -
126 ஆர்.மயில்வாகனம் - 50
127 அம்பாரக்குட்டி தியாகராஜா - -
128 அழகையா இராமச்சந்திரன் - -
129 அழகையா சாமித்தம்பி - -
130 அழகையா சிவா - -
131 அழகையா வீரசேனன் - -
132 அழகையா ரகுநாதன் - -
133 அரசரெத்தினம் கதிரமலை - -

134 அரசரெட்ணம் மகேந்திரன் - -
135 அரசரட்ணம் வள்ளியம்மை - 58
136 அருளப்பா இந்துருஜன் - -
137 அருணாசலம் இராசரெட்ணம். - -
138 அருணாசலம் சின்னப்பிள்ளை. - 55
139 ஆறுமுகம் கந்தசாமி. - -
140 ஆறுமுகம் கலா - -
141 ஆறுமுகம் தெய்வேந்திரம் தச்சுத்தொழில் 34
142 யோகராசா கிருபானந்தி - -
143 கே.அழகையா - -
144 கே.சிவலிங்கம் - 48
145 கே.ரவிச்சந்திரன் - -
146 பொன்னம்பலம் இராஜேந்திரன் - -
147 பொன்னம்பலம் இராசமணி - -
148 பொன்னுச்சாமி கந்தசாமி தொழிலாளி 24
149 பொன்னுச்சாமி கணேசமூர்த்தி ஆசிரியர் 26
150 பொன்னையா உதயகுமார் - -
151 பொன்னையா மகேஸ்வரன் - -
152 பொன்னையா வள்ளியம்மை - 67
153 தேவநாயகம் மகேந்திரன் - -
154 சொலமன் சகாயநாதன் - -
155 செல்லையா கிருஸ்ணபிள்ளை - -
156 செல்லையா அசோகன் மின்சாரசபை ஊழியர் 24
157 செல்லையா சோமசுந்தரம் - -
158 செல்லையா வடிவேல். - -
159 செல்வன் சிவநாதன் - -
160 செல்லன் அருளம்மா - -
161 செல்லத்துரை தர்மலிங்கம் - -
162 செல்லத்தம்பி கருணாநிதி கடதாசி.ஆலை ஊழியர் 24
163 வெள்ளையன் மாணவன் 7
164 வேல்முருகு முத்து - -
165 வேலுப்பிள்ளை நாகேந்திரன் - -
166 வேலுப்பிள்ளை காசியானந்தன் - -
167 வேலுப்பிள்ளை கதிரமலை - -
168 வேலுப்பிள்ளை திருச்செல்வம் தொழிலாளி 22
169 வேலுப்பிள்ளை யோகராசா - -
170 வேலுப்பிள்ளை தெய்வநாயகம் - -
171 வேலுப்பிள்ளை சந்திரகுமார் - -
172 வேலுப்பிள்ளை சுதாகரன் - -
173 ரெட்ணம் செல்வராசா கமம் 20
174 சு.மனோகரன் - -
175 சந்திரன் அருளப்பன் - -
176 சுப்பிரமணியம் நடேஸ்வரன் - -
177 சாமித்தம்பி கணபதிப்பிள்ளை - -
178 சாமித்தம்பி குணசீலன் - -
179 சாமித்தம்பி தங்கவேல் மாணவன் 17
180 சாமித்தம்பி சுப்பிரமணியம் - -
181 சதாசிவம் புவனேந்திரன் - -

182 சதாசிவம் தேவராசா விவசாயம் 18
183 சின்னத்துரை காளிக்குட்டி - -
184 சின்னத்தம்பி குகதாஸ் - -
185 சின்னத்தம்பி திலகேஸ்வரி - -
186 சின்னத்தம்பி அண்ணாதாசன் - -
187 சின்னத்தம்பி வன்னியசிங்கம் - -
188 சின்னதம்பி ரவிச்சந்திரன் சாரதி 22
189 சின்னையா முத்தையா - -
190 சீனி இந்திரன் - -
191 சீனி தவசீலன் - -
192 சீனி ஜெயசீலன் - -
193 சீனித்தம்பி மாரிமுத்து - -
194 சீனித்தம்பி வேல்முருகு - -
195 சித்தாத்துரை காளிக்குட்டி கமம் 47
196 சித்தாத்துரை செல்வராசா - -
197 சித்தாத்துரை சம்பந்தன் விவசாயம் 24
198 சித்தாத்துரை தவராசா - -
199 சித்தாத்துரை தேவராசா - -
200 சித்தாத்துரை வேவி - -
201 சித்தாத்துரை சம்மந்தன் விவசாயம் 24
202 சித்திரவேல் பத்மநாதன் - -
203 சிவனடியார் ரவிச்சந்திரன் - -
204 சிவானந்தன் இந்திரன் - -
205 சிவானந்தன் பாலச்சந்திரன் - -
206 சிவானந்தன் ரவிச்சந்திரன் - -
207 சிவஞானம் கணேசன - -
208 சிவசம்பு தேவராசா - -
209 சங்கரப்பிள்ளை அற்புதராசா - -
210 சங்கரப்பிள்ளை வில்வராசா விவசாயம் 20
211 சலமன் மோகனராஜன் சகாயநாதன் வியாபாரம் 22
212 சண்முகம் இளஞ்சேகர் மாணவர் -
213 விநாயகமூர்த்தி பாலு - -
214 வீரக்குட்டி கிட்ணன் - -
215 வீரபாண்டியன் ஜமுனா - -
216 வள்ளியம்மை - -
217 ராமன் - -
218 ரவி தில்லையம்மா - -
219 ஏ.ஈ.தேவதாசன் - -
220 ஏ.கனகரெத்தினம் - -
221 ஏ.பரமநாதன் - -
222 ஏ.முருகேசபிள்ளை - -
223 ஏ.சுபாசினி மாணவி 17
224 ஏ.சின்னப்பிள்ளை - 50
225 ஏ.சித்திரவேல் - -
226 ஏ.சிவநேசன் - -
227 ஏ.ஏ.சண்முகவேல் - -
228 எஸ்.மாணிக்கம் - 35
229 என்.இராசன் - -

230 என்.சந்திரகுமார் - -
231 ஏகாம்பரம் தருமலிங்கம் - -
232 எம்.முத்துக்குமார் - -
233 எம்.அருள்மணி - -

வீரமுனையில் வேறு தினங்களில் உயிரிழந்த சிலரது விபரங்கள் (பெயர் தொழில் வயது)

01 15.03.1985 சதாசிவம் சண்முகராஜா கமம் 23
02 25.10.1985 சின்னத்தம்பி நவரட்ணராசா விவசாயம் 19
03 08.09.1988 காளிக்குட்டி நவரெட்ணம் தொழிலாளி 23
04 13.01.1989 சேதுமதி குணரட்ணம் கமம் 33
05 11.06.1990 கணபதிப்பிள்ளை கந்தசாமி தொழிலாளி 27
06 15.06.1990 பாலசந்திரபோஸ் சுபாஸ்சந்திரபோஸ் தொழிலாளி 16
07. செல்லத்துரை விக்னேஸ்வரன் கமம் 21
08. செலடன்ஸ்பெக் பிறிங்கேஸ்பெக் தச்சுத்தொழில் 19
09. சிவராசா சதீஸ்குமார் - 19
10. சங்கரப்பிள்ளை சிவகுருநாதன் மாணவன் 18
11. சவரிமுத்து ரஞ்சன் கமம் 22
12. சறத் ணநாதன் ரஞ்சிதகுமார் வியாபாரம் 22

## 57. சித்தாண்டி படுகொலை - 20, 27 யூலை 1990



மட்டக்களப்பு நகரத்திலிருந்து வடக்குத் திசையாக பதின்மூன்று மைல் தொலைவில் சித்தாண்டிக் கிராமம் அமைந்துள்ளது. இந்து மதத்தவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க முருகன் ஆலயம் அமைந்த இக்கிராமம் வளங்கள் நிறைந்ததும், மக்கள் செறிந்து வாழும் ஓர் இடமாகவும் உள்ளது. இங்கு வாழும் மக்களின் பிரதான பொருளாதாரம் விவசாயம் ஆகும்.

இக்கிராமத்தினை 1990.07.20 அன்று இராணுவத்தினர் முற்றுகையிட்டு, மக்கள் அனைவரையும் முருகன் ஆலயத்தினுள் அழைத்துச் சென்றனர். அவர்களில் எண்பது பொதுமக்களின் கண்கள், கைகள் என்பனவற்றைக் கட்டி எல்லைக் கிராமத்திற்கு கூட்டிச் சென்று படுகொலை செய்தனர்.

அதே மாதம் மீண்டும் இருபத்தேழாம் திகதி இப்பகுதியில் ஐம்பத்தேழு இளைஞர்களை சுற்றிவளைத்துக் கைதுசெய்து கண்களைக் கட்டி எல்லைப்புறக் கிராமத்திற்கு அழைத்துச்சென்று சுட்டுக் குழிகளிற் போட்டு எரித்தனர். 28.01.1987 அன்று இராணுவத்தினரால் கொக்கட்டிச்சோலையில் நடத்தப்பட்ட படுகொலைகள் போன்றே 1990 ஆகஸட் 20, 27ஆம் திகதிகளில் சித்தாண்டியூரிலும் மேற்கொள்ளப்பட்டது.

இரு தினங்கள் இராணுவத்தினரின் தாக்குதலில் சித்தாண்டியில் மட்டும் நூற்றுமுப்பத்தேழு மக்கள் உயிரிழந்தார்கள். தொடர்ந்தும் பல மாதங்களாக இராணுவத்தினர் சித்தாண்டிப் பிரதேசத்தினைச் சுற்றிவளைப்பதும், கைதுசெய்து மக்களைப் படுகொலை செய்வது தொடர்ந்தது.

## 58. பரந்தன் சந்தி படுகொலை – 24 யூலை 1990



கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் யு-9 வீதியை உள்ளடக்கி அமைந்திருப்பதால் பரந்தன் நகரம் முதன்மையான நகரமாக விளங்குகின்றது. மேலும் இங்கு இரசாயணத் தொழிற்சாலை அமைந்திருந்ததும் இப்பகுதி முக்கியத்துவம் பெற்றிருந்தமைக்கு முக்கிய காரணமாகும். இங்கு வாழும் மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும்.

இப்பிரதேசமானது 1980களிலிருந்து பல்வேறு இராணுவ நடவடிக்கைகளால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாக இருக்கின்றது. இந்த வகையில் 24.07.1990 அன்று ஆனையிறவு சுட்டதீவு என்னுமிடத்தில் உலங்குவானூர்தி மூலம் இராணுவத் தளபதி கொப்பேக்கடுவ தலைமையில் தரையிறக்கப்பட்ட சிறீலங்காப் படையினர் பரந்தன் பகுதியால் முன்னேறி வந்துகொண்டிருந்தவேளை, பரந்தன் சந்தியை அண்டிய பிரதேசத்தில் வீடுகளிலிருந்த பொதுமக்களைத் தாக்கினார்கள். வீடுகளிலிருந்த மக்களைச் சுட்டு வீடுகளுடன் சேர்த்து எரித்தனர். இச்சம்பவத்தில் பதின்நான்கிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர்.

இராணுவம் முன்னேறி வந்ததால் இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களிற்குச் சென்றனர். அங்கு தமது உறவுகளைக் காணாது தவித்தனர். மீண்டும் தமது சொந்த இடத்திற்கு திரும்பி வந்தபோது வீடுகளினுள் இரத்தக்கறைகள் காணப்பட்டதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். நெல்லு மூட்டைகள் அடுக்கி வைக்கும் கொட்டிலினுள் சடலங்கள் போட்டு எரிக்கப்பட்ட நிலையிலும் அரைகுறையாக எரிந்த நிலையிலும் காணப்பட்டன. அரைகுறையாகக் காணப்பட்ட சடலங்களை உறவினர்கள் எடுத்து அடக்கம் செய்தனர்.

சம்பவத்தை நேரில் பார்த்ததுடன் கணவரையிழந்த மங்களேஸ்வரி தெரிவிக்கையில்,

*"காலை 5.30 மணியளவில் ஆனையிறவிலிருந்து வந்த இராணுவத்தினரால் வீடுகளில் உள்ளவர்களையும் வயல்களில் வேலை செய்தவர்களையும் சுட்டும் எரித்தும் வந்தனர். இதில் எனது உறவினர் ஒருவர் பலியானார். இச்சம்பவத்தை என் கண்ணால் கண்டேன்."*

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. கந்தசாமி அழகரட்ணம் கமம் 24
02. கணேசபிள்ளை லிங்கேஸ்வரன் கமம் 20
03. பூபாலசிங்கம் கொடியரசன் கமம் 25
04. தங்கராசா ரவிச்சந்திரன் கமம் 21
05. அன்ரனி சகாதேவன் (ரகு) கமம் 20
06. பொன்னுத்துரை புண்ணியமூர்த்தி தச்சுத்தொழில் 22
07. செல்லத்துரை விக்னேஸ்வரன் கமம் 21
08. செலடன்ஸ்பெக் பிறிங்கேஸ்பெக் தச்சுத்தொழில் 19
09. சிவராசா சதீஸ்குமார் - 19
10. சங்கரப்பிள்ளை சிவகுருநாதன் மாணவன் 18
11. சவரிமுத்து ரஞ்சன் கமம் 22

12. சறத் ணநாதன் ரஞச் 'தகுமா' வியாபாரம்' 22

## 59. பொத்துவில் படுகொலை – 30 யூலை 1990

1990ஆம் ஆண்டில் மீண்டும் யுத்தம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து இலங்கையில் கிழக்குப் பகுதியில் இராணுவத்தினராலும் சிங்கள முசுலிம் குழுக்களாலும், ஊர்காவற்படையினராலும் நீண்டகாலமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர்.



15.06.1990அன்று பொத்துவில் கிராமத்தில் இராணுவத்தினரும் முசுலிம் குழுக்களும் இணைந்து மேற்கொண்ட தாக்குதல்களின் காரணமாக பாதுகாப்புத் தேடிய மக்கள் இடம்பெயர்ந்து கோமாரி அகதி முகாமில் தஞ்சமடைந்தனர்.

இராணுவத்தினரதும் அரச அதிகாரிகளினதும் வேண்டுகோளையும் வாக்குறுதிகளையும் நம்பி 30.07.1990அன்று பொத்துவில் கிராமத்திற்கு மீண்டும் திரும்பி வந்து பார்தத் போது வீடுகள் உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டிருந்ததுடன், வீடுகள் எரித்து அழிக்கப்பட்டிருந்தன. இதனால் மக்கள் தமது வீடுகளை விட்டுப் பொத்துவில் மெதடிஸ்த மகா வித்தியாலயத்தில் மீண்டும் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர்.

பொத்துவில் மெதடிஸ்த மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்த மக்களில் இளைஞர்கள், யுவதிகள் தமது குடும்பத்தினைக் காப்பாற்றுவதற்காக வேலைக்குச் சென்றார்கள். இவர்களில் நூற்றுமுப்பத்திரண்டு பேர் இராணுவத்தினராலும் முசுலிம் குழுக்களாலும் கைதுசெய்யப்பட்டு பொத்துவில் காவற்றுறை நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு இவர்களில் சிலர்சிலராகத் தெரிந்தெடுத்து காவற்றுறை நிலையத்திலிருந்த வெட்டவெளியில் கை கால்களைக் கட்டி உயிருடன் போட்டு எரித்தார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சிலர் தப்பித்துக் கொள்ள எஞ்சியோரை 02.08.1990அன்று பொழுது விடிவதற்கு முன்னர் ரயரில் உயிருடன் போட்டு எரித்தார்கள். இவ்வாறு இராணுவத்தினராலும் முசுலிம் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் நூற்றுஇருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 மூத்ததம்பி இராசநாயகம் - 33
02 இளையதம்பி கிருபாகரன் தொழிலாளி 39
03 இளையதம்பி கருணாகரன் - 23
04 இராஜதுரை கமலநாதன் குழந்தை 3
05 இராமலிங்கம் ஈஸ்வரன் - 23
06 சத்தியநாதன் பத்மநாதன் - 32

07 நாகமணி குணசீலன் - 25
08 நாமணி சிந்தாத்துரை கடற்றொழில் 45
09 நடராசா சவுந்தரராசா - 19
10 நல்லதம்பி பாக்கியராசா. - 23

11 சன்னாசி சுப்பிரமணியம் - 34
12 கனகசபை நவராஜா - 26
13 கனகசபை கிருபைராசா தொழிலாளி 30
14 கனகசபை தவராசா தொழிலாளி 26
15 கனகரத்தினம் சின்னராசா - 52
16 கனகரட்ணம் சீன்னராசா - 27
17 கந்தையா நல்லதம்பி. - 33
18 கந்தையா கணேஸ் மாணவன் 16
19 கந்தையா தருமரத்தினம் - 32
20 கந்தையா சிவகுமார் - 27
21 கந்தையா சிவகுமரன் - 22
22 கந்தையாப்பிள்ளை சிவசுப்ரமணியம் - 26
23 கந்தையாப்பிள்ளை சிவசுந்தரன் - 26
24 கந்தன் நவரட்ணம். - 21
25 கந்தப்பன் ஆனந்தன் தொழிலாளி 26
26 காத்தமுத்து சுனில் தொழிலாளி 35
27 காளிக்குட்டி அமிர்தலிங்கம் - 27
28 கணேசபிள்ளை சந்திரன் - 36
29 கிருஸ்ணன் அழகையா தொழிலாளி 24
30 கண்ணாச்சி சுப்பிரமணியம் - 34
31 கணபதி பத்மநாதன் தொழிலாளி 25
32 கணபதிப்பிள்ளை தருமரட்ணம் தொழிலாளி 51
33 கணபதிப்பிள்ளை யோகநாதன் தொழிலாளி 20
34 கணபதிப்பிள்ளை செல்வரட்ணம் தொழிலாளி 35
35 கணபதிபிள்ளை தெய்வேந்திரன் - 23
36 பக்கிரி சிற்றம்பலம் - 30
37 பாலன் ஜெயானந்தம் தொழிலாளி 25
38 பத்மநாதன் விக்னேஸ்வரன் தொழிலாளி 14
39 பத்மநாதன் ரவீந்திரன் தொழிலாளி 40
40 ஐயப்பன் செல்வராசா தொழிலாளி 41
41 தர்மலிங்கம் பாஸ்கரன் - 13
42 தம்பியர் தேவசுந்தரம் பாதுகாவலர் 70
43 தம்பிப்பிள்ளை பூபாலப்பிள்ளை தொழிலாளி 32
44 தம்பிமுத்து கிருஸ்ணபிள்ளை - 52
45 தம்பிராசா இராசகுமார் தொழிலாளி 18
46 தம்பிராசா மனோகர் தொழிலாளி 38
47 தம்பிராசா தேவசுந்தரம் தொழிலாளி 65
48 திசாநாயக்க ஒபேசேகர தொழிலாளி 42
49 திசாநாயக்கா சபேசர் மாணவன் 19
50 திலகரட்ணம் பாரதி தொழிலாளி 24
51 திலகரட்ணம் லலித் தொழிலாளி 23
52 தங்கராசா மகேந்திரன் தொழிலாளி 17
53 தருமலிங்கம் இராசேந்திரன் - 26
54 தருமலிங்கம் கணேசமூர்த்தி தொழிலாளி 23
55 தருமலிங்கம் முத்துலிங்கம் தொழிலாளி 24
56 தருமலிங்கம் சந்திரன் - 21
57 தருமலிங்கம் சாந்தலிங்கம் - 23
58 மாரிமுத்து மகேந்திரன் - 18

59 மாணிக்கம் பரமசிவன் - 31
60 மாணிக்கம் தம்பிராசா தொழிலாளி 26
61 மாணிக்கம் செல்வராசா தொழிலாளி 27
62 மாணிக்கம் ரவிச்சந்திரன் தொழிலாளி 32
63 முத்தையா சத்தியநாதன் - 18
64 அந்தோனிப்பிள்ளை மகேந்திரகுமார் - 16
65 அழகையா சியாம்சேகர் தொழிலாளி 36
66 அருளம்பலம் வாசு - 19
67 ஆறுமுகம் இராசரட்ணம் தொழிலாளி 20
68 ஆறுமுகம் கணேசமூர்த்தி மாணவன் 19
69 ஜோசப் சிறிராமு தொழிலாளி 32
70 கோபால் ரமேஸ் - 20
71 கோபாலகிருஸ்ணன் பத்மநாதன் தொழிலாளி 26

72 கெங்காதரன் ஜெயக்குமார் தொழிலாளி 22
73 பொன்னன் மோசன் தொழிலாளி 25
74 சோமலிங்கம் விஸ்வலிங்கம் தொழிலாளி 42
75 செல்வராசா சுவேந்திரன் தொழிலாளி 20
76 செல்லத்துரை கந்தசாமி - 35
77 செல்லத்துரை சந்திரன் - 20
78 செல்லமுத்து சுப்பிரமணியம் தொழிலாளி 18
79 வேலாயுதம் கருணாநிதி தொழிலாளி 32
80 ஞானச்செல்வம் உதயகுமார் தொழிலாளி 18
81 சந்திரப்பிள்ளை விநாயகமூர்த்தி தொழிலாளி 20
82 சுந்தரராகன் தருமலிங்கம் - 21
83 சுப்பிரமணியம் இராசு - 20
84 சுப்பையா கதிர்காமநாதன் - 22
85 சுப்பையா அர்சுனன் - 26
86 சுப்பையா ஆறுமுகம் தொழிலாளி 39
87 சபாபதி மகேந்திரன் வியாபாரி 26
88 சாந்தி சற்குணம் - 40
89 சத்தியநாதன் யோகநாதன் தொழிலாளி 26
90 சதாசிவம் வேலுப்பிள்ளை தொழிலாளி 50
91 சதாசிவம் சிவலிங்கம் தொழிலாளி 45
92 சின்னப்பிள்ளை விஜயகுமார் - 20
93 சின்னத்துரை பத்மநாதன் - 26
94 சின்னத்துரை யோகராசா - 29
95 சின்னத்தம்பி நடராசா - 34
96 சின்னத்தம்பி சுந்தரம் தொழிலாளி 30
97 சின்னத்தம்பி சபானந்தம் தொழிலாளி 28
98 சின்னராசா தெய்வேந்திரன் - 23
99 சீனித்தம்பி கந்தசாமி - 45
100 சீனித்தம்பி சுப்பிரமணியம் தொழிலாளி 26
101 வடிவேல் முத்துகுமார் தொழிலாளி 17
102 வடிவேல் அழகநாயகம் தொழிலாளி 30
103 வடிவேல் தெய்வநாயகம் தொழிலாளி 17
104 வடிவேல் சந்திரசேகரராகன் தொழிலாளி 42
105 வண்ணமணி மணிவண்ணன் - 20

106 வீரன் இராசையா - 35
107 வீரன் புஸ்பராசா - 32
108 வீரன் செல்வராசா - 29
109 ரட்ணம் ஜெயசீலன் - 24
110 லலித் துரைராசா தொழிலாளி 49

## 60. திராய்க்கேணி படுகொலை – 06 ஆகஸ்ட் 1990

1954ஆம் ஆண்டு அமரர் தா்மரட்ணம் என்பவரின் தென்னந்தோட்டத்தில் அமைக்கப்பட்ட குடியேற்றக் கிராமம் திராய்க்கேணியாகும். திராய்க்கேணிக்கு கிழக்குப் பக்கத்தில் ஒலுவில் கிராமமும் தெற்குப் பக்கத்தில் பாலமுனையும் அமைந்துள்ளது. இக்கிராமம் அட்டாளைச்சேனை உதவிஅரசாங்க அதிபர் பிரிவின் கீழும் அக்கரைப்பற்று நீதிமன்று நியாதிக்கத்தின் கீழும் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் முன்நூற்றெழுபதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் முன்நூற்றைம்பது வீடுகளில் வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் பிரதான தொழில் விவசாயமாகும்.



05.08.1990அன்று திரியாய்க்கேணியில் வசித்து வந்த முசுலிம்களில் ஒருவர் காட்டுக்குச் சென்றவேளை மா்மமான முறையில் உயிரிழந்ததனைத் தொடா்ந்து 06.08.1990அன்று அக்கிராமத்திலிருந்த நூறு-நூற்றைம்பது பேர் கொணட் முசுலிம் குழு திரியாய்க் கேணியிலிருந்த தமிழர்களைத் தாக்கினார்கள்.

தாக்கக் கத்தி, வாள், பொல்லு போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தியதுடன், வீடுகளையும் அவா்களின் உடைமைகளையும் தீயிட்டு எரித்தார்கள். முசுலிம்களின் தாக்குதல் தீவிரமடைய கிராமமக்கள் அருகிலிருந்த பிள்ளையார் கோயிலில் அடைக்கலம் புகுந்தார்கள். கோயிலுக்குள் நுழைந்த முசுலிம் குழுக்கள் அடைக்கலம் புகுந்த மக்களை வாள்களால் வெட்டியும் கத்தியாற் குத்தியும் தாக்கினார்கள். இவா்களின் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு முசுலிம்கள் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கும் போது கோயிலுக்கு வெளியில் சிறீலங்கா இராணுவத்தினர் பவள் கவச வாகனத்தில் தாக்குதல் நடத்துபவர்களிக்குப் பாதுகாப்பினை வழங்கிக்கொண்டிருந்தார்கள். எஞ்சியிருந்த நூற்றிஜம்பது குடும்பத்தினர் அகதி முகாமுக்குச் சென்றனர்.

தாக்குதலில் தொண்ணூறிற்கும் மேற்பட்டவா்கள் உயிரிழந்தார்கள். நாற்பதிற்கும் மேற்பட்டவா்கள் காயமடைந்தார்கள். முன்நூற்றுநாற்பதிற்கும் மேற்பட்ட வீடுகளும், எழுபது மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான சொத்துக்களும் எரிக்கப்பட்டன.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 இளையதம்பி மயிலாப்பொடி - -
02 இராமக்குட்டி மயில்வாகனம் தொழிலாளி 18

03 இராசதுரை பிரகலா - -
04 நாகலிங்கம் தம்பிராசா - -
05 நல்லதம்பி புலேந்திரன் தொழிலாளி 27
06 கனகரத்தினம் அழகையா ஊழியர் 35
07 கனகரட்ணம் சுப்ரமணியம் - -
08 கந்தக்குட்டி பூபாலப்பிள்ளை தொழிலாளி 19
09 கந்தக்குட்டி வேலாயுதம் - -
10 கா.பாஸ்கரலிங்கம் தொழிலாளி 39
11 கா.சாமித்தம்பி விவசாயம் 43
12 காந்தன் நவரட்ணம் - -
13 காளிக்குட்டி பாக்கியராசா - -
14 காளிக்குட்டி தம்பிப்பிள்ளை - -
15 கதிரன் கணபதி - -
16 கதிரன் பாக்கியராசா தொழிலாளி 34

17 கணபதி காளிக்குட்டி ஊழியர் 50
18 கணபதி காளிமுத்து வைத்தியர் 45
19 கணபதிப்பிள்ளை கிருஸ்ணன். - -
20 கணபதிப்பிள்ளை அமிர்தலிங்கம் - -
21 பூபாலப்பிள்ளை புலேந்திரன் தொழிலாளி 30
22 பூபாலப்பிள்ளை ஏகாம்பரம் தொழிலாளி 24
23 தம்பியப்பா கோபால் தொழிலாளி 50
24 தம்பிமுத்து ஆனந்தராசா - -
25 மு.கணபதி தொழிலாளி 76
26 மா.குஞ்சித்தம்பி தொழிலாளி 50
27 மா.ஜெயசீலன் தொழிலாளி 24
28 மார்க்கண்டு கிருபை தொழிலாளி 30
29 மார்க்கண்டு மயில்வாகனம் - -
30 மார்க்கண்டு ஜெயக்குமார் - -
31 முருகன் இளையதம்பி தொழிலாளி 39
32 முருகேசு நாகேந்திரன் தொழிலாளி 28
33 பொன்னன் அழகையா தொழிலாளி 29
34 செல்லையா பாக்கியராசா தொழிலாளி 26
35 செல்வம் சீனித்தம்பி - -
36 செல்லத்துரை கிருஸ்டியன் - -
37 செல்லத்துரை பாலச்சந்திரன் - -
38 செல்லத்துரை அமிர்தலிங்கம் - -
39 வேலன் கதிரேசப்பிள்ளை தொழிலாளி 44
40 வேலுப்பிள்ளை குணராசா - -
41 வேலுப்பிள்ளை பாஸ்கரலிங்கம் தொழிலாளி 35
42 சாமித்தம்பி நாகராசா - -
43 சாமித்தம்பி சௌந்தராஜன் - -
44 சின்னத்தம்பி கன்னி - -
45 சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை - -
46 சின்னத்தம்பி சிவசிதம்பரம் - -
47 சற்குணம் இளையதம்பி - -
48 சற்குணம் விஜயலட்சுமி - -
49 வ.பாக்கியராசா தொழிலாளி 26

## 61. சேவியர்புரம் படுகொலை – 7 ஆகஸ்ட் 1990

குறவர் பழங்குடியினர் 1950ல் குடியமர்த்தப்பட்ட இடத்தின் பெயர்தான் அம்பாறையில் உள்ள சேவியர்புரம்.



7ம் தேதி ஆகஸ்ட் மாதம், 1990ல் குறவர்ர் பழங்குடியினரின் வீடுகள் கொழுத்தப்பட்டு, அந்த சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களும் கொல்லப்பட்டனர்.இவர்களது கோயில்கள், பாடசாலைகள் , சமூகப் பொதுமண்டபங்கள் யாவும் இடிக்கப்பட்டதோடு, இச்சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் என அனைவரையும் மனிதவதைக்கு இந்த நாளில் உள்ளாக்கப்பட்டனர். குறவர் சமூகத்தின் மீது எவ்வித காரணங்களுமின்றி வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. இச்சமூகத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் இஸ்லாமிய ஊர்க்காவல் படையைச் சேர்ந்தவர்கள் என பின்னர் தெரியவந்தது. விடுதலைப்புலிகள் இச்சமூகத்தோடு உறவு வைத்திருந்தார்கள் என்னும் குற்றச்சாட்டோடு இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மினியக்கா என்ற பெண்மணி சேவியர்புரம் தாக்குதல் குறித்து சொல்லிய போது,

*"1990 ஆகஸட் 7ம் தேதி முற்பகல் 11 மணிக்கு அன்றைய முதல்வேளை உணவை சிலர் உட்கொண்டும், வேறு சிலர் சமைத்துக் கொண்டும் இருந்த சமயத்தில், வன்முறையாளர்கள் அங்கு வந்தனர். நீதை சாலை வழியாக 18 டிராக்டர்கள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்தது. வந்தவர்களிடம் கத்தி, குண்டாந்தடிகள், அரிவாள், துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் இருந்தன. வன்முறையாளர்கள் எங்களது கிராமத்தின் நடுவில் நின்று கொண்டு, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரையும் ஒன்றாய் கூடும்படி கட்டளையிட்டனர். வன்முறையாளர்கள் கொண்டு வந்த ஆயுதங்களை பார்க்கும் போது ஏதோ இராணுவ படை போன்று தெரிந்தது. வன்முறையாளர்கள் எங்களிடம் நடந்து கொண்ட முறையும் பயத்தை வரவழைத்தது. சேவியர்புரம் மக்கள் அனைவரும் இந்த நடவடிக்கையை பார்த்து திகைத்துப் போய் செய்வதறியாது நின்றனர். சாப்பிட்டுக் கொண்டிருந்த மக்கள் அனைவரும், அவசரமாய் கைகளை கழுவிக் கொண்டு, வன்முறையாளர்களின் முன் கூடினர். நானும், எனது கணவர் மற்றும் என்னுடைய மகன், மகள் எல்லோரும் அங்கு நின்றோம். சீருடையணிந்த வன்முறையாளர்களை இஸ்லாமிய ஊர் காவல் படையினர் என்றும் அவர்களுடன் வந்த ஏனையோர் அக்கரைப்பத்து பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் எங்களால் அடையாளம் காண முடிந்தது."*

சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் கூறினார்,

*"வந்திருந்த இஸ்லாமிய ஊர்காவல் படையினர் மற்றும் வன்முறையாளர்களின் முன் நாங்கள் கூடியிருந்த போது, என்னுடைய ஒரே மகனை எங்கள் முன்னேயே மனித வதைக்கு உட்படுத்தி, கொடுமைப் படுத்தினர். அதேபோல், ஜெயராஜ் என்ற எங்களது சமூகத்தைச் சேர்ந்த வேறொரு இளைஞரையும் தொடர்ந்து மனிதவதைக்குட்படுத்தினர்.*

*எனது கணவரால் எங்களது கண் முன்னே எங்களது ஒரே மகனை கொடுமைப்படுத்தியது பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனது கணவர், துள்ளியெழுந்து தனது எதிர்ப்பை தெரியப்படுத்தினர். நானும் சத்தமிட்டுக் அழுதேன். வன்முறையாளர்களில் ஒருவன், ஒரு மரக்கட்டையை எடுத்து எனது கணவரது நெஞ்சை நோக்கி கொடுத்த அடியினால், அவர் சுயநினைவை இழந்து கீழே விழுந்தார். அவர் கீழே விழுந்தது, ஏதோ ஒரு பெரிய மரம் சாய்ந்தது தோன்றியது. நான் அவசர அவரசமாய் அங்கு ஓடிச் சென்ற எனது கணவரின் தலையை தூக்கி பார்த்தேன். அப்போது, மற்றொரு வன்முறையாளன், ஆயுதத்தைக் கொண்டு எனது தலையில் பலமாய் அடித்தான். இதனால், எனது தலையிலிருந்து இரத்தம் கொட்டியது மட்டும் உணர்ந்து கொண்டிருக்கும் போதே மயக்கமுற்றேன்.*

*இத்தாக்குதலிருந்து தப்பிய அனைவரும் காயம்பட்டோரையும் தூக்கிக்கொண்டு திருக்கோயிலுக்கு ஓடினோம். அவர்கள் அனைவரும் தங்களது முதுகில் உடுத்த துணி மட்டும் எடுத்துக் கொண்டு ஓடினர். இதில் சிலர் முந்திய நாள் உணவு கூட உண்ணாதிருந்தனர்.*

*நான் கண் திறந்து பார்த்தபோதுதான், ஒரு மருத்துவமனை படுக்கையில் இருப்பதை உணர்ந்தேன். அங்கு என்னுடன் கிராமத்தைச் சேர்ந்த பலரும் இருந்தனர். அப்போது மாலை சுமார் 4 மணி இருக்கும். நான் என்ன நடந்தது என யூகிக்க முயற்சித்த போதும், முடியாமல் போனது. கவலையும் அதிர்ச்சியும் அடைந்த உறவினர்கள் எனது குடும்பத்தாரை பார்க்க வந்திருந்தனர். இஸ்லாமிய ஊர் காவல் படையினர் பெட்ரோலையும், மண்ணெண்ணையையும் ஊற்றி எனது கிராம வீடுகளை எரியூட்டியதையும், அங்கு பலர் கொல்லப்பட்டதையும் சொன்னார்கள். எல்லா மக்களும், கிராமத்திலிருந்து ஓடிவிட்ட போதும், சிலர் மட்டும், இறந்தவர்களுக்கு கடைசி மத சடங்குகளை செய்ய சேவியர்புரம் சென்றனர்.*

*என்னையும் ஏதோ ஒன்று அவர்களுடன் சேவியர்புரம் செல்ல தூண்டியது. என்னுடைய உடல்நிலை மிக மோசமாய் இருந்தபோதும், என்னைப் போல வலியால் துடித்துக் கொண்டிருந்த எனது கணவரையும் கண்டுபிடித்து, எங்களது கிராமத்தை சேர்ந்த ஒருவருடைய டிராக்டர் வண்டியில் சுமார் 20 பேர்களை ஏற்றிக் கொண்டு எனது கிராமத்தை நோக்கி சென்றோம். அங்கு என்னுடைய மகன் துப்பாக்கி குண்டுகளால் சிதைந்து கிடந்ததைப் பார்த்து கல்லானேன். அருகே மேலும் இருவரது உடல்கள் கிடந்தது.*


*அழித்து ஒழிக்கப்பட்ட அந்த கிராமத்தின் மயான அமைதி என்னுள் ஒரு அச்சத்தை உண்டு செய்தது. சிதைந்து கிடந்த வீடுகள் பேயகளை நினைவுபடுத்தியது. நாங்கள் உடனடியாக திருக்கோவில் ஊருக்கு திரும்பினோம்."*

மாசன்னா என்ற வயதான பெண்மணி குறவர் பழங்குடியினர் வாழ்ந்து வந்த சேவியர் புரத்திலிருந்த மற்றொரு பாதிக்கப்பட்ட நபராவார். அந்த வயதான பெண்மணி தாக்குதல் நடத்தியவர்கள் எல்லோரையும் தனக்கு தெரியும் என்று கூறினார். இப்பெண்மணி வாழ்ந்து வரும் இடத்தின் அருகிலே இருந்த நெல் உற்பத்தியாளர்கள்தான் அன்று தாக்குதல் நடத்திய வன்முறையாளர்கள். அந்த இஸ்லாமிய நெல் உற்பத்தியாளர்களின் வயல்களிலேயே அந்த குறவர் சமூகத்தினர் வேலை செய்து வந்தனர். அம்மாதிரியான உறவுள்ள மக்களின் கிருத்துவகோயில், பாடசாலை, வீடுகள் என அனைத்தையும் நிர்மூலம் ஆக்கினது மட்டுமல்லாது அம்மக்களையும் அன்று கொன்று குவித்தனர்.

வீடுகளை இழந்து தமது வாழ்வாதரங்களை தொலைத்து அன்று கண்ட கொடுமைகளை தாங்க முடியாத அம்மக்களில் சிலர் பின்னர் தற்கொலை செய்து மாண்டனர்.

## 62. கல்முனை படுகொலை – 11 ஆகஸ்ட் 1990

மட்டக்களப்பு நகரத்திலிருந்து 40கி.மீ தொலைவில் கல்முனை உள்ளது. இதனைச்சுற்றி பண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, நிலாவணை ஆகிய கிராமங்கள் உள்ளன.




11.08.1990அன்று பண்டிருப்பு, கல்முனை, சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள் இராணுவச் சுற்றிவழைப்பினால் அச்சமடைந்து தத்தம் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தனர். இரைணுவம் வீடுகளுக்குள் குறிவைத்துச் சுட்டு மக்களை வெளியே வரும்படி செய்தது. இளம் ஆண்கள் தமது தேசிய அடையாள அட்டையை கையில் வைத்தபடி வெளியே வந்தனர். தாய்மார் தங்கள் குழந்தைகளை இறுகப் படித்தபடி வெளியே வந்தனர். 25 இளம் ஆண்களை இராணுவம் கல்முனைக் கிராமத்திலிருந்து காரைதீவு இராணுவ முகாமிற்குக் கூட்டிச் சென்றது. தமது பிள்ளைகளைத் தொடர்ந்து சென்ற தாய்மார் துவக்கினால் தாக்கப் பட்டனர். பல தாய்மார் மயக்கமுற்று விழுந்தனர்.

அடுத்த நாள் கூட்டிச் செல்லப்பட்டவர்களின் உறவினர்கள் கல்முனை நகருக்கூடாக காரைதீவு முகாமை நோக்கி நடந்து சென்றனர். கல்முனை நகரில் இராணுவம் இவர்களை வீதியருகே நிற்க வைத்தது. பெரும் தொகையான இராணுவம் அவ்விடத்திற்கு வந்து உறவினர்கள் மத்தியிலிருந்த இளம் பெண்களைத் தெரிவு செய்து அருகே இருந்த கட்டடத்திற்குள் கூட்டிச்சென்று அவர்களை பாலியல் வல்லுறவிற்குட்படுத்தியது. உறவினர்கள் மத்தியிலிருந்த ஆண்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் கொலைசெய்யப்பட்டனர். மொத்தமாக இரண்டு மணித்தியாலங்களில் 37 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்

முதல்நாள் காரைதீவுக்குக் கூட்டிச் செல்லப்பட்ட 25 இளம் ஆண்களும் பின்னர் காணப்படவில்லை. இரண்டு நாட்களில் 62 பொதுமக்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

## 63. துறைநிலாவணை படுகொலை - 12 ஆகஸ்ட் 1990



அம்பாறை மாவட்டத்தில் கல்முனை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் துறைநிலாவணைக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்கள் விவசாயத்தினையும், மீன்பிடியினையும் தமது பிரதான தொழிலாகக் மேற்கொண்டு வருகின்றார்கள்.

12.08.1990 அன்று காலை நீலாவணை, கல்லாறு இராணுவ முகாம்களிலிருந்த இராணுவத்தினர் துறைநிலாவணைக் கிராமத்தினைச் சுற்றிவளைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்கள். இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வயது வேறுபாடின்றி வீடுகளிலிருந்தவர்களும் வீதியாற் சென்றவர்களுமாக

அறுபதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பல பொதுமக்கள் காயமடைந்தார்கள்.


இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இளையதம்பி மனோகரன் -
02. இராசதுரை சிவானந்தராஜா 27
03. நவரட்ணகா சுமதி 28
04. நல்லதம்பி செல்வராசா 35
05. கந்தையா சிவானந்தன் -
06. கந்தக்குட்டி சுப்பிரமணியம் 40
07. கந்தக்ளகுட்டி திலகநாதன் 20
08. கணேஸ்தாஸ் சதாசிவம் 25
09. கண்மணி கிருபாகரன் 21
10. பூபாலப்பிள்ளை நிமலநாதன் 21
11. பாக்கியவதி அப்புத்துரை 35
12. பழனிவேல் பாக்கிராசா 28
13. வைரமுத்து உதயராஜா 20
14. வைரமுத்து செல்வராசா 15
15. வைரமுத்து சுதாகரன் 20
16. தம்பியப்பா நவரத்தினமூர்த்தி 28
17. தம்பிமுத்து அழகம்மா 33
18. தட்சணாமூர்த்தி சுதாகரன் 20
19. தினேஸ்குமார் உதயகுமார் 18
20. தங்கராசா ஆறுமுகம் 40
21. மகாலிங்கம் தம்பியப்பா 35
22. மாணிக்கம் குழந்தைவேல் 38
23. மகேஸ்வரன் சுதாகரன் 24
24. அ.ரவிச்சந்திரன் -
25. அழகுதுரை கிருஸ்ணபிள்ளை 40
26. அழகையா கமலநாயகி 23
27. பொன்னம்பலம் சின்னவன் 28
28. பெரியதம்பி இராசலட்சுமி 20
29. செம்பன் கதிரேசு -
30. வேலுப்பிள்ளை பாக்கியநாதன் 28
31. ச.சிவமோகன் 18
32. சுந்தரம் கனகசபை 38
33. சாமித்தம்பி சிவஞானமூர்த்தி -
34. சதாசிவம் சுகுமார் 22
35. சின்னத்தம்பி மகேஸ்வரி 28
36. சின்னத்தம்பி செல்லத்துரை -
37. சின்னமுத்து அன்னம்மா 45
38. சிவஞானமூர்த்தி சரோசினி 14
39. சிறிதரன் சிறிகாந்தராஜ் -
40. வடிவேல் சந்திரகுமார் 28
41. விஜயபால குணபால -
42. விஸ்வலிங்கம் லூர்த்துமேரி 21
43. வீரமலை சுவீராஜன் 23

44. வீரமலை சண்முகதாசன் 25
45. ரத்தினம் சுவேந்திரன் 20
46. ரவிக்குமார் ராஜபுத்திரன் 18
47. வேலுப்பிள்ளை பேரின்பநாயகி 21

## 64. ஏறாவூர் வைத்தியசாலை படுகொலை - 12 ஆகஸ்ட் 1990

11.08.1990 அன்று இராணுவத்தினர் செங்கலடி, கிரான் போன்ற கிராமங்களைச் சுற்றிவளைத்து மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். இராணுவத்தினரின் துப்பாக்கி பிரயோகத்தினால் காயமடைந்தவர்களில் பத்துப் பேரிற்கும் மேற்பட்டவர்கள் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார்கள்.



12.08.1990 அன்று இரவு 11.00 மணிக்கும் 12.00 மணிக்கும் இடையில் இராணுவத்தினரும் முசுலிம் குழுக்களும் இணைந்து ஏறாவூர் வைத்தியசாலையிற் சிகிச்சைபெற்று வந்த பொதுமக்கள் பத்துப் பேரையும் வைத்தியசாலையினுள் வைத்தே வெட்டியும் சுட்டும் படுகொலை செய்தார்கள்.

## 65. கோராவெளி, ஈச்சையடித்தீவு படுகொலை – 14 ஆகஸ்ட் 1990

கோராவெளி, ஈச்சையடித்தீவுக் கிராமங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ளன. இக்கிராமங்கள் இயற்கை வளம் நிறைந்த விவசாயக் கிராமங்களாகும். மக்கள் நெற்செய்கை மரக்கறிப் பயிர்ச்செய்கை போன்றவற்றில் ஈடுபட்டு வந்ததுடன், தங்களது கிராமத்திற்குரிய தனித்துவமான கலைகளையும் வளர்த்து வந்தார்கள். கோராவெளிக் கிராமத்தில் இந்து மதத்தவர்களின் பிரசித்திபெற்ற கோராவெளி அம்மன் ஆலயமும் அமைந்துள்ளது.



1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்திருந்தன. இராணுவத்தினரும் சிங்கள-முசுலிம் குழுக்களும் மக்கள் மீதான தாக்குலை நடத்திவந்தனர்.

14.08.1990அன்று நண்பகல் செங்கலடி, கல்லடி இராணுவ முகாம்களிலிருந்து வந்த இராணுவத்தினர் கோராவெளி, ஈச்சையடித்தீவு கிராமங்களைச் சுற்றிவளைத்து பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வீடுகளிலிருந்தவர்கள், வீதிகளிற் சென்றவர்கள், வயல்களில் வேலை செய்துகொண்டிருந்தவர்கள் எனப் பதினைந்து பேர் உயிரிழந்தார்கள். இருபத்தைந்து பேர் காயமடைந்தார்கள்.

## 66. நெல்லியடிச் சந்தை படுகொலை – 29 ஆகஸ்ட் 1990



யாழ். குடாநாட்டின் வடமராட்சிப் பகுதியில் நெல்லியடி, கரவெட்டிப் பிரதேசங்கள் அமைந்துள்ளன. இது யாழ்.- பருத்தித்துறை வீதியில் பருத்தித்துறையிலிருந்து மூன்று மைல் தூரத்தில் அமைந்துள்ளது. வடமராட்சியின் தெற்கு மற்றும் மேற்குப் பிரதேசங்களுக்கு மையமாக நெல்லியடி நகரமும் வடமராட்சியின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு மையமாக பருத்தித்துறை நகரும் அமைந்துள்ளது. நெல்லியடிப் பிரதேசத்தில் வாழ்கின்ற இருபத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களின் தேவைகளை நிறைவு செய்வதாக நெல்லியடிச் சந்தை உள்ளது.

29.08.1990 காலை 9:30 மணியளவில் வழமைபோல தமது அன்றாட தேவைகளை நிவர்த்தி செய்யும் முகமாக நெல்லியடி மத்திய சந்தைக்குப் பல தரப்பட்ட கிராமத்திலிருந்தும் மக்கள் ஒன்று கூடியிருந்தார்கள். வடமராட்சி வான் பரப்பிற்குள் பிரவேசித்த இரண்டு பொம்பர் விமானங்களும் ஒரு அவ்ரோ விமானமும் இணைந்து நெல்லியடி மத்திய சந்தைப் பகுதியை நோக்கி குண்டுத் தாக்குதலை நடத்தின. காலைவேளையில் சந்தையில் பொருட்களை வாங்குவதற்கும் விற்பதற்குமென வந்த மக்களில் சிறுவர்கள், பெண்கள் உட்பட பதினாறு பேர் சம்பவ இடத்தில் உயிரிழக்க இருபத்துநான்கு பேர் காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசையா புஸ்பவதி வியாபாரம் 50
02. ஜப்பான் - 50
03. நாகராசா ஆனந்தரவி வியாபாரம் 20
04. கிட்டினன் ஞானரூபன் மாணவன் 12
05. மகேசன் சண்முகேஸ்வரமூர்த்தி கமம் 36
06. முருகையா நிர்மலேஸ்வரன் கமம் 18
07. அப்புத்துரை குணரட்ணம் வியாபாரம் 54
08. பொன்னம்பலம் சோமஸ்காந்தசிவம் அத்தியட்சகர் 58
09. பொன்னையா மகேந்திரன் அதிகாரி 48
10. சோமாஸ்கந்தசிவம் மங்களநாயகிஅம்மை அதிபர் 58
11. செல்வன் மாணவன் 14
12. சந்திரசேகரம் வல்லிபுரம் கமம் 70

## 67. மண்டைதீவில் காணாமற்போனோர் - 25 ஆகஸ்ட், 23 செப்ரெம்பர் 1990

யாழ் நகரத்திற்குத் தெற்காக வேலணைப் பிரதேசசெயலகப் பிரிவினுள் ஆயிரத்து இருநூறிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற மண்டைதீவுப் பிரதேசம் அமைந்துள்ளது.

25.08.1990அன்று இராணுவத்தினர் ஊர்காவற்றுறையிலிருந்து மண்டைதீவு நோக்கி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். இந்நடவடிக்கையின் போது மக்களைப் பாதுகாப்புக் கருதி ஆலயங்களிற் தங்குமாறு முதல் நாள் உலங்குவானூர்தியிலிருந்து துண்டுப் பிரசுரங்களை

வழங்கி மக்களுக்கு அறிவித்தனர். இதன்படி மண்கும்பான், அல்லைப்பிட்டி போன்ற கிராமத்து மக்கள் மண்கும்பான் அந்தோனியார் தேவாலயத்திலும், அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் ஆலயத்திலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.



24.08.1990அன்று மண்கும்பான் அந்தோனியார் ஆலயத்திலும், 25.08.1990அன்று அதிகாலை அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் கோயிலிலும் தஞ்சமடைநத் மக்களில் பதினைந்து வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்டவர்களை இராணுவத்தினர் கைதுசெய்தனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர், இருவர் என மண்டைதீவில் இருபத்தெட்டுப் பேரும், அல்லைப்பிட்டியில் முப்பத்திரண்டு பேரும், மண்கும்பானில் பத்துப் பேருமாக மொத்தம் எழுபது பேர் கைது செய்யப்பட்டனர்.



28.08.1990 இல் கைதுசெய்தவர்களில் ஒரு சிலர் விடுவிக்கப்பட்டனர். பின்பு 23.09.1990 இராணுவத்தினரும் துணைக்குழுக்களும் சேர்ந்து மண்கும்பான் அ.த.க பாடசாலையிலிருந்து பதினெட்டு மாணவர்களைக் கைது செய்தனர். எல்லாமாக மூன்று கிராமத்திலும் எண்பத்தெட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டனர். ஆனால் இவர்கள் எவரும் இன்று வரை விடுதலையாகவில்லை.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஒரே குடம்பத்தைச் சேர்ந்த விஜயரட்ணம். சுகிர்தரட்ணம், பிரேமரட்ணம் ஆகிய மூன்று பிள்ளைகளின் தந்தையான யேசுரட்ணத்திடம் இது தொடர்பாகக் கேட்ட போது பின்வருமாறு,

*"கைது செய்யப்பட்ட என் பிள்ளைகளின் நிலை தொடர்பாக 1991 ஆம் ஆண்டு முதல் வாரத்தில் நாங்கள் சிறிதர்வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி செயலகத்திற்குச் சென்று டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டோம். அப்போது அவர் அநேகமாக மூன்று பிள்ளைகள் என்றால் ஒன்றும் நடந்திருக்காது நான் அனுராதபுரம் போய்வந்து சொல்கிறேன் என்றார். அப்போது நாங்கள் பிள்ளைகளின் ஆவணங்களைக் கொடுத்தபோது அதைப் பிரதி பண்ணித் தரும்படிகேட்டார். அதன்படியே நாங்கள் அடுத்த நாள் அவரிடம் கையளித்தோம். அதன் பின்பு கூட்டுப்படைத் தளபதியாக இருந்த டென்சில் கொப்பேகடுவ அவர்களிடம் மனு செய்தோம். நேரிலும் அவரிடம் பல தடவைகள் கேட்டோம். ஒவ்வொரு முறையும் டக்ளஸ் தேவானந்தா வோடுதொடர்பு கொண்டீர்களா என்றுதான் கேட்பார். கடைசி முறையாக 13.05.1992 நானும், அப்போதைய கல்விப்பகுதி பிரதி அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன் அவர்களும் டென்சில் கொப்பேகடுவ அவர்களைக் கேட்டபோது, அவர் நான் இம்முறை தீவுப்பகுதிக்குப் போய்வந்து உங்கள் பிள்ளைகளைக் காட்டுகிறேன் என்றார். அதன்பின்னர் 1992 ஆனி மாதம் இறுதி வாரத்தில் கொழும்பு பார்க் வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி செயலகத்தில் டக்ளஸ்தேவானந்தாவைக் கேட்டோம். அவரும் தான் இம்முறை தீவுப்பகுதிக்குப் போய் வந்து சொல்லுவதாகக் கூறினார். 14.08.1992 திருமலை சீ.சீ.எம்.பி சிறையில் எமது பிள்ளைகள் உட்பட எண்பது பேர் மதிய உணவின் பின்னர் பாதுகாப்பாக வெளியே கொண்டு செல்லப்பட்டனர் என தகவல் கிடைத்தது. அதன் பின்னர் 23.12.1994 இல் ஜனாதிபதி*

சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிடம் மனு பண்ணினோம். அப்போது அவர் ஆணைக்குழு விசாரணை செய்யப்போவதாகவும், அதற்கு எங்களை விண்ணப்பம் பண்ணும்படியும் சொன்னார். அதன்படியே ஆணைக்குழு விசாரணைக்கு விண்ணப்பித்தோம். 12.06.1996 இல் ஆணைக்குழு விசாரணைக்கு வரும்படி அழைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அப்போது ஆணைக்குழுவினர் உங்கள் பிள்ளைகளைப்பற்றி டக்ளஸ் தேவானந்தாவிடம் கேளுங்கள் என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் கேட்கமுடியாது நீங்கள் கேட்டுச்சொல்லுங்கள் என்று கூறினோம். அதன்படி தாங்கள் கேட்டுச்சொல்லுவதாகக் கூறினார்கள். ஆனால் இதுவரை எவ்வித பதிலும் எனக்குக் கிடைக்கவில்லை."

இராணுவத்தினராலும் துணைக்குழுக்களாலும் கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்களில் பலர் சித்திரவதைகளின் பின் உயிரிழந்ததாகவும், அவர்களது உடல்களை மண்டைதீவில் வீட்டு வளவினுள் உள்ள கிணற்றிற் போட்டதாக ஊர் மக்கள் தெரிவித்தனர். இவர்களிற் சிலரின் எலும்பு கூடுகளும் மீட்கப்பட்டன. இவ்வாறு காணாமற்போய் உயிரிழந்தவர்களின் நினைவாக மண்டைதீவில் நினைவுக்கல் கட்டப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைப்பிள்ளை செல்வநாயகம் கடற்றொழில் 35
02. இ.சுதாகரன் - 20
03. இ.விபுலானந்தர் - 30
04. இரட்ணம் ஜெயசீலன் - 23
05. உதயகுமார் - -
06. ந.குகானந்தராசா - 24
07. பாலசிங்கம் - 30
08. பத்திநாதர் டயஸ் - 22
09. பத்திநாதர் சென்யூட் - 27
10. பழனித்துரை சத்தியபாலன் கமம் 34
11. பி.தவம் - 18
12. பி.ஜெயச்சந்திரன் - 18
13. பி.சதீஸ்வரன் - -
14. பி.பத்மராசா - 20
15. ரி.இருதயராசா - 26
16. ரி.ஆரோக்கியநாதன் - 23
17. ரி.அருள்நேசன் - 22
18. ரி.யோகராசா - 18
19. ரி.செல்வரட்ணம் - 25
20. ரி.ஞானேந்திரன் - 20
21. ரி.சுந்தரலிங்கம் - 24
22. ரி.சாந்தலிங்கம் - 20
23. ரி.சிமோன் - 20
24. ரி.ராஜ்குமார் - 32
25. ரி.ராதாகிருஸ்ணன் - -
26. ரி.ரவீந்திரன் - 21
27. வை.எட்வேட் - 21
28. த.பாலரட்ணம் - 20
29. திருநாயகம் சட்டநாதபிள்ளை கமம் 32
30. மா.தவசீலன் - 24

31. மடுதீன் அன்ரனிற் - 21
32. மிசேல் ஸ்ரானிக் - 19
33. மிசேல் சில்வஸ்ரார் - 32
34. அ.அழகராசா - 19
35. அ.ஜெயசீலன் - 23
36. அன்ரன் அசில்லாஸ் மேசன் 28
37. அன்ரன் அருள்தாஸ் - 26
38. அந்தோனி ஆரோக்கியராசா - 23
39. அந்தோனி றொபேட் - 20
40. ஆர்.முருகானந்தன் - 21
41. ஆர்.ரவீந்திரன் - 20
42. அலம்பின் றொபேட் - 18
43. ஜெயக்குமார் - 22
44. ஜோர்ச் சில்வஸ்ரார் - 20
45. ஜேசுதாஸ் - -
46. யோ.விஜயபாலன் - 21
47. நோபேட் ரமேஸ் - 19
48. கே.இந்திரகுமார் - 21
49. கே.இராசசேகரன் - 21
50. கே.பிரமாதீஸ்வரன் - 22
51. கே.பீற்றபோல் - 17
52. கே.விஜயகுமார் - 19
53. பொ.காந்தலிங்கம் - 24
54. செ.சுவக்கிப்பிள்ளை - 30
55. சொர்ணலிங்கம் லிங்கேஸ்வரன் கமம் 21
56. ச.சதானந்தராசா - 28
57. சாள்ஸ் அன்ரனி அன்னதாஸ் - 27
58. சி.அரவிந்தன் - 20
59. சி.சத்தியசீலன் - 29
60. சி.விமலதாஸ் - 20
61. சிவபாலசிங்கம் - 28
62. வி.டொன்போஸ்கோ - 19
63. விஜயரட்ணம் ரவி - 23
64. வில்பிரேட் தேவராசா - 25
65. எஸ்.பிறேமரட்ணம் மாணவன் 16
66. எஸ்.திருச்செல்வம் - -
67. எஸ்.மகேந்திரன் - 20
68. எஸ்.அன்பழகன் - 19
69. எஸ்.அருள்நேசன் - 28
70. எஸ்.செல்வநாதன் - 21
71. எஸ்.சுகிர்தரட்ணம் - 19
72. எஸ்.சிவரூபன் - 16
73. எஸ்.சிவகுமார் - 19
74. எஸ்.சிவபாலன் - 19
75. எஸ்.ரஞ்சித்குமார் - 15
76. எஸ்.ரவீந்திரன் - 22
77. எஸ்.லிங்கேஸ்வரன் - 21
78. என்.இரட்ணசிங்கம் - 45

79. என்.ஜேசுதாஸ் - 28
80. எம்.சிந்தாத்துரை - 35
81. என்.விஜயரட்ணம்

வேறு தினங்க்களில் காணாமற்போனவர்களின் கிடைக்கப்பெற்ற விபரம்

(பெயர் வயது காணா.போன திகதி)

01. நிசோலஸ் டயஸ் எட்வின் 17 17-07-1996
02. பி.வரோதயநாதன் 18 25-05-1993
03. தாவீது பென்ஜமீன் 25 1992 - ஒகஸ்ட்
04. என்.சச்சிதானந்தராசா 24 1986
05. வி.பாலரஞ்சன் 39 1991 – பெப்ரவரி

## 68. சத்துருக்கொண்டான் படுகொலை - 09 செப்ரெம்பர் 1990

மட்டக்களப்பு நகரிலிருந்து இரண்டு கி.மீ. தூரத்தில் வடக்குத் திசையில் சத்துருக்கொண்டான் கிராமம் அமைந்துள்ளது. சத்துருக்கொண்டான் எல்லைக் கிராமங்களாக திராய்மடு, அரசையடி போன்ற கிராமங்கள் அமைந்துள்ளன. சிறிய குளத்தின் கீழ் வயல் நிலங்களை உள்ளடக்கி இக்கிராமம் அமைந்துள்ளது.



1990களின் ஆரம்பத்தில் உள்நாட்டு யுத்தம் மீண்டும் தீவிரமடைந்ததனைத் தொடர்ந்து சத்துருக்கொண்டானில் பாரிய இராணுவ முகாமினை சிறீலங்கா இராணுவத்தினர் அமைத்தார்கள். இதனால் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், கோயில்களிலும் பொது இடங்களிலும் தஞ்சமடைந்தார்கள். இவ்வாறு தஞ்சமடைந்த மக்களை மீண்டும் அவர்களின் வீடுகளில் சென்று குடியமருமாறு இராணுவத்தினர் கூறியதனைத் தொடர்ந்து, மக்கள் தங்களின் வீடுகளில் குடியமர்ந்தார்கள். இராணுவத்தின் கூற்றை நம்பிய தத்தமது வீடுகளில் வசிக்க வந்த மக்களனைவரும் கைதுசெய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டவர்களில் எண்பத்தைந்து பேர் பெண்கள்.

இவர்களை முகாமிலிருந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் பாலியல் வல்லுறவிற்குற்படுத்திபின், அவர்களின் மார்பகங்கள், கை, கால் போன்றவற்றினை வெட்டி மிக மோசமான முறையிற் சித்திரவதை செய்து படுகொலை செய்தார்கள். கைது செய்யப்பட்ட ஐந்து குழந்தைகள் உட்பட அறுபத்தெட்டுச் சிறுவர்களையும் மோசமான சித்திரவதைகளின் பின் சுட்டுக்கொலை செய்ததுடன், பதினேழு பேரளவிலான ஆண்களின் அங்கங்களை வெட்டிச் சித்திரவதை செய்து படுகொலை செய்தார்கள். மொத்தமாக இருநூற்றைந்து பேர் இச்சத்துருக்கொண்டான் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களில் இருபத்தொரு வயதான கந்தசாமி கிருஸ்ணகுமார் மட்டுமே காயங்களுடன் தப்பி வந்து சம்பவத்தினை வெளிப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மக்கள் அமைப்பு சம்பவத்தினை வெளிப்படுத்தியது.

ஆனால் இராணுவத்தினர் இவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை எனத் தெரிவித்ததுடன், மக்கள் அமைப்பின் தலைவரான அருணகிரிநாதன் அவர்களை மிரட்டி இவ்வாறான சம்பவம் ஒன்று நடைபெறவில்லை என எழுத்து மூலம் பொய் அறிக்கையினைத் தருமாறு வற்புறுத்தினர். இதனையடுத்து மக்கள் அமைப்பின் தலைவர் தனது பதவியினைத் துறந்தார்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)



01. இ.நாகம்மா வீட்டுப்பணி 26
02. இ.தீபா - 10
03. இ.ஜெகதீசன் - 10
04. ஜி.குமுதினி - 12
05. ஜி.நேசம்மா - 25
06. ஜி.தேவராசி - 27
07. ஜி.சந்திரியா - 19
08. ஜி.சீனித்தம்பி - 70
09. ஜி.வனிதா - 12
10. ஈ.ஜீவநாதன் - 30
11. யு.மரியமுத்து வீட்டுப்பணி 33
12. யு.கோபிக்கண்ணன் - 12
13. யி.சீனித்தம்பி - -
14. உ.காளிமுத்து சுயதொழில் 55
15. உமைத்தம்பி – 70

16. நல்லையா ரமச்சந்திரன் சுயதொழில் 44
17. க.நல்லையா சுயதொழில் 72
18. க.சுரேஸ்கரன் - 11
19. கந்தன் இளையதமபி - 55
20. கமலா - 09
21. கணபதிப்பிள்ளை தங்கமுத்து சுயதொழில் 46
22. பி.கந்தசாமி - 29
23. பி.கமலநாதன் - 09
24. பி.கவிதா - 12
25. பி.தமேந்தினி - 04
26. பி.ஆச்சிமுத்து - 76
27. பி.பொன்னம்மா - 70
28. பி.சந்தனம் - 37
29. பி.சிறிலட்சுமி - 18
30. பி.வினோதினி - 12
31. பி.வசந்தி - 23
32. பிரபா - 02
33. ரி.டிலானி - 05
34. ரி.நந்தினி - 16
35. ரி.நாதன் - 12
36. ரி.நாகேஸ்வரி - 37

37. ரி.நிதர்சினி - 12
38. ரி.குகன் - 10
39. ரி.கிருபாகரன் - 03
40. ரி.கண்மணி - 32
41. ரி.கண்ணன் - 25
42. ரி.பூபாலப்பிள்ளை - 65
43. ரி.பரம்சோதி - 37
44. ரி.பிரதீபன் - 05
45. ரி.தில்லையம்மா - 63
46. ரி.மகாலட்சுமி - 31
47. ரி.மலை - 55
48. ரி.ஜெயக்காந்தன் - 10
49. ரி.ஜெகன் - 09
50. ரி.மோகனச்சந்திரன் - 27
51. ரி.செல்வா - 07
52. ரி.சிறி - 28
53. ரி.விஜயகுமார் (குமரன்) - 08
54. ரி.விஜயலட்சுமி - 29
55. ரி.வசந்தி - 01
56. ரி.ராசேந்திரன் - 04
57. ஐ.முருகன் - 65
58. வை.தங்கம்மா - 38
59. வைரமுத்து அற்புதவடிவேல் சுயதொழில் 46
60. த.கணபதிப்பிள்ளை - 50
61. தம்பிப்பிள்ளை 72
62. தம்பிஜயா கிருபைரத்தினம் சுயதொழில் 50
63. ம.செல்வநாயகம் - 55
64. மு.ராமையா - 70
65. ஆர்.கமலராஜ் - 11
66. ஆர்.நேசம்மா - 62
67. ஆர்.சுதாகரன் - 10
68. ஆர்.விஜி - 08
69. ஆர்.வசந்தி - 15
70. அழகையா நாகரெட்ணம் வீட்டுப்பணி 16
71. அழகையா மஞ்சுளா வீட்டுப்பணி 14
72. அழகையா சௌந்திரராஜன் மாணவர் 12
73. ஜெ.விஜயலட்சுமி - 10
74. ஜெ.ரமணி - 02
75. கே.மூத்ததம்பி - 79
76. கே.இளையதம்பி - 55
77. கே.ஈழன் - 15
78. கே.நாகரட்ணம் - 40
79. கே.நல்லையா - 72
80. கே.நல்லம்மா – 66
81. கே.கரிகரன் - 08
82. கே.கதிர்காமத்தம்பி - 75
83. கே.கதிர்காமத்தம்பி - 68

84. கே.குமுதா - 23
85. கே.கமலன் - 06
86. கே.கீதா - 12
87. கே.கிருஸ்ணபிள்ளை - 14
88. கே.கண்ணன் - 10
89. கே.பாக்கியம் - 46
90. கே.தாரணி - 04
91. கே.தம்பையா - 65
92. கே.தங்கம்மா வீட்டுப்பணி 75
93. கே.தங்கவேல் 26
94. கே.அரசம்மா - 60
95. கே.நேசம்மா - 48
96. கே.சதீஸ் - 04
97. கே.சியாமளா - 13
98. கே.சின்னமுத்து - 66
99. கே.சிவதர்சன் - 05
100. கே.சவுந்தரம் - 38
101. கே.விமலா - 02
102. கே.வசிகலா - 13
103. கே.ராசாத்தி - 12
104. கே.ரமேஸ்கரன் - 07
105. பெரியதம்பி சுயதொழில் 75
106. தேவி - 32
107. செபஸ்லீன் செல்வநாயகம் கூலித்தொழில் 45
108. வேணுராஜ் - 25
109. லெட்சுமி சுயதொழில் 48
110. ஞா.சௌந்தரராயன் - 26
111. சாந்திமதி தனியார்தொழில் 20
112. சாமித்தம்பி அழகையா கூலித்தொழில் 34
113. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை சுயதொழில் 68
114. சீனி கோபால் - 57
115. சித்திராதேவி - 29
116. சிவதர்சினி - 04
117. வி.நல்லையா - 27
118. வி.பூமணி - 45
119. வி.யோதிவடிவேல் மாணவர் 06
120. வி.சர்மிளா மாணவர் 08
121. வி.சாந்திமதி - 20
122. வி.லட்சுமி - 48
123. இரட்ணராஜா ருக்தி - 06
124. ஏ.ஜீவா - 15
125. எ.உமைத்தம்பி - 70
126. ஏ.நவரட்ணம் - 45
127. ஏ.மஞ்சுளா - 18
128. ஏ.ஆத்தப்பிள்ளை - 72
129. ஏ.அழகையா - 10
130. ஏ.அருள் - 09
131. ஏ.பொன்னுத்துரை - 62

132. ஏ.சுதா - 09
133. ஏ.சீத்தா - 18
134. எஸ்.இந்திராணி - 10
135. எஸ்.ஜீவமலர் - 25
136. எஸ்.நாகதேசி - 12
137. எஸ்.நிர்மலா - 13
138. எஸ்.நல்லையா - 45
139. எஸ்.கந்தசாமி - 29
140. எஸ்.காசிபதியர் - 60
141. எஸ்.கஜேந்தினி - 02
142. எஸ்.கவிதா - 09
143. எஸ்.குணரட்ணம் - 33
144. எஸ்.பாலிப்போடி - 62
145. எஸ்.பிரியா - 03 மாதம்

146. எஸ்.புண்ணியமூர்த்தி - 13
147. எஸ்.தங்கம்மா - 57
148. எஸ்.தங்கேஸ்வரி - 24
149. எஸ்.தவகுணேஸ்வரன் - 25
150. எஸ்.மகேஸ்வரி - 28
151. எஸ்.மலர் - 09
152. எஸ்.அழகையா - 50
153. எஸ்.யோகராசா - 14
154. எஸ்.நேசம் - 52
155. எஸ்.பொன்னம்பலம் - 55
156. எஸ்.பொன்னம்மா - 24
157. எஸ்.தெய்வானை - 45
158. எஸ்.செல்வராசா - 31
159. எஸ்.ஞானேஸ்வரி - 38
160. எஸ்.சபாபதிப்பிள்ளை - 70
161. எஸ்.சுரேஸ் - 02
162. எஸ்.சரோசாதேவி - 28
163. எஸ்.சின்னப்பிள்ளை - 35
164. எஸ்.சின்னத்தம்பி - 27
165. எஸ்.சீவரத்தினம் - 12
166. எஸ்.வடிவேல் - 65
167. எஸ்.விஜயன் - 01
168. எஸ்.வினோதரன் - 05
169. எஸ்.வள்ளிப்பிள்ளை - 75
170. எஸ்.ராசலிங்கம் - 58
171. எஸ்.ரவீந்திரன் - 21
172. எய்.நாகரெட்ணம் சுயதொழில் 45
173. எய்.சுதா மாணவர் 09
174. என்.இராசம்மா - 70
175. என்.குமுதினி - 18
176. என்.பாக்கியம் - 66
177. என்.பாலாத்தை - 70
178. என்.பிரேமா - 18

179. என்.பிரதீபன் - 05
180. என்.தர்சினி - 06
181. என்.தீபன் - 09
182. என்.ஜெகன் - 12
183. என்.சொர்ணம்மா - 44
184. என்.வேணுதாஸ் - 03 மாதம்
185. என்.வேணுராஜ் - 04 மாதம்
186. என்.ஞானரத்தினம் - 32
187. என்.சித்திராதேவி - 22
188. என்.சிவதர்சன் - 25
189. எம்.பாக்கியம் வீட்டுப்பணி 53
190. எம்.பரமேஸ்வரி - 32
191. எம்.சைலயா - 07
192. எம்.வைரமுத்து - 55
193. எம்.துளசி - 04
194. எம்.பெரியதம்பி - 75
195. எம்.தேவகி - 25
196. எம்.சுபோசினி - 12
197. எம்.சிவஞானம் - 35
198. எம்.விஜயன் - 19
199. எம்.ராசா - 24

## 69. நற்பிட்டிமுனை படுகொலை – 10 செப்ரெம்பர் 1990

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை நகரிலிருந்து மூன்று கி.மீ தூரத்தில் அமைந்துள்ள நற்பிட்டிமுனைக் கிராமம் கல்முனைப் பிரதேச செயலாளர் பிரிவினிலுள்ள கிராமங்களில் ஒன்றாகும். சேனைக்குடியிருப்பு, துறைநிலாவணை, மல்வத்தை, வீரமுனை போன்ற கிராமங்கள் நற்பிட்டிமுனையைச் சூழ்ந்து அமைந்துள்ளன. இங்கு வாழும் மக்கள் விவசாயத்தினையே



பிரதான தொழிலாகக் கொண்டுள்ளார்கள். கிராமத்தின் தென்புறம் சிறிய ஆற்றினைக் கொண்ட ஓர் அழகான கிராமமாகும்.

10.09.1990அன்று காலை கல்முனையில் நிலைகொண்டிருந்த விசேட அதிரடிப்படையினர் நற்பிட்டிமுனைக் கிராமத்தினைச் சுற்றிவளைக்கும் நோக்குடன் வரும்போது வீதியாற் சென்ற இளைஞர்களைக் கைதுசெய்துகொண்டு நற்பிட்டிமுனைக் கிராமத்தினைச் சுற்றிவளைத்தார்கள். சுற்றிவளைத்த இராணுவத்தினர் நற்பிட்டிமுனைக் கிராமத்திலிருந்த வீடுகளின் கதவுகளை உடைத்துச் சென்று மேலும் இளைஞர்களை கைதுசெய்து கல்முனை சிறீலங்கா அதிரடிப்படை முகாமிற்குக் கொண்டு சென்றனர். கொண்டுசெல்லப்பட்ட இருபத்துமூன்று

இளைஞர்களும் கடும் சித்திரவதைகளினால் உயிரிழந்தார்கள். 12.09.1990 அன்றுசித்திரவதையினால் உயிரிழந்த அனைவரது உடல்களையும் தம்பிலுவில் கிராமத்தில் ஒரே குழியினுள் போட்டுப் புதைத்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 இளையதம்பி செல்வராசா 30
02 கனகசூரியர் கோபாலசிங்கம் 28
03 கனகரத்தினம் தங்கவேல் 19
04 கந்தப்போடி புஸ்பராசா 23
05 காசிப்பிள்ளை சிவகுமார் 31
06 குழந்தைவேல் பொன்னுத்துரை 26
07 குலசேகரம் செல்வநாயகம் 26
08 கணபதிப்பிள்ளை நேசதுரை 22
09 குணரத்தினம் முரளிதரன் 21
10 குணரத்தினம் சுதாகரன் 23
11 துரையப்பா நடேசன் 23
12 தம்பிமுத்து பாக்கியராசா 27
13 தம்பிராசா விவேகானந்தன' 22
14 மயில்வாகனம் பரமேஸ்வரன் 27
15 ஆறுமுகம் நடேசன் 29
16 வெள்ளைப்பொடி தவராசா 23
17 ஞானப்பிரகாசம் பூவானில் 22
18 சதாசிவம் தங்கத்துரை 23
19 சிவநாதபிள்ளை தங்கத்துரை 23
20 வீரக்குட்டி தங்கவேல் 27
21 வரதராசன் வரதீஸ்வரன் 20
22 ராசமாணிக்கம் தியாகராசா 23
23 ஏகாம்பரம் தமிழ்வாணன் 19

## 70. வந்தாறுமூலை-90 படுகொலை – 05, 23 செப்ரெம்பர் 1990



இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு அமைந்துள்ளது. இம் மாவட்டத்தில் வந்தாறுமூலைக் கிராமதத்தில் கிழக்குப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இலங்கையிலுள்ள பதின்மூன்று பல்கலைக்கழகங்களில் கிழக்குப் பல்கலைக்கழகமும் ஒன்றாகும். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மூவாயிரம் மாணவர்கள் வரை ஆண்டு தோறும் கல்வி கற்கிறார்கள். இவர்களில் ஏறக்குறைய ஐநூறு முதல் எழுநூறு வரையான பட்டதாரிகள் ஆண்டுதோறும் வெளியேறுகின்றார்கள். இப் பல்கலைக்கழகத்தில் கலை, வர்த்தகம், முகாமைத்துவம், விஞ்ஞானம், பௌதீகவியல், கணினி, இசை, நடனம் போன்ற பல்வேறு துறைகள் தமிழ்மொழி மூலம் கற்பிக்கப்படுகின்றன.

1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உள்நாட்டு யுத்தம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் பொதுமக்கள் மீது சிறீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கின. இதன் விளைவாகப் பொதுமக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்தார்கள். உலகத்தில் பல்கலைக்கழகங்கள், வைத்தியசாலைகள் பாடசாலைகள் வணக்கத்தலங்கள் போன்றவற்றில் பொதுமக்கள் தங்களைப் பாதுகாப்பதற்காகச் தஞ்சமடைவது வழக்கமாகும். அவ்வாறே கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் பொதுமக்கள் தஞ்சமடைந்தனர்.

05.09.1990அன்று சத்துருக்கொண்டான் இராணுவ முகாமிலிருந்து பெருந்தொகையான இராணுவத்தினர் வாகனங்களில் பல்கலைக் கழகத்திற்கு வந்து பல்கலைக்கழகத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்த இளைஞர்களில் 158 பேரைக் கைதுசெய்து கைகள், கால்கள் கட்டி இராணுவ வாகனங்களில் ஏற்றி, எல்லையோரக் கிராமங்களுக்குக் கொண்டு சென்று, துப்பாக்கிகளால் சுட்டும், ஏனைய கூரிய ஆயுதங்களினால் தாக்கிப் படுகொலை செய்தனர்.

23.09.1990 இல் மீண்டும் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு வந்த இராணுவத்தினர் அங்கு தஞ்சமடைந்திருந்த 16 பொதுமக்களை கைதுசெய்து கொண்டு சென்று, முதல் நாள் போன்றே இவர்களையும் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமது உயிர்களைப் பாதுகாப்பதற்காக தமது வீடுகள், சொத்துக்கள் உட்பட அனைத்து உடமைகளையும் இழந்து மூன்றுவேளை உணவினை ஒழுங்காக உண்ண முடியாமல் அகதிகளாக இருந்த பொதுமக்களில் இருநூற்றிஇருபத்தாறு பேர் இராணுவத்தினரால் கைதுசெய்து கொண்டு செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். அத்துடன், பலர் காணாமல் போனார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 இளையதம்பி பாக்கியநாதன் தொழிலாளி 22
02 இராசையா ஜெயநாதன் தொழிலாளி 35
03 இராசையா டேவிட் சாரதி 34
04 இராசதுரை கனகசபை கடற்றொழில் 18
05 நாகராசா ரகுநந்தன் தொழிலாளி 27
06 நடராசா ஜோச்ஸ்ரான்லி அரசஉத்தியோகத்தர் 39
07 நடேசன் சுப்பிரமணியம் சுயதொழில் 29
08 நவரத்தினம் பிரியதர்சினி - 5
09 நல்லதம்பி மகேந்திரன் தொழிலாளி 28
10 நல்லதம்பி நாகராசா சுயதொழில் 25
11 கந்தையா கதிரவேல் தொழிலாளி 20
12 கந்தையா தவராசா தொழிலாளி 18
13 கந்தையா ஆனந்தரெட்ணம் கடற்றொழில் 28
14 கந்தையா செல்வராசா தொழிலாளி 28
15 கந்தப்போடி ஜெயசீலன் தொழிலாளி 19
16 கந்தப்போடி செல்வராசா தொழிலாளி 45
17 கந்தசாமி நவரெட்ணம் சுயதொழில் 19
18 கந்தசாமி சிறிஸ்கந்தராசா சுயதொழில் 24
19 கதிராமப்போடி பரமேஸ்வரி வீட்டுப்பணி 31
20 கணேசன் தியாகராசா தொழிலாளி 24

21 கிருஸ்ணப்பிள்ளை முருகேசு தொழிலாளி 24
22 கருணாகரன் அருணாசலம் தொழிலாளி 29
23 கணபதிப்பிள்ளை தங்கத்துரை சுயதொழில் 25
24 கணபதிப்பிள்ளை முருகையா தொழிலாளி 18
25 பூபாலப்பிள்ளை தெய்வேந்திரமூர்த்தி அரசஊழியர் 33
26 பஞ்சாசரம் நடராசா தொழிலாளி 25
27 வைரமுத்து புஸ்பராசா சுயதொழில் 40
28 வைரமுத்து தர்மலிங்கம் சுயதொழில் 60
29 தாமோதிரம் வள்ளிப்பிள்ளை விவசாயம் 77
30 தம்பிஐயா ஜெகன் தொழிலற்றோர் 11
31 தம்பியப்பா வினாயகமூர்த்தி சாரதி 26
32 தம்பிமுத்து பீதாம்பரம் மாணவர் 18
33 மார்க்கண்டு மகேந்திரன் தனியார்தொழில் 19
34 மாமாங்கம் சண்முகநாதன் கடற்றொழில் 18
35 மாரியப்பா தமிழ்செல்வன் மாணவர் 15
36 முத்தையா கந்தசாமி மாணவர் 19
37 முத்துப்பிள்ளை தருமலிங்கம் தொழிலாளி 69
38 மூத்ததம்பி சின்னமுத்து தொழிலற்றோர் 70
39 முத்துலிங்கம் மோகனசுந்தரம் கடற்றொழில் 27
40 மகேந்திராஜா சிலக்சனா தொழிலற்றோர் 6
41 அமிர்தலிங்கம் ஜெயசங்கர் சுயதொழில் 36
42 அழகிப்போடி குமார் மாணவர் 21
43 அழகையா யோகராசா தொழிலாளி 19
44 அருமைத்துரை விமலன் தொழிலாளி 18
45 அருமைத்துரை இன்பம் சுயதொழில் 18
46 அருணாச்சலம் சின்னத்தம்பி கடற்றொழில் 44
47 ஆறுமுகம் கந்தலிங்கம் சுயதொழில் 30
48 ஆறுமுகம் கிருபாமூர்த்தி தொழிலாளி 26
49 ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை தொழிலாளி 22
50 ஆறுமுகம் விவேகானந்தன் தனியார்தொழில் 29
51 அல்போன்ஸ் நெல்சன் மாணவர் 18
52 ஜோசப் சுந்தரலிங்கம் தொழிலாளி 33
53 ஜோசப் சிவகுமார் தொழிலாளி 16
54 கே.கனேஸ்வரி தனியார்தொழில் 26
55 கே.சிதேவி தொழிலற்றோர் 5
56 கோ.மகேந்திரன் சுயதொழில் 27
57 சோமலிங்கம் வாசகன் அரசஊழியர் 70
58 செல்லையா உதயநாதன் விவசாயம் 28
59 செல்லையா சுப்பிரமணியம் சுயதொழில் 59
60 செல்வராசா உதயகுமார் சுயதொழில் 31
61 செல்வராசா நவரெத்தினம் தொழிலாளி 27
62 வெள்ளைச்சாமி கண்ணையா விவசாயம் 45
63 வேலுப்பிள்ளை பாக்கியராசா சுயதொழில் 32
64 வேலுப்பிள்ளை யோகன் சுயதொழில் 30
65 வேலுப்பிள்ளை ராசு தொழிலாளி 22
66 ஞானமூர்த்தி கதிர்காமத்தம்பி தனியார்தொழில் 20
67 சுப்பையா பாலசுப்பிரமணியம் சுயதொழில் 40
68 சுப்பையா எட்மன் சுயதொழில் 19

69 சதாசிவம் குபேரன் சுயதொழில் 19
70 சி.சரோசாதேவி தனியார்தொழில் 25
71 சின்னப்பு யோகராசா சுயதொழில் 28
72 சின்னத்துரை புஸ்பராசா கடற்றொழில் 22
73 சின்னத்தம்பி யோனாஸ் சுயதொழில் 35
74 சின்னராசா ராஜேந்திரம் மாணவர் 23
75 சீனித்தம்பி பிள்ளைநாயகம் தொழிலாளி 22
76 சித்திரவேல் சதாநந்தகுமார் மாணவர் 16
77 சிதம்பரப்பிள்ளை தணிகாசலம் அரசஊழியர் 40
78 சிவகுரு நடராசா சுயதொழில் 37
79 சிவசுப்பிரமணியம் கிருபாகரன் மாணவர் 21
80 சிவலிங்கம் செல்லத்தம்பி சுயதொழில் 21
81 சண்முகம் செல்வரெத்தினம் மாணவர் 16
82 வீரக்குட்டி பாலகப்போடி தொழிலாளி 55
83 எ.காசுபதி தொழிலாளி 74

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01 இந்துமதி மாணவர் 15
02 புலேந்திரன் சாந்தமேரி கடற்றொழில் 04
03 தம்பியப்பா குழந்தைவேல் சுயதொழில் 25
04 தங்கராசா பிரபானந்தராசா சுயதொழில் 27
05 சீ.சம்புரணநாதன் சுயதொழில் 27
06 சித்திரவேல் மணிமேகலை தொழிலாளி 18

இச்சம்பவத்தில் காணாமல்போனவர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)


01 இராஜேஸ்வரி ரஞ்சன் தொழிலாளி 27
02 இராசநாயகம் சிவலோகநாயகி அரசஊழியர் 17
03 ந. கிருபாகரன் தொழிலாளி 22
04 கந்தையா முத்துவடிவேல் தொழிலாளி 17
05 குட்டியாண்டி இராமசாமி மாணவர் 22
06 தம்பியப்பா சகாயராசா தொழிலாளி 25
07 மாடசாமி சங்கர் மாணவர் 22
08 செல்வநாயகம் ஜெயராசா விவசாயம் 21
09 சா.வினோராஜ் மாணவர் 22
10 சாமுவேல் யோகேந்திரன் தொழிலாளி 19

## 71. ஏறாவூர் படுகொலை 10 அக்டோபர் 1990


தங்கராசு அய்யநார் சொல்கிறார்:

*"கைதாகி காரத்தீவு சண்முகா பாடசாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எனது மகனை பார்ப்பதற்கு, 10ம் தேதி அக்டோபர் மாதம், 1990ல் சுமார் 10 மணிக்கு மருத்துவர் சண்முகநாதன், அவருடைய மனைவி ராணி ஆகியோரை அழைத்து சென்றேன். நகரில் நின்றோரை எல்லாம் தடுத்து நிறுத்திவிட்டு சென்றார்கள். சிறிது நேரத்தில் திரும்ப வந்து*

இஸ்லாமியர்களையும், தமிழர்களையும் தனித் தனியே பிரிந்திருக்க சொன்னார்கள். பின்னர் இஸ்லாமியர்களை எல்லாம் அங்கிருந்து சென்று விட்டனர்.



ஆண்களை ஒரு பக்கத்துக்கு அழைத்தார்கள். என்ன நடக்கப் போகிறது என்று எல்லோரும் எண்ணிக்கொண்டு இருந்தோம். அங்கு உள்ள ஒரு அறையினுள் எங்களை செல்லச் சொன்னார்கள். எங்களுக்கு பயமாக இருந்தது. அப்போது மருத்துவரின் மனைவி அந்த அறையினுள் சென்று, மருத்துவரை ஒன்று துன்புறுத்த வேண்டாம் என இராணுவத்தினரைப் பார்த்து கெஞ்சினார். ஆனால், இராணுவத்தினர் மருத்துவரின் மனைவியை தூரே இழுத்துச் சென்று வெளியே வீசி விட்டு வந்தனர். அப்பொழுது அங்கு ஒரு மனிதர் கத்தியை பிடித்து கொண்டு நின்றிருக்கிறார். இது எனக்கு அப்போது தெரியாது. திடீரென என்னுடைய தலையில் உள்ள மயிரை பிடித்தார். எனது தலையில் எண்ணெய் தடவியிருந்ததால், அவரின் பிடி நழுவியது. என்னுடைய தலையை வெட்டிவிட ஓங்கிய கத்தி, எண்ணெய் வழுக்கி கை நழுவியதால் எனது கழுத்தில் விழுந்தது. நான் தரையில் விழுந்தேன். நான் படுகாயமுற்றதால் இறந்து விடுவென் என நினைத்தேன்.



மருத்துவர் சண்முகநாதனும், சிலரும் தலைவெட்டப்பட்டு கொல்லப்பட்டிருந்தனர். நான் கீழே விழுந்திருந்த நேரத்தில், கொல்லப்பட்டவர்களின் அலறல் ஒலி கேட்க முடிந்தது. அந்த சப்தத்தை யாராலும் பொறுத்துக் கொள்ள முடியாது. ஆனால், எனக்கு வேறு வழி தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து பெரிதாப் சத்திமிட்டுக் கொண்டிருந்த இளம்பெண் ஒருவர் இழுத்து வரப்பட்டார். அவரின் மேலிருக்கும் சேலையை களையப்பட்டிருந்தது. சிங்கள இராணுவ சிப்பாய் ஒருவன் அப்பெண்ணை வேறு அறைக்கு இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினான். தன்னை விடச் சொல்லியும் அங்கு நடப்பதை யாரிடமும் சொல்ல மாட்டேன் என்றும் அப்பெண் கெஞ்சினார். ஆனால், மற்றொரு இராணுவ சிப்பாய் அப்பெண்ணின் தலையை வெட்டச் சொல்லி கட்டளையிட்டான். பின்னர் என் நிகழ்ந்திருக்கும் என எனக்கு தெரியவில்லை. ஆனால், கூச்சல் அடங்கி அமைதியானது. இராணுவத்தினர் அங்கிருந்து அகன்று சென்று விட்டனர்.


என்னால் அந்த இடத்தில் இருக்க முடியவில்லை. மனித வதைக்குள்ளான மக்களின் ஓலம் கேட்டுக் கொண்டே இருந்தது. என்ன செய்வது என்று நான் யோசனையில் இருந்தேன். அப்பொழுது இராணுவத்தினர் திரும்பவும் வந்து, ஓலமிடுவோரையும், மூச்சு விட்டுக் கொண்டிருந்தோரையும் தேடி, கத்தியால் குத்தி எந்தவொரு சப்தம் வராதவாறு பார்த்து கொண்டனர்.

பின்னர், அவர்கள் எண்ணெயோ அல்லது மண்ணெண்ணெயையோ அங்கு கிடந்தவர்கள் மீது ஊற்றி எரியூட்டினர். தீ என்னுடைய கால்களுக்கும் பாய்ந்தது. நான் அணைக்க முற்பட்டேன். ஆனால், முடியவில்லை. என்னால் எழுந்து நிற்கவோ, என்னுடைய கால்களை தூக்கவோ முடியவில்லை. என்னுடைய கைகளினால் என் தலையை உயர்த்தி பின்னர் தவழ்ந்து கொண்டே, அந்த பெண்ணை கொண்டு சென்ற அறைக்குள் தவழ்ந்து சென்றேன்.

எழுந்து அமர்ந்து சிறிது நேரம் சிந்தித்தேன். விமானச் சத்தங்கள் இப்பொழுது கேட்க முடிந்தது. பெண்ணின் சேலை தரையில் கிடந்ததைப் பார்த்தேன். அதையெடுத்து இரண்டாய் கிழித்தேன். என்னுடைய தலையிலும், கழுத்திலும், முகத்தையும் மறைத்துக் கொண்டபடி

*இறுக கட்டிக் கொண்டேன். வெளியே என் தலைக்கு மேலே தீ எரிந்து கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும், கைகள், கால்கள் மற்றும் தலைகளாய் கிடந்தன. அவைகளைத் தாண்டி நகர்ந்து ஊர்ந்து வெளியே வந்து சேர்ந்தேன்".*

## 72. ஒட்டுசுட்டான் படுகொலை – 27 நவம்பர் 1990



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவின் நிர்வாக மையமாக ஒட்டுசுட்டான் கிராமம் விளங்குகிறது. இலங்கையிலுள்ள இந்துக்களின் தான்தோன்றீஸ்வரர் ஆலயங்களில் ஒன்றாக ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரமும் உள்ளது. இங்கு வாழும் மக்கள் இவ்வாலயத்தைச் சூழ்ந்தே செறிவாக வாழ்ந்து வந்தனர்.

மக்களின் பிரதான தொழில்களாக ஓடு உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, விவசாயம் என்பன காணப்படுவதோடு, முல்லைத்தீவு மாவட்டத்தின் அதிக முதலீட்டையும் தொழில் வாய்ப்பையும் பெற்றுத்தருகின்ற தொழிலாகவும், ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை உள்ளது. ஒட்டுசுட்டானின் மையப்பகுதி ஓர் சிறுநகரப் பண்புகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.


27.11.1990 அன்று ஒட்டுசுட்டானில் பொதுமக்கள் செறிவாக வாழ்ந்த ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயச் சூழலில் விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தின. இத்தாக்குதலில் பன்னிரண்டு பொதுமக்கள் உடல்சிதறி உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்தார்கள். இதத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஒட்டிசுடட்டானைச் சோந்த மகேநத்திரனின் தஙகையான ஆ.சகீலீலா தெரிவிக்கையில்,

*"என்னுடைய அண்ணா 1990ஆம் ஆண்டு மார்கழி மாதம் இருபத்தேழாம் திகதி ஒட்டுசுட்டான் சிவன்கோயிலை அலங்கரிப்பதற்காக இரவு சென்றிருந்தார். அப்போது வானத்தில் உலங்குவானூர்தி வட்டமிட்டதைத் தொடர்ந்து சிறீலங்கா விமானப்படையின் விமானங்கள் வந்து குண்டுத் தாக்குதலை நடத்தியது. அப்போது நாங்கள் எல்லோரும் வீட்டிலிருந்து சற்றுத்தொலைவிலிருந்த எங்களுடைய உறவினர் ஒருவரின் வீட்டில் நின்றிருந்தோம். அப்போதுதான் அயலிலிருந்த ஒருவர் வந்து கோயிலடியில் குண்டு போட்டதால் அண்ணாவிற்குக் காயம் என்று சொன்னார்கள். அப்போது ஓடிச்சென்று பார்க்கும்போது அண்ணாவை முல்லைத்தீவு வைத்தியசாலைக்குக் கொண்டுபோயிருந்தார்கள். அங்கு போனபோது ஒரு கால் இல்லாமலும் கையிற் காயத்துடனும் பார்த்தோம். அப்போது அண்ணா அழுதபடி நான் சுகமாகி விடுவேன்என்று சொன்னார். ஆனால் அண்ணா உயிரோடு வரவில்லை. அவருடைய இறப்பு எங்களாற் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அண்ணா இருந்திருந்தால் இப்படியாக நாங்கள் கஸ்ரப்படவேண்டி வந்திருக்காது. எங்களை நல்லபடியாகப் பார்த்திருப்பார். தற்போது நாங்கள் பெரும் கஸ்ரத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்."*

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. ஆழ்வார் பிள்ளை மகேநத்திரன் ஆசிரியர் 25
02. தம்பிராசா செல்வராசா மாணவர் 23

## 73. புதுக்குடியிருப்புச்சந்தி படுகொலை – 30 ஜனவரி 1991



முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவிலிருந்து ஏறக்குறைய இருபது கி.மீ. தூரத்தில் புதுக்குடியிருப்புச் சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியில் ஒட்டுசுட்டான் முள்ளியவளை, முல்லைத்தீவு, பரந்தன் வீதிகள் சந்திக்கின்றன. புதுக்குடியிருப்பு ஒரு நகரப்பகுதியாகும்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 1980களின் பின்னர் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து இடம்பெயர்ந்த மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் முல்லைநகர், மணலாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுகேணி, தென்னமரவடி போன்ற கிராமங்களிலிருந்து இராணுவ நடவடிக்கைகள் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக இடம் பெயர்ந்தவர்கள்.

1991ஆம் ஆண்டில் ஆயிரத்து ஐந்நூறிற்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் புதுக்குடியிருப்புக்கு அருகிலுள்ள சுப்பிரமணிய வித்தியாசாலையில் இருந்தனர். 30.01.1991அன்று மாலை 5.30மணியளவில் விமானப்படையின் இரண்டு பொம்பர் குண்டுவீச்சு விமானங்கள் மூன்று தடவைகள் புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதியில் குண்டு வீசித்தாக்கின. குண்டுகளில் பெரும்பாலானவை சந்திப் பகுதியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன. குண்டுவீச்சினால் சந்தியெங்கும் ஒரே புகைமண்டலம்.

குண்டுவீச்சு நடந்துமுடிந்ததும் அப்பகுதிக்கு விரைந்த மக்களும், மனிதநேய அமைப்புக்களும் இணைந்து ஐம்பதிற்கும் மேற்பட்ட காயப்பட்ட பொதுமக்களை புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அனுப்பினர். இறந்த இருபது பேரினது உடல்கள் மீட்கப்பட்டன. எங்கும் ஒரே அழுகுரல்கள். இரவாகிக் கொண்டிருந்தமையால் இறந்தவர்களை உடனடியாக மீட்கமுடியவில்லை. காயமடைந்தவர்களில் ஆபத்தான நிலையிலிருந்தவர்கள் அன்றிரவே யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். அவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் மூவர் கொண்டுசெல்லும் வழியிலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார்கள்.

அடுத்தநாள் காலை மீண்டும் மக்களும், மனிதநேய அமைப்புக்களும் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் தேடுதல் மேற்கொண்டபோது, மேலும் ஐந்து பேரினது இறந்த உடலகள் மீட்கப்பட்டன. இந்த தாக்குதலால் மொத்தம் இருபத்தெட்டுப் பொதுமக்கள் உயிரிழந்தும், ஐம்பதிற்கும் மேலானோர் காயமடைந்தும் இருந்தனர். விமானப் படையினரது பொதுமக்கள் மீதான தாக்குதலால் புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதி ஒரு மாதத்திற்கும் மேலாக சோகமயமாகவே காணப்பட்டது.

இறந்தவர்களில் இடம்பெயர்ந்து அடைக்கலம் தேடிவந்த எட்டுப் பொதுமக்களும் அடங்குவர். இத்தாக்குதலில் உயிர்காக்கப் காப்பகழிக்குள் பாய்ந்த நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணின்

பிள்ளை பிறந்ததிலிருந்து நரம்பு பாதிக்கப்பட்டவராக நடக்க முடியாதவராகத் தற்போதும் இருக்கின்றார். திருமலையிலிருந்து இடம்பெயர்ந்து வசித்துவந்த வி.சித்திராதேவி தெரிவிக்கையில்,

*"திருமலை சொந்த இடம். இடம்பெயர்வு காரணமாக புதுக்குடியிருப்பு கிராமக்கோடு முகாமில் வசித்து வந்தோம். 30.01.1991அன்று மாலை 5.30 மணியளவில் வந்த விமானப்படை பொம்பர் விமானங்கள் பல குண்டுகளைப் போட்டன. இதன்போது நகர்ப்பகுதியிலும் சந்தையும் சில கடைகளும் நாசமாகின. எங்கும் ஒரே புகை மண்டலம். நான் எமது ஊரைச் சேர்ந்த அசோக் என்பவரைத் தேடிச் சென்றபோது அவர் நடத்தி வந்த சைக்கிள் கடையில் அவர் பிணமாகக் கிடக்கக் கண்டேன். இதில் அதிகமானோர் இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டவர்களாவர். இச்சம்பவத்தினால் அதிர்ச்சி அடைந்த எனது மகள் இன்று வரையும் வாய் பேசமுடியாதுள்ளார்."*

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 இராசையா பத்மராசா அரச ஊழியர் 37
02 கந்தையா ஜெகதீஸ்வரன் மாணவர் 14
03 கந்தசாமி கவிதா மாணவர் 14
04 கதிர்காமச்சந்திரன் கடற்றொழில் 26
05 கிருஸ்ணசாமி மகேந்திரராசா மாணவர் 20
06 பாலசுப்பிரமணியம் கண்ணதாசன் தனியார்தொழில் 21
07 பசுபதி அரிகரன் மாணவர் 14
08 மயில்வாகனம் சிறீகந்தன் தனியார்தொழில் 25
09 முருகேசு சித்திரவேலு கடற்றொழில் 65
10 ஜெயநாதன் சிவபாக்கியம் தனியார்தொழில் 36
11 செல்லையா நாகமணி - 60
12 சுப்பிரமணியம் சிவானந்தம் விவசாயம் 59
13 சின்னசாமி கந்தசாமி தனியார்தொழில் 46
14 சின்னவன் கிருஸ்ணபிள்ளை விவசாயம் 52
15 சிவராஜசேகரன் கலைச்செல்வி மாணவி 19
16 சிவராஜசேகரன் கலைச்செல்வன் மாணவன் 19
17 வீரகசத்தி கிட்டினப்பிள்ளை விவசாயம் 70
18 வீரசிங்கம் திலீப்குமார் மாணவர் 19

## 74. உருத்திரபுரம் கூழாவடிச்சந்தி படுகொலை – 04 பெப்பிரவரி 1991

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேசசெயலர் பிரிவில் உருத்திரபுரக் கிராமம் அமைந்துள்ளது. இப்பிரதேச மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகிறது. இந்தப் பகுதியில் அமைந்துள்ள சிவன் கோயில் இக்கிராமத்திற்குச் சிறப்பைக் கொடுக்கின்றது. உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் மற்றும் சிவநகர்ப் பிரதேச மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு உருத்திரபுரம் வடக்கு கூழாவடிச் சந்தியில் சந்தை, வாசிகசாலை, கூட்டுறவுச்சங்கம் கமநல நிலையம், விளையாட்டுக்கழகம், கடைகள் என்பன அமைந்துள்ளன.

04.02.1991 அன்று சிறீலங்காவின் சுதந்திரதினம். தமிழர்கள் வாழும் பகுதியான வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய இடங்களில் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டன. முற்பகல் 11.00மணியளவில் விமானப்படையின் இரண்டு "பொம்பர்" விமானங்கள் உருத்திரபுரம் பகுதியை ஐந்து நிமிடங்களாக வட்டமிட்டன. அப்போது கூழாவடிப் பகுதியில் மக்கள் சந்தையில் அதிகளவில் கூடிநின்றனர். இவ் விமானங்களின் இரைச்சலினால் மக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினர். சந்தியில் நின்ற பாரிய கூழாமரத்தின் கீழும், சந்தியிலுள்ள மதகின் கீழும் பாதுகாப்புத் தேடி ஒளிந்துகொண்டனர். இந்த நேரத்தில் குண்டுவீச்சு விமானங்கள் நான்கு குண்டுகளை அப்பகுதி மீது அடுத்தடுத்து வீசின. அதில் ஒரு குண்டு வெடிக்கவில்லை ஏனைய குண்டுகள் மதகின் அருகில் வீழ்ந்து வெடித்தன.





இச்சம்பவத்தின் போது மதகினுள் பாதுகாப்புக்காகத் தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்கள் பதினொரு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோரின் உடல்கள் சிதைந்த நிலையிற் காணப்பட்டன. கால்வாயில் பாய்ந்து கொண்டிருந்த நீர் இவர்களின் இரத்தமும் கலந்து சிவப்பாக ஓடியது.

இந்த சம்பவத்தின்போது இரண்டு பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் ஈமச்சடங்குகள் மறுநாள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதும்"பொம்பர்" விமானங்கள் இந்தப் பகுதியில் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. உயிரிழந்தவர்களின் நினைவாக இப்பிரதேச மக்களாலும், பொது அமைப்புக்களினாலும் கூழாவடிச் சந்தியில் 2002ஆம் ஆண்டுநினைவாலயம் திறக்கப்பட்டுள்ளது.

உருத்திரபுரத்தைச் சேர்ந்த டாக்டர் திருலோகமூர்த்த சம்பவம் பற்றி தெரிவிக்கையில்,

*"திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும், வைத்தியராகவும் உள்ள நான் 1991ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளிநொச்சி உருத்திரபுரம் கூழாவடிச்சந்தியில் தனியார் மருத்துவ மனையையும், அத்தோடு எனது அலுவலகத்தையும் நடத்தி வந்தேன். 04.02.1991அன்றும் வழமைபோல எனது வைத்தியசாலையைத் திறந்து நடத்திக் கொண்டிருந்தேன். அன்றைய நாள் சிறீலங்கா சுதந்திரம் அடைந்த தினம் என்பதால், பாடசாலை, அரசதிணைக்களங்கள் எல்லாவற்றிற்கும் விடுமுறை நாள். கூழாவடிச் சந்தியில் தான் சந்தையும் இருக்கின்றது. நேரம் நண்பகல் 11.00 மணியிருக்கும் சந்தையில் நிறையச் சனக்கூட்டமாக இருந்தது. அதுமட்டுமல்லாமல் பாடசாலை விடுமுறை என்பதால், பாடசாலை மாணவர்கள் அங்கு விளையாடிக்கொண்டு நின்றார்கள். அந்த நேரம் சிறீலங்கா விமானப்படையினருடைய பொம்பர் விமானங்கள் வானில் வட்டமிட்டன. முதல் ஒருகுண்டு அடிச்சவன் ஒருத்தருக்கும் சேதமில்லை சனங்கள் எல்லாப்பக்கத்தாலயும் பதற்றத்துடன் ஓடினார்கள். நான் ஒரு வைத்தியர் என்பதால் அங்குள்ள எல்லோரையும் எனக்கு நன்றாகத் தெரியும். சிலர் பாலத்துக்குக் கீழ் ஓடினார்கள் டொக்ரர் வாங்க என்று சொல்லி என்னையும் கூப்பிட்டவர்கள் தான். நான் துவிச்சக்கரவண்டியிலே சிவநகர்ப் பக்கமாக ஓடி விட்டேன். இரண்டாவது குண்டு*

*பாலத்துக்குள்ள விழுந்து வெடிச்சதால் சம்பவ இடத்திலேயே ஒன்பது பேரும் உயிரிழந்தார்கள், இருவருக்கு காயம் ஏற்பட்டது. காயமடைந்த இருவருக்கும் நான் தான் மருந்து கட்டிவிட்டேன்."*


இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. நாகலிங்கம் தயாபரன் மாணவன் 14
02. கணபதிபிள்ளை ஜெயலிங்கம் மாணவன் 08
03. பாலசிங்கம் ஜெயதீஸ்வரன் மாணவன் 15
04. பஞ்சலிங்கம் பாலேந்திரன் வியாபாரம் 23
05. முருகேசு தர்மலிங்கம் தொழிலாளி 38
06. கோபாலசிங்கம் ஜெயகோபால் வியாபாரம் 20
07. பேனாட்சோ தயாபரன் மாணவன் 12
08. சுந்தரலிங்கம் சந்திரகுமார் மாணவன் 16
09. விநாயகமூர்த்தி கருணாகரன் தொழிலாளி 29

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. கணபதிப்பிள்ளை இராசன் மாணவர் 16
02. கணேசன் தவநேசன் மாணவர் 18

## 75. வங்காலை படுகொலை – 17 பெப்பிரவரி 1991



வங்காலைக் கிராமமானது, மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேசசெயலர் பிரிவில் வடக்குத் திசையாக கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது. 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் மன்னார்த்தீவின் நுழைவாயிலிலுள்ள பாரிய சங்கிலிப் பாலமும் தொடருந்துப் பாலமும் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை உண்டாகியதன் காரணமாக தாழ்வுப்பாட்டுக் கடற்கரையிலிருந்து கடல் வழியாக கற்பிட்டியூடாகக் கொழும்புக்கு மக்கள் பிரயாணம் செய்தனர்.

இந்நிலையில் வங்காலையைச் சேர்ந்த மக்கள் இராணுவத்தின் கெடுபிடிகளினால் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். வீடுகளிலிருந்து வெளியேறாதவர்களை இராணுவத்தினர் பலவந்தமாக வெளியேற்றிவிட்டு வீடுகளிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருட்கள் அனைத்தையும் சூறையாடினார்கள்.

வங்காலை மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய செபமாலை அவர்களும் ஜஸ்டின் லம்பேட் என்ற வங்காலையைச் சேர்ந்த ஆசிரியரும் இன்னும் சிலரும் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்காகக் கற்பிட்டி வழியாக கொழும்பு சென்று பொருட்களை வாங்கிக் கொண்டு 16.02.1991இல் படகில் தாழ்வுப்பாட்டுக்கு வந்து அன்றிரவு அங்கு தங்கியிருந்து

மறுநாள் 17.02.1991அன்று காலை பத்து மணிக்கு துவிச்சக்கர வண்டியில் வங்காலை வழியாக காத்தான்குளம் சென்றார்கள்.

இவர்கள் வங்காலைப் பாடசாலைச் சந்திக்கு வரும்போது இராணுவத்தினர் செபமாலை (அதிபர்), ஜஸ்டின் லம்பேட் (ஆசிரியர்), சூசையப்பு (ஆசிரியர்), நவரட்ணம் குருவிக்கந்தையா ஆகியோருடன் ஒரு சிறுவனையும் தடுத்து நிறுத்தி கயிற்றினால் கைகளையும் துணியினால் கண்களையும் கட்டிவிட்டு சூசையப்பு ஆசிரியரைக் கத்தியால் குத்தினார்கள். பின்னால் வந்தவர்கள் இந்த நிகழ்ச்சியை நேரிற் பார்த்துககொண்டு சென்று முருங்கன் பங்குத்தந்தையிடம் முறையிட்டனர். மறுநாளாகியும் கைது செய்யப்பட்டவர்கள் வீடு திரும்பாததினால் உறவினர்களும் பங்குத்தந்தையும் தள்ளாடி இராணுவமுகாமிற்குச் சென்று உத்தரவுபெற்று அவர்களைத் தேடுவதற்கு வங்காலைக்கு வந்தபோது வங்காலைச் சந்தியிலிருந்து உள்ளே செல்லவிடாது இராணுவத்தினர் தடுத்தனர். அப்படியிருந்தும் உறவினர்களில் இருவர் மட்டும் சென்று, சந்திக்கு அருகிலிருந்த பூர்சியல் பீரிஸ் ஆசிரியரின் பூட்டியிருந்த வீடு திறந்திருந்ததைக் கண்டு அதனுள் சென்றபொழுது அந்த வீட்டு அறைகளெல்லாம் இரத்த வெள்ளமாகக் காணப்பட்டது. இரத்தத் தடயங்களின் வழியே சென்று பார்த்தபொழுது வீட்டின் பின்னாலிருந்த கிணற்றுக்குள் ஐந்து சடலங்களும் துண்டங்களாக்கப்பட்டுப் போடப்பட்டிருந்தது. எனினும் அப்போதைய சூழ்நிலையில் உடனடியாக சடலங்களை மீட்க முடியாதிருந்தது.

1993ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்தபோது பூர்சியன் ஆசிரியரின் வீட்டிற்குப் சென்று பார்த்தபொழுது கிணறு மட்டமாக்கப்பட்டிருந்தது. பூர்சியன் ஆசிரியரின் வீட்டுக் கிணற்றில் முன்னர் ஐந்து சடலங்கள் போடப்பட்டிருந்தன என்பதைக் காவற்றுறையினருக்குத் தெரியப்படுத்தி, அவர்களின் உதவியுடன் உயிரிழந்த
ஐவரினதும் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் ஐவரின் எலும்புக்கூடுகளும் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டன. இன்று வரை இவை தொடர்பாக எந்த மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. அந்தோனி கொபின்லெம்பேட் ஆசிரியர் 36
02. அந்தோனிப்பிள்ளை செபமாலை பாடசாலை அதிபர் 49
03. அப்புக்குட்டி கந்தையா கமம் 51
04. செபமாலை அந்தோனி விவசாயம் 30
05. சீமான் தற்குருஸ் சூசையப்பு பாடசாலை உப அதிபர் 43

## 76. வட்டக்கச்சி அரசநெற்பண்ணை குண்டுவீச்சு – 28 பெப்பிரவரி 1991

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் வட்டக்கச்சி என்னும் கிராமம் காணப்படுகிறது. இங்கு வாழ்கின்ற மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். அத்தோடு சிலர் பகுதிநேர நன்னீர் மீன்பிடி மற்றும் கூலித்தொழிலிலும் ஈடுபட்டுள்ளார்கள். இப்பிரதேசத்தில் "அரச நெற்பண்ணை" என்னும் பெயரில் நெல்வயல்கள் காணப்பட்டன. இங்கு வேலை செய்பவர்கள் தங்கி வேலை செய்வதற்காக வட்டக்கச்சி மூன்றாம் வாய்க்காற் பகுதியில் அரச நெற்பண்ணை விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. இங்கு ஐந்து குடும்பத்தை சேர்ந்தவர்கள் தங்கியிருந்தனர்.



28.02.1991அன்று காலை 7.00 மணியளவில் வேலைக்குச் செல்வதற்காக விவசாயிகள் விடுதிகளில் காலை உணவு அருந்திக்கொண்டிருந்த வேளையில் விமானப்படையினரின் இரண்டு "பொம்பர்" விமானங்கள் வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சுற்றிவந்து மூன்று குண்டுகளை வீசியது. இதில் ஒரு குண்டு விடுதிக்குள் வெடிக்க மற்றைய இரண்டும் வயற்பிரதேசங்களிலும் வீழ்ந்து வெடித்தன. இதில் ஒன்பது பேர் உயிரிழந்தனர். மூன்று பேர் காயமடைந்தனர். உயிரிழந்த ஒன்பது பேரில் ஆறு பேரின் உடல்கள் சிதறுண்டு உருக்குலைந்துபோக ஏனைய மூன்று பேரின் உடல்களையும் காயப்பட்ட மூவரையும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றார்கள்.

இந்தச் சம்பவத்தை அடுத்து தம் உறவுகளை இழந்த நிலையில் அக்குடும்பங்கள் விடுதிகளை விட்டு வேறிடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றன. இந்தச் சம்ப்பவத்தின் போது சம்பவ இடத்திலிருந்த்த இராமையா பரமசுந்த்தரம் அவர்க்கள் தெரிவித்ததாவது,

*"நான் நெற்பண்ணையில் இருந்தவேளை 28.02.1991அன்ற பொம்மர் விமானம் வந்து குண்டு போட்டது. இந்தச் சம்பவத்தில் சம்பவ இடத்திலேயே ஒன்பது பேர் கொல்லப்பட்டார்கள். மூன்று பேர் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களை உடனடியாக வைத்தியசாலைக்குத் கொண்டு போய் காப்பாற்றிவிட்டார்கள். இறந்தவர்கள் அனைவரையும் ஒரே குழியிற் போட்டு புதைத்தோம். இச்சம்பவத்தில் பண்ணையிலிருந்த கிட்டத்தட்ட நாற்பது ஆடுகள், இருபது கோழிகள் இறந்தன. அவற்றையும் மனித உடல்களுடன் ஒரே குழியிற் போட்டுப் புதைக்க வேண்டிய சூழல் இருந்தது. ஏனென்றால் திரும்பவும் புக்காரா வந்து குண்டு போடுமோ என்ற பயம் இருந்துகொண்டே இருந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வந்து பார்வையிட்டுச் சென்றது. மக்களை அழிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்த இடத்தில் குண்டு போட்டதாக நான் கருதுகிறேன். ஏனென்றால் காலையில் தொழிலுக்குப் போகமுன் 7.30 மணியளவில் வந்து குண்டு போட்டால் எல்லோரும் இறப்பார்கள் என்ற திட்டம்தான். இன்று நேற்றல்ல. 1990ம் ஆண்டிலிருந்தே சிறீலங்கா இராணுவம் தமிழ் மக்களை கொலை செய்து கொண்டுதான் இருக்கிறது."*

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம்

| | |
|---|---|
| 01 இராசேந்திரம் சித்திரம்மா | 06 ஆறுமுகம் இராசேந்திரன் |
| 02 நாகமுத்து ஆறுமுகம் | 07 ஆறுமுகம் கமலாதேவி |
| 03 முனியாண்டி செல்வம் | 08 ஆறுமுகம் விஜயலட்சுமி |
| 04 முருகையா சுமதி | 09 சின்னத்தம்பி உமாதேவி |
| 05 முருகையா சித்திரா | |

## 77. வந்தாறுமூலை படுகொலை – 9 யூன் 1991

09.06.1991 அன்று மாவடிவேம்பு, வந்தாறுமூலை ஆகிய இராணுவ முகாம்களிலிருந்த இராணுவத்தினர் வந்தாறுமூலைப் பிரதேசத்தினைச் சுற்றி வளைத்து வந்தாறுமூலை முதலாம் குறுக்கு வீதியில் நின்ற நான்கு பொதுமக்களை வாள்களினால் வெட்டிப் படுகொலை

செய்தார்கள். அதனைத் தொடர்ந்து கருவங்கேணியில் ஆறு பொதுமக்களை சுட்டுப் படுகொலை செய்தார்கள். மொத்தமாகப் பத்துப் பொதுமக்கள் அன்றைய தினம் இராணுவத்தினரின் தாக்குதலில் உயிரிழந்தார்கள்.



## 78. கொக்கட்டிச்சோலை படுகொலை – 12 யூன் 1991

28.01.1987 அன்று இராணுவத்தினரால் நடத்தப்பட்ட தாக்குதலில் பாதிப்படைந்த கொக்கட்டிச்சோலைப் பிரதேசம் மீண்டும் செழிப்புற்று மக்கள் ஓரளவு சந்தோசமாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.



12.06.1991 அன்று அம்பிலாந்துறை, கல்லடி போன்ற இராணுவ முகாங்களிலிருந்த இராணுவத்தினர் கனரக வாகனங்களுடன் கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு மற்றும் மகிழடித்தீவு ஆகிய கிராமங்களைச் சுற்றிவளைத்து அங்கிருந்த பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டார்கள். இராணுவத்தினரின் இத்தாக்குதலில் 166இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தார்கள். 400இற்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டன. அரிசி ஆலை ஒன்றினுள் நுழைந்த இராணுவத்தினர் அங்கு பணிபுரியும் பதினேழு பொதுமக்களையும் அரிசி ஆலையுடன் சேர்தது எரித்தார்கள்.

12.06.1991 அன்று இராணுவத்தினரின் தாக்குதலில் மொத்தமாக 220இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். இவர்களின் உடல்கள் அனைத்தும் இராணுவத்தினரால் ரயர் போட்டு அரைகுறையாக எரிக்கப்பட்டன.

## 79. புல்லுமலை – 1986-1990

புல்லுமலைக் கிராமமானது, செங்கலடி-மகாஓயா வீதியில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின் புல்லுமலைக் கிராமம் பல இன்னல்களைச் சந்தித்தது. நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றிய இந்துக் குருக்கள் ஒருவர் கொல்லப்பட்டார்.

20.05.1980அன்று இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் ஒன்று சேர்ந்து புல்லுமலையிலுள்ள கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து எரியூட்டினர். இச் சம்பவத்தின் போது கேணல் வீரதுங்கவினால் இருபத்தைந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புக்கென அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் கொடுவாமடுவில் வைத்துக் கொலைசெய்யப்பட்டனர்.

1986ஆம் ஆண்டு எட்டாம் திகதி அக்கிராமத்திலிருந்த இராணுவத்தினரும், மகாஓயாவிலிருந்து வந்த முந்நூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் அக்கிராம மக்கள் மீது தாக்குதலை நடாத்தினர். இதன் போது பதினெட்டுப் பொதுமக்கள் நிரலில் நிறுத்தி வைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். முத்தையா உட்பட ஐம்பத்தொரு பேர் கைது செய்யப்பட்டுக் காணாமற்போயினர். பலர் குடும்பங்களாகக் கொல்லப்பட்டனர்.



நாகலிங்கம் இராஜரட்ணம் என்பவரின் எட்டு மாதக் குழந்தை, நான்கு சிறுவர்கள், அவரின் மனைவி என்பவர்கள் உயிரிழந்தனர். சிறுவர்கள் சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு உயிரிழந்தனர். பீற்றர் லக்ஸ்மி என்பவரின் வீட்டில் ஒரு குழந்தை தவிர அனைவருமே கொல்லப்பட்டனர். கந்தசாமி என்பவரும் அவரது மனைவியான ஒரு சிங்களவரும் அவர்களது குழந்தையும் உயிரிழந்தனர். இங்கு தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் தனிப்பட்ட முறையில் தெரிந்த இருவரை மட்டும் தப்பியோடும்படி விட்டுவிட்டனர்.

அவ்வாறு தப்பியவர்கள் செங்கலடியை வந்தடைந்தனர். 10.11.1986 அன்று மூன்று மாத குழந்தை, பெண்கள், இருபத்துமூன்று ஆண்கள் என இராணுவத்தினரின் நடவடிக்கையால் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்த ஆறு பெண்களில் இருவர் பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர். கைது செய்து காணாமற்போனோரில் இருபத்துநான்கு பேர் அடங்குகின்றனர். இத்தாக்குதலை நடாத்திய இராணுவத்தினரை அடையாளம் காண்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அடையாள அணிவகுப்பு பின்னர் இடைநிறுத்தப்பட்டது.

## 80. கிண்ணியடி – 12 யூலை 1991


மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனைப் பிரதேசசெயலர் பிரிவினுள் வாழைச்சேனையிலிருந்து 4.5கி.மீ. மேற்காகக் கிண்ணியடிக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்களின் பிரதான தொழில்கள் விறகு வெட்டி விற்றல், மீன் பிடித்தல், விவசாயம் செய்தல் என்பனவாகும்.

12.07.1991 அன்று கும்புறுமுனை, வாழைச்சேனை இராணுவ முகாம்களிலிருந்த இராணுவத்தினர் கிண்ணியடிக் கிராமத்தைச் சுற்றிவளைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். பதின்மூன்று பொதுமக்களைக் கைதுசெய்த இராணுவம் அவர்களைக் கூரிய ஆயுதங்களினால் வெட்டிப் படுகொலை செய்தபின் அருகிலிருந்த ஆற்றில்

வீசினார்கள்.



## 81. கரப்பொழை, முத்துக்கல் படுகொலை – 29 ஏப்பிரல் 1992



கரப்பொழை, முத்துக்கல் கிராமங்கள் பொலநறுவை மாவட்டத்தில் அமைந்துள்ளன. இக்கிராமங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களாகும். இக்கிராம மக்களின் பிரதான தொழில் கூலிவேலை செய்தல், மந்தை வளர்த்தல், காடுகளிற் தேனெடுத்தல் என்பனவாகும்.

29.04.1992 அன்று நள்ளிரவு இராணுவத்தினரும் முசுலிம் குழுக்களும் இணைந்து பகல் முழுவதும் வேலை செய்த களைப்பில் இரவு நல்ல உறக்கத்திலிருந்த கரப்பொழை, முத்துக்கல் கிராமமக்களை, அவர்களின் வீடுகளினுட் புகுந்து வெட்டிப் படுகொலை செய்தனர். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகளென தொண்ணூற்றேழிற்கும் மேற்பட்டவர்கள் இராணுவத்தினராலும் முசுலிம் குழுக்களினாலும் படுகொலை செய்யப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து இரண்டு கிராம மக்களும் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றார்கள்.

## 82. வற்றாப்பளை படுகொலை – 18 மே 1992

வடகிழக்கு மாகாணத்திலேயே சைவ மக்கள் மத்தியில் புகழ்பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் ஓரத்தில் அமைந்துள்ளது. ஆண்டுதோறும் வைகாசியில் வருகின்ற பூரணை தினத்தன்று பொங்கல் நிகழ்வு சிறப்புற நடைபெறுவதும், அதில் சிறீலங்காவின் பல பாகங்களிலிருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து பொங்கலைச் சிறப்பிப்பதும் வழக்கமாக இருந்த காலத்தில் 1990ஆம் ஆண்டிலிருந்து இராணுவ அச்சுறுத்தல் காரணமாக குறிப்பிட்ட ஒரு தொகைப் பக்தர்களைக் கொண்டே வருடாந்தப் பொங்கல் நிகழ்வு நடைபெறலாயிற்று.

வழமைபோல 18.05.1992 அன்று வற்றாப்பளைப் பொங்கல்தினம். சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர் உச்சிக்காலப் பூசை நடைபெற்றுக்கொண்டிருந்த பி.ப 12:45 மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் பத்துப் பொதுமக்கள் அவ்விடத்திலேயே உடல் சிதைக்கப்பட்டு உயிரிழந்ததுடன், ஏனைய ஐந்து பேர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார்கள். அறுபது பேர்வரை காயமடைந்தார்கள்.



இத்தாக்குதலில் கணவரையிழந்த யோகேஸ்வரி சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கையில்,

*"வற்றாப்பளை அம்மன் ஆலயப் பொங்கற் திருவிழா நேரத்தில் காவடிகளை வைத்து வாடகைக்கு வழங்கி வந்தோம். வழமைபோல் அன்றும் கணவரும் மகனும் காவடி எடுக்கும் இடத்திலும் நானும் மற்றப் பிள்ளைகளும் கோயிலுக்கு உட்புறத்திலும் நின்றிருந்தோம். அந்த வேளைதான் சிறீலங்கா இராணுவம் முல்லைத்தீவு முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டது. ஓடிச் சென்று பார்க்கும்போது உடல் முழுதும் காயங்களுடன் மகனைக் கிடத்தியிருந்தார்கள். மகனுடன் அழுதுகொண்டிருக்கும் போது தகப்பனைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். தகப்பன் இறந்துவிட்டதால் அழுது புலம்பத்தான் முடிந்தது. அப்படியே நானும் மயக்கமுற்று விழுந்துவிட்டேன். கணவர் இறக்கும்போது மூன்று மாதக் கர்ப்பிணியாகவும் மூன்று பிள்ளைகளின் தாயாகவும் இருந்தேன். எல்லோரும் சின்னப் பிள்ளைகள். சரியாகக் கஸ்ரப்பட்டுத் தான் பிள்ளைகளை வளர்த்தேன். தகப்பனின் காவடித் தொழிலையும் விடாமல் கூலி வேலை செய்து சீவித்து வருகின்றோம். பிள்ளைகளும் வளர வளர செலவுகளும் அதிகரித்துக்கொண்டே போகின்றது. தற்போதுகூட சரியான கஸ்ரத்தின் மத்தியிற் சீவிக்கின்றோம்."*

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. நவரத்தினசாமி யுவராசினி மாணவி -
02. நவரத்தினசாமி சிவசேகரம் - -
03. நவரட்ணம் இந்துஜா மாணவர் 12
04. நவரட்ணம் சிவனேசம் வீட்டுப்பணி 32
05. நவரட்ணம் ராஜிதா மாணவர் 10
06. குழந்தைவேலு ஜெகதீஸ்வரன் தொழிலாளி -
07. குழந்தைவடிவேல் ஜெகதீஸ்வரன் விவசாயம் 24
08. கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன் மாணவர் 17
09. தம்பிராசா சிறீஸ்கந்தராசா விவசாயம் 33
10. மரியபிரகாசம் அந்தோனி தனியார்தொழில் 35
11. யோகராசா வதனி வீட்டுப்பணி 19
12. சதாசிவம் நவரட்ணம் கடற்றொழில் 36
13. சிறிஸ்கந்தராசா மாணவர் 09
14. சண்முகலிங்கம் - 42

காயமடைந்த்தவர்க்களின் விபரம்`
இல பெயர் தொழில` வயது

01. இந்துஜா மாணவி 06
02. ஈஸ்வரன் - 21
03. கனகேஸ்வரன் - 20
04. கார்த்திகேசு நித்தியராசா - 18
05. குமாரசாமி கணேசசுந்தரம் - 16
06. கணேசலிங்கம் புனிதா குழந்தை 03
07. முருகையா - 24
08. நேசம் - 32
09. வெற்றிவேலு மதிவதனம் - 13
10. றெஜித் - 27
11. சாந்தினிதேவி - 16
12. சண்முகலிங்கம் சந்திரசேகர் - 16
13. வடிவேலு - 40
14. விஜயரட்ணம் மாணவன் 07

## 83. தெல்லிப்பளை ஆலயம் படுகொலை – 30 மே 1992



யாழ்ப்பாணத்தில் வலிகாமத்தின் வடக்குப் பகுதியிலுள்ள தெல்லிப்பளைப் பிரதேசத்தில் துர்க்காபுரம் எனும் கிராமம் அமைந்துள்ளது. இங்கு வரலாற்றுப் புகழ்மிக்க பல ஆண்டுகள் பழமைவாய்ந்த தெல்லிப்பளைத் துர்க்கையம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

பலாலி இராணுவத்தள விரிவாக்கத்திற்காக பலாலி முகாமை அண்மித்த பகுதிகள் மீது எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல் நடத்தியவாறு சிறீலங்கா இராணுவத்தினர் முன்னேறிப் பலாலிப் படைமுகாமை விரிவாக்கினார்கள். இவ்விராணுவ நடவடிக்கைக்கு அஞ்சிய வசாவிளான், குரும்பசிட்டி, தையிட்டி, மயிலிட்டிப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்தார்கள். இவர்களில் பல குடும்பங்கள் அகதிகளாக தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்ததுடன், ஆலயத்தில் வெள்ளைக்கொடியையும் பறக்கவிட்டனர்.

30.05.1992 நண்பகல் 12மணியளவில் விமானப்படையின் இரண்டு "அவ்ரோ" விமானங்கள் மக்கள் தங்கியிருந்த ஆலயம் மீது ஐந்திற்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியது. இதில்` ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உட்பட மொத்தம் ஐவர் உயிரிழந்தனர். பத்திற்கும் அதிகமானோர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள். ஆலயத்தின் கோபுரம், பொங்கல் மண்டபம், வசந்தமண்டபம், ஆலய சுற்றாடலிலுள்ள வீடுகளெனப் பல கட்டடங்கள் பலத்த சேதத்திற்குள்ளானது. மீண்டும் இராணுவத்தினர் 1993ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஆலய வருடாந்த மகோட்சவ காலப்பகுதியில் சப்பறத் திருவிழா அன்று, பக்தர்கள் கூடியிருந்தவேளை காலை 10.00மணியளவில் ஆலயப் பகுதிநோக்கி பலாலியிலிருந்து எறிகணைவீச்சினை நடத்தினர். அதேநேரம் விமானப் படை விமானத்தாக்குதலை நடாத்தியது.


இத்தாக்குதல்களில் ஒரு பக்தரும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் தங்கியிருந்த யுவதி, அருகிலுள்ள வீடுகளில் தஞ்சம் புகுந்த ஆசிரியர்களென ஐந்து பேர் உயிரிழந்தார்கள்.

ஐந்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆலயப்பகுதி மீண்டும் பலத்த சேதத்திற்கு உள்ளானது. அன்றையதினம் பலாலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சினால் ஆலய அன்னதான மண்டபத்தில் சமையலில் ஈடுபட்டவர்களில் ஒருவர் உயிரிழந்ததுடன், மூன்று பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசதுரை மனோகரன் சுருட்டு வேலை 28
02. ஐயம்பிள்ளை மகேந்திரன் கூலி 31
03. கந்தையா இளையதம்பி ஓய்வூதியர் 65
04. பத்மநாதன் மயூரன் மாணவன் 22
05. வைத்தியலிங்கம் வசீகரா வர்ணம் பூசுபவர் 23
06. செல்லத்துரை செல்வகாந்தராசா - 32
07. வேலாயுதம் நந்தகுமார் மாணவன் 11
08. வேலாயுதம் வினோதகுமார் குழந்தை 1
09. சுப்பிரமணியம் கனகராணி விற்பனையாளர் 38
10. சின்னக்குட்டி காசிப்பிள்ளை கமம் 71

## 84. மைலந்தனை படுகொலை – 09 ஆகஸ்ட் 1992



மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களாக மைலந்தனை, புனானைக் கிராமங்கள் அமைந்துள்ளன. இங்கு வாழ்கின்ற மக்கள் பிரதான தொழிலாக விவசாயத்தினை மேற்கொண்டு வருகின்றார்கள்.

புனானை, மைலந்தனை போன்ற கிராமங்கள் புனானை இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினரால் அடிக்கடி சுற்றிவளைக்கப்படுவதும், பொதுமக்கள் தாக்கப்படுவதும் வழக்கமாக இருந்தன.

09.08.1992அன்று அதிகாலை புனானை, மைலந்தனைக் கிராமங்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுப் பொதுமக்கள் மிக மோசமான முறையில் கத்தி, வாள், பொல்லு போன்றவற்றினாற் தாக்கப்பட்டார்கள். இராணுவத்தினர் துப்பாக்கிகளினாலும் சுட்டார்கள்.

இவ்வாறு இராணுவத்தினரின் தாக்குதலால் ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தார்கள்.

## 85. கிளாலி படுகொலைகள் - 02 ஜனவரி 1993 - 29 யூலை 1993

யாழ் குடாநாட்டினையும் அதன் வெளி நிலப்பரப்பையும் ஊடறுத்துச் செல்லும் பிரதான தரைவழி மார்க்கம் ஆனையிறவு ஆகும். 1990ஆம் ஆண்டு ஏப்பிரலுக்கு முன்னர் யாழ் குடாநாட்டிலிலுள்ள எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் போக்குவரத்து, விநியோகப்

பாதையாக ஆனையிறவு ஊடான தரை வழிப்பாதையே இருந்தது. 1990ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மீண்டும் ஆரம்பமான போரின் விளைவால் தரைவழிப் பாதை மூடப்பட்டது.



இதன் பின்னர் யாழ் மக்களின் போக்குவரத்து நகர்வுகள், உணவு விநியோக மார்க்கங்கள் என்பன ஆனையிறவுக்கு மேற்குப் புறமாக அமைந்துள்ள பூநகரி-கேரதீவு-சங்குப்பிட்டியினூடாக அமைந்தது. இப்போக்குவரத்து மார்க்கம் கடல் நீரேரியூடாக இருந்தது. மக்கள் பெருஞ்சிரமங்களிற்கு மத்தியில் கேரதீவு சங்குப்பிட்டியினூடான கடல்நீரேரியைக் கடப்பதற்கு பயணப் படகு (Ferry) ஒன்றைப் பயன்படுத்தினார்கள். இதன்மூலம் விநியோகப் பொருட்களைக் கொண்ட பாரவூர்திகள், பலமான வாகனங்கள் என்பன நகர்த்தப்பட்டன.

மக்கள் பயணஞ்செய்த இப்பாதையும் 1991ஆம் ஆண்டில் பூநகரியை இராணுவத்தினர் கைப்பற்றியதனால் தடைப்பட்டது. பின்னர் யாழ் குடாநாட்டு மக்களின் போக்குவரத்துப் பாதையாக வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஊடான கடற்கரையோரப்பாதை இருந்தது. இதுவும் 1991ஆம் ஆண்டு "ஒப்பரேசன் பலவேகயா-01" இராணுவ நடவடிக்கையின் மூலம் இராணுவதத்தினரால் கைபப்பற்றப்பட மக்களின் போக்குவரத்தும் தடைப்பட்து.



குடாநாட்டு மக்கள் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஊடான கடற்கரையோரப் பாதைக்கும் ஆனையிறவுக்குமிடையில் அமைந்த கொம்படிப் பாதையினைப் பயன்படுத்தினர். இப்பாதை பிரயாணத்திற்கு ஒவ்வாத பாதையாகக் காணப்பட்டது. அப்படியிருந்தும் இதனூடாக மக்கள் பயணித்தார்கள். இயற்கையால் பிரயாணத்திற்கு ஒவ்வாத பாதையாக விளங்கிய கொம்படிப் பாதையினூடு கடுந்துன்பங்களுக்கு மத்தியில் மக்கள் பயணித்தார்கள். "பலவேகய 02" இராணுவ நடவடிக்கை மூலம் இராணுவம் ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு போன்றவற்றில் இராணுவத் தளங்களை தொடர் இராணுவ வேலிகளாக அமைத்ததனால் மக்கள் பயணஞ்செய்த இக் கொம்படிப் பாதையும் தடைப்பட்டது.

இதன் பின்னர் யாழ் குடாநாட்டிற்கும் ஏனைய இடங்களுக்குமான வெளித்தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்ட நிலையில் எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களிற்கான உணவு, மருந்து உட்பட அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் எடுத்துச் செல்வதற்கான பாதை இல்லாது தவித்த ஆயிரக்கணக்கான மக்கள், 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கிளாலிக்கடல் நீரேரியினூடான கடற் போக்குவரத்தினை மேற்கொண்டார்கள்.

யாழ் குடாநாட்டையும், அதன் வெளி நிலப்பரப்பையும் ஊடறுத்து ஏறத்தாழ முப்பது மைல் உள்நுழைந்து, பொன்னாலைதொட்டு தலைமன்னார் வரை நீண்டு, பரந்த கடலால் நீருட்டப்பட்டு இருந்தது யாழ்ப்பாணக் கடல் நீரேரி. கிளாலிக்கரையிலிருந்து மறுகரையில் ஆலங்கேணிவரை ஏறக்குறைய இருபது கடல்மைல் தூரங்கொண்ட இக்கடற்பிரதேசம் பயணங்களிற்கு, விநியோக மார்க்கங்களிற்கு ஒவ்வாததாக, அமைந்தாலும் பெருஞ்சிரமங்களின் மத்தியில் ஏறக்குறைய

நான்கு மணித்தியாலம் பயணித்தே மறுகரையை அடைய முடியும். பகல் நேரங்களிற் பயணிக்க முடியாத நிலையிருந்து. இரவு நேரங்களிலேயே பயணிக்கக்கூடியதாக எட்டு குதிரை வலுகொண்ட இயந்திரப் படகுகள் மூலம் தமது பிரயாணங்களை மக்கள் மேற்கொண்டனர்.

1992ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போக்குவரத்து மார்க்கத்தை தடைசெய்யும் நோக்கில் தாக்குதல்கள் கடல் நீரேரியின் இருபக்கமும் அமைந்திருந்த ஆனையிறவு இராணுவத்தளம் மற்றும் பூநகரி இராணுவத்தளம் ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. மேலும் வான்படையும் இத் தடைநோக்கிற்கு உதவியது.

1993ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் திகதி கிளாலியிலிருந்து ஆலங்கேணிக்குச் சென்றுகொண்டிருந்த இயந்திரப் படகுகளில் இயந்திரப் பழுது காரணமாக நடுக்கடலில் நின்ற நான்கு படகுகளிலிருந்த பயணிகள் மீது மிக அண்மித்து வந்த கடற்படையினர் கூரிய ஆயுதங்களாலும், துப்பாகிகளாலும் தாக்கியதால் படகிற் பயணித்த அரச உத்தியோகத் தர்கள், மாணவர்கள் உட்பட முப்பத்தைந்து பேர் வெட்டப்பட்டும், சுடப்பட்டும் உயிரிழந்தார்கள். ஐம்பது பேர்வரையானவர்கள் காயங்களுடன் மறுநாள் காலை கரையினை அடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் உயிர் தப்பியவர்களில் ஒருவரான கந்தையா செல்லத்துரை (வயது 68) என்பவர் கிளாலிக்கடலில் ஏற்பட்ட சம்பவங்கள் பற்றி ஊடகங்களுக்கு மறுநாள் அளித்த பேட்டியில் விரிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

1993ஆம் ஆண்டு ஜனவரி இரண்டு, யூலை இருபத்தொண்பது எனப் பல்வேறுபட்ட காலப் பகுதியிலுமாக 1993ஆம் ஆண்டு டிசம்பர் வரைக்கும் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கிளாலிக் கடற்பரப்பில் பயணித்தபோது, கடற்படையினரின் தாக்குதல்களினால் உயிரிழந்துள்ளதுடன், நூறிற்கும் மேற்பட்டவர்கள் அங்கவீனமானார்கள். மேலும் நூற்றிஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். இச்சம்பவங்களில் கிளிநொச்சி மாவட்டக் கல்வி அதிகாரி உட்பட யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள், ஆசிரியர்கள், வெளிநாட்டிலிருந்து தமது உறவுகளைப் பார்வையிட வந்தவர்கள் எனப் பலதரப்பட்ட பொதுமக்களும் பாதிக்கப்பட்டார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இ.இன்பராசா இ.மி.ச.ஊழியர் 47
02. இ.ஜெராட் கடற்றொழில் 26
03. இளையதம்பி மகேஸ்வரி வீட்டுப்பணி 51
04. இளையதம்பி சிவசீலன் பல்.கலை மாணவன் 25
05. இரத்தினம் சிறீரஞ்சன் - 29
06. இரத்தினசிங்கம் எருமின் ஜசேக்இன்பராசா இ.மி.ச.ஊழியர் 47
07. ந.இராசன் கமம் 28
08. ந.கிளி கமம் 26
09. ந.இராசலிங்கம் வியாபாரம் 32
10. ந.நாகம்மா - 60
11. ந.துரை கமம் 36
12. நா.பரிமளம் - 37
13. க.கமலதாசன் கடற்றொழில் 17
14. க.செல்லத்துரை - 46
15. க.சிவானந்தன் வியாபாரம் 35
16. க.ஏகாம்பரம் கமம் 45

17. குப்புசாமி செல்லமுத்து - 45
18. கா.சின்னத்தம்பி கமம் 60
19. கதிரமலை ஜெயந்தி மாணவி 25
20. த.கமலராசன் மாணவன் 10
21. த.பூபதி வீ.பணி 28
22. த.றாகினி மாணவி 17
23. தர்மராஜா பகீரதன் - -
24. தம்பிஐயா ராகினி இல்லை 18
25. தற்பரநாதன் முகுந்தன் மாணவன் 20
26. ம.இராசையா கடற்றொழில் 23
27. ம.யோசப்யூட் கடற்றொழில் 18
28. முத்தையா சந்திரலீலா - 35
29. மதுரநாயகம் அமிர்தநாயகி - 39
30. மி.ஜேசுதாசன் மாணவன் 19
31. மிக்கேல் ஜேசுதாசன் மாணவன் 19
32. முருகேசு சடராசா கடற்றொழில் 40
33. அ.அடைக்கலம் சாரதி 63
34. அப்புக்குட்டி பரமசிங்கம் சாரதி 38
35. யோசெப்யேசுராஜா யேசுநாயகம்தனிதாஸ் கடற்றொழில் 18
36. தெ.கனகாம்பாள் வீட்டுப்பணி 42
37. செ.ரூபன் ஞானசீலன் கடற்றொழில் 19
38. செ.பாக்கியராசா கடற்றொழில் 30
39. செ.அருள்தாஸ் கடற்றொழில் 21
40. செல்வராசா பாக்கியராசா - 27
41. செல்லத்துரை சாந்தலிங்கம் கடற்றொழில் 50

42. ஞானசூரியர் வின்சன்நிக்கிளஸ் - 22
43. ஞானப்பிரகாசம் ஞானபாலன் படகோட்டி 32
44. ஞானபாலன் படகோட்டி 33
45. ச.பாலசுப்பிரமணியம் சுயதொழில் 54
46. சந்திரன் அருணானந்தி கூலி 29
47. சி.கனகலிங்கம் கடற்றொழில் 45
48. சின்னவன் கதிரவேலு - 44
49. சிவலிங்கம் அன்னபூரணம் - 40
50. சிவலிங்கம் செல்லத்துரை நீதிமன்ற ஊழியர் 45
51. சண்முகம் சபாநாதன் - 65
52. ரவீந்திரன் இந்திரவதனா - 41
53. ஏரம்பமூர்த்தி அசோகன் - 36

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. க.கணேந்திரநாதன் முகாமையாளர் 63
02. கந்தையா செல்லத்துரை - 68
03. கந்த் சாமி மதியரசன் வியாபாரம் 20
04. தவராசா தயாளினி மாணவி 05
05. செல்வராசா குணசிங்கம் - 40
06. செல்வரத்தினம் ஜங்கரன் - 27
07. சின்னையா சந்திரகுமார் - 20

08. வி.இன்பநாதன் கடற்றொழில் 37
09. விநாயகமூர்த்தி இன்பநாதன் - 26

## 86. மாத்தளன் படுகொலை – 18 செப்ரெம்பர் 1993



முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்பரப்பினை ஒரு பக்க எல்லையாகக் கொண்டமைந்த கிராமங்களில் மாத்தளன் கிராமமும் ஒன்று. இக்கிராம மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கடற்றொழிலையே நம்பியிருந்தனர். அத்தோடு தமது பொழுதுபோக்கு மையங்களாக இந்தக் கடற்கரைகளையே பயன்படுத்தி வரலாயினர். இவர்கள் தமது நாளாந்தத் தேவைகளை ஈடுசெய்ய வேண்டுமாயின் நான்கு கி.மீ. இற்கு அப்பாலுள்ள புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதிக்கே செல்லவேண்டிய நிலையும் இருந்தது. தமது கடற்பரப்பில் பிடிக்கப்படும் மீன்களைக்கூட இவர்கள் நீண்டதூரம் சென்றே மக்களுக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலையில் வாழ்ந்து வந்தார்கள்.

இலங்கையில் உள்நாட்டுப் பிரச்சனை தொடங்கிய காலத்திலிருந்து கடற்படையினர் கடலில் மீன்பிடிப்பதற்குத் தடைவிதித்ததுடன், மீனவர்களைக் கடலிற் தாக்கியும் வந்தார்கள். ஆனாலும் மீனவர்கள் தொடர்ந்தும் கடற்றொழிலைப் பல சிரமங்களுக்கு மத்தியிலும் செய்து வந்தனர்.

18.09.1993 அன்று மாலை 3:45 மணியளவில் மாத்தளன் சந்தியில் கட்டப்பட்ட பொது மண்டபத்தின் திறப்புவிழாவிற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்களும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து அப்பகுதியில் வசித்த மக்களும் அப்பகுதியில் வாழ்ந்த மக்களும் அங்கு கூடினர். நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் மாலை நான்கு மணியளவில் விமானப்படையின் உலங்குவானூர்தி அப்பகுதியால் சென்றது. நேரம் மாலை 5:30 மணிக்கு மாத்தளன் வான்பரப்பிற்குள் பிரவேசித்த சிறீலங்காவின் விமானப்படையின் "புக்காரா" குண்டுவீச்சு விமானங்கள் பத்திற்கும் அதிகமான றொக்கட் குண்டுகளை மண்டபத்தினை நோக்கி வீசியதில் மூன்று குண்டுகள் மண்டபத்தின்மீது விழுந்தன. ஏனைய குண்டுகள் மண்டபத்தின் முன்புள்ள சிறிய வயற்பகுதிகளில் விழுந்து வெடித்தன. எங்கும் "ஐயோ" என்ற அவலக்குரலுடன் மக்கள் திக்குத்திசையறியாது சிதறியோடினர்.

மண்டபம் புகைமண்டலமாக மாறியது. இவ்விமானத் தாக்குதலில் இருபது பொதுமக்கள் அவ்விடத்தில் உடல் சிதறிப் பலியானார்கள். நாற்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். குறிப்பிட்ட பொதுமண்டபமும் முற்றாகச் சேதத்திற்குள்ளானது. தாக்குதல் நடந்த சிலமணி நேரத்தின்பின் காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோரகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இன்ரிகிறேஸ் ஜோசப் - 31

02. இம்மானுவேல் ஆனந்தராஜா 19
03. பிரான்சிஸ் அருள்தாஸ் கடற்றொழில் 23
04. பிலிப்புதவராசா சுஜாத்தா மாணவர் 10
05. பரமானந்தம் 40
06. தம்பிராசா குணசிங்கம் விவசாயம் 18
07. தியாகராஜா கண்ணன் மாணவன் 16
08. மரியதாஸ் அன்ரன்ஜெயபாலன் கடற்றொழில் 32
09. மரியதாஸ் அன்ரன்யேசுதாஸ் 30
10. முத்தையா துரைசிங்கம் - 45
11. மரியதாஸ்இன்மானுவேல் ஆனந்தராசா விவசாயம் 19
12. டானியல்பிள்ளை பிலிப்புதவராசா கடற்றொழில் 39
13. அந்தோனிப்பிள்ளை சகாயநாயகி வீட்டுப்பணி 18
14. யோசப் வினிற்றா கிறேஸ்பிரெட்றிக் வீட்டுப்பணி 31
15. யேசுமார்க் அன்ரனிதாஸ் கடற்றொழில் 29
16. செல்லையா செல்வம் (கண்ணன்) மாணவர் 16
17. சியாத்தா திலீப்மேரி மாணவன் 9
18. சின்னப்பு அல்போன்ஸ் விவசாயம் 22
19. சங்கரசிவம் புலேந்திரன் மாணவன் 15
20. சங்கரசிவம் சுரேந்திரன் மாணவன் 18

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. கந்தையா குமாரசாமி விவசாயம் 45
02. அன்னலிங்கம் சொர்ணலிங்கம் கடற்றொழில் 37

## 87. சாவச்சேரி சங்கத்தானை குண்டுவீச்சு – 28 செப்ரெம்பர் 1993




யாழ் நகரிலிருந்து கிழக்குப்புறமாக யாழ்-கண்டி நெடுஞ்சாலையில் சாவகச்சேரி நகர் அமைந்துள்ளது. சாவகச்சேரி நகரப்பகுதியிலிருந்து ஐநூறு யார் தொலைவில் கண்டி வீதியின் கிழக்குப் பக்கமாக சங்கத்தானைக் கிராமம் அமைந்துள்ளது.

1990 இன் பின்னர் போர் தீவிரமடைந்தது. இதன்போது விமானங்கள் மக்கள் குடியிருப்புக்கள், பொது இடங்களென எங்கும் தமது தாக்குதலை நடத்தின. அத்துடன், இராணுவத்தினர் நீண்டதூர எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொள்ளத் தொடங்கினார்கள். இதன் விளைவாகப் பொதுமக்கள் தம்மை விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக காப்பகளழிகளை அமைத்து வந்தனர்.

இக்கிராமத்தில் "உதயன் மரக்காலையில்" அமைந்திருந்த பதுங்குகுழி அயலில் வாழுகின்ற மக்களின் பாதுகாப்பரனாக இருந்தது. 28.09.1993 அன்று மாலை 5.00 மணியளவில் சாவகச்சேரி நகரப்பகுதியில் பெரும் இரைச்சலுடன் வந்த ஆஜன்ரினா நாட்டுத் தயாரிப்பான

இரண்டு "புக்காரா" விமானங்கள் இரு தடவைகள் வானில் வட்டமிட்டன. பீதியுற்ற மக்களில் முப்பத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் தம்மைப் பாதுகாக்க உதயன் மரக்காலையில் அமைக்கப்பட்ட காப்பகழிக்குள் சென்றனர். இவ்விமானங்கள் வீசிய முதலாவது குண்டு காப்பகழி மீது வீழ்ந்து வெடித்ததால், காப்பகழிக்குள்ளிருந்த குழந்தைகள் உட்பட முப்பது பேர்வரை சம்பவ இடத்தில் மண்ணுக்குள் புதைந்த நிலையில் உயிரிழந்தார்கள். காப்பகழியில் தஞ்சமடைந்த மக்களில் ஐந்துபேர் மட்டும் காயங்களுடன் மீட்கப்பட்டனர்.




உயிரிழந்தவர்களின் நினைவாக சாவகச்சேரி சங்கத்தானை "உதயன் மரக்காலையில்" நினைவுத்தூபி எழுப்பப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இரத்தினகோபால் சுதர்சன் மாணவன் 11
02. நாகேஸ்வரி குருநாதன் - 56
03. கந்தையா செல்வராசா தச்சு 40
04. கணேசன் கௌசிகா மாணவி 12
05. பாலசுந்தரம் சந்திரசேகரம் மாணவன் 9
06. பாலசுந்தரம் சுரேஸ் மாணவன் 12
07. பாலசுந்தரம் ரதி குழந்தை 3
08. தஸ்யனி பாலசுந்தரம் குழந்தை 2
09. தங்கம்மா கணபதிப்பிள்ளை - 56
10. தங்கராசா சுசீலா வீட்டுப்பணி 21
11. மகேஸ்வரி செல்லையா - 52
12. அமுதலிங்கம் லச்சம்மா - 53
13. ஜெகதீஸ்வரன் ஜனனி மாணவி 7
14. ஜெகதீஸ்வரன் தினேஸ் மாணவன் 8
15. ஜெகதீஸ்வரன் தசாஜினி மாணவி 11
16. ஜெகதீஸ்வரன் சாந்தினி வீட்டுப்பணி 31
17. கோபாலபிள்ளை சுதர்சன் மாணவன் 9
18. கோபாலரத்தினம் சுபாஜினி மாணவி 15
19. பொன்னுத்துரை ஞானேஸ்வரி - 60
20. தெய்வேந்திரன் நாகேந்திரன் மாணவன் 19
21. செல்வராசா யசோதா மாணவி 18
22. செல்வராசா சுஜாதா மாணவி 16
23. சுரேக்கா கோபாலரட்ணம் மாணவி 9
24. சின்னராசா நிறஞ்சனி மாணவி 13
25. சின்னராசா பிரபா மாணவி 10
26. சின்னராசா பிரபாலினி மாணவி 10
27. சின்னராசா பவானி மாணவி 21
28. ரட்ணகோபால் துஸ்யேந்திரன் மாணவன் 09

## 88. கொக்குவில் ஆலயம் படுகொலை – 29 செப்ரெம்பர் 1993



யாழ்ப்பாணத்தின் நல்லூர் பிரதேசத்தில் கொக்குவில் கிராமம் அமைந்துள்ளது. சைவசமய வளர்ச்சிக்கும், சைவ அபிவிருத்திக்கும் முன்னோடியாக இக்கிராமத்தில் நந்தாவில் எனும் ஊரில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் இற்றைக்கு இருநூற்றைம்பது வருடம் பழமை வாய்ந்ததாகவும், பல வரலாற்றுச் சிறப்பம்சங்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்தில் 1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினராலும், 1993ஆம் ஆண்டு சிறிலங்கா விமானப் படைகளாலும் மக்கள் படுகொலை செய்யபட்டனர்.

1988ஆம் ஆண்டு ஆவணி மாதம் காலை 8.00மணியளவில் ஆலயப் பகுதியாற் சென்ற இந்திய இராணுவத்தினர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டு நின்றவர்களைச் சுட்டதில் எஸ்.சண்முகம் (நல்லூர் ப.நோ.கூ.ச.ஊழியர்), கண்ணன் (ஆலய பூசகர்), குலேந்திரன் (உதவி அரச அதிபர் - கோப்பாய்) ஆகியோர் உயிரிழந்தார்கள். மேலும் ஐந்து பேர் காயமடைந்தனர்.

1993.09.29 காலை 11:00 மணியளவில் சிறீலங்கா விமானப்படையின் "புக்காரா" விமானம் ஆலயம்மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் ஆலய வழிபாட்டில் நின்றவர்களில் மூன்று பெண்கள் உயிரிழந்தனர். ஐந்துபேர் படுகாயமடைந்தனர்.

## 89. குருநகர் தேவாலயம் படுகொலை – 13 நவம்பர் 1993

குருநகர்க் கிராமம் யாழ்ப்பாண நகரத்திலிருந்து தெற்குப் புறமாக இரண்டு மைல் தூரத்தில் கடற்கரையோரமாக அமைந்துள்ளது. குருநகர்ப் பகுதியில் 1861ஆம் ஆண்டு அடிக்கல் நடப்பட்டு 1881 ஆம் ஆண்டு புனித யாகப்பர் ஆலயம் அமைக்கப்பட்டது. இவ்வாலயச் சூழலில் 1973ஆம் ஆண்டு இறந்த "அருட்திரு யோசவ் ரேயை"அவர்கள் ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்ட நினைவுக்கல்லும் உள்ளது.

13.11.1993 அன்று சனிக்கிழமை காலை 7:20 மணிக்கு அவ்வூர் மக்கள் இறைவழிபாட்டுக்காக ஆலயத்தில் ஒன்று கூடியிருந்த நேரம் குடாநாட்டு வான்பரப்பிற்குள் பிரவேசித்த விமானப்படையின் விமானங்கள் குண்டுகளை வீசின. இவ்வாலயத்தில் வழிபாடு செய்து கொண்டிருந்தவர்களில் பதின்மூன்று பேர் உயிரிழகக், இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததுடன், தேவலாயமும் சேதமடைந்தது.

குருநகர் புனித யாகப்பர் தேவாலயம் மீதான தாக்குதலை அரசியற் தலைவர்களோடு உலகநாடுகள் பலவும் கண்டித்திருந்தன.

தேவாலயத்தின் மீதான குண்டு வீச்சினால் மண்டபத்தினைத் தாங்கிய தூண்கள் துண்டங்களாகின. அந்தத் தூண்கள் இன்றும் யாகப்பர் சிலையின் அருகே ஞாபகச் சின்னமாக வைக்கப் பட்டுள்ளன. புனித யாகப்பர் ஆலயத்தில் உயிர் நீத்த மக்களின் நினைவாக குருநகர் மக்களால் ஆலயப் படிக்கட்டில் "நீதிக்கான நினைவாலயம்" என்னும் நினைவுச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.






இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. குருஸ் அக்கினேஸ் ஓய்வுபெற்றவர் 60
02. கபிரியல் அன்ரன் கடற்றொழில் 48
03. அன்ரன் புஸ்பலீலா இல்லை 41
04. அன்ரன் அஞ்சலா குடும்பப்பெண் 40
05. அக்கினேஸ் குருசுப்பிள்ளை வயோதிபர் 80
06. ஆரோக்கியநாதர் சில்வன் சஜீவன் மாணவன் 18
07. ஜோன்லூத்து சேவியர் தொழிலாளி 45
08. தோமஸ் பெனடிற் கமம் 55
09. மேரி ஜெயசீலி தாசியஸ் வீட்டுப்பணி 50
10. மேரிசிந்துயா மதுரநாயகம் குழந்தை 2.5
11. மேரிவெண்ணிலா அந்தோனிப்பிள்ளை ஆசிரியை 27
12. சிங்கராயர் ஜானி கனோஜி மாணவன் 08
13. சிங்கராசா யூஜின் காமலிற்றா மாணவி 15

## 90. சுண்டிக்குளம்94 மீனவர் படுகொலை – 18 பெப்பிரவரி 1994

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் அடங்கியுள்ள சுண்டிக்குளம் எனும் பிரதேசத்திலுள்ள ஒரு மீனவர் குடியிருப்பு தொடுவை வாய்க்கால் ஆகும். இங்கு வாழ்பவர்களது சீவனோபாயத் தொழில் மீன்பிடி ஆகும்.



18.02.1994 அன்று அதிகாலை 5:15 மணியளவில் இப்பகுதி மீனவர்கள் மீன் பிடிப்பதற்காகக் கட்டு மரங்களில் கடலை நோக்கிச் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்தவேளை அங்கு வந்த கடற்படையின் "டோறாப்படகு" மீனவர்கள் மீது திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவேளை அங்கிருந்த மீனவர்கள் சிலர் தப்பிச் செல்லும் நோக்கில் கட்டுமரங்களை

விட்டு கடலில் குதித்து நீந்தியவண்ணமும் மற்றவர்கள் வலைகளை அறுத்துவிட்டும் கரையை நோக்கிக் கட்டுமரங்களை நகர்த்திய வண்ணமும் இருந்தனர். கடற்படையினரோ மீனவர்களை நோக்கித் தொடர்ந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் கரையோரக் குடியிருப்புக்களிலிருந்த அனைவருக்கும் தெளிவாகக் கேட்க தங்கள் உறவுகள் மீன்பிடிக்கச் சென்றதை எண்ணி ஏங்கிக் கரையை நோக்கி ஓடிவந்து அவர்கள் பார்த்தவேளை கடற்படையின் டோறாப்படகு கடற்கரையை மிகவும் அண்மித்து வந்து மீனவர்களைச் சுடுவதைக் கண்டனர். தாக்குதலுக்கு இலக்காகி மீனவர்கள் கடல் நீரில் சோர்ந்து விழுவதைக்கண்டு மக்கள் கதறியழுதனர்.

கடற்படையின் தாக்குதலில் பத்து மீனவர்கள் கடலில் உயிரிழந்தனர். தாக்குதல் நடந்தன்று மூன்று பேரின் உடல்களே கிடைக்கப்பெற்றன. ஏனைய ஏழு பேரது உடல்களும் மறுதினமே கரையொதுங்கியன. இந்த தாக்குதலினால் பீதியுற்ற மீனவர்கள் சிலமாதங்களாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடவில்லை. இதனால் அன்றைய காலகட்டத்தில் அப்பிரதேச மீனவர்கள் மிகவும் வறுமையான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இயக்கோ கபிரியேல்பிள்ளை 29
02. இயக்கோப்பிள்ளை நிக்சன் 20
03. கரியோப்பிள்ளை அருள்ஜெயசீலன் 25
04. மனுவேற்ப்பிள்ளை மரியசீலன் 26
05. அந்தோனிப்பிள்ளை இயக்கோப்பிள்ளை 46
06. அமிர்தநாயகம் யோன்பெர்னான்டோ 35
07. ஆசீர்வாதம் வினஞ்சேநிதிமரிசலின் 44
08. யேசுராசா அலோசியஸ் சாந்தகுமார் 22

## 91. நவாலி தேவாலயம் படுகொலை – 09 யூலை 1995

நவாலிக்கிராமம் யாழ். மாவட்டத்தின் தென்மேற்கே சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. நவாலிப் பகுதியில் பழைமை வாய்ந்ததும் சிறப்பு வாய்ந்ததுமாக கத்தோலிக்க மக்களின் புனித வழிபாட்டுத்தலமாக சென்.பீற்றர்ஸ் தேவாலயம் உள்ளது.




09.07.1995 அன்று இராணுவத்தினர் "முன்னேறிப் பாய்தல்" என்ற பெயரில் யாழ். குடாநாட்டின் வலிகாமம் மேற்குப்பதியை இலக்காகக் கொண்டு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட வேளை மக்களைப் பாதுகாப்பாக ஆலயங்களில் இருக்குமாறு அறிவித்தார்கள். இராணுவ நடவடிக்கை காரணமாக சங்கானை, சண்டிலிப்பாய், மாசியப்பிட்டி, தொட்டிலடி, சீரணிச்சந்தி, சுழிபுரம், சித்தன்கேணி, இளவாலை, பண்டத்தரிப்பு ஆகிய கிராமங்களைச்

சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இடம்பெயர்ந்தனர். இதில் ஒரு பகுதியினரில் ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு பொதுமக்கள் நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திலும் அத்தேவாலயத்தை அண்டிய பகுதிகளிலும் தஞ்சமடைந்திருந்தனர்.

1995.07.09 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4:30 மணியளவில் விமானப்படையினரின் ஆஜன்ரீனா நாட்டுத் தயாரிப்பான "புக்காரா" விமானம் நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதும் அதன் சுற்றுப் புறத்திலுமாக ஒரே நேரத்தில் எட்டு றொக்கட் குண்டுகளை வீசியது. விமானத்தாக்குதலினால் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த குழந்தைகள், பெண்கள், சிறார்கள், தாய்மார்கள் உட்பட நூற்றிஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உடல்கள் சிதறுண்டு சம்பவ இடத்தில் உயிரிழக்க இருநூற்றைம்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களிற் பலர் வைத்தியசாலையில் உயிரிழந்தார்கள். உயிரிழந்த பொதுமக்களின் உடல்களை அப்புறப்படுத்துவதிலும் காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதிலும் ஊர் மக்கள் ஈடுபட்டனர். அன்று இரவு, மறுநாட் காலையென உயிரிழந்தவர்களின் உடல்கள் உழவு இயந்திரங்களிலும் வாகனங்களிலும் ஏற்றி யாழ். போதனா வைத்தியசாலையிற் சேர்க்கப்பட்டன. மூன்று தினங்கள் கழிந்த நிலையிலும் சடலங்களைத் தேடும் பணி நின்றுவிடவில்லை.



11.07.1995 செவ்வாய்க்கிழமை உறவினர்களால் அடையாளம் காணமுடியாத இருபத்துநான்கு சடலங்களை யாழ். வைத்தியசாலை நிர்வாகமும் யாழ். நோயாளர் நலன்புரி நிலையமும் இணைந்து சமய முறைப்படி அரியாலை செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்தன. இத்தாக்குதலின் பின்னர் கத்தோலிக்க மத புனித திருத்தந்தை பெருமதிப்பிற்குரிய "இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்" அவரது அதிர்ச்சியையும் தெரிவித்ததோடு, ஆலயத்தில் நடந்த அனர்த்தத்திற்கு வருத்தமும் தெரிவித்திருந்தார்.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலில் உயிரிழந்த நூற்றிஐம்பத்தைந்திற்கும் மேற்பட்ட மக்களின் நினைவாக, நவாலி மக்கள் ஆலயத்தின் வடக்குப் பக்கமாக நினைவுத்தூபி ஒன்றை அமைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றார்கள்.

மனைவியை இழந்த் மானிப்பாய் கிழக்கைச்சேர்ந்த கமலநாதன் தெரிவிக்கையில்,

*"மாலை 4:30 மணிபோல் பெரிய குண்டுச் சத்தமும் புகை மண்டலமும் வயலுக்குள் நின்று பார்க்கும்போது நவாலிப்பக்கமாகத் தெரிந்தது. உடனே மகளையும் கூட்டிக்கொண்டு ஓடோடி வந்து பார்த்தால் எனது வீட்டிற்குள் போகமுடியவில்லை. கட்டட இடிபாடுகளும் முறிந்த மரங்களுமாக வீதியெங்கும் இருந்தது. அதையும் தாண்டிவளவிற்குள் வந்து பார்த்தபோது எனது மனைவிக்கு நெஞ்சிற் காயம்பட்டு இரத்தம் பாய்ந்துகொண்டிருந்தது. மகளிற்கு தலையிலும் கையிலும் காயம். இருவரும் சாய்ந்தபடி இருந்தார்கள். அவர்களைத் தாண்டி சற்றுத் தள்ளிப்பார்த்தபோது எனது மைத்துனர் குணரட்ணம் குடும்பத்தில் அவரும் அவரது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் முற்றத்திலேயே இறந்து கிடந்தார்கள். மனைவிக்கும் மகளுக்கும் துணியாற் காயத்திற்குக் கட்டுப் போட்டுவிட்டு அருகிலிருந்த சகோதரி என்ன ஆகியிருப்பாரெனப் பயந்துபோய்ப் பார்த்தபோது எனது மைத்துனர் கணேசலிங்கம் அழுதுகொண்டு மனைவி இறந்துவிட்டார். உங்களுடைய குடும்பத்தைப் போய்ப் பாருங்கோ என்று சொல்லியபடி சகோதரியைத் தூக்கிக் கொண்டு வந்தார். அந்தநேரம் வந்த அம்புலன்ஸ்*

வண்டியில் மனைவியையும் மகளையும் ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றுகொண்டிருந்தோம். போகும்போது மனைவியுடன் கதைத்துக்கொண்டிருந்தேன். அங்கு கொண்டுபோய்ச் சேர்த்தபோது அன்றையதினம் ஞாயிற்றுக்கிழமை என்பதால், பிரதான வைத்தியர்கள் இருக்கவில்லை. இருந்தவர்கள் எல்லோரும் வந்து தொட்டுப் பார்த்துவிட்டுச் சென்றார்கள். அப்போது அவருடைய கை திமரெனக் கீழே விழுந்தது. அந்தவேளை "அப்பா பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளுங்கோ" என்றதோடு அவரின் உயிரும் பிரிந்து விட்டது."

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைதாசன் மேரிசசிகலா மாணவி 18
02. இதயசாந்தினி - -
03. இம்மானுவேல் டுசிந்தா மாணவி 14
04. இராமு வீரசிங்கம் கடற்றொழில் 43
05. இராசகுலசிங்கம் இராஜ்மோகன் மாணவன் 16
06. இராசதுரை மகேஸ்வரி - 34
07. இராசதுரை சந்திரகாந்தன் மாணவன் 13
08. இராசதுரை சுதா மாணவன் 09
09. இராசரத்தினம் ஆனந்தராசா லிகிதர் 34
10. ஜீவராஜ் பிரதீபன் மாணவன் 13
11. உதயகுமார் - -
12. உதயகுமார் உசாந்தினி மாணவி 12
13. உதயகுமார் சதீஸ்குமார் மாணவன் 13
14. ந.முருகதாஸ் - -
15. ந.அபிராமி - -
16. ந.வசந்தமலர் - -
17. நாகலிங்கம் சரவணமுத்து கமம் 60
18. நாகேஸ் கோபாலகிருஸ்ணன் கடற்றொழில் 29
19. நடராசா கணாதீபன் மாணவன் 05
20. நடராசா சின்னத்துரை கமம் 65
21. நடராசா ரவி சீவற்றொழில் 22
22. நடேசு சித்திரபாலு தச்சுவேலை 51
23. நடேசன் விஜயகுமார் மாணவன் 18
24. நீக்கிலாப்பிள்ளை திருச்செல்வம் அரசஊழியர் 54
25. நித்தியானந்தம் அன்னலட்சுமி - 57
26. நவரத்தினம் ஜெயதா மாணவி 21
27. நல்லையா நீலாவதி வீட்டுப்பணி 50
28. கனகசபாபதி தவலட்சுமி வியாபாரம் 42
29. கனகசிங்கம் நாராயணசிங்கம் சுயதொழில் 50
30. கனகரத்தினம் உசாநந்தன் தொழிலாளி 20
31. கனகரத்தினம் சுதாகரன் மாணவன் 22
32. கனகரத்தினம் வசிகரன் மாணவன் 18
33. கந்தையா நல்லையா கடற்றொழில் 55
34. கந்தன் ஞானசேகரம் மாணவன் 17
35. கந்தசாமி அஞ்சலாதேவி - 36
36. கந்தசாமி தேனுகா மாணவி 12
37. கந்தசாமி தேவகுலசிங்கம் தொழிலாளி 36

38. கார்த்திகேசு தவச்செல்வி மாணவி 12
39. காத்தான் கந்தசாமி சீவற்றொழில் 42
40. கதிரவேலு துரைராசா விவசாயம் 55
41. குமாரசாமி பத்மநாதன் கமம் 24
42. கமலநாதன் சாவித்திரி - 45
43. கணேசவேல் தேவகணேசன் மாணவன் 15
44. கணேசலிங்கம் கமலாதேவி கணக்கு உதவியாளர் 45
45. குமரசாமி மகேஸ்வரி ஆசிரியர் 54
46. குணரத்தினம் பிரணவன் மாணவன் 05
47. குணரத்தினம் தர்சினி மாணவி 14
48. குணரத்தினம் ரோகினி குடும்பத்தலைவி 35
49. குணரத்தினம் விதுசன் மாணவன் 07
50. ப.இந்திரகுமார் - -
51. ப.சாந்தன் - -
52. புஸ்பராணி - -
53. பாலசிங்கம் உதயராசா தச்சுவேலை 23
54. பாலசிங்கம் செல்லம்மா - 33
55. பத்மநாதன் பாலயோகினி - 40
56. பத்மநாதன் மலர்விழி மாணவி 13
57. பத்மகுமாரன் கோமதி வீட்டுப்பணி 28
58. பிரான்சிஸ் கிங்ஸ்லி எழுதுவினைஞர் 27
59. பிலிப்பிள்ளை கபிரியேற்பிள்ளை கிராமசேவையாளர் 54
60. பரராசசிங்கம் செல்வரத்தினம் வியாபாரம் 48
61. புண்ணியமூர்த்தி சயந்தன் மாணவன் 09
62. வைத்தியலிங்கம் ஜெயசிங்கம் அரசஊழியர் 56
63. வைரமுத்து சிவராசா தொழிலாளி 39
64. த.குலசிங்கம் - -
65. த.புஸ்பராணி - -
66. தனலட்சுமி - -
67. தர்மகுலசிங்கம் சுஜீபா மாணவி 17
68. தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி - 63
69. துரைராசா - -
70. தம்பிப்பிள்ளை தியாகராசா சுருட்டுத்தொழில் 54
71. தம்பிராசா துவாரகாதேவி மாணவி 20
72. தங்கராசா தற்சுதன் மாணவன் 10
73. தவம் பாஸ்கரன் தொழிலாளி 19
74. மாயராசா ஆனந்தபுவனன் மாணவன் 16
75. மாயராசா செல்வநாயகி வீட்டுப்பணி 53
76. மாதன் பரராசசிங்கம் மேசன் 48
77. மகேஸ்வரன் தயாளன் தொழிலாளி 20
78. மகேந்திரன் மதுகரன் மாணவன் 17
79. மகேந்திரன் வசந்தகுமாரி - 25
80. முருகன் சரசு - 69
81. முருகேசு பொன்னம்பலம் தச்சுவேலை 47
82. முருகேசு செல்வரட்ணம் வர்ணம் பூசுபவர் 65

83. அ.தனுஸ்ரலா மாணவி 8
84. ஆனந்தராசா யோகேஸ்வரி - 35

85. அந்தோனிப்பிள்ளை குரூஸ் குமுதினி மாணவி 18
86. ஆறுமுகம் கனகலிங்கம் வியாபாரம் 40
87. ஆறுமுகம் குணரத்தினம் மெக்கானிக் 40
88. ஜெயசீலன் கனிஸ்ரன் மாணவன் 17
89. ஜெகதீபன் - -
90. ஜெகசோதி விமலாதேவி வியாபாரம் 42
91. ஜெகசோதி ரதிமலர் மாணவி 17
92. யோகேஸ்வரி - -
93. நேசராஜா தவரஜனி - 28
94. கோபாலகிருஸ்ணன் கபில்ராஜ் மாணவன் 7
95. கோபாலகிருஸ்ணன் பிரதீபன் மாணவன் 07
96. கோபாலகிருஸ்ணன் மதிவதனன் - 22
97. கோபாலகிருஸ்ணன் ரேவதி - 36
98. கோபாலகிருஸ்ணன் சயந்தன் மாணவன் 09
99. கோபாலகிருஸ்ணன் விநோபா குழந்தை 05
100. கோபிநாத் - -
101. பொன்னர் நாகமுத்து - 75
102. பொன்னார் உதயகுமார் மீன்வியாபாரம் 35
103. தொம்மைப்பிள்ளை ஜேசுதாசன் வியாபாரம் 21
104. தேவநாயகம் சைலஜா மாணவி 13
105. தேவநாயகம் தவபாலசரஸ்வதி - 45
106. தேவநாயகம் மனோதிகா மாணவி 08
107. தேவநாயகம் லாவன்யன் மாணவன் 11
108. தேவதாஸ் நரேஸ்குமார் மாணவன் 11
109. தேவதாஸ் பிரிந்தினி மாணவி 07
110. செ.தவராணி - -
111. செல்லையா இராசதுரை கடற்றொழில் 35
112. செல்லையா கிருஸ்ணரூபன் கடற்றொழில் 19
113. செல்வராசா பிரதீஸ் - 16
114. செல்வரட்ணம் சிவசுப்பிரமணியம் - 46
115. செல்லத்துரை இராசம்மா - 56
116. வேலு இராமலிங்கம் தொழிலாளி 22
117. வேலுப்பிள்ளை நடேஸ்வரன் மாணவன் 19
118. வேலாயுதம் லலிதாதேவி - 35
119. ஞானலட்சுமிபாலன் சீவரத்தினம் தொழிலாளி 47
120. சக்கரியால் ஜெகதீபன் ஜீவாதாஸ் மாணவன் 17
121. சுப்பையா தேவநாயகம் தொழிலாளி 47
122. சத்தியநாதன் - -
123. சதீஸ்குமார் - -
124. சி.மகேஸ்வரி - -
125. சின்னத்துரை நாகரத்தினம் - 60
126. சின்னத்தம்பி இன்பமலர் மாணவி 10
127. சின்னத்தம்பி இரத்தினசிங்கம் கடற்றொழில் 46
128. சின்னையா யோகசுந்தரம் விவசாயம் 39
129. சின்னையா சரஸ்வதி - 62
130. சித்திரபாலு நாகேஸ்வரி வியாபாரம் 44
131. சித்திரபாலு பிரபாகரன் மாணவன் 21
132. சித்திரபாலு தனேஸ்வரி மாணவி 17

133. சித்திரபாலு மகேந்திரா தச்சுவேலை 25
134. சித்திரபாலு ஜெயபாலினி மாணவி 12
135. சித்திரபாலு ஜெயமதி - 27
136. சிவகுமாரன் சுரேக்கா மாணவி 12
137. சிவசோதிராஜா பிரசன்னா மாணவன் 10
138. சிவலிங்கராசா ரஞ்சினி மாணவி 11
139. சிறீஸ்கந்தராசா கோபிகன் மாணவன் 13
140. சசிகலா - -
141. சுவாமிநாதர் சிவபாலசுப்பிரமணியன் ஆசிரியர் 50
142. சரவணபவான் பராசக்தி - 27
143. சரவணமுத்து சிவமணி பூசகர் 63
144. சண்முகநாதன் - -
145. வன்னியசிங்கம் - -
146. வீரசிங்கம் சற்குணராசா கடற்றொழில் 30
147. வரதராசா கிருஸ்ணகுமார் குழந்தை 15

148. ரவிச்சந்திரன் தனுசியா மாணவி 8
149. எஸ்.பிரதீபா மாணவி 11
150. எஸ்.கேதீஸ்வரன் - -
151. எஸ்.கேமலதா கிராமசேவையாளர் 27
152. லூக்காஸ் யூட்மோகனதாஸ் தச்சுவேலை 24

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. ந.கயிலைநாதன் சாரதி 46
02. நாகேஸ்வரி வீட்டுப்பணி 49
03. க.இரத்தினதேவி வீட்டுப்பணி 19
04. கு.உதயப்பிரபா மாணவி 19
05. க.ரஞ்சினி மாணவி 09
06. கந்தமூர்த்தி செல்லம்மா வீட்டுப்பணி 35
07. கந்தமூர்த்தி ரஜனி மாணவி 07
08. கந்தமூர்த்தி ஜமுனா மாணவி 12
09. கந்தசாமி அமுதன் மாணவன் 16
10. கந்தசாமி சாமினி வீட்டுப்பணி 29
11. கா.தவராசா கடற்றொழில் 38
12. கார்த்திகேசு பேபிசாளினி மாணவி 08
13. கார்த்திகேசு சிவயோகராஜபுஸ்பம் வீட்டுப்பணி 44
14. கீ.தர்மஜெயன் தொழிலாளி 27
15. கி.பெளனின் தச்சுவேலை 51
16. ப.தயாளினி மாணவி 09
17. ப.சிவரூபன் மாணவன் 16
18. பாலச்சந்திரன் மகேஸ்வரி வீட்டுப்பணி 35
19. புலேந்திரன் ஜெயகரன் மாணவன் 15
20. துரைராசா நவரத்தினராசா மாணவன் 17
21. தி.கென்றிஜெயாகர் தொழிலாளி 18
22. தங்கராசா கௌசலா குழந்தை 02
23. தவராசா தேவகுமாரி வீடடு பப் ணி 45
24. தவராசா சிறிகரன் - 36

25. மு.கிளாடிஸ் நிர்மலா மாணவி 26
26. மயில்வாகனம் சசிகரன் மாணவன் 17
27. மார்க்கண்டு கந்தசாமி கடற்றொழில் 45
28. மார்க்கண்டு பேரின்பகுமார் மாணவன் 19
29. ஆ.முருகதாஸ் தொழிலாளி 30
30. அ.ஆரோக்கியம் வீட்டுப்பணி 59
31. அ.அருள்சீலி மாணவி 19
32. அ.ஜெயக்குமார் அதிபர் 45
33. அ.ஜெயவீரசிங்கம் தொழிலாளி 32
34. அ.லூர்த்துமேரி வீட்டுப்பணி 45
35. அன்ரன் ரஞ்சன் மாணவன் 19
36. அரசரட்ணம் குமுதினி மாணவி 16
37. அரசரட்ணம் மல்லிகாதேவி வீட்டுப்பணி 46
38. நேசராசா ஆர்த்தி குழந்தை 5 மாதம்
39. கோ.இராகுலன் மாணவன் 12
40. பே.சிவயோகநாதன் கமம் 44
41. பௌடிற் ரஞ்ச ினிதேவி வீடடு பப் ணி 20
42. தே.ஜெயராணி 38
43. தே.ரஜிதா மாணவி 08
44. மேனகா மாணவி 14
45. மோ.சாந்தி வீட்டுப்பணி 30
46. செ.முருகானந்தன் மாணவன் 15
47. செ.தேவமலர் வீட்டுப்பணி 16
48. செ.சுமித்திரா மாணவி 13
49. ச.நாகேஸ்வரி வீட்டுப்பணி 65
50. சு.தங்கப்பட்டு வீட்டுப்பணி 19
51. சு.மகாதேவி மாணவி 15
52. ச.அருட்செல்வி வீட்டுப்பணி 26
53. ச.வசந்தி மாணவி 14
54. சி.பிரதீபா மாணவி 26
55. சி.திருச்செல்வி மாணவி 12
56. சி.யோனிசங்கர் மாணவன் 18
57. சி.சுதாகரன் மாணவன் 17
58. சி.சிவமலர் வீட்டுப்பணி 33
59. சி.சிவசீலன் மாணவன் 14
60. விஜயகுமார் புவனேஸ்வரி வீட்டுப்பணி 18

## 92. நாகர்கோயில் பாடசாலை படுகொலை – 22 செப்ரெம்பர் 1995

யாழ் மாவட்டத்தில் வடமராட்சியில் நாகர்கோயிற் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்து மக்களின் பிரதான தொழில் மீன்பிடித்தல் ஆகும். கிராமத்தில் 15.02.1956இல் வி.நாகநாதன் அவர்களின் முயற்சியினால் நாகர்கோயில் வடக்கில் யாழ் நாகர்கோயில் நாகேஸ்வரா வித்தியாலயம் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டது. பின்னர் 1967 இல் யாழ்.நாகர்கோயில் மகாவித்தியாலமாகத் தரம் உயர்த்தப்பட்டது.

1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை காரணமாக மயிலிட்டிக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் அறுநூறு குடும்பங்கள் நாகர்கோயிலிற்கு இடம்பெயர்ந்தன. நாநூறு மாணவர்களைக் கொண்டிருந்த பாடசாலையின் மாணவர் தொகை எழுநூறாக உயர்ந்தது. 1991ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் நடைபெற்ற சண்டையினால் வெற்றிலைக்கேணி, ஆழியவளை, கட்டைக்காடு போன்ற கிராமமக்களும் நாகர்கோயிலிலேயே தஞ்சமடைந்தனர். 1993ஆம் ஆண்டுக்குப் பின்பு மாணவர்களின் எண்ணிக்கை எண்ணூற்றுமுப்பதாக அதிகரித்தது. ஆசிரியர்களின் எண்ணிக்கை முப்பதாக அதிகரித்துக் காணப்பட்டது.



1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் இருபத்தோராம் திகதி வடமராட்சியின் பல பாகங்களுக்கும் பலாலியிலிருந்து இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். மறுநாள் இருபத்திரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை 6:30 மணிக்கு வடமராட்சி கிழக்குப் பகுதியில் விமானப்படையின் "புக்காரா" குண்டுவீச்சு விமானம் மணற்காடு கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகில் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டதில் தேவாலயம் சேதமடைந்ததுடன், மணற்காட்டைச் சேர்ந்த இரத்தினம் அன்ரனிதாஸ் (எட்டு வயது), மனோகரதாஸ் மரியஜித் (பத்து வயது), ஜோனபொஸ்கோ கார்மினா (ஐந்து வயது) ஆகிய மூவரும் உயிரிழந்ததுடன் பலர் படுகாயமடைந்தனர்.

அன்றைய தினம் (22.09.1995) வடமராட்சி கிழக்கில் காலை பதற்றமாக இருந்தபோதும் நாகர்கோயில் மகாவித்தியாலயத்துக்கு வழமைபோல மாணவர்கள் வந்தனர். அன்றையதினம் எண்ணூற்றுமுப்பது மாணவரில் எண்ணூற்றுபத்து மாணவர்கள் வந்திருந்தனர். வெள்ளிக்கிழமை என்பதால் காலையில் இறைவழிபாடு ஆரம்பித்தது. இறைவழிபாட்டினைத் தொடர்ந்து நற்சிந்தனை இடம்பெற்றது. அன்றைய நற்சிந்தனையினை ஏழாம் ஆண்டில் கல்விகற்கும் "நவரத்தினசாமி உமாதேவி" எல்லோரையும் கவரக்கூடிய விதத்தில் இனிய குரலில் இருபத்தைந்து நிமிடம் வழங்கினார். இதனைத் தொடர்ந்து மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள்.

மதியம் 12:45 மணியளவில் வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நாகர்கோயில் வான்பரப்பிற்குள் பிரவேசித்த விமானப்படையின் இரண்டு "புக்காரா" விமானங்களிலிருந்தும் மாறி, மாறி எட்டு றொக்கட் குண்டுகள் பாடசாலையையும், கிராமத்தையும் நோக்கி வீசப்பட்டதினால் அப்பிரதேசம் புகைமண்டலமானது. இத்தாக்குதலில் காலைப்பிரார்த்தனையில் எல்லோராலும் பாராட்டப்பட்ட "நவரத்தினசாமி உமாதேவி" உட்பட எழு மாணவர்கள் பாடசாலையினுள் உயிரிழந்தார்கள். படுகாயத்துடன் உயிருக்காகப் போராடிய பதின்மூன்று மாணவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலும், வைத்தியசாலையிலும் இறந்தனர். மேலும் நாற்பத்திரண்டு மாணவர்கள் படுகாயமடைந்தனர். இன்னும் சில மாணவர்கள் தமது உடல் உறுப்புக்களை இழந்தனர்.

அன்று நடந்த புக்காராக் குண்டுவீச்சில் பாடசாலை மாணவர்களுடன் நாகர்கோவில் கிராமத்தைச் சேர்ந்த இருபதிற்கும் மேற்பட்ட பொதுமக்களும் உயிரிழந்ததுடன், எண்பத்தைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தார்கள்.

அன்றைய தாக்குதலில் இருபது மாணவர்கள் உட்பட நாற்பது பேர் உயிரிழந்தனர். நாற்பத்திரண்டு மாணவர்கள் உட்பட நூறு பேர் காயமடைந்தனர். இச்சம்பவத்தில் வலது காலை இழந்த்த ச.சிறிவித்தியா கூறுகையில்,

*“அன்று புக்காரா விமானம் பாடசாலை அருகில் முதல் குண்டை போட்டவுடன் எல்லோரும் சிதறி ஓடினோம். அப்போது மீண்டும் விமான இரைச்சல் சத்தம் பெரிதாகக் கேட்ட போது நான் பாடசாலையிலுள்ள அத்திமரத்தின் கீழே விழுந்து படுத்துவிட்டேன். குண்டு பாடசாலை வளாகத்திற்குள் விழுந்து வெடித்தது பாடசாலை முழுக்க புகை மண்டலமாக இருந்தது. எங்கும் ஒரே அழுகுரல்கள் கேட்டது. நானிருந்த இடத்தில் இருந்து தலையைத் துக்கிப் பார்த்த போது எங்கும் இரத்தமாக இருந்தது. எனது உடம்பிலும் காலிலும் காயமடைந்திருந்தேன். அப்போது நான் அத்திமரத்தை விட்டு எனக்கருகிலிருந்த எனது ஒன்றுவிட்ட சகோதரியையும் கூட்டிகொண்டு ஓடும் நோக்குடன் எழும்ப முயன்ற போது என்னால் ஓடமுடியாமற் போய்விட்டது. அந்தநேரம் எனது அண்ணாதான் வந்து என்னைத் தூக்கிக்கொண்டுபோய் மந்திகை வைத்தியசாலையிற் சேர்த்தார். அங்கு எனது வலது காலினைக் கழற்றினார்கள். அத்துடன் எனது வலது கையையும் கழற்ற வேண்டுமென்று கூறினார்கள். பின்னர் யாழ் போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சை பெற்று குணமடைந்தேன்.”*

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராமநாதன் மேதினி மாணவி 13
02. இராமச்சந்திரன் சங்கீதா மாணவி 14
03. இராசரத்தினம் உமாகாந்தன் மாணவன் 16
04. இராசரத்தினம் கவிதா மாணவி 10
05. இரவீந்திரராசா அமிர்தா மாணவி 10
06. உ.தர்சினி மாணவி 12
07. நாகமுத்து செல்தில்வேல் மாணவன் 15
08. நவமணி மிதுரா மாணவி 14
09. நவரத்தினசாமி உமாதேவி மாணவி 12
10. குகசரவணைமலை தர்சினி மாணவி 13
11. கிருஸ்ணகோபால் தவசீலன் மாணவன் 13
12. பூலோகராசா துஸ்யந்தி மாணவி 13
13. பாலச்சந்திரன் றெஜிதா மாணவி 10
14. த.சமித்தா மாணவி 10
15. தர்மலிங்கம் உசாநந்தினி மாணவி 14
16. தாமோதரம்பிள்ளை சகுந்தா மாணவி 12
17. தம்பிப்பிள்ளை கோபிதரன் மாணவன் -
18. மயில்வாகனம் கணநாதன் மாணவன் 13
19. மகாலிங்கம் சண்முகவடிவேல் மாணவன் 16
20. மார்க்கண்டு நாகலோசனி மாணவி 10
21. அன்ரன் மரிய மனோகரதாஸ் மரியறஜித் மாணவன் 9
22. அன்ரனி மரியறோஸ் அன்ரனிதாஸ் மாணவன் 8
23. அல்போன்ஸ் அமலவிஜி மாணவி 14
24. யோன் பொஸ்கோ கார்மிலரா - 4
25. செல்வகுலசிங்கம் செல்வதி மாணவி 17
26. செல்வம் மாணவன் 16
27. சிதம்பரப்பிள்ளை சசிரூபி மாணவி 11
28. ராகவன் மாணவன் 16


இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. தங்கவேலாயுதம் றேணுகாயினி மாணவி 12
02. அ.றோமியா மாணவி 10
03. அக்கினேஸ்திரேசா கலிமண்ட் கடற்றொழில் 12
04. அக்கினேஸ்திரேசா அகிலதாஸ் மாணவன் 06
05. அருமைலிங்கம் தாட்சாயணி மாணவி 13
06. சி.நிரோசினி மாணவி 09
07. சி.சாரதா வீட்டுப்பெண் 45

## 93. செம்மணிப் புதைகுழிகள் 1996

யாழ். குடாநாட்டில் 1996 நடுப்பகுதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதியில் காணாமற்போனவர்களின் நிலை...? யாழ். மாவட்டத்தின் நல்லூர்ப் பிரதேசத்தில் அரியாலைக் கிராமம் அமைந்துள்ளது. அரியாலைக் கிராமத்திலுள்ள செம்மணிப் பகுதி யாழ் நகரத்திலிருந்து யாழ்.-கண்டி வீதி வழியாக ஏறக்குறைய நான்கு கிலோமீற்றர் தூரத்தில் யாழ் நகரை வரவேற்கும் வளைவுக்கல் பகுதியில் அமைந்துள்ளது.

1994இல் புதிதாக ஆட்சியினைப் பொறுப்பேற்ற சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா தலைமையிலான அரசாங்கம் மனித உரிமைகளை நிலைநாட்டுவதாக கூறி கடந்த காலங்களில் காணாமற்போனவர்கள் புதைக்கப்பட்ட தென்னிலங்கையிலுள்ள சூரியகந்த புதைகுழிகள் போன்ற புதைகுழிகளை விசாரணைக்குட்படுத்தியது.



1994ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பத்தொண்பதாம் திகதி புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்தன. அதனைத்தொடர்ந்து "சமாதானத்திற்கான போர்" என்னும் பெயரில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. முதற்கட்டமாக 1995 இன் இறுதிகளில் யாழ் நகரையும், 1996 இன் நடுப்பகுதிகளில் யாழ் குடாநாடு முழுவதனையும் இராணுவத்தினர் கைப்பற்றினர்.

1995இன் பிற்பகுதியில் பலாலியிலிருந்து யாழ் நகரை நோக்கி ஆரம்பிக்கப்பட்ட "றிவிரெச" இராணுவ நடவடிக்கையினால் நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் யாழ்ப்பாணம் வலிகாமப் பிரதேசத்திலிருந்து ஓரிரு நாட்களில் செம்மணி வீதி, கோபய் ாய் வீதி வழியாக யாழ் மாவட்டத்தின் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளுக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இடம்பெயர்ந்து சென்றபின்னர் யாழ். நகரத்தை இராணுவத்தினர் கைப்பற்றினர். 1996 சித்திரை மாதம் யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளான தெனமராட்சி, வடமராடச்சி போன்ற பிரதேசங்களையும் இராணுவதத்தினர் கைப்பற்றினர் லிகாமதத்திலிருந்து புலம் பெயர்ந்தவர்களும், வடமராட்சி, தென்மராட்சி மக்களுமாக யாழ் குடாநாட்டு மக்களில் ஐம்பது வீதமான மக்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்ல மிகுதி ஐம்பது வீதமானவர்கள்

இராணுவக் கட்டுப்பாட்டிற்குட் சென்றார்கள். 1996ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்னர் யாழ்குடா முழுவதையும் தமது கட்டுப்பாட்டிற்குள் இராணுவத்தினர் கொண்டுவந்தனர்.

"சமாதானத்துக்கான போர்" மூலம் இராணுவத்தினர் யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பின்னர் யாழ் நகரத்திலிருந்த இராணுவத்தினருக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் ஜானகப் பேரேரா இருந்தபோது குடாநாட்டில் கைதாவோர், காணாமற்போவோர் பட்டியல் நாள்தோறும் அதிகரித்துச் சென்றதுடன், பெண்கள் மீதான பாலியற் துன்புறுத்தல்களும் மக்கள் உயிரிழப்புகளும் அதிகரித்தன. 1996 நடுப்பகுதிக்குப் பின்னான ஆறு மாதக் காலப்பகுதியில் யாழ்பாணத்தில் காணாமற்போனோர் பட்டியல் எழுநூறிற்கு மேல் அதிகரித்தது. யாழ்.குடாவில் காணாமற்போன இளைஞர், யுவதிகளினது பெற்றோர்கள், உறவினர்கள் ஒன்றுசேர்ந்து "கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம்" என்ற அமைப்பை உருவாக்கி இன்றுவரை போராட்டம் நடத்தி வருகின்றனர்.



காணாமற்போனவர்களின் உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தினாலும் சர்வதேச அழுத்தத்தினாலும் அன்றைய சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க இராணுவத்தினராற் கைதுசெய்தபின்னர் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரிக்க் இராணுவ உயர் அதிகாரிகளைக் கொண்ட ஆணைக்குழுவினை அமைத்தார்.

1997இன் நடுப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட பனாங்கொடை, பந்துல குணவர்த்தன ஆகிய இராணுவ உயரதிகாரிகளைக் கொண்ட குழு விசாரணையை மேற்கொண்டது. பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு மூன்று தடவைகள், நான்கு தடவைகளென மாறி மாறி விசாரணைகளை நடத்தியும் கைதானோர், காணாமற்போனவர் தொடர்பாக இன்றுவரை எந்தவிதமான இறுதியான தீர்வும் உறவினர்களுக்கு வழங்கப்படவில்லை.

1996 செப். ஏழாம் திகதி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுப் பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டதால் உயிரிழந்தார். கிருசாந்தியைத் தேடி இராணுவமுகாமிற்குச் சென்ற தாயாரான இராசம்மா, சகோதரர் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரும் இராணுவத்தினராற் படுகொலை செய்து புதைக்கப்பட்டனர். கிருசாந்தியும் அவரது உறவினர்களும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு உயிரிழந்தது தொடர்பாக நீதிமன்றில் அவர்களது உறவினர்களால் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு, வழக்கின் தீர்ப்பின்படி குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கும் ஒரு காவற்றுறையினருக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

தீர்ப்பு வழங்கப்பட்டவர்களிலில் லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ச விசாரணையின்போது கீழ்வருமாறு வாக்குமூலம் அளித்தார்.

"யாழ்குடாநாட்டில் பரவலாக கைதுசெய்து காணாமற்போனவர்களில் பெரும்பாலானவர்கள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். இவர்களின் சடலங்கள்

மேலதிகாரிகளின் உத்தரவின்பேரில் இரவில் எடுத்துச்செல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப்படுவதுண்டு. முந்நூறு, நானூறு பேரை புதைத்த புதைகுழிகளை என்னால் காண்பிக்க முடியும்'' என்றார்.

1999ஆம் ஆண்டில் "லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ச" வினால் செம்மணியில் அடையாளம் காட்டப்பட்ட இடங்களில் புதைகுழிகளைத் தோண்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது. 1999ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் செம்மணிப் புதைகுழிகள் வவுனியா மாவட்ட நீதவான் இளஞ்செழியன், றுகுணு பல்கலைக்கழக மருத்துவப்பீட பேராசிரியர் நெரியல்ல, மற்றும் சட்டத்தரணிகளான கேசவன், இளங்கோ, பரமராஜா, பொன்.பூலோகசிங்கம் ஆகியோர் முன்னிலையில் தோண்டப்பட்டன. இச்செம்மணிப்பகுதியில் அமைந்த அரியாலை கொட்டுக் கிணற்றடி, தயா கட்டடம் அமைந்துள்ள பகுதி, செம்மணிவளைவுப் பகுதியென புதைக்கப்பட்ட இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டது.

முதற்தடவையாக புதைகுழி தோண்டும்போது பதினொரு எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை யாழ் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுப் பிரேதபரிசோதனையின் பின் பதினாறு வயதுக்கும் முப்பத்தைந்து வயதுக்கும் உட்பட்டோரினதென அடையாளங்காணப்பட்டது. இதன்போது சைவ மத அந்தணர் ஒருவர் சாளி மோட்டார்சைக்கிளுடன் புதைக்கப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் முதல் கட்டம் முடிவடைந்தது.

இரண்டாவது தடவை தோண்டுவதற்கு முன்பாக அப்பகுதியின் பல இடங்களில் இரவு நேரங்களில் மக்கள் செல்வதை இராணுவம் தடைசெய்தது. மேலும் அவ்வேளையில் அப்பகுதியில் வாகனங்கள் அதிகளவில் நடமாடியதை மக்கள் அவதானித்தார்கள். பின்னர் இரு வாரம் கழிந்த நிலையில் இரண்டாவது புதைகுழி தோண்டும் பணி ஆரம்பமாகியது. ஆறு எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இவற்றில் ஒன்று பெண்ணினுடையதும் மிகுதி ஆண்களினுடையவையென அடையாளங்காணப்பட்டன.

இத்துடன் செம்மணிப் பகுதியில் மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் பணிகளை இடைநிறுத்தினார்கள். இன்றுவரை செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பாக எந்தவிதமான இறுதி முடிவினையும் நீதித்துறை மேற்கொள்ளவில்லை.

## 94. கிளிநொச்சி நகர் படுகொலைகள் - 1996-1998

1996ல் சத்ஜெய - 01 என்று பெயரிடப்பட்ட தாக்குதல் நடவடிக்கையை சிங்கள இராணுவம் நடத்தியது. இந்த நடவடிக்கை மூலம் தெற்கே ஆனையிறவு முகாமிலிருந்து இராணுவம் கிளிநொச்சியை நோக்கி நகர்ந்தது. இதன்போது பரந்தன் என்னுமிடத்தில் ஒரு இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. இந்த முகாமிலிருந்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பொதுமக்கள் வாழுமிடங்களில் ஊடுருவி அங்கிருந்த மக்களையும் அங்கு சென்று தங்களின் உடைமைகளை எடுக்க வரும் இடம்பெயர்ந்த மக்களையும் தாக்கி கொன்றனர்.

1996 ஆகஸ்ட்டில் சத்ஜெய - 02 என்னும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனுடைய தொடர்ச்சியாக சத்ஜெய - 03 என்னும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கையால், இராணுவம் கிளிநொச்சி நகருக்குள் நுழைந்தது. இங்கு இராணுவம் மக்கள் குடியிருப்புக்களிலும், அவர்களின் வயல் வெளிகளிலும் இராணுவ முகாம்களை உருவாக்கியது.

அப்படி அமைக்கப்பட்ட முகாமிலிருந்து, சுற்றுப்புற பகுதிகளில் உள்ள மக்கள் மீது பல தாக்குதல்களை செய்தது. அப்பகுதியிலிருந்து 184 பொதுமக்கள் காணாமல் போய் உள்ளனர். மக்கள் பிற்காலத்தில் அவர்களின் குடியிருப்புகளுக்கு திரும்பியபோது, அங்குள்ள கழிவறைகளிலும், கிணற்றுப் பகுதிகளிலும் கொல்லப்பட்டவர்களின் எழும்புக் கூடுகளை கண்டெடுத்தனர்.

பலவகைகளில் ஆதாரங்களை சேகரித்தபோது, இப்படியாக 184 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளது தெரிய வந்தது. கிளிநொச்சி மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளிலும் இவ்வாறு கொல்லப்பட்ட 72 பேருடைய எழும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. இதில் 12 பேரின் எழும்புக்கூடுகள் அவர்கள் அணிந்திருந்த துணிகள் மற்றும் பிற பொருட்களை வைத்து, உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டது.

இப்படி கொல்லப்பட்ட நபர்களின் குடும்பங்கள் இன்று மிக வறிய நிலையில் அக்கரையான், மல்லாவி, ஜெயபுரம் மற்றும் புதுக்குடியிருப்பு போன்ற கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

## 95. குமரபுரம் படுகொலை – 11 பெப்பிரவரி 1996



இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குமரபுரம் என்ற இந்தக் கிராமம் இருக்கின்றது. திருகோணமலை மாவட்டத்தில் பாரதிபுரத்திற்கும் கிளிவெட்டிக்கும் இடையிலுள்ள இக்கிராமத்திலிருந்த குடும்பங்கள் பெரும்பாலும் விவசாயத்தை தொழிலாக கொண்டவர்களாவார்கள். குமரபுரம் கிராமத்தின் எல்லைகள் பின்வருமாறு: கிழக்கில் பிரசித்தி பெற்ற நீர்ப்பாசனத் திட்டமாகிய அல்லைக்குளம், வடக்கு எல்லையிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் ஒரு இராணுவ முகாம், மேற்கு எல்லையில் ஒரு சிறிய விளையாட்டு மைதானமும் பாற்பண்ணையும், தெற்கு எல்லை கிளிவெட்டித் துறைமுகமாகும். இது ஒரு விவசாய தமிழ்க் கிராமம் ஆகையால் இங்கு பெருமளவிலான ஓலைக்குடிசைகளும் ஆங்காங்கே சில கல்வீடுகளும் காணப்படுகின்றன. மூதூர் நகரத்திலிருந்து வெருகல்முகத்துவாரம் வரை நீண்டுசெல்லும் பிரதான வீதி இக்கிராமத்தின் ஊடாகவே ஊடறுத்துச் செல்லுகிறது. இங்கு பல இன மக்கள் வாழ்கின்ற போதிலும் அவர்களுக்கிடையிலான இனஉறவுகள் பாதிப்படைந்திருக்கவில்லை.

1995ஆம் ஆண்டிற்குப் பின்னர் இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்திருந்ததன் காரணமாக மக்கள் இராணுவத்தினருக்கு அஞ்சி வாழும் நிலையேற் பட்டது. இவ்வாறான ஒரு இராணுவக் கெடுபிடியின் விளைவாகத்தான் 11.02.1996 அன்று இந்தப் படுகொலை சம்பவம் இடம்பெற்றது. அன்று மாலை 4மணியளவில் வெடிச்சத்தங்கள் கேட்டன. மக்கள் பயத்தால் இக்கிராமத்தின் கிழக்கு எல்லையான அல்லைக்குளத்திற்கு அருகே நெடுக உயர்ந்து அடர்த்தியாக வளர்ந்திருந்த கிளிக்கண்ணா மரக்கூடலுக்குள் ஒளிந்து கொண்டார்கள். வேறு சிலர் வீட்டிலேயே இருந்தார்கள்.

அவ்வாறு வீட்டில் இருந்தவர்களில் அழகுதுரை என்பவரது வீட்டில் எட்டுப் பேர் இருந்தார்கள். அந்த எட்டுப் பேரும் இராணுவத்தால் வீட்டுக்குள்ளேயே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்த ஊர்த் தலைவர் தமது சாட்சியத்தில் தன்னுடைய வீட்டில் தன்னுடன் கதைத்துக்கொண்டிருந்த இராசேந்திரம் கருணாகரன் என்பவர் தன் கண் முன்னாலேயே சூடுபட்டு இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்ததைத் தான் பார்த்ததாகச் சொன்னார். இந்த இராணுவத்தினரின் அடாவடித்தனமான சூட்டில் தொழிலாளியான நாகராசா என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒரு கண்ணை முழுமையாக இழந்தார். மறுகண்ணில் பார்வைக் குறைபாட்டோடு இன்றும் அவர் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

இந்தப் படுகொலைச் சம்பவத்தின்போது தனது எட்டு வயதுச் சகோதரனான அன்ரனி ஜோசெப் என்ற சிறுவனை வீதிவழியாக கிளிவெட்டிக்கு சைக்கிளிற் கூட்டிக்கொண்டு சென்ற அருமைத்துரை தனலட்சுமி (கீதா) என்ற பதினாறு வயதுப் பாடசாலை மாணவி துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு கடை ஒன்றுக்குள் தனது தம்பியுடன் தங்கியிருந்தபோது சிறீலங்கா இராணுவத்தினரால் வெளியே இழுத்துச் செல்லப்பட்டு ஒரு பாற்பண்ணைக் கட்டிடத்திற்குள்ளே வைத்து பல இராணுவச்சிப்பாயகளினால் பாலியலவல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டார். கடைசியில் கோப்ரல் குமார என்ற இராணுவச் சிப்பாய் அவரைத்தானே சுட்டுக்கொன்றதாக நீதிமன்றத்தில் ஒத்துக் கொண்டார். ஏன் சுட்டுக்கொன்றாய் எனக் கேட்கப்பட்டபோது, "*அந்தச் சிறுமி பல இராணுவச் சிப்பாய்களால் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்ட போது உடம்பு முழுவதும் கடிகாயங்களுக்கு உள்ளாகியிருந்தாள். அவள் அணிந்திருந்த ஆடைகள் பல துண்டுகளாகக் கிழித்து வீசப்பட்டிருந்தன. அவள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தாள் அவளின் பரிதாபகரமான நிலையைப் பார்த்தே சுட்டேன்*" என்றான்.

இந்தப் படுகொலையின்போது எல்லாமாக இருபத்தாறு தமிழர்கள் ஆண், பெண் என்ற வேறுபாடின்றியும் முதியவர், குழந்தைகள் என்ற வேறுபாடின்றியும் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இருபத்திரண்டு பேர் சுட்டுப் படுகாயப்படுத்தப்பட்டார்கள். இறந்த எல்லோருடைய மரண அத்தாட்சிப்பத்திரங்களிலும் துப்பாக்கிச் சூட்டு காயங்களினாலும் நீண்ட நேரம் உரிய சிகிச்சை அளிக்கப்படாது கவனிப்பாரற்று விடப்பட்டமையாலும் ஏற்பட்ட மரணங்களென எழுதப்பட்டிருந்தன. அப்போது மூதூர் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய பொன்னையா சுவர்ணராச் இம்மரணங்களை அத்தாட்சிப்படுத்தியுள்ளார்.

இந்த படுகொலை தொடர்பாக ஒன்பது படையினர் கைது செய்யப்பட்டார்கள். பத்து ஆண்டுகளாக இந்தக்கொலை தொடர்பான வழக்கு திருகோணமலை நீதிமன்றில் நிலுவையிலுள்ளது. இந்த வழக்குடன் சம்பந்தப்பட்ட சான்றுப் பொருட்களும் தடையப் பொருட்களும் மூதூர் நீதவான் நீதிமன்றத்தினால் கொழும்பு அரசாங்க பகுப்பாய்வுக் கூடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. ஆனால் அவையாவும் 2005ம் ஆண்டு ஏற்பட்ட விபத்தின் போது எரிக்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் இந்த வழக்கின் அடுத்த கட்ட நகர்வு என்ன என்பதே நீதித்துறை வட்டாரத்தில் எழுப்பப்படும் கேள்வியாகும்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராமஜெயம்பிள்ளை கமலேஸ்வரன் மாணவன் 14
02. இராசேந்திரம் கருணாகரன் - -
03. கனகராசா சபாபதிராசா கமம் 16
04. கிட்டினர் கோவிந்தன் - -
05. பாக்கியராசா வசந்தினி - -
06. தங்கவேல் கலாதேவி மாணவி 11
07. ஆனநத் ன் அனன் ம்மா - 28
08. அமிர்தலிங்கம் ரஜனிக்காந் - -

09. அழகுதுரை பரமேஸ்வரி - 27
10. அருமைத்துரை வள்ளிப்பிள்ளை - -
11. அருமைத்துரை தனலெட்சுமி மாணவி 16
12. அருணாசலம் கமலாதேவி - -
13. அருணாசலம் தங்கவேல் - -
14. சோமு அன்னலட்சுமி - -
15. செல்லத்துரை பாக்கியராசா தொழிலாளி 26
16. சுந்தரலிங்கம் பிரபாகரன் - 13
17. சுந்தரலிங்கம் சுபாசினி மாணவன் 4
18. சுப்பிரமணியம் பாக்கியம் - -
19. சுப்பையா சேதுராசா தொழிலாளி 72
20. சிவக்கொழுந்து சின்னத்துரை கமம் 58
21. சிவபாக்கியம் பிரசாந்தினி - -
22. சண்முகநாதன் நிதாகரன் மாணவன் 11
23. வடிவேல் நடராசா தொழிலாளி 27
24. விநாயகமூர்த்தி சுதாகரன் மாணவன் 13

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)


01. இராசதுரை சத்தியப்பிரியா சுயதொழில் 24
02. இராசதுரை சின்னவன் - -
03. நாகராசா கிருபைராணி வீட்டுப்பணி 35
04. நாகராசா சுதாகரன் - -
05. குலேந்திரன் தவமணிதேவி வீட்டுப்பணி 24
06. கிட்ணன் - 04
07. கணபதிப்பிள்ளை நிரோஜன் குழந்தை 04
08. கணபதிப்பிள்ளை குகதாசன் சிறுவன் 12
09. கணபதிப்பிள்ளை குமுதினி - -
10. பாக்கியராசா - 35
11. பழனிவேல் யோகராணி - -
12. தம்பிப்பிள்ளை சிற்றம்பலம் - -
13. திருப்பதி மஞ்சுளா சிறுமி 12
14. மாரிமுத்து செல்லாச்சியார் - -
15. மகேஸவ் ரன ் குவேநத் ினி சிறுமி 06
16. மகேஸ்வரன ் வனஜா - -
17. அழகுதுரை சர்மி சிறுமி 12
18. அரசரட்ணம் நாகராஜா - -
19. மோசஸ் அன்ரனி யோசப் குழந்தை 02
20. சித்திரவேல் வேல்நாயகம் - -
21. சிற்றம்பலம் கோணேஸ்வரன் - -
22. ராஜா இன்பமலர் - 24

## 96. நாச்சிக்குடா படுகொலை – 16 மார்ச் 1996

வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு தொன்மையான பிரதேசமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரிப் பிரதேசம் விளங்குகின்றது. பண்டைய தமிழ் மன்னர்களின் தொன்மையான ஆட்சி மையமாகவும், வர்த்தக மையமாகவும் இது இருந்து வந்துள்ளது. அத்தோடு ஆரம்பகாலத்தில் கிளிநொசச்சி மாவட்டத்தில் அதிகூடிய மக்கள் தொகையினைக் கொண்ட பிரதேசசெயலர் பிரிவாகவும் பூநகரி இருந்தது. பூநகரிப் பிரதேசத்தில் பல மீனவர் குடியிருப்புக்களை உள்ளடக்கிய கிராமம் நாச்சிக்குடாக் கிராமம் ஆகும்.

16.03.1996 அன்று அதிகாலை 5:20 மணியளவில் வான்படையின் பைற்றரென அழைக்கப்படும் எம்.ஐ. இருபத்துநான்கு ரக உலங்குவானூர்தி நாச்சிக்குடா அன்னை வேளாங்கன்னிப் பகுதியிலுள்ள மீனவர் குடியிருப்புக்கள் மீது தாக்குதலை நடாத்தியது. அவ்வேளை வீடுகளில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த பெண்கள், குழந்தைகள் மற்றும் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களென மொத்தமாக இருபது பேர் இத்தாக்குதலில் உயிரிழந்ததுடன், அறுபத்திரண்டு பேர் பலத்த காயங்களுக்கும் உள்ளானார்கள்.

நூற்றுக்கணக்கான மீனவக் குடிசைகள் எரிந்து சாம்பலாகின. சம்பவத்திற் காயப்பட்ட அனைவரும் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர், இறந்தவர்களை அவர்களது உறவினர்கள் அடக்கம் செய்தனர். இத்தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதி மீனவர்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களில் வாழ்கின்றனர். இச்சம்பவம் தொடர்பாக நாச்ச்சிக்குடாவைச் சேர்ந்த்த ஜேசுதாசன் ஆன்மேரி தெரிவிக்கையில்,



*"என்னுடைய சொந்த இடம் நவாந்துறை யாழ்ப்பாணம். தற்போது கடற்கரை வீதி நாச்சிக்குடாவில் வசித்து வருகின்றேன். 1996ம் ஆண்டு மூன்றாம் மாதம் பதினாறாம் திகதி விடியற்காலை நாங்கள் நித்திரையாக இருக்கும்போது திடீரெனக் கடற்கரையோரமாக வந்த எம்.ஐ- இருபத்துநான்கு ரக உலங்குவானூர்தி ஒன்று தாக்குதல் நடத்தியது. இதன்போது என்னசெய்வதென்று தெரியாத நிலையில் நாங்களனைவரும் சிதறி ஓடினோம். அதன்போது எங்களுடைய அண்ணையின் மகனுக்கும் மைத்துனரின் மகனுக்கும் காயம்பட்டது. எங்களுடைய உறவினர்கள் கை, காலை இழந்தனர். இச் சம்பவத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இருபது பேர் சம்பவ இடத்திலும் உயிரிழந்தனர். காயமடைந்தவர்கள் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப், பின்னர் மேலதிக*
*சிகிச்சைக்காக கடல்வழியாக யாழ்ப்பாண வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். விமானம் திரும்பவும் வருமோ என்ற பதற்றத்தின் மத்தியில் இறந்தவர்களை உறவினர்கள் அடக்கம் செய்தார்கள். அதன் பின்னர் நாங்கள் இடம்பெயர்ந்து போய் காடுகளில் வாழ்ந்தோம். கிட்டத்தட்ட ஒரு கிழமைக்கு மேல் தொழிலுக்கு கடலுக்குப் போகமுடியவில்லை. காட்டுக்குள் இருந்த நாங்கள் பின்னர் படிப்படியாக கடற்கரையில் குடியேறத் தொடங்கினோம்.*

*திடீரென ஒரு நாள் மாலை 5மணியளவில் இரணைமாதா நகர்ப் பக்கமாக இருந்து வந்த வானூர்தி எங்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தியதில் செய்வதறியாத நாங்கள் திரும்ப காடுகளுக்குள் ஓடினோம். நாம் தற்போதும் பயந்த நிலையிற் தான் கரையோரத்தில் இருக்கின்றோம்.''*

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைப்பிள்ளை அல்பேட் கடற்றொழில் 50
02. யூலியஸ் டெவின் குழந்தை 1
03. கனகசிங்கம் தர்சினி மாணவி 10
04. கந்தையா ரமேஸ்வரன் மாணவன் 18
05. கந்தசாமி செந்தில்குமார் மாணவன் 16
06. குவாட்டஸ்கேஸ் சின்ராசன் - -
07. தவரி வேலாஜி - 68
08. மரியநாயகம் திரேசம்மா - -
09. மரியதாஸ் எட்வின் கடற்றொழில் 30
10. மகேந்திரன் யாழினி மாணவி 18
11. அன்ரன் டயஸ்கா - -
12. அன்ரன் ஜெகதீபா மாணவி 12
13. ஆசைப்பிள்ளை அல்போன்ஸ் கடற்றொழில் 50
14. அருளானந்தம் சேவியர் விசிற்றம்மா வீட்டுப்பணி 55
15. அலபே பான்ஸ் அமலோறப் வராணி வீட்டு பப் ணி 22
16. பொன்னம்பலம் செல்வராசா கடற்றொழில் 68
17. மேரி.அமலினி மாணவி 18
18. சேவியர் கொன்சலா மாணவி 14
19. விக்ரர் லூசியா - 24

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. சூசைப்பிரபா குழந்தை 02
02. இமிறோன் - -
03. இராசம்மா - 30
04. இருதயசீலன் - 34
05. யூனிற்று மாணவன் 16
06. யூத் - 90
07. நாகராணி - 62
08. நாச்சியம்மா - 40
09. கனகம்மா - 65
10. கந்தசாமி - 52
11. புஸ்பாயினி மாணவி 08
12. பரிமளம் - 44
13. பத்மசிறி - 25
14. பிரியா குழந்தை 04
15. பவானி - 20
16. பற்றிக் - 62
17. தர்மராசா - 22
18. திரேசம்மா - 65
19. மகிந்தன் மாணவன் 07
20. மாசில்தா - 24
21. மதிஜெனி - 20
22. மதியோகராசா - 25
23. மனோகரன் மாணவன் 15
24. மனோதா - 16

25. டன் - 23
26. அன்னைமேரி - 37
27. அன்ரன் - 34
28. அன்ரனிக்குயின்ரஸ் யூனிதா மாணவி 16
29. ஆனந்தி - 23
30. அனிஸ்ரா மாணவி 06
31. அனுசியா மரியனிட்டா - 20
32. அமுதராக மாணவன் 10
33. அருள்சீலன் தர்மஜோதி - 22
34. அருள்சீலன் அருள்மேரி குழந்தை 04
35. அருளம்மேரி - -

36. அரவிந்தன் மாணவன் 07
37. கொன்ஸ்பேனல் - 32
38. கொன்சியா குழந்தை 4
39. பொன்னம்பலம் - 43
40. தேவராசா - 45
41. மேரி சிங்கராசா - 30
42. மேரிகொன்சலா - 18
43. மேரிறீட் மரியா - 28
44. செபமாலை - 65
45. சேவியர் - 30
46. செல்வநாயகி - 31
47. செல்வநிதி - -
48. செல்வராணி - 25
49. சுப்பையா - 76
50. சுதர்சன் - 21
51. சித்திரா - 34
52. சசிரேகா - -
53. சரண்யா - -
54. விமலதாஸ் - 26
55. வளர்மதி - 30
56. ராஜ்குமார் மாணவன் 14
57. ரகுபாலன் - 18
58. எமில்டா குழந்தை 04
59. எல்டா மாணவன் 14

## 97. தம்ப்பிராய் சந்தை குண்டுவீச்சு – 17 மே 1996

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கே இருபது கி.மீ. தூரத்தில் பூநகரி அமைந்துள்ளது. பூநகரிப் பிரதேசத்திற் காணப்படுகின்ற வயலும் வயல் சார்ந்த ஒரு சிறிய கிராமம் தம்பிராய் கிராமம் ஆகும். இங்குள்ளவர்களின் பிரதானதொழில் விவசாயமாகும்.

1996ஆம் ஆண்டு ஏ -9 பிரதான வீதியை மையமாகக் கொண்ட இராணுவ நடவடிக்கை நடைபெற்ற காலப்பகுதியாகும். அக்காலப்பகுதியில் 1996 மே பதினேழாம் திகதி காலை

பூநகரி தம்பிராய்ப்பகுதி மக்கள் மீது முற்பகல் பத்து மணியளவில் பூநகரி வான் பரப்பினுள் வந்த சிறீலங்கா விமானப்படையின் இரண்டு “கிபீர்” விமானங்கள் பல தடவைகள் வானில் வட்டமிட்டன. இதனால் தம்பிராய்ச் சந்தையில் நின்ற மக்கள் அச்சத்தினால் அங்கு மிங்கும் ஓடினார்கள், இவர்களில் சிலர் ஒரு பனங்கூடலினுள் பாதுகாப்பு தேடி ஒழிந்து கொண்டார்கள். கிபீர் விமானங்கள் வீசிய குண்டுகள் பனங்கூடலினுள்ளும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் விழுந்து வெடித்ததால், ஐந்து பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகியதுடன், ஒன்பது பேர் காயமடைந்தார்கள். மேலும் படுகாயமடைந்தவர்களில் இரண்டு பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் உயிரிழந்தார்கள்.



இத்தாக்க்குதலில் கொல்ல்லப்பட்ட்ட தம்ப்பிராயைச் சேர்ந்த்த சூசைப்ப்பிள்ளை பிரான்சிஸ்சின் மனைவியான நீட்ட்டம்ம்மா சம்பவத்தைப்பற்றி குறிப்பிடுகையில்,

*“1996ஆம் ஆண்டு மே மாதம் பதினேழாம் திகதி வெள்ளிக்கிழமை என்னுடைய நான்கு பிள்ளைகளில் மூவர்பாடசாலைக்குச் சென்ற நிலையில் கடைசிப் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு எமது தோட்டத்திற்குப் போனேன். என்னுடைய கணவர் பொருட்கள் வாங்குவதற்காக தம்பிராய்ச் சந்திக்குப் போயிருந்தார். அந்தவேளை வானில் வந்த குண்டுவீச்சு விமானங்கள் தம்பிராய் சந்தியிற் குண்டுகளைப் போட்டன. உடனே கணவர் மற்றும் பிள்ளைகளுக்கு ஏதாவது நடந்திருக்குமோ என்று அஞ்சினேன். அயலவர்கள் வந்து தேற்றிய போதும் எனது பிள்ளையையும் கூட்டிக்கொண்டு சம்பவ இடத்திற்குப் போய்ப் பார்த்தவேளை எனது கணவரின் உடல் முழுதும் குண்டுச் சன்னங்கள் துளைத்த நிலையில் சடலமாக இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அதைப் பார்த்த நான் என்னசெய்வதென்றே தெரியாத நிலையில் மயக்கமடைந்து விழுந்து விட்டேன். பின்னர் என்னையும் எனது கணவரையும் என்னுடைய அண்ணா வீட்டிற்குக் கொண்டு வந்தார்கள். அதன் பின்னர் கணவரை அடக்கம் செய்தோம். இந்தக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் எனது கணவர் உட்பட ஐந்து பேர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார்கள் என்பதுடன், மற்றும் ஒன்பது பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் இருவர் பின்னர் இறந்துவிட்டனர். பாதிக்கப்பட்ட அனைவரும் எங்களைப் போன்று வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள்.”*

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)


01. சூசைப்பிள்ளை பிரான்சிஸ் சீவற்றொழில் -
02. இரத்தினம் பாலச்சந்திரன் கமம் 29
03. கந்தையா தேவராசா கமம் -
04. தங்கவேலு ரவிச்சந்திரன் சீவல் 34
05. அப்புத்துரை சௌந்தார் ராஜன் சீவல் 35
06. சின்னத்துரை கேதீஸ்வரன் கமம் 29
07. வீரகத்தி அலிஸ்ரின் கடற்றொழில் 28

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. துரைசாமி. தொழிலாளி 75

02. பொன்னம்பலம் - -
03. செல்லையா பூரணம் வியாபாரி 60
04. சந்திரபாலு ஈஸ்வரன் முகாமையாளர் 24

## 98. மல்லாவி படுகொலை – 24 யூலை 1996



முல்லைத்தீவு மாவட்டத்தில் யாழ்-கண்டி வீதிக்கு மேற்கே மாங்குளச் சந்தியிலிருந்து கிட்டத்தட்ட பதினைந்து கி.மீ. தூரத்தில் மல்லாவி அமைந்துள்ளது. 1996ஆம் ஆண்டில் உள்நாட்டுப் போரினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து மல்லாவிப் பிரதேசத்தில் மல்லாவிச் சந்தியைச் சுற்றி மக்கள் செறிவாக வாழ்ந்தார்கள்.

24.07.1996 அன்று மு.ப 11:15 மணியளவில் மல்லாவிப் பகுதியில் விமானப்படையின் கிபிர் விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் பத்துப் பொதுமக்கள் உடல்சிதறி உயிரிழந்தனர். பதினைந்து பேர் காயமடைந்தனர்.

24.07.1997 விமானத்தாக்குதலில் பாதிக்கப்பட்ட பா.சுகந்த்தினி கருத்து தெரிவிக்கையில்,

*"சம்பவ தினமன்று எனது அப்பா கடைக்குச் செல்லும்போது சிறீலங்கா விமானம் குண்டு போட்டதில் அவருக்குக்கால் இல்லாமற் போனது. அதிலிருந்து மிகவும் கஸ்ரப்பட்டு வாழ்கிறோம். இந்தச் சம்பவத்தில் ஒன்பது பேர் இறந்தும் பலர் காயங்களுக்கு உள்ளாகியும் இருந்தார்கள். நாங்கள் ஒன்பது சகோதரர்கள். இந்நிலையில் கண்ணேலாத நிலையிலும் எனது அம்மாதான் எம்மை வளர்த்து வருகிறார். எங்களைப் போல் நிறையப் பிள்ளைகள் சிறீலங்கா இராணுவத்தினரார் பாதிக்கப்பட்டு கஸ்ரப்பட்டு படிக்கவே வசதி இல்லாத நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். அந்தநிலையிற் தான் நாங்களும் இருக்கிறோம்."*

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சிவலிங்கம் சிந்துஜா குழந்தை 02
02. இராமு பாக்கியநாதன் விவசாயம் 21
03. தியாகராஜா பிரேமதாஸ் விவசாயம் 28
04. கதிரவேலு ஜனகராஜ் விவசாயம் 21
05. விசுவலிங்கம் செல்லம்மா வீட்டுப்பணி 64
06. சின்னப்பொடி கதிரவேல் தொழிலாளி 59
07. சுப்பிரமணியம் மணிவேல் தொழிலாளி 20
08. சிவலிங்கம் சந்தியா குழந்தை 2
09. சவிரிமுத்து பாலகுமார் விவசாயம் 56


இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இளையதம்பி வரப்பிரகாசம் 75
02. இராசையா கார்திகேயன் 63

03. கந்தையா வேலாயுதம். 62
04. கறுத்தான் வேலாயுதம் 45
05. பாலகுமார் ஜசிந்தா 26
06. பாலராசா -
07. தியாகராசா நிரோசன் 11
08. தேசிங்கு கருணாநிதி 40
09. சுந்தரலிங்கம் றசிதா 22
10. சி.கணபதிப்பிள்ளை 50
11. சின்னப்பு சுந்தரம் 72
12. சின்னத்துரை நியூமன் 20
13. சின்னத்துரை சசீந்திரா 20
14. சின்னையா சிவநேசன் 21
15. சிவபாதம் சுகன்ஜா 22

## 99. கைதடி கிருசாந்தி படுகொலை – 07 செப்ரெம்பர் 1996

யாழ் குடாநாட்டின் தென்மராட்சிப் பிரதேசத்தில் கைதடிக் கிராமம் அமைந்துள்ளது. யாழ் நகரப் பகுதியிலிருந்து கிழக்குப் புறமாக யாழ். - கண்டி வீதி வழியாக ஏறக்குறைய ஐந்து மைல் தொலைவில் இக்கிராமம் அமைந்துள்ளது.



கைதடிச் சந்தியிலிருந்து வடக்குப் புறமாக இருநூறு யார் தூரத்தில் கிருசாந்தியின் வாழ்விடம் உள்ளது. இயற்கை எழில் கொண்டதும், பெரும்பகுதி விவசாயப் பகுதியாகவுமுள்ள கைதடிக் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருந்த குமாரசாமி இராசம்மா தம்பதியினர் பிரசாந்தி, கிருசாந்தி, பிரணவன் ஆகிய மூன்று பிள்ளைகளோடு தமது வாழ்க்கையினை நடத்தி வந்தார்கள். தந்தையார் குமாரசாமி 1984 தை மாதம் காலமானதும், தாயின் அரவணைப்பிற் பிள்ளைகள் வாழ்ந்து வந்தார்கள். தந்தையின் இழப்பின் பின் மூத்த புதல்வி பிரசாந்தி க.பொ.த உயர்தரம் வரை கல்விகற்று, உயர்கல்வி கற்பதற்கு வசதிகளற்று உறவினர்களின் உதவியுடன் கொழும்பில் சிறிது காலம் தங்கியிருந்து கணினிக் கல்வி கற்றுப் பின்னர் வெளிநாடு செல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்து வெளிநாடு சென்றார்.

குமாரசாமி இராசம்மா தம்பதிகளின் இரண்டாவது மகளான கிருசாந்தி யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்வி பயின்றுவந்தார். கல்விப் படிப்பில் க.பொ.த சாதாரண பிரிவில் திறமை சித்தியடைந்ததும், க.பொ.த உயர்தரப் பிரிவில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயின்று வந்தார். இளைய மகன் பிரணவன் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் சாதாரண பிரிவில் கல்வி பயின்று கொண்டிருந்தார்.

1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானத்துறையில் கல்வி பயின்று வந்த கிருசாந்தி முதல் நாள் நடந்த இரசாயனவியற் பாடத்தினை திறம்பட எழுதியிருந்தார். இப்பாடத்திற்குரிய பெறுபேறு முதல் தரம் எனப்

பின்னர் தெரியவந்தது. 07.09.1996 அன்று நடந்த இரண்டாவது பாடம் இராசாயனவியல் பகுதி ஒன்று பரீட்சையை எழுதியிருந்தார். அன்றையதினம் தனது உற்ற நண்பி ஜனாநந்தினி கணநாதனின் மரணச் சடங்கிற்குச் சென்று விட்டு மதியம் 01:30 மணியளவில் கண்டி வீதி வழியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தார் அவ்வேளை செம்மணி வெளியருகில் யாழ் நகரை வரவேற்கும் வரவேற்பு வளைவு அமைந்துள்ள இடத்தில் காவலரணிலிருந்த இராணுவத்தினர் கிருசாந்தியை வழிமறித்து நாற்பத்தைந்து நிமிடங்களாக விசாரித்துக்கொண்டிருந்தார்கள். கிருசாந்தி காவலரணில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட உறவினர் தாயாரிடம் சென்று சம்பவத்தினைத் தெரியப்படுத்தியிருந்தார். மதியம் 02:30 மணியளவில் சம்பவத்தினைக் கேள்வியுற்ற தாயார் இராசம்மா அயலவரான கிருபாமூர்த்தியின் உதவியுடன் சம்பவ இடத்தினை நோக்கி விரைந்தார். இதன் பின்னர் தமது படிப்பினை முடித்து வீடு திரும்பிய கிருசாந்தியின் தம்பியார் பிரணவனும் சம்பவத்தினை அறிந்து தயாருக்குப் பின்னால் சென்றார். தாயார் இராசம்மா குமாரசாமி, இளைய சகோதரன் பிரணவன் மற்றும் அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்தபோது தடுத்து வைத்து விசாரிக்கப்பட்ட கிருசாந்தியைக் காணவில்லை. செம்மணி வீதியில் அமைந்திருந்த இராணுவ காவலரணிற் கேட்டபோது தாங்கள் யாரையும் கைது செய்யவில்லை எனக் குறிப்பிட்டார்கள். இதைத் தொடர்ந்து தாயார் சுண்டுக்குளி பாடசாலை மற்றும் மரணச்சடங்கு நிகழ்ந்த ஜனாநந்தினி கணநாதன் வீட்டிற்கு சென்று விசாரித்தபோது, கிருசாந்தி வந்து போனதாகக் கூறினார்கள். மீண்டும் தாயார் கிருசாந்தி தடுத்து வைக்கப்பட்டு விசாரித்த இடமான செம்மணிப் பகுதிக் காவலரணில் கடமையிலிருந்த படையினரிடம் விசாரிக்கச் சென்ற பின்னர் இவர்களும் காணாமற்போனார்கள்.

1996ஆம் ஆண்டு நடுப்பகுதியில் யாழ்குடா முழுவதையும் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வந்த பின்னர் மாலை 6மணியுடன் ஊரடங்கு உத்தரவு அமுலிலிருந்தது. இவ்வாறான நெருக்குவாரங்களிற்குள் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இதனால் 07.09.1996 அன்றைய தினம் கிருசாந்தியைத் தேடிச் சென்ற தாயார், தம்பியார், அயலவர் ஆகியோர் மாலை நேரம் ஆகியும் வீடு திரும்பவில்லை. ஆயினும் ஊரடங்கு உத்தரவால் உறவினர்களால் உடனடியாக விசாரிக்க முடியாதிருந்தது. மறுநாள் 08.09.1996 காலை கிருசாந்தி குடும்பத்தினரது உறவினர்களான ஆறுமுகநாதன், கோடீஸ்வரன் ஆகியோரும் கிருபாமூர்த்தியின் மனைவியான புவனேஸ்வரியும் தமது குடும்ப உறவினர்களைத் தேடி அதே இராணுவ முகாமிற்குச் சென்று விசாரித்தபோது, அப்படி இங்கு யாரையும் கைது செய்யவில்லை எனத்தெரிவித்தார்கள். பின்னர் யாழ். மனித உரிமை ஆணைக்குழு, யாழ் காவற்றுறை நிலையம் போன்ற இடங்களில் முறைப்பாடுகள் செய்தார்கள். இருந்தபோதும் அவர்களது மனம் கேட்காது மீண்டும் சம்பவம் நிகழ்ந்த செம்மணிக் காவலரணிலிருந்த இராணுவத்தினரிடம் கேட்டபோது "நாங்கள் யாரையும் கைது செய்யயவில்லை எனினும் மாலை நேரம் வந்து பாருங்கோ" என்றனர். இதைக்கேட்ட உறவினர்கள் கிருசாந்தி குடும்பத்தினருக்கு ஏற்பட்ட நிலை தமக்கும் ஏற்பட்டு விடுமோ எனப் பயந்து மாலைவேளை அங்கு செல்லவில்லை. தொடர்ந்தும் மனித உரிமைகள் ஆணைக்குழு, காவற்றுறை நிலையம் என்பவற்றில் முறைப்பாடு செய்தார்கள்.

உறவினர்கள் எடுத்த முயற்சியின் பயனாக சம்பவதினதத்திலிருந்து நாற்பத்தைந்தாம் நாள் இராணுவத்தின் ஐநூற்று இருபத்தோராம் பிரிகேட் படைப்பிரிவு அதிகாரிகள் உறவினர்களை விசாரணைக்காக அழைத்தார்கள். இதில் ஆறுமுகநாதன், புவனேஸ்வரி, கோடீஸ்வரன் ஆகியோர் சென்றிருந்தனர். விசாரணைகளில் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களெனக் கருதப்பட்ட இராணுவத்தினர் ஆறு பேரையும் அழைத்து விசாரித்தபோது, கிருசாந்தி குடும்பத்தினர் உயிருடன் இல்லை என்ற செய்தி உறவினர்களிடம் கூறப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு இராணுவத்தினரும் இரண்டு காவற்றுறையினரும் சம்பவம் நிகழ்ந்த இடத்தினையும், புதைகுழியையும் காட்டுவதாக ஒப்புக்கொண்டனர். யாழ். வரவேற்பு வளைவு அமைந்துள்ள பகுதியிலிருந்த செம்மணிக் காவலரணிலிருந்து நூறு யார் தூரத்தில்

நாயன்மார்கட்டு வீதியிலுள்ள மதகு அருகில் புதைகுழி அமைந்திருந்தது. கிருசாந்தியும் தாயாரும் ஒரு புதைகுழியிலும், பிரணவன் மற்றும் அயலவர் கிருபாமூர்த்தி இன்னொரு புதைகுழியிலுமாகக் கிடந்தனர். நான்கு அடி ஆழத்தில் உருக்குலைந்து, சிதைந்து, கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் சடலங்கள் காணப்பட்டன. கிருசாநத்தியின் தாயார் அணிந்த சேலை, மூக்குக்கண்ணாடி, செருப்பு என்பன ஒரு பொலித்தீன் பையில் புதைகுழியினுள் கிடந்தது. கிருசாந்தி படையினரால் பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டும் கழுத்துப் பகுதி கயிற்றினால் நெரித்துக் கொல்லப்பட்டிருந்தார். பின்பு, தோண்டி எடுக்கப்பட்ட சடலங்கள் யாழ் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று, பின்னர் கொழும்புக்கு அனுப்பப்பட்டன. அங்கு மரபணுப் பரிசோதனை யாவும் பூர்த்தியான பின்னர் அடக்கம் செய்யப்பட்டன. கிருசாந்தி குடும்பத்தினர், கிருபாமூர்த்தி ஆகியோரின் உயிரிழப்புத் தொடர்பான வழக்கு உறவினர்களால் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. தொடர் விசாரணைகள் மூலம் சந்தேகத்தின் பேரிற் கைதுசெய்யப்பட்ட ஆறு இராணுவத்தினரும் குற்றங்களை ஒப்புக்கொண்டதன் பேரில் குற்றவாளிகளென அடையாளங்காணப்பட்டார்கள்.

குற்றவாளிகளென அடையாளங் காணப்பட்டவர்களில் ஒருவரான "லான்ஸ் கோப்ரல் சோமரட்ண ராஜபக்ச" கிருசாந்தி மற்றும் குடும்பத்தினர் மீதான தகவல்களை வழங்கியதுடன், மேலும் செம்மணிப் பகுதியில் அமைந்த வயல் நிலங்களில் மேலதிகாரிகளின் உத்தரவின் பேரில் இரவு நேரங்களில் கொண்டுசென்று புதைக்கப்பட்ட சடலங்களில ் முன்னூறு, நானூறு பேரது சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களையும் அடையாளப்படுத்த முடியுமெனவும் வாக்குமூலம் அளித்தார். இதன்மூலம் யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் பலரது நிலைகளை இப் புதைகுழிகளிலிருந்து அறிய முடிந்தது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. குமாரசாமி இராசம்மா உப அதிபர் 59
02. குமாரசாமி கிருசாந்தி மாணவி 18
03. குமாரசாமி பிரணவன் மாணவன் 16
04. சிதம்பரம் கிருபாமூர்த்தி எழுதுனர் 38

## 100. கோணாவில் குண்டுவீச்சு – 27 செப்ரெம்பர் 1996



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் உள்ளடங்கியுள்ள கிராமங்களில் ஒன்று கோணாவிலாகும். அத்துடன் இது ஒரு விவசாயக் கிராமமாகும், இங்கு பலர் கூலித்தொழிலாளிகள். இந்த கிராமத்து மக்கள் யுத்தகாலத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து பற்பல இன்னல்களையும் அனுபவித்தவர்களாவார்கள்.

1996 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இருபத்தேழாம் திகதி காலை 11:30 மணியளவில் விமானப்படையின் இரண்டு "கிபிர்" விமானங்கள் கோணாவில் காந்தி கிராமச்சந்தியில் குண்டுகளை வீசியது. இவ்விமானக்குண்டு

வீச்சில் காந்தி கிராமச்சந்தியில் நின்ற மூன்று பொதுமக்கள் அவ்விடத்தில் உடல் சிதறிப்பலியானதுடன், பலர் படுகயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் இருவர் அக்கராயன் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற பின்
சிகிச்சை பலனழிக்காமல் உயிரிழந்தனர்.

இச்சசம்பவத்தில் தகப்பனையிழந்த்த விமலேஸ்வரி சம்ப்பவம் பற்ற்றி கூறுகையில்,

*"1996ஆம் ஆண்டு சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக நாங்கள் இடம்பெயர்ந்து போய் இராஜன் குடியிருப்பிலே இருந்தோம். அன்றைய தினம் அம்மா மதிய உணவைச் சமைத்துக் கொண்டிருந்தார். அப்பா மரக்கறி வாங்குவதற்காக காந்தி கிராமம் சந்திக்குச் சென்ற போது தான் கிபிர் விமானம் குண்டு போட்டது. அப்பா நெஞ்சுப்பகுதி முழுவதும் சிதைந்து போய் அவ்விடத்திலேயே இறந்து விட்டார். இதை அறியாத நானும் அம்மாவும் காந்திகிராமத்திற்கு ஓடி வந்து பார்த்தபோது அப்பாவைக் காணவில்லை. சிலவேளை வீட்டிற்கு வந்திருப்பார் என்று நினைத்து திரும்பவும் வீடு போய்ப் பார்த்தபோது அங்கேயும் இல்லை. அப்பா இறந்தது தெரியாது நாங்கள் தேடித்திரிந்த போது தெரிந்த ஒரு அண்ணா வந்து சொன்னார். உங்களுடைய அப்பா காலில் காயம்பட்ட நிலையில் அக்கராயன் வைத்தியசாலையில் இருக்கிறார் என்று. உடனே நாங்கள் அவருக்குத் தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வைத்தியசாலைக்குப் போனோம். அங்கே எனது அப்பாவின் உடலையும் தாத்தாவின் உடலையும் அத்தையும் சில உறவினர்களும் எடுத்து வைத்திருந்ததை கண்ட போது தான் இருவரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டார்கள் என்பது தெரிந்தது. பின்னர் இருவரது உடல்களையும் அக்கராயன் முதலாம் இலக்க அரிசி ஆலை வளவில் வைத்து இறுதிக் கிரியைகளைச் செய்தோம். அப்பா இல்லாததுடன் வீடு வாசல்கள் இல்லாமல் மரங்களுக்குக் கீழே இருந்து சரியாகக் கஸ்ரப்பட்டோம். மில்லுக்குப் போய் உமியைப் பிடைத்து அதில் வரும் அரிசியை எடுத்துச் சாப்பிட்டோம். அது இல்லாத வேளை வேறு ஆட்களின் காணியிற் போய் தேங்காயை எடுத்து வந்து அதை உரித்துச் சாப்பிட்டு வந்தோம். பின்னர் கஸ்ரம் தாங்கமுடியாமல் திரும்ப சித்தியினுடைய வீட்டிற்கு வந்து அதிலிருந்து எங்களுடைய சொந்த வீட்டிற்கு வந்திருந்தோம். சரியான கஸ்ரத்தின் மத்தியில் நெல்லுப் பிடைச்சுத் தான் சாப்பிடுகின்றோம். நான் படிப்பை விட்டு விட்டேன். எனது அண்ணாவும் அப்படித்தான் படிப்பை விட்டு விட்டார். தற்போது நானும் ஒரு அண்ணாவும் தங்கையும் அம்மாவும் மட்டுந்தான் இருக்கின்றோம். அம்மா புல் பிடுங்கப் போனாற் தான் நாங்கள் சாப்பிடுவது. இல்லாது விட்டால் நான் தான் ஏதாவது ஒரு வேலைக்குப் போகவேண்டும். நாங்கள் எந்தவிதக் குறையும் இல்லாது வாழ்ந்த வேளை எங்களுடைய அப்பாவை சிறீலங்கா விமானப்படை கொடூரமாகக் கொன்றதாற் தான் நாங்கள் இப்படிக் கஸ்ரப்படவேண்டி வந்திருக்கிறது. அப்பா இருந்திருந்தால் எங்களை நல்லபடியாகப் பார்த்து படிக்க வைத்திருப்பார். இப்போது எதிர்காலம் தொடர்பான கேள்விக்குறியுடன் மிகுந்த கஸ்டத்தின் மத்தியிலேயே எமது நாட்கள் செல்லுகின்றது."*

இச்சம்பவத்தில் கணவனை இழந்த வைகுந்த்தவாசன் பரிமளா என்பவர் கூறுகையில்,

*"எனது கணவர் ஒரு ஓவியர். விளம்பரப் பலகைகள் வரைவது அவரது தொழில். கிளிநொச்சி மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து அக்கராயன் பக்கம் சென்று கொண்டிருந்தார்கள். கணவர் சந்தைக்குப் போய்விட்டு வருவதாகச் கூறிச் சென்ற சில நேரத்தின் பின் கிபிர் விமானங்கள் சுற்றி குண்டு போட்டவுடனேயே நான் சந்திக்குப் போனேன். அங்கு அவரில்லை. அங்கு நிற்பவர்கள் சொன்னார்கள் அவர் காயப்பட்டு அக்கராயன் வைத்தியசாலைக்கு கொண்டுசென்று விட்டார்கள் என்று. பின்னர் நானும் மூத்த மகனுமாக வைத்தியசாலைக்குச் சென்றபோது அவர் உயிரிழந்துவிட்டார்.*

*செஞ்சிலுவைச் சங்கத்தினர் தான் அவரின் உடலை வீட்டிற்குக் கொண்டு வந்து தந்தார்கள். உரிய முறைப்படி தகனம் செய்தோம். அவர் இறந்த பிறகு பிள்ளைகளும் பெரிதாகப் படிக்கவில்லை. அக்கராயனுக்கு இடம்பெயர்ந்தும் பெரிய கஸ்ரத்தை நான் அனுபவித்தேன். அரிசி இடித்துக் கொடுப்பது புல்லுப் பிடுங்குவது போன்ற கூலித் தொழிலைச் செய்துதான் இன்றும் சீவியம் நடத்துகின்றேன்."*

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசதுரை திருக்குமார் தொழிலாளி 20
02. கந்தையா விஜயகுமாரி ஆசிரியை 31
03. முத்துசாமி வைகுந்தவாசன் தொழிலாளி 39
04. பெரியசாமி வேலு தொழிலாளி 61
05. சிவணாண்டி ஜெனகாந் மாணவன் 15

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. பொன்னையா ஜெயநாதன் மாணவர் 16

## 101. முள்ளிவாய்க்கால் படுகொலை – 13 மே 1997



முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைபற்றுக் பிரதேச செயலர் பிரிவில் முல்லைத்தீவு நகரத்திலிருந்து பரந்தன் வீதியில் சுமார் ஐந்து கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கிராமமே முள்ளிவாய்க்கால் மேற்குப் பிரதேசமாகும். இக்கிராமத்தின் பொருளாதாரம் மீன்பிடி, விவசாயம் என்பனவற்றிலேயே தங்கியுள்ளது.

1997ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்கால் கிராமத்தில் யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்குப் போன்ற பல்வேறு பகுதிகளிலுமிருந்து போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து வந்த மீனவக் குடும்பங்கள் இங்குள்ள கடற்கரையோரங்களில் செறிவாகக் குடியேறி கடற்றொழிலில் ஈடுபட்டுவந்தார்கள்.

13.05.1997ஆம் ஆண்டு முற்பகல் விமானப்படையின் "கிபிர்" விமானங்கள் இப்பகுதியில் கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஒன்பது மீனவர்கள் உயிரிழந்ததுடன், வீதி புனரமைப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மூவர் உட்பட பத்துப் பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. ஆறுமுகம் சிவாஸ்மகேந்திரம் கடற்றொழில் 38
02. நாகராசா தவரத்தினராசா விவசாயம் 24
03. சின்னையா ஆறுமுகம் கடற்றொழில் 68


04. பொன்னம்பலம் பாக்கியராசா கடற்றொழில் 60
05. சுப்பிரமணியம் அஜந்தன் கடற்றொழில் 15
06. சிவகுரு மகேந்திரன் கடற்றொழில் 39
07. சிவகரன் துதிகரன் கடற்றொழில் 18
08. மல்லி - 42
09. இராமசிங்கம் இராசையா கடற்றொழில் 73

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. ரவீந்திரன் 28
02. செ.கோணேஸ்வரன் 33
03. ஆ.சுதன் 20
04. கதிர்காமு சிங்கம் 25
05. கணபதிப்பிள்ளை நாகலிங்கம் 48
06. செல்வநாதன் சிறீபத்மநாதன் 31
07. க.கணேசலிங்கம் -
08. ஜெ.ரவிக்குமார் 15

## 102. மாங்குளம் செல்வீச்சு - 8 யூன் 1997

எழில் கொஞ்சும் முல்லைத்தீவு மாவட்டத்தில் வளம் நிறைந்த நகரமாகவும், முல்லை மாவட்டத்தில் தொடருந்துத் தரிப்பிடத்தைக் கொண்ட ஒரே ஒரு நகரமாகவும் ஏ-09 பாதையில் மாங்குளம் அமைந்துள்ளது. இங்கு ஆரம்பத்தில் மக்கள் தொகை ஓரளவு குறைவாகக் காணப்பட்டபோதிலும் 1996, 1997 காலப்பகுதியில் பொதுமக்கள் மீதான இராணுவத்தினரின் கண்மூடித்தனமாக தாக்குல்களால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெடுங்கேணி போன்ற பல்வேறு பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களால் இந்நகரம் ஒரு மக்கள் தொகை நிறைந்த நகரமாக மாறியது. அன்றைய காலகட்டத்தில் புளியங்குளச் சந்தியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் நாளாந்தம் மக்கள் குடியிருப்புக்கள் மீது எறிகணைத் தாக்குதல்களை நடாத்தி மக்களுக்குப் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வந்தனர்.



இந்த நிலையில் புளியங்குளப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் 08.06.1997 அன்று பி.ப. 1.40 மணி தொடக்கம் 02.05 மணிவரை மாங்குளம் சந்திப்பகுதியை இலக்குவைத்து சரமாரியான எறிகணைத் தாக்குதலை நடத்தினர். இவ் எறிகணைத் தாக்குதலில் அப்பிரதேசத்தில் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் உட்பட ஏழு பொதுமக்கள் பரிதாபகரமாக உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

பிள்ளைகளையிழந்த மாங்குளத்தைச் சேர்ந்த இந்த்திராணி தெரிவிக்கையில்.,

*"கணவரும் நானும் கூலி வேலைக்குப் போவோம். கஞ்சி குடிக்கக் கூட வழியில்லாத நிலையில் இருக்கும்போது ஒரு நாள் கணவர் வேலைக்குச் சென்ற நிலையில் பிள்ளைகள் பாடசாலைக்குப் பணம் கட்டவேண்டும் என்றார்கள். பணம் இல்லாத நிலையில் அன்றை நாள்*

கூலிச் சம்பளத்தை வைத்து அடுத்த நாள் பாடசாலைக்கு அனுப்பலாம் என்ற எண்ணத்தில் அவர்களை வீட்டில் மறித்து விட்டு நானும் கூலி வேலைக்குப் போய்விட்டேன். அவ்வேளையிற்தான் சிறீலங்கா விமானப்படையின் கிபீர் விமானங்கள் எங்கள் வீட்டிற்கு அயலிற் குண்டுகளைப் போட்டது. நான் வீட்டிற்கு ஓடி வருவதற்கு முன் கணவர் வந்து பிள்ளைகளைப் பார்த்தபோது ஒரு பிள்ளை உடனேயே இறந்துவிட்ட நிலையில் மற்றைய பிள்ளை தண்ணீர் தண்ணீர் என்று அழுதுகொண்டும் இருந்தது. அந்த நேரந்தான் நானும் வந்தேன். அந்த நிலைமையை எவ்வாறு சொல்வதென்றே தெரியவில்லை. அழுது புலம்பி வைத்தியசாலைக்குக் கொண்டு போவதற்கிடையில் மற்றைய பிள்ளையும் இறந்து விட்டது. அந்தச் சம்பவத்தில் எனது பிள்ளைகளைப் பறிகொடுத்த நிலையில் மிகவும் மனவருத்தத்துடன் வாழ்ந்து வருகின்றேன். சம்பவம் நடைபெறுவதற்கு முதல்நாள் கர்ப்பட்டமுறிப்பு பகுதி அனைத்தும் எறிகணைத் தாக்குதல்கள் நடந்தவண்ணமிருந்தது. அதனாற் பயந்துபோய் இன்றைக்கும் எறிகணை வீசுவானோ என்ற பயத்தில் இருக்கும் போதுதான் இச்சம்பவம் இடம்பெற்றது. எனது பிள்ளைகள் மரத்திற்குக் கீழ் விளையாடிக் கொண்டிருந்திருக்கிறார்கள். அந்த நேரந்தான் கிபீர் குண்டுகளைப் போட்டிருக்கிறது. இந்தச் சம்பவத்தில் என்னுடைய இரு பிள்ளைகள் உட்பட ஏழு பேர் இறந்தார்கள் ஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்."

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. க.ஜயாசாமிப்பிள்ளை - 33
02. கந்தசாமி - -
03. ஜெ.சாமிப்பிள்ளை - -
04. அ.பாலச்சந்திரன் - 40
05. ஜெயபாலசிங்கம் ஜெயராஜ் கடற்றொழில் 20
06. மல்லிகா - -
07. கணேசமூர்த்தி தயாநிதி - 32

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. கந்தசாமி செல்வராசா - 36
02. சுகுமார் வினோதீபன் மாணவன் 14
03. சுகராசா ஜசிதா மாணவன் 13
04. கந்தசாமி செல்லர் - 32
05. நல்லதம்பி செபமாலை - 66
06. மாணிக்கம் சரவணமுத்து - 34
07. சரசு பத்மலிங்கம் - 21
08. பாலசுப்பிரமணியம் ஜெயக்குமார் - 21
09. திருஞானம் மனோகரன் - 24
10. முருகு இராசதுரை - 63
11. ஜயாத்துரை பரமேஸ்வரன். - 56
12. சேவியர் மனோரஞ்சிதம் - 36
13. சேவியர் வத்சலா மாணவன் 05
14. செபமாலை றெஜீனா - 66

## 103. பன்னங்கண்டி படுகொலை – 5 யூலை 1997

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் அமைந்துள்ள மிகச்சிறிய கிராமம் பன்னங்கண்டியாகும். இச்சிறிய கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயமும் மந்தை வளர்ப்பும் உள்ளது. இக்கிராம மக்கள் வயலும் வயல்சார்ந்த பிரதேசத்தில் தங்கள் குடும்ப உறவினர்களுடன் வாழ்ந்துகொண்டிருந்தனர்.

1996ஆம் ஆண்டு காலத்தில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து படையினர் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதற்காக "சத்ஜெய" இராணுவ நடவடிக்கை என்னும் பெயரில் எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல் என்பவற்றை நடத்திய வண்ணம் முன்னேறி வந்தனர். இதனால் இப்பிரதேச மக்கள் அன்று தங்கள் உடமைகள், வீடுகள் என்பவற்றைக் கைவிட்டு செய்வதறியாது இடம்பெயரத் தொடங்கினார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் வட்டக்கச்சியில் உறவினர் வீடுகளிலும், சிறிய குடிசைகள் அமைத்தும், பொது மண்டபங்களிலும் தங்கியிருந்தார்கள்.



இவ்வாறு வட்டக்கச்சியில் துயருடன் இருக்கும் வேளையில், தங்கள் வீடுகளிலுள்ள பொருட்களை எடுப்பதற்காகவும், மந்தைகளைக் கொண்டுவருவதற்காகவும் சென்ற பொதுமக்களை பன்னங்கண்டி மூன்றாம் வாய்க்கால் பிள்ளையார் கோயிலடியில் நின்ற படையினர் கைதுசெய்தனர். பின்னர் அவர்களின் கண்களையும், கைகளையும் கட்டி ஆயுதங்களாலும், தடிகளாலும் கடுமையாகத் தாக்கினார்கள். அப்போது அவர்கள் தாங்கள் பொதுமக்கள் என்றும் தங்களைத் திரும்பிப்போக விடும்படியும் இராணுவத்தினரைக் கும்பிட்டும், கெஞ்சியும் கேட்டார்கள். ஆனால் படையினர் அவர்களை அதே இடத்திலுள்ள இராசதுரை என்பவரின் வீட்டுக்கு அழைத்துச் சென்று அங்கே வைத்து அடித்துக் கொலைசெய்த பின்னர் அவ்வீட்டின் மலசலகூட குழியினுள் நால்வரினது சடலங்களையும் போட்டு மூடினர்.

2000ஆம் ஆண்டு மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளக்குடியமரச் சென்றபோது தங்களது வீடுகளையும் காணிகளையும் துப்பரவு செய்தார்கள். அப்போது இராசதுரை வீட்டு மலசலகூடக் குழியினிலிருந்து நான்கு பேரினது எலும்புக்கூடுகள் கைகள் கட்டப்பட்ட நிலையிலும் ஆடைகள் இரத்தக் கறைபடிந்த நிலையிலும் மீட்கப்பட்டன. பின்னர் ஆடைகளை ஆதாரமாகக கொணடு மூன்று பேர் அடையாளங்காணப்பட்டனர். ஒருவர் இன்றுவரை அடையாளங்காணப்படவில்லை. இது ஒரு சிறுவனுடையதாக இருக்கலாமென மருத்துவர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இவர்களைப் போன்றே இராணுவத்தினரால் கைப்பற்றிய பகுதிகளில் தங்களது வீடுகளைப் பார்ப்பதற்காகச் சென்று இன்றுவரை திரும்பிவரவில்லையென காணாமற் போனவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் காணாமற்போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கணவரையிழந்த பன்னங்கண்டியைச் சேர்ந்த சீதாலட்சுமி தெரிவிக்கையில்,




“ஒருநாள் வீட்டைப் பார்த்து விட்டு நாங்கள் வளர்த்த மாட்டையும் பிடித்துக்கொண்டு வருவோம் என்று சொல்லிவிட்டு சிநேகிதர்களான முத்து, குமார் என்பவர்களுடன் மற்றும் ஒரு பதினாறு வயதுப் பையனுடனும் நாலுபேராக வீடு பார்க்கச் சென்றார்கள். பின்பு 2000ஆம் ஆண்டு கிளிநொச்சிப் பகுதியில் மலக்குழி ஒன்றிலிருந்து நான்கு பேரின் எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டன. அப்போது இது சம்பந்தமாக எனக்கு அறிவிக்கப்பட்டது. அந்த நேரம் நாங்கள் அக்கராயனில் வசித்து வந்தோம். அப்போது எடுத்த எலும்புக்கூடுகளையும் உடுப்புக்களையும் அக்கராயன் காவல் நிலையத்தில் காட்டினார்கள். அதில் என் கணவர் போட்டிருந்த உள்ளுடுப்புக்களை வைத்து அவரின் உடலை அடையாளம் காட்டினேன். எனக்கு நான்கு பிள்ளைகள். இடம்பெயர்ந்து இனிமேல் இல்லையென்ற கஸ்ரத்தின் மத்தியிற் சீவித்து வந்த நேரம் எனது கணவரும் இராணுவத்தார் கொல்லப்பட்டு விட்டார். மிகப் பெரிய சிரமத்தின்
மத்தியில் பிள்ளைகளைப் படிப்பித்து வளர்த்து வருகின்றேன். எங்களுக்கு எவரும் உதவ முன்வரமாட்டார்கள். அப்படியிருந்தும் யாரிடமாவது கடன்பெற்றாலும் எம்மாற் திருப்பிக் கொடுக்கமுடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றோம். அநியாயமாக எனது கணவரை சிறீலங்கா இராணுவம் கொன்றதால் தான் எனக்கு இந்த கஷ்டநிலை’’ என்றார்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோரகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சீனிவாசகம் பன்னீர்ச்செல்வம் தொழிலாளி 37
02. பெருமாள் சசிக்குமார் தொழிலாளி 38

## 104. அக்கராயன் அரசினர் வைத்தியசாலை செல்வீச்சு – 15 யூலை 1997



கிளிநொச்சி மாவட்டத்தின் தென்மேற்கே கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் காட்டுவளம் நிறைந்த ஒரு கிராமமாக அக்கராயன் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயமும், கூலித்தொழிலும் உள்ளது. இங்குவாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வைத்தியசாலை, பாடசாலை, சந்தை, வழிபாட்டுத் தலங்கள், கடைகள், மற்றும் சேவை நிலையங்கள் போன்றன அமைந்துள்ளன.

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கிளிநொச்சி நோக்கி “சத்ஜெய” இராணுவ நடவடிக்கை படையினரால் மேற்கொள்ளப்பட்டது. இதனால் மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயரத் தொடங்கினார்கள். இவ் இராணுவ நடவடிக்கையினால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையும் தன்னுடைய சேவையைத் தொடரமுடியாத நிலையில் அக்கராயன் வைத்தியசாலையில் தற்காலிகமாக இயங்கத் தொடங்கியது.

கிளிநொச்சி நோக்கி முன்னேறிய படையினர் மக்களின் வாழ்விடங்கள், வழிபாட்டுத் தலங்கள், வைத்தியசாலைகள் போன்றவற்றின்மீது விமானத் தாக்குதல்களையும், எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.


கிளிநொச்சியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினரால் 15.07.1997அன்று இரவு 7.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட எறிகணைகள் அக்கராயன் வைத்தியசாலைப் பணியாளர் விடுதியின் மீதும் அதனையண்டிய பிரதேசத்திலும் வீழ்ந்து வெடித்தன. விடுதியினுள் செய்தி கேட்டுக்கொண்டிருந்த வைத்தியசாலையில் சுத்திகரிப்பாளராகக் கடமையாற்றும் கணபதியும் அவரது குடும்பத்தினரும் வைத்தியசாலை விடுதிமீது வீழ்ந்த எறிகணைத் தாக்குதலினால் உயிரிழந்தார்கள். இந்த எறிகணைத் தாக்குதலில் மூன்று பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழக்க, படுகாயமடைந்த இருவரில் ஒருவர் மல்லாவி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தார். இவருடைய மகளான கமலவேணிக்கு கால் துண்டிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக வைத்தியசாலையில் கணபதி என்னும் பெயரில் மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. அந்தோணி இராமன் சுகாதார ஊழியர் 65
02. அந்தோணி கணபதி சுகாதார ஊழியர் 47
03. கணபதி கேதாரகௌரி கமம் 38
04. கணபதி உமாசங்கர் மாணவன் 11

## 105. வவுனிக்குளம் படுகொலை – 26 செப்ரெம்பர் 1996, 15 ஆகஸ்ட் 1997



வடக்குக் கிழக்கில் காடுகளால் அதிகம் சூழப்பட்டுள்ள மாவட்டமான முல்லைத்தீவின் தென்மேற்குப் பகுதியை அண்டிய மாந்தை கிழக்குப் பிரதேசசெயலர் பிரிவினுள் வவுனிக்குளம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாரிய குளங்களில் ஒன்றான வவுனிக்குளம் அமைந்துள்ளது.

வவுனிக்குளத்திலுள்ள மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் அமைந்துள்ளது. 1996ஆம் ஆண்டு காலப் குதியில் வவுனிகுளக் கிராமதத்தில் யாழ்ப்பாணம், கிளிநொசச்சி போன்ற பலவேறு பகுதிகளிலுமிருந்து உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிக இருப்பிடங்களை அமைத்து நெருக்கடிக்குள் வாழ்ந்து கொண்டிருந்த மக்களின் மீது 26.09.1996 அன்று பிற்பகல் 02:10 மணியளவில் சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஆறிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் சம்பவ இடத்தில் உடல்சிதறி உயிரிழந்ததுடன், பன்னிரண்டு பேர் வரையில் காயமடைந்தனர்.

1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினர் வவுனியாவின் ஓமந்தைப் பகுதியூடாக "ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கை ஒன்றினை கண்டி வீதியினை பிரதான நகர்வு மையமாகக்கொண்டு மேற்கொண்டு வந்தனர். இந்த நடவடிக்கையின் போது இராணுவத்தினர் ஏவிய எறிகணைகளும், துப்பாக்கிச் சன்னங்களும், விமானக்குண்டுகளும் பொதுமக்களைத் தாக்கின. இராணுவ நடவடிக்கையினாற் பயந்த மக்கள் கோயில்களிலும், தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறு தஞ்சம் புகுந்த மக்களில் வவுனிக்குள மக்களும் உள்ளடங்குவர்.

15.08.1997 அன்று ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைக்குப் பயந்து வவுனிக்குள மக்கள் தமது பகுதியில் அமைந்துள்ள கிறித்தவ தேவாலயம் ஒன்றினுள் தஞ்சம் புகுந்தனர். இவர்களில் குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்களென பலதரப்பட்டவர்களும் காணப்பட்டனர். இதைவிட ஏனைய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்த பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களும் இவ்வாலயத்தினுள்ளேயே தஞ்சம் புகுந்தனர். இவர்கள் அனைவருமே கர்த்தரே எம்மைக் காப்பாற்றுங்களென மனதாலும், வார்த்தைகளாலும் மன்றாடிய வண்ணமே இருந்தனர்.

15.08.1997 அன்று காலை 9மணியளவில் விமானப்படையின் இரண்டு "கிபீர்" குண்டுவீச்சு விமானங்கள் பொதுமக்கள் இருந்த தேவாலயத்தின் மீது குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இந்தக் குண்டுத் தாக்குதல்களினால் பதினொரு பொதுமக்கள் அவ்விடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர். பதினாறிற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். தேவாலயமும் பலத்த சேதத்திற்குள்ளானது. படுகாயமடைந்த மக்களை உயிர் பிழைத்த மக்கள் மூன்று மைல்களுக்கு அப்பாலுள்ள மல்லாவி வைத்தியசாலைக்கு வாகனத்திலும், மோட்டார் சைக்கிள்களிலும் கொண்டு சென்றனர். கொண்டு செல்லப்பட்டவர்களில் ஒருவர் 18.08.1997 அன்று வைத்தியசாலையில் இறந்தார்.

அன்றைய தினம் மீண்டும் மு.ப 11.00 மணியளவில் அப்பகுதியில் அதே விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் எட்டுப் பொதுமக்கள் படுகாயமடைந்தனர். இவர்களும் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் 20.08.1997 அன்று வைத்தியசாலையில் இறந்தார். இவ்வாறாக வவுனிகுள கிறித்தவ தேவாலயம் மீதான விமானகத் ணடு தாக்குதலில் எல்லாமாகப் பதினொரு பொதுமக்கள் உயிரிழந்ததுடன், இருபதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சின்னத்தம்பி வடிவேலு விவசாயம் 51
02. பெரியதம்பி சின்னராசா விவசாயம் 67
03. சின்னராசா புஸ்பமாலா மாணவி 20

04. வல்லியர் சின்னத்தம்பி தொழிலாளி 55
05. சந்திரசேகரம் இராஜேஸ்வரி - 32
06. இரத்தினசாமி சிவஞானசுந்தரம் ஓய்வூதியம் 69

07. பழனியாண்டி மாரிமுத்து மாணவர் 18
08. இரத்தினம் இராசகுமாரி வீட்டுப்பணி 24
09. குணரத்தினம் சண்முகராசா தொழிலாளி 23
10. அருளானந்தம் விமலானந்தம் சுயதொழில் 30
11. தேசிங்கராஜா தங்கமணி - 48
12. தேசிங்கராஜா வசந்தகுமாரி மாணவன் 17

13. நடராசா புஸ்பமலர் - 41
14. நடராசா கஜன் - 04
15. அன்னமலர் - 40
16. துரைரெட்ணம் பரமேஸ்வரி - 46
17. நவரத்தினம் சாந்தி வீட்டுப்பணி 21

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. சுனில் - 60
02. சின்னராசா கேதீஸ்வரன் - 16
03. சின்னராசா ரவிமாலா மாணவி 12
04. சிவஞானசுந்தரம் ஜசேசன் - 22
05. தர்மலிங்கம் மாணவி 6
06. சுனில் ஜெய்சன் - 22
07. சுனில் கிளி - 24
08. நடராசா பூரணம் - 52
09. நடராசா பிரபு - 24
10. அம்பிகாவதி இந்துமதி மாணவி 14
11. அம்பிகாவதி கங்கையமரன் மாணவன் 11
12. சின்னராசா வசந்தமாலா - 24
13. எஸ்.நாகபூரணி - 32
14. பொன்னுத்துரை சுரேஸ் - 27
15. எஸ்.யோகமோகன் - 18
16. ஜெயச்சந்திரன். மாணவன் 15
17. ஆர்.பாஞ்சாலி - 32
18. ஜெ.மதுசன் குழந்தை 02
19. எம்.இராசமலர் - 55
20. கௌரி - 22
21. நாகசாந்தி மாணவி 13
22. வி.தயானி - 18
23. வி.தர்மினா மாணவி 09
24. எஸ்.விஜயராஜா - 16
25. எஸ்.சந்தனம் - 59
26. எஸ்.செல்வராணி - 22
27. எஸ்.ஸ்ரீதரி குழந்தை 3
28. எஸ்.காணிக்கைராஜா - 38

## 106. தம்பலகாமம்-98 படுகொலை – 01 பெப்பிரவரி 1998

திருகோணமலை நகரத்திலிருந்து பன்னிரண்டு கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தம்பலகாமம் பிரதேசத்தில் பாரதிபுரம் கிராமம் அமைந்துள்ளது.

01.02.1998 அன்று காலை 5.00க்கும் 6.00 இடைப்பட்ட நேரத்தில் பாரதிபுரம் இராணுவ முகாமிலிருந்த இராணுவத்தினர் அப்பகுதியாற் சென்ற பொதுமக்களில் எட்டுப் பேரைக் கைதுசெய்து முகாமை சுற்றி நிறுத்திவைத்துச் சுட்டார்கள். உயிரிழந்த எட்டுப் பேரில் நான்கு


பேர் மாணவர்களாவர். உயிரிழந்த ஆறுமுகன் சேகர் என்பவரின் ஆண் உறுப்பை வெட்டி அவரது வாய்க்குள் திணித்திருந்தனர்.



இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. ஆறுமுகம் சேகர் கமம் -
02. அமிர்தலிங்கம் சுரேந்திரன் மாணவன் 14
03. அமிர்தலிங்கம் கஜேந்திரன் தொழிலாளி 18
04. பொன்னம்பலம் கனகசபை கமம் -
05. முருகேசு ஜனகன் மாணவன் 17
06. நாதன் பவளநாதன் தொழிலாளி 45
07. சுப்பிரமணியம் திவாகரன் - -
08. குணரத்தினம் சிவராஜன் - -

## 107. பழைய வட்டக்கச்சி குண்டுவீச்சு – 26 மார்ச் 1998



கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள பழைய வட்டக்கச்சி என்னும் கிராமம் கிளிநொச்சி மாவட்டத்தின் புராதன காலக் குடியேற்றக் கிராமங்களில் முதன்மையான ஒரு கிராமமாகக் காணப்படுகிறது. இக்கிராமம் இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீர் பெற்றுக்கொள்ளும் நெற்செய்கைப் பிரதேசமாகும். இதனால் இங்கு சிறுபோக நெற்செய்கையும் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றது.

பழைய வட்டக்கச்சிக் கிராமம் தற்போது பெரியகுளமென அழைக்கப்படுகிறது. இக்கிராமம் தனக்கென சில சிறப்பான இயல்புகளைக் கொண்டுள்ளது. வளமான மண்ணும் சிறந்த நீர் வளமும் இப்பிரதேசத்தில் இருப்பதனால் இப்பிரதேச மக்கள் செல்வச் செழிப்புடனும் கல்வி வளத்துடனும் வாழ்கின்றார்கள்.

இராணுவதத்தினர் 1996ஆம் ஆண்டு காலப்குதியில் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் நோக்கில் "சத்ஜெய" இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர். விமானத் தாக்குதல் எறிகணைத் தாக்குதல் என்பவற்றை நடத்தியபடி முன்னேறி, மக்களின் வாழ்விடங்களையும், சொத்துக்களையும் அழித்தனர். இதன்போது பல பொதுமக்களும் உயிரிழந்தார்கள்.

1998.03.26ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00மணிக்கு கிளிநொச்சி வான் பரப்பினுள் பெரும் இரைச்சலுடன் நுழைந்த விமானப் படையின் இரண்டு கிபீர் விமானங்கள் வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சுற்றி வட்டமிட்டன. முதலில் கண்டாவளை - வெளிக்கண்டற் பகுதியில் ஒரு குண்டினையும் அதனைத் தொடர்ந்து பழைய வட்டக்கச்சிப் பிரதேசத்திலுள்ள உடையார் என்றழைக்கப்படும் அருணாசலம் வேலாயுதம் என்பவரது வீட்டிலும், வீட்டிற்கு அண்மித்த பிரதேசத்திலும் ஐந்து குண்டுகளையும் வீசியது. இதன்போது வீட்டு முற்றத்தில் பனங்கிழங்கைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்த இருவரும் வீட்டினுள்ளிருந்த உடையாரின் மகளும் மற்றும் காணியில் வேலை செய்துகொண்டிருந்த இருவரும் முன் வீட்டில் ஒருவருமாக மொத்தம் ஆறு பேர் உயிரிழந்தார்கள். ஐந்து பேர் காயங்களுக்குள்ளானார்கள். காயமடைந்தவர்கள் தருமபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இச் சம்பவத்தின் போது அருணாசலம் வேலாயுதத்தின் வீடு முற்றாக அழிந்ததுடன், அவருடைய இரண்டு உழவு இயந்திரங்கள், களஞ்சிய அறைகள் உட்பட அனைத்து உடமைகளும் அழிந்தன.
அருணாசலம் வேலாயுதம் தெரிவிக்கையில்,

*"எமது பகுதியில் நடந்த வான் தாக்குதலால் எனது மகளான மங்கயற்கரசி படுகொலை செய்யப்பட்டதுடன், எனது வீடு முற்றாக சேதமடைந்தது. இதில் ஐந்து பேர் உடல்சிதறிப் பலியானார்கள். எனது நெல்லு மூட்டைகள் யாவும் எரிந்துவிட்டன."*

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சண்முகம் தனபாலு தொழிலாளி 55
02. தியாகராசா பாலு தொழிலாளி 50
03. இராமநாதன் செல்லம்மா வீட்டுப்பணி 56
04. வேலாயுதம் மங்கயற்கரசி மாணவி 20
05. முத்தையா வசந்தகுமாரி வீட்டுப்பணி 26
06. கிஸ்ணசாமி வள்ளியம்மை வீட்டுப்பணி 65

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. வீரய்யா செல்வராசா - 40
02. கதிர்காமு பேபி - -
03. இராமநாதன் தேவகி - 23
04. பஞ்சலிங்கம் பாமினி அரசஊழியர் 32
05. வேலாயுதம் சிவகுமார் அரசஊழியர் 26

## 108. சுதந்திரபுரம் படுகொலை – 10 யூன் 1998

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள சுதந்திரபுரம் கிராமம், உடையார்கட்டுச் சந்தியிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி அண்ணளவாக இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரம் விவசாயம் ஆகும். இக்கிராமத்தில் ஆரம்பகாலங்களில் குடித்தொகை குறைவாகக் காணப்பட்ட போதும் ஏனைய பிரதேசங்களிருந்து காலத்துக்குக் காலம் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்கள் 1996ஆம் ஆண்டினைத் தொடர்ந்து கூடுதலாக இப்பிரதேசத்தில் வசித்துவந்தனர்.



10.06.1998 அன்று காலை 9.15 மணி தொடக்கம் 11.30 மணிவரை ஆனையிறவு, அம்பகாமம் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரும் விமானப் படையினரும் இணைந்து இப் பகுதியில் மக்கள் வாழ்விடங்கள் மீது எறிகணைத் தாக்குதலையும், விமானத் தாக்குதலையும் நடத்தினார்கள். மக்கள் எதிர்பார்த்திராத சந்தர்ப்பத்தில் இத்தாக்குதல் இடம்பெற்றதனால் மக்களால் பாதுகாப்புத் தேடிக்கொள்ள முடியவில்லை. தாக்குதலுக்கு உட்பட்ட பகுதியானது புகைமண்டலமாக மாறியதுடன், எங்கும் ஒரே அழுகுரல்கள் கேட்டவண்ணமிருந்தன. இறந்தவர்களின் உடல்கள் ஆங்காங்கே காணப்பட்டன. காயமடைந்தவர்களையும் விட்டுவிட்டு ஏனையவர்கள் தமது உயிர்களைக் காப்பாற்றும் நோக்குடன் ஓடி ஒளித்துக்கொண்டார்கள். பின்னர் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் முயற்சியில் இங்குள்ள மக்கள் ஈடுபட்டனர்.

நடைபெற்ற தாக்குதலில் முப்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் ` உயிரிழந்ததுடன், ஐம்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மக்களின் பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துகள் அழிந்தன. பத்து வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. நூறு வீடுகள் சேதமடைந்தன. பயன்தரு தென்னை மரங்கள் அழிந்ததால் கிராமத்தின் அழகும், அமைப்பும் சீர்குலைந்து போயிற்று.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராஜகோபாலன் ரவிச்சந்திரன் விவசாயம் 28
02. இராமு இரட்ணலிங்கம் தொழிலாளி 26
03. இராசலிங்கம் உதயகுமார் தொழிலாளி 39
04. இரத்தினசிங்கம் இராணிமலர் - 28

05. நவக்குமார் கோகிலா - 30
06. நவராசா கிருஸ்ணமூர்த்தி தொழிலாளி 25
07. கந்தையா குணசேகரம் - 24
08. புஸ்பநாதன் சதீஸ் மாணவன் 10
09. புஸ்பநாதன் கலைச்செல்வி குழந்தை 5
10. புஸ்பநாதன் தேவநந்தினி குழந்தை 2
11. புஸ்பநாதன் சத்தியசீலன் மாணவன் 8
12. புஸப் நாதன` ரமேஸக் மாா` மாணவன் 13

13. பழனிவேல் திருச்செல்வி மாணவி 18
14. மனுவல் தேவதாஸ் - 45
15. முத்துத்தம்பி வசந்தகுமாரி - 19
16. முத்துவேல் ஞானசேகரம் - 59
17. அமிர்தலிங்கம் சுதா - -
18. ஆசிர்வாதம் பாத்திமா மாணவி 17
19. அற்புதம் ஜெகன் - 23
20. ஜேபன் - -
21. பொன்னன் சுரேஸ்குமார் - -
22. செபஸ்தியாம்பிள்ளை ஜெயரட்ணம் மாணவன் 21
23. செல்வராசா சிறிதரன் வீட்டுப்பணி 21
24. வெள்ளையப்பன் சுப்பையா விவசாயம் 57
25. சாட்செறோன் கொன்செட்டா வீட்டுப்பணி 26
26. சாணக்குட்டி யோகபாலசிங்கம் தனியார்தொழில் 27
27. சின்னத்துரை - -
28. சின்னத்துரை சுதாகரன் தனியார்தொழில் 20
29. சிதம்பரப்பிள்ளை குமாரவேல் - 48
30. விநாயகமூர்த்தி தேவகரன் தனியார்தொழில் 22
31. விக்கினேஸ்வரன் நேசராணி - 40
32. வல்லிபுரம் ராணிமலர் வீட்டுப்பணி 27
33. றிச்சாட் செறோன்கொன்சென்றா - 26

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)


01. இராமலிங்கம்சர்மா - 48
02. நயினாமுகமது முகமதுநவும் - 31
03. நாதன் - 38
04. நாராயணன் சத்தியசீலன் தொழிலாளி 18
05. நிசாம் - 30
06. க.ஜீவநந்தினி - 21
07. க.மாலினி - -
08. கந்தையா சுப்பிரமணியம் விவசாயம் 22
09. கதிர்வேலு நாகதேவன் விவசாயம் 34
10. கதிரேசு ஜெபனேஸ்வரன் - 18
11. குமாரநாயகம் மேகநாதன் சுயதொழில் 24
12. குமரேசன் - 30
13. கணேஸ் மாலினி - 34
14. கணேஸ் றேகன் - 24
15. கி.வக்சலா - 28
16. கிருஸ்ணன் ரவிக்குமார் கூலித்தொழில் 26
17. கிறிஸ்ரி வட்சலா - 28
18. ப.ஜெயரட்ணம் - 21
19. ப.சீலன் - 17
20. புஸ்பராசா சுதன் - 20
21. பாலு மாணிக்கம் - 64
22. பத்மராசா - 21
23. பிரசாந்தினி மாணவன் 15
24. ஐ.செல்வம் - 27

25. ஐயம்பிள்ளை செல்வன் - 26
26. வை.லட்சுமி - 63
27. வையாபுரி இலட்சுமி - 63
28. தியாகராசா சந்திரலிங்கம் - 42
29. மாணிக்கம் - 64
30. முத்துக்கறுப்பன் கதிர்காமத்தம்பி - 65
31. முத்துலிங்கம் பத்மராசா - 22
32. அ.விஜயகுமார் மாணவன் 14
33. அந்தோணிப்பிள்ளை சிவகுமார் மாணவன் 7
34. அப்புப்பிள்ளை கறுப்பையா விவசாயம் 65
35. அப்புப்பிள்ளை சின்னக்கறுப்பன் விவசாயம் 65
36. ஆறுமுகம் மீனாம்பிகை - 28
37. ஜெயகாந்தன் - 20
38. ஜெயச்சந்திரன் மாணவன் 15
39. ஜேசுநாயகம் சில்வஸ்டர் கூலித்தொழில் 26
40. கே.தாரணி - 21
41. கோமலட்சுமி - 18
42. கோவிந்தன் - 56
43. பொன்னன் பழனியாண்டி சுயதொழில் 60
44. பொன்னுத்துரை ரவிச்சந்திரன் - 29
45. சொக்கலிங்கம் சுப்பம்மா வீட்டுப்பணி 60
46. சொர்ணலட்சுமி - 18
47. சோளநாதன் இந்திரகுமார் - 23
48. சௌந்தராஜன் சசிகரன் மாணவர் 16
49. செல்வநாயகம் சாந்தகுமாரி சுயதொழில் 20
50. செல்லத்துரை சற்குணநாதன் - 41
51. செல்லத்தம்பி குமரேசன் - 30
52. ச.சகுந்தலா - 26
53. சந்திரலிங்கம் - 42
54. சுதர்சன் - 25
55. சின்னக்கறுப்பையா - 62
56. சிவநாதன் ருக்குமணிதேவி வீட்டுப்பணி 23
57. சிவனேசன் - 18
58. சிவஞானம் ஜெயச்சந்திரன் மாணவன் 15
59. சிவராசா ஞானசேகரலிங்கம் - 40
60. சிறிகுமார் மதிவதனா மாணவி 14
61. சுவிந்திரன் - 21
62. விஜயகுமார் டெய்சிராணி - 33
63. ரஞ்சன் மலர்விழி - -
64. ரஞ்சன் வின்சன் குழந்தை 5

## 109. விசுவமடு படுகொலை – 25 நவம்பர் 1998

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியில் விசுவமடு அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் வாழ்கின்ற

மக்களின் பிரதான பொருளாதாரம் விவசாயமாகும். இங்கு நெல், தென்னை போன்றவற்றுடன் மேட்டு நிலப்பயிர்களும் பயிரிடப்படுகின்றன. இவற்றிற்கான நீரினை விசுவமடுக்குளம் வழங்குகின்றது. இப்பிரதேசத்தின் சந்திப்பகுதி சிறிய நகரப் பண்பைக் கொண்டுள்ளது.



25.11.1998 அன்று பிற்பகல் 2.00மணியளவில் பாடசாலை விட்டு மாணவர்கள் வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் இராணுவத்தினரால் ஆனையிறவிலிருந்து விசுவமடுப் பகுதி மீது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத்தாக்குதலில் பாடசாலையிலிருந்து வீட்டுக்குவந்து மதிய உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்த மாணவன் ஒருவன் அவ்விடத்திலேயே உயிரிழந்தான். மற்றைய எறிகணை விசுவமடு மகாவித்தியாலயத்திற்கு அருகில் வீழ்ந்து வெடித்ததில், தனது மாமனாருக்கு மதிய உணவினைக் கொண்டுவந்த சிறுவன் காயமடைந்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தான். மேலும் இதனை அண்டிய பகுதிகளில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் இருவர் உயிரிழந்தார்கள்.

இச்சம்பவங்களில் மொத்தமாக ஆறிற்கும் மேற்பட்ட பொதுமகக் ள் உயிரிழந்ததுடன், பத்துப் பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சிவரஞ்சினி மாணவி 15
02. கிருஸ்ணபிள்ளை தர்மரத்தினம் - 32
03. ஜெயரட்ணம் வினோ குழந்தை 03
04. முருகையா பிரகாஸ் மாணவர் 12
05. யோகநாதன் அகிலேநாதன் மாணவர் 17
06. இராசன் வசந்தகுமார் வீட்டுப்பணி 27

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. லக்சுமி - 52
02. சரஸ்வதி. - 41
03. சிதம்பரநாதன் சிவானந்தன் - 25
04. சிதம்பரநாதன் மணிமேகலை 59
05. செல்வராசா இராசம்மா வீட்டுப்பணி 40
06. பெருமாள் சாந்தகுமார் தொழிலாளி 16
07. கோவிந்தசாமி.
08. கோவிந்தசாமி மகேஸ்வரி
09. கிருஸ்ணன் குணரத்தினம்
10. இராமையா சிவனம்மா

## 110. சுண்டிக்குளம் குண்டுவீச்சு – 02 டிசம்பர் 1998




கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவின் எல்லைக் கிராமமாகச் சுண்டிக்குளம் அமைந்துள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் இப்பிரதேசத்தில் பறவைகள் சரணாலயம் காணப்படுவது சிறப்பம்சமாகும். கடலும் கடல் சார்ந்த இப்பிரதேசத்தில் மீன்பிடி பிரதான தொழிலாகும். கடற்படையினர் வடக்குக் கிழக்கில் கடற்கரையோரப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் மீது பல்வேறு காலகட்டங்களிலும் தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டு வந்தனர். இந்தவகையில் சுண்டிக்குளக் கிராமமும் கடற்படையினரின் தாக்குதல்களுக்கு உள்ளாகியது.

1995ஆம் ஆண்டு சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையால் மருதங்கேணி பிரதேசசெயலர் பிரிவைச் சேர்ந்த உடுத்துறை, தாளையடி, ஆழியவளைப் பிரதேச மக்கள் தமது தொழில் நிமித்தம் சுண்டிக்குளப் பகுதியில் வந்து சிறிய குடிசைகள் அமைத்து கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் குடியேறினார்கள். இம்மக்கள் கடற்படையின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தமது வாழ்க்கையை ஓட்டுவதற்காக கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது 02.12.1998அன்று நண்பகல் 12.00 மணியளவில் விமானப்படையின் இரண்டு கிபிர் விமானங்கள் இப்பகுதி வான் பரப்பினுள் பேரிரைச்சலுடன் நுழைந்து வட்டமிடத் தொடங்கின. இதனைக்கண்ட மக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினர். சுமார் பத்து நிமிடங்கள் வரை அப்பகுதியை வட்டமிட்ட பின்னர் அவை நல்லதண்ணித் தொடுவாய் குடியேற்ற முகாம் மீது ஆறு குண்டுகளைப் போட்டன. இக்குண்டுவீச்சுத் தாக்குதலினால் சிறுவர்கள், பெண்கள் உட்பட மொத்தம் ஏழு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழக்க, பலர் காயமடைந்தனர்.

## 111. மந்துவில் படுகொலை – 15 செப்ரெம்பர் 1999

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திற்கு அருகில் மந்துவில் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்து மக்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் மந்துவில் சந்தியில் பொது நிறுவனங்கள், வியாபார நிலையங்கள், சிறிய சந்தை, கோயில், தேவாலயம் என்பன அமைந்துள்ளன. மந்துவிற் கிராம மக்கள் நாளாந்த தேவைகளிற் பெரும்பாலானவற்றை இங்கே பூர்த்திசெய்து வாழ்ந்து வந்தனர்.

15.09.1999 அன்று வழமைபோல குழந்தைகள், இளையவர், முதியவரென பலதரப்பட்டவர்களும் சந்திக்குத் தமது தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வந்திருந்தனர். காலை 10.25 மணியளவில் விமானப்படையின் இரண்டு "கிபிர்" குண்டுவீச்சு விமானங்கள் முல்லைத்தீவு வான்பரப்பினூடாக பறந்து வந்து மந்துவிற் பகுதியை பத்து நிமிடங்களாக வட்டமிட்டு மக்கள் கூடிநின்ற மந்துவில் சந்தைப் பகுதிமீது குண்டுத் தாக்குதலை நடத்தின.

விமானத் தாக்குதலில் சம்பவ இடத்தில் பன்னிரண்டு பொதுமக்கள் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் உடல்கள் சில அவ்விடத்திலும், வீதியிலும், பற்றைக்குள்ளும், கிணற்றுக்குள்ளும் தூக்கி வீசப்பட்டிருந்தன. இறந்தவர்களின் உடல்கள் சிதைந்த நிலையிலிருந்தன. படுகாயமடைந்திருந்தவர்களை அப்பகுதி மக்கள் வாகனங்களில் ஏற்றி புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்கள். இதில் பத்திற்கும் மேற்பட்டவர்கள் அன்று மாலையே உயிரிழந்தனர். இச்சம்பவத்தின் போது நாற்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். வியாபார நிலையங்கள், பயன்தருமரங்கள், கால்நடைகள் போன்ற பல லட்சம் பெறுமதியான சொத்துக்களும் அழிந்தன.

இச்சம்பவத்தில் கணவரை இழந்த சுப்பிரமணியம் சரஸ்வதி கூறும்போது,

*"எனது கணவர் காணியில் கிடைக்கும் தேங்காய்களைக் கொண்டு சென்று மந்துவில் சந்தியில் விற்றுவிட்டு வருவார். சம்பவ தினமன்றும் பத்துத் தேங்காய்களை விற்றுவிட்டு சாமான்கள் வாங்கி வரவென்று போனார். கிபிர் விமானங்கள் சந்திப் பகுதியில் குண்டுகளைப் போட்டதென்று அறிந்தவுடன், தகப்பனைத் தேடி மகன் பிறேமன் போனார். நான் என்ன நடந்ததோ என்று தெரியாமல் பயத்துடனிருந்தேன். மகன் போன போது வேலிக்கரையில் நாடியைப் பொத்திப் பிடித்தபடி படுத்திருந்தாராம். உடனே வீதியில் வந்த மோட்டார் சைக்கிளை வாங்கி புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு ஏற்றிக்கொண்டு போகும்போது இடை நடுவிலே இறந்து விட்டார். ஏற்கனவே எனது ஆறாவது மகன், 1985 ஆம் ஆண்டு சிறீலங்கா இராணுவப் பிரச்சனைக்குப் பயந்து, வவுனியாவில் இருந்த மூத்த மகனின் வீட்டில் இருந்து பத்தாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த வேளை, 1985ம் ஆண்டு வைகாசி மாதம் இருபதாம் திகதியன்று வவுனியா ஆச்சிக்குளம் பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். தற்போது பதின்நான்கு ஆண்டுகளின் பின்னர் எனது கணவரையும் சிறீலங்கா விமானப்படையினர் குண்டு வீசிக் கொன்றுள்ளனர்."*

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சின்னையா ஜெயபாலசிங்கம் சுயதொழில் 37
02. சண்முகம் கிருபாகரன் தொழிலாளி 22
03. சவிரி யோன் விவசாயம் 52
04. சங்கரப்பிள்ளை செல்வமாணிக்கம் தொழிலற்றோர் 70
05. ஞானசேகரம் இலட்சுமிப்பிள்ளை வீட்டுப்பணி 43
06. ஜெயராமன் சந்திரகுமார் தனியார்தொழில் 20
07. அலன்றோஸ் கொண்டியூசியஸ் கடற்றொழில் 19
08. அந்தோனிப்பிள்ளை தனியார்தொழில் -
09. ஆறுமுகம் ஜெயராமன் - 50
10. சின்னையா ஜெயபாலசிங்கம் விவசாயம் 37
11. பாக்கியநாதன் நீற்றம்மா வீட்டுப்பணி 56
12. தனராஜ் ஜெனோவி வீட்டுப்பணி 24
13. வேதநாயகம் செபஸ்தியாம்பிள்ளை கடற்றொழில் 52

14. துரைசிங்கம் சபாநாயகம் மாணவன் 21
15. இராசநாயகம் உதயகுமார் கடற்றொழில் 20
16. இராசேந்திரம் சத்யகுமார் தனியார்தொழில் 25
17. குணசிங்கம் ஜெயச்சந்திரன் சுயதொழில் 33
18. கணபதிப்பிள்ளை சத்தியபாமா தொழிலாளி 25
19. கனகசபை மிதிலா வீட்டுப்பணி 26
20. அன்ரனிலியோ கிறிஸ்ரிஸ்புளோரன்ஸ் வீட்டுப்பணி 54
21. செல்லையா ஆறுமுகம் - 59
22. கணபதிப்பிள்ளை யோகராசா - 36
23. அன்ரனிதவராசா திரேசம்மா - 50
24. அன்ரனிலியோ மெல்றோஸ் - 24
25. சின்னத்தம்பி தம்பு - 55
26. ஜெயமஸ் ஜெயசங்கர் - 33
27. பத்மராசா ஜெனிற்றா மாணவி 15
28. சந்திரசேகரம் சயந்தினி மாணவி 12
29. தம்பையா சுப்ரமணியம் விவசாயம் 67

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. சூ.பேதுறுப்பிள்ளை - 80
02. இ.தனேஸ்வரி - 55
03. இ.மகேஸ்வரி - 55
04. நா.அருந்தவமலர் - 52
05. நாகலிங்கம் - 45
06. க.தங்கையா - 48
07. கனகையா - 43
08. கந்தையா நாகலிங்கம் - 35
09. கந்தையா வள்ளிப்பிள்ளை - 70
10. கதிரேசு தேவராசா - 39
11. கி.அன்னலட்சுமி - 61
12. கிருஸ்ணபிள்ளை அன்னலட்சுமி - 51
13. குணசிங்கம் - 50
14. குணரத்தினம் நிறஞ்சன் மாணவன் 09
15. பால்ராஜ் பாசமலர் - 27
16. பாலசிங்கம் பால்ராஜ் சுயதொழில் 29
17. பத்மராஜா மதியமலர் தொழிலாளி 40
18. பி.மரியமலர் - 52
19. பீற்றர்கென்றிலோல் லோறன்சியா - 18
20. சைலன் குழந்தை 03
21. த.பாலசிங்கம் - 66
22. த.தனுசா குழந்தை 03
23. த.தேவராசா - 39
24. தி.தர்சினி மாணவி 17
25. தியாகராசா தர்சினி மாணவி 17
26. தியாகராசா செல்வராணி – 44
27. ம.தனராஜ் - 20
28. மயில்வாகனம் - 45

29. மகாலிங்கம் தனராஜா - 29
30. மரியநாயகம் - 48
31. முத்துசாமி - 48
32. முத்துசாமி கோழிமனசாமி - 48
33. அ.இருதயராசா - 20
34. அ.மரியசோபனா - 23
35. அ.விதுசன் - 35
36. அன்ரன் பெனடிற் - 51
37. அலன்றோஸ் மரியநாயகி - 40
38. ஜெ.ஜெயசங்கர் - 30
39. ஜெ.சரஸ்வதி - 50
40. ஜெயசங்கர் விமல்ராஜ் மாணவி 06
41. ஜெயராமு சரஸ்வதி - 50
42. ஜெயராமன் - 60
43. யோன் நான்சி - 19
44. கே.தவசீலன் - 19
45. கே.மேனகா மாணவன் 18
46. கோபாலகிருஸ்ணன் பத்மாவதி - 45
47. பொ.வள்ளிப்பிள்ளை - 90
48. பெர்னான்டோ அன்ரலிவின்சன் - 35
49. பெரியதம்பி நடராசா கடற்றொழில் 51
50. தெ.மரியமலர் - 68
51. சே.மரியம்மா - 68
52. சேதுப்பிள்ளை - 80
53. செல்லையா சந்திரசேகரம் சுயதொழில் 27
54. செல்லத்துரை மகேஸ்வரி - 46
55. ச.யோகராணி - 41
56. ச.லோகிதா - 15
57. ச.சர்மிலா - 23
58. சின்னத்தம்பி கந்தசாமி - 37
59. சீனியர் சிவநாதன் - 18
60. சிவகுரு சூரியமூர்த்தி கடற்றொழில் 33
61. சிவானந்தம் சுதாகரன் - 19
62. சிவநேசன¨ அழகேஸவ் ரி வீட்டு பப் ணி 29
63. சிவசுப்பிரமணியம் கம்சநந்தினி வீட்டுப்பணி 21
64. சுசிதரன் சூட்டி - 29
65. சரஸ்வதி - 50
66. சற்குணன் யோகராணி - 41
67. ராஜா சஜீபன் குழந்தை 03

## 112. பாலிநகர் படுகொலை – 03 நவம்பர் 1999

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தைகிழக்குப் பிரதேசசெயலர் பிரிவில் வவுனிக்குளத்தினை அண்மித்த பகுதியிற் பாலிநகர்க் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்கள் விவசாயம் மற்றும் வியாபாரத் தொழில்களில் ஈடுபட்டுவந்தனர். பாலிநகரைப் பொறுத்தவரை அது 1999ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அதிகளவு மக்கள் தொகையை கொண்டிருந்தது. அம்மக்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், மாங்குளம் போன்ற பல்வேறு பகுதிகளிலுமிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து வந்தவர்களாவர். பாலிநகர்ச் சந்தி இக்காலப் பகுதியில் சிறு நகரப்பண்பு கொண்டதாகவும், அதிக மக்கள் செறிவைக் கொண்டதாகவும் காணப்பட்டது.



03.11.1999 அன்று பாலிநகர் மக்கள் தமக்கு நடக்கவிருக்கும் அவலத்தை அறியாதவர்களாக தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அன்று காலை பாலிநகர்ச் சந்தியில் மக்கள் தமது பல்வேறுபட்ட தேவைகளுக்காகக் கூடிநின்ற போது. காலை 11.30 மணியளவில் விமானப்படையின் "கிபிர்" விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை நடத்தின. பாலிநகர்ச் சந்தியில் விமானம் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டுவிட்டது என்பதை அறிந்த மக்கள், தமது உறவினர்களைத் தேடித் தாக்குதல் நடந்த இடத்துக்கு ஓடிச்சென்று கொண்டிருந்தபோது அம்மக்கள் மீதும் "கிபிர்" விமானங்கள் மீண்டும் தாக்குதலை நடத்தின. அன்றைய விமானத் தாக்குதலில் ஆறு பொதுமக்கள் உடல் சிதறி உயிரிழந்ததுடன், எட்டுப் பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. பெருமாள் சுரேஸ்குமார் மாணவர் 18
02. வீரையா துரைராசா - 55
03. தாமோதரம்பிள்ளை கிருஸ்ணராசா - 60
04. வைத்திலிங்கம் சுதாகர் - 17
05. கிருஸ்ணராசா ஜெயசீலன் - -
06. குமாரவேலு புண்ணியலிங்கம் - 41


## 113. மடுத்தேவாலயம் படுகொலை – 20 நவம்பர் 1999



இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகவும், புனித யாத்திரைத் தலமாகவும் மடுத்தேவாலயம் விளங்குகின்றது. மன்னார் மாவட்டத்தில் மடுப்பிரதேச செயலர்பிரிவில் இத்தேவாலயம் அமைந்துள்ளது.

இலங்கையின் அனைத்துப் பகுதியிலிருந்தும் இனமத வேறுபாடின்றி மக்கள் வந்து தரிசிக்கின்ற ஒரு புனிதத் தலமாக மடுத்தேவாலயம் விளங்குகின்றது. 1990ஆம் ஆண்டைத் தொடர்ந்து வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடம் எனக் கருதி மடுமாதா திருப்பதியில் தஞ்சம் புகுந்தனர்.

1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இருபதாம் திகதி பாலம்பிடடி சின்னப்பண்டிவிரிச்சான் காட்டுப் பகுதியூடாக மடுநோக்கி முன்னேறிவந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு முன்னேறினார்கள் இதனால் பாலம்பிட்டி, தட்சணாமருதமடு மக்களும் இடம்பெயர்ந்து மடுப் பிரதேசத்திற் தங்கியிருந்தார்கள். பாலம்பிட்டிப் பிரதேச மக்களை இராணுவத்தினர் கட்டாயப்படுத்தி மடுத் தேவாலயத்திற் தங்கவைத்தார்கள்.



பெரியபண்டிவிரிச்சானிற் தங்கியிருந்த படையினர் இரவு 9.45 மணியளவில் டாங்கிகளிலிருந்து எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். முதல் இரண்டு எறிகணைகளும் மடுத் தேவாலயத்திற்கு முன்னிருந்த ஆலமரத்தில் பட்டுச் சிதறியது. இதனால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. மூன்றாவது எறிகணை மடுத்தேவாலயத்தின் இருதய ஆண்டவர் ஆலயத்தின் மீது வீழ்ந்து வெடித்தது. அப்போது அந்த ஆலயத்தினுள்ளிருந்த குழந்தைகள், இளைஞர்கள், யுவதிகள், முதியவரென முப்பத்தொரு பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தாகள். அறுபதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

காயமடைந்த மக்களில் ஒன்பது பேர் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் உயிரிழந்தார்கள். இறந்தவர்களில் இருபத்தேழு பேரின் உடல்களைத் தேவாலய ஆயர் வைத்திய அதிகாரிகள் முன்னிலையில் மன்னார் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று விசாரணையின் பின் மீண்டும் மடுத்தேவாலயத்திற்கு எடுத்துவந்து மடு சேமக்காலையில் அடக்கம் செய்தார். இராணுவத்தினரால் மேறகெ காள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் சேதமடைந்த மண்டபம் இன்றும் அப்படியே உள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த்த தெய்வசேகரம் அமரசிங்கம் கூறுகையில்,

*"அன்றைய தினம் 6.30 மணிக்குப் பின்னர் அப்பகுதியெங்கும் சரமாரியான துப்பாக்கிச் சத்தமும் எறிகணைவீச்சுச் சத்தமும் கேட்டவண்ணமிருந்தது. மக்களனைவரும் ஆலயத்தில் உறங்கிக்கொண்டிருந்த வேளை சரியாக இரவு 9.15 மணியிருக்கும் முதலாவது எறிகணை திருக்குடும்ப கன்னியர் மடத்தில் விழுந்து வெடித்தது. அடுத்த எறிகணை ஆலயத்தின் முன் நின்ற ஆலமரத்தில் விழுந்து வெடித்தது. அதன்பின்னர் கடைசியாக ஏவப்பட்ட எறிகணை நான் இருந்த இடத்திற்கு மேலிருந்த இரும்புக் கம்பியில் வீழ்ந்து வெடித்தது. இதன்போது என்னைச் சுற்றியிருந்த எனது அம்மாவான சந்திரசேகரம் பூமணி, அக்காவான அம்பிகாவதி, இவரின் மூத்தமகனான கஜானன் மற்றும் பெரியப்பாவின் மகன்-மனைவி மற்றும் மகள்-கணவர் உட்பட பல உறவினர்கள் இறந்திருந்தார்கள்.*

*இதன்போது நாற்பத்தைந்து பேர்வரை இறந்தும் எழுபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் வரை காயமடைந்தும் இருந்தார்கள். இவ்எறிகணைத் தாக்குதலின் பின்னர் வேறெந்த வெடிச்சத்தமும் இல்லாமல் ஒரே அமைதியாகக் காணப்பட்டது. எங்கள் மேல் வீசப்பட்ட எறிகணைகள் அனைத்தும் தேவாலயத்திற்கு முன்னாலிருந்த மடு அரச செயலகத்திலிருந்த இராணுவத்தினர் ஏவியதை நான் உட்பட பல மக்கள் கண்டோம். இதில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர்*

பண்டிவிரிச்சானிலிருந்த ஒரு மதுபானச்சாலையை உடைத்து அங்கிருந்த மதுவை அருந்திய பின்னரே இச் செயலைச் செய்துள்ளனர். இச்சம்பவம் நடைபெற்ற பின்னர் எனது அண்ணாமார் ஏனையோர்களின் உதவியுடன் இரவு 1.00 மணியளவில் என்னை இராணுவத்தினரின் வாகனத்தில் ஏற்றி வவுனியா வைத்தியசாலையில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். அதன்பின்னர் மயக்கமுற்ற நான் இருபத்தைந்து நாட்களுக்குப் பின்னர்தான் பழையபடி எனது சுயநினைவைப் பெற்றேன்."

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூரியகுமார் சுகந்தன் விவசாயம் 22
02. சூரியகுமார் சுகந்தி வீட்டுப்பணி 23
03. இந்திரமோகன் தட்சாயினி மாணவி 13
04. நிக்கலஸ்யூட் யாழினி ஆசிரியை 25
05. நவரட்ணம் இராசேஸ்வரி வீட்டுப்பணி 58
06. கனகரத்தினம் வாரித்தம்பி கமம் 54
07. காளிதாசன் செல்வகுமாரி வீ.பணி 22
08. கிரேசு செல்வராஜா விவசாயம் 39
09. கருணைராசா சுபாஸ்கர் மாணவன் 15
10. கருணைராசா தெய்வானை வீட்டுப்பணி 49
11. குணவீரசிங்கம் யோகேஸ்வரி வீ.பணி 22
12. குணவீரசிங்கம் லோகேஸ்வரி மாணவி 10
13. குணவீரசிங்கம் சுகன்யா - 9
14. குணவீரசிங்கம் சுவேனியா மாணவி 20
15. தர்மலிங்கம் தர்மநீதன் மாணவன் 10
16. தர்மலிங்கம் சாந்தகீதன் குழந்தை 4
17. தம்பாப்பிள்ளை திசவீரசிங்கம் விவசாயம் 46
18. திசைவீரசிங்கம் மதிராஜ் குழந்தை 3
19. திசைவீரசிங்கம் அம்பிகாவதி வீட்டுப்பணி 37
20. முனியாண்டி உதயகுமார் விவசாயம் 22
21. முனியாண்டி செல்வம் வீ.பணி 55
22. முத்தையா சிவானந்தம் கமம் 26
23. ஜெயராம் ஜெயசீலன் மாணவன் 18
24. செல்வராசா நிறாஜ் மாணவன் 9
25. செல்வராசா ரதன் மாணவன் 12
26. வேலுப்பிள்ளை தர்மலிங்கம் - 44
27. ந்திரமோகன் பபிதரன் மாணவன் 6
28. சந்திரமோகன் சுஜிதரன் மாணவன் 9
29. சந்திரமோகன் சுதாகரன் மாணவன் 9
30. சந்திரசேகரம் பூமணி வீ.பணி 61
31. சதாசிவம் ஜமுனன் - 21
32. சிவானந்தம் சுகந்தினி வீ.பணி 22
33. சிறிபாஸ்கரன் மைந்தினி குழந்தை 3
34. வாரித்தம்பி பவானி மாணவி 17
35. ஏகாம்பரம் ராமேஸ்வரி வீ.பணி 52

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயா் தொழில்)

01. சூரியகுமார் செல்வராணி வீட்டுப்பணி 43
02. இளையதம்பி உருக்குமணி - -
03. இராமசாமி கேதீஸ்வரன் - 24
04. இராமலிங்கம் இந்திராணி - 17
05. இராமலிங்கம் தனலட்சுமி - 52
06. இரத்தினம் நவரத்தினராசா - 46
07. இரத்தினம் தனேஸ்வரன் - 29
08. இரத்தினம் விஜயலட்சுமி - 17
09. இரத்தினம் ரங்கம்மா - 55
10. ஈஸ்வரி - -
11. உதயசீலன் - -
12. நிர்ந்தன் - -
13. நவரத்தினராசா துஸ்யந்தினி குழந்தை 3
14. நவரத்தினராசா தயாளினி குழந்தை 4
15. நவரத்தினராசா மனோரஞ்சிதம் - 43
16. நவரத்தினராசா அகதீஸ்வரி - 19
17. நவரத்தினராசா சந்திரகாந்தன் மாணவன் 11
18. கஜன் குழந்தை 3
19. கனகரட்ணம் குமுதினி மாணவி 13
20. கந்தசாமி - -
21. கார்த்திக் குமரன் - -
22. கார்த்திக் சத்தியா - -
23. கார்த்திக் சிவபாதமலர் - -
24. கதிரவேலு சூரியகுமார் - -
25. குமாரசாமி கேதீஸ்வரன் கமம் 26
26. கிறஸ்ரி ரஞ்சினி வீட்டுப்பணி 37
27. பூபாலசிங்கம் முகிலன் மாணவன் 9
28. பூபாலசிங்கம் முத்துப்பிள்ளை வீட்டுப்பணி 40
29. பாலசுந்தரம் - -
30. பவித்திரா - -
31. பரமேஸ்வரி - -
32. தயாநிதி மாணவி 10
33. தனுசன் - -
34. தர்மலிங்கம் உதயகீதா மாணவி 11
35. தர்மலிங்கம் குமுதகீதன் மாணவன் 6
36. தர்மலிங்கம் கமலாதேவி - 33
37. திருக்குமரன் - -
38. மல்லிகாதேவி - 34
39. அம்பிகா - -
40. அழகன் செல்வம் - 43
41. ஜோன் திவாகரன் மாணவன் 13
42. யோகராசா நாகேந்திரன் - -
43. யோகராசா பகீரதன் - -
44. கோகுலசாரதி - 59
45. கேதீஸ்வரன் டினோசன் குழந்தை 3
46. கேதீஸ்வரன் ஜெயந்திமலர் - 29
47. பெருமாள் ரவி - -
48. மோகன் பஜாணன் மாணவன் 9

49. செல்வன் கஜன் குழந்தை 4
50. செல்லத்துரை சிவராசா கமம் 38
51. செல்லத்துரை ராதாகிருஸ்ணன் - 36
52. சுஜி - -
53. சந்திரசேகரம் அமரசிங்கம் - 35
54. சுகந்தினி - -
55. சத்தியவாணி - -
56. சதானந்தம் - -
57. சறோஜினி - 32
58. சிந்துஜா - -
59. சிவபாதசுந்தரம் கமலநாயகி வீட்டுப்பணி 38
60. சிவமலர் - 28
61. சிவசக்தி - -
62. சிவராசா மல்லிகாதேவி வீட்டுப்பணி 35
63. சிவராசா வரம்சவல்லி மாணவன் 10
64. சிறிபாஸ்கரன் கௌசல்யா - -
65. சிறிபாஸ்கரன் சயந்தா - -
66. சிறிபாஸ்கரன் சங்கீதா - -
67. சிறிபாஸ்கரன் - 29
68. சிறிபாலசுந்தரம் - 50
69. சிறிதரன் - -
70. வள்ளுவன் - -
71. ரவி - -
72. எஸ்.சதானந்தன் மாணவன் 13
73. ஏகாம்பரம் சிவராஜ் - -
74. எப்.உதயசுதா மாணவி 12

## 114. பிந்துனுவேவ படுகொலை – 25 அக்டோபர் 2000

விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர் என்போருக்காக இயங்கி வந்த மூன்று புனர்வாழ்வு நிலையங்களுள் பிந்துனுவேவ புனர்வாழ்வு நிலையமும் ஒன்று. கணிசமான வெளிநாட்டு நிதியுதவியுடன் இதை சிறீலங்கா அரசே நடத்திவந்தது. முன்னாள் விடுதலைப்புலிகள் அங்கத்தவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் ஒரு மாதிரி நிலையமாக இது காட்டப்பட்டு சீறீலங்கா அரசு இதன்மூலம் நிறைய சிறப்புப்புள்ளிகளைக் பெற்றிருந்தது.

25.10.2000அன்று இரவு, 60 காவல்துறை அதிகாரிகள் பாதுகாப்புக்கடமையில் நின்றிருக்க, சிங்களக்காடையர்குழு ஒன்று இந்தப் புனர்வாழ்வு நிலையத்தினுள் புகுந்து அங்குள்ளவர்களைப் படுகொலைசெய்தது. இங்கிருந்த 28 பேர் கொல்லப்பட்டு 14 பேர் படுகாயமும் அடைந்தார்கள். சிறீலங்கா மனித உரிமை ஆணைக்குழுவாலும் ஜனாதிபதி ஆணைக்குழுவாலும் (PCI) இரண்டு விசாரணைகள் ஒன்றன்பின் ஒன்றாக நடத்தப்பட்டன. ஒரு நீதிமன்ற விசாரணையும் தொடங்கப்பட்டு 2005ம் ஆண்டில் முடிவுற்றது. இறுதியில் எந்தக் குற்றத்திற்காகவும் எவருக்கும் தண்டனை வழங்கப்படவில்லை.

***படுகொலைகளிலிருந்து தப்பியவர்கள் சிறீலங்கா மனித உரிமை ஆணைக்குழுவிற்கு தெரிவித்தது:***

அக்டோபர் 24ம் திகதி அன்று தலைமை பொறுப்பாளருக்கு சில முறைப்பாடுகள் கொடுக்கப்பட்டன. தமக்கு வந்த கடிதங்களையும் தொலைபேசி அழைப்புக்களையும் தம்மிடம் வழங்கப்படவில்லை என்றும் தாம் ஒரு வருடத்திற்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் முறைப்பாடுகள் கொடுக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து சூடான விவாதங்கள் சில இடம்பெற்றன. தடுத்து வைக்கப்பட்டிருந்தோரை அமைதியடையச் செய்வதற்காக் காவல்துறை அதிகாரி ஒருவர் வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். இதன் பின்னர் நிலைமை அமைதியடைந்து தடுத்துவைக்கபட்டவர்கள் படுக்கைக்குச் சென்றார்கள்.

அடுத்தநாள் காலை அவர்கள் எழுந்த போது அங்கு பெரிய கூட்டம் நிற்பதையும் அதிகளவிலான காவல்துறையினர் வெளியில் நிற்பதையும் கண்டனர். அந்தக் கூட்டம் இவர்களைத் தாக்கத் தொடங்கியதுடன் அவர்கள் வசிப்பிடத்திற்கும் தீ வைத்தது. தடுத்துவைக்கப்பட்ட 28 தமிழர்கள் இறந்ததுடன் 14 பேர் இக்கொலைச் சம்பவத்தின் முடிவில் காயமடைந்தனர். 19 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டன. 9 பேரின் உடல்கள் அடையாளம் காணமுடியதவாறு எரிகாயங்கள் ஏற்பட்டிருந்தன.

***சிறீலங்கா மனித உரிமை ஆணைக்குழுவின் 1 நவம்பர் 2000 இடைக்கால அறிக்கை***

சிறீலங்கா மனிதவுரிமை ஆணைக்குழுவின் இந்த அறிக்கை அதன் தலைப்பில் குறிப்பிட்டபடி இன்னொரு அறிக்கை தொடர்ந்து வரும் என்பதை குறிப்பாக உரைத்த போதிலும் அப்படி வேறெந்த அறிக்கையையும் ஆணைக்குழு இது விடயம் தொடர்பில் வெளியிடவில்லை. இந்த அறிக்கையில் குறிப்பிட்ட முக்கிய விடயங்கள்:

1. தாக்கப்பட்டபோது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடியவர்களில் ஒருவர் காவல்துறை அதிகாரிகளால் சுடப்பட்டார். அவரது உடலில் மூன்று குண்டுகள் பாய்ந்த காயம் இருந்தது. தப்பியவர்களில் ஒருவர் சுடப்பட்டதன் காரணமாக 2 விரல்களை இழந்திருந்தார்.

2. சம்பவம் இடம்பெற்ற வேளை கடமையில் இருந்த 60 காவல்துறை அதிகாரிகளும் இந்தப்படுகொலையைத் தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்காக மனித உரிமை ஆணைக்குழு அவர்கள் மீது எந்தவொரு பாரிய குற்றச்சாட்டையும் போடாமல் பதிலாக கடமையை அலட்சியம் செய்ததார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை மட்டுமே சுமத்தியது.

3. தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்கள் முறைப்பாடு செய்ததற்கும் அவர்கள் தாக்கப்பட்டதற்கும் இடைப்பட்ட நேரத்தில் அவர்களுக்கெதிராக ஆயத்தங்கள், சுவரொட்டிப்பிரசாரங்கள் கணிசமான அளவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

***ஜனாதிபதி விசாரணைக்குழுவின் அறிக்கை***

மார்ச் 2001 இல் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு 2002 இன் ஆரம்பத்தில் ஜனாதிபதியிடம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. இது ஒருபோதுமே பகிரங்கப்படுத்தப்படவில்லை. இவ்வாணைக்குழுவிற்கு இவ்விசாரணைக்காக கொடுக்கப்பட்ட ஆணையில் நீதிமன்ற விசாரணைக்கான தேவைகள் ஆராய்வது பற்றி எதுவும் கூறப்படவுமில்லை. இதுபற்றி எழுதப்பட்ட வேறு சில கட்டுரைகளில் இவ்வறிக்கையின் சில பகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

முகாமில் இடம்பெற்ற முறைப்பாடுகளுக்கும் அதன்பின்னரான வன்முறைகளுக்கும் இடையிலான 12 தொடக்கம் 14 மணித்தியாலக் காலத்தில் நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதல் ஆயத்தங்கள் நடந்ததனை இந்த ஆணைக்குழு கண்டறிந்துள்ளது.

வெளியில் நின்ற கும்பல் முகாமுக்குள் இருந்தவர்கள் மீது கல்லெறிந்து வன்முறையைத் தொடக்கியது. முகாமினுள் இருந்தவர்கள் இந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்குப்பதிலாக அங்கிருந்த காஸ் சிலிண்டர் ஒன்றை வெடிக்கவைத்துள்ளனர். இது அந்தக் கும்பலை முதலில் பயமுறுத்தினாலும் இறுதியில் அதன் வன்முறையை மேலும் அதிகரிக்கச்செய்தது. காவல்துறை பார்த்துக்கொண்டிருக்க கும்பல் முகாமினுள் நுழைந்தது என்பவற்றை ஆணைக்குழு கண்டறிந்ததுள்ளது.

அங்கு நிலைகொண்டிருந்த காவல்துறையினரின் தவறுகள் பற்றி எதுவித சந்தேகத்துக்கும் இடமில்லை. அங்கு நிலைகொண்டிருந்த இரண்டு மூத்த காவல்துறை அதிகாரிகளான ASP தயாரத்னவையும் HQI செனிவிரத்னவையும் பல தவறுகளுக்காக ஆணைக்குழு கடுமையாக விமர்சித்தது. இறுதிநேரத்தில் கூட முகாமில் இருந்தவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருக்கலாம் என்றும் ஆணைக்குழு அறிவித்தது.

*வழக்கு விசாரணை*

குற்றப்புலனாய்வு திணைக்களம் (CID) தனது தனிப்பட்ட விசாரணையைத் மேற்கொண்டது. அதில் 41 சந்தேக நபர்கள் குற்றம் சாட்டப்பட்டனர். இதில் 10 பேர் காவல்துறை அதிகாரிகள். பல மட்டங்களிலும் இந்த விசாரணையில் குறைகள் இருந்தன. அவையாவன:

1. வன்முறைக் கும்பல் முகாமினுள் நுழைய முன்பே வன்முறைக்கான ஆயத்தங்கள் நடந்ததாக இரண்டு விசாரணைகளில் குற்றம் சாட்டப்பட்டிருந்தும் இப்படுகொலையை "திட்டமிட்டு நடத்தியது" பற்றிய விசாரணைகள் ஏதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

2. காவல்துறையினர் அங்கு கடமையில் நின்றுகொண்டிருந்தபோது இப்படுகொலை இடம்பெற்றது குறித்துக் காவல்துறையினரின் மேல் எதுவித குற்றச்சாட்டும் வைக்கப்படவில்லை. அத்துடன் தாக்குதலிலிருந்து தப்ப முற்பட்டவர்களின் மேல் காவற்துறையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததும் விசாரணைக்குட்படுத்தப்படவில்லை.

3. திட்டமிடப்பட்ட முறையில் சாட்சியங்கள் இல்லாதொழிக்கப்பட்டன. கொல்லப்பட்ட ஒருவரின் உடலில் பாய்ந்திருந்த சன்னமொன்று அகற்றப்பட்டிருந்தது. ஆனால் அது ஆதாரமாக சாட்சிப் படுத்தப்படவில்லை.

4. இரண்டு உயர் அதிகாரிகள் விசாரணையின்போது தெளிவாக அடையாளம் காட்டப்பட்ட போதும் எந்தக் குற்றங்களுக்காகவும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நடவடிக்கை எடுக்கப்பட்ட காவல்துறையினர் நடுத்தர, அடிமட்ட காவல்துறையினராகவே இருந்தனர்.

5. சந்தேக நபர்கள் மீது சாட்டப்பட்ட குற்றம் கொலை, கொலைசெய்ய முயற்சி என்பதாவே இருந்தது. குற்றவாளி என்று நீதிமன்றில் நிர்ணயிப்பதற்கு கூடிய சாத்தியமாக இருந்த குறைந்த குற்றங்கள் எதற்காகவும் எவரும் கூண்டில் நிறுத்தப்படவில்லை.

சிறீலங்காவின் நீதி இக்குற்றவாளிகளை அப்பட்டமான இக்குற்றச் செயல்களிலிருந்து விடுதலைபெற அனுமதித்துள்ளது. இப்படி நடப்பது இதுதான் முதல் முறையல்ல. தமிழருக்கெதிரான குற்றச்செயல்களைப் புரிந்த பாதுகாப்புத் துறையினரை தண்டிப்பதில் சிறீலங்காவின் நீதி தவறுவது ஒரு மிக நீண்டகால வரலாறாகும்.

## 115. மிருசுவில் படுகொலை - 19 டிசம்பர் 2000



யாழ். மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரதேசத்தில் "படித்த மகளிர் குடியேற்றத்திட்டம்" என்று சொல்லப்படுகின்ற மிருசுவில் கிராமம் அமைந்துள்ளது. முகமாலைப் பகுதியிலிருந்து யாழ். நகர்நோக்கி மேற்குப் புறமாக மூன்று கி.மீ. தூரத்தில் மிருசுவில் கிராமம் அமைந்துள்ளது. 2000ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தென்மராட்சியின் பல பாகங்களிலும் கடுமையாக நடந்த சண்டைகளால் தென்மராட்சிப் பகுதி மக்களிற் பெரும்பாலானோர் வடமராட்சியின் பல இடங்களுக்கு இடம்பெயர்ந்திருந்தனர். இதில் ஒரு பகுதியினர் மிருசுவில் வடக்கு படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி கரவெட்டியில் அமைந்துள்ள நாவலர் மடப் பகுதியில் தஞ்சமடைந்திருந்தனர்.

19.12.2000 அன்று மிருசுவிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி கரவெட்டியில் தங்கியிருந்த ஒன்பது பேர் தமது வாழ்விடங்களைப் பார்வையிடச் சென்றனர். அங்கிருந்த தமது வாழ்வியலுக்குத் தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தவேளை ஒன்பது பேரையும் கைது செய்த இராணுவத்தினர் கண்களை கட்டி சித்திரவதை செய்தனர். ஒன்பது பேரில் ஒருவர் தப்பி மந்திகைப் பகுதிக்கு வந்து ஏனையவர்களின் உறவினரிடம் எட்டுப்பேரின் நிலைமையினையும் தெரிவித்தார்.

காணாமற்போனவர்களின் உறவினர்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்து அச்சம்பவத்திற் தப்பிவந்த பொன்னையா மகேஸ்வரன், மற்றும் அப்பகுதியில் கடமையில் ஈடுபட்ட இராணுவ வீரர் லான்ஸ் கோப்ரல் ஆர்.எம்.எஸ். ரத்னநாயக்காவும் கொடுத்த தகவலின் பேரில் அப்போதைய யாழ். காவற்றுறை அத்தியட்சகர் உபாலி குணசேகர, உதவிக் காவற்றுறை அத்தியட்சகர் நிமல் ஸ்ரீநாத், சாவகச்சேரி நீதவான் அன்னலிங்கம் பிரேம்சங்கர், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை ஆகியோர் முன்னிலையில் அடையாளம் காட்டப்பட்ட மனிதப் புதைகுழி 25.11.2000 அன்று மாலை 3.30 மணியளவில் தோண்டப்பட்டது. புதைகுழி தோண்டும் போது இரண்டு அடி ஆழத்தில் சடலங்கள் தென்பட்டன. அப்பகுதியிற் காணாமற்போன எட்டுப் பேரது உடல்களும் வெட்டப்பட்டு, கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன.

மிருசுவில் சம்பவம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கீழ் வருமாறு 29.12.2000 வீரகேசரி நாளிதளுக்கு கூறினார்,

*"தப்பி வந்த பொன்னையா மகேஸ்வரனும், லான்ஸ் கோப்ரல் ஆர்.எம்.எஸ். ரட்ணாயக்காவும் அடையாளம் காட்டிய எழுதுமட்டுவாள் பகுதியிலிருந்த மனிதப் புதைகுழியைத் தோண்டியபோது இரண்டடி ஆழத்தில் மனிதனின் முழங்கை ஒன்று தென்பட்டது. அதைச்சுற்றி மண்ணை அவதானமாக அப்புறப்படுத்திய வேளை மரக்கட்டை காணப்பட்டது. மனித சடலத்தின் தலை ஒன்றும் காணப்பட்டது. அதை அவதானமாக எடுத்தபோது இருபத்தொரு வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் காணப்பட்டது. இச்சடலம் சிவப்பு வெள்ளை நிறச்சாறியினால் சுற்றப்பட்டிருந்தது. இரண்டாவதாகச் சிறுவனின் சடலம் எடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து மேலும் சடலங்கள் எடுக்கப்பட்டன. சிறுவனின் சடலம் மேற்றோல் உரிந்து*

ரோஸ் நிறமாகக் காணப்பட்டது. கூரிய ஆயுதத்தால் குரல் வளைகள் வெட்டப்பட்ட நிலையிலும், கால், தலை துண்டிக்கப்பட்ட நிலையிலும் சடலங்கள் காணப்பட்டன."

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சின்னையா வில்வராசா கமம் 41
02. செல்லத்துரை தெய்வகுலசிங்கம் கமம் 21
03. வில்வராசா பிரசாத் மாணவன் 05
04. வில்வராசா பிரதீபன் - 15

## இங்கேயும் பொழிகிறது மழை ஆனால் குண்டுகளாக

22 பெப்ரவரி 2002இல் ஒப்பமிட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்துடன் தொடங்கிய காலப்பகுதி தன்னோடு பல மாற்றங்களை கொண்டுவந்தது. ஆனால் வடகிழக்கு தமிழ் மக்கள் அந்த ஒப்பந்தத்தின் மூலம் ஏதேனும் பயனைப் பெற்றார்களா? அதிகபட்சம் அது ஒரு போரும் சமாதானமும் அற்ற காலப்பகுதியே. இரண்டு வருடங்களில் தடைப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளுடன் நிலைமை மீண்டும் மோசமடையத் தொடங்கியது.

எனினும் இந்தச் சிறிய இடைவெளியில் தீவின் வடகிழக்கில் மனித உரிமைப் பொறிமுறைகளை வலுப்படுத்த ஒரு சாளரம் திறந்தது. அதுவரையில் பல வருடங்களாக எதேச்சதிகார ஆட்சியினில் அரக்கத்தனமான அவசரகால விதிமுறைகள், பயங்கரவாத தடைச்சட்டம் போன்றவற்றின் கீழ் வாழ்ந்த தமிழ் மக்கள் மனித உரிமை மட்டுமல்ல வாயைத்திறக்கவே பயந்திருந்தனர். இந்தச் சிறிய இடைவெளியைப் பயன்படுத்தி ஏற்கனவே வடகிழக்கில் பல பகுதிகளில் பிரஜைகள் குழுக்களில் பணிபுரிந்த சில ஆன்மிகத் தலைவர்கள், கல்விமான்கள், சட்டவாளர்கள், பாராளுமன்ற பிரதிநிதிகள், சட்ட உதவுனர்கள், தொழில் சங்கள் பிரதிநிதிகள் கிளிநொச்சியை தலைமையகமாகக் கொண்டு வடகிழக்கு மனித உரிமைச் செயலகத்திளை (NESOHR) நிறுவினர். NESOHR 9 யூலை 2004இல் அதிகாரபூர்வமாகச் செயற்படத் தொடங்கியது.

துரதிஸ்டவசமாக NESOHR அங்கத்தினர் தமது சட்ட பூர்வமான உரிமையினை பயன்படுத்தி மனித உரிமை நிறுவனம் ஒன்றினை அமைப்பதற்காக கொடுத்த விலை பெரிது.

8 பெப்ரவரி 2005 இல் அம்பாறை மாவட்ட பிரதிநிதியும் முன்னைநாள் பாராளுமன்ற பிரதிநிதியுமான சந்திர நேரு அவர்கள் அரசபடை, அவர்களுடன் சேர்ந்து இயங்கிய ஒட்டுப்படையினால் படுகொலை செய்யப்பட்டார்.

25 டிசம்பர் 2005 இல் மட்டகளப்பு புனித மேரி பேராலயத்தினுள் இறைவணக்கத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை கொடூரமான முறையில் அரசபடையினருடன் செயல்படும் ஒட்டுப்படையினரால் எமது நிறுவனப் பிரதிநிதியும் பாராளுமன்ற அங்கத்தவருமான ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

20 ஏப்ரல் 2008இல் எங்கள் நிறுவனத் தலைவர் வணக்கத்துக்குரிய அருட்தந்தை மரியாம்பிள்ளை சேவியர் கருணாரத்தினம் அவர்கள் சிறீலங்கா இராணுவத்தின் ஆழ ஊடுருவல் படையினரால் தமது ஆலயத்துக்கு அண்மையில் கொலை செய்யப்பட்டார்.

எமது பிரதிநிதிகள் மூவர் கொலைசெய்யப்பட்டுவிட்டனர் வேறு சில பிரதிநிதிகள் கொலைப்பயமுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ளனர். இவர்கள் செய்த குற்றம் ஒரு நியாயமற்ற, நீதியற்ற, பிழைத்துவிட்ட அரசினால் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்ததே.

சமாதான முயற்சிகளுக்குப் பின்னரான காலப்பகுதியில் இடம் பெற்ற மனிதப் படுகொலை இனப்படுகொலையாக மாறியது. பின்னர் நடந்தது மனதினில் வடுவினைப் பதித்துவிட்ட வரலாறு.

## 116. பேசாலை படுகொலை - 23 டிசெம்பர் 2005




மன்னார் மாவட்டத்தில் இலங்கை அரசபடைகளின்மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலை அடுத்து படையினர் தமது கொலைவெறியாட்டத்தைப் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டனர். தம்மைத் தாக்குவோரை அடையாளம் காணமுடியாத படையினர், வன்முறைகளை பொதுமக்கள் மீது திணிப்பது இதுதான் முதற்தடவையல்ல. காலங்காலமாக தமக்கேற்படும் இழப்புக்களுக்காக பொதுமக்களையே இவர்கள் பழிதீர்த்து வருகின்றனர். அவ்வாறே 23.12.2005 அன்றைய மன்னார்ச் சம்பவமும் அமைந்துள்ளது.

அன்றையதினம் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து படையினரால் சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்று நடத்தப்பட்டது. அப்போது இரு குடும்பங்களைச் சேர்ந்த நான்கு வயதுக் குழந்தை உட்பட நாலு பேரை இராணுவத்தினர் கடத்திச் சென்றனர். இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட நாலுபேரும் 100 வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் எரியூட்டப்பட்ட சடலங்களாகக் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. திரேசா, 40
02. இம்மானுவேல் குரூஸ், 38
03. குரூஸ் அந்தோனியம்மா, 38
04. குரூஸ் டிலக்சன், 04

## 117. திருகோணமலை தமிழ் மாணவர் படுகொலை - 02 ஜனவரி 2006

திருகோணமலை டொக்யார்ட் வீதி, பெரிய கடற்கரைச் சந்தியிலுள்ள காந்தி சிலைக்குச் அருகாமையாக மாலைப் பொழுதில் தினமும் இளைஞர்கள் நின்று கதைப்பது வழக்கம். 02.01.2006 அன்றைய மாலைப் பொழுதும் மாணவர்கள் பலர் அவ்விடத்தில் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்தனர். அப்போது ஆட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் அந்த இளைஞர்கள் மீது கைக்குண்டை வீசிவிட்டுக் கோட்டைப் பக்கமாகச் சென்றனர். கைக்குண்டு வெடித்ததில் திருமலை புனிதஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா


பூங்குழலோன் என்பவர் காயமடைந்தார். இவரை ஏனைய மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல முற்பட்டபோது அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் அங்கு சுமார் 10 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடத்தொடங்கினர். இதற்கிடையில் காயமடைந்த மாணவர்களுக்கு அருகில் விரைந்த கடற்படையினர் அவர்களை நிலத்தில் விழுத்தி கண்மூடித்தனமாகத் தாக்கினர். மாணவர்கள் இச்சம்பவம் பற்றி தமக்கு ஏதும் தெரியாது எனக் கூறியபோதும் மாணவர்களைச் சப்பாத்துக் கால்களால் மிதித்துக் கண்மூடித்தனமாக சுடத்தொடங்கினர். இத்தகைய காட்டுமிராண்டித் தனமான தாக்குதலில் 05 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 05 மாணவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.



இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. லோகிதராசா ரோகான், 20
02. சண்முகராஜா சஜீந்திரன், 19
03. மனோகரன் வசீகர், 21
04. தங்கத்துரை சிவானந்தன், 20
05. யோகராஜா கேமச்சந்திரன், 22

## 118. மானிப்பாய் படுகொலை - 14 ஜனவரி 2006



யாழ்ப்பாணம் மானிப்பாய்ப் பகுதிக்கு வெள்ளை வானில் வந்த ஆயுதக்கும்பல் ஒன்றினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு முன்பாக உள்ள செல்லமுத்து கனகசபாபதி வீதியில் அமைந்துள்ள நாகேந்திரம் போஜன் என்பவரின் இல்லத்தில் இந்தப் பயங்கரம் நிகழ்ந்திருக்கின்றது. நள்ளிரவு தாண்டி சற்று நேரத்தில் வெள்ளை வான் ஒன்றில் சிவில் உடையில் வந்த ஒன்பது பேர் அடங்கிய குழுஒன்று வீட்டில் உறக்கத்தில் இருந்தவர்களை குரல்கொடுத்து எழுப்பியிருக்கின்றது. தங்களை இராணுவத்தினர் என்று தெரிவித்து வீட்டை சோதனையிடப் போவதாகக் கூறிய அக்குழுவினர் வீட்டிலிருந்த அனைவரையும் வெளியே வருமாறு அழைத்தனர். பீதியடைந்த குடும்பத்தினர் வெளியே வந்தபோது அவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. தந்தை, தாய், மகன், மகள்கள் இருவர், மருமகன் என ஏழு பேர் அவ்வீட்டில் இருந்தனர். ஆயுதபாணிகள் முதலில் மகள் ஒருவரையும் பின்னர் தாய் மற்றும் ஏனையோரையும் நோக்கிச் சுட்டுள்ளனர். இந்த வெறியாட்டம் முடிந்து சிறிது நேரத்தில் இனந்தெரியாத அக்குழுவினர் வானில்ஏறித் தப்பிச்சென்றுவிட்டனர். உயிரிழந்த மூத்தமகள் ரேணுகாவின் கணவரான தியாகேஸ்வரன் காயம் ஏதுமின்றி தப்பினார். சம்பவம் நடந்த வீட்டு உரிமையாளரான நாகேந்திரம் போஜன் இலங்கை காங்கேசன்துறை சாரண ஆணையாளராக நீண்ட காலம் சேவையாற்றியவர். அத்துடன் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி படைப்பிரிவு வடபிராந்திய ஆணையாளராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. போஜன் அர்த்தநாரீஸ்வரி, 51
02. தியாகேஸ்வரன் ரேணுகா, 30
03. போஜன் சண்முகா, 24

## 119. தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்தல் - 29 ஜனவரி 2006



2006 ஜனவரி மாதம் 29ஆம், 30ஆம் நாட்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10 பணியாளர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பொலநறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தப் பிரதேசத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டனர். அவ்வேளையில் அவர்கள் மட்டக்களப்பு அலுவலகத்திலிருந்து கிளிநொச்சியிலுள்ள அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்தார்கள். ஒரு சில நாட்களின் பின்னர் இரு பெண்கள் விடுதலை செய்யப்பட்டனர். இன்னொரு பெண்ணான எஸ்.டோசினி என்பவரும் கடத்தல்காரர்களால் விடுதலை செய்யப்பட்டார். ஏனைய ஏழு பணியாளர்களும் இற்றைவரை காணாமலே போயுள்ளனர். இவர்களை விடுதலை செய்யுமாறு 2006ஆம் ஆண்டு மார்ச்மாதம் 10ஆம் நாள் சர்வதேச மன்னிப்புச் சபை ஓர் அவசர வேண்டுகோளை விடுத்திருந்தது.

இந்தப் படுகொலையானது இந்தியாவினுடைய நீதிபதி ஒருவர் தலைமை தாங்கிய சர்வதேச நிபுணத்துவம் வாய்ந்த விசாரணைக்குழுவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட வேண்டுமென சிறீலங்கா அரசாங்கத்தால் தெரிவு செய்யப்பட்ட பல படுகொலைச் சம்பவங்களில் ஒன்றாகும். இந்த நிபுணத்துவக் குழுவானது 2008ஆம் ஆண்டு இந்த படுகொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணைகளில் அதிருப்தி அடைந்தவர்களாக இக்குழுவை விட்டு முற்றாகவே வெளியேறினர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் விபரம் (பெயர் வயது)

01. காசிநாதர் கணேசலிங்கம், 53
02. தங்கராசா கதிர்காமர், 43
03. தனுஸ்கோடி பிறேமினி, 25
04. தர்மராஜ் வசந்தராஜன், 24
05. சண்முகநாதன் கஜேந்திரன், 24
06. கைலாசபிள்ளை ரவீந்திரன், 26
07. அருள்நேசராசா சதீஸ்கரன், 23

## 120. திருகோணமலை இனக்கலவரம் - 12 ஏப்பிரல் 2006





திருகோணமலை மாவட்டம் 1980களிலிருந்து தமிழருக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடரும் கொதிப்பான ஒரு இடமாக இருந்து வந்திருக்கின்றது. இவ்வன்முறைகள் ஊடாக இம்மாவட்டதிதில் செறிவாக வாழ்ந்து வந்த தமிழர் அங்கிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விரட்டப்பட்டனர். சிறீலங்கா அரசால் வெளியிடப்பட்ட தீவின் மக்கள் பரவல் சார்ந்த புள்ளிவிபரங்கள் இதை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

இதே போல் 2006 ஏப்பிரல் 12ஆம் நாள் மாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து தமிழர்களுக்கு எதிராக சிங்களக் காடையர்களின் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதன்போது 10 தமிழ்மக்கள் உட்பட 15பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் 50பேர் படுகாயமடைந்தனர். மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் காயப்படுத்தப்பட்டதுடன் பெருமளவு வீடுகள், கடைகள், வாகனங்கள் எரித்து அழிக்கப்பட்டன.

1983, 1987ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் திருகோணமலை நகரில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற மிகமோசமான வன்முறையாக இது கருதப்படுகின்றது. 2006 ஏப்பிரல் 12ஆம் நாள் மாலை 4மணியளவில் திருகோணமலை நகரிலுள்ள மரக்கறிச் சந்தைப் பகுதியிலுள்ள தேங்காய்க் கடைக்கு முன்பாக குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இச்சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் ஐந்து சிங்களவரும் கொல்லப்பட்டனர்.

இந்த குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு முன்னரே மூன்று லொறிகளில் சிங்களக்காடையர்கள் திருகோணமலை நகரக்குள் கொண்டு வரப்பட்டதை தமிழர்கள் கண்டனர். இச்சிங்கள காடையர்கள் தமிழருக்குச் சொந்தமான கடைகளை கொள்ளையடித்தபின் இக்கடைகளுக்கு தீயூட்டினர். இதனால் திருகோணமலை நகரிலிருந்து பெரிய புகைமூட்டம் எழுவதைக் காணக்கூடியதாக இருந்தது. விரைவில் தமிழர் மேலான தாக்குதல்கள் ஆரம்பித்தது. இத்தாக்குதல்களுக்கு துவக்குகளும் கத்திகளும் உபயோகப்படுத்தப்பட்டன. ஏப்பிரல் மாதப் புதுவருடக் கொண்டாட்டத்திற்காக பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நகருக்கு சென்றிருந்த பல தமிழர் இத்தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

வன்முறைகள் நடைபெறுவதை அங்கு நிலைகொண்டிருந்த பல இலங்கை இராணுவத்தினர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சுதுபண்டா, 39
02. அந்தோனிராஜ் கீதநடனி, 33
03. சந்திரா மத்துவஸ், 50
04. கசுன் சமந்தா, 23
05. கந்தசாமி திரவியன், 56
06. அசங்கா மிலான், 21
07. சுசந்தா, 20
08. ரில்வான், 36
09. செல்வராஜா, 44
10. மயூரா பெதிகே சிவமணி, 30
11. பருக், 55
12. ராச்மி டிலராங்கி, 08

## 121. புத்தூர் படுகொலை - 18 ஏப்பிரல் 2006

புத்தூர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம். புத்தூரைச் சேர்ந்த கண்ணன் என்னும் முச்சக்கரவண்டி சாரதி தமது வர்ணம்தீட்டும் நண்பரை வழமையாக வேலை முடிவடைந்ததும் அவரது வீட்டில் இறக்கிவிடுவார். வழமைபோல் ஏப்பிரல் 18ஆம் நாள் தமது வர்ணம்தீட்டும் நண்பரை அவரது வீட்டில் இறக்கிவிடுகிறார். அந்த முச்சக்கரவண்டியில் மேலும் மூன்று



நண்பர்கள் உல்லாசமாக பிரயாணம் செய்வதற்காக சென்றனர். முச்சக்கரவண்டி தாண்டிச் சென்ற கடையில்நின்ற நபர்கள் அந்த வண்டி நிறைய ஐந்து நண்பர்களும் அடுக்கி ஏற்றிக்கொண்டு கடையை தாண்டி வர்ணம்தீட்டும் நண்பரை இறக்கிவிடுவதற்கு சென்றதையும், பின்பு வர்ணம்தீட்டும் நண்பரை தவிர ஏனைய நான்கு நண்பர்களும் திரும்பி சென்றதையும் கண்டிருக்கின்றார்கள். சிறீலங்கா இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளில் முச்சக்கரவாகனத்தின் பின்னால் வந்ததையும் பின்பு அதை நிறுத்தி திருப்பி அனுப்பியதையும் கடையில் நின்ற நபர்கள் கண்டிருக்கின்றார்கள். அந்தவேளையில் வேறு ஒரு நபர் சைக்கிளில் வந்து கடையடியில் இறங்கி சீனி வாங்கிக்கொண்டு முச்சக்கரவண்டி சென்ற பக்கமாக தமது வீட்டுக்குத் திரும்பிச் சென்றதையும் கண்டார்கள். இரவானதும் தமது மகன் கண்ணன் வீடு திரும்பாததால் அவரது தகப்பன் அவரை தேடிசென்றபோது மகனின் உடலத்தையும் முச்சக்கர வண்டியையும் றோட்டில் கண்டார். ஆரம்பத்தில் மிகுதி நான்கு நண்பர்களையும் தேடிப்பார்ப்பதற்காக அப்பகுதிக்குச் செல்ல சிறீலங்கா இராணுவம் எவரையும் அனுமதிக்கவில்லை. ஈற்றில் தேடிப்பார்ப்பதற்கு மக்கள் அனுமதி பெற்றுப் போனபோது நான்கு நண்பர்களினதும் கடையில் சீனி வாங்கிய நபரினதுமாக ஐந்து சடலங்களை றோட்டோரமாக இருக்கும் வயலிலிருந்து மீட்டெடுத்தனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் விபரம் (பெயர் வயது)

01. கந்தசாமி கௌரிபாலன், 32
02. செல்லன் கமலதாசன், 25
03. தங்கராசா கவீந்திரன், 23
04. மகாதேவன் கிசோக்குமார், 22
05. சுப்பிரமணியம் கண்ணதாசன், 27

## 122. திருகோணமலை மூதூர் படுகொலை - 25 ஏப்பிரல் 2006



திருகோணமலை மூதூர் கிழக்கில் 2006 ஏப்பிரல் 25ஆம் நாள் புதன்கிழமை மாலை 5.30 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை சிறீலங்கா விமானப்படையினர் கிபிர் விமானங்கள் மூலம் தாக்குதலை மேற்கொண்ட அதேசமயம் சிறீலங்கா இராணுவத்தினர் ஆட்லெறி, பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர் இதன்போது குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெண்களென 12 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். நசுக்கப்பட்ட 12 பொதுமக்களின் உடல்கள் இத்தாக்குதலின் பின் கண்டெடுக்கப்பட்டது. இதில் 4, 15, 16 வயதான மூன்று சிறுவர்கள் அடங்குவர்

இத்தாக்குதலைத் தொடர்ந்து 3000 குடும்பங்கள் மூதூர் கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் 25 பொதுமக்கள் மேற்சொன்ன தாக்குதலில் காயப்பட்டவகளாவர்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

1. ஞானசேகரம் ரேணுகரன், 23
2. செல்வராணி, 32
3. மெய்யன், 34
4. மெய்யன் கிருசாந்தன், 04
5. நாகையா ருக்குமணி, 49
6. நவரட்னம் ரஞ்சிதமலர், 56
7. பத்தினியன் நாகம்மா, 67
8. தர்மலிங்கம் சுரேஸ்ரூபன், 23
9. துரையப்பா ரதீஸ், 15
10. வரதன் ராஜ்குமார், 16
11. வீரபத்திரன் பகவதிப்பிள்ளை, 67
12. ஏ.மயூரன், 21
13. விழிராசா மயூரன், 21

## 123. உதயன் பணிமனை படுகொலை - 02 மே 2006



ஊடகங்கள் ஒரு நாட்டிற்கும் சமூகத்திற்கும் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றன. இவ் ஊடகங்கள் சுதந்திரமான முறையில் செயற்படும் போதே அவற்றால் சிறப்பாகவும் நடு நிலைமைத் தன்மையாகவும் செயற்பட முடியும். இலங்கையின் ஊடகங்களின் சுதந்திரம் பல வருடங்களாகப் பறிக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் யாழ்ப்பாணம் உதயன் பத்திரிகை நிறுவனம் மீதான தாக்குதலும் ஊடக சுதந்திரத்திற்கு சாவு மணியடிக்கும் சம்பவமாகவே அமைகின்றது.


02-05-2006 அன்று மாலை உதயன் பணிமனை தனது வழமையான பணிகளுடன் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அடுத்த நாள் பத்திரிகைக்கான தயார்ப்படுத்தலில் பணியாளர்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இவ்வேளையில் இரவு 7.30 மணியளவில் உதயன் பணி மனையினுள் புகுந்த சிறிலங்கா இராணுவத்தினரும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் அங்கு பணிபுரிந்துகொண்டிருந்த பணியாளர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் இரண்டு பணியாளர் உயிரிழந்தனர் மூன்று பேர் படுகாயமடைந்தனர். மேலும் அங்கு பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன. இத்தாக்குதலானது தமிழ் ஊடகத்துறைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைவதுடன் மிகவும் காட்டு மிராண்டித்தனமானது என இலங்கை பத்திரிகையாளர் சங்கம், இலங்கை ஊடகவியலாளர் ஒன்றியம், ஊடகத்துறை அமைப்புக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் தமது கண்டனங்களை வெளியிட்டனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பஸ்ரியன் ஜோர்ச் சகாயதாஸ் (சுரேஸ்), 30
02. இராசரத்தினம் ரஞ்சித்குமார், 28

## 124. நெல்லியடியி படுகொலை - 04 மே 2006






யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த இளைஞர்கள் மீது இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஏழு இளைஞர்கள் உயிரிழந்தனர். இச்சம்பவமானது 04-05-2006 அன்று பிற்பகல் 2.15 மணியளவில் யாழ் வடமராட்சி நெல்லியடிச்சந்திக்கு 300 மீற்றர் தொலைவில் நவிண்டிலில் அமைந்துள்ள சிறீலங்கா இராணுவத்தினரின் புலனாய்வுத்துறை முகாமிற்கு அண்மையாக இடம்பெற்றது. இவர்கள் சகநண்பர் ஒருவரின் விருந்து உபசாரத்தில் கலந்து கொள்வதற்காக முச்சக்கரவண்டிகளில் சென்றுகொண்டிருக்கும்போது இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்திற்கு சற்று முன்னதாக இப்பகுதி இராணுவமுகாம் மீது கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதில் மூன்று இராணுவப் புலனாய்வாளர்கள் காயமடைந்தனர். அதன் பின்னரே இப்படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. செல்வராசா சுமன், 22
02. வேலுப்பிள்ளை நிமலன், 21
03. நாகரத்தினம் நகுலேஸ்வரன், 18
04. பாலச்சந்திரன் கிரிசாந்தன், 18
05. தாமோதரம்பிள்ளை சர்மிலன், 17
06. நவரட்ணராஜா நாசண்ணா, 19
07. சுப்பிரமணியம் சுபாஸ், 19

## 125. மந்துவில் படுகொலை - 06 மே 2006



யாழ். மந்துவில் கோலத்தம்மன் ஆலய கும்பாபிஷேக முன் ஏற்பாடுகளைச் செய்வதற்காக 06.05.2006 அன்று இரவு எட்டு இளைஞர்கள் ஆலயத்தில் தங்கியிருந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது இரவு 7.00 மணியளவில் அப்பகுதிக்கு வந்த இலங்கை இராணுவத்தினர் அங்கிருந்தவர்களை விசாரித்துவிட்டுச்சென்றனர். பின்னர் இரவு 11.00 மணியளவில் மீண்டும் வேறு ஒரு இராணுவ அணி அப்பகுதிக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து நள்ளிரவு 12.00 மணியளவில் ஜீப் வாகனம் ஒன்று அங்கே வந்ததைத் தொடர்ந்து பின்னிரவு 1.00 மணியளவில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன. அதனைத் தொடர்ந்து அவலக்குரல்கள் கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இராணுவ அச்சம் காரணமாக வீடுகளுக்குள் முடங்கிக்கிடந்த மக்கள் காலை வேளையில் தமது உறவுகளைத் தேட ஆரம்பித்தனர். அப்போது ஆலயத்தின் தேர்முட்டி சுவர்ப்பகுதியிலும் வீதி ஓரங்களிலும் மண்ணால் மறைக்கப்பட்ட இரத்தத் தடயங்கள் காணப்பட்டன.

பின்னர் இவர்களது உயிரற்ற உடல்கள் வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடையிலுள்ள கப்பூது கண்டல் காட்டுப்பகுதியில் இருப்பதாகக் கூறப்பட்ட போதும் பின்னர் அப்பகுதியில்

சடலங்கள் எதுவும் இல்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தகவல் தெரிவித்தனர். இப்பகுதிக்கு மக்கள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. காணமற்போன எட்டுப் பேரும் இலங்கை அரசபடைகளினாலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என அப்பகுதிமக்கள் கூறுகின்றனர். இது தொடர்பாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, சாவகச்சேரி பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. கந்தசாமி பரிமேலழகன், 22
02. இரத்தினம் தயாரூபன், 21
03. பொன்னம்பலம் பர்த்தீபன், 22
04. வைகுந்தவாசன் வைகுந்தகுமார், 22
05. இராமச்சந்திரன் இராசகுமார், 24
06. செல்வரட்ணம் சிவானந்தன், 24
07. மார்க்கண்டு புஸ்பகாந்தன், 26
08. இராசநாயகம்பிள்ளை சிவானந்தமூர்த்தி, 35

## 126. அல்லைப்பிட்டி படுகொலை - 13 மே 2006



இலங்கையின் வடபுலத்தில் உள்ள யாழ்மாவட்டத்தின் தீவகப்பகுதியானது யாழ்நகரில் இருந்து தென்மேற்காக 15 கிலோ மீற்றர் துராத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசம் இலங்கை கடற்படையினரது பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளது. 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் நாள் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் அல்லைப்பிட்டி சோதனைச்சாவடியில் மக்கள் அடையாள அட்டை, உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டு வந்தனர். இப்பிரதேசத்தில் கடற்படையினருடன் இணைந்து ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் செயற்பட்டு வருகின்றனர். இலங்கையின் புதிய சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தமிழ்மக்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் தீவிரப்படுத்தப்பட்டன. அதன் ஒரு அங்கமாக அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய இடங்களில் 13-05-2006அன்று இடம்பெற்ற படுகொலைச்சம்பவமானது அமைகின்றது.

யாழ் தீவகம் அல்லைப்பிட்டியில் 13-05-2006அன்று இரவு அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் தேவாலயத்திற்கு அண்மையிலுள்ள செல்லத்துரை அமலதாஸ் என்பவரது வீட்டில், அயலிலுள்ள மக்களும் இராணுவ அச்சம் காரணமாக இரவில் தங்குவது வழக்கமாக இருந்தது. அன்றும் அப்படியே அங்கு கூடியிருந்தனர். அவ்வேளை அப்பகுதிக்கு வாகனங்களில் வந்த கடற்படையினர் அப்பகுதி வீடுகளிற்குள் சென்று மின் விளக்குகளை அணைத்து விடுமாறு ஒட்டுக்குழுக்கள் மூலம் மிரட்டினர். பின்னர் அமலதாஸ் என்பவரது விட்டிற்குச் சென்று அங்கு உறங்கிக் கொண்டிருந்த பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் அவ்வீட்டில் தங்கியிருந்த 11 பேரில் 08பேர் உயிரிழந்தனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 04 பேர் உள்ளடங்குவர். இதில் தமது பெற்றோருடன் உறங்கிக்கொண்டிருநத் 04 மாதச்சிறுவனும் 04 வயதுச் சிறுவனும்

பரிதாபகரமாக உயிரிழந்தார்கள். காயமடைந்த ஏனையோரை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல அனுமதிக்கப்படாததால் காயமடைந்தவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

இதே வேளை சில கடற்படையினர் புளியங்கூடலிலுள்ள சண்முகலிங்கம் என்பவரது வீட்டுக்குள் புகுந்து அக்குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரைச் சுட்டுக்கொன்றனர். அடுத்தாக வங்களாவடி என்ற இடத்தில் தேனீர்ச்சாலை உரிமையாளரான செந்தூரன் என்பவரதுவீட்டிற்குள் புகுந்து செந்தூரன் என்பவரைச் சுட்டுக்கொன்றனர். இவ்வாறாக அன்றிரவு 13 பொதுமக்கள் உயிரிழந்தனர். பல பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டனர். பல கடைகள், பல இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பாலசாமி கேதீஸ்வரன், 25
02. கேதீஸ்வரன் அனெக்ஸஸ்தர், 25
03. கேதீஸ்வரன் தனுஷ்காந், 04
04. கேதீஸ்வரன் யதுசன், 04 மாதம்
05. ஆபிரகாம் றொபின்சன், 28
06. செல்லத்துரை அமலதாஸ், 28
07. கணேஸ் நவரட்ணம், 50
08. யோசப் அந்தோனிமுத்து, 64
09. சின்னத்துரை சிவநேசன், 46
10. எம்.சண்முகலிங்கம், 60
11. சண்முகலிங்கம் பரமேஸ்வரி, 55
12. சண்முகலிங்கம் காந்தரூபன், 22
13. இரத்தினம் செந்தூரன், 22

## 127. வடமுனை நெடுங்கல் படுகொலை - 07 யூன் 2006

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள கிராமங்களில் வடமுனையும் ஒன்றாகும். இது வெலிக்கந்தையிலிருந்து 07கிலோமீற்றர் தூரத்திலும் வாழைச்சேனையிலிருந்து 35கிலோமீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் குறைவடைந்திருந்தாலும் மகிந்த ராஜபக்ச சனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் தமிழ் மக்கள் மீதான தாக்கதல்களும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. நாளுக்கு நாள் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் கொல்லப்படடுக் கொண்டு வந்தனர். இதன் தொடர்ச்சியாகவே மட்டக்களப்பு வடமுனைப் படுகொலையும் அமைந்துள்ளது.

07.06.2006 அன்று காலை 10மணியளவில் வடமுனையிலிருந்து பொருட்கள் வாங்குவதற்காக உழவு இயந்திரத்தில் 20பொதுமக்கள் வரை பயணித்துக் கொண்டிருந்தனர். நெடுங்கல் எனும் இடத்தில் இவர்களை இலக்கு வைத்து சிறீலங்கா இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையினரால் கண்ணிவெடித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்தில் ஆறு மாதக் குழந்தை உட்பட 10பேர் உயிரிழந்ததுடன் 03குழந்தைகள் உட்பட 09பேர் படுகாயமடைந்தனர். இப்படுகொலையானது, ஒரு திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கையாகவே கருதப்படுகின்றது. எல்லைப்புறக் கிராமங்களிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றி சிங்கள மக்களை குடியேற்றும் ஒரு செயற்பாட்டிற்கான ஆரம்பமாகவே நோக்கப்படுகின்றது. கடந்த காலங்களில் இவ் வடமுனைப்பகுதி மக்கள் இலங்கை இராணுவத்தால் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வந்தனர். 1990ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் இப்பகுதி

மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். 1995ஆம் ஆண்டின் பின்னர் மக்கள் இங்கு மீளக்குடியமரத் தொடங்கினர். 2002ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் மக்கள் இங்கு பெருமளவில் குடியேறத் தொடங்கினர். ஆனால் மீண்டும் தமக்கு அந்நிலை ஏற்படுமோ என்ற ஏக்கத்தில் அப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சரவணமுத்து சந்திரகுமார், 10
02. சரவணமுத்து தினேஸ்குமார், 11
03. சரவணமுத்து மதியழகன், 22
04. மதியழகன் கவிதா, 20
05. சிவநேசன் மதிமலர், 24
06. ஐயாத்துரை சிறிமா, 33
07. காசிப்பிள்ளை கோமதி, 40
08. தளையசிங்கம் தனலட்சுமி, 48
09. பத்தினியன் சின்னத்தம்பி 56,
10. சிவநேசன் சிந்துஜன், 06மாதம்

## 128. வங்காலை படுகொலை - 08 யூன் 2006



வங்காலைக் கிராமமானது மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேசசெயலர் பிரிவில் கடற் கரையோரமாக அமைந்துள்ளது. இக் கிராம மக்கள் மீன்பிடித் தொழிலையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். இங்கு சுகந்தபுரி, தோமஸ்புரி, பஸ்புரி போன்ற சிறு கிராமங்கள் காணப்படுகின்றன. தோமஸ்புரியில் வசித்துவந்த மார்ட்டின் என்பவரும் அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளும் இலங்கை இராணுவத்தினரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர்.

மேற்படி சம்பவமானது 08.06.2006 அன்று இரவு தோமஸ்புரியிலுள்ள அவர்களின் வீட்டில் இடம் பெற்றுள்ளது. தச்சுத் தொழிலாளியான மார்ட்டின் என்பவர் தச்சுத் தொழிலுக்கு பயன்படுத்தும் கருவிகளாலேயே படுகொலை செய்யப்பட்டார். அவரது மனைவி பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட பின்னர் வெட்டிக்கொல்லப்பட்டுள்ளார். மேலும் பிள்ளைகள் இருவரும் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்ட பின்னர் தந்தையும் பிள்ளைகளும் தூக்கில் தொங்கவிடப்பட்டிருந்தனர். இச்சம்பவத்திற்கு நேரடியான சாட்சியங்கள் இல்லாவிடினும் இராணுவச் சப்பாத்துத் தடயங்கள் அதிகளவு காணப்படுகின்றமையும் அப்பகுதியில் சம்பவதினம் இரவு இராணுவ நடமாட்டம் காணப்பட்டதையும் அப்பகுதி மக்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. மூர்த்தி மார்ட்டின், 35
02. மார்ட்டின் மேரி மெடலின் (சித்திரா), 27
03. மார்ட்டின் ஆன் லூக்சியா 09,
04. மார்ட்டின் ஆன் நிலக்சன் 07

## 129. கைதடி மனிதப் புதைகுழி - 06, 07, 08 யூன் 2006



இலங்கையின் வடபகுதியில் காணப்படும் மாவட்டங்களில் அதிகளவு மக்கள் செறிவைக் கொண்ட மாவட்டமாக யாழ்.மாவட்டம் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் ஏ-9 நெடுஞ்சாலையில் யாழ் நகரில் இருந்து 10கிலோ மீற்றர் தூரத்தில் கைதடிப் பிரதேசம் அமைந்தள்ளது. 1996ஆம் ஆண்டு யாழ்குடா நாட்டினை இலங்கை இராணுவம் ஆக்கிரமித்ததன் பின்னர் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் காணாமற்போயிருந்தனர். அப்போது அவர்களில் சிலர் கைதடியை அண்மித்த செம்மணிப்பகுதியிலிருந்து எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்டனர். அதே போல 2006 யூன் மாதத்தில் கைதடித் தரவை வெளியில் மனிதப்புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக வெளிப்பட்ட செய்திகள் மக்கள் மத்தியில் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியது.

06.06.2006 அன்று கைதடித் தரவைப்பகுதிக்கு மண் அகழ்விற்காகச் சென்றவர்கள் அப்பகுதிக்குள் புதைக்கப்பட்டிருந்த சடலமொன்றைக் கண்டு அது தொடர்பாக தெரிவித்ததையடுத்து அப்பகுதியில் தேடுதல் பணியை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி மாவட்ட நீதவானால் பொலிசாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனடிப்படையில் பொலிசாரும் பொதுமக்களுமாக அப்பகுதியில் தோண்டும் பணியில் ஈடுபட்டனர். மூன்று நாட்களாக இப்பணி இடம்பெற்றது. இதில் நான்கு சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. மேலும் யாழ்.குடா நாட்டில் பரவலாக காணாமற்போனோர் இவ்வாறு புதைக்கப்பட்டிருக்கலாம் என மக்கள் ஐயம் தெரிவித்தனர்.

இப்புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டவர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. வைதீஸ்வரசர்மா வெங்கடகிருஸ்ணசர்மா, 50
02. விகவலிங்கம் பரணீதரன், 29
03. இரு ஆண்களின் சடலங்கள்

## 130. பேசாலைத் தேவாலயம் படுகொலை - 17 யூன் 2006



2006 ஜீன் 17ஆம் நாள் அதிகாலை மன்னார் பேசாலைக்கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படையினருக்கு ஏற்பட்ட பெரும் தோல்வியை அடுத்து பேசாலையிலுள்ள தமிழ்க் குடிமக்களை பழிவாங்கத் தொடங்கினார்கள். தமிழர்கள் வெற்றிநாயகி தேவாலயத்தில் தஞ்சம் புகுந்தார்கள். கடற்சண்டையில் தோற்கடிக்கப்பட்ட கடற்படையினர் பேசாலைப் பகுதியைச் சுற்றிவளைத்து கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டினை மேற்கொண்டார்கள். அவ்வாறாக சுட்டுக்கொண்டு வந்த இராணுவத்தினர் தேவாலயத்தினுள்ளே திரண்டு நின்ற மக்கள் மீது கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டார்கள். அதில் ஒரு பெண் கொல்லப்பட்டார். கடலில் நிகழ்ந்த மோதலைப் பார்ப்பதற்காக கடற்கரைக்குச் சென்ற மீனவர்கள் மீதும் கடற்படையினர் கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டனர். 05 மீனவர்கள் அவர்களது படகுகளுக்கு உள்ளேயே இறந்து கிடக்க காணப்பட்டனர். கரையிலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் சிறீலங்காக் கடற்படையினரால் தீ மூட்டப்பட்டுள்ளன. 40படகுகளும் 25வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. 10மில்லியன் பெறுமதியான மீன்பிடி வலைகளும் எரிக்கப்பட்டுள்ளன.

## 131. அக்சன்பெயம் தன்னார்வ நிறுவனம் படுகொலை - 05 ஆகஸ்ட் 2006



இலங்கையின் கிழக்குமாகாணத்திலுள்ள திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேசங்களில் ஒன்றே மூதூர் ஆகும். இங்கு தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இலங்கை அரசு இப்பிரதேசத்திலுள்ள மாவிலாறு அணையைத் திறப்பதற்கான யுத்தம் ஒன்றை 2006ஆம் ஆண்டின் யூலை மாத இறுதியில் ஆரம்பித்திருந்தது. இலங்கை அரசு தமிழர் பகுதிகள் மீது விதித்துவந்த பல்வேறு பொருளாதாரத் தடைகள், நெருக்கடிகளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களையும் நடாத்திய மக்கள் இறுதியில் மாவிலாறு அணைக்கட்டை பூட்டிவிட்டார்கள். இதனை ஏற்றுக்கொள்ளமுடியாத இலங்கை அரசு தனது படைகளை ஏவி மாவிலாறு அணைக்கட்டை திறக்க முயற்சித்தது. இலங்கைத்தீவில் 2002ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையையும் கவனத்திற்கொள்ளாது தமிழர் பிரதேசம் மீது யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டது. இதற்கு பதில் நடவடிக்கையாக தமிழீழ விடுதலைப்புலிகளும் மூதூர் பகுதி இராணுவ நிலைகள் மீது தாக்குதலை மேற்கொண்டனர். விடுதலைப்புலிகள் மூதூர் பகுதி இராணுவ நிலைகளை தகர்த்துவிட்டு தமது பழைய நிலைகளில் மீண்டும் நிலைகொண்டனர். இதன்பின்னர் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 05ஆம் நாள் மூதூர் பகுதிக்குள் நுழைந்த இலங்கை அரச படைகள் அப்பகுதி மீது தமது அராஜகத்தை கட்டவிழ்த்துவிட்டனர். அங்கு மக்கள் பலர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். இதன் ஓர் அங்கமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான பல்வேறு உதவிகளையும் செய்து வந்த. "Action Contre La Faim" எனும் அரசசார்பற்ற நிறுவனத்தின் பணியாளர்கள் 17பேரை அப்பிரதேசத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர் கோரமான முறையில் படுகொலை செய்தனர். "Action Contre La Faim" நிறுவனமானது பிரான்ஸ் நாட்டை தலைமையகமாகக் கொண்டது. இந்நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமானப் பணிகளை வழங்கும் நோக்கில் திருகோணமலை, மூதூரில் தமது அலுவலகத்தை அமைத்துச் செயற்பட்டுவந்தது. மூதூர்ப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கிக்கொண்டிருந்த வேளை அவர்களது அலுவலகத்திற்குள் வைத்தே, அவர்களது நிறுவனச் சீருடையில் இருந்தவேளை சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்களில் நான்கு பேர் பெண்களாவர். ஒருவர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர். இச்சம்பவத்தில் 17 பணியாளர்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் உடல்களை இராணுவத்தினர் குழிதோண்டிப் புதைத்துள்ளனர். சடலங்களை மீட்டு பரிசோதித்தபோது இப்பணியாளர்கள் ஒவ்வொருவரது உடலிலும் 20 வரையான துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. இப்படுகொலையுடன் இலங்கை அரசே தொடர்புபட்டுள்ளது என்பதற்கு அப்பகுதி மக்களும், இலங்கை போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் அறிக்கையும் சாட்சியங்களாகும்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோர் விபரம் (பெயர் வயது)

01. றிச்சட் அருள்ராஜ், 24
02. சிவபாலன் றோமிலா, 25
03. சிங்கராசா பிறீமஸ் ஆனந்தராசா, 34
04. சக்திவேல் கோணேஸ்வரன், 24
05. செல்லையா கணேஸ், 54
06. கணேசு சிறிதரன், 36
07. யோகராசா கோமஸ்வரன், 31
08. அம்பிகாபதி ஜெயசீலன், 31

09. அப்துல் லத்தீன் மொகமட் ஜப்பா, 31
10. முத்துலிங்கம் நர்மதன், 24
11. கணேசு கவிதா, 27
12. மாதவராசா கேதீஸ்வரன், 36
13. ஐ.முரளிதரன்,35
14. வைரமுத்து கோகிலவதனி, 29
15. கனகரட்ணம் கோவர்தனி, 28
16. பி.பார்த்தீபன், 27
17. ரவிச்சந்திரன் ரிசிகேசன், 28

## 132. நெடுங்கேணி - சமளங்குளம் படுகொலை - 08 ஆகஸ்ட் 2006



இலங்கையின் வடபகுதியில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேசமே நெடுங்கேணி ஆகும். இப்பகுதிகளில் அண்மைக்காலத்தில் இலங்கை இராணுவத்தினரின் ஆழஊடுருவும் படையணியினரால் பல்வேறுபட்ட தாக்குதல்கள் பொதுமக்கள்மீதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு மருத்துவ வசதியினை நொடுங்கேணி சுற்றுயல்கூறு மருத்துவமனையே வழங்கிவருகின்றது. பெரிதளவிலான வசதிகளைக் கொண்டிராத இம்மருத்துவமனை பாரியளவில் பாதிப்பிற்குள்ளான நோயாளர்களை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றமை வழமையானதே. அவ்வாறே 2006 ஒகஸ்ட் 08ஆம் நாள் இரவு 7.00மணியளவில் நெடுங்கேணி வைத்தியசாலையிலிருந்து கர்ப்பிணித்தாய் ஒருவரை ஏற்றிச்சென்று முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு இரவு 10.00மணியளவில் நெடுங்கேணி வைத்தியசாலை நோக்கி நோயாளர் காவுவண்டி என்ற தகவலை வழங்கும் ஒலியுடனேயே திரும்பிக் கொண்டிருந்தது. இவ்வாறு நோயாளர் காவுவண்டி நெடுங்கேணி வீதியில் உள்ள சமளங்குளம் பகுதியில் இரவு 11.30 மணியளவில் சென்று கொண்டிருந்த சமயம் இலங்கை அரச படைகளின் ஆழ ஊடுருவும் படையினரால் கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்தில் அவ்வாகனத்தில் பயணம் செய்துகொண்டிந்த வைத்தியர் ஜெயபாலினா அவரது மனைவி, தாதியர் இருவர் மற்றும் சாரதி ஆகிய ஐவரும் உயிரிழந்தனர். வைத்தியர்கள் மிகவும் பற்றாக்குறையான சூழ்நிலைகளிலேயே வன்னி வைத்தியசாலைகள் இயங்கிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதுடன், நெடுங்கேணி சுற்றியல்கூறு வைத்தியசாலையில் ஒரேயொரு வைத்தியர்தான் கடமையாற்றுகின்றமையும் மிகவும் கவலைக்கிடமானதே.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோர் விபரம் (பெயர் வயது)

01. கதிர்காமத்தம்பி ஜெயபாலினா, 60
02. ஜெயபாலினா பொன்னம்மா, 52
03. ஜெகாநந்தன் நகுலேஸ்வரி, 32
04. இராஜலிங்கம் ஞானேஸ்வரி, 23
05. கோபாலசுந்தரம், 57

## 133. கிழக்குப் படுகொலைகள் - ஆகஸ்ட் - டிசம்பர் 2006



தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த திருகோணமலைப் பகுதிகளும் அதன் அருகாக இருந்த மட்டக்களப்பு பகுதிகளும் ஆறுமாத காலத்துக்கு மேலாக சிறீலங்கா இராணுவத்தின் பெருமெடுப்பிலான தாக்குதலுக் குள்ளானது. அதன்போது பொதுமக்கள் கூட விட்டுவைக்கப் படவில்லை. இந்தக்காலத்தில் இப்பகுதி துண்டிக்கப் பட்டிருந்ததால் இதன்போது ஏற்பட்ட 210 பொதுமக்களின் இழப்புக்கள் இதுவரை சரியாக பதிவுக்குட்படுத்தப்படவில்லை. இந்த 6 மாதகாலத்து நிகழ்வுகள் தொடர்பான ஒரு சுருக்கமான விபரமே இதுவாகும். இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் விபரம் முழுமையாக இல்லாவிட்டாலும் குடும்ப அங்கத்தவர்களின் இழப்புக்கள் தொடர்பாக குடும்பங்கள் மேற்கொண்ட பதிவுகளின் அடிப்படையில் உதவி அரசஅதிபர் அலுவல்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள் பார்வையைத் தருகிறது. மாவிலாற்றிலிருந்து நீர் திறந்துவிடப்படும் வான் கதவை கட்டுப்பாட்டில் கொண்டுவருவதென்ற சாட்டில் இத்தாக்குதல் ஆரம்பமானது. திருகோணமலையின் மூதூர் தமிழ் மக்கள் அந்தப்பகுதியில் அமைந்திருக்கும் இந்தக் குளத்திலிருந்து தங்களுக்கும் நீர் வசதிசெய்து தரப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பல ஏக்கர் நெல் வயல்களுக்கு நீரை வழங்கும் இந்த வான் கதவைப் பூட்டியிருந்தனர். இலங்கை கண்காணிப்புக் குழுவின் தலையீட்டினால் இப்பிரச்சனை தீர்க்கப்பட்ட பொழுதும் அரசாங்கம் தாக்குதலை முன்னெடுத்துச் சென்றது. முதலாவதாக ஆகஸ்ட் 6ஆம் நாள் மாவிலாறு பிரச்சனையை வைத்து ஆகாய, தரைப்படைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இந்த நாட்களில் இடம்பெற்ற தாக்குதலில் பாதிக்கப்பட்ட கிராமங்களுள் ஈச்சிலம்பத்தை, நல்லூர், மற்றும் உப்பாறு உள்ளடங்கும். சம்பூருக்கு அண்மியதாக முன்பு நடாத்தப்பட்ட தாக்குதலால் இடம்பெயர்ந்த மக்கள் இக்கிராமங்களுக்கு ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்தனர். மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களை இணைக்கின்ற ஒரு ஒடுங்கிய கரையோரப் பகுதியான வாகரைக்கு திருகோணமலையின் மூதூர் கிழக்கிலிருந்து மக்கள் தொடர்ச்சியான தாக்குதல் காரணமாக இடம்பெயர்ந்து செல்லவேண்டியதாயிற்று. ஆகஸ்ட் 19ஆம் நாள் இரண்டாவது மிகப்பாரிய தாக்குதல் வாகரையை இலக்குவைத்து நடாத்தப்பட்டது. பொதுமக்கள் மீது மீண்டும் நடாத்தப்பட்ட ஆகாயம், தரைத்தாக்குதலால் 100இற்கும் மேற்பட்டோர் இறந்தனர். அவ்வாறு இறந்தவர்களுக்கு முறைமையான இறுதி நிகழ்வுகளை நடாத்தக்கூட குடும்பத்தவர்களுக்கு வசதி கிடைக்கவில்லை. இந்த நிகழ்வின் பின்பும் வாகரைக்கு வடக்கே மூதூர் கிழக்கில் தங்கியிருந்தவர்களை தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களின் குடும்பங்களெனக்கருதி ஆகஸ்ட 28ஆம் நாள் இவர்கள் மீது கொடூரமான தாக்குதலை சிறீலங்கா இராணுவம் நடாத்தியது. சிறீலங்கா இராணுவத்தால் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதும் இலங்கைத்துறைமுகத்துவாரம் பாலமூடாக வெளியேறுவதற்கு மக்கள் முயற்சித்தனர். மக்கள் தப்பிச் செல்வதை தடுக்கும் நோக்கமாக பாலம் சிறீலங்கா இராணுவத்தால் தகர்க்கப்பட்டது. இதன்போது இடம்பெற்ற தாக்குதலில் குறைந்தது 25 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மூதூர் கிழக்கில் இவ்வாறு தாக்குதலை நடத்தி மக்களை வெளியேற்றிய சிறீலங்கா இராணுவம் இடம்பெயர்ந்த மக்கள் நெருக்கமாக வாழ்ந்த வாகரைப் பகுதி மீது தாக்குதலை ஆரம்பித்தனர். இந்தப் பிரதேசத்தில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெரும் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதன்போது நூற்றுக்கணக்கானோர் இறந்தனர். இந்நிகழ்வு இடம்பெற்ற ஆறு மாதகாலத்துக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் சிறீலங்கா கண்காணிப்புக்குழு ஆகியன வாகரைக்குச் செல்வதை தடுத்தது. இறுதியில் குண்டு மற்றும் ஷெல் தாக்குதலிலிருந்து தங்களை பாதுகாக்குமாறு சிறீலங்கா கண்காணிப்புக்குழுவிடம் மக்கள் மன்றாடினார்கள். ஆறு மாதகாலத்துக்கு உணவு தொடரணி கூட வாகரைக்கு செல்வதை சிறீலங்கா அரசாங்கம் அனுமதிக்கவில்லை. சர்வதேச

செஞ்சிலுவைச்சங்கம் உணவுத் தொடரணியை எடுத்துச்செல்ல இரு தடவைகளுக்கு மேலாக முயற்சித்ததையும் சிறீலங்கா அரசாங்கம் முறியடித்தது. இறுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் அப்பகுதியிலிருந்து வெளியேற்றுவதற்கு ஒரு வழியாக எல்லா மக்களையும் வாகரையிலிருந்து வெளியேற்றுவதில் சிறீலங்கா அரசாங்கம் வெற்றிகண்டது. தப்பியோடும் பொதுமக்களைத் தடுத்ததற்காகவும் வாகரையைவிட்டு நேர காலத்தோடு மக்கள் வெளியேறுவதை அனுமதிக்காததற்காகவும் சரவ் தேச ரீதியில் தமிழீழ விடுதலைப்புலிகளும் கண்டிக்கப்பட்டடார்கள். பசியிலிருந்தும் தாக்குதலிலிருந்தும் தப்புவதாக சில பொதுமக்கள் நடையாகவே காடுகளை கடந்தார்கள். வள்ளத்தில் சென்ற ஐந்து பொதுமக்கள் வள்ளம் அமிழ்ந்ததில் நீரில் மூழ்கினர். மறுவளத்தில் மனிதாபிமான உதவிகள் கிடைக்காமல் செய்தமை பொதுமக்கள் மீது கண்டமூடித்தனமான தாக்குதல் என்பவற்றை சர்வதேச சமூகம் கண்டிக்காமையையிட்டு தமிழ் மக்கள் குறைபட்டுக் கொண்டார்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. அரியம் அரசரட்ணம், 42
02. கோபாலப்பிள்ளை கோணேசராஜா, 46
03. குணநாயகம் சரோஜினி, 10
04. குணநாயகம் ராஜ்மார், 06
05. குணநாயகம் ஜீவிதா, 10
06. குணநாதன் மஞ்சுளாதேவி, 23
07. இளையதம்பி பவானி, 24
08. கதிர்காமத்தம்பி நற்குணம், 36
09. முருகப்பிள்ளை தங்கவேல், 22
10. சீனித்தம்பி மகாலிங்கம், 32
11. செல்லக்கண்டு சந்திரகலா, 18
12. சிங்காரவேல் திரவியமலர், 55
13. சின்னத்தம்பி முத்துலிங்கம், 45
14. சிவகுமார் ரஸ்யப்பிரியன், 01
15. சிவலிங்கம் சிவகுமார், 25
16. சாந்தலிங்கம் .தவன்ஜா, 21
17. சுப்ரமணியம் யோகேஸ்வரன், 29
18. சுந்தரலிங்களம் கணபதிப்பிள்ளை, 62
19. தர்மலிங்கம் பூமணி, 45
20. வேலன் தர்மலிங்கம், 50
21. வசந்தகுமார் திவ்வியா, 14
22. ஜீவன் சித்திரவேல் -
23. காந்தலிங்கம் ராஜேஸ்வரன் -
24. ராமன் தேவராசா, 25
25. சின்னத்தம்பி சிவசங்கர், 27
26. வெற்றிவேல் ஆறுமுகம், 28
27. ந.தியாகராசா 48
28. அழகுராஜ் செல்வரட்ணம்
29. காளிக்குட்டி பத்மா
30. குமாரப்பிள்ளை திவாகரன்
31. மாரிமுத்து நாகேஸ்வரன்
32. மாரிமுத்து சுந்தரராஜா
33. நாகலிங்கம் இந்திரன், 46
34. நகுலேஸ்வரன் பிரேமலதா, 35

35. சின்னத்தம்பி சிவசோதி
36. சுப்ரமணியம் நந்தினி
37. வசந்தகுமார் சுமநாதன்
38. வெற்றிவேல் கோணேஸ்வரன்
39. விஜயகுமார் ரதிகலா
40. யோகேஸ்வரன் சிதம்பரம், 45
41. அ.யோகநாதன் 26
42. அ.அரசரட்ணம் 33
43. ஆறுமுகம் 34
44. பா.தவமணி 27
45. செ.ஜெயகாந்தன் 24
46. பட்மசிறி 27
47. க.சசிக்குமார் 17
48. கணேஸ் கோபால், 19
49. கணேஸ் கோபால், 19
50. இன்பராசா தர்சினி, 07
51. ஜெகநாதன் மாணிக்கப்போடி, 19
52. ஜெகநாதன் நகுலேஸ்வரன், 21
53. க.அஜந்தன், 15
54. க.புஸ்பன், 25
55. க.றதி, 31
56. கணபதிப்பிள்ளை றஜீன்திரன், 27
57. கந்தசாமி சங்கர், 23
58. கந்தசாமி சாந்தகனகம், 20
59. கோணடமலை நாகேந்திரன், 70
60. கோபாலகிருச்னன் தனபாக்கியம், 28
61. கோவிந்தராசா தவராசா, 32
62. லோகிதராசா சசிகரன், 26
63. மகேந்திரன் வரதன், 24
64. மார்கண்டு கள்ளிப்பிள்ளை, 52
65. முத்தையா சிவமணி, 58
66. முத்தையா பாஸ்கரன், 29
67. மயில்வாகனம் குணராசா, 31
68. ந.டேவிட், 25
69. ந.குணராசா, 22
70. ந.பாக்கியராசா, 40
71. ந.விமலேந்திரன், 35
72. நாகராசா யோகேஸ்வரன், 28
73. நகுலேஸ்வரன், 32
74. நாகலிங்கம் திரவியமலர், 65
75. நந்தகுமார் தனுசலீன், 04
76. நவரட்ணம் நிசாந்தன், 20
77. பாதக்குட்டி நாகேந்திரம், 20
78. பாதக்குட்டி தயாநந்தினி, 22
79. பற்குணராசா கோணேஸ்வரன் 31
80. பிள்ளையான் தவனேசன், 36
81. ரா.ராமச்சந்திரன், 32
82. இராசேந்திரம் பிரபு, 17

83. ரதீஸ்வரன் சதுர்சன், 0
84. ரதீஸ்வரன் விஜயா, 30
85. ரவீந்திரன் கோபிநாத், 22
86. ஜெயகாந்தன், 21
87. கிருபராச், 30
88. சிவனேசன், 25
89. தயாகரன், 29
90. சபாபதி மாணிக்கப்போடி, 27
91. சபாரட்னம் சண்முகநாதன், 29
92. சரவணமுத்து சந்திரசேகரன், 22
93. சசிகுமார் ஜோஸ்பிரியன், 0
94. சினித்தம்பி பவானி, 22
95. செல்லபிள்ளை தர்மலிங்கம், 31
96. செல்வராசா ஸ்ரீகாந்தராசா, 17
97. சின்னதம்பி நிரஞ்சன், 20
98. சின்னதம்பி நித்தியானந்தம், 22
99. சிதுரன் சந்திரன், 39
100. சிவஞானசுந்தரம் சந்திரமோகன், 23
101. சிவக்கொழுந்து பாக்கியராஜா, 30
102. சிவராசா இந்திரன், 46
103. சிவரபசா விஜயா, 34
104. சௌந்தரராசா கோணேஸ்வரன், 28
105. சுந்தரலிங்கம் யுவந்தன், 10
106. தம்பையா நிமலநாதன், 34
107. தம்பிப்பிள்ளை வரதராஜ், 22
108. தம்பிராஜா பிள்ளையான், 51
109. தம்பையா றஞ்சன், 24
110. தங்கதுரை யோகேஸ்வரன், 27
111. தர்மலிங்கம் சுமதி, 42
112. தர்மராசா சந்திரன், 20
113. தியாகராசா தர்சிகா, 11
114. தியாகராசா தஸாந், 16
115. வரதராசா ஞானவதி, 58
116. வேலுபிள்ளை ரஞ்சன், 35
117. வேலுப்பிள்ளை மனோகுமார், 28
118. வேற்றிவேல் நாநீதன், 22
119. விக்னேஸ்வரன்
120. விநாயகமூர்த்தி விஸ்வலிங்கம், 19
121. விஸ்வலிங்கம் துரைசாமி, 44

## 134. அல்லைப்பிட்டி செல்வீச்சு - 13 ஆகஸ்ட் 2006

யாழ்ப்பாணத்தின் கரையோரமாக அமைந்திருக்கும் தீவுகளில் அல்லைப்பிட்டியும் ஒன்றாகும் சிறீலங்கா இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே அல்லைப்பிட்டிக்கு சமீபமாக சண்டை ஆரம்பித்ததும் மக்கள் அடைக்கலம் புகுந்த பிலிப்நேரி தேவாலயப் பக்கமாக இராணுவத்தினர் கண்டபடி சுட்டார்கள். இதில் பல எண்ணிக்கையானோர் இறந்ததாக

கூறப்படுகின்றது. இது இன்றுவரை பதிவுக்குட்படுத்தப்படவில்லை. இந்த செல்தாக்குதல் சம்பவத்தைக் கண்ட பில்ப்நேரி தேவாலய பங்குத்தந்தை ஜிம் பிறவுணும் இராணுவத்தினரால் காணாமல் போகச் செய்யப்பட்டார். இந்தச் செல்தாக்குதலுக்கு ஆளான தன்னை இனம்காட்ட விரும்பாத இளம் பெண் ஒருவர் பின்பு இந் நிகழ்வு தொடர்பான தமது அனுபவம்பற்றி எழுதியுள்ளார். அந்த இரவின் நிகழ்வு தொடர்பாக வேறு பதிவுகள் இல்லாததால் அவரது பதிவு மிகவும் முக்கியமானது. அவரது கூற்றுப்படி எல்லா இடத்தையும் சுற்றி செல் விழுந்து வெடித்தவண்ணம் இருந்ததால் தாங்கள் மாட்டிக் கொண்டதாகநினைத்தார்கள். அவர்கள் பிலிப்நேர் தேவாலயத்தில் அடைக்கலமடைந்தனர். பின்பு சிறீலங்கா இராணுவத்தினர் தேவாலயத்திற்கு வந்து அவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்வதாக வாக்குறுதி அழித்தனர். சிறீலங்கா இராணுவத்தினர் மக்களை கேடயமாக பாவித்து தமது முகாமுக்கு அண்மித்தும் அவர்களை கைவிட்டனர். எனவே மக்கள் செல்தாக்குதலுக்கு மத்தியில் மீண்டும் தேவாலயத்தை நோக்கிச்செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர். இராணுவத்தின் நோக்கை மக்கள் உணர்ந்து கொள்ளும்வரை பலமுறை இராணுவத்தினர் இவ்வாறு நடந்துகொண்டனர். சில மணித்தியாலங்களுக்கு பிற்பாடு செல்தாக்குதல் நேரடியாக தேவாலயத்துக்கு வந்தது. கடலிலிருந்தும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தநேரத்தில் பலர் இறந்துவிட்டார்கள். பெற்றோரை பிள்ளைகள் இழந்தனர். இந்த அக்கிரமத்தின் பின்பு உடல்களை மீட்பதற்கு அருட்தந்தை ஜிம் பிறவுணும் முயன்றபோது இராணுவம் அதையும் தடுத்தது. இன்றுவரை கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை பதிவுக்குட்படுத்தப்படவில்லை. இந்தப் புத்தகத்தின் 71ம் பகுதியல் குறிப்பிடப்பட்ட 1990இல் இடம்பெற்ற பெருந்தொகையானோர் காணாமல் போன சம்பவத்தின் மையமாக இதே பிலிப்நேரி தேவாலயம் விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

1. யோகன் ரோபேர், 41
2. மேரிமஞ்சுளா, 45
3. மெனிஸ், 19
4. மைக்கல், 55
5. நடராஜா, 60
6. தேவகுமார், 28
7. உதயகுமார், 35
8. டு.ஞானப்பிரகாசம், 70
9. ரமேஸ், 26
10. தேவநாயகி, 30

## 135. வள்ளிபுனம் செஞ்சோலை படுகொலை - 14 ஆகஸ்ட் 2006

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர்பிரிவில் உள்ள வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் 2006 ஒகஸ்ட் 10ஆம் நாள் முதல் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ முதலுதவிப் பயிற்சிநெறியில் வன்னிப்பிரதேச கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்வி வலயங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான உயர்தர வகுப்பு மாணவிகள் பங்குபற்றியிருந்தனர். மாணவர்கள் பயிற்சி நெறியில் பங்குபற்றிக்கொண்டிருந்த வேளை இலங்கை வான்படைக்குச் சொந்தமான



நான்கு கிபிர் விமானங்கள் செஞ்சோலை வளாகத்தில் 2006 ஒகஸ்ட் 14 அன்று காலை 7.30 மணியளவில் காலைக் கடன்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாணவிகள் மீது கண்மூடித்தனமான குண்டுத்தாக்குதலினை மேற்கொண்டன. இக் குண்டுத் தாக்குதலில் 52 மாணவிகள் மற்றும் இரு பணியாளர்கள் உட்பட 54பேர் உயிரிழந்தனர். 130 மாணவிகள் படுகாயமடைந்ததுடன் பல மாணவிகள் சிறு காயங்களுக்குமுள்ளாகினர். படுகாயமடைந்தவர்களில் மூன்று மாணவியர்களுக்கு கால்கள் துண்டிக்கப்பட்டதுடன் மாணவி ஒருவர் கண் ஒன்றை இழந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவர்களில் மேலும் காயப்பட்ட மூன்று மாணவிகள் முல்லைத்தீவு வைத்தியசாலையினால் கண்டி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர். சிறீலங்கா பயங்கரவாத விசாரணைத் திணைக்களம் உடனடியாக காயப்பட்ட மூன்று மாணவிகளையும் கைதுக்குள்ளாக்கினர். இறுதியாக மூன்று மாணவிகளும் விடுவிக்கப்பட்டு வன்னியிலுள்ள தமது வீட்டுக்குச்செல்ல விடுவதற்காக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். அவர்களுள் காயமடைந்த ஒரு மாணவி வவுனியாவில் இறந்துவிட்டார். மற்றைய இரு மாணவிகளும் உடனடியாக கண்டி வைத்தியசாலைக்கு திரும்ப எடுத்துச் செல்லப்பட்டனர். சில மாதங்களின்பின் இரு மாணவிகளும் எங்கே தங்குகின்றார்கள் என்பதே மர்மமாக மாறியது அவர்களது பெற்றோர்கள் மட்டும் ஏற்கனவே ஒழுங்குபடுத்தப்பட்ட இடத்தில் அவர்களைச் சந்திப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஏறத்தாழ இரு வருடங்களாக எதுவித குற்றச்சாட்டுக்களுமின்றி இந்த இரு மாணவிகளது தடுத்துவைத்தலானது அவர்களது பெற்றோருக்கு விளங்கிக்கொள்ள முடியாததாகவே இருக்கிறது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோர் விபரம் (பெயர் வயது)

01. அருளம்பலம் யசோதினி, 18
02. பாலகிருஸ்ணன் மதினி, 18
03. சந்திரமோகன் நிவேதிகா, 17
04. சந்திரசேகரன் விஜயகுமாரி, 29
05. கனகலிங்கம் நிருபா, 17
06. கனகலிங்கம் நிருஷா, 17
07. கணபதிப்பிள்ளை நந்தினி, 18
08. கந்தசாமி குமாரசாமி, 48
09. கிரிதரன் டயானி, 16
10. குபேந்திரச்செல்வம் லிகிதா, 19
11. மகாலிங்கம் வசந்தராணி, 18
12. மகாலிங்கம் வென்சிடியூலா, 17
13. மார்க்குப்பிள்ளை கெலன்சுதாயினி, 18
14. முருகையா அருட்செல்வி, 18
15. முத்தையா இந்திரா, 18
16. நாகலிங்கம் கோகிலா, 19
17. நாகலிங்கம் தீபா, 19
18. நகுலேஸ்வரன் நிஷாந்தினி, 19
19. நல்லபிள்ளை நிந்துஜா, 18
20. நவரட்ணம் சாந்தகுமாரி, 18
21. நீலாயினார் நிவாகினி, 17

22. பத்மநாதன் கலைப்பிரியா, 18
23. புவனசேகரம் புவனேஸ்வரி, 17
24. இராசமோகன் கம்சனா, 19
25. இராசேந்திரச்செல்வம் மகிழ்வதனி, 18
26. இரவீந்திரராசா றம்ஜா, 18
27. ச. ஜெயரூபி, 20
28. சாந்தகுமார் சுகிர்தா, 19
29. சந்தனம் சத்தியகலா, 20
30. செல்வம் நிறோஜினி
31. சண்முகராசா பாவேந்தினி
32. சிவமயஜெயம் கோகிலா
33. சிவமூர்த்தி கார்த்திகா, 18
34. சிவானந்தராசா திவ்வியா
35. சிவசுப்பிரமணியம் வட்சலாமேரி, 20
36. சொலமொன் சிங்கராசா, 65
37. சுந்தரம் அனோஜா, 17
38. தம்பிராசா லக்சியா, 17
39. தம்பிராசா சுகந்தினி, 18
40. தம்பிராசா தீபா, 19
41. தமிழ்வாசன் நிவேதிகா, 18
42. தனபாலசிங்கம் பகீரதி, 19
43. தணிகாசலம் தனுசா, 19
44. தர்மகுலசிங்கம் கேமாலா, 18
45. தர்மராசா பிருந்தா, 17
46. தேவராசா சர்மினி, 17
47. திருநாவுக்கரசு நிரஞ்சுலா, 18
48. துரைசிங்கம் சுதர்சினி, 17
49. துரைசிங்கம் திசானி, 18
50. உதயகுமாரன் கௌசிகா, 19
51. வைரமுத்து கிருத்திகா, 19
52. வரதராஜா மங்களேஸ்வரி, 17
53. வீரசிங்கம் றாஜிதா, 18
54. விஜயபவன் சிந்துஜா, 18
55. விவேகானந்தம் தட்சாயினி, 18
56. தம்பிமுத்து தயாழினி, 19

## 136. பொத்துவில் இரத்தன்குளம் படுகொலை - 17 செப்ரெம்பர் 2006



அம்பாறை பொத்துவில் பிரதேசத்திலிருந்து 11கிலோ மீற்றர் தொலைவில் இரத்தன்குளம் உள்ளது. இந்த அணைக்கட்டு அமைந்துள்ள பிரதேசம் பொத்துவில் கிராமசேவகர் பிரிவிற்குட்பட்டது. எனினும் தற்போது அந்தக் கிராமம் சிங்களப் பகுதியிலுள்ள லகுகல கிராமசேவகர் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. பொத்துவிலின் இரத்தன்குளம் பகுதியில் புத்தர்சிலை ஒன்றினை நிறுவும் முயற்சிகளை சிங்களவர்கள் மேற்கொண்டிருந்தனர். இதனையடுத்து அப்பகுதியில்

சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது. அத்தோடு சிங்களவர்கள் பொத்துவிலிருந்து முஸ்லிம்களை முழுமையாக வெளியேற்றும் நோக்கில் அப்பகுதியில் வெகைல் என்னும் பெயரில் புதிதாக ஓர் பிரதேசசெயலகர் பிரிவை தனியாக உருவாக்கினர். இதனைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே எல்லைச் சண்டைகளும், காணிப் பிரச்சனைகளும் தொடர்ந்தவண்ணமே இருந்தன. இதனால் இரு இனத்தலைவர்களுக்கும் இடையே முறுகல் நிலை மேலும் வலுப்பெற்றது.

இந்த நிலையில் மேற்படி குள அணைக்கட்டை புனரமைப்பதற்காக 2006 செப்ரெம்பர் 17ஆம் நாள் முஸ்லிம் இளைஞர்கள் சென்றிருந்தனர். சிறீலங்கா அதிரடிப்படையினர் அங்கு அவர்களைக் குத்தியும், வெட்டியும், கழுத்தறுத்ததுமாக பத்து முஸ்லிம்களை படுகொலை செய்தனர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் முஸ்லிம் மக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில் மேற்படி சம்பவ தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் சின்னப்பிள்ளை என்னுமிடத்தில் அமைந்துள்ள முஸ்லிம்களின் மையவாடிப் பகுதியில் சிங்களவர்கள் அத்துமீறி நுழைந்து ஒருவரின் உடலைப் புதைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து முஸ்லிம்கள், சிங்களவர்களுக் கிடையில் பெரும் இன முரண்பாடுகள் ஏற்பட்டன. இவ்வாறு முஸ்லிம்கள் குடியிருக்கும் நிலங்களை தமது ஆதிக்கத்திற்குக் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டுவந்த சிங்களப் பேரினவாதிகள் தொடர்ந்தும் முஸ்லிம்களை ஒடுக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக அவர்களுக்கு எச்சரிக்கை ஒன்றினை விடுக்கும் நோக்கிலேயே சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் இப்படுகொலைகள் மேற்கொள்ளப் பட்டதாக கருதப்படுகின்றது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. எம். அமீர, 19
02. எல்.அனீஸ், 19
03. அத்துக்குஞ்சு, 18
04. எம். பைரூஸ், 19
05. எ.எம். பைசல், 19
06. எம்.ஹும்சுமுதீன், 18
07. எம்.ஜவாா், 20
08. எம்.நவாஸ், 18
09. எஸ்.எல்.நிசாட், 21
10. எம்.ஐ.சியம், 20

## 137. புதுக்குடியிருப்பு கைவேலி படுகொலை - 16 அக்டோபர் 2006



முல்லைத்தீவுமாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற் குட்பட்ட புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியிலுள்ள கைவேலி என்னும் கிராமம் மீது 2006ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16ஆம் நாள் மாலை 5.15 மணியளவில் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான நான்கு கிபிர் விமானங்கள் மேற்கொண்ட குண்டுத் தாக்கதலில் ஒரு மாதக்குழந்தை மற்றும் இரு சிறுவர்கள் உட்பட மூவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் பத்து பொதுமக்கள் காயமடைந்த நியைில் புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் தவராசா இந்திரா என்பவர் நான்காம் நாள் சிகிச்சை பலனளிக்காது மருத்துவமனையில் மரணமானார்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. யூட்கிறிஸ்ரின் டன்சிகா, 01
02. சிவகுமார் தனுசிகா, 4
03. தவராஜா துசாந்தினி, 14
04. தவராசா இந்திரா, 42

## 138. கிளிநொச்சி மருத்துவமனை அருகாமை படுகொலை - 02 நவம்பர் 2006



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தை அண்மித்த பகுதிகளில் சிறீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான கிபிர் விமானங்கள் 2006 நவம்பர் 02ஆம் நாள் பிற்பகல் 2.00மணியளவில் நான்கு தடவைகள் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இதன்போது 16 குண்டுகள் வீசப்பட்டன. இவற்றில் 15 குண்டுகள் வெடித்துள்ளன. இதன்போது பொது வைத்தியசாலைக்கு அருகிலிருந்த வீடொன்று முழுமையாக அழிவடைந்ததுடன் அதிலிருந்த ஐவரும் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் இருவர் பாடசாலை மாணவர்கள். குண்டு வீச்சுத்தாக்குதல் காரணமாக உயிரிழந்தவர்களின் வீடு முழுமையாகச் சிதைவடைந்ததுடன் மேலும் கால்நடைகள் பலவும் பலியாகியதோடு பயன்தரு மரங்கள் பலவும் அழிவடைந்தன.

அத்தோடு கிளிநொச்சி மாவட்டப் பொதுமருத்துவனையும் சேதத்துக்குள்ளானது. இங்கு வைத்தியசாலை ஊழியர்கள் மூவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த மூன்று நோயாளர்களும் காயமடைந்தனர். வைத்தியசாலையில் மேல்மாடிக் கூரையின் சீலிங் முற்றாகச் சேதமடைந்துள்ளது. விமானக் குண்டுச் சன்னங்கள் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக் கட்டடத்தின் நோயாளர் விடுதிகளையும் தாக்கியுள்ளன. வைத்தியசாலையின் கர்ப்பிணிப் பெண்களுக்கான பிரசவ விடுதி மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் என்பவற்றை குண்டுச் சன்னங்கள் தாக்கியுள்ளன. இதேவேளை சத்திர சிகிச்சைக் கூடம் உட்பட வைத்தியசாலையின் பல்வேறு பகுதிகளிலும் கண்ணாடிகள் நொருங்கியுள்ளன.

இத்தாக்குதலையடுத்து வைத்தியசாலை விடுதிகளிற் தங்கிநின்று சிகிச்சைபெற்றுவந்த 300இற்கும் மேற்பட்ட நோயாளர்கள், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கென வந்த 700இற்கும் மேற்பட்ட நோயாளர்களும் வைத்தியசாலை வளாகத்தை விட்டுச் சிதறிஓடினர். இத்தாக்குதலையடுத்து வைத்தியசாலையின் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தன.

கிளிநொச்சி நகரப் பகுதி உட்பட கிளிநொச்சிப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் வாழ்கின்ற மக்களும் பாடசாலை மாணவர்களும் பெரும் அச்சமடைந்து வீதிகளிற் சிதறி ஓடினர். இதன் காரணமாக ஏ-09 நெடுஞ்சாலை மற்றும் உள் வீதிகள் அனைத்திலும் சன நெருக்கடி அதிகரித்திருந்தது. தாக்குதல் நடைபெற்ற இடத்தையும் இறந்தவர்களின் உடல்களையும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும் நேரிற் சென்று பார்வையிட்டனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. முருகேசு சண்முகரத்தினம் 53
02. சண்முகரத்தினம் சசி 20
03. சண்முகரத்தினம் கிரிசாந் 19
04. முருகேசு மார்க்கண்டு 63
05. ரட்னம் சரஸ்வதி, 60

## 139. வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர் படுகொலை - 18 நவம்பர் 2006

வவுனியா தாண்டிக்குளத்தில் அமைந்துள்ள விவசாயப் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் 2006 நவம்பர் 18ஆம் நாள் காலை 9.45 மணியளவில் தமது கல்லூரி வளாகத்தினுள் உள்ள புல்லுகளைத் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அவ்வேளை அங்கு வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மாணவர்களை சமீபமாக வருமாறு அழைத்து கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூட்டை நடத்தினர். உடன் மாணவர்கள் நிலத்தில் வீழ்ந்து படுத்தவுடன் இராணுவத்தினர் அச்சுதன் என்ற மாணவனை எழுந்து வரும்படி அழைத்தனர். அவர் எழுந்து அவர்கள்முன் கைகளை உயர்த்திக்கொண்டு சென்றபோது அவர்மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூட்டை நடத்தினர். அவர் அவ்விடத்திலேயே துடிதுடித்து வீழ்ந்தார்.

மாணவர்கள் எங்களைக் காப்பாற்றுங்கள். காப்பாற்றுங்கள் என்று கத்தியபோதும். அவர்கள் எதனையும் பொருட்படுத்தாது ஈவிரக்கமற்ற முறையில் அவர்கள் மீது துப்பாக்கிச் சூட்டினை நடத்தினர். இதன்போது 04 மாணவர்கள் கொல்லப்பட்டதுடன் 11 மாணவர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)
01. இராமச்சந்திரன் அச்சுதன், 25
02. சித்திரவேலு கோபிநாத், 22
03. நிசாந் முகமட், 22
04. திருநாவுக்கரசு சிந்துஜன், 21

## 140. படகுத்துறை படுகொலை - 02 ஜனவரி 2007



இலங்கையின் வடக்கே மன்னார் மாவட்டத்தின் மன்னார் நகருக்கு வடகிழக்கே சுமார் 20மைல்களுக்கு அப்பாலுள்ளது படகுத்துறைக் கிராமம். 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணம்மீது சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட படை நடவடிக்கை காரணமாக யாழ்.நவாந்துறைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துவந்து 35வரையான குடும்பங்கள் இக்கிராமத்தில் குடியேறி வாழ்ந்துவந்தனர். இவர்கள் கடற்றொழிலையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டமையால் இக்கரையோரக்கிராமம் இவர்களது தொழில் நடவடிக்கைக்கு ஏற்புடையதாக இருந்தது. இங்கு வாழ்ந்த மக்கள் அனைவரும் கத்தோலிக்க மதத்தினைச் சேர்ந்தவர்கள். இக்கிராமத்தில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்று உள்ளது. தேவாலயச் சுற்றாடல் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கின்றது. இம்மக்கள் மிகவும் சந்தோசமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்துவந்தனர்.

2007 ஜனவரி இரண்டாம் நாள் காலை இக்கிராமத்திற்கு மேலாக இலங்கை வான்படையின் வேவு பார்க்கும் விமானம் ஒன்று பறந்துகொண்டிருந்தது. சரியாக 9.30 மணியளவில் இவ்வான்பரப்பில் நுழைந்த இலங்கை வான்படையின் மூன்று கிபீர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன. கிராம மக்கள் மிகவும் நெருக்கமாக வாழ்ந்ததனாலும் விமானங்களிலிலிருந்து ஏவப்பட்ட குண்டுகள் அனைத்தும் குடியிருப்புப் பகுதி மீதே வீழ்ந்து வெடித்ததாலும் அவர்களது வீடுகள் மற்றும் சொத்துக்கள் அனைத்தும் முழுமையாக அழிவடைந்தன. பெண்கள் சிறுவர்கள் உட்பட 15 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 37 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலின் மொத்தப் பாதிப்பும் பொதுமக்களுக்கே ஏற்பட்டுள்ளது என்பதை மதத் தலைவர்களும் அப்பகுதி மக்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். பாதிப்படைந்த மக்களை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சென்று பார்வையிட்டுள்ளது. இலங்கை விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இப்படுகொலை நடவடிக்கையானது அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனித நேயமற்ற ஒரு கொடூரத்தையே வெளிப் படுத்துகின்றது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. அ.ஆனந்தி 32
02. அ.விதுசன் 04
03. அ.இராஜகுமாரி 57
04. அ.சத்தியப்பிள்ளை 26
05. அ.குகன் 36
06. கு.தயாழன் 02
07. கு.வலஸ்தீனா 30
08. ப.ஜமேசன் 12
09. ச.மதுசன் 01
10. உதயகுமார் 55
11. உ.மாலினி 27
12. உ.தர்சிகா 01
13. வி.வினோயன் 04
14. வி.தர்சினி 08
15. வி.விஜிதா 35

## 141. சிலாவத்துறை படுகொலை - 02 செப்ரெம்பர் 2007



2007இல் சிறீலங்கா இராணுவத்தினரின் மன்னார் மீதான வலிந்த தாக்குதலின் விளைவாக சிலாவத்துறையைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறத் தொடங்கினர். இவ்வாறு ஓடிக்கொண்டிருந்த 13 குடிமக்களை ஏற்றிக்கொண்டு வான் ஒன்று சிறீலங்கா இராணுவத்தினரின் கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்கானது. இச்சம்பவம் 2007 செப்ரெம்பர் 02ஆம் நாள் இடம்பெற்றது. இராணுவத்தின் மத்தியில் எற்பட்ட இம்மோதலின்போது கொல்லப்பட்ட பொதுமக்களின் உடலம் இரண்டு நாட்களாக அகற்றப்படவில்லை. பழுதடைந்த உடலம் சர்வதேச செஞ்சிலுவைக்

குழுவால் மன்னார் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டது. இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஒரு தந்தை, தாய், 04 வயது மகனும் உள்ளடங்குவார்கள்.

இதிலிருந்து மூன்று வாரங்களின் பின்னர் செப்ரெம்பர் 26ஆம் நாள் வணபிதா நீக்கிலாப்பிள்ளை பாக்கியரஞ்சித் இவ்வாறானதொரு கிளைமோர்த்தாக்குதலில் இதற்கு அருகாமையிலுள்ள இடத்தில் வைத்துக் கொல்லப்பட்டார். அவர் அப்பொழுது தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உணவு விநியோகம் செயது கொண்டிருந்தார். இதில் அவரது உதவியாளரும் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. யேசுதாசன் எலிசபெத், 42
02. ஜெயராஜ் ஒஸ்கார், 20
03. கிருஷ்ணபாலன், 25
04. மணியம் ஜெயராஜ், 50
05. ஜோன்ஸ்,
06. நாகமுத்து சரோஜா, 60
07. புகேந்திரன்
08. புவி சுவேதா, 04
09. செல்வகுமார், 24
10. செல்வகுமார் பிரின்ஸி, 25
11. செல்வராசா ராகுலன், 04

## 142. பெரியமடு படுகொலை - 25 அக்டோபர் 2007



மன்னார் மாந்தை மேற்கில் விவசாயத்தினைப் பிரதான தொழிலாகக் கொண்டு மக்கள் செறிந்து வாழ்கின்ற கிராமங்களில் பெரியமடு கிராமமும் ஒன்றாகும். இடம் பெயர்ந்தோர் குடியிருப்பின் மீது 20.10.2007 அன்று நண்பகல் 12மணியளவில் சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கர்ப்பிணித்தாய் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 3பேர் கொல்லப்பட்டு 9பேர் காயமடைந்தனர். மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து, 2007 ஓகஸ்ட் 25ஆம் நாள் தொடக்கம் இராணுவத்தின் செல்வீச்சுக் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் உள்ள அகதிமுகாம்களில் தஞ்சமடைந்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்து வந்தவர்களில் பெரியமடு 30 வீட்டுத்திட்ட கிராமப் பகுதியில் 23 குடும்பத்தினர் தற்காலிக கொட்டகைகள் அமைத்து வசித்துக் கொண்டிருந்தனர்.

2007 ஒக்ரோபர் 25ஆம் நாள் நண்பகல் 12மணியளவில் இக் குடியிருப்பு பகுதி மீது மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட செல் வீட்டின் முற்றத்தில் வீழ்ந்து வெடித்ததால் வீட்டிற்குள்ளிருந்த நிறைமாதக் கர்ப்பிணி உட்பட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உடல்சிதறிப் பலியானதுடன் அதே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உட்பட எட்டு மக்கள் முழங்காவில், கிளிநொச்சி வைத்தியசாலைகளில் அநுமதிக்கப் பட்டனர்.

கொல்லப்பட்ட கர்பிணித் தாயின் வயிற்றுப்பகுதியை ஷெல்துண்டுகள் வெட்டி சென்றதனால் வயிற்றிலிருந்த இரணைச்சிசுக்களும் வயிற்றிலிருந்து வெளியே வந்திருந்த கோரநிகழ்வும் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## 143. தருமபுரம் படுகொலை - 25 நவம்பர் 2007



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தருமபுரம் கிராம மக்கள் விவசாயத்தினையே வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டு சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள தருமபுரம் மக்கள் குடியிருப்புக்கள் மீது 2007 நவம்பர் 25ஆம் நாள் காலை 7.15 மணியளவில் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான கிபிர் விமானங்கள் எட்டுக்கும் அதிகமான குண்டுகளை வீசின. இவ்வாறு வீசப்பட்ட குண்டுகள் மக்களின் குடியிருப்புக்கள் மீதும் அதனை அண்டிய பகுதிகள் மீதும் வீழ்ந்துவெடித்தன.

இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தருமபுரம் எட்டாம் யுனிற் பகுதியில் வசித்துவந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுமுகம் வர்ணலிங்கம் குடும்பத்தில் மூவர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர். மேலும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் மாணவி ஒருவர் உயிரிழந்தார்.

மேலும் இச்சம்பவத்தில் வர்ணலிங்கத்தின் மகன் கமல்ராஜ் என்பவரின் மனைவி தனயோகம் கால், கையை இழந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காது மரணமானார்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. ஆறுமுகம் வர்ணலிங்கம் 54
02. வர்ணலிங்கம் சரஸ்வதி 49
03. வர்ணலிங்கம் கமிதாநந்தினி 25
04. முருகையா லுபாசினி 15
05. கமல்ராஜ் தனயோகம் 19

## 144. ஐயன்குளம் படுகொலை - 27 நவம்பர் 2007



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள விவசாயக் கிராமமான ஐயன்கன்குத்தில் ஒரே ஒரு பாடசாலையான முல்லை.ஐயன்கன்குளம் அரசினர்

தமிழ்க்கலவன் பாடசாலை இயங்கி வந்தது. மருத்துவ வசதிகள் அற்ற இக்கிராமத்தில் இப்பாடசாலை மாணவர்களுக்கு முதலுதவி பயிற்சி வழங்கப்பட்டு வந்தது. முதலுவதி பயிற்சி பெற்ற மாணவர்கள் அருகிலுள்ள ஆலங்குளம் மருத்துவமனையிலும் மருத்துவர்களுக்கு உதவி வந்தார்கள்.

அவ்வாறே 2007 நவம்பர் 27ஆம் நாளும் முற்பகல் 11மணியளவில் பாடசாலையிலிருந்து ஆலங்குளம் மருத்துவமனைக்கு நோயாளர் காவுவண்டியில் அன்றைய மாவீரர் தின நிகழ்வில் கூடும் பெரும் தொகையான மக்களுக்கு முதலுதவி வழங்கும் நோக்கத்துடன் மாணவர்களும் அவர்களின் பயிற்றுனர்களும் சென்றனர். இவர்கள் சிறீலங்கா ஆழ ஊடுருவும் அணியினரால் மேற்கொள்ளப்படட் கிளைமோர்த் தாக்குதலுக்கு உள்ளானார்கள். 06 மாணவர்களும் இரண்டு சுகாதாரத்தொண்டர்களும், சாரதியும் என 09 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். இரு மாணவிகள் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களது உடலையும் படுகாயமடைந்தவர்களையும் அப்பகுதி மக்கள் உடனடியாக உழவு இயந்திரம் மூலம் மல்லாவி பொதுமருத்துவமனைக்கு எடுத்துச் சென்று அனுமதித்தனர். இத்தாக்குதல் காரணமாக சில நாட்கள் வன்னி முழுவதும் சோகம் தழுவியதாகவே காணப்பட்டது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. அற்புதராசா அஜித்நாத், 22
02. சந்திரசேகரம் டிறோசா, 17
03. காந்தன்
04. கருணாகரன் கௌசிகா, 15
05. நாகரட்ணம் மதிகரன், 15
06. நாகரட்ணம் பிரதீபா, 16
07. நித்தியானந்தம் நிதர்சனா, 13
08. சண்முகவேல் சகுந்தலாதேவி, 17
09. வைரமுத்து கிருஸ்ணவேணி, 25

## 145. புலிகளின்குரல் வானொலி நிலையம் குண்டுவீச்சு - 27 நவம்பர் 2007



கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் ஏ-09 நெடுஞ்சாலை வீதிவழியே உள்ள 155ஆம் கட்டைப் பகுதியிலுள்ள புலிகளின்குரல் வானொலிநிலையம் மற்றும் அதனை அண்டிய பொதுமக்களின் குடியிருப்புக்கள், வர்த்தக நிலையங்கள், பொது நூலகம் என்பனவற்றின் மீது கடந்த 27.11.2007 அன்று மாலை 4.30மணியளவில் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான கிபிர் மற்றும் மிக் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் மூன்று புலிகளின் குரல் நிறுவனப் பணியாளர்கள், அயலவர்கள் மற்றும் வீதியால் பயணித்தவர்கள் என 10பேர் கொல்லப்பட்டனர். மேலும் 10பேர் படுகாயமடைந்தனர்.

புலிகளின் குரல் வானொலி நிலைய உபகரணங்கள் பலத்த சேதத்துக்குள்ளாகின. தமிழரின் மாவீரர் தினமான அன்று புலிகளின் குரல் வானொலி நிலையம் இந்நிகழ்வுகளை தமிழருக்கு

ஒலிபரப்பும் முக்கிய பணியில் ஈடுபட்டிருந்தது. இத்தாக்குதலைக் கண்டித்து UNESCO அமைப்பு தனது கண்டனத்தை வெளியிட்டிருந்தது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. ஆனந்தராசா தெய்வநாயகி, 55
02. கணேசமூர்த்தி சுபாஜினி (புலிகளின்குரல் அறிவிப்பாளர்), 36
03. கறுப்பையா பிரியதர்சனன், 20
04. முரளிதரன் சிந்துஜன், 11
05. இராசலிங்கம் பிரதீபன், 21
06. செல்வராஜா சிவகுமாரன், 46
07. மகாலிங்கம் சுரேஸ்லின்பியோ(புலிகளின்குரல் நிலையப்பணியாளர்), 36
08. தருமலிங்கம் தவமணிதேவி, 62
09. கிருஸ்பிள்ளை தருமலிங்கம்
10. தியாகராசா மகேஸ்வரன், 27

## 146. தட்சனாமடு படுகொலை - 29 ஜனவரி 2008



மன்னார் மாவட்டத்தின் மடுப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மடு கிராமத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகவும் புனித யாத்திரைத் தலமாகவும் விளங்குகின்ற மடுத்தேவாலயம் அமைந்துள்ளது. இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இனமத வேறுபாடின்றி மக்கள் வந்து தரிசிக்கின்ற ஒரு புனித தலமாகவே மடுத்திருப்பதி விளங்குகின்றது. இப்பகுதியில் வசிப்பவர்கள் அனைவருமே கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதுடன் இவர்கள் மடுத்திருப்பதிக்கு தொண்டு செய்வதிலே பெரிதும் அக்கறை கொண்டவர்கள். இங்கு வசிக்கின்றவர்களில் அதிகமானோர், 1990ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடம் எனக் கருதி மடுத்திருப்பதியில் தஞ்சம் புகுந்தவர்களாவர்.

2007 நவம்பர் 13ஆம் நாள் மடுத்தேவாலய வளாகம் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைவீச்சில் 05 வயதுச் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டதுடன் வயோதிபப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். இதன் காரணமாக மக்கள், அச்சமடைந்து பெரியமடு, சூராய், கள்ளியடி, இலுப்பக்கடவை, ஜெயபுரம் போன்ற இடங்களுக்குச் சென்ற பின்னர் அங்கு 50 குடும்பங்கள் அளவிலேயே வசித்துவந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் தீவிரமாக்கப்பட்டுள்ள யுத்தம் காரணமாக திருப்பதி வளாகத்திலுள்ள சிறார்கள் 5 கிலோமீற்றர் தொலைவிலுள்ள தட்சணாமருதமடுவில் இயங்கிவந்த சின்னப்பண்டிவிரிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலே கல்விகற்று வந்தனர். இவர்கள் மடுவிலிருந்து புறப்படுகின்ற பயணிகள் பேருந்திலேயே சென்று வருவார்கள். இங்கு

பாடசாலை மாணவர்களுக்கு தனியாக பொதுமக்களுக்குத் தனியாக என பேருந்து இல்லாமையால் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகின்ற பேருந்திலேயே பயணிப்பார்கள்.

அவ்வாறே 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் நாளும் வழமைபோல் பேருந்தில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். பேருந்து மடுவை அண்மித்ததும், சரியாக 2.30 மணியளவில் சிறீலங்கா ஆழ ஊடுருவும் அணியினரால் இப்பேருந்தின் மீது கிளைமோர்த் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் 09 பாடசாலை சிறார்கள் 01 ஆசிரியர், 01 பாடசாலைச் சிற்றூழியர், 01 மருத்துவ உதவியாளர், 01 பேருந்தின் ஓட்டுநர், 01 பேருந்தின் நடத்துனர், 01 மடுத்தேவாலய உழவூர்தி ஓட்டுநர் என 15பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். 13 மாணவர்கள் உள்ளடங்கலாக 21பேர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதல் நடைபெற்ற சில நிமிடங்களில் தள்ளாடி முகாமிலுள்ள இராணுவத்தினர் அப்பகுதி நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே அப்பகுதி மக்கள் படுகாயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்தனர். இவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் மூன்று மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர். ஒரு சிறுவனும் பாடசாலை அதிபரும் சில நாட்களிர் மரணமானார். இதனைத் தொடர்ந்து இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20ஆக உயர்ந்துள்ளது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. கொன்ஸ்ரன்ரயின் புறுனோ, 13
02. கொன்ஸ்ரன்ரயின் பிறிற்றன், 15
03. அந்தோனி பீரிஸ் ஜெனிஸ்ரன், 12
04. அன்ரன் சதீசன், 11
05. ஞானப்பிரகாசம் ஜோன் மில்டன், 16
06. குணசிங்கம் அன்ரன் டெஸ்மன், 16
07. கிருபைராசா ஜெராட் ஞானகரன், 29
08. க. சண்முகசுந்தரம், 61
09. திருமதி. லெம்பேட் (அதிபர்), 51,
10. பத்மராசா பேனாட் ஜெனார்த்தனன் 12
11. ரஞ்சன் ராஜசூரியர் பிரான்சிஸ்கா மங்களேஸ்வரி, 37
12. ரஞ்சன் ராஜசூரியர் தர்சிக்கா சாமினி, 15
13. செபமாலை மேரியோசப்பின் (ஆசிரியர்), 31
14. சந்தான் பெனாட் றோஜ், 16
15. சூசையப்பு சாம்சன் சொய்சா, 13
16. ஸ்ராலின் சுரேஸ் லெம்பேட், 23
17. விமலநாதன் றீத்தம்மா (தாதி), 33
18. பிரான்சிஸ் சேவியர் ஆன்ஸ் பசிலியோ, 11
19. செல்வசிங்கம் யூட் கொலின் ஜெனி, 12
20. செல்வசிங்கம் யூட் கொஸ்ரன ரெனி, 15

## 147. கிராஞ்சி படுகொலை - 22 பெப்பிரவரி 2008

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேசசெயலர் பிரிவிலுள்ள கிராஞ்சி சிவபுரம் என்னும் கிராமத்தின் முருகன் கோயிலுக்கு அருகாக உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது 2008

22ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 8.15 மணியளவில் சிறீலங்கா வான்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டன.

இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு மாதக் குழந்தை, 04வயதுச் சிறுவன், அவர்களின் தாயார் மற்றும் ஆங்கில ஆசிரியர் ஒருவர் என எட்டுப் பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் படுகாயமடைந்த நிலையில் 12 பொதுமக்கள் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் மிகவும் ஆபத்தான நிலையிலுள்ள 07பேர் உடனடியாக நோயாளர் காவுவண்டி மூலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். மறுநாள் பூமணி என்ற வயோதிபர் சிகிச்சை பலனளிக்காது மரணமானார்.



இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சசிகரன் கௌரிநாயகி, 34
02. சசிகரன் தமிழ்வேந்தன், 06மாதம்
03. சசிகரன் கஜீவன், 04
04. கதிரவேலு திருநீலகண்டன், 79
05. கிருஸ்ணசாமி சிவாநந்தி, 27
06. விஜயகுமார் விதுஜா, 21
07. இந்திரன் லலிதா
08. சுதாகரன் சுமதி, 30
09. தர்மலிங்கம் பூமணி, 68

## 148. திருமுறிகண்டி கிளைமோர்த்தாக்குதல் 23 மே 2008



கிளிநொச்சி இரணைமடு பாரதிபுரம், மலையாளபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் 23.05.2008 அன்று ஹைஏஸ் வாகனம் ஒன்றில் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உறவினர் ஒருவரைப் பார்வையிட்டுவிட்டு தமது வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். வாகனத்தில் பல சிறவர்களும் பயணித்துக் கொண்டிருந்தனர். அவ்வேளை பிற்பகல் 2மணியளவில் திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் நோக்கிச் செல்லும் வழியில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அவர்களின் வாகனம் மீது சிறீலங்கா ஆழ ஊடுருவும் அணியினர் கிளைமோர்த்தாக்குதலினை மேற்கொண்டனர்.

இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 05பேர் உட்பட 15பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். கொல்லப் பட்டவர்களில் நால்வர் சிறுவர்கள். படுகாயமடைந்த மூன்று பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்திசயாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் மேலும் ஒ சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான குடும்பநிலமையைப் பார்த்தால் மிகவும் பரிதாப நிலைமையை உணரமுடியும்

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பெரியசாமி விஜயரட்ணம், 40
02. விஜயரட்ணம் லோகநந்தா, 39
03. விஜயரட்ணம் சிவகலா, 16
04. விஜயரட்ணம் தனு, 09
05. விஜயரட்ணம் விதுசன், 07
06. பன்னீர்ச்செல்வம் அழகுராணி, 42
07. கணேசன் தனராஜ், 34
08. சந்திரசேகரன் கீர்த்திகா, 10
09. சாமிக்கண்ணு கறுப்பையா, 40
10. கறுப்பையா அன்னலட்சுமி, 40
11. அழகன் சுப்பிரமணியம், 40
12. சுப்பிரமணியம் சரஸ்வதி, 40
13. செல்வராசா கலாதேவி, 34
14. சுப்பிரமணியம் தனலட்சுமி, 54
15. சந்திரசேகரம் கார்த்திகா, 10
16. இராஜேந்திரம் கலாவள்ளி, 29

## 149. நாகதம்பிரானாலய அடியவர் கிளைமோர்த் தாக்குதல் - 02 யூன் 2008





முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்துக்களின் ஆலயங்களில் ஒன்றான புதூர்நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவத்திற்காக வருடந்தோறும் பல்வேறுபட்ட பிரதேசங்களிலிருந்து பெருமளவான மக்கள் ஆலயத்திற்குச் சென்று தமது நேர்த்திக் கடன்களை பல ஆண்டுகளுக்கும் மேலாக நிவர்த்தி செய்து வருகின்றனர். எனினும் அக்காலத்தில் வன்னிப் பகுதிகளில் இடம்பெற்று வந்த கிளை மோர்த்தாக்குதல்கள், விமானத்தாக்குதல்கள் காரணமாக ஆலய விழாக்கள், பொதுநிகழ்வுகள் என்பவற்றில் கலந்து கொள்வோரின் எண்ணிக்கைகள் பெருமளவில் குறைந்தன.

அந்தவகையில் 2008 யூன் இரண்டாம் நாள் புதூர் நாகதம்பிரான் ஆலயத்திற்குச் சென்ற பக்தர்களின் எண்ணிக்கை வழமையை விடக்குறைவாகவே இருந்தது. அங்கு வருகை தந்தவர்கள் நீண்ட பயணங்களை மேற்கொண்டே வருகைதந்தனர்.


அதில் குறிப்பாக முல்லைத்தீவு அம்பலவண்பொக்கணையைச் சோந்த நால்வரும் முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியைச் சேர்ந்த குழந்தைகள், பெண்கள் என 06 பேருமாக மொத்தம் 10 பொதுமக்கள் கார் ஒன்றில் ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியூடாக ஆலயத்திற்குச் சென்று தமது வழிபாட்டினை முடித்துவிட்டு தமது வீடு நோக்கி அதே பாதையால் சென்று கொண்டிருந்தர்.இரவு 8மணியளவில் கார் மாங்குளத்திலிருந்து சுமார் 08கிலோ மீற்றர்

தூரத்திலுள்ள கரிப்பட்டமுறிப்பு பகுதியில் சிறீலங்கா ஆழ ஊடுருவும் அணியினர் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலுக்கு உள்ளானது. தந்தை மற்றும் மகன் அடங்கலாக 06 பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்படட்டனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. கணபதிப்பிள்ளை முருகதாஸ், 36
02. முருகதாஸ் நிலவன், 04
03. காத்தாப்பிள்ளை நாகராசா, 57
04. ஐயாத்துரை வசந்தராசா, 28
05. தர்மலிங்கம் யோகேஸ்வரி, 48
06. கணேசலிங்கம் கனிஸ்டா, 09

## 150. புதுக்குடியிருப்பு படுகொலை – 15 யூன் 2008




முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு ஒரு பெரிய நகரமாகும். 2008 யூன் 15ம் திகதியன்று சிறீலங்கா விமானப்படையின் இப்பகுதி மீது பரவலாக குண்டுள் வீசினர். நாலு பொதுமக்கள் கொல்லப் பட்டனர். மேலும் 10 பொதுமக்கள் காயப்பட்டனர். பாடசாலை, வைத்தியசாலை, கோவில், சந்தை, கடைகள் யாவும் சேதமடைந்தன. புதுக்குடியிப்பு வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், கல்வித் திணைக்கள அலுவலகம், சிறீ கந்தசாமி முருகன் கோவில் ஆகியன சேதமடைந்தன. ஏழு வீடுகளும் முற்றாக அழிக்கப்பட்டன.. மேலும் 25 வீடுகள் சேதமடைந்தன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. ஐயாத்துரை சுந்தரலிங்கம், 47
02. சுப்பிரமணியம் சுகந்தன், 19
03. தேவராசா பானுசன், 19
04. வ. நாகதம்பிராசா, 20

## 151. புதுமுறிப்பு இடம் பெயர்ந்தோர் செல்விச்சு - 30 ஆகஸ்ட் 2008



2006ம் ஆண்டு நடுப்பகுதியில் மன்னாரில் ஆரம்பித்துத் தொடர்ந்த மக்கள் இடப்பெயர்வு ஆகஸ்ட் 2008 இல் நெருக்கடி நிலையை அடைந்தது. அச் சமயம் வன்னியிலிருந்து அண்மையில் இடம் பெயர்ந்தோரின் எண்ணிக்கை 150,000 வரை எட்டிவிட்டிருந்தது. ஆகஸ்ட் 2008 இல் கிளிநொச்சி மாவட்டத்தின் புதுமுறிப்பில், இடம் பெயர்ந்த மக்கள் தொகை மிக நெரிசலாகக் காணப்பட்டது. மன்னார் மாவட்டத்தின் பரப்புக்கடந்தான் கிராமத்திலிருந்த மூன்று இளங்குடும்பத்தினர் ஆகஸ்ட் 2007 அளவில் இடம்பெயர ஆரம்பித்திருந்தனர். முதலில் மன்னாரிலுள்ள கள்ளியடிக்கும், பின்னர் அங்கிருந்து முல்லைத்தீவிலுள்ள பாலியாற்றுக்கும் அதன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவிலுக்கும் அதன் பின்னர் அதே

மாவட்டத்தின் வன்னேரிக்குளத்துக்கும் இக் குடும்பத்தினர் இடம் பெயர்ந்திருந்தனர். அவர்கள் மீதான ஷெல் தாக்குதல் இடம் பெறுவதற்கு பத்து நாட்களின் முன்பதாகவே அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள புதுமுறிப்புக்கு இடம் பெயர்ந்திருந்தனர்.

30 ஆகஸ்ட் அன்று சிறீலங்கா இராணுவம், இந்த மூன்று குடும்பங்களும் ஒரு காணியில் அமைத்திருந்த மூன்று இருப்பிடங்களின் மத்தியில் ஷெல்களை வீசியது. இதன் விளைவாக, இன்னமும் பெயரிடப்படாத ஒரு மாதக் குழந்தை, மேலும் ஒரு குழந்தை உட்பட, இந்த மூன்று குடும்பங்களையும் சேர்ந்த ஐவர் கொல்லப்பட்டனர். இப் படுகொலைகளின் தாக்கம் இந்த இளம் பெற்றோரையும் குழந்தைகளையும் மிக மோசமாகப் பாதித்துள்ளது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. விசுவநாதன் திலகேஸ், 35
02. கருப்பையா ஆனந்தராசா, 28
03. ஆனந்தராசா கௌதம், 02
04. குழந்தை, 0

## 152. குமரபுரம் குண்டுவீச்சு – 10 அக்டோபர் 2008



குமரபுரம் கிளிநொச்சி நகர மையத்திலிருந்து ஏழு கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இதன்மீது 10 அக்டோபர் 2008 அன்று நிகழ்த்தப்பட்ட வான்குண்டு வீச்சு, சன அடர்த்திமிக்க கிளிநொச்சி நகரமையம், மற்றும் அதனையண்டிய பகுதிகளில் நீண்ட நாட்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட வான்குண்டு வீச்சுக்களில் ஒன்றாகும். இக் காலம், இடம்பெயர்ந்த மக்களும், உள்ளூர்வாசிகளும், இக் குண்டுவீச்சுக்கள் காரணமாக மிகப்பெரிய அளவில் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்த காலமாகும். மேற்குறிப்பிட்ட குண்டுவீச்சில் ஒரு பாடசாலை ஆசிரியை, அவரது பத்துவயது மகள், மேலுமோர் பெண் ஆகியோர் கொல்லப்பட்டனர். ஆசிரியையின் கணவன், அவரது மகன், மேலும் பல பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர். காயமடைந்த கணவன் இத் துயர சம்பவத்தின் பின்னர் பின்வருமாறு கூறினார்:

*"நான் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், உள்ளூராட்சி அமைப்பு ஊழியன். எமக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. நாம் எமது சொந்த ஊராகிய பச்சிலைப்பள்ளியிலிருந்து ஆகஸ்ட் 2006 இல் இடம் பெயர்ந்தோம். அப்போதிருந்து கிளிநொச்சி குமரபுரத்தில் ஒரு மண்வீட்டைக் கட்டி வாழ்ந்திருந்தோம். அந்த துர்ப்பாக்கிய நாளில் நானும் மனைவியும், அன்று வேலைக்குச் செல்லும் முன்பதாக காலை 6.25 மணியளவில் அன்றைய சமையலில் ஈடுபட்டிருந்தோம். அந்நேரம் குண்டுவீச்சு விமானங்களின் இரைச்சல் கேட்டது. நாம் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு பதுங்கு குழிக்கு ஓடினோம். எமது வீட்டைச் சுற்றி மூன்று குண்டுகள் வீழ்ந்தன. அவற்றில் ஒன்று எமது பதுங்கு குழிக்கு மிகவும் அண்மையில் விழுந்தது. எனது மனைவி தலத்திலேயே இறந்துவிட்டார். மகள் மூர்ச்சையாகிப் பின்னர் வைத்தியசாலையில் இறந்தாள். நானும் எனது மகனும் காயமடைந்ததுடன், குண்டு வெடித்தவுடன் மூச்சு விட சிரமப்பட்டோம். வெடிச்சத்தத்தினாலும், அதிர்ச்சியினாலும் எனது செவிப்புலன் பாதிக்கப்பட்டுள்ளது. நாம் மீண்டும் இடம் பெயர்ந்து இப்போது எனது உறவினருடன் வாழ்கின்றோம். இங்குதான் நாம் எனது மனைவி, மகள் இருவரினதும் ஈமச்சடங்கினை நிறைவேற்றினோம்''.*

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. அருமைநாதன் சந்திரவதனி, 54
02. அருமைநாதக் அர்ச்சிகா, 10
03. மனோகரன் உ'ர, 36

## 153. உருத்திரபுரம் செல்வீச்சு – 24 அக்டோபர் 2008



உருத்திரம் கிளிநொச்சி நகரத்திலிருந்து சுமார் நான்கு கி.மீ தொலைவில் உள்ளது. அக்டோபர் இறுதியில் ஷெல்வீச்சு நடந்தபோது உருத்திரபுரம் சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 350 மாணவர்களுடன் இயங்கிக் கொண்டிருந்தது. அண்மையில் இங்கிருந்து இடம் பெயர்ந்தவர்கள் தமது உடமைகளை எடுத்துச் செல்வதற்காக அடிக்கடி வந்து கொண்டிருந்தனர். இந்த இடத்தின்மீது 24 அக்டோபர் அன்று ஷெல்லடி மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதலின் இலக்கு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. இவ் வரைபடம் இப்பகுதியில் பொதுமக்கள் நிலையங்கள் மிகவும் செறிவாக உள்ளதைக் காட்டுகின்றது. ஒரு தகப்பனும், அவரது வயதுவந்த மகனும் இந்த ஷெல்லடியில் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட தந்தையின் மகனும், மற்றவரின் சகோதரனுமாகிய சதானந்தன் பின்வருமாறு கூறுகின்றார்:

*"தொடர்ச்சியான ஷெல்லடி காரணமாக நாம் கிளிநொச்சியில் உள்ள எமது வீட்டை விட்டு இடம்பெயர்ந்தோம். இருப்பினும், சிலசமயங்களில் நாம் எமது உடமைகளை வீட்டிலிருந்து எடுத்து வருவதற்காக அங்கு செல்வதுண்டு. எமது வீட்டிற்கு அருகாமையில் உள்ள கோவிலின் நிர்வாக சபையின் தலைவராக எனது தந்தை இருந்தார். அன்றைய தினம் நாம் மூவரும், சபையின் ஏனைய உறுப்பினரும் அங்கு சென்று உழவுயந்திரப் பெட்டியில் எமது உடமைகள் சிலவற்றையும், கோயில் பொருட்களையும் ஏற்றிவிட்டு, எனது தந்தையும், சகோதரனும் மோட்டர் சைக்கிளில் உழவுயந்திரத்தின் பின்னால் வந்து கொண்டிருந்தனர். நானும் சிலரும் எமது வீட்டில் சிறிது தரித்து நின்றோம். எனது தந்தை போவதற்கு முன்னர், ஷெல்லடி மிக மோசமாக இருப்பதனால் கவனமாக இருக்கும்படி கூறிவிட்டுச் சென்றார். துர்ப்பாக்கிய வசமாக ஷெல்லடியில் கொல்லப்பட்டவர்கள் அவர்களாக இருந்தனர். இவர்தான் எனது சகோதரனின் இரண்டு வயதுப் பிள்ளை."*


இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. ராமலிங்கம் விஜாயந்தன், 32
02. சின்னையா ராமலிங்கம், 68

## 154. வள்ளிபுனம் குண்டுவீச்சு – 30 அக்டோபர் 2008

வள்ளிபுனம் கனிஷ்ட வித்தியாலயத்திற்கு அருகிலுள்ள குடியிருப்பின் மீது 30 அக்டோபர் காலை 9.30 மணிக்கு நிகழ்த்தப்பட்ட வான்குண்டு வீச்சு ஒரு பதினான்கு வயது வாலிபனைக் கொன்றதுடன், ஆறு பொது மக்களையும் காயத்துக்கு உள்ளாக்கியிருந்தது. முக்கியமாக, குண்டுவீச்சு நடந்த சமயம் கிட்டத்தட்ட 1000 பிள்ளைகள் பாடசாலையில் இருந்தனர். அவர்கள் அனைவரும் உடனடியாக வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மக்கள் இடப் பெயர்வு காரணமாக மாணவர் தொகை 2000 மாக அதிகரித்து அதன் விளைவாக பாடசாலை

இரண்டு நேரப் பாடசாலையாக இயங்கிக் கொண்டிருந்தது. இப் பாடசாலைக்கு 200 மீற்றர் தொலைவில் 190 பிள்ளைகளைக் கொண்ட செந்தளிர் சிறுவர் இல்லம் அமைந்திருந்தது. குண்டின் சிதறல்கள் இந்த இல்லத்தின் காணியிலும், அவற்றில் ஒன்று சிறுவர் விடுதியின் பிற்புறத்திலும், இன்னுமொன்று உணவு உட்கொள்ளும் அறையின் முற்புறத்திலும், மற்றொன்று பிள்ளைகள் பயன்படுத்தும் கிணற்றின் மீதும் வீழ்ந்தன. பிள்ளைகள் எவருமே இதனால் பாதிக்கப்படாமை பேரதிட்டமாகும்.



மேற்குறிப்பிட்ட தாக்குதல் நிகழ்ந்து மூன்று மாதங்களின் பின்னர், சிறுவர் இல்லத்துக்கு அண்மையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஷெல் வீச்சுக் காரணமாக, பெப்ரவரி 2009 இல் இல்லம் சுதந்திரபுரத்துக்கு இடம் பெயர்ந்தது. இந்தப் புதிய இடத்திலும் ஷெல் வீச்சினால் இல்லத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளை கொல்லப்பட்டதுடன் மூன்று பிள்ளைகள் காயம் அடைந்தனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. செல்வராசா சதீஸ்வரன், 15

## 155. உழவனூர் கொத்துக் குண்டு வீச்சு – 29 நவம்பர் 2008



உழவனூர் குடியிருப்பில் அண்மையில் பெரும் வெள்ள அனர்த்தத்தினால் அங்கு இடம் பெயர்ந்து வந்த மக்கள் ஓரளவுக்குத் தம்மைச் சுதாரித்துக் கொண்டிருந்தனர். நவம்பர் 29 அதிகாலை 1.30 க்கு அவர்கள் நித்திரையில் இருந்தபோது 16 கொத்துக் குண்டுகள் அக் குடியிருப்பின் மீது வீசப்பட்டன. வெள்ளம் காரணமாக பதுங்கு குழிகளை அமைக்க முடியாதிருந்த இடம் பெயர்ந்த மக்கள் அடர்ந்த இருளில் வெள்ளத்தினூடாக அண்மையிலிருந்த காட்டினுள் பாதுகாப்புத் தேடி ஓடினர். இக் குண்டுவீச்சில் ஒரு 5 வயதுப் பிள்ளை, ஒரு பொதுமகன் ஆகியோர் கொல்லப்பட்டதுடன், 7 பிள்ளைகள் உட்பட 19 பொதுமக்கள் படுகாயமடைந்தனர். காயமடைந்த பிள்ளைகளில் இருவர் தம் அவயவங்களை இழந்திருந்தனர்.

29 நவம்பர் அன்று அங்கு வெடிக்காதிருந்த ரஷ்யத் தயாரிப்பான குண்டு ஒன்றினது படம் மேலே காட்டப்பட்டுள்ளது. இவ்வகைக் குண்டுகளை கொத்துக் குண்டு என அழைப்பர். ஒரு குண்டுக்குள் மேலும் பல குண்டுகள் பொதிந்துள்ள இக் குண்டுகள் பெரும் பரப்பளவில் சேதம் ஏற்படுத்துவதனால் மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்தக்கூடியவை. இதனால் தற்போது சர்வதேச மட்டத்தில் இவ்வகைக் குண்டுகள் தடை செய்யப்பட்டுள்ளன. பல நாடுகள் இக் குண்டுகளைப் பயன்படுத்துவதில்லை என அறிவித்துள்ளன. இந்தத் தாக்குதலின் பின்னர், வன்னி மீது நடத்தப்பட்ட தொடர் தாக்குதல்களில், ஆறு மாதங்களில் பல தடவைகளில் இக் குண்டுகள் வீசப்பட்டன என அறியப்பட்டுள்ளது. மோசமடைந்து சென்ற நிலமையினால், குண்டுவீச்சு நடக்கும் இடங்களிலேயே சாட்சியங்களைச் சேகரிக்க முடியாமற் போனது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சிவகுமார் சுதர்சன், 05
02. ராமன் ராமசாமி, 80

## 156. வட்டக்கச்சி குண்டுவீச்சுகள் – 1- 20 டிசம்பர் 2008



டிசம்பர் முதலாம் திகதியிலிருந்து 22 ம் திகதிவரை வட்டக்கச்சிப் பகுதியில் நடத்தப்பட்ட பயங்கர ஷெல் வீச்சினால் பல பிள்ளைகள் கொல்லப்பட்டதுடன் அவர்களில் பலர் காயமடைந்தனர். டிசம்பர் முதலாம் திகதி பாடசாலையிலிருந்து வீடு நோக்கி நடந்து கொண்டிருந்த 6 வயதுச் சிறுமி நிரோஜனி அருளானந்தம் ஷெல் வீச்சில் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். டிசம்பர் 17ம் திகதி 5 வயதுக் குழந்தையான ரவிசங்கர் ராஜிதன் ஷெல்லடியினால் கொல்லப்பட அவரது தாயார் படுகாயமடைந்தார். இந்த ஷெல் வீச்சில் மேலும் இரண்டு வளர்ந்தவர்கள் கொல்லப்பட்டனர். சகோதரங்களான 8 வயது சிந்துஜாவும் 10 வயது மிதுஷனும் காலிலும், மார்பிலும், வயிற்றிலும் படுகாயமுற்றனர். இக் காலத்தில் வட்டக்கச்சி மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் 19 பொதுமக்கள் காயமடைந்தனர். வட்டக்கச்சியில் இயங்கிக் கொண்டிருந்த வைத்தியசாலையில் அச்சமயம் கடமையாற்றிய வைத்தியர் கிருஷ்ணபிள்ளை பின்வருமாறு கூறினார்:

"வைத்தியசாலையில் இருந்த 70 உள்நோயாளரும் 550 வெளிநோயாளரும் தம்மை வான்குண்டு வீச்சிலிருந்து பாதுகாத்துக் கொள்ள மிகவும் கஷ்டப்பட்டார்கள். வெள்ளம் நிறைந்த பதுங்கு குழிகளினுள்ளும் பயம் காரணமாக அவர்கள் பாய்ந்தனர். வான் தாக்குதலினால் வைத்தியசாலையின் அறுவைச் சிகிச்சைக் கூடம் சேதமாகிவிட்டது."

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பொன்னையா ராமசந்திரன், 45
02. ரவிசங்கர் ரஜிந்தன், 0
03. செல்வரட்னம் யேசுதன், 29
04. ஜெயரூபன் அஜந்தன், 0
05. யோகலிங்கம் து்யந்தன்
06. அருளானந்தம் நிரோஜினி, 06

## 157. முரசுமோட்டை குண்டுவீச்சு – 31 டிசம்பர் 2008




டிசம்பர் 31 இல் முரசுமோட்டையில் ஒரே இடத்தில் அடுத்தடுத்து நடத்தப்பட்ட இரண்டு குண்டுவீச்சுக்களில் 5 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 16 பேர் காயமடைந்தனர். தாக்குதல்கள் மேலும் தொடர்ந்ததனால் மக்கள் அந்த இடத்தைவிட்டு வெளியேறினர். முதற் குண்டுவீச்சின் பின்னர் ஓடிக்கொண்டிருந்த மக்கள்மீது இரண்டாவது தடவையும் குண்டுவீசப்பட்டபோது அவர்கள் பெரும் திகிலுக்கு ஆளானார்கள்.

இக் குண்டுவீச்சுக்களில் ஒன்று ஐசி.ஆர்சியின் கிளை அலுவலகத்துக்கு அருகில் நடத்தப்பட்டது. இதனால் கொல்லப்பட்ட பசுவொன்று அந்த அலுவலகத்துக்கு முன்னால் கிடந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. நமநாதன் மாரியம்மா, 55
02. நமநாதன் ஜுடா மார்கரட், 24
03. மார்க்கண்டு சிவானந்தன், 30
04. பரராஜசிங்கம் சந்திரபோஸ்

## 158. யாழ்ப்பாணம் 2006-2008




யாழ்ப்பாணம் 1980ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக அங்கிருந்து அகற்றப்பட்ட மக்களின் குடியிருப்புகளில் அமைக்கப்பட்ட படைமுகாம்களினால் சுற்றிவளைக்கப்பட்டுவிட்டது. இப்பிரதேசங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்ட மக்கள், 30 ஆண்டுகளுக்கு மேலாக வேறு இடங்களில்- மேல் நாடுகளில், இடம்பெயர்ந்தோராக-அகதிகளாக, இழப்பீடு எதுவும் வழங்கப்படாது வாழ்ந்து வருகின்றனர். 2006ஆம் ஆண்டிலிருந்து, அவ்வாறு சுற்றிவளைக்கப்பட்ட மக்கள் மீது அரச படையினரும் ஒட்டுப்படையினரும் பயங்கர நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டிருந்தனர்.

இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்த ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒரு குடும்ப நிழற்படமொன்றினை, அரச படையினர் சோதனைக்கு வரும் எவ்வேளையிலும் காட்டுவதற்கு தயாராக வைத்திருக்க பணிக்கப்பட்டிருந்தனர். அவ்வேளையில் அக்குடும்பப்படத்தில் இடம்பெறாத எந்தவொரு நபராவது, அங்கிருந்தால் அவர் சந்தேக நபராகக் கருதப்பட்டு உடனே கைதுசெய்யப்பட்டார். ஒரு இனத்தினது சமூக வாழ்க்கையில் இத்தகு நடவடிக்கைகள் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தின. கொலைகள், காணமற்போதல் ஆகியன அன்றாடச் சம்பவங்களாயின. சோதனை நடவடிக்கை என்ற போர்வையில் நடுநிசியில் வீடுகளின் உள்ளே நுளையும் படையினர் அவ்விடத்திலேயே அங்கு வதிவோரை சுட்டுக் கொன்றனர். இல்லையேல் 'வெள்ளைவாகனத்தில்' கடத்தினர். 2006க்கும் 2008க்கும் இடைப்பட்ட காலத்தில், ஏறத்தாழ 800 அத்தகு நீதிக்குப்புறம்பான கொலைகளையும், 600 மட்டிலான வெள்ளை வாகன கடத்தல் நிகழ்வுகளையும் NESOHR கேசரித்துள்ளது. இந்தப்புள்ளி விபரங்கள் முழுத்தீவிலும் இடம்பெற்ற மேற்கூறிய இரு குற்றங்களுக்குமான தொகையில் அரைவாசியாகும். இக்காலப்பகுதியில் ஒரு விசித்திரமான வார்த்தைப்பிரயோகம், 'தன்னிச்சையான தடுப்புக்காவல்' (Voluntary Remand) யாழ்ப்பாணத்தின் 'பயங்கரக் கலாச்சாரத்தில்' இடம்பெறத் தொடங்கியது. பயமுறுத்தப்பட்டோர் 'மனித உரிமை ஆணைக் குழுவின்' யாழ்ப்பாணக் கிளையில் தமது பாதுகாப்பினை கோரினர். நீதிமன்றின் மூலம் ஆணைக் குழுவினர், அவர்களை அவர்களின் பாதுகாப்பிற்காக சிறையில் வைக்கச் செய்தனர். சிறைகள் சில வேளைகளில் சிறார்கள் அடங்கிய முழுக்குழும்பங்களினால் நிரம்பிவளியத் தொடங்கியது. பாதிக்கப்பட்டோரும் அவர்களின் குழும்பத்தினரும் பயத்தின் நிமிர்த்தம் அநாமதேயமாகக்கூட எந்தவிதத் தகவலினையும் தரத்தயங்கினர். பயமுறுத்தல் சம்பவங்கள்

பற்றிய பல வழக்குகள் நீதிமன்றில் பதியப்பட்டாலும், அவை தரவுகளற்ற வெற்று பதிவுகளாய் அமைந்தன. ஏனெனில் சாட்சிகள் எப்படிப் பாதிக்கப்பட்டோர் வீடுகளிலிருந்தும், கடைகளிலிருந்தும், தெருக்களிலிருந்தும் இழுத்துச் செல்லப்பட்டு பலரின் கண்முன்னால் சுட்டுக் கொல்லப்பட்டனரென்று கூறினர் என்றாலும் பயத்தின், பின்விளைவின் நிமிர்த்தம் குற்றம் புரிந்தோரை, 'இனம் காணப்படாத துப்பாக்கி நபர்கள்' என்றே எப்பொழுதும் குறிப்பிட்டனர்.

## 159. 2009இல் இடம்பெற்ற சம்பவங்கள்

2009இன் ஆரம்பம் தொடக்கம், அப்பொழுது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த ஒரு சிறிய பிரதேசத்தில் சாட்சியங்கள் அகற்றப்பட்டபின் இலங்கைப்படையினர் மேற்கொண்ட இனப்படுகொலைகள் இன்றும் இருட்டிப்புச்செய்தே கிடக்கின்றது.



2008இன் தொடக்கத்திலிருந்தே இடம்பெறப்போகும் பாரிய அழிவுகளுக்கான சமிக்ஞைகள் தென்படத் தொடங்கிவிட்டன. 2007ஆம் ஆண்டிலிருந்தே படையினர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் செல்லும் பொருட்களுக்குத் தடை விதித்தனர். சுனாமிப் பேரழிவுக்குப் பின்னான மீள் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்த பல பன்னாட்டுத் தன்னார்வ நிறுவனங்களும் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட தடைகள் நிமிர்த்தம் வன்னிப் பிரதேசத்தினின்றும் வெளியேறத் தொடங்கினர். அத்தகு தடைகள் காலம் செல்லச் செல்ல மேலும் கடினமாக்கப்பட்டன.

எரிபொருள் மீதான தடை, வன்னியில் அவற்றின் விலையை ஏனைய பகுதிகளிலும் பார்க்க 8-10 மடங்கு கூடுதலாக்கியது. பின்னர் மருந்து வகைகள் வன்னிக்கு வருவதில் சிக்கல்கள் உருவாக்கப்பட்டன. அரச படையினரின் தாக்குதலினால் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை கூடக்கூட, குறையும் தங்கள் மருந்து கையிருப்பிற்காக வைத்தியர்கள், கோரிக்கைகளை முன்வைக்கத் தொடங்கினர். நூல்கள், காகிதாதிகள் இன்றி இன்னலுற்ற கல்விக்கூடங்கள் மீண்டும் மீண்டும் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் மூலம், இடம், தளபாடங்கள் இன்றி அவதியுற்றனர். கடைசியில் உணவுப்பண்டங்களுக்கும் மிகுந்த தட்டுப்பாடு உண்டாகத் தொடங்கியது. உள்நாட்டுப் பயிர்ச்செய்கைகளும் தொடர் எறிகணை வீச்சுக்கள், விமானத்தாக்குதல்களினால் தடைப்பட்டது.

2008இல் இலங்கை அரசு 2002இன் போர் நிறுத்த ஒப்பந்தத்தினின்றும் தன்னிச்சையாக விலகிக் கொண்டது. இது 2002இல் போர் நிறுத்தக் கண்காணிப்பிற்காக வந்த ஸ்கன்டிநேவிய கண்காணிப்பாளர்களை வடகிழக்கிலிருந்தும் விலகச் செய்தது. அதனைத் தொடர்ந்து வன்னிப் பிரதேசத்தினின்றும் எல்லா பன்னாட்டுத் தன்னார்வ நிறுவனங்களும் வெளியேற்றப்பட்டனர். இந்தக் காலகட்டத்திலேயே இனிவரப்போகும் இனப்படுகொலைக்கான சமிக்ஞைகள் சந்தேகமற்றமுறையில் தெளிவாகத் தெரிந்தாலும் ஐ.நா நிறுவனங்கள் வன்னி மக்களின் எதிர்ப்பையும், வேண்டுதலையும் பொருட்படுத்தாது ஏனைய நிறுவனங்களுடன் வெளியேறினர்.

தாக்குதல்களும் பாரிய அளவிலான இடப்பெயர்வுகளும் தொடர்ந்தன. ஜனவரி 2009இல் ஒரு சிறிய நிலப்பரப்புக்குள் தள்ளப்பட்டிருந்த மக்களின் மீதான வகைதொகை அற்ற குண்டுவீச்சுக்கள் மேலும் ஒருபடி அதிகரித்தது. இதனால் NESOHR பணியாளர்கள் அலுவலகத்திற்கு வருவதும் சம்பவ இடங்களுக்குச் செல்வதும் முடியாத விடயமாகிவிட்டதால் அதுவரையில் ஒழுங்காக வெளிவந்துகொண்டிருந்த NESOHR அறிக்கைகளும் முடிவுக்கு வந்தது.

இலங்கை அரசு ஜனவரி மாதத்தில் தனது முதலாவது 'சுடுதல் அற்ற பிரதேசத்தினை' (No Fire Zone-NFZ), பிரகடனப்படுத்திற்று. எனினும் இப்பிரதேசங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தன. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் சுருங்கச் சுருங்க தொடர்ந்து மேலும் இரு NFZ பிரதேசங்கள் சேர்க்கப்பட்டன. பட்டினி பொது நிலையாயிற்று. NFZஇனுள் இருந்த வைத்தியசாலைகள் தொடர்ந்து தாக்கப்பட்டன. நிரந்தரமானதும், தற்காலிகமானதுமான வைத்தியசாலைகள் 30 தடவைகளுக்கு மேலாக குண்டுத்தாக்குதலுக்கு உட்படுத்தப் பட்டதாக பல்வேறு ஆதாரங்களை பல நிறுவனங்களும் வெளிப்படுத்தின. வைத்தியசாலைகள் இடம்பெயர்ந்து, தாக்குதல்களுக்குள்ளானோரின் தொகையும் கூடக்கூட வைத்தியசாலைகள் காயமடைந்தோரை கொண்டு சேர்ப்பிக்கும் திறந்த வெளிகளாயின. போர்ப்பிரதேசங்களுக்கு வெளியேயுள்ள வைத்தியசாலைகளுக்கு படுகாயமடைந்தோரைக் கப்பலில் கொண்டுசெல்வதற்கு ஐ.சி.ஆர்.சி வாரத்தில் 2-3 தடவைகள் வன்னிக்கு வந்தன. கீழே தரப்பட்டுள்ள 2009 மார்ச் மாதத்திற்கான முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினரின் அட்டவணை வெளியே கொண்டு செல்லப்பட்ட காயமுற்றோரின் தொகைக்கு எடுத்துக்காட்டாக அமையும். மேற்குறிப்பிட்ட அதே அறிக்கை அப்பொழுது செயற்பட்ட ஒரே வைத்தியசாலையான 'புதுமாத்தளன்' வைத்தியசாலையில் மார்ச் மாதத்தில் 3551 காயமடைந்த பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டதாகவும், அவர்களில் 546 பேர் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் சுதாதார சேவையில் பணியாற்றும் மூன்று வைத்தியர்களும் தனியார் நிறுவனமான 'பொன்னம்பலம் வைத்தியசாலை'யில் பணியாற்றும் ஒரு வைத்தியருமாக, நான்கு வைத்தியர்கள் காயமுற்றோருக்கு சிகிச்சை அளிப்பதற்காக வன்னியிலேயே தங்கினர். அப்பொழுதிருந்து மே 2009 வரை இவ்வைத்தியர்களினால் போர்ப்பிரதேசத்திலிருந்து அனுப்பப்பட்ட மின்னஞ்சல்களே, வெளியுலகத்தினருக்கான சுயாதீன செய்தி ஆதாரமாக அமைந்தன. ஏப்பிரல் மாதத்தின் பின்பகுதியில் இவ்வைத்தியர்களால் அனுப்பப்பட்ட மின்னஞ்சல்கள் வன்னியின் மிகப் பயங்கரமான நிலைமையினை எடுத்தியம்பின. இக்காலப்பகுதியில் சர்வதேச ஊடகங்களும் ஐ.நாவின் கணிப்பீடுகளை மேற்கோள் காட்டி 2009 ஏப்பிரல் மாதம் கடைசிமட்டும் 7000 பொமக்கள் பொல்லப்பட்டிருப்பதாகவும் 14,000 பொதுமக்கள் காயப்பட்டு இருப்பதாகவும் செய்திகள் வெளியிட்டன. இதே ஐ.நா கணிப்பீடு ஏப்பிரல் மாதத்தில் ஒரு நாளைக்கு 116 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் இது ஜனவரி கடைசியில் ஒரு நாளைக்கு 33 பொதுமக்கள் கொல்லப்பட்ட நிலையிலிருந்து மோசமடைந்திப்பதாகவும் காட்டின.

மே மாதத்தில் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் உச்சக்கட்ட நிலைக்கு சென்றது. ஊடகங்கள் ஐ.நாவை மேற்கோள் காட்டி நாளுக்கு 1000 பேர் கொல்லப்பட்டு வருவதாக செய்திகள் வெளியிட்டன. மே 12 இல் ஒரு வைத்தியரின் மின்னஞ்சலில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

> "NFZ வைத்தியசாலை 12.மே.2009இல் எறிகணைத் தாக்குதலுக்கு உள்ளானது. இது நடைபெற்றிருக்கக்கூடாது. துர்அதிஸ்ரவசமாக முடிவின்றி பேரழிவு தொடர்கின்றது. இன்று காலை 08.00 மணியளவில் முள்ளிவாய்க்கால் புதிய வைத்தியசாலை

எறிகணைகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகியது. இந்நேரம் பரபரப்பானதும் அநேக அளவிலான காயமுற்ற பொதுமக்கள் சிகிச்சைக்காக காத்திருக்கும் நேரமுமாகும். காயமுற்ற பொதுமக்களின் உறவினர்கள், அவர்களைப் பார்ப்பதற்காக வைத்தியசாலைக்கு வந்துகொண்டும் சிலர் அவர்களுக்கு காலை உணவினைக் கொடுத்துக்கொண்டும் இருந்தனர். எறிகணை நோயாளரை அனுமதிக்கும் கூடத்தின் முன்பாக வீழ்ந்தது. 26 நபர்கள் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். வேறுசிலர் பின்னர் இறந்தனர். 43 உடலங்கள் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது. வைத்தியர்களுக்கும் வைத்தியசாலைக்கும் பாதுகாப்பற்ற சூழலில் பணிபுரிவதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றது. இப்படியான பேரழிவான நிலையில்கூட சில பணியாளர்கள் வேலையில் ஈடுபட்டிருந்தனர். எங்கள் முன்னிலையில் தவிர்க்கப்படக்கூடிய இறப்புக்கள் இடம்பெறுகின்றன.
நாங்கள் என்ன செய்யலாம்? அப்பாவிகளுக்கு யார் உதவுவர்? மேலும் தாக்குதல்கள் இடம்பெறுமெனில் எல்லாவிதமான சேவைகளும் ஸ்தம்பிதமடைவதனால் ஆயிரக்கணக்கான நோயாளிகளின் உயிர்களைக் காப்பாற்ற முடியாமற்போகும். முல்லைத்தீவு பிரதேச வைத்திய சேவைகள் பணிப்பாளர் நோயாளிகளை அனுமதிப்பதற்கு ஒழுங்குகள் செய்துகொண்டிருந்த வேளை ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்."

மே 20ஆம் திகதியுடன் முற்றுமுழுதுமான மக்களும் தொடர்ந்து மழையாகக் கொட்டிய எறிகணை தாக்குதல்களினால் பிரதேசத்தை விட்டு வெளியேறிவிட்டனர். இம்மக்கள் தொடர்ந்து மனிதாபிமானமற்ற முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டனர். படுகொலைகளின் முழு விபரங்களையும் அறிந்த மக்கள் இவ்விதமாகத் தடுத்துவைக்கப்பட்டு, தங்களின் அனுபவங்களை வெளியில் கூறமுடியாத நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். தமிழர் தாயகத்தில் நிலைகொண்டுள்ள அச்சுறுத்தல் தந்திரங்களின் மூலம் அவர்கள் நீண்ட காலத்திற்கு தமக்கு நேர்ந்த அவலங்களை வெளியில் சொல்லமுடியாது தடுக்கப்பட்டுவர்.

உலகம் 2009 இல் நடந்தேறிய அவலங்களின் முற்றுமுழுதுமான விபரங்களை எதிர்நோக்கி நிற்கின்றது…

| இல | திகதி | கப்பலின் பெயர் | அனுப்பப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 02.03.2009 | Seruwila 2 | 148 |
| 2 | 04.03.2009 | Green Ocean | 344 |
| 3 | 06.03.2009 | Green Ocean | 402 |
| 4 | 14.03.2009 | Green Ocean | 447 |
| 5 | 16.03.2009 | Green Ocean | 482 |
| 6 | 20.03.2009 | Green Ocean | 454 |
| 7 | 26.03.2009 | Green Ocean | 493 |
| 8 | 28.03.2009 | Green Ocean | 496 |
| 9 | 30.03.2009 | Green Ocean | 540 |
| மொத்தம் | | | 3806 |

## 160. படங்களில்




“

எங்களை விட்டுப் போகாதீர்கள்” செப்டம்பர் 2008இல் கிளிநொச்சி மக்கள் ஐநா முன்றலில் ஆர்ப்பாட்டம்.



300,000 மக்கள் ஒரு சூடற்ற பிரசேத்தினுள் தள்ளப்படுகிறார்கள்.



சர்வதேசம் வந்து மீட்கும் என்ற எதிர்பார்ப்புடன் சூடற்ற பிரதேசத்துனுள் வாழும் மக்கள்.



சூடற்ற பிரதேசம் குண்டு மழையில்



சூடற்ற பிரதேசத்தினுள் பெற்றோரும் குழந்தைகளும்



ஒரு மனித அழிவுக் காட்சி



நாம் அழுவதை யார் கேட்பார்கள்?



வைத்தியசாலைகள் விதிவிலக்கல்ல



குண்டுகளில் வெள்ளை பொஸ்பரஸ்


வெள்ளை பொஸ்பரஸ் எரிகாயம்

# பிற்சேர்க்கை

## பி-1. பூந்தோட்டச்சந்தி படுகொலை – 10 ஆகஸ்ட் 1985

வவுனியா நகரிலிருந்து கிழக்கே மூன்று கி.மீ. தூரத்தில் பூந்தோட்டம் அமைந்துள்ளது. வயல்களாற் சூழப்பட்ட இக்கிராமத்தில் அதிகமானவர்கள் விவசாயிகளாவர்.

10.08.1985 அன்று காலை 7மணியளவில் வழமைபோல் மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளில்ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். சந்தைக்குப் பொருட்கள் வாங்க மற்றும் விற்கச்செல்வோர், வைத்தியசாலைக்குச்செல்வோர், பாடசாலை செல்வோர் எனப் பூந்தோட்டம் வீதியால் அதிகளவான மக்கள் பயணம் செய்தனர்.அந்த நேரம் அவ்வீதியால் வாகனத்தில் வந்த காவற்றுறையினர் வீதியில் பயணித்துக் கொண்டிருந்தபொதுமக்கள் மீது துப்பாக்கியால் சுட்டதில் பத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர்காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 வெள்ளையன் தேவதாஸ் லொறி கிளினர் 20
02 பொன்னம்பலம் வில்வராஜ் வியாபாரம் 22
03 கதிரேசு சுந்திரசேகரம் மருந்துத் தொழிலாளர் 25
04 சிங்காரம் நாகலிங்கம் தொழிலாளி 33
05 முனியாண்டி மூக்கன் தொழிலாளி 34
06 வீரமாரெட்டியார் கோவிந்தராஜ் வியாபாரம் 38
07 சின்னக்கருப்பன் கிட்ணசாமி தொழிலாளி 40
08 துரைராஜா நடேசபிள்ளை உதவி முகாமையாளர் 43
09 கறுப்பையா ராமராஜ் வியாபாரம் 48
10 கோவிந்தசாமி சிங்காரவேலு கமம் 63

## பி-2. கள்ளம்பற்றைச்சந்தி படுகொலை – 10 ஆகஸ்ட் 1985

திருகோணமலை மாவட்டத்தின் புகழ் பெற்ற இடங்களில் ஒன்றான திரியாய்க் கிராமம் திருகோணமலையிலிருந்து ஒரு கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது.1985ஆம் ஆண்டு இனக்கலவரத்தினால் பாதிப்படைந்த மக்கள் அகதி முகாம்களிற் தஞ்சமடைந்திருந்தனர். முகாமிற்கு வந்த இராணுவத்தினர் வன்முறைகளால் இடம் பெயர்ந்து வந்திருந்த மக்கள் ஒன்பது பேரைக் கைது செய்து அழைத்துச் சென்றார்கள். இவ்வாறு கைதுசெய்து கொண்டு செல்லப்பட்ட மக்கள் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் சடலங்களாக கள்ளம்பற்றைச் சந்தியிலிருந்து மீட்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும்இடம் பெயர்ந்து வந்த தமிழர்கள் ஆவர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 நாராயணன் ஜெகநாதன் கல்லுடைத்தல் 48
02 சுப்பிரமணியம் நாராயணபிள்ளை கிராமசேவகர் 45
03 மாணிக்கம் கிருஸ்ணமூர்த்தி - -
04 நாகேஸ் -

## பி-3. துவரங்காடு வரோதயநகர் படுகொலை – 17 ஆகஸ்ட் 1985

திருகோணமலை நகரிலிருந்து நான்கு மைல் தொலைவில் வரோதயநகர்க் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்திற் பெரும்பாலானவர்கள் விவசாயிகளும் கூலித் தொழிலாளர்களும் ஆவர். 17.08.1985 அன்று நண்பகல் 12.30 மணியளவில் ஆயுதம் தரித சிங்களக் குழுவினர் வெள்ளை வாகனத்தில் கிராமத்திற்குள் நுழைந்து அப்பகுதி மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் பத்துப் பேர் உயிரிழந்தனர். எட்டுப் பேர்படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01 இரத்தினம் குபேந்திரராசா குழந்தை 01
02 கந்தன் மாணிக்கம் முதியவர் 70
03 கதிர்காமு நாகேஸ்வரி தொழிலாளி 42
04 குணராசா மதியழகன் மாணவன் 08
05 குணராசா கெங்காதேவி தொழிலாளி 33
06 குணராசா வசிகரன் குழந்தை 01
07 தேசிங்கம் இன்பமலர் சிறுமி 06
08 தேசிங்கம் ஜெயந்தி தொழிலாளி 12
09 வெள்ளையன் திருச்செல்வம் தொழிலாளி 32
10 சீனியர் மாணிக்கம் தொழிலாளி 67

## பி-4. ஒதியமலைக் சிவசேகரம் சத்தியநாதன் அவர்க்களின் வாக்குமூலம்.

*“நான் பிறந்து வளர்ந்த பூர்வீகக் கிராமம் வெலிஓயா எனச் சொல்லப்படும் சிங்களக் குடியேற்றத்தின் எல்லைக் கிராமமான ஒதியமலைக் கிராமம் ஆகும். அதற்கு அடுத்தாற்போல் பெரியகுளக் கிராமமும் காணப்படுகின்றது. 1984ம் ஆண்டு மார்கழி மாதம் இரண்டாம் திகதியன்று வெலிஓயாக் கிராமச் சிங்களக் காடையர்களும், சிறீலங்கா இராணுவத்தினரும் இணைந்து ஒரே இடத்தைச் சேர்ந்த இருபத்தேழு அப்பாவிப் பொதுமக்களையும், அதற்கு முதல் நாள் ஐந்து பொதுமக்களையும் கைதுசெய்து சென்றனர். கென்பாம் என்கின்ற இடத்தில் வைத்து இவர்கள் அனைவரையும் சுட்டுக் கொன்றார்கள். அதன் தொடராக இவர்கள் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வருவதும் கண்ணிற்படுபவர்களைப் பிடித்துச் சுடுவதுடன், இங்கு வசித்த தமிழ் மக்களின் பொருட்களைக் கொள்ளையடிப்பதும், வழக்கமாக இருந்தது. குறிப்பாக விளைபொருட்களையும் விவசாய இயந்திரங்கள், துவிச்சக்கரவண்டிகளென என்னவாக இருந்தாலும் எடுத்துச் சென்றுவிடுவார்கள்.*

*இவ்வாறான அட்டூழியங்கள் இடம்பெற்று வரும்வேளை குறிப்பாக 1986ம் ஆண்டு பங்குனி மாதம் இருபத்தாறாம் திகதி காட்டுப் பகுதியால் வந்த இராணுவத்தினர் மாலை 3.00 மணியளவில் திருகோளம் என்று சொல்லப்படும் இக்கிராமத்தில் சுப்பிரமணியம் என்பவரின் கடைக்குள் வைத்து கார்த்திகேசு விசுவலிங்கம், பழனியாண்டி செல்லத்துரை என்ற இருவரையும் உயிருடன் கடைக்குள் வைத்துத் தீமூட்டி எரித்த சம்பவம் நடந்தது. இச்சம்பவம் நடந்ததால் பெரியகுளம் கிராமத்தைச் சேர்ந்த அப்புத்துரை என்பவர் அவருக்குச் சிங்களம்*

தெரியுமாதலால் அந்தக் காடையர்களிடம் சென்று "ஏன் இவ்வாறான அநியாயம் செய்கிறீர்கள், யார் உங்களுக்கு அதிகாரம் தந்தது" என்று கேட்டதற்காக அவரின் வாய்க்குள் துப்பாக்கியாற் சுட்டு ஜெயம் என்பவரின் வீட்டிற்குள் போட்டு எரித்ததுடன், தொடர்ச்சியாக அப்பகுதியிலிருந்த பதினைந்திற்கும் மேற்பட்ட வீடுகளை எரித்த பின்னர் படையினர் காடுகளுக்குள் பதுங்கியிருந்தார்கள்.

அதற்கு அடுத்தநாள் விடியற்காலை பதவியாப் பகுதியிலிருந்து வாகனங்களில் இராணுவத்தினர் வந்ததைத் தொடர்ந்து நெடுங்கேணிப் பிரதேசத்தைச் சுற்றிவளைத்தனர். இதன்போது இராணுவம் கிராமத்துள் இருக்கிறதா இல்லையா எனத் தெரியாமல் வந்த பல அப்பாவி மக்கள் அதனிடம் மாட்டிக்கொண்டார்கள். அப்படி வந்தவர்களிற் பலர் சுடப்பட்டார்கள். குறிப்பாகச் சொல்லப்போனால் வினாசிக்குளத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் என்பவரும் அவருடைய இளைய மகனும் என்னுடைய கடைக்கென வந்தவிடத்தில் அந்த நேரம் நானும் எனது உறவினரான இராஜரட்ணம் என்பவரும் ஓரிடத்தில் ஒளிந்திருந்தோம். என்னைத் தேடி வந்த பொன்னம்பலத்தின் மகனை இராணுவத்தினர் கலைத்துச் சுட்டார்கள். அதன் பின்னர் அவனைத் தேடி வந்த மூத்த சகோதரன் தம்பி இறந்து இருப்பதைப் பார்த்து அழுதுகொண்டிருந்த சமயம் அவரையும் சுட்டுவிட்டு வல்லிபுரத்தின் மகனான பேரின்பநாயகம் என்பவரையும் பழம்பாசிக் கிராமத்தைச் சேர்ந்த காசிப்பிள்ளையின் மகனான கைலையையும், சிவலிங்கத்தின் மகனையும் சுட்டுக் கொலை செய்தனர். ஈசன் என்பவருக்கு கையில் வெட்டுக்காயம் பட்ட நிலையில் உயிர் தப்பி வந்தார்.

இப்படியாக இரண்டு நாட்களாக பாரிய அட்டூழியங்கள் செய்தார்கள். கிட்டத்தட்ட பதின்நான்கிற்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கொலை செய்திருந்தார்கள். இப்படியாக இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கொலைச் சம்பவங்கள் இடம்பெற்று வந்தவண்ணமிருந்தது. இவ்வாறான செயற்பாடுகளை நடத்தி இப்பிரதேச வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் அங்கிருந்து வெளியேற்றி அப்பிரதேசத்தை ஒரு சிங்களக் குடியேற்றப் பிரதேசமாக்குவதே அவர்களின் குறிக்கோளாக இருந்தது. ஏனென்றால் சிலோன் தியேட்டர் மற்றும் அங்கு காணப்பட்ட டொலர்பாம், கென் பாம் போன்ற பண்ணைகளிலும் தமிழர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு 1984ம் ஆண்டு காலப்பகுதியில் இவ்விடங்களை விட்டு வெளியேற வேண்டுமென்ற நேரடியான இராணுவ அச்சுறுத்தல் இருந்தது. அதாவது 1984ம் ஆண்டு ஆறாம் மாதமளவில் நேரடியாகத் துண்டுப் பிரசுரங்கள் மூலம் இதனைத் தெரிவித்து தமிழரை வெளியேற வைத்த சம்பவம் இடம்பெற்றது. அதன்பின்னர் தென்னிலங்கையின் சிறைகளிலிருந்த ஆயுட் கைதிகளுக்கு ஆயுதங்கள் வழங்கி புனர்வாழ்வு என்ற பெயரில் இங்கு குடியேற்றி அவர்களையே இராணுவக் காடையர்களாகவும் பயன்படுத்தி வந்தனர். இவர்களது கொலைக் கொள்ளைச் சம்பவங்கள் 1987ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்குப் பின்னர் வரை நீண்டு சென்றது."

## பி-5. யாழ்.மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை தோமஸ் சவுந்தரநாயகம்

"யேசுவில் அன்புமிக்க சகோதரர்களே பத்து வருடங்களுக்கு முன் இந்த இராயப்பர் ஆலயத்திலே அடைக்கலம் தேடி மக்கள் வந்தார்கள். அந்த நேரத்திலே திடீரென்று வானத்திற்தோன்றிய ஆகாய விமானங்கள் குண்டுவீச்சினை மேற்கொண்டன. அதனால் வந்த மக்களையும் இந்த ஆலயத்தையும் அவர்களது உடைமைகளையும் சின்னாபின்னமாக்கின. அந்தக் கோரநிகழ்வு இந்த ஆலயத்திலே நடைபெற்றது. போர்க் காலங்களிலே எவ்விதமாக மக்கள், போராளிகள், இராணுவத்தினர் நடந்துகொள்ளவேண்டுமென்று சில கட்டுப்பாடுகள் இருக்கிறது. அது ஜெனிவாவிலே எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது

மக்கள் கூடும் பொது இடங்கள், வைத்தியசாலைகள், ஆலயங்களென பொதுவான கட்டடங்கள் மீது குண்டுத் தாக்குதல் மேற்கொள்வது தவிர்க்கப்படவேண்டும் என்பதாகும். பொதுவாக இராணுவத்தினர் இதை அனுசரிக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இலங்கைத் தீவில் போர் நிகழும் போது இவற்றைப் பற்றியெல்லாம் இராணுவம் அக்கறைப்பட்டதாக இல்லை. எத்தனை ஆலயங்கள் மீது சிறீலங்கா இராணுவம் குண்டுகளை வீசிச் சுக்குநூறாக இடித்தது மட்டுமல்லாது, அதில் தஞ்சங்கோரி வந்த மக்களும் மரிக்கவேண்டியேற்பட்டது. அவ்விதமாகத்தான் பத்து வருடங்களுக்கு முன்பு இந்த இராயப்பர் பேராலயத்திலே நடந்த அந்தக் கோரச் சம்பவத்தை நினைவு கூர்ந்து இறந்து போனவர்களுக்காக இறைவனிடம் மன்றாட நாம் அனைவரும் வந்திருக்கின்றோம். இறைவன் இவர்களுக்கு இன்பமும் சாந்தியும் வழங்கவேண்டுமென்று மன்றாட வந்திருக்கின்றோம். பத்து வருடங்களுக்கு முன்பு உயிருடன் இருந்தவர்கள் இன்று இல்லை. இவர்களுடைய நினைவுகளை மீட்கத்தான் இங்கு வந்திருக்கின்றோம். அவர்களும் நம்மைப்போல் இந்தப் பகுதிகளில் உலாவி வாழ்ந்தவர்கள். அவர்களும் இந்தப் போர்க்காலக் கொடுமைகளையெல்லாம் அனுபவித்தவர்கள். ஆனால் இந்தச் சகோதரர்கள் எல்லாம் இந்த இடத்தில் துடிதுடிக்க மரித்திருக்கிறார்கள். இப்படியான சம்பவம் எங்கள் மத்தியில் இந்தப் போர்க்காலச் சூழலில் பல இடங்களில் நடந்திருக்கிறது.

பட்டணத்தில் இருக்கின்ற புனித யாகப்பர் ஆலயத்திலே அதிகாலை வேளையிலே பொம்மர் விமானங்கள் வந்து அந்தப் பெரிய ஆலயத்தின் மேலே நான்கு குண்டுகளைப் போட்டதால் அப்போது அங்கே இறைவனைப் தொழுவதற்கு வந்திருந்த முப்பதிற்கும் அதிகமானவர்கள் உடல் சிதறி மரித்தது நாங்கள் அனைவரும் அறிந்ததே. இவ்விதமாக எமது யாழ்.பிரதேசங்களிலே வடக்கிலும் கிழக்கிலும் இந்தப் போரினாலே எத்தனையோ மக்கள் அகால மரணமுற்றிருக்கிறார்கள். துடிக்கப் பதைக்க இறந்திருக்கிறார்கள். இவர்களை இழந்து பரிதவிப்பவர்கள் எத்தனையோ பேர். இந்தத் தாய்மார்களுக்கு எவ்விதமாக ஆறுதல் சொல்வோம். கணவனை இழந்த மனைவியர்க்கு எவ்விதமாக ஆறுதல் சொல்வோம். பிள்ளைகளை இழந்த, சகோதரர்களை இழந்த அந்தக் குடும்பங்களிற்கு எவ்விதமாக ஆறுதல் சொல்லலாம். எம்மால் ஆறுதல் சொல்லவே முடியாது. எல்லாம் வல்லவராக இறைவன், அனைத்தும் வாய்ந்தவராகிய கடவுள் அவர்களிடந்தான் நாங்கள் மன்றாடப் போகிறோம். எங்களுடைய சோகத்தையும் எங்களுடைய துன்பத்தையும் எங்களுடைய கண்ணீர்க் கம்பல்களையும் ஆண்டவர் துடைப்பாராக. இவ்விதமாக எங்கள் மத்தியில் நடக்கக்கூடாது. இப்படியான பேராபத்துக்களிலிருந்து எங்களைக் காப்பாற்றும். எங்கள் மத்தியில் இவ்விதமான அசம்பாவிதங்கள் எங்கள் மண்ணில் நடக்கக்கூடாது. நூற்றுப்பதினாறு பேரின் உயிர்களைப் பறிகொடுத்தவர்களாக வந்திருக்கின்ற இந்த வேளையில் எல்லாம் வல்லவராகிய இறைவன் எங்களுடைய கண்ணீரைத் துடைக்கும் படியாக மன்றாடுகின்றேன். உயிருடன் இருக்கும் எங்களுக்குப் பாதுகாப்பாளனாகவும், சரீரத்தின் கோட்டையாகவும் இருக்கும்படியாக மன்றாடி இறந்த நூற்றுப்பதினாறு உயிர்களையும் இழந்த உறவினர்களுக்காகவும் நாங்கள் மன்றாடுவோம். அவர்களுக்கு எங்களின் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, இறைவனைப் பிரார்த்திப்போமாக."

## பி-6. வவுனியாப் படுகொலைகள் தொடர்பாக சின்னத்தம்பி வெங்கடாசலம்:

"நான் நாற்பத்தைந்து வருடங்களுக்கும் மேலாக வவுனியாவில் வசித்து வருகின்றேன். ஆரம்ப காலத்தில் அறுவைக்காடு ஆணி என்னுமிடத்தில் இரவல் காணியிற் தான் வாழ்ந்து வந்தோம். அந்த நேரம் கணபதிப்பிள்ளை என்னும் ஒருவரிடம் தான் பல வருடங்களாகக் கூலி வேலை செய்து சீவித்து வந்தோம்.

ஒரு நாள் மாமடுப்பகுதியில் இராணுவத்தினர் வெட்டிக் கொலை செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டு எங்கள் ஊரைச் சேர்ந்த அனைவரும் சில நாட்கள் காடுகளிற் பதுங்கியிருந்துவிட்டுத் திரும்ப வந்து கணபதிப்பிள்ளையின் தம்பியாரான பேரம்பலம் என்பவரின் காணியில் இருந்தோம். அவ்வாறு வசித்து வரும்வேளை 1977ம் ஆண்டு ஒரு நாள் அதிகாலை மகாறம்பைக்குளத்தில் குண்டு வெடித்ததில் சிங்கள இனத்தவர்கள் தமிழர்களைத் தாக்கினார்கள். இதனால் இரண்டு மூன்று நாட்களாகக் கஸ்ரப்பட்டு பற்றைக் காடுகளுக்குள் ஒளிந்திருந்தோம். அந்த நேரந்தான் பல தமிழர்களுடைய கடைகளை எரித்தார்கள். இதனால் நாங்கள் பொருட்கள் வாங்கமுடியாது பட்டினி இருக்கவேண்டிய நிலை வந்தது. அதன் பின்னர் மாமடுவில் சண்முகம் தோட்டத்தில் எட்டு வருடங்களாக இருந்தோம். அந்த நேரம் வயலும் தோட்டமும் செய்து வந்தோம். சிங்களவர்கள் அனைவருடனும் ஒற்றுமையாகத் தான் இருந்தோம்.

திடீரென ஏதோ ஒரு பிரச்சனை என்றவுடன், தமிழர்கள் அனைவரும் இவ்விடத்தை விட்டுப் போய்விடவேண்டும் இல்லாவிட்டால் வீடுகள் அனைத்தையும் எரித்துவிடுவோமெனப் பயமுறுத்தினார்கள். உடனே நாங்களும் எங்களுடன் ஏழு குடும்பங்களும் ஒன்றாக உயிருக்குப் பயந்து அவ்விடத்தை விட்டு எந்தவிதப் பொருட்களையும் எடுக்காது அப்படியே விட்டுவிட்டு இடம்பெயர்ந்து பூந்தோட்டப் பகுதியில் ஒரு காணியில் கூலி வேலை செய்து அங்கேயே வசித்து வந்தோம். அந்த நேரம் 1984ம் ஆண்டு பத்தாம் மாதம் அளவில் பாற்சபையில் ஒரு குண்டு வெடித்தது என்றும் இரண்டு காவற்றுறையினர் இறந்தார்கள் என்றும் கதைத்தார்கள். அன்றைய தினம் காலை பூந்தோட்டம் சந்தியில் இருக்கின்ற ஒரு கடைக்குப் பொருட்கள் வாங்குவதற்காகப் போயிருந்தேன். அந்த நேரம் அந்தக் கடையில் வேலை செய்த நாதன் என்பவர் காவற்றுறையினர் சுட்டுக் கொண்டு வருகிறார்கள் ஆனபடியால் இவ்விடத்தில் நிற்காமல் எல்லோரும் ஓடுங்கோ என்று சொல்லிக்கொண்டு வந்ததால் அவ்விடத்தில் நின்ற மக்கள் அனைவரும் ஓடிவிட்டார்கள். எங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. உடனே கடைக்குள்ளிருந்த கட்டிலுக்குக் கீழ் படுத்திருந்தோம். சரமாரியாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டுக்கொண்டேயிருந்தது. அவ்வேளை தமிழன் தமிழன் என்று சிங்களத்தால் கத்தும் சத்தம் கேட்டது. எங்களுக்கு ஒரே பயமாக இருந்தது. அதேவேளை என்னுடைய வீட்டுப் பக்கம் எவ்வாறு பிரச்சனை இருக்கிறதென்றும், இன்னொரு காணியில் வேலை செய்துகொண்டிருந்த மகன் குறித்தும் வீட்டின் மிகுதிப் பேர் அனைவரும் என்ன ஆனார்கள் என்றும் தெரியாத நிலையில் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

ஒரு மணித்தியாலத்தின் பின் நிலைமை ஓரளவு சுமுகமாகி விட்டது. காவற்றுறையினர் அனைவரும் போனபின் நான் வீடு செல்லும் வழியில் சோமாவதி கடைக்கு முன்னால் ஒருவரும் சந்தியில் இருவரும் கொல்லப்பட்டுக் கிடந்ததை என் கண்ணாற் காணமுடிந்தது. அன்றைய தினத்தில் மாத்திரம் ஒன்பது பேர் வரை சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்கள். அதன் பின்னர் ஒரு மாதிரி வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். அதன் பின்னர் இரண்டு நாட்கள் பயத்தின் காரணமாக வீட்டிற்குள்ளேயே இருந்தோம். இப்படியாகக் கஸ்ரப்பட்டுக் கொண்டிருக்கும் நேரம் தொழிலேதும் செய்ய முடியாத நிலையில் மண்ணெண்ணை, பெற்றோல் வாங்கி சின்னக் கடை ஒன்று போட்டு வியாபாரம் செய்துகொண்டிருந்தேன்.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரச்சனைகள் இன்னுமின்னும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. அடிக்கடி இராணுவம் வருவதும் யாராவது விடுதலைப் புலிகள் வந்தார்களா என விசாரிப்பதும் பின்னர் சோதனை செய்வதுமாக இருந்தது. அத்துடன் திடீர் திடீரென ஊடரடங்குச் சட்டம் போடுவதுமாக இருந்தது. இந்த நிலையில் இங்கிருந்து சீவிக்க முடியாது என்ற நிலையில் அனைத்தையும் விட்டுவிட்டு கையிற் கிடைத்தவற்றை எடுத்துக்கொண்டு இரவோடு இரவாக காக்கையன்குளம் நோக்கிச் சென்றோம். அங்கு சிறிய கொட்டில் போட்டு விவசாயம் செய்து வந்தோம். அப்படியாகப் பதினொரு வருடம் வசித்து வரும்வேளை ஒருநாள் சிறீலங்கா இராணுவம் வந்து நீங்கள் அனைவரும் வந்து இவ்விடத்தில்

இருக்கக்கூடாது இன்று மாலை 4.00 மணிக்கு முன்னர் வெளிக்கிடவேண்டும் இல்லாவிட்டால் சுட்டு வீட்டுக்குள் போட்டு எரித்துவிடுவோமெனப் பயமுறுத்திச் சென்றார்கள். உயிருக்குப் பயந்து சமைத்த உணவைக்கூட நாயிற்குப் போட்டுவிட்டு கையில் எடுக்கக்கூடியவற்றை எடுத்துக்கொண்டு திரும்ப எமது பழைய இடத்திற்கே வந்துவிட்டோம்.

இந்நிலையில் விதைத்த வெள்ளாமை தொடக்கம் வீடுகட்டுவதற்கென சேர்த்து வைத்திருந்த பொருட்கள் வரை எடுக்கமுடியாத நிலையில் விட்டு விட்டு வந்தோம். இப்படியாக இடம்மாறி இடம்மாறி அலைந்ததால் கூலி வேலை செய்து கஸ்ரப்பட்டு உழைத்த அனைத்தும் வீணாகப் போய்விட்டது. தற்போது நாங்கள் இருக்கும் காணிகூட பணம் கொடுத்து வாங்கமுடியாத நிலையில் தவணை முறையில் கூலி வேலை செய்து பணம் தருவதாக கூறி விவசாயம் செய்து வருகிறோம். எந்த வித அடிப்படை வசதியும் இல்லாத நிலையில் இவ்விடத்திலிருந்து தொடர்ந்து கஸ்ரப்பட்டுக் கொண்டே இருக்கிறோம்.''

# I.P.K.Fன் தமிழினப் படுகொலை

1987-1989

**NESOHR**

## அறிமுகம்

மாபெரும் தடங்கல்களுக்கு எதிராகத் தமது இறையாண்மையை வென்றெடுக்கும் தமிழ்மக்களின் போராட்டத்தில் அவர்களின் வரலாற்றைப் பதிதலும் நினைவு கூருதலும் அத்தியாவசியமான ஒரு பகுதியே. இவ்வெளியீடும் அவ்வரலாற்றைப் பதிவுசெய்யும் அந்த அவசியச்செயற்பாட்டின் ஒரு பகுதியே ஆகும்.

இலங்கை இந்திய அரசாங்கங்களுக்கிடையில் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில் இந்தியப் படையினர் இலங்கைத் தீவின் தமிழர் தாயகப் பிரதேசத்தில் 1987 ஆம் ஆண்டு காலடிவைத்தனர். விரைவிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்த இந்தியப் படையினர், பொதுமக்களுக்கு எதிராகப் பல அநீதிகளையும் இழைத்தார்கள். அவர்களது படைநடவடிக்கைகளின்போது அவர்கள் மேற்கொண்ட பரந்தளவிலான பொதுமக்களின் படுகொலைகளிலும் அநீதிகளிலும் ஒரு சிறு பகுதியே இங்கு பதிவுசெய்யப்படுகின்றது. இந்தியப்படைகள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் மூன்று சம்பவங்கள் குறிப்பாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை: யாழ்ப்பாண வைத்தியசாலையிலிருந்த ஊழியர்கள், நோயாளர்கள், பார்வையாளர் ஆகியோரின் படுகொலை, 1989 இடம்பெற்ற வல்வைப்படுகொலை, மற்றும் தமிழ்ப்பெண்கள் மீதான பெரும்தொகையான பாலியல் வல்லுறவுகள் ஆகியவையே அவையாகும்.

இந்நடவடிக்கையில் நேரடியாக ஈடுபட்ட பல இந்தியர்கள் புத்தகங்களை எழுதியுள்ளார்கள். எனினும், பாதிக்கப்பட்ட தமிழீழ மக்களால் ஒரேயொரு புத்தகம் மட்டுமே இதுவரை வெளியிடப்பட்டுள்ளது. வல்வைப் படுகொலை பற்றி அதில் நேரடியாகப் பாதிக்கப்பட் அனந்தராஜா என்பவரால் எழுதப்பட்ட புத்தகமே அதுவாகும். அப்புத்தகம் தற்போது கிடைப்பதற்கரிதாகவுள்ளது. இப்புத்தகத்தில் பல பிரதிகள் வன்னியில் இருந்தன, ஆனால் அவையனைத்துமே 2009 மே யில் நடந்த இறுதிச் சண்டைகளில் அழிக்கப்பட்டுவிட்டன.

2009 இற்கு முன்னர் தமிழ்மக்கள் மீது நடாத்தப்பட்ட பாரியளவிலான படுகொலைகளைப் பதிவு செய்வதில் வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகமும் வடக்குக் கிழக்கு புள்ளிவிபர மையமும் கூட்டாக இணைந்து செயற்பட்டன. அம்முயற்சியின் இரண்டாவது பாகமே இப்புத்தகமாகும். இலங்கைப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பாக ஒரு புத்தகம் "தமிழினப் படுகொலைகள் - 1956-2008" என்னும் பெயரில் 2009 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்தப் புத்தகம் 1987-1990 வரை தமிழர் தாயகத்தில் நிலைகொண்டிருந்த இந்தியப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளைப் பதிவுசெய்கின்றது.

1980களின் ஆரம்பத்தில், பிரதமர் இந்திரா காந்தியின் தலைமையின் கீழ், பெரும்பாலும் தன்னுடைய தென்கோடியில் உருவாகிவந்த பிரச்சினையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், தமிழ்க் கிளர்ச்சி இயக்கங்களுக்கு இந்தியா உதவியது. இந்தியா தலையிட்டு, இலங்கைத் தீவில் இன்னொரு "பங்களாதேஸை" உருவாக்கக் கூடும் என்ற நம்பிக்கையை தமிழ்மக்கள் மத்தியில் இது உருவாக்கியது. ஆனால் இதே இந்தியாவே, இப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட்ட காலத்திலான தனது நடவடிக்கையின் போது, "இந்தியத் தாய்நாடு" பற்றித் தமிழ் மக்கள் வைத்திருந்த நோக்கை குழப்பமடையச் செய்யும் வகையில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராகத் திரும்பியது.

தமிழ் மக்களின் இக்குழப்பம் சர்வதேச அரசியல் பற்றிய அவர்களின் அறிவு பற்றாமையையே பிரதிபலிக்கின்றது. அக்காலகட்டத்திலிருந்து தமிழ் மக்கள் பலதூரம் வந்து விட்டார்கள். இருப்பினும், இந்திய அரசின் தமிழ் மக்களுக்கெதிரான தீவிர நிலைப்பட்டின் பின்னணி காரணங்கள் இதுவரை தெளிவு படுத்தப் படாமலே உள்ளது. இக்காரணங்களை வெளிக்கொணர்வது தமிழ் மக்களை எதிர் நோக்கும் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

## கொக்குவில், பிரம்படி, பொற்பதி வீதிப் படுகொலை – 12 அக்டோபர் 1987




கொக்குவிற் கிராமம் யாழ் மாவட்டத்தில் நல்லூர்ப் பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ளது. பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் அமைந்துள்ள இடத்திலிருந்து மேற்குப் புறமாக ஏறக்குறைய ஐநூறு யார் தூரத்தில் கொக்குவில் பிரம்படி வீதி உள்ளது.

இந்திய இராணுவத்தினர் 1987ஆம் ஆண்டு பத்தாம் மாதம் பன்னிரண்டாம் திகதி பலாலியிலிருந்து யாழ் நகரை நோக்கிய தொடருந்து நிலைய வீதியூடாகக் கனரக வாகனங்கள் மூலம் முன்னேறி கொக்குவில் பிரம்படிப் பகுதியினைச் சுற்றிவளைதத்து. பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்று அங்கிருந்த பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள், இளைஞர்கள் என யாவரையும் வீதிகளுக்கு அழைத்து வந்து சுட்டதில் நாற்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். அன்றையதினம்

வேறு ஒரு பகுதியூடாக வந்த இந்திய இராணுவத்தின் மற்றுமொரு அணியினர், கொக்குவில் பொற்பதிப் பகுதியைச் சுற்றிவளைத்து மக்களைக் கைதுசெய்து கொக்குவில் பிள்ளையார் ஆலயத்துக்கு வடக்காக நானூறு யார் தூரத்தில் அமைந்துள்ள சனசமூக நிலையத்தின் அருகே வீதியோரத்தில் அனைவரையும் உயிருடன் நிலத்தில் படுக்க வைத்து இராணுவத்தின் கவச வாகனங்கள், டாங்கிகளை அவர்கள் மீது ஏற்றிப் படுகொலை செய்தனர். இதில் அறுபத்துநான்கு பொதுமக்கள் உயிரிழந்தார்கள். 1987 ஒக்டோபர் பன்னிரண்டாம் திகதி பிரம்படிப் பகுதி, கொக்குவில் பொற்பதிப் பகுதி ஆகிய இடங்களில் நடந்த சம்பவத்தில் நூற்றிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள்.

பொற்பதி வீதியைச் சேர்ந்த 87 வயதான தட்சணாமூர்த்தி சிவராஜலிங்கம் தன்னுடைய வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

*"சுகாதாரப் பரிசோதகரான என்னுடைய சகோதரன் தட்சணாமூர்த்தி தவராஜலிங்கம், வயது 44, அவருடைய மனைவி தவராஜலிங்கம் கனகமலர், வயது 38, பிள்ளைகளான தவராஜலிங்கம் கரன், வயது 10, தவராஜலிங்கம் கஜேந்திரன், வயது 6, 18 மாதங்களே நிரம்பிய தவராஜலிங்கம் தர்மிகா ஆகியோர் கொக்குவில் பிரம்படி வீதியிலுள்ள இல 24 வீட்டில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். என்னுடைய இன்னொரு மருமகனான 11 வயதான ஹர்சனும் அவர்களுடன்தான் இருந்தார்.*

அன்றைய திணம் என்னுடைய சகோதரனின் வீட்டுப்பகுதியில் கடுமையான துப்பாக்கிச் சத்தம் கேட்டது. அடுத்தநாள் காலை 7 மணிக்குத்தான் அவ்வீட்டுக்கு என்னால் போக முடிந்தது. அங்கே, என்னுடைய சகோதரன், அவரின் மனைவி, பஞ்சிளம் பெண்குழந்தை ஆகியோரின் சடலங்கள் வீட்டிற்குள் இருந்தன. வேறு இரு சடலங்களும் அவ்வளாகத்தில் காணப்பட்டன.


கரன், கஜேந்திரன், ஹர்சன் ஆகிய மூன்று பையன்களும் இன்னொரு அறையிலிருந்த கட்டிலின் கீழ் ஒளிந்திருந்ததைக் கண்டேன். கஜேந்திரனும் ஹர்சனும் காயமடைந்திருந்ததுடன் குருதி வடிந்துகொண்டும் இருந்தது."

7 ஆம் வட்டாரம் நைநாதீவைச் சேர்ந்த 47 வயதான நாகலிங்கம் நாகேஸ்வரி தன் வாக்குமூலத்தில்,

"நான் என்னுடைய அண்ணா நாகலிங்கம் ஜீவரட்ணத்தின் குடும்பத்துடன் இல 24, பிரம்படி வீதி, கொக்குவிலில் வாழ்ந்துகொண்டிருந்தேன். சில வருடங்களுக்கு முன்னர்தான் என் பெற்றோர் மரணமடைந்திருந்தார்கள். அவ்வீட்டில், அண்ணாவும், பிள்ளைகளான கோகிலாவும் மனோகரனும், என்னுடைய சகோதரிகளான ஆனந்தகௌரி, சாரதாதேவியும் ஒன்றாக வசித்தோம்.

அன்றைய திணம் காலை ஒரு மணியிலிருந்து, துப்பாக்கிச்சூட்டுச் சத்தத்தால் எமது உறக்கம் கலைந்துபோயிருந்தது. காலை 5.30 அளவில், இந்தியப் படையினர் எமது வீட்டு வளவுக்குள் நுழைந்து எம்மை வெளியில் வருமாறு சொன்னார்கள். படைவீரர்கள் எமது வீட்டு வளாகத்தில் நின்றுகொண்டிருந்த நேரத்தில் எறிகணைகள் அருகில் விழுந்து வெடித்தது. பின்னர், குண்டுப் பயத்தினால் பயமடைந்தோ என்னமோ, அவர்கள் தங்கள் சுடுகலன்களை எம்மை நோக்கித் திருப்பினார்கள். என்னுடைய அண்ணாவும் ஆறே வயது நிரம்பிய அவரது மகன் மனோகரனும் அவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். என்னுடைய இரு சகோதரிகளும், ஏழு வயதான மருமகள் கௌசலாவும் அவர்களின் துப்பாக்கிச் சன்னங்களுக்கு இலக்காகிக் காயமடைந்தார்கள். பின்னர் அவர்கள் யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள்."

## 2. புதுக்காட்டுச் சந்திப்படுகொலை 11 அக்டோபர் 1987



கிளிநொச்சி மாவட்டத்தின் வடபகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் ஏ-9 நெடுஞ்சாலையில் சோரன்பற்று புதுக்காட்டுச் சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியானது மருதங்கேணி, பளை, கிளிநொச்சி என்பவற்றை இணைக்கும் முச்சந்தியாக உள்ளது. இச்சந்தியைச் சுற்றி சோரன்பற்று, கரந்தாய் போன்ற கிராமங்கள் அமைந்துள்ளன. மேலும் தாளையடி, மருதங்கேணிப் பகுதிக்கான பிரதான வீதி இச்சந்தியிலிருந்து ஆரம்பிப்பதால் இச்சந்தியில் போக்குவரத்துக்காகப் பொதுமக்கள் அதிகளவில் கூடுகின்ற இடமாகும்.

11.10.1987 அன்று ஞாயிற்றுக்கிழமை 3.30 மணியளவில் ஆனையிறவு இந்திய இராணுவ முகாமிலிருந்து யாழ். நோக்கி வாகனத்தொடரணி, கவசவாகனங்கள் சகிதம் வந்த இந்தியப் படையினர் புதுக்காட்டுச் சந்திப் பகுதியில் திடீரென வாகனங்களிலிருந்து இறங்கி அப்பகுதியில் கடைகளில் பொருட்களை வாங்குவதற்காகவும், பிரயாணத்திற்காகவும் நின்ற பொதுமக்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் எட்டுப் பேர் உயிரிழந்ததுடன், நான்குபேர் படுகாயமடைந்தார்கள். இந்தச் சம்பவத்தின் போது தன்னுடைய இரண்டு பிள்ளைகளை இழந்தவரும் சந்தியில் கடை வைத்திருந்தவருமான இளையதம்பி பேரம்பலம் பின்வருமாறு கூறினார்.

"வாகனங்களில் வந்த இந்திய அரச படையினர் திடீரென இறங்கி பஸ்தரிப்பு நிலையத்திற் காத்து நின்ற மக்கள்மீதும் கடைகளில் நின்றவர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தினார்கள். அன்றையதினம் ஞாயிற்றுக்கிழமை ஆகையால் கடையில் எனது மூத்தமகனும் இளையமகளும் நின்றனர். அத்துடன் ஊழியர் ஒருவரும் நின்றார். இவர்கள் மூவரையும் இராணுவம் கடையுடன் சேர்த்து எரித்தது. இவர்களின் உடல்கள் எரிந்த நிலையில் பின்னர் என்னால் மீட்கப்பட்டது. இந்தச் சந்தியிலிருந்த நான்கு கடைகளும் டாங்கிகளால இடிக்கப்பட்டன. அத்துடன் சந்தியில் நின்ற காரும் எரிக்கப்பட்டது."

கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர் தொழில் வயது)

01. கனகரத்தினம், சாரதி, 35
02. குழந்தைவேலு செல்வராசா, வியாபாரம், 22
03. பொன்னையா நவரத்தினம், காவலாளி, 34
04. பொன்னையா சுப்ரமணியம், வியாபாரம், 40
05. பேரம்பலம் மகேஸ்வரன், மாணவன், 10
06. பேரம்பலம் கோகிலாதேவி, மாணவி, 14
07. வேலாயுதம் செந்தில்நாதன், மாணவன், 14
08. சின்னத்தம்பி பசுபதிப்பிள்ளை, கமம், 41

காயமடைந்தவர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர் வயது)

01. கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன், 14
02. சுப்பிரமணியம் ஏகாம்பரம் 45
03. சின்னக்குட்டி சிவரூபன், 16
04. ஆறுமுகம் பாலசிங்கம், 30

## 3. யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலை 21,22 அக்டோபர் 1987

யாழ் நகரத்தின் கிழக்குப் புறமாக நகரில் அமைந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலை யாழ் குடாநாட்டில் வாழ்கின்ற எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களிற்கு மட்டுமன்றி அயல் மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களிற்கும் பிரதான வைத்தியசாலையாக உள்ளது. தினசரி ஆயிரம் பேர் வரையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதோடு, பல கட்டட வசதிகளுடன், சத்திரசிகிச்சைப் பிரிவு, அவசர சத்திரசிகிச்சைப் பிரிவு எனப் பல பிரிவுகளுடனும் 1970களிலிருந்து இயங்கி வருகிறது.




1987ஆம் ஆண்டு அக்டோபர் பத்தாம் நாள் இந்தியப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் தொடங்கியதிலிருந்து தொடர்ச்சியாக நடைபெற்ற போரின்மூலம் யாழ்நகரைக் கைப்பற்றும் முயற்சியில் இந்திய இராணுவத்தினர் ஈடுபட்டார்கள்.



யாழ்ப்பாணக் கோட்டையில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தினர் யாழ் நகரப் பகுதி மீது பெருமளவு எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதலை மேற்கொண்டிருந்தபோதும் யாழ். வைத்தியசாலையில் வைத்தியர்கள், ஊழியர்கள், தாதிமார் தமது உயிரையும் பொருட்படுத்தாமல் மக்களுக்கான வைத்திய சேவையை வழங்கிப் பல உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள்.

1987 அக்டோபர் இருபத்தோராம் திகதி இந்தியப்படையினர் எறிகணை வீச்சு, விமானத் தாக்குதல்களை நடத்தியவாறு யாழ். நகரை நோக்கி முன்னேறினார்கள். யாழ். வைத்தியசாலையில் பணிகளில் ஈடுபட்ட வைத்தியர்கள், ஊழியர்கள், சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் போன்றோர் பாதுகாப்பிற்காக, வைத்தியசாலை எக்ஸ்ரே பிரிவு அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் பாதுகாப்பு தேடினார்கள். பிற்பகல் 3.00 மணியளவில் யாழ் நகரப் பகுதிக்குள் இந்திய இராணுவம் உள்நுழைந்தது. பின்னர் 4.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்த இந்திய

இராணுவம் அலுவலகப் பகுதியில் வைத்தியசாலைச் சீருடையுடன் இருந்த ஊழியர்கள், நோயாளர் வண்டில், கட்டில், பாய், வாங்குகளிற் படுத்திருந்த நோயாளர்கள் என எல்லோரையும் சுட்டுப்படுகொலை செய்தது. கடமையில் இருந்த 21 ஊழியர்களும் 46 நோயாளர்களும் பார்வையாளர்களும் இப்படுகொலையில் கொல்லப்பட்டார்கள். எனினும், கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் கொடுத்த வாக்குமூலத்தில் மொத்தத்தில் 135 மக்கள் கொல்லப்பட்டதாகச் சொன்னார்கள். அந்நேரத்தில் ஏனையவர்கள் கதைத்தவற்றை அடிப்படையாகக் கொண்டே பெரும்பாலும் இத்தொகை சொல்லப்பட்டிருக்கவேண்டும்.

கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் மூன்று நாட்களாக வைத்தியசாலையிலேயே இருந்தன. அதன் பின்னரேயே வைத்தியசாலை குப்பைத்தொட்டியில் போட்டு எரிக்கப்பட்டன. கொல்லப்பட்ட 21 வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்களையும், 46 நோயாளர்களையும் நினைவுகூர்ந்து வருடந்தோறும் யாழ்ப்பாண வைத்தியசாலையில் நினைவுதினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.

முருகன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைச் சேர்ந்த சண்முகலிங்கம் லோகநாயகி தன்னுடைய வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

*"என்னுடைய கணவர் வைத்திலிங்கம் சண்முகலிங்கம் யாழ்ப்பாண பொதுவைத்தியசாலையில் நோயாளர் காவுவண்டிச் சாரதியாக இருந்தார். எறிகணைத் தாக்குதலில் எமது வீடு அகப்பட்டது. நான் எனது பிள்ளைகளுடன் வைத்தியசாலைக்குச் சென்று வைத்தியசாலை விடுதியில் அவருடன் தங்கியிருந்தேன். ஒக்ரோபர் 21 ஆம் திகதி கணவர் இரு பிள்ளைகளுடன் மேற்பார்வையாளர் அலுவலகத்தில் இருந்தார். நான் மற்றைய இரு பிள்ளைகளுடனும் எக்ஸ்-கதிர் அறையில் தங்கியிருந்தேன். வைத்தியசாலையைச் சுற்றி துப்பாக்கிச் சூடுகளும் எறிகணைகள் விழுந்து வெடிக்கும் சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன. வைத்தியசாலை வளாகத்துக்குள் நுழைந்த இந்தியப் படையினர் கண்ணில் அகப்படும் அனைவரையும் சுட்டுத்தள்ளத் தொடங்கினர். பின்னர், அவர்கள், எக்ஸ்-கதிர் அறைக்குள் நுழைந்து கைக்குண்டுகளை வீசி துப்பாக்கிப் பிரயோகமும் செய்தார்கள். அடுத்தநாள் மாலை 5 மணியளவில் நான் மேற்பார்வையாளர் அறைக்குச் சென்றபோது, கணவருடைய சடலத்தைக் கண்டேன். அவருடன் தங்கியிருந்த இரு பிள்ளைகளும் வைத்தியசாலையில் துப்பாக்கிச் சூடுகள் தொடங்கியவுடனேயே வைத்தியசாலையை விட்டு வெளியேறியிருந்தார்கள். என்னுடைய கடைசிப் பிள்ளை காயமடைந்திருந்தது. அவருடைய அண்ணா அவரை ஆனைப்பந்தி வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றார்."*

காளிகோவிலடி, அளவெட்டி வடக்கு, அளவெட்டியைச் சேர்ந்த தவமணி ராஜரட்ணம் தனது வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

*"என்னுடைய கணவர் ஆரியக்குட்டி ராஜரட்ணம் முழங்கால் சத்திர சிகிச்சைக்காக ஒக்ரோபர் 18 ஆம் திகதி யாழ்ப்பாண பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஒக்ரோபர் 23 ஆம் திகதி, இந்தியப் படையினர் வைத்தியசாலைக்குள் நுழைந்து, பல நோயாளர்களையும் ஊழியர்களையும் சுட்டுக்கொன்றுவிட்டதாக நான் கேள்விப்பட்டேன். ஆனால், இந்தியப் படைகள் வைத்தியசாலையை ஆக்கிரமித்திருந்ததால் எவருமே அங்கு செல்லத் துணியவில்லை. நவம்பர் 15 ஆம் திகதிதான், என்னுடைய மச்சான் வைத்திசாலைக்குச் சென்றார். இந்தியப் படைகளால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களில் என்னுடைய கணவரும் ஒருவர் என வைத்தியசாலை ஊழியர்கள் மூலமாக அவர் அறிந்துகொண்டார்."*

அரசடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைச் சேர்ந்த பசுபதீஸ்வரி கிருஸ்ணராஜா தன்னுடைய வாக்குமூலத்தில் இவ்வாறு கூறுகின்றார்.

*"என்னுடைய கணவரும் பிள்ளைகளும் நானும் கோண்டாவிலிலுள்ள எமது வீட்டில் வசித்துவந்தோம். இந்தியப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதல்களைத் தொடர்ந்து என்னுடைய கணவர் தான் மேற்பார்வையாளராக வேலை செய்த யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு எம்மைக் கூட்டிச்சென்றார். ஒக்ரோபர் 12 ஆம் திகதி முதல் வைத்தியசாலையிலிருந்த அவருடைய அறையிலேயே தங்கியிருந்தோம். ஒக்ரோபர் 21 ஆம் திகதி, வைத்தியாசாலைக்குள் நுழைந்த இந்தியப் படையினர் அங்கிருந்த வைத்தியசாலை ஊழியர்கள், நோயார்கள், பார்வையாளர்கள் எனப் பலரையும் சுட்டுக்கொன்றார்கள். கடமையிலிருந்த என் கணவரும் சுட்டுக்கொல்லப்பட்டார். என்னுடைய*

கணவர் உட்பட கொல்லப்பட்டவர்களின் சடலங்களை இந்தியப் படைகள் வைத்தியசாலை வளாகத்திலேயே போட்டு எரித்தார்கள்."

168, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வராஜா நாகேஸ்வரி என்பவர் தன்னுடைய வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறுகின்றார்,

*"என்னுடைய கணவர் அரசாங்கப் போதனா வைத்தியசாலையில் மேற்பார்வையாளராக வேலைசெய்தார். ஒக்ரோபர் 21 ஆம் திகதி, காலை 6.30 மணிக்கு அவர் வீட்டிலிருந்து புறப்பட்டார். அன்று மதியம் இன்சுலின் ஊசி போடுவதற்காக என்னுடைய மகன் என்னை அங்கு கூட்டிச்சென்றார். நான் வைத்தியசாலைக்குள் நுழைந்தபோது வைத்தியசாலை ஊழியர்களும் நோயாளர்களும் பயந்தநிலையிலிருப்பதைக் கண்டேன். வைத்தியசாலையை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.*

*வெளிநோயாளர்களையும், வைத்தியசாலை ஊழியர்களையும் பார்வையாளர்களையும் கீழ் மாடி நிருவாகப் பகுதி இருந்த மண்டபத்தில் பாதுகாப்பாக இருக்குமாறு கூறப்பட்டது. அங்கு காப்பு எடுத்தவர்களில் என்னுடைய கணவரும் என்னுடைய மகனும் நானும் அடங்குவோம். மாலை நான்கு மணியாகியும் நாம் அனைவரும் அங்கேயே இருந்தோம். ஏறத்தாள அதே நேரத்தில் அம் மண்டபத்தின் வீதியோர நுழைவாயிலூடாக சீருடையில் வந்த இந்திய இராணுவத்தினர் அங்கு நாம் காப்பெடுத்திருந்ததைக் கண்டு சுடத்தொடங்கினார்கள். நாம் அனைவரும் நிலத்தில் விழுந்து படுத்துக்கொண்டோம். நான் சற்றுப் பின்நகர்ந்தேன். ஆனால் கைபெறிகுண்டுத்தாக்குதலில் நான் காயமடைந்தேன். மெதுவாக ஊர்ந்து கணவருக்கு அருகில் சென்றேன். ஆனால் அவர் இறந்திருந்தார்.*

*இறந்தவர்களின் சடலங்களும், காயமடைந்தவர்களும் காயமின்றித் தப்பித்தவர்களும் அடுத்தநாள் காலை 10 அல்லது 11 மணிவரை அந்த மண்டபத்திலேயே இருந்தனர். அதற்குப் பின்னர்தான் வைத்தியசாலை அதிகாரிகள் வந்து வெளியில் வருமாறு அழைத்தார்கள். என்னுடைய கணவரின் சடலம் உட்பட இறந்தவர்கள் அனைவரது சடலங்களும் மண்டபத்திலேயே இருந்தன. ஒக்ரோபர் 23 ஆம் திகதி என்னுடைய மகனும் நானுமாக என் கணவரின் சடலத்தை இனங்காட்டினோம். வைத்தியசாலைக் குப்பைக்கிடங்கில் அனைத்து சடலங்களையும் ஒன்றாகப் போட்டு எரித்ததாக என்னுடைய மகன் பின்னர் கூறினார்."*


Saturday Review

Massacre at the Hospital



இச்சம்பவம் நடந்து சில வாரங்களுக்குப் பின்னர் வெளிவந்த (A3 அளவிலான) Saturday Review என்னும் உள்ளூர் செய்தித்தாளில் இப்படுகொலை பற்றிய செய்தி வெளிவந்தது. அது கீழே தரப்பட்டுள்ளது. அப்பக்கத்தில் 1-4 இலக்கமிடப்பட்ட மூன்று பகுதிகள் பெரிதாக்கப்பட்டு வாசிக்கக்கூடியளவு தெளிவாகவும் தரப்பட்டுள்ளன. பெரிதாக்கப்படாத இடத்தில் இதில் பாதிக்கப்பட்டவர்களின் பெயர்களே உள்ளன. அவை இப்புத்தகத்தின் ஏனைய பகுதிகளில் உள்ளதைப் போன்று சாதாரண வடிவத்திலேயே தரப்பட்டுள்ளன.

New Saturday Review

REPORT

The Jaffna Hospital was occupied by the IPKF about 4 p.m. on Deepavali day, October 21, 1987. About 50 people died in the process and their bodies were burnt lay within the hospital premises. On October 23 about 81 bodies were burnt on the orders of Brigadier Brar of the IPKF, the whole operation being supervised by Captain Bist of Headquarters Fort Camp, Jaffna, with the assistance of Dr. Kanagarajah and Dr. Bansari, both of the IPKF. No inquests or postmortems were held before the bodies were disposed of.

The dead included 20 members of the hospital's Administrative and X-Ray Branches. Also killed that day were many patients warded in the hospital and their relatives who were visiting them at the time of the IPKF operation, totalling 30. Another 12 bodies in an advanced stage of decomposition were in the mortuary. None of the 12 could be identified.

All 20 of the hospital staff were identified by their colleagues. Of the other 30 only 11 were identified either by relatives or by the identity cards found on the bodies. Some of the dead were beyond identification as the bodies were badly multilated from the shooting and shelling. Many of the unidentified were believed to have been patients, but positive identification was not possible as many BHTs (Bed Head Tickets) were missing in the chaos and confusion that accompanied the IPKF occupation of the hospital and by the shelling.

Many of the deaths of patients was due to lack of medical care. Several patients badly injured and bleeding profusely after the IPKF shelling of the hospital could not be taken up for immediate surgery as the Operating Theatre had also been damanged by shells. The power failure resulted in the death of 3 patients including an infant in the Intensive Care Unit who at the time was fitted with an electric sucker. The other two were on Ventilators at the time. The Blood Bank could not function after the power failure.

**The Jaffna General Hospital literally stinks.**

**'There is no water and no electricity.'**

**The mortuary is full of corpses.**

**Up to Friday, 75 people's (ages ranging from one year to 85) bodies were brought to hospital.**

**SR learns more bodies are yet to be brought to hospital.**

**The Nurses' Quarters was hit by shells. The nurses escaped death because they took refuge in the ground floor. They are understandable reluctant to work.**

**The Tellipalai Govt. Hospital has closed down.**

**A private hospital at Manipay – Green Memorial Hospital – has also been forced to close down**

# Massacre at the Hospital

We give below the names and designations of the hospital staff killed by the IPKF and where their bodies were found:

1. Dr. A. Sivapathasunderam, Consultant Paediatrician (in X-Ray Block); 2. Dr. M.K. Ganesharatnam, Registrar, Sugery (X-Ray Block); 3. Dr. Parimelalakar, MO, OPD (hospital entrance, facing Clock Tower Rd.); 4. Miss. Vadivel, Matron (AO's Office); 5. Mr. Kanapathy Krishnarajah, Overseer (X-Ray Block); 6. Mr. Kandian Selvarajah, Overseer (X-Ray Block); 7. Miss. Mankayatkarasy; 8. Paramanathan, Nursing Office (X-Ray Block); 9. Miss. Leelawathy, Nursing Office (X-Ray Block); 10. Mr. Vaitilingam Shanmugalingam, Ambulance Driver (Overseer' Office); 11. Mr. Ramalingam Suhumar, labourer (Overseer's Office); 12. Mr. Gopalapillai Uruthiren, labourer (Overseer's Office); 13. Mr. Sivaloganathan, labourer (Overseers' Office); 14. Mr. Ponnambalam Varatharajah, labour (Overseers' Office); 15. Mr. Kurusu John Peter, labourer (Overseers' Office); 16. Mr. Markandu, labourer (Overseers' Office); 17. Mr. Muthukumaru Thurairajah, labourer (Overseers' Office); 18. Mr. Kaniah Vetharanium (Wd. 12 corridor); 19. Mr. Rajaratnam Ratnarajah, labourer (Overseers' Office); 20. Mr. Pandian Sivarajah, labourer (Overseers' Office); 21. Mr. Sinnappu Joganathan, labourer (Overseers' Office).

(died when Ventilator could not be operated after power failure); 65. 4-day old baby (died from neonatal Jaundice); 66. young man, about 20 yrs. Wd. 25 (shell blast); 67. old man, 60 yrs. Wd. 25 (cause of death could not be ascertained).

A report containing all available details as given above was handed over to Dr. Natchinarkiniyan of the Jaffna General Hospital on November 7, 1987.

கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர் தொழில் வயது)

01 அருணாசலம் சிவபாதசுந்தரம், மருத்துவர் (மருத்துவமனை)
02 சேதுசிகாமணி கணேசரட்ணம், மருத்துவர் (மருத்துவமனை), 29
03 கதிர்காமு பரிமேலழுகர், மருத்துவர் (மருத்துவமனை), 40
04 இராமநாதன் மங்கையற்கரசி, தாதி (மருத்துவமனை), 31
05 திருமதி வடிவேலு, தாதி (மருத்துவமனை), 48
06 முத்தையா லீலாவதி, தாதி (மருத்துவமனை), 28
07 பரமநாதன், தாதி (மருத்துவமனை), ,
08 கந்தையா செல்வராஜா, மேற்பார்வையாளர் (மருத்துவமனை), 56
09 கணபதி கிருஸ்ணராஜா, மேற்பார்வையாளர் (மருத்துவமனை), 50
10 இராசரத்தினம் இரத்தினராஜா, ஆய்வுகூடப் பணியாளர்(மருத்துவமனை), 28
11 வைத்திலிங்கம் சண்முகலிங்கம், அம்புலன்ஸ் சாரதி (மருத்துவமனை), 49
12 கந்தையா வேதாரணியம், ஊழியர் (மருத்துவமனை), 27
13 கந்தன் மார்க்கண்டு, ஊழியர் (மருத்துவமனை), 39
14 குருசுமுத்து ஜோன்பீற்றர், ஊழியர் (மருத்துவமனை), 24
15 கணபதி சிவலோகநாதன், ஊழியர் (மருத்துவமனை), 23
16 இராமலிங்கம் சுகுமார், ஊழியர் (மருத்துவமனை), 24
17 முத்துக்குமாரு துரைராஜா, ஊழியர் (மருத்துவமனை), 26
18 பொன்னம்பலம் வரதராஜன், ஊழியர் (மருத்துவமனை), 28
19 கோபாலப்பிள்ளை உருத்திரன், ஊழியர் (மருத்துவமனை), 24
20 சின்னப்பு ஜெயநாதன், ஊழியர் (மருத்துவமனை), 36

21 தங்கவேலு சவுந்தரராஜா, மாணவன், 06
22 பெலீசியன் சதீஸ்யோகேந்திரன், மாணவன், 15
23 மார்க்கண்டு தியாகராசா, சாரதி, 48
24 அந்தோனிமுத்து அந்தோனி, விக்ரர் க.தி.க பொறுப்பாளர், 35
25 அப்பையா மாணிக்கம், வீட்டுப்பணி, 79
26 அரியகுட்டி இராசரத்தினம், சாரதி, 53
27 அரியரட்ணம் லில்லிநேசம், வீட்டுப்பணி, 75
28 அல்பிரட் அந்தோனிப்பிள்ளை, , 65
29 அல்பிரட் மேரியோசெப்பின், , 37
30 ஜெபமணி கீதபொன்கலன், வீட்டுப்பெண், 43
31 ஜோன் சின்னையா, தொழிலாளி, 65
32 யோன் சிமியோன், தச்சுவேலை, 67
33 தோம்ஸ் பேரின்பநாயகம் பஸ்தியாம்பிள்ளை, முகாமையாளர், 66
34 செபஸ்தியன் தம்பிராஜா, கூட்டுறவுச்சங்க ஊழியர், 55
35 செல்லையா தங்கமணி, , 58
36 செல்லர் சிவபுரம், கமம்
37 வேலுப்பிள்ளை சரவணமுத்து, , 60
38 ஞானப்பிரகாசம் செந்தூர்முருகன், வியாபாரம், 40
39 சுப்பிரமணியம் ஜெயமோகன், வியாபாரம், 32
40 சத்தியசீலன் ஜெயசீலன், மாணவன், 17
41 சின்னத்தம்பி வேலுப்பிள்ளை, தெரியாது, 75
42 சின்னவி சின்னத்துரை, , 57
43 சிவலை குணரட்ணம், தபால்ஊழியர், 49
44 சூடாமணி ஆவுடையம்மா, குடும்பப்பெண், 55
45 இராஜதுரை மகேஸ்வரி, குடும்பப்பெண், 46
46 இராயப்பு சூசைப்பிள்ளை, ஓய்வூதியர், 74
47 இராமசாமி இலங்கேஸ்வரன், தொழிலாளி, 25
48 இராசு சுப்பிரமணியம், சமையல், தொழில், 46
49 நடராஜா ஜெயசீலன், துறைமுகத் தொழிலாளி, 21
50 கந்தையா நவரட்ணம், காவலாளி, 50
51 கந்தையா சிவராஜா, சாதாரண தொழிலாளி, 25
52 கிருபாகரன் இந்திராணி, குடும்பப்பெண், 32

53 பஸ்தியாம்பிள்ளை யோன்அரியமலர், , 60
54 பஸ்ரியாம்பிள்ளை நொய்லா விஜயந்தி, , 20
55 துரைச்சாமி இராஜேந்திரா, ஓய்வூதியர், 70
56 துரைச்சாமி மகேந்திரா, இலங்கைவங்கி, 73
57 துரைச்சாமி ஆறுமுகம், , 72
58 தம்பிப்பிள்ளை கனகலிங்கம், தொழில்நுட்ப உதவியாளர், 64
59 தம்பிப்பிள்ளை கிருபாகரன் தொழிலாளி 33
60 தியாகராசா மதியரசன், மாணவர், 17

காயமடைந்தவர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர் தொழில் வயது)

இல பெயர் தொழில் வயது
01 யூலியஸ் பிரதீபன், குழந்தை ,06 மாதம்
02 ந.அன்னம், முதியவர், 90
03 நா.நவரத்தினம், தொழிலாளி, 54
04 நா.செல்லையா, தொழிலாளி, 21
05 நடராசா தனபாலசிங்கம், கடை, 20
06 நவரத்தினம் சந்திரகுமார், தொழிலாளி, 18
07 பூ.விஸ்ணுதாசன், , 34
08 பத்மநாதன் தனபாக்கியலட்சுமி, குடும்பப்பெண், 43
09 பரந்தாமராஜா கமலா, மாணவி, 25
10 தா.இராசேந்திரன், தொழிலாளி, 44
11 மா.அன்னலட்சுமி, வீட்டுப்பணி, 75
12 அ. சண்முகராசா, வியாபாரம், 36
13 அ.கந்தசாமி, கிளீனர், 36
14 கே.பாலையா, எலக்ரீசியன், 44
15 செ. பத்மநாதன், முகாமையாளர், 46
16 செ.தவராஜன், கமம், 22
17 சின்னப்பொடி தெய்வானை, வீட்டுப்பணி, 65
18 வா.மதிஜீவன், சாரதி, 23
19 ராஜரட்ணம் ஜனார்த்தனன், மாணவன், 20

## 4. அராலித்துறைப் படுகொலை 22 அக்டோபர் 1987

அராலித்துறை யாழ் மாவட்டத்தின் வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ளது. இலங்கை இராணுவம் யாழ்கோட்டைப்பகுதியில் நிலைகொண்டிருந்ததால், யாழ் கோட்டைப் பகுதியின் அருகாமையிலுள்ள பண்ணைப் பாலம் ஊடான போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது. இதன் காரணமாக தீவுப் பகுதிக்கான போக்குவரத்துப் பாதையாக அராலித்துறை விளங்கியது. அக்காலப்பகுதியில் தீவுப்பகுதி மக்கள் அராலித்துறைப் பாதையினூடாகப் போக்குவரத்தில் ஈடுபட்டனர்.




1987ஆம் ஆண்டு அக்டோபர் இருபத்திரண்டாம் நாள் தீவுப் பகுதியிலிருந்து யாழ் நகரம் நோக்கி பதினைந்து வரையான இயந்திரப் படகுகளில் முந்நூறிற்கும் மேற்பட்ட மக்கள் பயணம் செய்தனர். அன்று மதியம் அராலித்துறைக் கரையில் தரையிறங்கிய பொதுமக்கள் மீது இந்திய இராணுவத்தின் உலங்குவானூர்தி மூலம் தாக்குதல் நடத்தியதால் அச்சமடைந்த மக்கள் அராலித்துறை மடத்தில் தஞ்சம் புகுந்தனர். பாதுகாப்புத்தேடி ஓடிய, தஞ்சமடைந்த மக்களை இலக்கு வைத்து ஏழிற்கும் மேற்படட் றொக்கட் குண்டுகள் வீசப்பட்டது.

இதனால் அராலித்துறை மடத்தடியில் தஞ்சம் புகுந்த பயணிகள் முப்பத்தைந்து பேர் உயிரிழந்தனர். முப்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். ஏழிற்கும் மேற்பட்ட படகுகள் முழுமையாக சேதமடைந்தன.

சில படகுகள் பகுதியளவில் சேதமடைந்தன. இறந்தவர்களின் சடலங்கள், காயப்பட்டவர்கள் மீள மறுகரைக்கு கொண்டு செல்லப்பட்டு ஊர்காவற்துறை வைத்தியசாலைக்கு உழவு இயந்திரம் மூலம் கொண்டு செல்லப்பட்டனர். இறந்தவர்களில் தீவுப்பகுதியைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் அடங்குவர்.

4ஆம் குறுக்குத் தெரு, தண்ணீர்தாங்கியடி, குருநகர் என்னும் முகவரியைச் சேர்ந்த பியஸ் மரியதாஸ் தன்னுடைய வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறுகின்றார்,

*"நான் ஒரு கடற்றொழிலாளன். ஒக்ரோபர் 10 ஆம் திகதி எரிகணைகள் எமது பிரதேசத்தில் வீழ்ந்து வெடித்தன. இவ்வெரிகணைகள் இந்திய இராணுவம் இருந்த கோட்டையிலிருந்தே ஏவப்பட்டன. இதன் காரணமாக மாலை 4 மணியளவில் குடும்பத்துடன் வீட்டைவிட்டு வெளியேறி, புனித பத்திரீசியார் கல்லூரியில் தங்கினோம். அதற்கு அருகிலும் எரிகணைகள் வந்து விழத்தொடங்கியதால் நாம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்குப் போய் அங்கே தங்கினோம்.*

*ஒக்ரோபர் 20 ஆம் திகதி சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் அறைபொன்றின் மீது எரிகணை ஒன்று வந்து விழுந்து வெடித்தது. இதில் மூவர் கொல்லப்பட மேலும் 15 பேர் காயமடைந்தனர். ஏறத்தாள எம்மில் 70 பேர் சேர்ந்து பேருந்து ஒன்றை வாடகைக்கு அமர்த்தி, அராலி இறங்குதுறை ஊடாக காரைநகருக்குப் போக ஆயத்தமானோம். காலை 8 மணியளவில் நாம் இறங்குதுறையை வந்தடைந்தோம். எம்மில் சிலர் நான்கு படகுகளில் ஏறி சரவணை இறங்குதுறை நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம். அந்நேரத்தில் எமக்கு மேலாகப் பறந்துகொண்டிருந்த உலங்குவானூர்திகள் நாமிருந்த படகுகளை நோக்கி சுடத்தொடங்கின. ஒரு மணித்தியாலம் அவர்கள் சுட்டார்கள்.*

*என்னுடைய மகள் மரியதாஸ் கலோஜினியும் (வயது 15) மாமியான சலாமிபிள்ளையும் இதில் கொல்லப்பட்டார்கள். எனது மனைவியான மரியதாஸ் இமெல்டா (வயது 36), மாமா செபஸ்ரி சேவியர் ஆகியோர் இதில் படுகாயமடைந்தனர். நாம் கடற்கரைக்கு அருகில் இருந்ததால் நான் என்னுடைய*

*மற்றைய மூன்று பிள்ளைகளையும் தூக்கி, கடலுக்குள் இறக்கிவிட்டேன். எனது மகன்மாரான சுரேந்திரனும் சுதாகரும் கடலில் நின்றுகொண்டிருந்தபோது காயமடைந்தார்கள். நான் மூன்று பிள்ளைகளையும் கரைக்குக் கொண்டுசென்றேன். பின்னர், குடும்பத்தில் ஏனைய காயமடைந்தவர்களையும் இறந்தவர்களின் சடலங்களையும் கரைக்குக் கொண்டுசென்றேன்.*

*காயமடைந்தவர்களையும் இறந்தவர்களின் சடலங்களையும் காரைநகர் வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றார்கள். மனைவி வைத்தியசாலையில் இறந்துபோனார். அவருடைய சடலம் அச்சம்பவத்தில் கொல்லப்பட்ட ஏனைய 13 பேரின் சடலங்களுடன் ஒன்றாகச் சேர்ந்து காரைநகர் சேமக்காலையில் புதைக்கப்பட்டது. மேலும் ஐந்து சடலங்கள் அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன."*

10, மத்திய மேல்வீதி, குருநகரைச் சேர்ந்த கிறிஸ்துராஜா றீற்றம்மா தன்னுடைய வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறுகின்றார்,

*"ஒக்ரோபர் 10 ஆம் திகதி கொழும்புத்துறையிலிருந்த செபமாலை மாதா தேவாலயத்தில் நாம் தஞ்சமடைந்தோம். ஒக்ரோபர் 11 ஆம் திகதி, நாம் கொழும்புத்துறை இந்துக்கல்லூரிக்கு இடம்பெயர்ந்தோம். மீண்டும் ஒக்ரோபர் 14 ஆம் திகதி, எறிகணைகள் நாம் இருந்த இடத்திற்கு அருகாக வந்து விழத்தொடங்கியமையால், அங்கிருந்து வெளியேறி சென். பத்திரீசியார் தேவாலயத்திற்கு இடம்பெயர்ந்து சென்றோம். மறுபடியும் அங்கிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டு சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் தஞ்சமடைந்தோம். ஒக்ரோபர் 20 ஆம் திகதி அக்கல்லூரிமீது நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் ஐந்து பேர் கொல்லப்பட்டார்கள். இதனால் சரவணைக்குச் செல்லும் நோக்குடன் அராலி இறங்குதுறைக்குச் செல்ல மேலும் 70 பேருடன்சேர்ந்து தீர்மானமெடுத்தோம். நாம் படகில் பயணித்துக்கொண்டிருந்தபோது, உலங்குவானூர்தித் தாக்குதலுக்கு ஆளாகினோம்.*

*நாம் பொதுமக்கள் என்பதைக் காட்டுவதற்காகப் பெண்கள் தங்களது குழந்தைகளைத் தூக்கிக் காட்டினார்கள். ஆனால் தாக்குதல் தொடர்ந்தும் நடந்தது. என்னுடைய மகள் கமலநாயகியும் அப்பா முடியப்பு கிளிஸ்ரியனும் கொல்லப்பட்டார்கள். எனக்கு மணிக்கட்டுப் பகுதியில் காயம் ஏற்பட்டது. என்னுடைய மற்றைய மகள்களான சகாயநாயகிக்கும் பீராவுக்கும் கால்களில் காயங்கள் ஏற்பட்டன.*

*ஒக்ரோபர் 22ஆம் திகதி, எம்மில் படுகாயமடைந்தோர் மூளாய் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டோம். நவம்பர் முதலாம் திகதி, மூளாய் வைத்தியசாலையும் உலங்குவானூர்தித் தாக்குதலுக்கு உள்ளாகியது. அதில் பலர் கொல்லப்பட்டார்கள். நான் வைத்தியசாலையிலிருந்து வெளியேறி, எனது உறவினர் ஒருவருடன் தங்கினேன்."*

கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர் தொழில் வயது)

01 யேசுதாசன் ஜீவகுமார், மாணவன், 06
02 யேசுதாசன் குமுதினி, மாணவி, 09
03 முடியப்பு கிறிஸ்தியன், , 70
04 கிறிஸ்ரிராஜா கமலநாயகி, மாணவி, 10
05 ஆரோக்கியம், வீட்டுப்பணி, 40
06 மரியதாஸ் சுலோஜினி, மாணவி, 15
07 மரியதாஸ் இமெல்டா, ,
08 சலாம்பிள்ளை, ,

## 5. கொக்குவில் இந்துக்கல்லூரிப் படுகொலை 24 அக்டோபர் 1987

கொக்குவிற் கிராமம் யாழ்.மாவட்டத்தில் நல்லூர் பிரதேசசெயலக பிரிவினுள் அமைந்துள்ளது. யாழ்.நகரிலிருந்து காங்கேசன்துறை வீதியூடாகச் செல்லும் வழியில் ஏறக்குறைய யாழ் நகரிலிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ள கொக்குவிற் சந்திக்குக் கிழக்குப் புறமாக கொக்குவில் இந்துக்கல்லூரி அமைந்துள்ளது.

1987 அக்டோபர் பத்தாம் நாள் இந்திய இராணுவத்திற்கும் - புலிகளுக்கும் இடையில் யுத்தம் தொடங்கிய பின்னர் இந்திய இராணுவத்தின் பரவலான விமானக்குண்டு வீச்சு மற்றும் ஏறிகணைத்தாக்குதலுக்கு அஞ்சி கொக்குவில் கிழக்கு, ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்புக்கருதி கொக்குவில் இந்துக்கல்லூரியில் தஞ்சமடைந்தார்கள். அத்துடன் தங்களை அகதிகள் என அடையாளப்படுத்தும் நோக்குடன் பாடசாலையின்` முக்கிய இடங்களில் வெள்ளைக்கொடியைப் பறக்கவிட்டனர்.




1987 அக்டோபர் இருபத்துநான்காம் நாள் காங்கேசன்துறை வீதி வழியாக யாழ் நகரம் நோக்கிக் கவசவாகனங்கள், டாங்கிகள் சகிதம் முன்னேறிய இந்தியப் படையினர் கொக்குவில் இந்துக்கல்லூரியை வந்தடைந்ததும், கவச வாகனங்களிலிருந்து அங்கு அடைக்கலம் புகுந்திருந்த பொதுமக்கள் தங்கியிருந்த பாடசாலைக் கட்டடங்களின் மேல் பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் பாடசாலை வகுப்பறையில் தங்கியிருந்த இருபத்தாறு பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

படுகாயமடைந்தவர்களில் பதின்நான்கு பேர் மருத்துவ வசதிகளற்று உள்ளூர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியிலும், மருத்துவமனைகளிலும் உயிரிழந்தனர். இச் ம்பவத்தில் யாழ் பல்கலைக்கழக கல்வியற்துறைப் பீடாதிபதி பேராசிரியர் சந்திரசேகரம் உட்பட மொத்தம் நாற்பது பேர் உயிரிழந்ததுடன், எண்பது பேர் படுகாயமடைந்தனர்.

உரிய முறைப்படி தகனம் செய்வதற்கான சூழ்நிலையில்லாததால் இறந்தவர்களின் சடலங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஒரே குழியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது.

நந்தாவில் மேற்கு வீதி, தாவடியைச் சேர்ந்த சின்னத்துரை பஞ்சலிங்கம் என்பவர் தன்னுடைய வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறுகின்றார்,


*"எமது இடத்தில் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றதையடுத்து எமது வீட்டிலிருந்து ஏறத்தாள 500 மீற்றர் தூரத்திலிருக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்குச் சென்று தஞ்சமடைந்தோம். ஒக்ரோபர் 26 ஆம் திகதி. நாம் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையிலிருந்தபோது, கொக்குவில் சந்தியிலிருந்து இந்திப் படையினர் சுடத்தொடங்கினார். என்னுடைய சகோதரி கமலாதேவி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். எமக்கு அருகிலிருந்து மேலும் மூன்று பேரும் கொல்லப்பட்டார்கள். நாம் கொல்லப்பட்ட எனது சகோதரியின் சடலத்தை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு, கொக்குவில்*

இந்துக்கல்லூரிக்குச் சென்று அங்கே தஞ்சமடைந்தோம். அங்கே ஏற்கனவே முப்பது பேர் கொல்லப்பட்டிருந்தார்கள். அவர்களது சடலங்கள் நவம்பர் முதலாம் திகதி படையினரால் எரியூட்டப்பட்டன."

கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பட்ட விபரம் (இல பெயர் தொழில் வயது)

01 இராசையா பஞ்சலிங்கம், , 43
02 இராசையா செல்வராணி, , 37
03 இராமு இராசு, கமம், 60
04 நாகரத்தினம் விஜயரத்தினம், , 46
05 நடராசா இராசகுமாரன், ,44
06 நடராசா இராசராசேஸ்வரி, , 24
07 நடராசா குணராணி, , 35
08 நடராசா தமிழ்ச்செல்வி, மாணவி, 10
09 நடராசா சபேஸ்குமார், மாணவன், 6
10 நடராசா ரமதி, மாணவி, 13
11 நடேசு பரமேஸ்வரி, , 51
12 நல்லையா பாக்கியம் , , 50
13 கந்தையா சங்கரப்பிள்ளை, வியாபாரம், 65
14 கந்தவனம் மகேஸ்வரி, , 52
15 குணபாலசிங்கம் பத்மசிறி, மாணவன், 8
16 பரமு தங்கமணி, வீட்டுப்பெண், 24
17 பரமேஸ்வரன் மனோன்மணி, , 35
18 பரமேஸ்வரன் மாலினி, , 1
19 தர்மலிங்கம் நிசாந்தன், , 2
20 துரைச்சாமி குமாரசாமி, முதியவர், 72
21 தம்பிராசா நடராசா, முதியவர், 61
22 வேணுகோபால் மகாதேவன், , 41
23 மகாதேவன் இராசம்மா, , 28
24 மகாதேவன் பாலமுருகன், மாணவன், 9
25 மகாதேவன் வேணுகிருஸ்ணா, மாணவன், 7
26 மகாதேவன் விக்கினேஸ்வரன், மாணவன், 10
27 அன்னசிங்கம் கமலாதேவி, வீட்டுப்பணி, 33
28 பெரியதம்பி இராசையா, , 30
29 பேராசிரியர் சோ.சந்திரசேகரம், பேராசிரியர்,
30 செல்வநாயகம் மாணிக்கரத்தினம், முதியவர், 69
31 செல்லர் திரவியம் , , 53
32 சுப்பிரால் கோவிந்தசாமி, முதியவர், 72
33 சிவகுரு செல்லத்துரை, முதியவர், 85
34 விஸ்வநாதி விஜயரத்தினம், கூலி, 40

## 6. அளவெட்டி ஆச்சிரமப் படுகொலை 26 அக்டோபர் 1987




அளவெட்டிக் கிராமம் யாழ். மாவட்டத்தில் வலிகாமத்தின் வடக்குப் பகுதியில் தெல்லிப்பளைப் பிரதேசசெயலகப் பிரிவினுள் அமைந்துள்ளது. அளவெட்டி அம்பனைப் பகுதியில் அளவெட்டி-மல்லாகம் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் அமைந்துள்ள கட்டடத்திற்கு முன்பாக அளவெட்டி இந்து ஆச்சிரமம் அமைந்துள்ளது. அளவெட்டிப் பிரதேசத்திலுள்ள இந்த இந்து ஆச்சிரமம் இந்து மக்களின் வயோதிபர் மடமாகவும், கடந்த கால வன்செயல்களால் கடும் பாதிப்புற்ற இளஞ்சிறார்கள் கல்வி கற்கும் இடமாகவும் செயற்பட்டுக்கொண்டிருந்தது.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இருபத்தாறாம் நாள் இந்திய இராணுவத்தினரின் தாக்குதல்கள் ஆரம்பித்ததன் பின்னர் அளவெட்டியில் அமைந்துள்ள இந்து ஆச்சிரமத்தின் மீது இந்திய இராணுவத்தினரின் "முதலை" என்னும் எம்.ஐ.24 ரக உலங்குவானூர்தியால் நடத்திய றொக்கட் தாக்குதலில் ஆச்சிரமத்திலுள்ள வயோதிபர்கள், சிறார்கள் உட்பட பதினைந்து பேர் உயிரிழந்தனர். பன்னிரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

கொல்லபப்டோரின'கிடைக்கப்பட்ட விபரம் (இல பெயர் தொழில் வயது)

01 இராசரத்தினம் கோமதி, மாணவி, 15
02 இராசரத்தினம் ஞானகணேசன், , 21
03 குணசீலன் கோணேஸ்வரி, மின்சார அத்தியட்சகர், 38
04 பத்மநாதன் செல்வச்சந்திரன், மாணவன், 12
05 தர்மலிங்கம் சிறீஸ்கந்தராசா, சாரதி, 25
06 துரைசிங்கம் மதி, குழந்தை, 1
07 தம்பிராசா சிறீபவன், மாணவன், 12
08 அமிர்தநாதர் நேசம்மா, , 50
09 சின்னத்துரை தங்கலிங்கம், வியாபாரம், 47
10 சின்னத்தம்பி தம்பிராசா, தொ.பே.இயக்குனர், 56
11 சின்னத்தம்பி இரத்தினம், வியாபாரம், 47
12 சின்னையா இராசரத்தினம், வியாபாரம், 62
13 சிவகுருநாதன் சிவபாக்கியநாதன், வியாபாரம், 41
14 விஜயரத்தினம் பத்மராணி, குடும்பப்பெண், 33
15 விநாசித்தம்பி ஜயாத்துரை, கமம், 80

## 7. சாவகச்சேரி சந்தைப் படுகொலை 27 அக்டோபர் 1987




யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குத் திசையில் யாழ் நகரையும், வன்னிப் பெருநிலப்பரப்பையும் இணைப்பது தென்மராட்சிப் பிரதேசமாகும். யாழ்-கண்டி பிரதான நெடுஞ்சாலையில் யாழ். நகரத்திலிருந்து ஏறக்குறைய பதினைந்து கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சாவகச்சேரி நகரமானது, தென்மராட்சிப் பிரதேசத்தின் பிரதான நகரமாகும். 1987 அக்டோபர் இருபத்தேழாம் திகதியன்று கந்தசட்டி சூரன் போர் ஆகையால், நகரத்திலிருந்த ஆலயத்திலிருந்து சூரன் வீதியால் வீதியுலா சென்று கொண்டிருநத் நேரம் மதியம் 12மணியளவில் வானில் வந்த இந்திய இராணுவத்துக்குச் சொந்தமான இரண்டு எம்.ஐ 24 ரக உலங்குவானூர்திகள் மக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டன. பீதியடைந்த மக்கள் என்ன செய்வதென்று தெரியாது அங்குமிங்குமாகச் சிதறி ஓடினர். தொடர்ச்சியாக மக்கள் மீது உலங்குவானூர்தி ஏவிய றொக்கட் குண்டுகளால் சந்தைக்கு வந்த அறுபத்தெட்டுப் பொதுமக்கள் உயிரிழந்தார்கள், நூற்றி எழுபத்தைந்து பேர் காயமடைந்தார்கள். இந்து ஆலயத்தில் வீதியுலா சென்ற சூரன் சிலையும் சேதமடைந்தது.

சாவகச்சேரிச் சந்தையில் பொருட்களை விற்றுக்கொண்டிருந்தவர்களும் வாங்கிக் கொண்டிருந்தவர்களும் உலங்குவானூர்தித் தாக்குதலுக்குள்ளாகினர். சந்தையில் இருந்தவர்களில் எல்லாமாகச் சேர்த்து 68 பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். 175 பேர் காயமடைந்தார்கள். அங்கு கட்டப்பட்டுக்கொண்டிருந்த சூரன் சிலையும் அழிக்கப்பட்டது.

2மத்தியகிழக்கு வீதி, குருநகரைச் சேர்ந்த வத்சலா கனகரட்ணம் என்பவர் தன்னுடைய வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறுகின்றார்,

*"நாம் புனித பத்திரிசியார் கல்லூரியில் தஞ்சமடைந்திருந்தோம். ஒக்ரோபர் 27 ஆம் திகதி, சாப்பாட்டுச் சாமான்கள் வாங்குவதற்கான என்னுடைய கணவர் சாவகச்சேரிச் சந்தைக்குச் சென்றார். அவர் திரும்பி வராததால் நான் கவலையடைந்தேன். மூன்றாம் நாள் என்னுடைய கணவர் பழனியாண்டி கனகரட்ணம் சாவச்சேரி சந்தையில் நடந்த வான்தாக்குதலில் கொல்லப்பட்டார் என்ற செய்தி எனக்குச் சொல்லப்பட்டது. அவருடைய சடலம் சாவகச்சேரி சேமக்காலையில் புதைக்கப்பட்டதாகவும் அறிந்துகொண்டேன். நான் தற்போது கர்ப்பமாக இருக்கின்றேன். அத்துடன் கணவர் இறந்தபின்னர் எனக்கு எந்த வருமானமும் இல்லை."*

கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர் தொழில் வயது)

01 இளையதம்பி நாகராசா, கமம், 50
02 இராசையா திரவியம் மரியாம்பிள்ளை, விவசாயம், 32
03 இராசநாயகம் நந்தினி, மாணவி, 20
04 இராசநாயகம் அருந்தவராசா, மாணவன், 13
05 இராசா சிறிதரன், வியாபாரம், 26
06 இராசதுரை இராசேந்திரபோஸ், மாணவன், 18
07 இராசசிங்கம் மனோகரன், கைத்தொழில், 38
08 இராசசிங்கம் கௌரிதாஸ், மாணவன், 20
09 நாகமுத்து தங்கம்மா, வீ.பணி, 66
10 நாகமுத்து தவராசா, சீவல், 27
11 நாகராசா புஸ்பராசா, இல்லை, 13
12 நாகராசா தனலட்சுமி, இல்லை, 21
13 நாகராசா மகேஸ்வரி, இல்லை, 41
14 நாகராசா சண்முகராசா, இல்லை, 10
15 நல்லதம்பி இராசையா, வியாபாரம், 56
16 கனகு பொன்னு, இல்லை, 57
17 கந்தையா மனோன்மணி, வியாபாரம், 58
18 கந்தன் தங்கம், வியாபாரம், 51
19 கந்தசாமி வைத்தீஸ்வரசர்மா, பூசகர், 26
20 வைத்தீஸ்வரசர்மா கலைச்செல்வன், , 2
21 கந்தசாமி கெந்தீஸ்வரன், தொழிலாளி, 20
22 கார்த்திகேசு பெனடிக்ற், மத்தியூஸ், வியாபாரம் 32
23 கணபதி மயில்வாகனம், முகாமையாளர், 40
24 பழனியாண்டி கனகரத்தினம், ஊழியர், 34
25 பிள்ளையாங்குட்டி துரைச்சாமி, சாரதி, 49
26 பிலிப்பு இராசேந்திரம், மேசன், 42
27 வைத்திலிங்கம் மயில்வாகனம், வியாபாரம், 45
28 தம்பு ஜெயரத்தினம், தொழிலாளி, 22
29 தம்பிராசா சந்திரமோகன், மாணவன், 21
30 மார்க்கண்டு துரைராசா, சுருட்டுத்தொழில், 55
31 முருகேசு நடராசா, இ.போ.ச, 50
32 முருகேசு சிவசுப்பிரமணியம், இரும்பு வேலை, 41
33 ஆனந்தசாமி அருந்தவசிவனேசன், சாரதி, 25
34 ஆறுமுகம் விஸ்வநாதன், வியாபாரம், 31
35 அல்பிரட் நொபேட் லூயிஸ் ஸ்ரீபன், தேநீர்க்கடை ஊழியர், 29
36 ஜெயரத்தினம் வீரஜெயபரஞ்சோதி, வியாபாரம், 23
37 கோவிந்தசாமி மகேந்திரன், வியாபாரம், 27
38 பொன்னுத்துரை கமலேஸ்வரி, மாணவி, 10
39 பொன்னுத்துரை தங்கரத்தினம், வியாபாரம், 56
40 பொன்னுத்துரை மகேஸ்வரி, வீட்டுப்பணி, 49
41 பொன்னுத்துரை மஞ்சுளாதேவி, வீட்டுப்பணி, 28
42 பொன்னம்பலம் கனகசிங்கம், ஊழியர், 41
43 பொலோறஞ் அரியமலர் இராசசிங்கம், வீட்டுப்பணி, 65
44 தேசிங்கன் செல்லையா, மாணவன், 14
45 டொனால்ட் நவீன் குண்டேக்ஸ், மின்சார ஊழியர், 20
46 சோமசுந்தரம் சின்னாச்சி, வீட்டுப்பணி, 38
47 செல்லத்துரை தயாபரன், மாணவன், 16
48 செல்லத்துரை ரெங்கநாதன், கமம், 32
49 வெற்றிவேலு சிவசிறி, மாணவன், 18
50 வேலுப்பிள்ளை குணபாலசிங்கம், தொழிலாளி, 30
51 வேலுப்பிள்ளை தங்கம்மா, , 72
52 வேலுப்பிள்ளை யோகேஸ்வரன், நடத்துநர், 19
53 ஞானமுத்து இரஞ்சிதமலர், ஓய்வூதியர், 63

54 சுப்பிரமணியம் பரந்தாமன், மாணவன், 12
55 சுப்பையா பொன்னம்மா, வியாபாரம், 60
56 சின்னவன் நாகமுத்து, கமம், 76
57 சின்னவன் செல்லையன், தொழிலாளி, 45
58 சின்னராசா அருமைராசா, மெக்கானிக் 33
59 சின்னையா அம்பிகைபாலன், தொழிலாளி, 27
60 சிதம்பரப்பிள்ளை குமாரசாமி, வியாபாரம், 52
61 சிவக்கொழுந்து மகேஸ்வரன், நகைத்தொழில் , 55
62 சண்முகம் பரராசசிங்கம், வியாபாரம், 34
63 வன்னியசிங்கம் பாஸ்கரன், மாணவன், 19
64 விசுவநாதன் கந்தையா, வியாபாரம், 59
65 எலியாஸ் சிறாயுதீன், வியாபாரம், 27

## 8. மூளாய் வைத்தியசாலைப் படுகொலை 05 நவம்பர் 1987

மூளாய்க் கிராமம், யாழ் மாவட்டத்தில் வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேசசெயலர் பிரிவினுள் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு மருத்துவ வசதியினை வழங்கும் இடமாக மூளாய் வைத்தியசாலை அமைந்துள்ளது.

பெரும் இன்னல்களுக்கும், பெரும் மருத்துவ நெருக்கடிகளுக்கும் மத்தியில் வாழ்ந்த மூளாய்க் கிராமத்து மக்கள், 1987ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் நாள் சிகிச்சைக்காக மூளாய் வைத்தியசாலையில் இருந்தபோது இந்திய இராணுவத்தினரின் பீரங்கித் தாக்குதலிற்குள்ளாகினர். ஐந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்தார்கள். மருத்துவமனையும் சேதமடைந்தது.




கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர் தொழில் வயது)

01 நாகர் மகேந்திரன், வியாபாரம், 44
02 கந்தையா மகாதேவன், சாரதி, 48

03 கந்தசாமி சிறீதரன், வியாபாரம், 18
04 ஜயாத்துரை பேரின்பநாயகம், ஓய்வூதியம், 58
05 யோசேப் யோகராசா, தொழிலாளி, 35

## 9. நெடுங்கேணிச் சந்திப் படுகொலை 11 நவம்பர் 1987




வவுனியா மாவட்டத்தின் வடக்கே அமைந்துள்ள வவுனியா வடக்குப் பிரதேசசெயலர் பிரிவின் பிரதான நகரமாக நெடுங்கேணி உள்ளது. இங்கு வாழ்கின்ற மக்கள் பெரும்பாலானோர் விவசாயத்தையும் கூலித்தொழிலையுமே பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். 1987ஆம் ஆண்டு அக்டோபரில் விடுதலைப்புலிகளிற்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் மோதல் தொடங்கிய பின் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை, தண்ணீரூற்றுப் போன்ற பிரதேசங்களில் இந்திய இராணுவத்தின் இராணுவ நடவடிக்கை நடைபெற்ற போது, அக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெருமளவானோர் இடம்பெயர்ந்து நெடுங்கேணியிலும் தஞ்சம் புகுந்தனர்.

இவ்வாறு தஞ்சமடைந்த மக்கள் பாடசாலைகள், கோயில்கள், பொதுஇடங்கள் என்பவற்றில் தங்கினார்கள். மக்கள் செறிவாகத் தங்கியிருந்த கட்டிடங்கள் மீது இந்திய இராணுவத்தின் உலங்குவானூர்திகள் நடத்திய றொக்கற் தாக்குதலில் பதினைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், இருபத்தைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்தனர். நெடுங்கேணி, மாறாஇலுப்பையைச் சேர்ந்த்த ட. தவமணி சம்பவம் பற்ற்றி விபரிக்கையில்,

"என்னுடைய மகள் நந்தினிக்கு சுகயீனம் என்ற காரணத்தால் நெடுங்கேணி வைத்தியசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெறவேண்டி வந்தது. அதனால் நானும் அங்கு நின்றிருந்தேன். அன்றைய தினம் மாலை 5 மணியிருக்கும் இந்திய இராணுவத்தின் எம்.ஐ.ரக உலங்குவானூர்தி ஒன்று வைத்தியசாலையைச் சுற்றி வந்தது. அங்கு கூடி நின்ற மக்கள் அனைவரும் வைத்தியசாலை எனபதால், குண்டு போடமாட்டார்கள் என்ற எண்ணத்தில் வைத்தியசாலைக்குள் ஓடி வந்தார்கள். அதை அவதானித்த உலங்குவானூர்தி வைத்தியசாலையின் முன்பக்கத்தில் குண்டுகளை வீசியது. இதனால் குண்டுச் சன்னங்கள் எங்கும் பட்டு கண்ணாடி யன்னல்கள் அனைத்தும் நொருங்கி வீழ்ந்தது. அந்த நேரந்தான் எனக்குத் தலையிற் காயம் பட்டது.

இதன்போது காயமடைந்தவர்கள் விழ ஏனையோர் கலவரப்பட்டு ஓடினார்கள். மகளைக் கூட்டிக்கொண்டு பின்புறமாக ஓடலாமென எத்தனித்தபோது மகளின் காலால் இரத்தம் வழிவதை அவதானித்தேன். அத்துடன் மகளும் மயக்கமுற்று விழ்ந்துவிட்டார். பின்னர் துணைக்கு எவரும் இல்லாத நிலையில் கையில் அகப்பட்ட துணியால் நானே மகளின் காலுக்குக் கட்டுப்போட்டதுடன், எனது காயத்திற்கும் கட்டுப் போட்டேன்.

வைத்தியசாலையிலிருந்த மருத்துவர்கள் அனைவரும் பாதுகாப்புத் தேடி ஓடிவிட்டதால் மருந்து கட்டக்கூட ஒருவரும் இருக்கவில்லை. இதனால் தனியார் மருத்துவமனை வைத்தியரின் உதவியுடன் இரவு 10.00 மணியளவில் எங்களுக்கு மருந்து கட்டப்பட்டது. அதன்பின்னர் அடுத்தநாள் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருந்ததால், வாகனங்கள் எதுவும் இருக்கவில்லை. பின்னர் பயணிகள் பேருந்து ஒன்றின் மூலமாக வவுனியா மருத்துவமனையிற் சேர்க்கப்பட்டோம். அதன் பின்னர் மூன்று மாதங்கள் தங்கிச் சிகிச்சை பெற்றோம்.

தற்போது கூட எனது தலையில் குண்டுச் சன்னம் உள்ளதால் பெரியளவில் ஒருவித வேலையும் செய்யமுடியாதுள்ளது. அதேபோன்று தான் மகளின் நிலையும் உள்ளது. மேற்படி சம்பவத்தின்போது நெடுங்கேணி வைத்தியசாலையில் நின்றிருந்த பதினைந்து பேர் இறந்தனர். இருபத்தைந்து பேர் காயமடைந்ததாகக் கேள்விப்பட்டோம்."

இச்சம்பவம் தொடர்பாக முள்ளியவளையைச் சேர்ந்த சிவராசா யோகரத்தினம் தெரிவிக்கையில்,

*"1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் தண்ணிரூற்று முள்ளியவளைப் பிரதேசத்தில் தாக்குதல்களை மேற்கொண்ட நேரத்தில் அங்கிருந்த மக்கள் பீதி காரணமாக இடம்பெயர்ந்துகொண்டிருந்தார்கள். அந்த நேரம் எமது கிராமசேவையாளராக இருந்த சிதம்பரப்பிள்ளைக்கு உதவியாளராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தேன். அந்தவேளை இடம்பெயர்ந்த மக்களுக்கு எங்களால் முடிந்த வாகன உதவிகளைச் செய்து நெடுங்கேணிக்குககொண்டுசென்று பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தங்க வைத்து நிவாரணப் பணிகள் செய்துகொண்டிருந்தோம். அன்றையதினம் மாலை 5.00 மணியிருக்கும் இந்திய இராணுவத்தின் முதலைக் கெலி என்றழைக்கப்படும் எம்.ஐ.24 ரக உலங்குவானூர்தி வானத்திற் சுற்றிக்கொண்டிருந்தது. இதனாற் பயமடைந்த நாங்கள் பாதுகாப்புத் தேடி ஒளிந்துகொண்டோம். அந்த நேரம் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்னால் முதலாவது குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதன்போது இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்காக அகப்பை வாங்க வந்த எமது பகுதி இலங்கை போக்குவரத்துக் கழக பேருந்துச் சாரதியான பொன்னம்பலம் இராமநாதன் என்பவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் வேலை செய்த மகாதேவன் என்பவரின் மகன் மகேந்திரன் ஒரு உழவு இயந்திரத்தில் வந்துகொண்டிருந்தார். அவரும் அவ்விடத்திலேயே மரணமானார். அதேபோன்று குளவிசுட்டானைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் வேலைசெய்யும் சிவராசா என்பவரின் சகோதரன் தம்பிஐயா அண்ணை என்பவரும் இடம்பெயர்ந்த மக்களை வாகனத்தில் ஏற்றியிறக்க உதவிபுரிந்த பாரவூர்திச் சாரதி துரைச்சாமி என்பவரும் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார்கள். அதன்பின்னர் இரண்டாவது தாக்குதல் இடம்பெயர்ந்து வந்து நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் தஞ்சமடைந்திருந்த மக்கள் மீது நடத்தப்பட்டது. இதன்போது பல பொதுமக்கள் உடல்சிதறிய நிலையில் இறந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அதன்பின்னர் இறந்தவர்கள் காயமடைந்தவர்களென அனைவருக்கும் நெடுங்கேணிப் பகுதியில் தனியார் வைத்தியசாலை நடத்தி வந்த வைத்தியர் ஜெயநாதன் மற்றும் வைத்தியர் கஜேந்திரா என்பவர்களுடன் அரச வைத்திய அதிகாரியும் இணைந்து சிகிச்சை செய்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியாவிற்கும் இறந்தவர்களை வீடுகளிற்கும் அனுப்பி வைத்தோம். இச்சம்பவம் நடந்து பல வருடங்கள் கடந்த நிலையிலும், அதனை நினைக்கும்போது அனைத்துச் சம்பவங்களும் நேற்றைய தினம் நடந்ததுபோல் கண்முன்னே வருமளவிற்கு அந்த நிகழ்ச்சி எனது மனதில் மாறாவடுவாகவுள்ளது."*

கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர் தொழில் வயது)

01 கந்தையா சிறிதரன், கமம், 22
02 கதிர்காமு கார்த்திகேசு, கமம், 44
03 தம்பையா நற்குணம், கமம், 31
04 மகாதேவன் மகேந்திரன், , 31
05 முகமதுசரிபு றகீம், , 26

06 முத்தையா துரைராசா, , 64
07 அப்துல்காதர் முகமதுலிமாஸ், , 24
08 பொன்னம்பலம் இராமநாதன், சாரதி,

## 10. மட்டக்களப்பு பொதுச் சந்தைப் படுகொலை 12 டிசம்பர் 1987

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான பொதுச்சந்தை நகரில் அமைந்துள்ளது. இச்சந்தை பெருமளவான மக்கள் பயன்படுத்துமிடமாகும். 1987.12.27 அன்று காலை 10.00 மணியளவில் சந்தையையும், சந்தையைச் சுற்றியும் பெரும் தொகையான இந்திய இராணுவத்தினர் காவலில் ஈடுபட்டிருந்தார்கள். திடீரெனக் காவலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இந்திய இராணுவத்தினர் சந்தையில் நின்ற பொதுமக்களை நோக்கிச் சுடத் தொடங்கினார்கள். சந்தையிலிருந்த கடைகளினைத் தீயிட்டு எரித்தார்கள். எரிந்து கொண்டிருந்த கடைகளின் மேல் இறந்தவர்களின் உடல்களையும் குறை உயிருடன் இருந்தவர்களையும் தூக்கிப்போட்டார்கள். இவ்வாறு எரியும் நெருப்பில் இந்திய இராணுவத்தினரால் உயிருடன் போடப்பட்டவர்களில் இரண்டு குழந்தைகளும் அடங்குவார்கள்.

1987.2.27 அன்று இந்திய இராணுவத்தினரால் மட்டக்களப்புப் பொதுச் சந்தையினுள் நடத்தப்பட்ட தாக்குதலில் மொத்தமாக நூற்றி ஐம்பத்தொன்பதிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். இவர்களில் முப்பத்தொரு பேரினது உடல்கள் மட்டக்களப்புப் பொதுமருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன. எண்பத்தைந்திற்கும் மேற்பட்ட உடல்கள் கடைகளுடன் சேர்ந்து எரிந்து சாம்பலானது.

## 11. காத்தார் சின்னக்குளப் படுகொலை 17 சனவரி 1989

வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேசசெயலர் பிரிவில் எல்லைப்புறக் கிராமமாகக் காத்தார் சின்னக்குளம் அமைந்துள்ளது. இங்கு வாழுகின்ற மக்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். இக்கிராமத்திற்கு அருகிற் குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்களால் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் நாள்தோறும் பல இன்னல்களை அனுபவித்து வந்தார்கள்.

இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்த பின்னர் 17.01.1989 அன்று காலை 9.00 மணியளவில் இந்திய இராணுவத்தினர் கிராமத்துக்குள் திடீரென நுழைந்ததை உணராத மக்கள் தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவ் இந்திய இராணுவத்தினர் மக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் காலை உணவு உண்டுகொண்டிருந்தவர்கள், விவசாய அறுவடையில் ஈடுபட்டிருந்தவர்கள், கர்ப்பிணித்தாய், சிறுவர்கள் என இச்சம்பவத்தில் பதின்நான்கிற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டார்கள். பலர் காயமடைந்தனர். பல வீடுகள் எரியூட்டப்பட்டன.




கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர் தொழில் வயது)

01 இராசையா மேகவர்ணன், , 44
02 இராமசாமி மருதமுத்து, ,
03 இராசலிங்கம் முத்தையா, விவசாயம், 75
04 குப்பன் சின்னையா, விவசாயம், 75
05 கறுப்பழகு சரஸ்வதி, , 32
06 தர்மலிங்கம் சுந்தரலிங்கம், மாணவன், 14
07 மாணிக்கம் செல்லம்மா, , 60
08 மீனா சுப்பையா, ,
09 அனுமந்து சுப்பிரமணியம், ,
10 அழகன் வீரையா, ,
11 பொன்னுச்சாமி கறுப்பையா, தொழிலாளி, 36
12 பெருமாள் மீனா, , 67
13 பெருமாள் சின்னத்தம்பி, விவசாயம், 22
14 சுப்பிரமணியம், விவசாயம், 54
15 சுப்பையா சின்னத்தம்பி, ,

காயமடைந்தவர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர்)

01. பஞ்சலிங்கம் நந்தினி
02 பஞ்சலிங்கம் தவமணி
03 சின்னமுத்து ஆறுமுகம்

## 12. வல்வை படுகொலைகள் 02, 03, 04 ஆகஸ்ட் 1989



இன்று யாழ். மாவட்டத்தில் வடமராட்சிப் பகுதியிலுள்ள வல்வெட்டித்துறைக் கிராமம் ஏறக்குறைய மூன்றரை மைல் நீளமும், சராசரி அரை மைல் அகலத்தையும் கொண்டு நான்கு அயற் கிராமங்களையும் உள்ளடக்கிய நகரசபையாக உள்ளது. அன்று ஏறக்குறைய முன்னூறு ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கிய ஒரு சிறிய பட்டணமாக இருந்தது.




1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டாம், மூன்றாம், நானகாம் திகதிகளில் இந்திய இராணுவம் வல்வெட்டிதுறையில் ஊரடங்கு உத்தரவினைப் பிறப்பித்தது. 1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் இரண்டாம் நாள் ஊரிக்காடு இந்திய அமைதிப்படை முகாமிலிருந்தும், பொலிகண்டி இந்திய அமைதிப்படை முகாமிலிருந்தும் மக்கள் குடியிருப்புகளைநோக்கி வந்த இந்திய அமைதிபபடைகப் பிரிகேடியா ' "சங்கர் பிரசாத" தலைமை தாங்கினார். இவருடன் இராணுவ அதிகாரிகள் கப்டன் மேனன், கப்டன் கபூர் ஆகியோரும் செயற்பட்டார்கள். இவர்களின் வழிகாட்டலின் கீழ் சீக்கியப் படையணி, கறுப்புப்பூனைப் படையணி, கூர்க்காப் படையணிகள் போன்றன பங்குபற்றின. அன்றையதினம் ஊரடங்கு என்பதால் மக்கள் அனைவரும் வீடுகளில் இருந்தனர். வல்வெட்டித்துறை நகரைச் சுற்றி வளைத்த இந்திய இராணுவம் வீடுகளுக்குச் சென்று மாணவர்கள், பெண்கள், வயோதிபர்களை வெட்டியும், சுட்டும், உயிருடன் எரித்தும் கொன்றனர். சில வீடுகளில் இளைஞர்களைக் கைதுசெய்து வல்வெட்டித்துறைச் சந்தியில் நிறுத்திப் படுகொலை செய்தார்கள்.

பதினைந்து திருமணமான பெண்கள் உட்பட ஐம்பதிற்கும் அதிகமான இளம் பெண்கள் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டார்கள். பல இந்துக் கோயில்கள் சேதமாக்கப்பட்டன. வழிபாட்டுத்தலங்களில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் உறவினர் முன்னிலையில் ஆலயங்களிலேயே சுடப்பட்டார்கள். பல நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளும், கடைகளும் எரியூட்டப்பட்டு அழிக்கப்பட்டன. இந்திய

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இச்செயலை மக்கள் "இந்தியாவின் மைலாய்ப் படுகொலை" என அழைக்கின்றார்கள்.

இச்சம்பவத்தில் சிறார்கள், மாணவர்கள், பெண்கள், இளைஞர்கள், வயோதிபர்கள் என அறுபத்தாறிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வரை உயிரிழந்தார்கள்.

இச்சம்பவத்தில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறையைச் சேர்ந்த என்.சீவரத்தினம் சம்பவம் பற்றி கூறுகையில்,

*"எங்கள் வீட்டில் அடைக்கலம் தேடி வந்த எங்கள் உறவினர்கள் கையெடுத்துக் கும்பிடவும் என் மனைவி, பிள்ளைகள் முன்னிலையில் சுடப்பட்டார்கள். எனது வீடு, கார் உட்பட சகல சொத்துக்களும் அழிக்கப்பட்டன. வீதியோரத்திலும், எனது வீட்டிலும் மூன்று தினங்களாக அழுகிய நிலையிலிருந்த இரு உடல்களை மனைவி, பிள்ளைகளின் உதவியுடன் நானே எடுத்து வீதியோரத்திற் போட்டு எரித்தேன். விறகு இல்லாமையால் வீட்டிலிருந்த வாங்கு மற்றும் தளபாடங்களைப் போட்டுத் தீ மூட்டினேன். இந்த நிலையில் வாகன ரயர் இருந்தால் நல்லதென நினைத்து அடுத்த ஒழுங்கைக்குத் தேடிப்போனபோது அங்கேயும் அழுகிய நிலையில் உடல்கள் இருந்தன. அவ்வுடல்களையும் எடுத்து ஒன்றாகப் போட்டு எரித்தேன்."*

கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர் தொழில் வயது)

01 இராஜலிங்கம் சதீஸ்குமார், மாணவன், 18
02 இராசையா இராஜரட்ணம், கடற்றொழில், 33
03 இராமச்சந்திரன் நவரத்தினம், வியாபாரம், 26
04 இராசகுரு யவனராஜ், மாணவன், 13
05 இராசகுரு புஸ்பராணி, வியாபாரம், 45
06 இராசா ஜெயமயில், வியாபாரம், 20
07 இராசமாணிக்கம் நடராசா, தபாலதிபர், 62
08 ஈஸ்வரமூர்த்தி இராசலட்சுமி, , 24
09 நாகராசா ஞானகுலசிங்கம், கடற்றொழில், 22
10 நாகலிங்கம் பவப்பிருந்தா, மாணவி, 14
11 நடராசா நல்லமுத்து, வீட்டுப்பணி, 72
12 நடராசா சிவகுமாரன், மாணவன், 25
13 நடராசா ரவீந்திரன், கடற்றொழில், 31
14 நல்லரெத்தினம் பானுகோபால், இரும்பு வேலை, 23
15 கந்தசாமி தங்கராசா, வியாபாரம், 70
16 கந்தசாமி வேலும்மயிலும், தொழிலாளி, 45
17 கதிர்காமத்தம்பி சிவநேசராசா, வியாபாரம், 36
18 குமாரவேல் செல்வானந்தவேல், மாணவன், 18
19 கணேசலிங்கம் சசி, குழந்தை, 01
20 குழந்தைவடிவேல் சண்முகவடிவேல், தொழிலாளி, 37
21 குணரட்ணம் இராசசேகரம், கடற்றொழில், 18
22 பாலகிருஸ்ணன் பிரேமதாஸ், சாரதி, 20
23 பாலசுப்பிரமணியம் மகேந்திரதாஸ், மாணவன், 15
24 பாலசுப்பிரமணியம் யோகேந்திரராசா, மீன்பிடித்தல், 28
25 பீற்றர் விஜயராஜன் கிருஸ்ணவதனா, வீட்டுப்பணி, 33
26 தளையசிங்கம் ஜெயமோகன், கடற்றொழில், 18
27 தளையசிங்கம் சிவகுமார், கடற்றொழில், 21
28 துரைராசா நாகதாஸ், மின்னியலாளர், 28
29 தங்கவேலாயுதம் ஜெயக்குமார், மெக்கானிக், 20
30 தங்கவேலாயுதம் சாம்பசிவம், கடற்றொழில், 18
31 தணிகாசலம் ரவிச்சந்திரன், வியாபாரம், 28
32 முருகேசு செல்லத்துரை, சாரதி,
33 அப்பாத்துரை மதிவாணன், வியாபாரம், 18
34 ஆதிஅருணாசலம் பராசர், வியாபாரம், 20

35 ஆதிஅருணாசலம் பரம்சோதி, வியாபாரம், 18
36 ஆதிஅருணாசலம் சுந்தரேஸ்வரன், மாணவன், 12
37 அமிர்தலிங்கம் உமாதேவி, , 26
38 அருள்பிரகாசம் சுவர்ணதாஸ், கடற்றொழில், 19
39 அருளப்பு இலங்கைநாதன், கடற்றொழில், 22
40 அருணாச்சலம் இளையபெருமாள், துறைமுக ஊழியர், 76
41 ஆறுமுகநாதன் இராமச்சந்திரன், மேசன், 41
42 பொன்னுத்துரை இராசேந்திரம், மீனவர், 23
43 பொன்னுத்துரை சண்முகலிங்கம், சாரதி, 43
44 பொன்னம்பலம் ரஞ்சிதகுமார், கடற்றொழில், 25
45 பொன்னையா காளிதாஸ், இரும்பு வேலை, 26
46 செந்திவேல் சக்திவேல், கடற்றொழில், 24
47 சோதிலிங்கம் ரமேஸ்குமார், கடற்றொழில், 18
48 செல்லையா யோகராசா, கமம், 19
49 செல்வக்கதிரமலை மயில்வாகனம், பரிசோதகர், 55
50 செல்வசுந்தர் தவசீலன், மாணவன், 07
51 வெங்கடாச்சலம் சுப்பிரமணியம், நிலஅளவை அதிகாரி,
52 வேலும்மயிலும் செல்வச்சந்திரன், மாலுமி, 26
53 சுந்தரமூர்த்தி உமாசங்கர், வியாபாரம், 22
54 சுந்தரலிங்கம் ஞானவேல், கடற்றொழில், 21
55 சுப்பிரமணியம் அமுதன், வர்த்தகர், 28
56 சுப்பிரமணியம் பேரின்பம், மாணவன், 20
57 சின்னத்துரை தம்பித்துரை, கடற்றொழில், 60
58 சின்னத்தம்பி கணேசலிங்கம், தொழிலாளி, 25
59 சின்னத்தம்பி சிவலிங்கம், சீவல், 50
60 சின்னவன் கந்தன், தொழிலாளி, 30
61 சிவப்பிரகாசம் சபாநாயகம், வியாபாரம், 77
62 சிவபாக்கியம் கந்தசாமி, சலவைத்தொழில், 42
63 சிவலிங்கம் இராமநாதன், சாரதி, 35
64 வடிவேலு குமாரசாமி, தொழிலாளி, 89
65 விஜயரட்ணம் முரளிதரன், கடற்றொழில், 20
66 வினாயகமூர்த்தி அருள்சோதி, ஊழியர், 29

## 13. வாக்குமூலங்கள்

இந்தியப் படையினரின் காலத்தில் அவர்களால் அநியாகமாகக் கொல்லப்பட்ட ஏனையவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 500 பேரின் வாக்கு மூலங்களிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பே இங்கே தரப்படுகின்றது.

அடுத்து வரும் இரு வாக்கு மூலங்களில் விபரிக்கப்பட்டுள்ளது போன்று, எறிகணைத் தாக்குதல்களிலிருந்து தப்ப மக்கள் அடைக்கலம் புகுந்த பாடசாலைகளும் தாக்குதலுக்குள்ளாகியிருந்தன.

1. ***திருச்செல்வம் ஒழுங்கை, பலாலி வீதி. கோண்டாவிலைச் சேர்ந்த செல்லையா துரைராஜா*** தன்னுடைய வாக்குமூலத்தில் 1987 ஒக்ரோபர் 20 ஆம் திகதி தன்னுடைய குடும்பம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் புகலிடம் கோரியிருந்ததாகச் சொல்லியுள்ளார். அங்கே அவருடன் கைக்குழந்தையுடன் கூடிய அவருடைய மகளும் இருந்தார். மாலை 7.00 மணியளவில் நாவற்குழி முகாமில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினர் ஏவிய எறிகணைகள் வகுப்பறையொன்றின்மீது விழுந்து வெடித்தன. அதில் அவருடைய மகள்

கொல்லப்பட்டார். அன்றைய தினம் எறிகணைத் தாக்குதலில் அகப்பட்டு 10 மக்கள் கொல்லப்பட்டதாகத் துரைராஜா தன்னுடைய வாக்குமூலத்தில் கூறினார்.

2. ***70, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கமலாம்பிகை கறுப்பையா என்பவர்*** தன்னுடைய வாக்குமூலத்தில் ஒக்ரோபர் 20 ஆம் திகதி தன்னுடைய குடும்பம் நாவலர் பாடசாலையில் தஞ்சம் புகுந்ததாகத் தன்னுடைய வாக்கு மூலத்தில் கூறினார். ஒக்ரோபர் 24 ஆம் திகதி அங்கு வந்த இந்தியப் படையினர் பாடசாலையில் தஞ்சம் கோரியிருந்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இதில் அவருடைய 28 வயது கணவரான சிவலிங்கம் கறுப்பையா உட்பட **17 பொதுமக்கள்** கொல்லப்பட்டதாக அவர் கூறினார். கொல்லப்பட்டவர்களின் சடலங்களை பாடசாலை மைதானத்திலேயே அடுத்தநாள் இந்தியப்படையினர் எரித்தாகவும் அவர் கூறினார்.

இந்தியப் படையினர் எவ்வாறு ஆண்கள், பெண்கள், இளவயதினர், வயது முதிர்ந்தவர்கள் எனப் பலரையும் சுட்டுக்கொன்றொழித்தார்கள் என்பதை அடுத்தடுத்த வாக்குமூலங்கள் கூறுகின்றன. அவ்வாறான ஒன்பது வாக்குமூலங்களில் சொல்லப்பட்டவை கிழே தரப்படுகின்றது.

1. ***சுன்னாகம் மின்சார நிலையத்தைச் சேர்ந்த இராசையா சேகரம்*** தன்னுடைய வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறுகின்றார். அதாவது 1987 ஒக்ரோபர் 12 ஆம் திகதி, மாலை ஐந்து மணியளவில் பல்வேறு துருப்புக்காவிகளில் இந்தியப் படையினர் அவ்விடத்தை நோக்கி வருகின்றார்கள் என்பதைக் கேள்விப்பட்டு கிட்டத்தட்ட 28 மக்கள் ஒரே இடத்தில் கூடினர். சற்று நேரம் கழித்து அங்கே வந்த இந்தியப் படையினர் அவர்கள் 28 பேரையும் வெளி இடமொன்றுக்கு வருமாறு கட்டளையிட்டு பின்னர் அவர்களை நோக்கிச் சுட்டனர். ***அச்சம்பவத்தில் எட்டுப்பேர் கொல்லப்பட்டார்கள்.*** இந்தியப்படையினர் மாலை 6.30 மணியளவில் அங்கிருந்து சென்றனர். காயமடைந்தவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட, ஏனையோர் அங்கிருந்து தப்பினர். ஒக்ரோபர் 16 ஆம் திகதியே அவ்விடத்திற்குத் திரும்பியதாக சேகரம் கூறினார். அன்றும்கூட இறந்தவர்களின் சடலங்கள் உடற்கூறுகளாக அங்கேயே கிடந்ததாகக் கூறினார். சேகரம் தன்னுடைய அம்மாவையும் அப்பாவையும் இழந்தார். அச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் என அவர் தன்னுடைய வாக்குமூலத்தில் கூறியுள்ள பெயர்கள் வருமாறு: கணபதி இராசையா வயது 45, இராசையா மனோன்மணி, வயது 37, நன்னித்தம்பி ராஜினிதேவி, வயது 14, முத்தன் கதிரி வயது 33, முதுசிங்கம் பூரணன் வயது 33, கனகன் செல்லி வயது 60, கதிர்காமநாதன் சரோஜினிதேவி வயது 20, கதிர்காமநாதன் விமலநாதன் வயது 89.

2. ***பொக்கணை, ஊரெழுவைச் சேர்ந்த புவனேந்திரம் போகம்மா*** தன்னுடைய வாக்குமூலத்தில் கூறுகையில் 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 12 ஆம் திகதி வந்த இந்தியப் படையினர் கைகளை உயர்த்தியவாறு வெளியில் வருமாறு கட்டளையிட்டார்கள். அவர்கள் வெளியில் சென்றநேரத்தில் அவர்களை நோக்கி இந்தியப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். அவருடைய மகள் சுடப்பட்டு கீழே விழுந்தார். ஆனால் அம்மகளை அப்படியே விட்டுவிட்டு, இராணுவத்தின் கட்டளைக்கமைய அவர் தொடர்ந்தும் நடக்கவேண்டியிருந்தது. அவர்கள் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டு, அங்கு சென்று பார்த்தபோது, மகள் மரணமடைந்தும், வீடு தீக்கிரையாகியும் இருந்ததைக் கண்டனர்.

3. ***ஊரேழு, உரும்பிராயைச் சேர்ந்த ராஜலிங்கம் விஜயாவின்*** வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறுகின்றார். 1987 ஒக்ரோபர் 12 காலை 10 மணியளவில் இந்தியப் படையினர் வந்து கதவில் தட்டித் திறந்து, வீட்டுக்குள் நுழைந்து, தேடுதல் நடாத்தினார்கள். அவர்கள் திரும்புகையில், தமக்கு எந்தத் தீங்கும் செய்ய மாட்டோம் என்றும், அவர்கள் வீட்டுக்குள்ளேயே இருக்கவேண்டும் என்றும் சொன்னதாக விஜயா கூறுகின்றார். அப்பிரதேசத்திலிருந்து ஏனைய வீடுகளிலும் இந்தியப் படையினர் அவ்வாறு செய்ததாக அயலவர்கள் வாயிலாக பின்னர் விஜயா அறிந்துகொண்டார். மாலை மூன்று மணியளவில், வேறு ஒரு தொகுதி இந்தியப் படையினர் மீண்டும் வந்து கதவைத் தட்டினார்கள். குழந்தையைக் கையில் வைத்திருந்த அவருடைய கணவர் கதவைத் திறந்தபொது, இந்தியப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். குழந்தையுடனேயே அவர் நிலத்தில் விழுந்தார். பின்னர் இந்தியப் படையினர் அங்கிருந்து வெளியேறியதும், அயலவர்களின் உதவியுடன் விஜயா தன் கணவரையும் குழந்தையையும் வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றார். செல்லும்வழியிலேயே கணவர் மரணமடைந்தார். பிள்ளையின் வலது கை முழுங்கையுடன் கழற்றப்பட்டது.

4. ***சர்வதா, சுன்னாகத்தைச் சேர்ந்த சீனியர் சந்திரகுமாரனின்*** வாக்குமூலத்தில், 1987 ஒக்ரோபர் 13 ஆம் திகதி தன்னடைய மனைவியான 32 வயதுடைய சந்திரகுமரன் ஈஸ்வரியும் 12, 8, 3 வயதுகளையுடைய மூன்று பிள்ளைகளும் சுன்னாகம் மின்சார நிலையத்தில் வைத்து இந்தியப் படைகளால் சுட்டுக்கொல்லப்பட்டதாக விபரித்தார்.

5. ***பலாலி வீதி, வசாவிளானைச் சேர்ந்த சிவஞானசுந்தரம்பிள்ளை சிவனேசனின்*** வாக்குமூலத்தில் 1987 ஒக்ரோபர் 16 ஆம் திகதி தன்னுடைய வீட்டுக்கு வந்த இந்தியப் படையினர் அப்பா இலகுப்பிள்ளை சிவஞானசுந்தரம்பிள்ளை, வயது 63, அம்மா சிவஞானசுந்தரம்பிள்ளை சிவபாக்கியம், வயது 59, சகோதரன் சிவஞானசுந்தரம்பிள்ளை சிவதரன், வயது 32 ஆகியோரை சுட்டுக்கொன்றதாக கூறுகின்றார். சிவனேசன் இச்சம்பவம் நடப்பதற்குச் சற்று முன்னர்தான் கடைக்குச் சென்றுவிட்டு திரும்பி வருகையில் இந்தியப் படையினர் அவருடைய வீட்டுக்குள் சென்றதாக சில அவருக்குச் சொல்லியிருக்கின்றார்கள். ஒக்ரோபர் 25 ஆம் திகதி தான் சிவனேசனால் வீட்டுக்குத் திரும்பக் கூடியதாய் இருந்தது. அவ்வாறு வந்து பார்த்தபோது அவருடைய குடும்ப அங்கத்தவர்களின் சடலங்கள் மிகவும் சிதைவடைந்த நிலையிலிருந்ததையும் கண்டார்.

6. ***கரந்தன் வீதி, ஊரெழு, கன்னாகத்தைச் சேர்ந்த சின்னம்மா பூபதிப்பிள்ளையின்*** வாக்குமூலத்தில், 1987 ஒக்ரோபர் 20 ஆம் திகதி, இந்தியப் படையினர் முன்னேறி வந்ததைத் தொடர்ந்து, 65 வயதுடைய அவருடைய தந்தை இளையவன் ராமு தம்முடைய குடும்பத்துடன் வீட்டிலிருந்து வெளியேறிக்கொண்டிருந்தார் என்று கூறினார். வீட்டிலிருந்து ஏறத்தாழ 200 மீற்றர் தூரத்தில் இந்தியப் படையினர் அவர்களை நோக்கி சுட்டனர் அதில் அவருடைய தந்தை காயமடைந்து அவ்விடத்திலேயே மரணமடைந்தார். ஏனையோர் அவருடைய சடலத்தை அங்கேயே விட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றனர். ஒரு மாதத்தின் பின்னரே அவர்களால் திரும்பவும் வீடு செல்ல முடிந்ததாகவும் அவ்வாறு சென்றபோது, தந்தையின் எலும்புக்கூடு அந்த இடத்திலேயே இருந்தாகவும் கூறினார்.

7. ***கலைவாணி வீதி, அனுங்கை, கோண்டாவில் என்னும் முகவரியைச் சேர்ந்த நாகேஸ்வரி ராஜலிங்கத்தின்*** வாக்குமூலத்தில், 1987 ஒக்ரோபர் 16 ஆம் திகதி வீட்டுக்குள் நுழைந்த இந்தியப் படையினர் தன்னுடைய கணவரையும், 78 வயது நிரம்பிய மாமியான செல்லையா, ஆச்சிப்பிள்ளையையும் சுட்டுக்கொன்றதாகச் சொல்கின்றார். அதிலிருந்து தப்பி வெளியேறிய நாகேஸ்வரிக்கு, நவம்பர் 21 ஆம் திகதியே வீடு திரும்பக்கூடியதாக இருந்தது. அவ்வாறு திரும்பிச் சென்று பார்த்தபோது கணவருடையதும் மாமியினதும் எலும்புக்கூடுகள் வீட்டிலேயே இருந்ததைக் கண்டார்.

8. ***வண்ணார் கோவிலடி, வசாவிளானைச் சேர்ந்த ஆறுமுகம் நாகலிங்கத்தின்*** வாக்குமூலத்தில், ஒக்ரோபர் 19 ஆம் திகதி, அவருடைய மனைவி அயலவர்களின் வீட்டுக்குச் சென்றதாகவும், அந்நேரத்தில் அவ்வீட்டுக்குள் நுழைந்த இந்தியப படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஒருவரைக் காயப்படுத்தியதாக கூறினார். அவ்வீட்டிலிருந்த ஏனையவர்கள் சமையலறைக்குள் ஓடிச்சென்று, ஒளிந்துகொண்டார்கள். கதவை உடைத்துக்கொண்டு சமையலறைக்குள் நுழைந்த இந்தியப் படையினர், துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஒருவரை அந்த இடத்திலேயே சுட்டுக்கொன்றனர். அவருடைய மனைவி உட்பட வேறும் மூன்றுபேர் அச்சம்பவத்தில் காயமடைந்தனர். அவருடைய மனைவி பின்னர் காயம் காரணமாக இறந்துபோனார்.

9. ***யாழ்ப்பாண வீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய அருட்தந்தை வீரவாது நத்தானியல் தர்மகுலசிங்கத்தின்*** வாக்குமூலத்தில், 1989 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி இந்தியப் படையினர் தன்னுடைய வீட்டின் பின்புறமாகவும் முன்புறமாகவும் உள்ளே நுழைந்ததாகக் கூறுகின்றார். அவ்வாறு நுழைந்த இந்தியப் படையினர் கையில் குழந்தையைத்தூக்கி வைத்துக்கொண்டிருந்த அவருடைய சகோதரனைச் சுட்டார்கள். சகோதரனுக்கும் சிறு குழந்தைக்கும் சிறு காயம் ஏற்பட்டது. பின்னர், கர்ப்பிணியாக இருந்த ஒரு சகோதரி உட்பட இரு சகோதரிகளையும் சுட்டுக்கொன்றார்கள். கர்ப்பவதியாக இருந்த சகோதரியின் கைகளில் இருந்த குழந்தைக்கும் தொடையில் காயம் ஏற்பட்டது.

இந்தியப் படையினர் முன்னேறி வந்த நேரத்தில் வீடுகளிலிருந்து வெளியேறுவதில் சிறிது தாமதித்தவர்கள் எறிகணைத்தாக்குதலில் குடும்பம் குடும்பமாகக் கொல்லப்பட்டார்கள். பொதுஇடங்களுக்கு நடந்துசெல்ல முடியாத வயது போனவர்களும் அவரவர் குடும்பத்தினர் வந்து பார்த்தபோது என்புக்கூடுகளாகவே கண்டுபிடிக்கப்பட்டார்கள்.

1. ***கோண்டாவில் வடக்கு கோண்டாவிலைச் சேர்ந்த சின்னையா கனகசபாபதியின்*** வாக்குமூலத்தில் கூறுகையில், 1987 ஒக்ரோபர் 10 ஆம் திகதி, நடக்கமுடியாத 88 வயதான அவருடைய அப்பாவை வீட்டில் விட்டுவிட்டு ஏனையோர் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் தஞ்சம் அடைந்திருந்தாக சொன்னார். அவருடைய இடத்திற்கு நுழைந்த இந்திப்படையினர் அவருடைய தந்தை உட்படப் பலரை சுட்டுக்கொன்றுவிட்டதாக அயலவர் ஒருவர் வந்து ஒக்ரோபர் 16 ஆம் திகதி அவருக்குச் சொன்னார். அவருடைய தந்தையின் நிலைமை பற்றித் தெரிந்துகொள்ள அவருடைய வீட்டுக்கு அவரால் உடனடியாகச் சொல்ல முடியாதளவுக்கு நிலைமை காணப்பட்டது. நவம்பர் 21 ஆம் திகதிதான் அவர்களால் திரும்பவும் வரக்கூடியதாக

இருந்தது, அவ்வாறு திரும்பி வந்தபோது ஒரு எலும்புக்கூடுதான் வீட்டில் காணப்பட்டது. அதில் இருந்த உடைகளை வைத்துத்தான், அது அவருடைய தந்தையுடையது என்பதை அவர்கள் உறுதிசெய்தார்கள்.

2. ***பலாலி வீதி, கோண்டாவிலைச் சேர்ந்த வைத்தியர் நாகலிங்கம் திருஞானசம்பந்தன்*** அவருடைய சகோதரையும், சகோதரனின் மனைவியையும் அவர்களின் குழந்தையும் இழந்திருந்தார். அவர் தன்னுடைய வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறினார்:

   *"ஒக்ரோபர் 14 ஆம் திகதிக்கு முன்னதாக நாம் அனைவரும் எங்களுடைய சொந்த வீட்டிலேயே வாழ்ந்துகொண்டிருந்தோம். எங்களது வீட்டைச் சுற்றி எறிகணைகள் வந்து விழத்தொடங்கியதும், நாம் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று தஞ்சமடைந்தோம். நவம்பர் 1 ஆம் திகதி மட்டில், இல. 268, நல்லூர் வீதிக்குச் சென்று அங்கே தஞ்சமடைந்தோம்.*

   *ஓய்வுபெற்ற பிராந்திய விவசாய மேம்பாட்டு அதிகாரியான, 68 வயது நிரம்பிய என்னுடைய சகோதரன் நாகலிங்கம் ஜெயசீலன் இருபாலை கோண்டாவிலிலுள்ள "ஈஸ்வரன் இல்லம்" எனப்படும் அவருடைய சொந்த வீட்டிலேயே வாழ்ந்துகொண்டிருந்தார். அவருடைய வீட்டில் சகோதரனுடன் அவருடைய மனைவி ருக்குமணி, மகன் ஞானாஈஸ்வரன் மற்றும் இரு உள்ளூர் உதவியாளர்கள் கனகா கலாராணி, கனகா விஜயலக்மி ஆகியோரும் இருந்தார்கள்.*

   *நவம்பர் 1 ஆம் திகதி என் தம்பியின் வீட்டுக்கு அருகில் வசித்த ஒருவர் என்னிடம் வந்து, தம்பி, மனைவி, மகன், மற்றும் இரு உதவியாளர்களின் சடலங்கள் அவர்களது வீட்டுக்குப் பின்புறம் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் காணப்படுவதாகச் சொன்னார். அங்கு நிலவிய அசாதாரண நிலைமை காரணமாக எம்மால் உடனடியாக அங்கு செல்ல முடியவில்லை. சில நாட்களின் பின்னர், ஐந்து சடலங்களையும் அவ்வளவிலேயே போட்டு எரித்ததாக ஏனைய உறவினர்கள் வந்து சொன்னார்கள். நவம்பர் 16 ஆம் திகதி ஒருவாறு அவருடைய வீட்டுக்குச் சென்றோம். அங்கே அவர்களது தனிப்பட்ட உடமைகள் காணாமற்போயிருந்ததுடன் வீடும் சூறையாடப்பட்டிருந்தது. அத்துடன் வளவில் உடல்கள் எரிக்கப்பட்டதற்கான அடையாளங்களையும், சில என்புகள் அங்கே இருந்ததையும் கண்டோம்."*

3. ***392, நாவலர் வீதி, கைலாசப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை தில்லையம்பலத்தின்*** வாக்குமூலத்தில், 1987 ஒக்ரோபர் 11 ஆம் திகதி, தன்னுடைய வீட்டில் தன்னுடைய உறவினர்களில் பலர் தஞ்சமடைந்திருந்தாகக் கூறினார். யாழ்ப்பாணக் கோட்டையில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினர் எறிகணைகளை ஏவத்தொடங்கினர். மூன்று எறிகணைகள் அவருடைய வீட்டின் மேல் விழுந்து வெடித்தன. அதில் 32 வயதான அவருடைய மருமகன் யோகநாதன், 90 வயது மாமா பசுபதி, ஒன்றுவிட்ட சகோதரி சின்னம்மா, அவருடைய மருமகள் நிரமலாதேவி ஆகியோர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்கள். அவருடைய மகன் கதிர்காமநாதன், வயது 32, மகள் பவானி யோகநாதன் வயது 28, மருமகன் மகேஸ்வரகுமார் ஆகியோர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மரணமடைந்தார்கள். தில்லையம்பலத்தின் 2 மற்றும் 3 வயது நிரம்பிய இரு பேரக் குழந்தைகளும் இதில் படுகாமயடைந்தார்கள்.

4. ***66-3 பாலவீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முகாரசாமி தருமலிங்கம்*** தன்னுடைய வாக்குமூலத்தில் 1987 நவம்பர் 5 ஆம் திகதி இந்தியக் குண்டுவிமானங்களும் உலங்கு வானூர்திகளும் தமது இடத்தில் தாக்குதலை நடாத்தியதாக கூறினார். ஒரு குண்டு அவருடைய வீட்டின் மேல் விழுந்து அவருடைய 18 வயது மகள் தருமலிங்கம் நவராஜினி உட்பட குடும்ப அங்கத்தவர்கள் ஐந்து பேர் கொல்லப்பட்டார்கள். இச்சம்பவத்தில் அவருடைய மச்சானின் பெற்றோர், மற்றும் மூன்று பிள்ளைகள் என ஐந்துபேரும் இச்சம்வத்தில் கொல்லப்பட்டார்கள்.

சில சம்பவங்களில் பயணம் செய்துகொண்டிருந்த மக்களும், சில சம்பவங்களில் இந்தியப் படைகளிடமிருந்து அனுமதி பெற்று தொண்டுப்பணியில் ஈடுபட்டிருந்தவர்களும்கூட கொல்லப்பட்டார்கள்.

1. ***சண்டிலிப்பாய் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம் புவனேஸ்வரியின்*** வாக்குமூலத்தில் 1987 நவம்பர் 9 ஆம் திகதி கல்வளைப் பிள்ளையார் கோவிலடியில் எறிகணைத் தாக்குதலில் காயமடைந்த நான்குபேரை ஒரு காரில் ஏற்றிக்கொண்டு தன்னுடைய கணவர் சென்றதாக கூறினார். அன்றைய தினமே திரும்பி வந்த அவர், தெல்லிப்பளை வைத்தியசாலையிலிருந்து யாழ்ப்பாண பொது வைத்தியசாலைக்கு சில நோயாளர்களை கொண்டுசெல்ல வேண்டியிருப்பதாக தன்னுடைய மனைவிக்கு கூறியிருக்கின்றார். பின்னர் அவர் வைத்தியசாலைக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கின்றார். அவருடைய கணவரும் மேலும் நான்குபேரும் காரில் வைத்தே இந்தியப் படைகளால் சுட்டுக்கொல்லப்பட்டதாக புவனேஸ்வரிக்குச் சொல்லப்பட்டது.

2. ***அன்புவெளிபுரம், திருகோணமலையைச் சேர்ந்த முத்து பொன்னுத்துரையின்*** வாக்குமூலத்தில், 1986லிருந்து தன்னுடைய குடும்பம் யாழ்ப்பாணத்திலுள்ள நீர்வேலி ப.நோ.கூ.ச. கட்டடத்தில் அகதிகளாக வாழ்ந்து வந்தாகச் சொல்கின்றார். ஒக்ரோபர் 27 ஆம் திகதி அவருடைய மனைவியும் இரு பிள்ளைகளும் திருகோணமலைக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். நவம்பர் மாதம், திருகோணமலைக்குச் சென்றுகொண்டிருந்த வான் ஒன்றின்மீது இந்தியப் படையினர் துப்பாக்கிச்சூடு நடாத்தியதாகவும் அதில் பிராமணக் குரு உட்பட 16 பேர் கொல்லப்பட்டதாகவும் அவர் அறிந்துகொண்டார். அவ்வாகனத்தில் கொல்லப்பட்டவர்களில் அவருடைய மனைவியான மகேஸ்வரி பொன்னுத்துரை வயது 49, பிள்ளைகளான பொன்னுத்துரை மஞ்சுளாதேவி, வயத 28, பொன்னுத்துரை மகலேஸ்வரி வயது 10 ஆகியோரும் அடங்கியிருந்தாக 1987 டிசம்பரில்தான் அவருக்குத் தெரியவந்தது.

பாதிக்கப்பட்ட பலரது வாக்குமூலங்களில் சித்திரவதை செய்யப்பட்டதும் பதிவாகியுள்ளது.

***தேனியம்பை, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பொன்னம்பல லோகேந்திரன்*** தனக்கும், தன்னுடைய இரு நண்பர்களுக்கும், இதர நான்கு இளைஞர்களுக்கும் 1987 நவம்பர் 16 ஆம் திகதி இந்தியப் படையினரால் இழைக்கப்பட்ட அடி, மின்சார பாய்ச்சல் சித்திரவதை ஆகியவற்றை தன்னுடைய வாக்குமூலத்தில் விபரிக்கின்றார். லோகேந்திரனும் ஏனைய இரண்டுபேரும் ஒரு இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்க ஏனையோர் வேறொரு இடத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டார்கள். இரண்டு நாட்களின் பின்னர், அவர்கள் அனைவரையும் ஒரு வானில் ஏற்றி வெல்லாவெளி வெட்டைக்குக் கொண்டுசென்றார்கள். அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டவர்களில் ஒருவரான பரமசாமி பரமநாதன் சடலமாகவே எடுத்துச்செல்லப்பட்டார். அவரது சடலத்தை இந்தியப் படையினர் வெல்லாவெளியில் புதைத்தார்கள். தாம் கடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்டதாகவும், அதில்தான் பரமநாதன் இறந்தாகவும் அவருடன் கூட அழைத்துச்செல்லப்பட்ட இளைஞர்களில் ஒருவர் லோகேந்திரனுக்குக் கூறினார். அனில்குமார் என்ற இந்தியப் படைவீரரே பரமநாதனைச் சித்திரவதை செய்தவர்களின் முக்கியமானவர் என்று லோகேந்திரன் தன்னுடைய வாக்குமூலத்தில் சொல்லியிருக்கின்றார். பரமநாதனின் சடலத்தைப் புதைத்த பின்னர், மேலும் புதைகுழிகளைத் தோண்டுமாறு அவர்களுக்கு இந்தியப் படையினர் கட்டளையிட்டார்கள். பின்னர், முனுசாமி பாபுராஜ் என்ற இளைஞரைப் பார்த்து, தான் வெட்டிய குழிக்குள்ளேயே நிற்குமாறு இந்தியப் படையினர் ஆணையிட்டார்கள். பின்னர் அவர் இந்தியப் படையினரால் சுட்டுப்பட்டு அதற்குள்ளேயே போடப்பட்டார். ஏனையோருக்கும் அதே விதியே நடக்கும் என்று எச்சரிக்கப்பட்டார்கள். ஆயினும் பின்னர் லோகேந்திரன் உட்பட ஏனையோர் விடுவிக்கப்பட்டார்கள்.

## 14. இந்தியப் படைகளின் பாலியல் வல்லுறவுகள்

இந்திய அமைதிப்படைகளின் காலத்தில் அவர்கள் தமிழ் பெண்கள் மீது பரவலான பாலியல் வல்லுறவுகளையும் மேற்கொண்டார்கள். இதுபற்றிய முறைப்பாடுகளுடன் மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்த இந்திய இராணுவத் தளபதியிடம் சென்றபோது, இப்படியான முறைப்பாடுகளுடன் தன்னிடம் வரவேண்டாம் என்றும், யாரையாவது அவரது படைகள் சுட்டால் மட்டுமே முறைப்பாடுகளுடன் வரவேண்டும் என்று சொல்லியிருக்கின்றார். இந்திய இராணுவத்தால் பாலியல் வன்முறைகளை மிகப் பரவலாக இடம்பெற்று வந்ததால் இதை ஒரு குற்றச்செயலாக கருதவேண்டாம் என்று இராணுவத் தளபதிகள் மக்களை நிர்ப்பந்தித்துள்ளார்கள்.

இக்காலப்பகுதியில் தமிழர் தாயகத்தில் பணியாற்றிய பல தமிழ் வைத்தியர்கள் இந்தியப் படைகளால் பாலியல் வல்லுறவுக்குள்ளாகிய நூற்றுக்கணக்கான இளம் பெண்களுக்கு சிகிச்சையளித்திருக்கின்றார்கள். பல்கலைக்கழக ஆசிரியரும் சமூகப்பணி ஆர்வலருமாக இருந்து பின்னர் படுகொலை செய்யப்பட்ட ரஜினி தினகரகம இந்தியப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவுகள் பற்றி விரிவாக எழுதியிருக்கின்றார். இந்தியப் படைகள் புரிந்த பாலியல் கொடுமைகள் சர்வதேச மன்னிப்புக் சபையின் அறிக்கைகளிலும் ஒரு தலைப்பாக இடம்பெற்றுள்ளன. இக்காலப்பகுதியில் வெளிவந்த உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களிலும் இந்தியப் படைகள் புரிந்த பாலியல் குற்றஞ்செயல்கள் பற்றிய செய்திகள் அதிகமாக வெளிவந்திருக்கின்றன.

இக்காலப்பகுதியில் நிலவிய பாலியல் வல்லுறவுக்குட்படும் பயம் காரணமாக இளம் பெண்கள் அதிக அளவில் தமிழ் ஆயுதக்குழுக்களில் இணைந்து கொண்டார்கள். தங்களது நண்பர்களும் அயலவர்களும் இந்தியப் படைகளால் பாலியல் வல்லுறவுக்குடபடுத்தப்பட்டதே தாங்கள் இவ்வாறு இணைவதற்கு உந்து சக்தியென்று பலர் கூறியுள்ளார்கள். மானுடவியலாளர்கள் கூற்றில் கூறுவதானால், ஒரு இளம் பெண்ணின் இம்முடிவானது, அவரை பாதிக்கப்படக்கூடியவர் என்ற நிலையை களைந்து சமூகத்தில் சக்தியுள்ள ஒருவராக மாற்றுகிறது எனலாம்.

**புள்ளிவிபரங்கள்**

இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவுகள் தொடர்பான ஆவணங்கள் தமிழ்ச் செயற்பாட்டாளர்களால் பரந்தளவில் சேர்க்கப்பட்டுள்ளன. 1987 ஒக்ரோபருக்கும் 1988 யூனிற்கும் இடையில் தனித்தனியாக 60 இற்கும் மேற்பட்ட பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதற்கான ஆவணங்கள் உள்ளன. இவ்வாறன சில ஆவணங்களில் மருத்துவ அறிக்கையும் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட சம்பவங்களில் 350 வரையான பெண்களும் யுவதிகளும் இவ்வாறாகப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் 14 வயது இளம் பெண்கள் தொடக்கம் 45 வயதான பெண்கள் வரைக்கும், கர்ப்பிணிகள்கூட உள்ளடங்குகின்றனர். ஏறத்தாழ அரைவாசிக்கும் மேல் 18 வயதுக்குட்பட்டவர்களேயாவர்.

பெரும்பான்மையான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே இடம்பெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்திலும் குறிப்பிட்ட எண்ணிக்கையான நிகழ்வுகள் இடம்பெற்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மக்களும் இந்திய இராணுவத்தின் கைகளில் அகப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு ஆளாகினர். தமிழர் கலாச்சாரத்தில் இக்குற்றச்செயல் மிகவும் பாரதூரமான தன்மையில் பார்க்கப்படுவதால், பெருந்தொகையான சம்பவங்கள் ஆவணப்படுத்தப்படவில்லை. எனினும் இந்தியப் படைகளின் பாலியல் வல்லுறவானது ஒரு திட்டமிட்ட வன்முறை வடிவமாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை இச்சம்பவங்களின் சாட்சிகளிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்களும் ஏனைய விபரங்களும் காட்டுகின்றன.

**இந்தியப் படைகளின் பாலியல் வல்லுறவுகளின் பொதுவான அம்சங்கள்**

பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் காட்டுவது போன்று, அவை ஒரு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியப் படைகள் மத்தியில் இது ஒரு பரவலான ஒரு செயற்பாடாகவும் இருந்துள்ளது. பல சம்பவங்களில் இந்தியப் படையினர் பெண்களை அவர்களது வீடுகளில் வைத்தே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர். மற்றைய சம்பவங்களில் பெண்களைக் கடத்தி தமது முகாம்களுக்கோ அல்லது கைவிடப்பட்ட இடங்களுக்கோ கொண்டுசென்று வல்லுறவுக்குட்படுத்தியுள்ளார்கள். முகாம்களிலும் காவலரண்களிலும் நிலைகொண்டிருந்த படைவீரர்கள் மக்களுடைய குடியிருப்புக்களுக்குச் சென்று, வீடுகளுக்குள் நுழைவார்கள். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட படைவீரர்கள் குடும்ப அங்கத்தவர்களைத் தாக்கிவிட்டுப் பின்னர் பெண்களையும் யுவதிகளையும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்துவார்கள் அல்லது பாலியல் துஸ்பிரயோகம் செய்வார்கள். அதன்பின்னர், அவர்கள் வீட்டைச் சூறையாடி, குடும்பத்தின் தனிப்பட்ட உடைமைகளை அல்லது பெறுமதியான பொருட்களை தம்முடன் எடுத்துக்கொண்டு சென்றுவிடுவார்கள். சில சம்பவங்களில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய பின்னர் பெண்கள் கொலைசெய்யப்பட்டும் உள்ளார்கள்.

1988 ஜனவரி 2 ஆம் திகதி, யாழ்மாவட்டத்திலுள்ள புன்னாலைக்கட்டுவன் என்னும் இடத்தில் மூத்ததம்பி கனகேஸ்வரி என்பவரின் வீட்டிற்குள் மூன்று இந்திப்படையினர் நுழைந்தார்கள். அவர்கள் அவரை தொல்லைப்படுத்தி, பாலியல் ரீதியாகத் துஸ்பிரயோகம் செய்துவிட்டு அவரது வீட்டையும் சூறையாடினர். அதே இடத்தில், நாகமுத்து சரவணை என்பவருடைய வீட்டிற்குள் நுழைந்த வேறு மூன்று இந்தியப் படையினர் அவருடைய மகள்மாரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்திருக்கின்றார்கள்.

1987 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தின் கோண்டாவில் கிழக்கில் இரண்டு இந்தியப் படையினர் காங்கேசன் துறை வீதி மற்றும் முதட்டு மடம் வீதிச் சந்தியிலிருந்த எஸ். சற்குணதேவியின் வீட்டுக்குள் நுழைந்து அவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார். அவர்கள் அவரது கணவரைக் கட்டி அவரைத் தாக்கியும் இருந்தனர். 1987 நவம்பர் 26 ஆம் திகதி. ஜி.செல்வநாயகத்தின் வீட்டுக்குள் நுழைந்த சில படையினர் அவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினர். இவ்விரு சம்பவங்களும் எவ்வாறு இந்தியப் படையினர் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுததினார்கள் என்பதை காட்டுகின்றன.

1987 நவம்பர் 21 ஆம் திகதி. யாழ்மாவட்டத்திலுள்ள உடுவிலைச் சேர்ந்த பல பெண்கள் உடுவில் இராணுவ முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்த படையினரால் பாலியல்வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள்.

1987 ஒக்ரோபர் 17 அம் திகதி. யாழ்ப்பாண மாவட்டத்தின் உரும்பிராய் என்னும் இடத்தில் 30 பெண்கள் இந்தியப் படைவிரர்களால் கடத்தப்பட்டார்கள். அவர்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாக நம்பப்படுகின்றது.

1987 ஒக்ரோபர் 20 ஆம் திகதி, யாழ்ப்பாண மானிப்பாயில் ஒரு தாயும் அவருடைய மகளும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

1989 வரை வடமராட்சியில் பணியாற்றிய தமிழ் வைத்தியர் ஒருவர் இந்தியப் படைவீரர்களால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பலருக்குச் சிகிச்சையளித்தார். அவர் கேட்ட தகவல்களின் படி, அதிகமான பாலியல் வல்லுறவுகள், இந்திய இராணுவத்தினர் வீடுகளைச் சுற்றிவளைத்து ஆண்களை பிடித்துச் செல்லும் நடவடிக்கைகளின்போதே இடம்பெற்றிருக்கின்றது. இந்நேரத்தில் இந்தியப் படையினரின் ஏனைய வீரர்கள் வீடுகளுக்குள் நுழைந்து பெண்களையும் யுவதிகளையும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்துவார்கள். இவ்வாறான ஒரு சம்பவத்தில் 8. 10, 12 வயதுடைய மூன்று சகோதரிகள் படைவீரர்களால் பாலியல் துன்புறுத்தலுக்காளாக்கப்பட்டார்கள். சிகிச்சையின்போது அவர்களது மார்பகங்களைச் சுற்றி கடித்த அடையாளங்கள் இருந்ததை அவ் வைத்தியர் கண்டார்.

இவ்வாறு பாலியல் வல்லுறவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவளத்துணைச் சிகிச்சை, உடற்காயங்கள் மற்றும் பாலியல் ரீதியாகக்கடத்தப்படும் தொற்றுநோய்களுக்கும் அவர் சிகிச்சையளித்துள்ளார். பாலியல் வல்லுறவு காரணமாக பெண்கள் கர்ப்பமடைந்த நிலையையும் எதிர்கொண்டிருந்தனர். உடற்காயங்கள் சிகிச்சையளிப்பதற்கு இலகுவானவையாக இருந்தன என்றும், ஆனால் உளவியல் தாக்கங்களுக்குச் சிகிச்சை வழங்குவது மிகவும் கடினமாது என்றும் கூறினார். பெரும்பாலான பெண்கள் அது தங்களுடைய தவறே என்று நம்புவதாகக் கூறி ஒரு குற்ற

உணர்வினாலேயே மிகவும் பாதிக்கப்பட்டிருந்ததை அவ்வைத்தியர் அவதானித்தார். இம் மனநிலையிலிருந்த தனது நோயாளர்களை வெளியில் கொண்டுவருவது அவ்வைத்தியருக்குப் பெரும்பாடாக இருந்தது.

## பாதிக்கப்பட்டவர்களது பதில் நடவடிக்கைகள்

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சமூகத்தால் கறை பூசப்படும் என்ற பயம் காரணமாக பாலியல் வன்முறைச் சம்பவங்களைப் பற்றி முறையிடுவது தமிழ் சமூகத்தில் மிகவும் அரிதான செயல். இருந்தும் கூட, சில பாலியல் வன்முறைச்சம்பவங்கள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களால் வெளிகொண்டுவரப்பட்டன. இப்பாதிப்புகளை எதிர்கொள்ளும் வேறு சில வழிகளையும் இவர்கள் செயற்படுத்தியுள்ளார்கள்.

1988 ஏப்ரலில், கிளிநொச்சி இரணைமடு மற்றும் முல்லைத்தீவின் விசுவமடு ஆகிய இடங்களில் ஆறு பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள். இச்சம்பவத்தைக் கேள்விப்பட்ட அயலவர்களும் அவ்விடங்களில் வாழ்ந்த மக்களும் தங்களது வீடுகளுக்குள்ளேயே இருந்ததுடன் ஏப்ரல் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் தங்களது கடைகளைப் பூட்டி, வியாபாரங்களையும் நிறுத்தி வைத்திருந்தார்கள். இச்சம்பவமானது எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒரு அடையாளமாக மட்டுமன்றி, கொடூரமாக தாக்கப்பட்ட பெண்களின் குடும்பத்தவர் சோகம் ஆறும் நேரமாகவும் அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் செயலாகவும் இருந்தது.

1987 நவம்பர் 30 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த 47 குடிமக்களால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று, பின்வருமாறு சொல்கின்றது:

*"இச்சம்பவங்களானது இப்பகுதி மக்கள் மத்தியில் பயத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் அவர்களில் சிலர் இவ்விடத்தைவிட்டு வெளியேறிக்கொண்டும் இருக்கின்றார்கள். பாதுகாப்பாக வாழமுடியும் என்ற நம்பிக்கையில் நாம் எமது வீடுகளுக்குத் திரும்பும்போது, அமைதி காக்கும் படையினரால் நாம் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகின்றோம்."*

## அதிகாரிகள் பதில் நடவடிக்கைகள்

பாலியல் வல்லுறவுக்குச் சம்பவங்களுக்கு இந்தியப் படையினரும் இலங்கை அரசாங் அதிகாரிகளும் வழங்கிய பதில்கள் ஒன்றில் அச்சம்பவங்கள் நடக்கவில்லை என்று மறுப்பதாக அல்லது அவற்றை குறைத்துக்காட்டுவதாகவே இருந்தன. இந்தத் தந்திரமானது பொறுப்பிலிருந்தும் நீதியிலிருந்தும் தப்பித்துக்கொள்வதற்கு மட்டுமன்றி, தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையையும் கௌரவத்தையும் இழந்த நிலையினைப் பதியச் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டது. பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவதானது பெண்களையும் அவர்கள் சமூகத்தையும் பாரியளவில் பாதிப்புறச் செய்ததுடன், இவ்வாறு அதனை மறுப்பதானது தமிழ் மக்களின் ஒட்டுமொத்த மன அழுத்தத்தையும் அதிகரிக்கச் செய்தது.

1987 நவம்பர் 21 ஆம் திகதி, உடுவில் இராணுவ முகாமில் வைத்து பல பெண்கள் இந்தியப் படைகளால் பாலியல்வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள். பின்னர் இச்சம்பவம் பற்றி முறையிடுவதற்காகப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண்களும் அவர்களது பெற்றோரும் அதிகாரிகளிடம் சென்றார்கள். அதற்கு அதிகாரிகள்,

*"பாலியல் வல்லுறவு என்பது பொதுவாக நடக்கும் ஒன்றே. இச்சம்பவம் பற்றி முறைப்பாடு செய்வதற்கு இங்கே வரவேண்டாம். யாராவது சுட்டுக்கொல்லப்பட்டால் நாங்கள் அதைப் பதிவதற்குத் தயாராக இருக்கின்றோம்"* என்று சொன்னார்கள்.

பாலியல் வல்லுறவு என்பது "பொதுவாக நடக்கும் ஒன்று" என்று வகைப்படுத்துவதன் ஊடாக, அக்குற்றச்செயலதும் மனித உரிமை மீறலதும் தீவிரத்தன்மையினை குறைத்துக்காட்டும் ஒரு செயற்பாடாகவே இவர்களது பதில் அமைந்திருந்தது.

1988 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி புன்னாலைக்கட்டுவன் வடக்கு, சிறி துர்க்கா சனசமூக நிலையத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் ஒன்றில் அக்கிராமத்தின் 60 குடியிருப்பாளர்கள் கையொப்பமிட்டிருந்தார்கள். பாலியல் வல்லுறவுக்கு அல்லது துஸ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்ட அக்கிராமத்தைச் சேர்ந்த பல பெண்கள் பற்றிய ஒரு அறிக்கை உட்பட இந்தியப்படைகளால் இழைக்கப்பட்ட அநீதிகளை அவ் ஆவணம் கோடிட்டுக் காட்டியது.

படையினர் தமிழ்ப் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்துகின்றார்கள் என்ற ஊடகச் செய்திகளை யாழ்ப்பாண இந்திய இராணுவத் தலைமையகம் மறுத்தது. இவ்வறிக்கைகள் விஷத்தன்மையானதும் படையினரை கேவலப்படுத்துவதுமாக உள்ளது என அவர்கள் இதற்கு பதிலளித்தனர். மேலும்,

*"பெண்களை போற்றுவது இந்திய கலாசாரத்தின் ஒரு உன்னதமான அம்சம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று எல்லா இலங்கை தமிழருக்கும் மதிப்பளித்து வரும் இந்திய படை வீரர்கள் இப்படி மோசமான குற்றச்செயல்களை புரிவார்கள் என்பது ஏற்க முடியாதது"*, என்றும் கூறினார்கள்.

பெண்களுக்கு மதிப்பளிக்கும் இந்திய கலாசாரத்தை காட்டி இந்திய இராணுவம் பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டுகளை மறுக்க முயற்சிப்பதையே இது காட்டுகிறது.